ஹாமீம்

பிஸ்மில்லாஹிர்றகுமானிர்றஹீம்.

தற்கலே,

மெஞ்ஞான சொரூபராகிய

காமில் முஹம்மல் ஆஷிகு ஆரிபுபில்லா ஃ

பீர்முஹம்மது சாஹிபொலியுல்லா

அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# திருநெறி நீதம்.

---

இஃது, கடையநல்லூர் பெரியதெரு,

மு. அ. ஹாபில் ஷேய்கு உதுமான் லெப்பை ஆலிம் சாய்பு

அவர்களாலும்,

திருவிதாங்கூர் ஜில்லா, தற்கலே,

மீ. க. முஹம்மது மைதீன் ஆலிம் சாய்பு அவர்களாலும்,

தென்காசி, மரைக்கார் பள்ளிவாசல் தெரு,

முஹம்மது அப்துல்காதர் ஆலிம்சாய்பு அவர்களாலும்,

கடையநல்லூர் டவுண், பேட்டை,

அ. ம. அப்துறகுமான் கலிபா சாய்பு அவர்களாலும்,

கடையநல்லூர் டவுண், பெரியதெரு,

ம. உதுமான் சோதிட வித்துவானர், அவர்களாலும்,

சிவகிரிமாநகர்,

இ. முஹையதீன் பேக்கு சாய்பு புலவரவர்களாலும்

பார்வையிடப்பட்டு

கடையநல்லூர் டவுண் பேட்டை, புதுமனைத்தெரு

ர. சை. இஸ்மாயீல் அரபி சாய்பு அவர்கள்

சொந்த முயற்சியின் பேரில்

தற்கலே, பள்ளிவாசல்தெரு, அஞ்சுவன்னம்

மீ.க.முஹையதீன் பிள்ளை அவர்கள் பொருளுதவியால

தென்காசி, ஸ்ரீ மீனாக்ஷி பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது,

ஹிஜ்ரீ 1348-ஆ ரபிஉல்அவ்வல்மீ

Registered Copy Right] 1929 [இதன் விலை ரூபா 4.

20 DEC 1929 MADRAS

ஹாமீன்

அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தா னிற்றஜீம்
பிஸ்மில்லா ஹிர் றஹ்மானிர் றஹீம்

# முகவுரை.

---

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் வல்ஆக்கி
பத்துலில் முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு
அலா செய்யதுல் முருசலீன் முஹம்மதின்
வ ஆலிகி வ அசுஹாபிஹி அஜ்மயின்.

எல்லாப்புகழும் புகழ்ச்சியும் அல்லாசுபு ஆனவுத்தயலாவுக்காக இருக்கும் சலவாத்தும் சலாமும் நமது நாயகம் இருபதியிலும் புகழைப்பெற்றுக்கொண்ட வள்ளலுமாய் விளங்கும் நபி முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள்பேரிலும் அவர்கள் தோழர்மார்கள் பேரிலும் ஆல் அஸ்ஹாபிமார்கள் பேரிலும் மூமீன் முசிலீம்கள் பேரிலும்,உண்டாவதாகவும்.ஆமீன் யாறப்பில் ஆலமீன்:

# நூல்வரலாறு.

---

நினைவிற்கலந்திருக்கின்ற எல்லா ஞானப் பொருள்களையும் கூட்டித்திரட்டி நீதியின் நாயன் என்ற திருநாமத்துடன் நமது நபிநாயகம் அவர்கள் அருளிச்செய்தார்கள். அதை ஒரு கோர்வையாகத்திரட்டி ஹலரத்து மௌலானா ரூமி அவர்கள் மதுநபி ஷரிபிலும், கசாலியிமாம் கோர்வை, கன்ஸுல் ஆரிபீன் என்னும் கிதாப்பிலும், ஷெய்ஹுல் அக்பர் சமுசுல்மா ஆரிபிஎன்னும்கிதாப்பிலும், ஹகாயிக்கென்னுங்கிதாப்பிலும் ஹுக்குமில்காகிதபிக்ஹ... கிதாப்பிலும், புறுகானுல் மஜீது திருக்குரானில் பின் ஐ த... துசிவிலும்; குறுனில் சில சில இடங்களிலும் வரையப்பட்... கின்றது. லெக்குவாவென்னும் கிதாப்பிலும், கன்ஸுல்லுஹுமா வென்னுங்கிதாப்பிலும், சாகில் யின்சான் என்னுங்கிதாப்பி

லும், லகியா மென்னுங்கிதாப்பிலும், பிக்குஹூலுலமா என்னும் கிதாப்பிலும், பஹ்ஹ யென்னுங்கிதாப்பு இரண்டிலும், தஹியா வென்ற கிதாப்பிலும், ஷரஹூல் அபினன் என்னுங்கிதாப்பிலும் ஷரஹூல் எஹியா வென்னுங்கிதாப்பிலும், பஹ்ருலாலீம் முகிமா வென்னுங் கிதாப்பிலும், கியாமத்து நாமா என்னுங்கிதாப்பிலும் போஸ மீசாக்கு என்னும் கிதாப்பிலும், வாஹிதில் அகது கிதாப் பிலும். சும்துசிபியான் என்னும் கிதாப்பிலும், பஹ்ரில் என்னும் கிதாப்பிலும், நீயார் என்னும் கிதாப்பிலும், புல்கியா வென்னும் கிதாப்பிலும் மறவியே வேதம் மூன்றிலும் அகமிதென்னும் கிதாப்பி லும்,

ஆகிரில் முரிசலீன் அதாலத்து முக்கீமாமுற்று
ஏகவன் மகுஷர் கேள்வி இயம்பிய ஆகிர் மௌவி
வாருடன் இதுகளெல்லாம் வகைவகை உலகோரறிய
ஏகமா இமாங்கசாலியார் இயம்பிய கடல்பெரும்புகழே.

நாட்டமாம் நபிகள் தீனில் நானூற்றிருபத் தாறுபாட்டில்
முத்து மூவாயிரத் தறுநூறு பகுந்திடும் படலம் நாலாங்
திட்டமாந் திருநெறி நீதம் தீனவர் தீன்வகையறிய
பாட்டுமாய்த் தீனோர்க்காக படித்தாங் கேற்றினேனே

தெரிந்திட வுரைத்தேன் வாவாஞ்சி பேரன் சிறுமலுக்கரீன்றபா [லன்
பீர்முஹம்மதுகுலம் தீன்நிலை நிற்க நபிஹதீதை
சிறந்திரு பதியும்வாழ இறையருள் பெருகஆமீன்
யாறப்புல்லாலமீன் ஆமீன்

குருஆனுல்புறுகான் வேதத்திலுள்ள நுட்பமாகிய விஷயங்க ளில் கலிமா, தொழுகை, நோன்பு; சக்காத்து, ஹஜ்ஜி, ஈமான் இசுலாம், ஏவல் விலக்கல், ஹுக்கும்கள், பிக்ஹுகாயிதா, ஹராம் ஹலால், தௌகீது வணக்கம், நபியுல்லா நவநீத செங்கோல், அரசு நிலை, அனந்தர சுபந்தர, பருயிலு லா பிரிவு கியாமமுடிய நாற்பது அடையாளம், எழுபிறவி, அறியும்படி தௌஹீது காரணக்கட்டுப்பு கள், மகுசர் கேள்வி, நாயகம் சல்லல்லாகு அலைகிவ சல்லம், வும்மத் தோர்களை ஷபாஅத்து செய்கிறதும், மகாமணி சிகாமணி மவுலி சூட்டுதல், சுபனபதியில் நாயகத்துக்கும் ஆசியா மரியம் இருவர்களை திருக்கல்யாணம் செய்கிறதும், வெள்ளானை பவனியும் இன்னுங்

கீழ் சொல்லப்படுகின்ற விஷயங்கள் யாவும் அல்லாவுக்குப்பொருத்தமாகிய நபி சல்லல்லாகு அலைகிவ சல்லமும், நபிமார்களும்இமாங்களும், உலமாக்களும் கபில் செய்து விளங்கப்பட்ட கிதாப்புகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு விஷயங்களனைத்திலும் இல்மு தெளிந்த காயல்பட்டணத்து குதுபு ஷெய்கு சதகத்துல்லா லெப்பை ஆலிமவர்கள் பாரிசு, ஹிந்தி, உரூது, தக்கனி, அரபி கிதாப்பு குருன்முதலிய கிரந்தங்களை ஆராய்ந்துமொழிபெயர்த்துச் சொல்ல தற்கலைக்கு வந்த காலம் கொல்லம் 620-ம்ஆண்டென்று சொல்லப்படுகிறது. பீர்முஹம்மது சாய்பு அவர்கள் சரித்திரத்தில் ஷெய்கு சதகத்துல்லா ஷெய்கு பீர்முஹம்மதுசாய்பு அவர்களுக்கு இதைப்பாட உத்தரவு கொடுத்தார்கள். நல்மாராயம் பெற்றார்கள். நல்மாராயம் பெற்று காயல் பட்டணஞ்சென்றார்கள் என்று ஷெய்கு பீர்முஹம்மது சாய்பு அவர்கள் சரித்திரத்தில் சொல்லப்படுகிறது. ஷெய்கு பீர்முஹம்மது சாய்பு அவர்களுக்கு சொந்த ஊராகிய கனிகபுரம் அடர்விடர் நகர்வளம் தென்காசியிலிருந்து தாய்தந்தை சுற்றத்தாரைவிட்டு வாலிப பருவத்திலேயே நீங்கித் தற்கலைக்குவந்து சிறிது காலங்கழித்து வனசஞ்சாரியாய் அநேக காலந்திரிந்து திருநெறிநீதம், பிஸ்மில்குறம், ரோசுமீசாக்குமாலை மகரிபத்துமாலை, ஞானமணி மாலை, ஞானப்புகழ்ச்சி, ஞானப்பால் ஞானப்பூட்டு, ஞானக்குறம், ஞானரத்தினக்குறவஞ்சி, ஞானஆனந்தக்களிப்பு, திருமெஞ்ஞான சாநூல், ஞான நடனம், ஞான முச்சுடர் காப்பு பதிகம், ஹக்குமுறாது பதிகம், மயில்வலம்புரிப்பதிகம் றப்பில் ஆலமீன் பதிகம், கஃபத்துல்லாப் பதிகம், கண்மணி பதிகம், நினைவுப்பதிகம், இலாஹிப்பதிகம், நாட்டப்பதிகம், பஞ்சபக்ஷி பதிகம், இல்முல் இன்சான் பதிகம், அரை திறப்பு பதிகம், வலம்புரிப்பதிகம், வழியுரைப்பதிகம், பதமருள் பதிகம், குருசீடப்பதிகம், ஓர்மைப்பதிகம், மனப்பதிகம், தறஜாத்துப்பதிகம், சுருமான் பதிகம், மெஞ்ஞான அமிர்தகலை, ஞானவுலக உருளை, ஞானதித்தி ஞானத்திறவுகோல், ஞான விகடம், ஞானக்கண், மிகுறாசுவளம் ஆக பாடல் பதினெண்ணாயிரத்தில் திருநெறிநீதம், பிஸ்மில்குறம் ரோசுமீசாக்குமாலை, இம்மூன்றிலும், ஷெகு சகத்துல்லா அப்பா அவர்கள் உரையுடன் பாடப்பட்டது. மற்றவையனைத்தும் அருள் உதிப்புமேல் பாடப்பட்டது என்று ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகிறது. ஞான மலைவளம் முதலிய நூல்களைப்பாடி அவைகளைச்

சுவடி சுவடிகளாக தமதுவசம் வைத்திருந்தார்கள் இன்னும்அக்கா லத்தில் அவர்களின் தகுதிக்கேற்ற சீஷர்களாக காலன்குடியிருப்பு பெரிய மீறான்கனி அண்ணாவியார் அவர்களும், கன்னியாகுமரி கருக்கடற்கரையிலுள்ள பெரிய துறைமுகமாகிய குலசேகரன்பட் டணம், காரியாப்புலவரவர்களும், தற்கலை, காசிமுசாய்பு அவர்க ளும் நியமனம்பெற்று சிறிதுகாலம் சாய்பு அவர்கள் அருகி லிருந்து பழகி சகல நூல்களையும் எழுதி வைத்திருந்தனர்.

ஹிஜ்ரி 1022-மாண்டு ரபியுல் ஆகிர்மீ 20உ வெள்ளிநாளன்று திருநெறி நீதம் சாய்புஅவர்கள் பாடியது. அன்றுமுதல் பரம்பரை யாய் எங்கள் முன்னோர்கள் சாய்பு அவர்களின் முதல் மாணாக்க ரின் மரபினராகிய பெரியமீறான்கனி அண்ணாவியா ரும்அவர்களின் வாரிசுகளும் ஏட்டுப்பிரதிகளை சுவடி சுவடியாய் எழுதிவைத்திருந் தார்கள். எங்களின் நாலு தலைமுறைக்குமுன் சாய்பு அவர்கள் முதல் மாணாக்கரின் குமாரர் காலஞ்சென்றவர்கள் பதி காலன் குடியிருப்பு, சொல்லேருளவர் காலம் கடையநல்லூர் பேட்டை நல்லமுஹம்மது செய்யது பேரர் செய்யது புதல்வன் சிறியேன் இஸ்மாயில் அரபி சாய்பு இந்த திருநெறிநீதம் ஏட்டுப்பிரதிகளை கவனித்து சிவகிரி முஹையதீன் பேக் சாய்பு புலவர் அவர்களால் செந்தமிழில் மொழிப்பெயர்த்து எழுதி முகவுரையில் சொல்லிய கிதாப்புகளில் நன்கு ஆராய்ச்சியுடைய ஆலிம் உலமாக்களிடம் பரிசோதித்து கையொப்பம்பெற்று. அச்சிடப்பட்டது இவைகள் முந்தநாள் தொடுத்து இன்றுகாறும் எழுதுவோராலும், படிப்பவ ராலும் மிக்க விடத்து ஒரு பல சிதைவுகளுற்று உண்மையறிவ தற்கரிதாய் வழுவுச்சொற்களிணைந்து கருத்தும் பொருளும் எளி திலுணரக்கூடாத தன்மையவானதுமன்றி எங்கள் முன்னோர்கள் சுவடிகளைக்கட்டினவாறு அமைத்துவைத்திருந்தமையால் அனே கம் பாகதியடைந்தன. அனேகஞ்சிதல்களாலுண்ணப்பட்டு ஒவ்வோ ரோலைகளிலும் பாதியிருக்க பாதி போனவிடம் தெரியாதாயின் இவ்வாறு சிதைவுற்ற இப்பிரதிகளிற் அனேகரிடம் சில பாகங்க ளிருந்தன. அதனையும் வாங்கி போனவை போக மிஞ்சியவை வெளிவந்ததில் படலம் நாலில் கவி வெண்பா விருத்தம் ஆக 2229 பாட்டாக அச்சிலிடலானேன். ஆதலால் யாம் சிலகாலமாக இப்பிரதிகளனைத்தையும் ஒருங்கு சேர்த்து வெளி

விடப்பட்டிருக்கின்றன. "பெரியோர் கருத்தைப் பெயர்த்தறிய 'லாகா என்றமையான்,, ஒன்றும் பேதஞ்செய்யாது தனேயேனும் அடியேனும் முற்றுமற்ற விடத்து வரிசைப்புள்ளி யிட்டு முற்று வித்து முன்னிருந்தவாறே யச்சிடுவித்தாம்.

ஆனல், இவற்றுள் வெண்பா, விருத்தம், கலித்துறை முதலிய சில செய்யுட்கள் தளை பிறழ்ந்தும், சிலவிடத்து ஒருமை பன்மைகலந்தும் சிலவரிகள்கூடியுங்குறைந்தும் சில பொருடாது மயங்கியும் பலவாறு பேதமுற்றிருப்பினும் அவை எம்மால் வந்தன வல்லவென்று மன்னிக்கபிழை திருத்தி வாசிக்க விரும்புகின்றேன்.

இன்னும் வெளிவராத ரோசுமீசாக்கு மாலே, ஞானதித்தி ஞான விகடம், ஞானக்கண், ஞானவுலக உருளே, மெஞ்ஞான அமிர் தகலே, மிகுராசு வளம் இவற்றின் ஏட்டுப்பிரதிகளிருக்கினும், சிதல்களாலுண்ணப்பட்டு பாகதி யடைந்தன பாதி யிருக்கப் பாதி போனது தெரியாததினல் முற்றுமிருக்கும் நேயர்களீந்து உதவி புரிவரேல் இத்துடன் அடுத்தபதிப்பில் வெளிப்படுத்துவோம்.

அனேக மகாத்மாக்களின் ஞான ஆராய்ச்சியின் கருத்து கொண்டும் கிதாப்பு ஆராய்ச்சி மெஞ்ஞான அருள் நிறைந்த மகா வித்துவான்களேக்கொண்டும் நல்ல தெளிவான ஞானத்தையும் பிக்குஹு மசலாகாஹீதாக்களேயும் சாகின்படி சகலவிஷயங்களேயும் தெளிந்து ஈடேற்றம் பெற்றுக்கொள்ளும்படி வெளியாக்கப்பட் டிருக்கின்றது. இந்த அருமையான நூலின் விஷயத்தை விசேஷமாக எடுத்துக்கூற நம்மால் தகுதியில்லே. இதைப்படித்து உணர்ந்துபார்க்கும் நண்பர்களுக்கெல்லாம் தானே இதின் மகிமை விளங்கும்.

நான் இரவு பகலாக கவலேகொண்டிருந்த பெரியகாரியமான இக்காவியம் வெளிப்படுத்த இந்த உபகார புருஷ உத்தமரான தறகலே பீர்முஹம்மது சாஹிபொலியுல்லா தருகாவைச்சேர்ந்த அஞ்சுவன்னம் பள்ளித்தெரு மீ. க. முஹையதீன் பிள்ளேயவர்கள் என்னுடன் மலேயாளம் கல்க்குளம் ரிஜிஸ்தராபீசில் உடன்படிக்கை செய்துகொண்டு தென்காசி ஸ்ரீ மீனுக்ஷி பிரஸில்அச்சிட்டுஷியார் பொருளுதவியதால் வெளிவரநேர்துவாயிற்று. இவர்களுக்கு இவர்களெடுத்தகாரியங்கள் நிறைவேறவும், இவர்கள் நடத்திவருகின்ற கம்பெனியானது எந்த காலமும் ஓங்கிவளர்ந்துவரவும், இவர்கள் உபகாரத்தன்மை பொருந்திய ஆயுள் நீடிக்கவும் இத் திருநெறிநீதம் பாடிய நாயகம் பீர்முஹம்மது சாஹிபு அவர்கள் துவாபெருக. ஆமீன்.

ந. சை. இஸ்மாயில்அரபி சாய்பு.

சிவகிரிமாநகரத்தில் வசிக்கும், கடையநல்லூர்

## முஹையதீன்பேக் சாய்பு புலவர் அவர்களியற்றிய

## சாற்றுக்கவி.

(இரட்டையாசிரிய விருத்தம்)

தீனவர் குலத்தில் விற்பன விவேகன்
தேர்ச்சியில் சிதரா சிந்தையாளன்
செந்தமி ழிலக்கண மிலக்கிய முணர்ந்துநற்
சீறாமுதலா யுள்ள பேரின்பகவி பிரசங்கிப்போன்
பாண்டிநகர் தென்காசி தாலூகா ஊரடுத்த
பதிகடையநல்லூர் பேட்டையூரான்
எண்டிசையுங் காண்பதற்கு கேட்பதற் கரிதான
திருநெறி நீதம் ஓலைச்சுவடி தன்னை
கனபாடு பட்டுண்டு மொழிப்பெயர்த்த
கவிராஜ முஹையதீன் பேக்கென்போன்
இன்னிலத்தில் தீனவர்கள் பயின்றுவர
பால்சீனி கற்கண்டு தேனமிர்த முவமையிலான்
அன்பருக் கன்பருளும் அருள்கடைய நல்லூர்
பேட்டை வாழுமனபிகுல இஸ்மாயிலரபி சாய்பு
இன்பமுடன் அச்சிலிட்டுலகில்யாருமின்பமுடன்
மனமுவந்து நல்வழியில் கருத ஆமீன் ஆமீன்

—()—

# ரிஜிஸ்டர் அறிக்கை.

இதனால் யாவருக்குந் தெரிவிப்பது யாதெனில், தற்கலை, பீர்முஹம்மது சாயபு அவர்கள் மெஞ்ஞான பொக்கிஷம் திருநெறி நீதம் படலம் நாலும் யாம் அச்சிட்டு சென்னையிலும் புதுவையிலும் ரிஜிஸ்டர் செய்திருக்கிறோம். இதனை எம்முடைய அனுமதியின்றி எவரேனும் அச்சிடுவரேல் அந்தந்த கவர்ன்மெண்டு கட்டளைப்படி நேரிடும் நஷ்டத்திற்கும் கிரிமினல் குற்றத்திற்கும் உத்திரவாதியாக வேண்டுமென்பதேயாம். அச்சிட்ட இப்புஸ்தகங்களிலெல்லாம் எம்முடைய கையொப்பமிட்டிருப்பதால் அப்படியில்லாத புஸ்தகங்களை வைத்து விற்கிறவர்களைக்கண்டு எமக்கறிவிக்கும் நண்பர்களுக்கு எம்மாலியன்ற இனாமளிக்கப்படும்.

இங்ஙனம்.

ந. சை. இஸ்மாயில் அரபி சாயபு

ந. சை. இஸ்மாயில் அரபி சாயபு

---

## புஸ்தகம் கிடைக்குமிடம்.

1 மீ. க. முஹையதீன் பிள்ளை அவர்கள்,
பள்ளிவாசல் தெரு,
தற்கலை போஸ்டு, திருவிதாங்கூர் ஜில்லா.

2 மீ. க. முஹையதீன் பிள்ளை அவர்கள்,
ஜெனரல் மெர்ச்சண்டு,
63
புது கிர். 284. பிரேசர்வீதி, இரங்கோன்.

மற்றும் புஸ்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்.

அமெரிக்கன் ஆர்ட்டு பேப்பர் புல் கலிகோ பைண்டு

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 4.

தபால் சிலவு பிரத்தியேகம்.

நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

# பிழை திருத்தம்.

| பக்க நிர் | பாட்டுநிர். | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 1 | விரிவோடு கஞ்சில் | விரிவேடு கன்ஸால் |
| 5 | 17 | குருநயி | குருநபி |
| 38 | | குதுவே அறியும்படி | குருபீர்தன்னை அறியும்படி |
| 44 | 167 | வாரிறை எழுந்தார் | வாரிழை எழுந்தார் |
| 50 | 192 | யெனறிதின் குத்தாகுத்த | என்றதின் குதாத்தாலே |
| 56 | | சத்தார்விபாம் | சத்தாது விபம் |
| 59 | 225 | வம்பனு | வம்பியை |
| 64 | 248 | முடிமடிப்பேன்காவியா வின்ணுநாகில் | முடிமடிப்பேன் காவியா வின்னும் நாகில் |
| 69 | 265 | யெப்பொழுஞ் சத்தாரெட் டாஞ் | எப்பொழுதும் வாழ சத்தா தெட்டாஞ் |
| 158 | | 7-வது ஹலாலான ஸ்தியை அறியும் வகை | 7-வது ஹலாலானஸ்திரியை அறியும் வகை |
| 431 | 430 | எங்குமே யிறந்திடும் யாவே | எங்குமே இறந்திடும்யாவே |
| 468 | | அங்கமுமச்சுடர் விபாம் | அங்கமுச்சுடர் விபாம் |
| 469 | 30 | பாய்ந்துபார் | பாய்ந்ததுபார் |
| 483 | 79 | தாங்கிய ரிஷமும் | தாங்கிய ரிஷபமும் |

## திருநெறி நீதம் பாடற்றிரட்டின்

# அட்டவணை.

### முதற்படலம்.


| பக்கம். | நூற்பிரிவு, | பாட்டு. |
|---|---|---|
| 1 | சாய்பு அவர்கள் வரலாறு | 19 |
| 6 | பட்டாபிஷேகம்-நபிகாரணம் | 31 |
| 14 | யூதர்கள் நபியிடம் மசலா கேள்வி | 37 |
| 23 | கலிமாப்பொருள் | 59 |
| 38 | குரு பீர் தன்னை அறியும்படி | 4 |
| 40 | அபுலா தூன் கேள்வி | 64 |
| 56 | சத்தாது விபரம் | 53 |
| 70 | அறிதுடைய வகை | 26 |
| 77 | பெரிதுடைய வகை | 28 |
| 84 | சிறிதுடைய வகை | 8 |
| 86 | உரிதுடைய வகை | 5 |
| 88 | கொடிதினுடை வகை | 26 |
| 95 | பருக்கத்து ஈமானும் தவராத வகை | 7 |
| 97 | சுவர்க்கவாதிகள் நரகவாதிகள் அடையாளம் | 8 |
| 99 | உயிரையும் சடலத்தையும் படைத்த விதம் | 30 |
| 107 | இபுலீசு ரூபத்தின் விபரம் | 5 |
| 108 | ஆதநபி ஜடத்தை உண்டுபண்ணின வகை | 23 |
| 114 | இபுலீசைத்தள்ளின விபரம் | 14 |
| 118 | முத்துப்பட்டண மழிந்த வகை | 8 |
| 120 | எழுபதாதமுமழிந்த வகை | 27 |
| 127 | கயாத்துல்கை பாற்கடல் வளமை | 35 |


### இரண்டாவது படலம்.


| | | |
|---|---|---|
| 137 | 1-வது குக்கும் வகை | 14 |
| 141 | 2-வது ஹலால் சுரிகத்து வைக்கிறவகை | 30 |
| 149 | 3-வது ஹராமான ஸ்திரீயை அறியும் வகை | 11 |
| 152 | 4வது இவ்விதத்துடையபேர்களும் ஹராத்துக்கு சமதையா | 7 |
| 154 | 5-வது ஹராத்துக்குச் சமதைபாதி | கும் 4 |
| 155 | 6-வது மக்கூரான ஸ்திரீயை யறிய | 11 |
| 158 | 7-வது ஹலாலான ஸ்திரீயை அறியும்வகை | 6 |
| 160 | 8-வது ஸ்திரி ஜாதிகள் 40-க்கு ஹலாலாம் | 21 |
| 165 | 9-வது இவ்வித புருஷ ஸ்திரீகளுக்கு ஹராமாகும் | 7 |

| பக்கம். | | பாட்டு. |
|---|---|---|
| 167 | 10-வது இவ்வித புருஷன் ஹராத்துக்கு சமதையாகும் | 5 |
| 169 | 11-வது இவ்விதப் புருஷர் மக்கூஹாக இருக்கும் | 3 |
| 170 | 12-வது இவ்வித புருஷர்கள் கலாலாகும் | 7 |
| 172 | 13-வது இவ்விதமாக நிக்காஹு செய்யவேணும் | 19 |
| 177 | 14-வது நிக்காகுடைய பருலுண்டான வகையறியவும் | 20 |
| 182 | 15-வதுமகரு கொடுக்கிறதுங்கடனுகயிருக்கிறதுமறியும்வகை | 7 |
| 184 | 16-வது இவ்விதமுடையவர்கள் ஹாலியாகும் | 10 |
| 187 | 17-வது ஹுத்தீபாகிற விதம் | 18 |
| 192 | 18-வது சாக்ஷி சொல்லப்பட்டவர்கள் வகையறியவும் | 7 |
| 194 | 19-வது சாட்சிக்கு ஏராதவர்கள் வகையறியவும் | 4 |
| 195 | 20-வது நிக்காகு செய்கிற நாளறியும் வகை | 11 |
| 198 | பெண்ணோடு இணங்கி இஷ்ட கழபம் செய்கிறவகை தவிர்த்த | 7 |
| 200 | 21-வது இவ்விதமாக பெண்சாதியை ஆழவேணும் | 31 |
| 208 | 22-வது பெண்சாதி உடலில் ஹலாலும் ஹராமுமறியவகை | 15 |
| 212 | 23-வது ஸ்திரி ஜாதியுடைய நடப்பு | 5 |
| 214 | 24-வது ஸ்திரி ஜாதி இந்த 12 பேர்கள் முன்னே நிற்கலாம் | 4 |
| 215 | 25-வது ஸ்திரி சாதியை தள்ளுகிறதும் சேர்க்கிறதுமறியும் வகை | 23 |
| 221 | 26-வது ஸ்திரிஜாதி வெளியில் பிரசங்கமாக இருக்கிறவகை | 3 |
| 222 | 27-வது இவ்விதமான ஸ்திரிஜாதிகளுக்கு மகருகிடையாது | 18 |
| 227 | 28-வது இவ்விதமான ஸ்திரி ஜாதி வாங்கின மகரைக் கொடுத்து விடவேண்டும் | 6 |
| 229 | 29-வது இவ்விதமுடைய ஸ்திரிஜாதிகளை தள்ளிப்போடலாம் | 7 |
| 231 | 30-வது இவ்விதஜாதியும் தள்ளிப்போடலாம் | 9 |
| 233 | 31-வது இவ்விதமுடைய ஸ்திரி தள்ளிப்பொருத்தினுல் தள்ளலாம் | 13 |
| 237 | 32-வது இவ்வித ஸ்திரி சாதிகள் மகர் கொடுக்கிறதை அறியும் வகை | 4 |
| 238 | 33-வது இவ்விதமானபுருஷரை ஸ்திரிகள் தள்ளிவிடலாம் | 7 |
| 240 | 34-வது இவ்விதமான புருஷரையும் ஸ்திரி சாதிகள் தள்ளி விடலாம் | 4 |
| 241 | 35-வது இவ்விதத்துடைய ஸ்திரிசாதிகள் தாலாக்கில்லாது நிக்காஹு செய்யலாம். | 11 |
| 244 | 36-வது ஸ்திரிகளைத் தலாக்குச்சொல்லுகிற வகை | 15 |

பக்கம். பாட்டு.
248 37-வது தலாக்கு சொன்ன ஸ்திரியைச் சேர்த்துக்கொள்கிற வகை 8
251 38-வது மவுத்தாய்ப்போனவர்களுக்கு இத்தாவும் சடங்கும் 24

மூன்றாவது படலம்

259 சிங்காசன கொலு அலங்காரம் 27
266 ஹறும் பிறந்தவனை அறியும் வகை 11
269 இரண்டாவது திட்டம் 14
273 மூன்றாவது திட்டம் 7
275 சனச்செய்தவர்களுக்கு தெண்டம் அறியும் வகை 13
278 நாலாந்திட்டம் 12
282 தெண்டனைக்குட்படுத்துதல் 13
285 அனந்தர சுகந்திரம் பிரிக்கிற விபரம் 22
291 பங்கு விபரம் 80
311 ஹராமான வஸ்துக்களை அறிகிறவிபரம் 18
316 ஏ நிர் புத்தை வணங்குவோர் பதவி 12
319 ஏ நிர் தீனுல் இஸ்லாம் நேர்வழி பதவி 11

நான்காவது படலம்.

315 கியாமத்தமளி ஆகர்சமான் முடிவு 27
322 பஞ்ச பாதகத்தின் விபரம் 5
324 நாற்பதடையாளம் 4
325 நசுராகுலம் வருதல் 30
333 நசுறுத்தேசமாளுங்கெடுதல் 7
335 உலகத்தில் லானத்திரங்கியது 4
336 நசுரா அமளி விபரம் 4
338 முஹம்மது ரஜிஹான் பாக்ஷா பட்டம் இருங்கிலி படை வருதல் 8
340 அசுகாபு படைவருதல் 2
341 முஹம்மது மசுகூது மவுலி கமால் பாக்ஷா வருகிற விபரம் 7
343 எமன் றாச்சியத்துக்கு தானிப்படை மலக்கூன் ராசா வருதல் 13
346 அபுசா படை வருதல் 3
347 மசுகூது மவுலி வருதல் 2
348 யூனன் அபுசா படை வருதல் 2
349 சுலையுமான் கபசி வருதல் 8

| பக்கம். | | பாட்டு. |
|---|---|---|
| 350 | இபுனியப்பாசு பட்டம் விபரம் | 1 |
| ,, | கிபுத்தி படை வருதல் | 9 |
| 353 | முருக்கி படை வருதல் | 5 |
| 354 | அப்துல்லா பாக்ஷா பட்டம் | 5 |
| 356 | ஹபஜி இபுனியப்பாசு பட்டம் தரித்தல் | 9 |
| 358 | உமருஜாதி மவுலி பாக்ஷா பட்டம் | 3 |
| 359 | ஹாறுமுசுபடை வருதல் | 10 |
| 362 | நாட்டுச் சிறப்பு | 18 |
| 367 | இமாமகுதியும் மஹம்மதனுபாவும் முதாரியும் வருதல் | 64 |
| 383 | ஆலங்கள் விஷளம் | 21 |
| 389 | மகுதி இமாம் அரசுநிலே | 7 |
| 391 | முஹம்மது அனுபா அரசு நிலே | 17 |
| 395 | தச்சால் வருதல் | 90 |
| 418 | யாகூசு மாகூசு வருதல் | 30 |
| 426 | தாவூத்திலிருள் வருதல் | 27 |
| 433 | செருக்கியர் சயிலர் வருதல் | 6 |
| 435 | ஈசா நபி முடிவு | 98 |

## நான்காவது படலம் (இரண்டாம் பாகம்)

| | | |
|---|---|---|
| 460 | கடப்புகள் காரணம் கியாமத்து வளமை மஹஷர் 4-ல் 5 ஆக பவனியுஞ்சொல்கிறோம் | 9 |
| 463 | எழுபிறப்பு அறியும் விபரம் | 14 |
| 467 | ஆதிமுச்சுடர் விபரம் | 4 |
| 468 | அங்கமுச்சுடர்விபரம் | 4 |
| 469 | ஏழு ரூகுடைய விபரம் | 5 |
| 471 | ஏழு ரூகுடைய மக்காம் | 8 |
| 473 | மவுத்தாகிற விபரம் | 6 |
| 475 | ரூகை அறிகிறது | 8 |
| 477 | நாலு ரூகை அறிகிற மூலமாகிய ஸ்தலம் | 11 |
| 480 | நாலு பதவியின் விபரம் | 4 |
| 481 | ஆதியுமந்தமும் ஒன்ருய்ப்போகிற விபரம் | 20 |
| 487 | கடப்புகழ் | 11 |
| 490 | இருபிறவியை அறிகிற விபரம் | 84 |
| 511 | கேள்வி விபரம் | 43 |

| பக்கம். | | பாட்டு. |
|---|---|---|
| 522 | சாபி இமாமுடைய கேள்வி | 20 |
| 528 | துனியாவில் கொண்ட கடன் தீர்க்கிற விபரம் | 4 |
| 529 | இபுலீஸ் படைவந்து நபியை வழிமறித்தல் | 28 |
| 536 | நபி சயனம் | 4 |
| 538 | பாவியின் வகை | 8 |
| 540 | நரகமங்கெதியாகஇருக்கப்பட்டவர்வகை | 4 |
| 541 | நரகத்தினுடைய பெருப்பம் | 10 |
| 544 | நபிசபாயத்து செற்கிறது | 4 |
| 545 | இபுலீசு தைரியங்கெட்டு நபி பாதத்தில் விழுந்து கெஞ்சுகிறது | 16 |
| 550 | இபுலீசு நபியை மரித்து மோக்ஷம் பெற்ற விபரம் | 10 |
| 553 | மகாமணி மவுலி சூட்டுதல் | 17 |
| 557 | பந்தல் அலங்காரம் | 17 |
| 562 | பவனி சிங்காரிப்பு | 65 |
| 579 | நபியுல்லாவுக்கு சோபனஞ்சொல்லுதல் | 4 |
| 580 | மங்களம் சொல்லுதல் | 7 |
| 582 | மருசர் விருந்து சொல்லுதல் | 4 |
| 583 | துல்பக்கார் வாளின் விபரம் | 15 |
| 587 | விருந்துண்ணல் | 6 |
| 589 | எப்போதும் சுவனபதி செங்கோல் | 21 |


ஆக மொத்தம் பாடற்றொகை 2229.

திருநேறிநிதம் அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றகுமானிர்றஹீம்.

# திருநெறி நீதம்.

## முதல் படலம்.

---

திருநெறி நீதமென் றுரைத்திடும் வாசகங்
திசையெங்கும் படைத்திடுந் திரலோன்
அருமறைப் பொருளை அகமதா யிருந்த
அனைத்தையு மறிந்துல மாக்கள்
குருமறைப் பொருளாய்க் கூறியபலதுங்
கோர்வையென் றெடுத்தன ரிமாமு அல்லம்
விரிவொடு கஞ்சில்ப் பலமுறை விதமும்
விரித்திடு தமிழிதின்விதமே 1

விதனமொன் றணுகா வித்தினில் விளையா
விண்ணகம் மண்ணகம் விளங்கப்
பதிதனில் புறுகான் படைப்பினிக் கிணையா
பலபல மொழியையும் பகுந்த
மதிகதி ரமைத்த மறைகளு முறைத்த
மார்க்கமென் றனைத்துமே அறிய
விதிதனில் வரியா யெழுதிய யிறையே
வேந்தனே துணைசெய்வாயே 2

துணையெனக் குயிரென தொகுத்திடும் பொருளைத்
தோத்திய அனுதினந் தொழுது
எணைப்படைத்தாழு மிறையவனுமம்
யிருதயக் கமலமென் சிரசினிலேற்றி
மனத்தினில் வரும்பொரு ளணைத்தையு மிறைதிரு
வாசக முறையென யெழுதி
பெனதுயிர்ப் பொருளென் றெனக்கொரு துணையென்
மனங்களித் துகந்தேன் மக்கமாநபியே 3

வேறு.

மக்கமாநகரில் வள்ளல் முகம்மதற்
றிருபதத்தையும் போற்றி
மாமரு மிருபேர் மருகரு மிருபே
திருபதத் தையும் போற்றி
திக்கெல்லாம் புகழும் அசஹுச
னிருபதத்தையும்போற்றி
தீன்கொடி முகையதீன்
பதமென் சிரசிலேற்றி
தக்குவாவுடையோர் பலமறையோர்கள்
லோகவானரையும் போற்றி
திக்கெல்லாம் புகழுந்தீனவர்க்
குரைத்தனன் தெளிவே 4

வேதமே நெறியின் விளங்கிய தீனோர்
விதமிது நடக்கவும் விதியென விதித்து
நீதமே திருநெறியென நிறுத்தி
நீர்நிலத்தோரரசாளவும் நிரையா
பாதமே தரையிலுறைந்திடா வள்ளல்
பயகாம்பருக் கிறையவன் பகுந்த
வீதமா வேதத்ததின் பல பலவுக்குமும்
விரித்திடும் தமிழிதின் விதமே 5

வீதமா பலபல ஹூக்குமுங்களை விரித்து
விளம்பிய படலமு நாலா
வேதமா விளங்கிய விதங்களு மற்ற
விரித்துள்ள கருமங்களனைத்தையுஞ்சேர்த்து
நீதமாயிதன்படி நடந்திடு முறையும்
நிறை குறைந்திடிலிதுக் குற்றத்திடுந்தெண்டம்
ஓதுநால் படத்தில் ஒவ்வொரு முறையா
வுலகவ ரறியவு முரைத்திட்டேனே 6

திட்டமாத் திருநெறி நீதந்தன்னைத்
தீனவரறிந்திடா திருக்கொண்ணுது
சட்டமா யறிந்திதைத் தெளிந்தவர் பார்த்துச்
சகலமும் நடக்கவுந் திருநெறியால்
யெட்டுநா லெழுத்தினில் இறையவ னுமமென்
றியம்பிய இரசூல் மொழிய
மட்டில்லா வுலமாக்களும் மனிதருக்
குறைத்தனர் மதகபூ மறையில் 7

மறைநெறி நீதமென் றுரைத்திடும் வகை யிந்த
மதகபூ நாலையு மறிந்தோர்
யிறைதிரு நாமமென் றியம்பிய தெளகீ
திரங்கிய சிபுரியி லொகியையு மறிந்தோர்
சரகினின் படியே நடப்பவர்க் கிந்த
சாத்திய விதமின் சகலருமறிய
முறைகளைத் திரே ரிந்தவா றறியார்
முழுதுமீதறியவும் முடித்திடு முதலே 8

முந்தநா ளாத நன்னபியு
முலகத்தில் வாழ்ந்திடு நாள்முதலா
யிந்தநாள் நபியிர சூலும்
பேரணி விளங்கிய மதகபூநாலில்
இந்தவா ரனைத்தையு மெடுத்திமாங்க
ளியம்பிய முறையென வெழுதி
சொந்தமா வுலமாக்களும் தொகுத்தனர்
பலபல கிதாப்பிலுந் தோன்ற 9

தோன்றல னுரைத்தவகை பெரும்பொருளில்
தோற்றியும் தோற்றாத துகைவகை பலதும்
ஆண்டவனுரைத்த அருள்படி இரசூல்
வாசரவொடு யார்களு மறிய
கூண்டிடும் சபையில் கூறிய விசளம்
கோர்வைசெய் தெடுத்திட யிமாங்கள்
வேண்டிய தெல்லா வேண்டுமென் றெடுத்தார்
வெகுபொருளான விதத்தையு மொழித்தார் 10

ஒளிப்பவ ரொருவிதம் ஓதுவரொருவிதம்
உலகெல்லாம் சிதரியே நிறைய
வெளிப்பிர காச மதின்பொருள் வேறு
யிதுக்கொரு பொருளு மிருக்குதுவென்றும்
தெளிவுள்ள பெரியோ ரொருமுறை கூற
தீனவரதுக்கும் பலமுறை கூற
நெழிவுக ளறிந்து பார்த்துணராமல்
நீர்நிலத்தார்நினை வழிந்ததுமலைந்தே 11

அலைந்திடும் பொருளையெல்லா மாய்ந்ததை ஒன்றாய்ச்சேர்த்து
இலங்கவு மெவர்க்குத்தோண யிதுபிரகாசம்பாட
பலம்பிர வுகந்து யேந்தி பாலனென் றெனைவளர்த்து
துலங்கவும் விழிதுரந்தி துகைவகை வருத்திவைத்தோர் 12

வருத்தியே அறிவுகூறு மவர்குலம் செய்பது பேரர்
சருத்துச்கள் புகழுங்கோவே சையது மீறாங்கனிதன்
திருத்திய பாதமெந்தன் சிந்தையில் நினைந்ததாலே
உரைத்திடும் பொருளுஞ்சீரு முகந்தவர் தருமந்தானே 13

தருமமும் தவச்செபமுந் தன்கொலு வாசங்கூற
வருமென தனையெண்ணாமல் வாக்கொடு மனதுமொன்றாய்க்
கருமமென் றனைத்துஞ்செய்ய கையவர் முழுத்தமீய்ந்தோர்
குருயிரு பாதம் ரெண்டும் கொண்டேனென் சென்னிமீதில் 14

### வேறு

மீதனி யிரசூலுல்லா மிருந்துல காளுநாளில்
ஆதியின் நபிவய தறுபத்தி ரண்டாமாண்டில்
காதலன் விளங்கும் வள்ளல் காரண கவிகையாகப்
பேதையென் றெழியேன் பீரு முகம்மதன் பேசுவாரே 15

வாரையும் பலமுறை வகையையு மறிந்து
வரைந்திடும் முறையதின் வளமையுமறிந்தோர்
தேறிய கலைநெறி முறையொருவனை
யேத்தியே பலவகை தெளிந்தோர்
கூறிய விசளம் குதாயிரசூலும்
கோர்வையி மாமொடு கொலுவையுமறிந்தோர்
பாரினி லுரைப்படி ஹக்குங்கொடுத்தார்
பகர் சதக்கத்துல்லா வொலீ குருவே 16

### வேறு

குருநயி ஹிஜரத்தாகி குவலய தாயிரத்தின்
இருபத்தி ரெண்டாமாண்டி லியம்பிடும் ரப்பியுலாஹர்
கருமமென் றிருபதன்று காரண வெள்ளிநாளில்
திருநெறி நீதம்பாடத் திருவருள் பெருகத்தானே 17

### வேறு

பெரியவ னொளிவால் முந்த பிறந்தலில் முகம்மதாகி
அரியது முகம்மதென்று மதுக்குமேல் ஹாமீதென்றும்
பெருகிய வொழிதிரண்டு பிறந்தது ஹாமீமதாகி
மருவிய மயிலெக்கினில் மறையென்னுங் கனியையுண்டே 18

உண்டவர் சபூருத்தென்று முலாவிய யன்னமாகி
நின்றிடு மலக்கூத்தாகி நிறுத்திய பிருவதாகி
கண்டவர் லாகூத்தான ஹத்தியாய் பள்ளிமீதில்
சென்றிடு மாடமீதில் செம்மலுங்குயிலதானார் 19

# பட்டாபிஷேகம்-நபிகாரணம்

ஆகிய அரசின்கீழே அணிவகுத்து ஹிந்திலாகி
யேகிய நாலாம்வான மிருந்தவர் குத்துபென்றும்
வாகிய உயிரணைத்து மணிவகுப் புடன்றொழுது
பாகியே சுவர்க்கமீதில் பட்டாபிஷேகஞ் சூட்டி 20

சூடுஞ்சிங் காசனத்தில் சூழ்பிர காரஞ்சுற்றித்
தேடிய ஆதம்காண திருமுது கிருகத்தில்
லாடியே நபிபிரத்தி லணிவகுத்தான் அன்பத்தொன்றில்
கூடியே அப்துல்லாவுங் கோதை யாமீனா ரீன்றார் 21

வேறு

ஆமீனார்மக வெனப்பிறந் தலிமா
அமுதருந்திய அரசர்
சேம னானவன் அருளொடு லாஞ்சினைச்
சிறந்திடத் திருவடி துலங்கி
மூமீனானவர் முருசலீங்களுக்கரசர்
முஹம்மத ரெனப்பெயர் முழங்கி
ஆமீனாமீனென பகளச் சிறந்தனர்
அஹமது முஹமது நபியே 22

அகமதுநபி மனுவரையும் போல
அச்சுருகாண மனுவல்ல
செகமதி லிருப்பா ரெவர்க்கொரு சானுயர் செழுமுடி
அருசில் மேல் தாவூம்
தகமயில் நடப்பா ரவரடி தோயா
தருத்தரா மீதினில் தாங்கும்
மேகமென் கவிகை வருமிர சூலின்
மேனியி லணுக்கணுகாதே 23

காதமே மணக்கும் கஸ்தூரியின் வாசம்
கடுபொய் ஹராம் பஹீல் காணார்
வேதநன் னபியார் வெடிசிரிப் புரையார்
வெளியினில் மலஞ்சலங் காணார்
யேதொரு கோபம் பெருமையு மில்லை
யேகமு லாஞ்சினை தரித்தோர்
நீதவா மேனி பளிங்கிபி னிறத்தால்
நிழலடி சாய்ந்தது மில்லை 24

இல்லையே அசதியு மறதியும் நபிக்கு
இருகண்ணும் முன்பின் காணும்
வல்லவன் நபியே சூழ்ந்த வருஹா
வருவது கொடியும் பத்தாகும்
சில்லரை நபியோர் மனுவரசர்க்கும்
செப்பிய விதமனுகாது
வல்லமை புகழு மிறைவ னொளிவால்
வர்த்தியாய் வகுத்தன னுலகில் 25

உலகினி லெவர்க்கும் யிருபத்திரன்கு
வுயர்த்திய காரணமறிய
கலைகளை யிறக்கி நபியெனப்புகழ
காபிரை தீனிசுலாத்தில்
நிலைபெற நிறுத்தி தீர்ரசாக
நிகரில்லான் தூதிரசூலும்
பலகலை பகுந்த ஒளிவினி லுதித்த
பாத்திபர் முகம்மது நபியே 26

நபிகள்நாயகர் கொலுவர சிருக்க
நாலுயாரொடு நாற்பத்தீராயிரர்
கவியும் மீனினு மதிதனை வளைந்த
கருங்கட லுதித்திடுங் கதிர்போல்
புவியில் மார்தரு மரசரும்
திரைகொடுபுகன்றிடும் கவிமாப்
ஹபிபதாய் யின்ரயொ கியொடு காரணக்
குரு சிருந்தனர் காபத்துல்லாவில் 27

காபத்துல்லாவி னடுத்திசை யெனக்கருதி
கதிர்மதி விலகியக் ககனு
கோபக்காமலை சூழுலகனைத்தும்
கொடுமுடி சிதர நடுபொதுவாம்
காபுக ஆசையின் திரைதிரு வாசணைத்
திருந்தொரு மணியிரங்கிடவும்
தாஜே குருசரு சொடுமகுமூர்
தாங்கிய தரித்திடும் ஹாபா மீதில் 28

மீதணி நடுநிலை பொதுவிரை நிரைய
மீதுநெறிவல ரிருக்க
ஆதியின் ஜிபுரில் அடிக்கடி வோகி
வந்ததின்படி இரசூல்
வேதமுங் கொனுவும் வெகுமுறை பரப்பி
விண்ணகம் மண்ணகம் விரும்ப
சோதியின் தூதென தொழுதவர் வணங்கி
சொல்மறை நபியிருந்தனரே 29

நபிகொனு விருந்து நகரையு மாள
நாயகன் ஜிபுரியில் குரைப்பான்
ஹபிபவர் தீனே கருத்தினில் நினைந்து
காபிர்க ளிருவர்கள் வருவார்
புவிதனில் மஹரீப்பென்னும் பதியோர் பொருளுரைத்திட
பதிலோது மிவைபிறை கூற
ஜிபுரியில் இரங்கி யிரசூல் நபிக்குறைத்து
விண்ணகத்துரைத்தார் 30

விண்ணகம் போனபின்பு
விடிர்திர சூனுல்லாவும்
மன்னவர் யார்கள் நானு
அசுகாபு களனரும் கூடி
முன்னவன் பஜர்தொழுது
முகிந்தபின் நபியே போத்தும்
மின்னெழி மதியேசூழ்ந்த
மின்னென இருக்கும்போது 31

போர்தவ மிருந்து
புகழ்மறை தினுகந்து
வேதமு மிலங்கும்போல
விண்ணெலாம் சுடர்துலங்கி
ஆதவன் கிழக்கெழும்ப
அஹமதிரசூல் முன்னே
சூதர்க ளிருவர்தம்மை
சூழ்ந்தவ ரனைவரும் வந்தார் 32

வந்தவ ரிருவர்கூட
வரக்குழு கலைகளாய்ந்த
எந்தவார் வேதமூன்றும்
மிதின்பொருள் எல்லாமாய்ந்தோர்
அந்தமா வொருவ வைப்போ
லருபத்தி நாலுபேரும்
பந்தியா ரிவர்கள் சூழ்ந்த
பரிகரி வுடனே வந்தார் 33

பரிகரி அணிக்கிமுன்னே
பகும்பொன்னும் பணியணைந்த
திரவியம் சுமந்த ஒட்டை
சிரந்தனை யேழதாக
பரியொடு அணியோர் பத்தும்
பருஞ்சுமை யெழுபதேத்தி
குருநபி யிரசூல்முன்னே
குழுவுடன் னரும் வந்தார் 34

வந்தவ ரனரு முந்த
வாய்மொழி வுரைக்குமுன்னே
புந்தியேழ் பொருள்வகுந்து
பார்முஞ்சி அந்த ஒட்டை
முந்தவம் யிறை தூதரான
முகம்மதர் முகத்தைநோக்கி
சொந்தமா சலாமுரைத்து
சுஜூதிட்டு தொழுதுசொல்லும் 35

சொல்லிய யிறையின் பேரும்
சுவனமும் பொருந்துங்கோவே
எல்லையில் மஹரி பாழும்
இவரிரு ஞுபிராசர்
எல்லவர் குழுவுங்கூடி
மிணங்கவும் உமதுபாதம்
உள்ளமும் கருத்தில் நாடி
ஒருமைகொண்டிணிது வந்தார் 36

வந்தவர் குழுவெல்லோரும்
அனைவருந் தீனிலாக
முந்தவ மிவர்கள்தேட
முதலெல்லாந் திரட்ட வொன்றாய்த்
தந்திட நபிதமக்கு
தாங்களு மடிமையாக
சிந்தையில் நினைந்து வந்தார்
திரவிய முமக்கே யென்றும் 37

உமக்கென பலபுகழும்
ஒட்டக முரைக்கும்போது
சுமக்குமொட் டகத்தின்பின்னே
சிரந்தணி குளுக்களெல்லாம்
தமக்கருத் துறுதியாகி
தக்கவன் தூதரென்று
நமக்கிவர் கெதியேயென்று
நபிதமை நாடிவீழ்ந்தார் 38

விழுந்தவ ரனைவரெல்லாம்
விழித்திர ரூஹுல்லாவும்
எழுந்திரு யென னபிசொல்ல
எல்லவரெழுந்த போற்றி
குழுந்தலா குடைய வள்ளல்
கொலுமுகம் பார்த்தெல்லோரும்
தெளிந்தவ ரவரவர்கள்
தீரவும் விளங்கிச்சொல்வார்' 39

சொல்லுவா ரொருவருக் கொருவர்
சோதிமுன் னபிகட்கெல்லாம்
வல்லவன் தூதிவர்காண்
வதுக்கிரு மனநினைந்தால்
தொல்லையே நரகே அல்லால்
துலைந்திடா திவர்கள் பாவம்
எல்லையி லிவரைக்காண
என்னபாக்கியஞ் செய்தோமோ 40

பாக்கியம் பலனே செய்தோம்
பாவமுந்துலைத்தோ மென்பார்
வாக்கிய முடைய வள்ளல்
வடிவையும் புதுமைபொங்கி
தாக்கிய கருமநாமள்
நினைத்தது அறிந்து ஒட்டை
நோக்கிய வுரையும்பேசி
நகந்துகொண் டிருக்கும்போது 41

போதவும் வொழிவினாலும்
புகழ்மறை நெறி யிறசூல்
சூதரின் குளுவை நோக்கி
சொல்மொழி சொர்ணம்போல
நீதவா னகரமேது
நீர்சூல நாமனென்னா
பாதமும் நோகவந்த
பயணமு முறையுமென்றார் 42

உரையுமென் னிரசூல் சொல்ல
உகந்தவா மலரைப்போற்றி
இரவியள் யிருள் மகரீபு
எங்கள் ராஜியமும் யாங்கள்
திரவியத்துடைய வேந்தன்
திக்கெல்லாம் ஆளுஞ்சூதர்
மரவிய வேதமுன்று
மாய்ந்தவர் யெங்கள்நாமம் 43

நாமமென் றுடைய கோமான்
நகர்மக ரீபையாண்ட
தாமவன் வாரீ யீன்ற
தய்யூசனு மாசன்பங்கில்
பூமனு மாசான்பங்கில் பூமெனுமொலியா
வென்னும் புதல்வனு யிருவர் யாங்கள்
சேமமும் கலைகளாய்ந்த
செம்மலர் குளுவெல்லோரும் 44

குளுக்களும் யாங்கள் சேர்ந்து
குருமறை புகழுநாளில்
அளுக்க மொன்றில்லாவேதம்
தினப்பொரு ளறியும்போது
ஒழுக்கமும் வேதமூன்று
உணர்ந்ததில் குபிரையாகும்
வழிக்கிறை நாலாம் வேதம்
வகுப்பதென் றிருந்ததையா 45

வகுத்திடும் நாலாம் வேத
மதின்குரு வானவள்ளல்
மகுத்துவ நிரைந்த மக்கா
முகம்மது நபிதன் தீனில்
தொகுத்தவர் சுவர்க்கமென்று
தோத்திய கலையுகண்டு
மிகுத்துமுன் நபிகளெல்லாம்
எழுதிவைத் திருந்துதையா 46

எழுதிய கெடுவுமிந்த
இலக்கமிக் காலமாகும்
பொழுதிலும் வொளிவிலங்கும்
புகழ்மகு மூதர்முன்னே
பொழுதிலும் உளமைதானும்
உருவங்கள் பலதும் வந்து
தொழுததின் பாசைதோன்ற
தொகுத்துரைக்கு மென்றிருந்துதையா 47

உரைப்பவ றெவர்களென்ற
உலகத்தி லுவமை கேட்டும்
நிரப்பவும் அவர்நினைவே
நிரைபொரு ளுரைக்கவல்லார்
சிறப்புடன் நபிநீமென்று
சிந்திடா திருக்கும்போது
இறப்பவர் தனைமன்றுடு
மிவரென யிருந்ததையா 48

இருந்த வாசகமனைத்தையுமறிந்து
எங்கள்வேதியர் அறுபத்திநாலும்
பொருந்தொரு மனதுடன் வரவெழியாப்
பொன்பொரு ளனைத்தையும் பொதியா
இருந்த திரவிய மெழுபதொட்டகமும்
எடுத்து பாதைகள் துலைத்து
திருந்து வேதமும் திருநபி பாதமும்
தெரிசித்தோம் ஹாபக்கா பதியில் 49

பதியெல்லா மறிந்துயாங்கள்
பெருக்கவும் நடந்துவந்தோம்
விதியினி லிரையெழுதி
யிருந்ததாலும்மைக் கண்டோம்
இதுவெங்கள் திரவியமும்
யாங்களு முமக்கேயாகும்
அதிசயமறிவா லொன்று
அரும்பொரு ளுரைக்கவேண்டும் 50

# ஜூதர்கள் நபியிடம் மசலாகேள்வி.

உரைத்திடும் பொருளுமாண்டு
　　வுலகெல்லாம் நிறைந்திருக்கும்
நிறைந்திடும் பொருளையாங்க
　　ளிக்கணை பேருங்கூடி
சிறத்தொடு மிருபொருளில்
　　சிறிதிது பெரிதீதென்று
ஒருத்தருக் குரைத்த வாக்கை
　　ஒருத்தருக் குரைக்கொணாதே 51

ஒருவர்கள் கேட்டசொல்லை
　　வுரைத்ததை மருதாமும்
அறுபத்தி நாலும்பேரு
　　மதுதனைக் கேள்ப்போம் நாங்கள்
குருவுத்த பொருளதற்கு
　　கூர்வது வெவ்வேராக
குருவுத்த விஷளமெங்கள்
　　கருத்தினி லறியவேண்டும் 52

அறிந்திடும் பொருளையெல்லா
　　அனைவரும் தீனிலாவோம்
நிறைந்தொரு பொருள் குறைந்தால்
　　நீர்நபி யல்லவென்றும்
சிறந்திடு மஹரிபென்ற
　　தேசங்கள் பலர்க்குந்தோண
அறிந்திட முரசடிப்போ
　　மின்னவ ருரைக்கும்போது 53

போதமும் பொருளுங்கேட்ட
புகழெல்லா முரைக்கவல்ல
வேதமுந் தவம் விளங்கும்
வெற்றியும் புத்தியுற்று
நீதமும் விளங்குங்கோவே
நிகரில்லான் றூதரான
காதமே மணக்குங்கோமான்
காவலர் செவியிற்கொண்டார் 54

கொண்டவர் செவியிலூணிக்
குலுக்கியே சிரமசைத்து
நன்றுநீர் கேட்டதெல்லாம்
நாயக னுதவியாலே
ஒன்றுக்கு பத்து நூறு
ஒருமொழி பலபொருளும்
வின்றிட யிறை கொடுப்பான்
வேண்டிய தெல்லாங் கேளும் 55

கேளுமென் னிரசூல் கிளிமொழி வாயால்
கீர்த்திகளிருவரை நோக்கி
சூழ்மலர் புயம்வாழ் தூதருமுரைக்க
தோன்றலன் முறுவல்கொண்டிருந்து
மீளவும் மஹரீப்பிறந்திடும் மன்ன
னிவர்குழு வினரைக்கூவி
கேளுமென்றுரைக்க கேசரி யெழுந்து
கேட்டனர் மதிமுகநோக்கி 56

நபிமுகநோக்கி ஐவர்களெழுந்து
நாயகன் நபிமணிச்சுடரே
புவிதனில் விளங்கும் செம்பொன் பெரிதோ
பொருளினை அறிவது பெரிதோ
ஹபீபிதை உரையீ ரென்றவர் கேட்க
ஹபீபுமனங் களிையா
யெவ்வித பொருட்கும் யிறையரி பெரிதா
யிருக்குமென் றுரைத்தன ரிரசூல் 57

உரைத்திடு வகையென வாரிணக்கேட்க
வோதுவார் வுலமா நபியும்
விரைத்திடும் பொருள் வீணாசைகள் தோணும்
வேண்டா யிவ்வாசையை விலக்கும்
நிறைத்திடும் பொருளால் நெஞ்சுமே வனுவாம்
நீண்டரி நெஞ்சையு மிளக்கும்
இறைத்திட லாம்பொருள் யீயவும் நினையார்
இறைகொணு தறிவுகளீவார் 58

ஈந்திடு பொருளை எடுப்பதுமுண்டு
யிறையரி யீய்ந்துபின் னெடுக்கார்
பாந்தியஞ்சொல்ல பணிந்தவரிவர்
பறத்தினில் போகவும் நால்வர்
காந்தியின் நபியே அரும்பொருள் பெரிதோ
கத்தவனறிவது பெரிதொ
ஆய்ந்தவர் கேட்க அரும்பொருளதுக்கு
அறிவுகள் பெரிதென அறைந்தார் 59

அறிந்திடும் வகையென அவரவர் கேட்க
அவர்மனம் முரிந்திடு முதலால்
சிறந்திடு மறிவா லிறக்கமுந்தோன்றுஞ்
செம்பொன்னில் பஹீலுமுண்டாகும்
உரைந்திடு மறிவால் சகாபத்துண்டாகும்
அரும்பொருள் பார்வை ஹறுமா
கரைந்திடு மறிவால் கலாலது பார்வை
கனதன மருஷரில்காணார் 60

காணுதின மொழிகாவலருரைக்க
காபிர்கள் மீளவும் நால்வர்
ஆணிய பொருளிது பெரிதோரறிவுகள்
பெரிதோ ரவரவர் கேட்க
பூணிய பொருளது அறிவுகள் பெரிதென
புகழ்ந்தனர் நபிபிரசூலும்
தோன்றிட முறையு மெனவவர் கேட்க
தொகுத்துரைத்தார்பெருமானே 61

பெரும்பொருள் பொய்யும் பெருமையும் கோபமும்
கெடுமையும் நாலையும் நாடும்
நிறம்பிய வறிவால் வுண்மையு மொழுக்கமும்
நினைவினில் சபுரையும் நன்மையும் நாடும்
இறைநபி கூறபின் னிவர்களும் விலக
யெழுந்தனர் காபீர்கள் நால்வர்
முறைபுகழ் நபியே முதலரிபெரிதோ
வுரைத்திடுமென முதல்தனக்கரி பெரிதே 62

திரவிய நபியே தெளிவுக ளுரையு
மெனவர்கள் கேட்க வேதநன்னபிமொழிவார்
பரவிய முதலில் பலிசையும் வட்டியும்
பருங்குபீர் நெஞ்சரைக் கருக்கும்
அறிவுக ளாசையு மிகப்பொருள் திருத்தி
யவனையும் தீன்குலம் மாஞ்சுடர் கமலம்
நார்நபி கூற அன்னவர் விலகி
நபிமுன்னே நால்வர்கள் வந்தார் 63

வந்தவர் நபிதமை வாழ்த்தியேதுரைப்பார்
வைகப்பொருளரி பெரிதோ
இந்தவா றுரைக்க யெப்பொருளதுக்குயிரை
அரிபெரிதென யியம்பினர் பெருமான்
பொருந்து மின்னபியே கூறுமென் றுரைக்
கொரகொலத்தார் மனங்கொழுக
முந்தவ மிறைதிரு தூதென வந்த
முகம்மது நபிமொழிந்தனரே 64

மொழிந்திடும் முதல்மா துரைத்தவரவார்
முதலவ னறிவை மருத்துரை வுரைக்கார்
செழிந்திடு முதல்வா நிறுத்ததைப்பார்ப்பார்
நீதியுமறிவையு நிறுக்கார்
ஒழிந்திடு முதலிந்த வுலகினில் தெகிட்டும்
வுடையவ னறிவொருக்காலுமே திகட்டா
அழிந்திடு முதலே அவர்வைத்து நோவார்
ஆதியி னறிவை அனைவரும் நோகார் 65

நோகாரினமொழி நுகந்திடக்கேட்டு
நோக்கியே ஐவர்களெழுந்து
வாகாஇறையவன் வாத்திகரான
வள்ளலே இறையவன் தூதே
ஏகாமுதலரி இரண்டிலொன்றேது
பெரிதெனக்குரையும்
சாகா யிறைவன் தூதெென வந்தோர்
சாத்தினர் முதலினு மறிவுகள் பெரிதே 66

பெரிதெனக் குரைத்திடும் பேரினைக் கேட்க
பேசுவார் பெரியவன்னபியும்
குறியுள்ள பொருளை கொடுக்கவுங்குறையும்
குறியில்லறிவைக் கொடுக்கவுங்குறையா
எரிவுள்ள முதலி லீய்ந்தெடுக்கவும்
காணுமிறையரி யீந்தெடுக்கவும் நினையார்
விரிவுள்ள முதல்போய் வருமையும் காணும்
வியனரி குறைந்திடில் வறுமையொன்றில்லை 67

இல்லகம் பொருள் நமக்கிது துணையென்பார்
யேற்பவர் முதல்குறைந் தெளியருமாவார்
வல்லவ னறிவால் வாழ்வும் நினையார்
வாழ்வதும் அரிஞரையறிவில்
சொல்லவுங்கேட்டு தொழுதவர் போனார்
சோதனைக்கெழுந்திடும் நால்வர்
வல்லவன் தூதே வம்பொருள் பெரிதோ
அறிவுகள் பெரிதோ வம்பொருள் தனக்கரிபெரிதே

தாமவரென்ன கேட்கும்போது
தக்கவன் தூதரு முரைப்பார்.
பூமியி லெவர்க்கும் பொருளதை யீந்தால்
போதுமென் றுரைக்கார்
புகழரி தவிர பொருள் கொடுத்தவனையும்புகழ்வார்
அரும்பொரு ளீயாத வரையுவாழ்த்தார்
ஆம்பல அறிவுகள் அனுதினம் புகழ்வார்
அறிவுகளீயா தவரையு மடிக்கார் 69

அடுக்கிய பொருளை அழுத்தவும் நினையார்
அறிவுகளறிந்து அதின்படி நடப்பார்
கரிக்கிய முதலே களரியிலிரைக்கார்
கற்றவனறிவை களரியி லிரைப்பார்
பெருக்கவுங்கேட்டு பின்னவர்
பெரியவர் நால்வர்க ளெழுந்து
வருக்கிய பொருளும் அறிவுகள் பெரிதோ
வான்பொருளுக் கரிபெரிதென அரைந்தார் 70

அரைந்திடும் வகையென்ன அவரவர் கேட்க
ஆதியின் தூதரு முரைப்பார்
சிறந்திடும் முதலவர்க் கிருக்கும் தாஹில்
சென்றிடுமின மெய்ப்ப சாவரென்றிருப்பார்
பரந்திடு மறிவுக ளிருக்கு மாகில்
பாரினிலிவரின் இருக்கவும் நினைப்பீர்
உரைந்திடு முதலை வைத்திறந்திடுவர்
குலங்கூடியே கொடும்பழியாமே 71

ஆகிய அறிவுடையா ரிறந்தார்குல
மதுக்கொரு பகையுங்காணார்
பாகிய முதலுடையா ரிறந்தார் குலம்
பலபல வரும் பகுந்தெடுத்தாலும்
கோபிய மனதில் கொடுமையல்லாது
கூண்டரி தனக்கணுகாது
பாவி முன்பணத்தை பகுந்திலை யென்பான்
படைத்தவ னறிவிதுக்குரையார் 72

உரைத்துடன் கேட்டு வொதுக்கவு நால்வர்
உடையவன் நபிமுன்னே நால்வர்களெழுந்து
விரைத்திடுமுதல் பெரிதோ அறிவோரின்
பெரிமுதல் தனக்கரி பெரிதென விளம்ப
கரைத்திடு முதல் சுமை யெடுக்கவுங்கனக்கும்
கற்றவனறிவும் கனசுமைகாணு
வரைத்திடு முதல்சுமை வழியச்சமாகும்
வல்லனெறிவில் வழியச்சமில்லை 73

இல்லகந் தனிலுமே தொரு நடையிலிம்
முதலெடுக்க இதுசதி துடவார்
வல்லவ னறிவை சுமந்திடும் பேர்க்கு
வழிசதி வந்தவர்களும் பணிவார்
எல்லையில் முதலா இறப்பதுமென்ன
இறைவன் அறிவுகண்டெவர்களும்பணிவார்
சொல்லவும் நால்வர் புறத்தினில் போக
ஜோதிமுன் னிவர்களு முரைப்பார் 74

உறைத்திடு முலகில் அரும்பொருள் பெரிதோ
வுடையவ னறிவது பெரிதோ
நரைத்தவர் கேட்க நானிலம் பொருளில்
நாயகம் அரிபெரி தென நலமும்
சிறப்புட னுரையு மெனவலர் கேட்க
செப்பினர் செம்மலிரசூல்
பாப்பினில் முதலைப் பரிப்திடும்போது
விரட்டியடிப்பது படுமுதலால் 75

முதலடிபடுவார் முதலவ னறிவை
முகந்தவர் வேண்டவும் முடுகார்
பதியினி லடியொடு பொருளைக்கொடுத்து
பருமனத்துயரமு மேக்கமுங்காணும்
துதிசெய்ய மறிவுகள் துச்சருக்கீந்து
துக்கமுந்துயரமுந் தோணவுங்காணர்
விதிவினை சூழ்ந்த முதலது போக
வியாகூலத்தால் வெகுபேர்களுமாள்வார் 76

அனைவரில் சிறியக்கயவர்கள் தனக்கும்
அறிவுக ளீந்ததை அருண்மகள் குலைந்தும்
எனவரில் அறிவுகளீந்தவர் அவர்க்கு
யேக்கமில் மனக்குறை யெவர்களுமில்லை
பிணிகளு நோவும் பிடிப்பது பொருளால்
பெரியவனறிவால் போம்பிணி நோவும்
மென நபிகூற இவர்களும்போக
மீளவு மைவர்க ளெழுந்தார் 77

எழுந்தவர் நபியிரசூல் பதம் பணிந்து
　　யெப்பொருள் பெரிதோ யிறையறிபெரிதோ
அழிந்திடு முதலுக் கறிபெரி தெனவே
　　ஆதியின் தூதெனக்கறியவு முரைப்பீர்
பழித்துடன் முதலே அழித்துடன் மற்ற
　　பலபணிசெய்வார் போற்றி அழித்துபின் னிவ்வே
கழித்திடுமுதல் காணுமலும் போகும் (யார்
　　கமலமில்லறிவு தனக்கருத்தினிலிருக்கும் 78

இருக்குமட்டும் பொருளிலங்கிடும் அழகே
　　எழுந்துட பொருளும் எவ்வழகுமே குறையும்
தரிக்கமட்டும் அரிதனக்கழகாகும்
　　தரித்தும் பிரிந்தும் தனக்கழகாகும்
பரிக்கியமுதல் பொய்பவுசுமே குறையும்
　　பாரரிசித்திட பவுசுமே நிறையும்
பெருக்கவு முரைக்க யின்னவர் போக
　　பெரியவர் நால்வர்களெழுந்தார் 79

பெரியவன் தூதே பேசியமுதலது
　　பெரிதோ அறிவுகள் பெரிதோ
விரிவுள்ள முதலில் வென்றறி பெரிதென
　　விளம்பிடு மின்மிரைத்துரைப்பீர்
அரும்பொருள் புவியில் முற்றவ நினைவும்
　　அறிபிரசங்கமுஞ்செய்வார்
திரும்பவும் பொருளைச் சேர்த்ததைப் புதைப்பார்
　　சென்றறி சேருடை யிலங்கும் 80

இலங்கிய பொருள்சேர்ந் திருப்பவர் தனக்குயெவர்களும்
　　வேங்கையென் றெதிர்க்கவுந்தரிக்கார்
துலங்கிய வறிவுகள் சேர்ந்தவர் பாதம்
　　தொழுதடி பணிந்தனு தினம்மொழிகேட்பார்
கலங்கிய பொருளால் கடுமைகளுரைப்பார்
　　கனவரி பெருகிய பொருமைகள் நிறையும்
நலங்கொள்ளும் நபிசொல் நால்வரும்போக பின்
　　நால்வர்களெழுந்திறை நபிதனைப்புகழ்ந்தார் 81

புகழ்திரை நபியைப் புவிதனில் பெரிதென
பொருளறிவோயெனக் கேதென வுரையும்
உகந்திடும் பொருளுக் கறிபெரிதெனவே
வோதுவா ருலமாநபியும்
மகிழ்ந்திடு முதலே மண்ணுள்ளே புதைக்க
மங்கியே நிறங்குலேந்திடுமது கருத்து
ஜெகந்தனி லறிவு கமலத்திலிருக்க
செழுங்கதிரொளிவுபோல் தோன்றியேவிளங்கும்

இலங்கிய பொருளுக் குலகெங்குமே நிறையு
மிறையவ னறிவு யெல்லவர்க்கில்லே
கலங்கிய பொருள்கைக் கூலிகளாகும்
கத்தவனறிவது காணார்
துலங்கவுங்கேட்டு தூரத்தில்போக
தோன்றலர் நால்வர்களெழுந்து
அலங்கிர்த பொருளோ அறிவுகள் பெரிதோ
ஆதியின் னபியருள்வாரே 83

வாரொடு முதலில் வாசமும் வேசை
வைபகருமங்களறியு மதுவரலாரென்று
பாராதடிப்பது முதலாலழகொடு
நகையு மம்முதலாகும்
கூறிய வறிவால் கோதையுங் கூத்தும்
கோடுடை வடியுங் கொண்டதுமில்லே
தோதவும் நால்வர் திரும்பவு மூவர்
தெளிவுள்ள பேர்களு மெழுந்தார் 84

எழுந்தவர் நபிபதம் யேத்தியே துரைப்பார்
யெப்பொருள் பெரிதோ முறையறிபெரிதோ
தெளிந்திடு மறிவு முதலிலும் பெரிதாம்
தெளிவாயுரை மீதிரசூலே
ஒழிந்திடு முதலில் யிபுலீசுமேயிருந்து
வொரு கொலேவேணுமென் றுரைப்பான்
அழிந்திடு முதலே ஆதியின் றுரைப்பார்
அறுநாகர்வணிமாலே 85

மாலையின் தேவுடன் மறுகொலை மூன்றும்
மன்னவனறிவினில் மருகணுகாது
ஆலையவேதிய அறுபத்தினலும்
அறிவுகள் பெரிதென வறிய
ஆலமெல்லாம் அறிபெரிதென வறிய
அமைந்தனர் அஹமது நபியும்
வாலிபமான இழவர சுரைப்பான்
யென்வள்ளலே ஆதியின் தூதே 86

ஆதியி னொளிவதான
அஹமதே நபிகளுக்கரசே
மீதியி னறிவும் நாங்கள் நினைத்ததை
யறிந்து சொன்னீர்
ஓதிய பொருளுக் கறிவு வுயர்த்தி
யென்றுரைத்தீர் மெய்யே
சோதியி னறிவதென்ன
தொகுத்ததை யறியச்சொல்வீர் 87

## கலிமாப்பொருள்.

சொல்வது அறிவதின்று
சோதியின் மார்க்கமாகும்
எல்லையில் கோபக்காற்கும்
ஏழுவான் குருஸ் அறுசும்
நல்லவர் புகழ் சுவர்க்கம்
நடுங்கிய நரகத்தானும்
வல்லது லோகமேழும்
அதுக்கெல்லாம் பாரமாமே 88

ஆகிய கடுகில் அதில் சிறிதாகும்
அம்பிலும் அதிகமாங் கூர்மை
மாய்கையா மனதில் வேகமதாகும்
மயிரிலும் அதிகமாம் நேர்மை
தோகையா மண்ணிலும் பொருமையதாகும்
தோத்திய விழியிலும் வொளிவாம்
பாகிய பஞ்சா அமிர்தமி லாஞ்சனை
பளிங்கியில் பார்க்கவுந்தெளிவே 89

தெளிவாம் கசகசா விதையினு மடக்கம்
திருப்பாக்கடலினு மிடமாம்
நெளிவா யிதின்பொருள் நிறைந்திடு மனமே
நீதியின் திருவருளாலே
ஒளிவாஞ் சுடாமொரு பொருள் தோன்றும்
வொருகுறையவர்க்கணுகாது
வழிபாடறிந்து வணங்கிடும்போர்க்கு
வகுத்துரைப்பேன் வழியின்னம் 90

இன்னொரு விஷளஞ்சொல்வேன்
யாவரும் உகந்துகேளும்
எண்ணிய மனதிற்கோபம்
யெவளவும் நினைக்கொணுது
நிண்ணய திருமறையின்
நேர்மைக ளறிந்திலார்க்கு
உன்னிய சபாயத் தீமான்
வுறுதியுந் தரிகொள்ளாதே 91

கொள்ளார் தினமொழி கூறினீர் நபியே
குருபாதமே கொண்டோஞ்சரணம்
விள்ளாப்பெரும் பொருளாம் அறிவை நீர்
விள்ளீர் நாங்கள் வெகுநினைவெல்லாம்
அள்ளாக்கொள்ளை நினைவே யளித்து
ஆதியி னருள்நிலை நிற்க
விள்ளீர் விள்ளீர் யெனச்சொன்னுர்
வேதியா மன்னவர் தான்வேண்டி 92

வேண்டிய சூதர்கேட்க
விளம்பின ரிரசூலுல்லா
ஆண்டவ னொருவனென்று
அறிவது கலிமாக்கொண்டு
மீண்டுமிக் கலிமாவென்று
இறையவன் வசனமென்றும்
பூண்டிடும் நினைவும் வாக்கால்
புகழ்வது கலிமாதன்னை 93

தன்னையு மறியலாகுந்
தவப்பொரு ளறியலாகும்
மின்னொழி கலிமாச்சொல்ல
விளங்கிய பருலுநாலாம்
உன்னுதல் மனவிசாரம்
வோர்மைகொண் டிடவுமொன்றும்
எண்ணிய நினைவும் வாக்கும்
இணைத்துமுக் காலுஞ்சொல்வார் 94

சொல்லிய மனதும் வாக்கும்
சொல்படி நடக்க ரெண்டு
வல்லவன் கலிமாவுள்ளே
அதின்பொரு ளெழுத்தறிய
எல்லையி லிவர்கள் சொல்ல
யெவர்க்கிது பருலீதென்று
வல்லவன் தூதர்சொல்ல
அதிவிரு சூதர் சொல்வார் 95

சொல்வது நபியே யும்மை
சுவனம்வாழ் கலிமாதன்னில்
எல்லையி லெழுத்ததென்ன
எழுத்ததின் பொருள்தானென்ன
வல்லவன் தூதேசொல்வீர்
வாழ்த்திய சூதர்கேட்க
தொல்லையொன் றணுகிடாதாம்
தூதருமேதுரைப்பார் 96

உரைப்பவர் கலிமா கேளும்
ஓதுவர் லாயிலாஹா
சிறப்புடன் இல்லல்லாஹு
வென்றிடு மிறை நாமம்
மறைபுக ழிதின் பொருளை
மார்க்கமி லறியவென்றால்
நரைபுகழ் லாயிலாஹா
நாயனை யொருவனென்றும் 97

ஒருவனென் றுரைப்பதல்லா
லொருவரு மிணையுமில்லை
சரியிணை யொருவரில்லை
சகலமும் படைத்த கோமான்
வருவிய அவனைப்போல
அதிலொரு படைப்புமில்லை
உருவுக ளொன்றைப்போல
வுடலுயி ருள்ளோனல்ல 98

நல்லவர் புகழுநாயன்
நாடெங்கும் நிறைந்திருப்பான்
எல்லகம் நினைவி லுள்ளான்
எவ்வுயிர்க் கிரணமீவோன்
இல்லல்லா அழிவில்லாதான்
என்பது கலிமாவாகும்
சொல்விய யெழுத்தீராறும்
தொகுத்தரி யெழுத்துக்கொண்டே 99

ஒன்றுங்கறிவை கருநீரின்வே
ஓதுவாருலமா நபியும்
நன்றுயிரையோன் தன்னை
யறியவும் நாடிய கலிமாதன்னால்
வின்றால் நடுவெழுத் தோன்று
விறையோ னிடுமூச்சுலாவுயிரெனவுயிரென்றும்
கண்டா விருதயம் கொண்டாரெனவே
கவலோ ரறிவாமே 100

அறிவாம் நபியே வுண்மையே சொன்னீ
ரதுமேலான தறிவென்ன
தருமா வெந்தன் வுயிரிறையாகும்
தானிமையோர் நால்பேரும்
உருமா மலக்குகள் யிறையவ னேவல்
நேமித்திருப்பதும் நன்றாக
கருமங்களு மிறையவனேவல்
காத்துமண் ணீருடன் தணலாகாசம் 101

ஆகாச மைந்துபூதம்
ஆதியி னெழுத்தைந்தாதும்
வாகான மலக்கெல்லோரும்
வல்லவ னேவலென்றும்
சாகாத வேதன் தூதர்
சாற்றிட சூதர்கேட்பார்
போகாத வறிவு மூன்றைப்
புகன்றிட வேணுந்தானே 102

புகழும் மூன்றும் அறிவானது கேளீர்
புதியவன் வேதம் நாலும்
மகிழும் நபிமார்க்கிரங்கிய சுஹுபு
மன்னவ னிறக்கியதாகும்
நிகழுமுலகறி யெப்புகழ்
பாஷையும் அவன் திருவசனமாகும்
மகிழொடு இல்மு சாஸ்திரமனைத்து
மன்னவன் வசனமென்றறிவீர் 103

அறிந்திடு வேதநாலும்
அநேக சாஸ்திரங்களெல்லாம்
தெரிந்ததின் பொருளைப்பார்க்க
திருநெறி நீதமென்றும்
வருந்திய புருக்கான்தன்னை
வணங்கிடில் சுவர்க்கமென்றும்
அரைந்ததி லிருந்ததாலே
யனைகமுஞ் சறியதாமே 104

சரியிணை யத்ததீனின்
சாத்திய விஷளமொன்றை
மருவிய வுயிர்மாறாமல்
மகிழொடும் புகழ்ந்து நிற்கும்
கருவினறி வறிந்தால்
காலனு மணுகிடாது
பரியறி அறிவு மூன்றும்
பகர்வது மிதுதானென்றார் 105

தானவ ருரைக்க மன்னன்
தாழ்ந்தடி வணங்கிச்சொல்வான்
ஆனறி மூன்றுஞ்சொன்னீர்
அதிகநாலறிவதென்ன
வானவன் தூதரான
வையக நபியனரும்
ஈனமொன் றணுகிடாதான்
இறைநபி சரியெல்லோரும் 106

எல்லவர் தனக்குமுன்னே
யிறையவன் ஒழிவதாலே
வல்லவ னிரசூல் தம்மை
வகுப்பதில் ஒளிதிரண்டு
சில்லரை நபியதாக
செழுமறை யிரக்கி வைத்தான்
சொல்வது முஹம்மதாலே
சுவர்க்கமும் பெறலாமென்றார் 107

என்றவர் நிசமே சொன்ன
ரெனக்குமுன் னபிகளெல்லாம்
நன்றுநான் வருவதின்று
நமதுதீன் பெரிதேயென்றும்
விண்டவன் நபியெல்லாரும்
விரும்பியென் தீனிலானார்
அன்றுமுன் னொளிவொன்றாலே
அனர்நபிசரியதாமே 108

சரியாகு லறிவானது சொல்வ
சாத்துவதன் அறிவதென்ன
மறியாயுலகோர் யெல்லோ ரிறந்து
மறுமை கியாமமெழுப்ப
வறியோர் நிறுத்தியே நன்மையுந்தின்மை
வல்லவனருந்தன் பேரை
நெரியாயிருப்பது வும்மையிதுகண்டு
நினைப்பது ஐந்தறிவாமே 109

ஐந்தறி வுரைத்திரும்மை
யகம்மதே நபிக்கரசே
மிஞ்சிய நன்மை தின்மை
இது யெவரிடத்திற்சேரும்
அஞ்சிடாப் பாபமெல்லாம்
அசாசீலே யடர்ந்து சேரும்
தஞ்சியல் நன்மையெல்லாம்
தானவன் தனக்கேயாகும் 110

ஆகிய வறிவுமாறு
அகம்மதா வருளிச்செய்ய
ஏகிய வறிவுமேழு
மென்னவென் றியம்பக்கோமான்
பாகிய உடல்கமல
பளிங்குபோ லழுக்கை நீக்கி
தாகிய யிருப்பதாகும்
தனக்கிறை யறிவுமேழே 111

ஏழாமறிவை வோதினீர் நபியே
யெப்படித்தூயதா மெங்கமல
மீளாக்கோபமும் பொய்புஹராமு
மீரியே பெருமையும் நாலும்
சூளாக்கமலம் விலக்கியே வைக்க
சூரியன் போலொளிவாகும்
நீளா முழுக்கு மொனுவும் முடமேல
நின்றே யிலங்குங்காண்பீரே 112

கண்டிடும் விதங்கள் ரெண்டு
சபீபிது யார்க்குச்சேரு
மென்றவர் கேட்டபோது
யியம்பின நிரசூலுல்லா
முண்டவர் வுலுமுறிந்திடா
திருக்கு மாகில்
அன்றுள்ள ஹவுதர் கவுதர்
ஆற்றினில் அறுநீராட 113

ஆடுநீ ரதற்கு மதிலொரு
குறையே கண்டால்
சூடுநீர் நெருப்பதாக
சோர்ந்துநீ ராடானுகில்
வீடவர் சுவர்க்கவாசல்
வெளிதெரியா தலைந்து
சாடியே யலைவதின்று
சகலரு மறியச்சொன்னூர் 114

சொல்லுவா ரின்னங்கேளீர்
சுகம்பெற கமலத்துள்ளே
கல்லெனு மழுக்கடைந்தால்
காந்தியின் சுவர்க்கமீதில்
வல்ல சிங்காசனத்தை
வகுப்புடன் சூழ்ந்திருக்கும்
மெல்லியா பால்மதுக்கள்
மினியதேன் நெய்யும் நாலே 115

நால்வகை யாத்தமூர்தம்
நாடியே யருந்தும்போது
சேல்மனத் தழுக்குள்ளோர்க்கு
செமித்திடா திதுகசக்கும்
பால்மனத் துடையபேர்க்கு
பஞ்சாமிர்த மீதாகும்
நால்வகை யாத்தைச்சேரும்
நடப்புகள் நால்வகையாம் 116

வகையொரு அறிவுமேழு
வாத்தியா ருரைத்தீ ருண்மை
துகையினி லிருனுங்கானத்
தொகுத்திடு வறிவதென்ன
வகையறத் தொழுகையொன்று
பாரினி லறிவுயெட்டே
நகைபுகழ் தொழுகையார்க்கும்
நாடியே சேருமென்றார் 117

சேருமென் றரசர்கேட்க
செம்மல ரிரசூல் சொல்வார்
வாருமுன் தொழுகை நேர
மறிவது மௌத்துக்காகும்
மாரியே கலாவில்லாதால்
மலக்கலின் மவுத்தைச்சேருந்
தேரியே வொலுவிலுண்ட
தீர்த்தமீக் காயில்க்காமே 118

ஆகிய வொலு நரகில்
அரவுமேதள் யின்று அன்சல்நா
மேவிய வோதுவாரால்
மிதுஜிபூரீ லுக்காகும்
வாகுடன் வாங்குமுத்தும்
லாதாரசனுக்குச்சேரும்
யேகமா காமத்தெல்லா
மிணையும் லிவாவுல் அல்கம்தே 119

ஹம்தென்னும் கிபுலா நிற்க
காபத்துல் லாவைச்சேரும்
முந்தவா தக்பீர்கட்ட
நாயகன் மஹ்மூர்க்காமே
விழுந்தவர் நிலையில் நிற்க
நிலையது விருக்ஷஞ்சேரும்
சிமந்திடு மெந்தவா யெக்கீன்
சிதரத்தில் முந்தகாவே 120

முன்னுள்ள கருத்தெல்லா
முகந்திடும் லெகுவைநாடி
நண்ணிய ருக்குஹூ செய்ய
நாடுமுன் கீர்னக்கீனை
அன்னிய சுஜூதா ஆதம்
அவ்வாவைச் சேரும்
பின்னிரு அருஜூக்காகும்
பெருங்குரு அத்தகியாத்தே 121

தேங்கிய சலாம் கிராமன்
காத்திபின் னிருவர்க்காகும்
ஓங்கிய இஸ்தகுபார்
வுகந்திடுங்கலத்துக்காகும்
வாங்கிய ஆமீன் கூற
வானவ ரெல்லோர்க்கென்றும்
தாங்கிய தஸ்பீகோத
தகத்திடு இபுலீசென்ற 122

அந்தவா சலவாத்தோத
அறு மகுஷரில்
நாவுரெண்டுபட் டுளரிடாமல்
ரெஹூவி லுறைவதாகும்
வின்றிடும் பாத்திஹாவும்
வேகுடன் வசனத்தால்
சென்றிடுஞ் சுன்னத்தாதி
திருநெறி நபியைச்சேரும் 123

சென்றிடும் நபில்தொழுகை
செப்பிய தாய்தகப்பன்
வாழ்ந்திடு வாழ்வுவெல்லாம்
வது இபுராஹீமுக்கு
ஈந்திடு குருபா னுடு
இஸ்மாயீலேச்சேருமென்றும்
சேர்ந்தவர் குருனோத
திருவிளக்காம்கபுரில் 124

கபூரினி லடைங்கும்போது
கடும்வெளி துலைந்துபோக
புவிதனி லிறந்தபேர்க்கு
புகழுஞ்சாம்பொடு தோசா
இவ்வித மறிவு யெட்டென
இயம்பிய இரசூலுல்லா
பிரைமறை மூன்றுங்கற்ற
சகலமு மரசன் கேட்டான் 125

கேட்டவ னரசன் சொல்வார்
கீர்த்திமுன் நபியே மெய்தா
நாட்டிலே மெட்டாமறிவை
நாங்களு மறிந்தோ முண்மை
சூட்டிடு மொன்பதென்று
தொகுத்திடு மறிவதென்ன
தாட்டிக னரசை நோக்கி
தம்பிமுன் தூதுரைப்பார் 126

உரைத்திடு மொன்பதாமறிவு
ஒருவன்தன் பாத்தைனுடி
நரைத்திடு முதலில் நாற்பதுக்கொன்றது
சக்காத்தென்றும்
யிரைந்திட யெழியோர் மீசான்
யேந்திய திராசுக்கென்றும்
கரைத்திடுஞ் சதக்கா காவல்
காத்திடுங்காவலார்க்கே 127

கேட்பவர் வழிமுட்டோர்க்கு
கெடுக்கெடு யீவதாகும்
மீளவுங் குடும்பத்தோரை
மிணங்கிய அசனமீந்தால்
ஆளிய நரகெரிக்கும் அவரொரு
மாலிக்கென்போர்
நீழிய கோபமார
நின்றவர் தன்னைச்சேரும் 128

சேர்ந்திடு மினத்தையல்லால்
சில மிஸ்கீனுக்கீந்தால்
சேர்ந்துடல் வழிநடந்து
சுவர்க்கமாளிகையில் செல்ல
காந்தியின் ஹதீதுமீரென்றுங்
கடித்திடும் நாய்க்குச்சேரும்
யீந்ததுமில்லையாகில்
இவர்களுக்கிடங்கொடாதே 129

இடங்கொடா தரிவதாக
இயம்புவ தொன்பதாகும்
துடங்கும் பத்தாமறிவை
தொகுத்தெனக்குரையுமென்றார்
சடங்களும் பிலமுமென்று
சாடவு நோம்பு வைத்து
ஒடுங்கவுந் தாகமோகம்
வுதாசன முரைக்கொண்ணுதே 130

உரைக்கொண்ணு விதமதான
ஒழுங்குடன் நோம்பு வைத்தால்க்
கரைக்கொண்ணு மைவிழியாள்
கனதனக் கூரிலீங்கள்
தரைச்சுக மமுதருந்தால்
தனக்கிது சேருமென்று
நிரைந்திடும் நோன்பில்லாரே
நினைந்திடார் கூறிலீனே 131

கூறிலீன் குலமாற முலானில்
கொற்றவன் லயிலத்தில் கதிரி
தேரிய முழித்திடும் வணக்கமும் மகுசர்
தீர்வைகள் தீர்த்திடும் பெற்று
சாரிய துவண்டு தானங்களையாமல்
கிரீயமாப்பிவங்குடுக்கும்
வாரிய அறிவுகள் பத்தென்று முறைக்க
வதிலிருசூதருமுரைப்பார் 132

உரைத்த பத்தாமறிவை
உண்மையா யறிந்தோம் யாங்கள்
வரைந்திடும் பதினொன்றான
வையகத்தறிவுமென்ன
விரைந்திட வேண்டுமென்று
விரும்பியே அரசர் கேழ்க்க
சுருத்துடன் அரபாமீதில்
சாத்திய ஹச்சுதானே 133

ஹச்சுனோர் ஆர்க்குஞ்சேரும்
காவல ருரையீரென்ன
நர்ச்சியல் ஹச்சில்லாரே
நரகமு நாடி வோங்கும்
நிச்சியல் ஹச்சுனோர்கை
நேருடன் சேருமாகில்
அச்சமொன் றவனுக்கில்லை
அருநர கெழும்பிடாதே 134

எழும்பா பெருநரகேழுஞ்
சுடாது யிறையவனுதவி தன்னால்
தளம்பர மூமின்ஒத்தாசை
தானது முஸ்தகீன் பாலத்தில்ச்சேரும்
செழும்பர பாலஞ்சிணத்தில்
சென்றுவர சுவர்க்கமில்லை
செழிப்பா குளம்பா அறிவுகள்
பதினொன்றெனவே கூறுவாருமைாநபியே 135

நபியே நாயக நவமணிச்சுடரே
நன்றாய்ச்சு பன்னிரெண்டென்ன
புளிசேர் குபிரை விலக்குவேன்
பொருதியே பீசபில் வெட்டுவது
தனியார் முலையார் தனையீன்ற
தந்தையுந்தாயுந்தாழ்பணிய
கனியாவேத மிரக்கிய வல்ல
கத்தவரப் பொருளுத்திருக்கும் 136

உத்தது முடையோன் தன்னை
வுகந்தது சேருமல்லால்
மத்தது இறையை நாடி
மகிழ்ந்ததும் சேர்ந்திடாது
வெத்தியா பேசபீனும்
விரும்பவும் தாய்தகப்பன்
இத்தரி பணிரெண்டாக
இயம்பின ரிரசூல்தாமே 137

தாமிதை வுரைக்கமன்னன்
தாழ்ந்தடி வணங்கிச்சொல்வான்
நேம நிஷ்டமான
நிச்சயக்கலிமா தன்னை
பூமியி லறியச்சொன்னீர்
பொருளையும் விளங்கச்சொன்னீர்
நேமமிக் கலிமாதன்னை
யெழுதிய தலத்தைச்சொல்வீர் 138

எழுதிய தகுத்தொடு குருசு அருசு
செழுவான் லெவ்கொடு கலமும்
தழுவிய கோவுக்கா வுலகெழுந்தாங்கிய
ரிஷபமும் தகுத்தரா வூசி
செழுங்கதிர் கிண்ணியுஞ்
சிமந்திடு மரவமுஞ் சிவந்த
மாழிகையுடன் மகரம் வளிம்பிர கடலையுந்தாங்கிய
மலையும் வதுவணிந்திடும் வடதிசை நரகம் 139

நரகமேளொடும் நரபதிசுவர்க்கம்
நடுங்கிய பாலமும் வோடை
யுரையுங்கீழ் நரகம்பதினாயிரம்
வோங்கிய புரிசைகள் தானும்
நிரையுங்கதிர்மதி வானவர் னெற்றியும் நெஞ்சும்சிரகும்
நீர்கடல் கூறிலீன் நெஞ்சிடை தனிலும்
வரையு மிறையவன் வாசக்கலிமா
வல்லவ னெழுதிவைத்ததுவே 140

எழுதிய கலிமாதன்னை
யிறையவ வரைந்ததில்லால்
தழுவிய இறை தருத்துமந்
தாங்கிய குருசருசும்
பழுதில்லாக் கலம் லெவ்கு
பருங்கதி ரேழுவானம்
பொழுதனி கோவக்காவும்
பொற்புகழ் கடலுலகும் 141

உலகமு மேழுங்கீழே
உரைத்திடும் விதங்களெல்லாம்
நிலைபிரவதுகள் நிற்கும்
நிலைதனில் தரித்திடாமல்
அலைந்துகெட் டலைந்து கீழ்
மேலாகியே வொன்ருய்க்கூடி
கலந்தித அனைத்துஞ்சேர்ந்து
கடுநர கதனிற்சேரும் 142

சேர்ந்திடும் நரகுடன் செப்பிய பதியும்
சேர்ந்தித ஒன்ருய்க்கலந்து
ஆய்ந்திடு நரகின்கீழன்பது
ணயிரமறிய பட்டணமுமே கலந்து
ஓய்ந்தொரு நொடிக்கோ ராயிரவருஷம்
வோங்கிய வளிவிசை துலைந்து
பாய்ந்திடும் பாரில் பாதாளமே நோக்கி
பத்துநூராயிர மாண்டு 143

ஆண்டொரு பத்துநூராயிர
மவ்வழி துலைக்கும்போது
தாண்டிய நரகவேக
மதானத்தி லெரிந்ததெல்லாம்
நீன்றிடும் படைப்பனைத்தும்
நிமிஷத்தில் கருகிநீருய்
தோன்றிய நீறுங்காணு
தோடியே பரந்துபோமே 144

போவதி லெரிந்ததெல்லாம்
போயிமே நரகமட்டும்
தாவியே பாதாளத்தை
தானது நோக்கிப்போகும்
மேவிய வெகுகாலம்போய்
மிதுகளும் தெரித்துடைந்து
ஆவியும் மணலும்போல
அதுகளும் பறந்துபோமே 145

போகுமென்றிரசூல் சொல்ல
புகழ்ந்தவர் மஹைப்போற்றி
வாகுடன் கலிமாவான
வல்லவன் திருநாமத்தைப்
பாகுமித்தலங்களெல்லாம்
பதிப்பதா ரெப்போவென்னில்
வாகுட னிறைஹுமத்தில்
வளர்ந்தது வானமாக 146

# குதுவே அறியும்படி.

ஆகுமிக் கலிமாதன்னி
லனைத்துமே அமர்ந்தேயெங்கும்
பாகுமிக்கலிமாதன்னைப்
படித்தவர் படிப்பில்லார்க்கு
சாகுமு ஹுபதேசந்தான்
சாற்றிடுங் குருபீர்தன்னை
ஆய்ந்து மீதாகாதென்று
அறிவதுக்கறிவு சொல்வீர் 147

சொல்லிய குருவின்பார்க்கு
சுகதுக்கந்தோன்றிடாது
யெல்லையில் வலையில் பூந்தோ
ரிவர்க்கரு ளெய்திடாது
தொல்லையுஞ் சுகமும்நீக்கி
தோகையர் வலையருத்தால்
வல்லவ னருள் தரிக்கும்
வாகுருபீருமாமே 148

பீரொடு குருமார்தன்மை
பின்செய்து வுபதேசந்தான்
பாரினில் பெருகுங்காலம்
பார்த்திப ருரையீரின்ன
மீறிய காபாஞான
மிகுதவஞ்செய்தபேர்க்குக்
கூர்வது சுவர்க்கமுண்டோ
கொடுநர களிவதோதான் 149

தானிந்த விதங்களிரண்டுந்
தம்பிருன் தூதே சொல்வீர்
கோனுரை கேட்டுவள்ள
கோதறுத்தே தரைப்பார்
நானிலத்திருந்திறப்போர்
நாற்பது நாளைக்குள்ளாய்
பூணிய வுபதேசந்தான்
புகழ்வது ஹராமதாகும் 150

# அபுலாதூன் கேள்வி.

ஹராமென்ன வகைகள் கற்ற
கனதவ அபுலாதூனும்
பராபரக்குறியறிந்து
பாரெல்லா மறியச்சொன்னன்
தராதர ஞானமெல்லாந்
தானவ னறிந்துதீனை
நிராகரஞ்செய்ததாலே
நீழியநரகிலானன் 151

ஆனதோர் அபுலாதூனை
யாரெனக் கறியச்சொல்வீர்
வானமும் புவியமைத்த
வகுத்தன னொருபடைப்பா
மானிடர் வடிவதாகு
மவனுக்குமிணையுமில்லை
தானவன் வகையைச் சொல்வீர்
தனையவர் முடியச்சொன்னர் 152

முடிப்பொரு நகரமாண்ட
முதலொரு ராஜனுளில்
வடிவுள்ள மனையாள் சேர
வையகத்திலீசுமாத்தால்
அடிக்கடி வுருவெடுத்து
அந்நகர் வீதியெல்லாம்
குடிக்குல மாதரெல்லாங்
கொத்தவன் கொடுமை செய்தான் 153

செய்யவ னகாமானதெல்லாம்
செம்மல னழிக்கும்போது
அய்யவ னகரிலொரு
அவுலியா அமிரெனப்பெயர்
மைவிழி மாதுதன்னை
மருவியே யிருக்கும்போது
வையகச்சாவல் கூவும்
வாருபோல் கூவினானே 154

கூவிட அவுலியாவும்
குருநதிக்கெழுந்து செல்ல
பாவியென் யெலிவடிவாய்
பாய்ந்தவன் மனையிற்சென்று
தேவியரிணங்கிடாமல்
திடுக்கமிட் டபயங்கூவ
மேவிய அவுலியாவும்
மீளவும் மனையில் வந்தார் 155

வந்தவா ரவுலியாவும்
வல்லவன் தன்னைக்கூவி
இந்திர நகரம்பாளா
மிவனும்பெண் ணுருவமாக
எந்தனு மனையாள் கல்லா
யிருப்பது ரஹிமானீயே
நொந்தவ ருரைத்து வெய்யில்
நோக்கியே தவத்திலானார் 156

ஆனவர் தவசிலேர
யருநக ரெரிந்து பின்னர்
தானகன் தேவியாகி
தனக்கு நூராளாய்ச்சேர
ஈனமும் வேசியாக
யிவன்கொலு வெரிந்துடைந்து
போனபின் தேசமெல்லாம்
புகழொலி ரஹீம் வந்தார் 157

வந்தவர் வெகுதேசங்கள்
வனத்தையு மறிந்துகண்ணு
விந்திர நகரம் பாழா
யிருக்கும்பா ரென்னவென்று
நொந்தவர் நடக்கும்போது
துந்நிடை கற்சிலையாள்
வந்திடும் பாதை மீதில்
லதுவங்கே கிடக்கக்கண்டார் 158

கண்டவர் குருவை நோக்கி
கற்பணி வேலைகற்ற
மண்டலத்தனிலே செய்யும்
மலைகல்லு சிலையீதல்ல
சென்றவர் நெருங்கியந்த
சிலையின்மே லிருகால் வைக்க
வண்டணி குழலுயிருய்
வடிவுட னெழுந்து நின்ருள் 159

நின்றவள் முகத்தை நோக்கி
நீரஹீ மேதுரைப்பார்
துண்டணி மசையாக்கல்லு
தோகையா லெழுந்ததென்ன
அன்றெந்தன் பார்த்தாவான
அவுலியா அமீரென்போர்
கண்டன ரரசனென்னைக்
காதலில் விளைந்ததென்ருள் 160

விளைந்திடுந் தேசமெல்லாம்
வீணிலே யெரிந்துபோச்சு
அளித்திட வரசன்வேசை
அன்ருடக மாளாலாரு
களிந்திட நாளுங்கல்லா
கனதவம் பயிலச்சென்ருர்
தெளிந்திட நீர்வருவீ
ரென்றவ ருரைத்தாரென்ருள் 161

உரைத்திடு மொழியைக்கேட்டு
வுடையவன் பாதத்தைநாடி
வரைத்திடுங் குழலை மாற்றி
வடிவுமுன் னரசனாக
நிறைந்திடும் நகரமெல்லாம்
நீதியினாளச்செய்து
மறைத்திடு மமீர்மலையில்
மங்கையுங் கூட்டிச்சென்றார் 162

சென்றிடு மயிலைக்கூட்டி
செம்மலர் ரஹீமலையில்
நின்றன ரமீரைக்காற்று
நிலையொரு மாதஞ்சென்று
அன்றவர் விரதமெல்லாம்
மாற்றியே முடிந்த பின்னர்
கண்டவர் ரஹீமீருங்
கையாற் றழுவினாரே 163

நாரியே நானுமக்கா
நாடியே கூட்டிவந்தேன்
பாரியே வினையும் போக்கி
பட்டணமாள வைத்தேன்
வீதியென் வினைமுடிக்க
விளைந்திடுங் கோபமென்ன
வாரிசூழுலகில் வாழ்வு
மதிகமோ விதத்தைக்கூறீர் 164

கூறிய உலக வாழ்வில்
குழந்தையொன் றதுகொடுத்தால்
ஆதியே வுலகமைத்தோ
னவனுடை யடிமையென்பீர்
தேரிய மொழியிநாத மத்திரு
மகனிவனே யென்பார்
மீரிய இபுராஹீம் யிசுமாயீ
லீன்கிளையிதென்பார் 165

திண்ணமா யின்னவேதந்
திருநபி யும்மத்தென்போர்
பின்னையு மின்றுனின்ற
பிதாவன்னை பேருஞ்சொல்வா
ரெண்ணிய தவத்துக்கெல்லா
மிதுபெரிதென்றதாலே
நண்ணிய ரஹீங்களாலே
நாடியே யெழுந்துபோனர் 166

போனவர் வெகுதேசங்கள்
பொற்கொடி மாதரெல்லாம்
மீனமொன் றிருக்குதல்லா
லிவர்விளக் கிணைந்ததில்லை
தானவர் திலீசுமாத்தால்
தன்கையா லுருச்சமைத்து
வாமொளி மதியைப்போல
வாரிறை யெழுந்தார் 167

எழுந்திடு மயிலைநோக்கி
யிறையவன் றஹீமுரைப்பார்
தெளிந்துநா மிருவர் சேர்ந்து
திருநகர் வாழ்வோமென்னில்
நெளிந்துட லுருவமாக
நீரென்னை யமைத்ததாலே
அழிந்திடா யிறையும் நீர்தா
னன்னையும் பிதாவும் நீரே 168

நீரென மயிலாள் சொல்ல
நேரிட்ட மோகமெல்லாம்
பாரினி லடக்கித்தேக
படபடவென நடுங்கி
நேரிட்ட காமபோகம்
நிலத்தினில் பொழியு நேரம்
வாரிட்ட குழலினளும்
வலக்கையி லேந்தினரே 169

ஏந்தினாள் வலதுகையி
லிலங்கிய போகந்தன்னை
யீந்தொரு மூன்றுசொட்டு
யிலங்கிய மணியுருவாய்
சாந்தது கரமுங்காலுஞ்
சகலமு முருவந்தோன்ற
பிரந்தது மூன்றுமாணாய்ப்
பிள்ளையி னுருவுமாமே 170

உருவொரு கரத்தில் மூன்று
ஒளிவுள்ள மகனைபெண்ணே
தெளிவுடன் வளப்பீரென்று
திருக்கர மூலியீய
நெளிவுடன் மூலிதின்று
நிமிஷமும் பால்சுரந்து
விரிமுலை பாலனுண்ண
அவர்மலையேறினாரே 171

ஏறியே தவசிலானார்
யேந்திளை பாலர்தன்னை
பாரினில் வளர்த்தாள் மூத்த
பாலக னபுலாத்தானும்
தேரியே போகரென்றாள்
தெளிவுட னொருபாலனை
நாரிய ரொருபாலனை
நாட்டினி லுக்குமா னென்றாள் 172

என்றவள் வளத்த பால
ரெடுத்திடும் திலீசுமாத்து
மண்டலம் வான்புவிகள்
மலைகட லுலகமெல்லாம்
அன்றவ னொடியில் செய்வா
னழித்துப்பின் னனைத்துஞ்செய்வான்
வின்றிறை நானே யென்று
வெகுவுயி ரெல்லாஞ்செய்தான் 173

செய்தவ னகரந்தன்னை
செம்மல னாளும் நாளில்
வையக மவுலாத்தானும்
வனங்கொலு னரசனாக
மெய்யுனி லுக்குமானம்
போகர் இருவரும் மந்திரியாக
துய்யவன் நானேயென்று
துலைநக ராளும்நாளில் 174

நாளினி லிறையருளால்
நாயகன் மூசாதானும்
நீளிய பிரகூன் தன்னை
நிலத்தினி லழித்துநீனே
ஆளிய கடல்மலைகள்
அனைத்தையுங் குடையிலாக்கி
வாழிய நவுலாத்தானும்
வாழ்ந்திடுந்தேசம் வந்தார் 175

வந்தவர் நபுலாத்தானை
வலியவே னெருங்கிச்சென்று
செந்தளல் கொலுமேடைமுன்
சென்றனர் மூசா தாமும்
யேந்திர சிங்காசனம்விட்
டாசனை முடியெதிராய்
வந்தவன் நபிவலக்கை
வணைந்தவன் கொலுவிலானன் 176

ஆவதோர் நபுலாத்தானு
மாதியின் மூசாதானுஞ்
சேனைகள் புடைகள் சூழ
சிங்காசனத் திருக்கும்போது
வானகம் வகை பலதும்
வையகத்துரை பலதுங்
கானகங் கடல்மலையின்
கதைகளும் விளம்பினரே 177

விளம்பியே யிருக்கும்போது
வேந்தனே மூசா சொல்வார்
களும்பரக் குரியுஞானங்
கற்றிருந் ததிறுலென்ன
தனம்பிடா யிறைமோன் வேதம்
தானெனந்தப்பயகாம்பர்
தீன்வளம் பெறு திருப்பதாலே
வன்னினரக வாழியாவாய் நீயே 178

நீநர கழிவாயென்று
நீதிகள் மூசாசொல்ல
கானக் வேங்கைபோல
கண்சிவந் தவுலாத்தானும்
பானிலத் தறிவுள்ளோர்க்கு
பயகாம்பரும் நீங்களல்ல
கானக மிருகமான
ஹய்வாங்களுக்கிறைநபிநீர் 179
நீர்நபி யென்றுவந்தீர்
நீரெனக்கிணையுமில்லை
பாரினி லினக்கிணையா
படைத்தறி லிறைபடைப்பும்
வாரிகு ளுலகுயிரை
வகுப்பது மிரை வருஷம்
பாருநீர் நொடியிக்குள்ளே
படைப்பெல்லாம் படைப்பேனென்றான் 180

என்றவ னபுலாதுனு
மிம்மொழி கூறும்போது
விண்டொரு விஷளமில்லார்
வியநபியகத்தில்புக்கார்
அன்றிறை ஜிபுரியிலவரிரு
தவிசிரோடு
மண்டலம்புகழ மூசா
முன்னுதியின் விஷளஞ்சொல்வார் 181

சொல்லிய விஷஊமூசா
நபியே நீர்சோம்பவேண்டாம்
எல்லையும் னபுலாத்தானுக்
கிணையிலா தெழுந்தபுத்தி
வெல்லவுங் கூடாதும்மால்
வியாகூலம் மனதில் வேண்டாம்
வல்லவன் தவுசீரிந்தா
னதைக்கொடுத்தறிந்துபாரும் 182

அறியுமென் றிமையோர்க்கெல்லா
மரசனுமுறைக்கும்போது
குரிதனை யறியத்தவுசீர்
கொண்டதைக் கொலுவிலானார்
பெரியுஞ் சொல் நபுலாத்தானும்
யெதிரனைத்தாசனத்தில்
பரிவுர யிருந்து முன்போல்
பலமொழி பகரும்போது 183

பேர்தவ னிறைகொடுத்த
புகன்றிடுந் தவுசீரொன்றில்
யீதெனைப் பாருமென்று
யெடுத்தொரு தவுசீர்தன்னை
ஆதியின் மூசாதானும்
அரசன் கையதில் கொடுக்க
பாதகன் தெளியப்பார்த்து
பழுதுகளிருக்குதென்றான் 184

முருக்கிய உலகிலுள்ள
மிருகங்கள் பலதுக்கெல்லாம்
ஒருக்கமா ஒசனுவா
ஒட்டக மதின்பேராகும்
அருக்கமா வமைக்கவாதி
அவனின வாகிறானே

* * *
* * * 185

ஆகிய மிருகத்தாலே
அனேக மானிடர்க்கொத்தாசை
வாகிய நிருத்திப்பாரம்
வணிவதுக் கொவ்விடாது
பாகிய விழக்கிடத்தி
பாரமுஞ் சுமத்தவென்றால்
தாக்கிய குடுவைநெஞ்சு
தகர்ந்தது வுடைந்துபோமே 186

உடைந்திடும் குடுவைநெஞ்சு
வுண்பது அசனங்கொஞ்சம்
சடந்தனில் சலமில்லா
தத்துவம் நிறைந்திடாது
படர்ந்தது இருமானுகை
பருங்கல்லுத் திருகைபோல
உடைந்திடா திருக்குமின்மை
ஓடிய பாதம்நாலும் 187

நாலுகால் மானைப்போல
நடுவிடை கொளம்பிருந்தால்
கால்நடை சுருதியல்லால்
கடியது பாரந்தாங்கில்
தோல்குளம் பெலும்பொடியுங்
கொண்டது பாதம் நாலும்
தோல்வெழி தசைகனத்து
தூக்கிய பாதமொன்றே 188

ஒன்றெனும் தவுசிர்பார்த்து
வுரைத்திடக்கேட்டுமூசா
ரெண்டதாம் தவுசிரிய்ய
தேகங்க ளனைத்தும் பார்த்தான்
கன்றிடு முன்னை சொன்ன
கனதிகள் நிறையமன்னன்
இன்றிது சரியேயென்று
யியம்பின னபுலாத்தானே 189

இயம்பிய அபுலாத்தானும்
யின்னமு மேதுரைப்பான்
நயம்பிர நபியே நீரும்
நாயகன் பாதத்தைநாடி
துயம்பிரத் துவாவுஞ்செய்வீர்
துய்யவனிதைவருக்க
ஜெயம்பெற வல்லோன் மூசா
திருத்துவா ரிருந்தாரப்போ 190

அப்பொழு திறையோன் மூசா
அருந்துவா செய்ததாலே
தப்பிய மருகாலிந்த
தவூசிபதைப்போல ஒட்டகம்
மெய்புக முமைத்து வல்லோன்
மேதியிலிரக்கி வைத்தான்
செப்பிய மூசாதானும்
திருவகஞ்சேர்ந்தாரன்றே 191

அன்றிறை ஒஹிஜிபுரில்
ஆதியி னுமக்குச்சொன்னன்
நன்று நான் ஒருபடைப்பை
நாடியே படைக்குமுன்னே
யெனறிதின் குத்தர குத்த
மியம்பவும் புத்திமானும்
மண்டலத்தமைத்தேனிந்த
மறுவதா வொருபடைப்பை 192

படைப்பதை அமைத்தேனென்று
பாரினி லுரைக்க மூசா
நடப்புட னிவனிருந்தால்
நானென்ன தீன் விளைப்பேன்
திடத்துடன் படை பொருத்தி
திருநபிக்கிறை யுரைத்தான்
ஜடத்துடன் சேனையோடு
சென்றவ ருயுத்தஞ்செய்தார் 193

செய்திடு முயித்தமாட
செம்மல னபுலாத்தூனும்
பையவே யொருநூல் தன்னை
பத்தியே அவனைச்சுற்றி
அய்யகன் திலிசும் மாத்தால்
அந்த நூல் ஏழுச்சுறறு
மெய்யணிகிம் புருசையாகி
மிகுத்திடுங் கொத்தளங்கள் 194

கொத்தள மனந்தங்கோடி
கொடுவிடி குமுறிவிம்ம
சுத்துநா லிருநுனியும்
சுழன்றுகத் தரிக்கோலாகி
பத்தலர் சேனையெல்லாம்
பாரினி லருக்கும்போது
வெற்றிகள் செய்திடாமல்
வியநபி விரண்டுபோனார் 195

போனவ ரிறையைக்கூவி
பொருக்குமோ யவன்போர் செய்ய
சேனைக ளிறந்தபின்பு
செய்வது யுத்தமென்ன
ஆனையி னபுலாத்தானை
யழிப்பது யிறைநீ யென்று
வானவன் தனையும் நோக்கி
அவர் துவாச்செய்யும்போது 196

செய்திட துவாவு முசா
செம்மல னபுலாதானை
பையவே யறிவோமென்று
பாரினில் ஜிபுரில்வந்து
துய்யகம் வடிவைமாற்றி
தோன்றியே சேஹூபோலே
அய்க னபுலாதானும்
அணிந்திடுங்கொலுவில் வந்தார் 197

வந்தவர் நபுலாதுனே
வாய்மொழி யனேகம்பேசி
இந்தநேரம் ஜிபுரில்
இருப்பிட மெங்கேயென்ன
முந்திய ஜிபுரில் ஸிதரத்தில்
முன்தகா விடத்திலில்லை
அந்திர வானமெல்லாம்
ஆய்ந்தவ னில்லையென்றான் 198

இல்லையா யெங்கேயென்று
இறைஜிபு ரீலுங்கேட்க
வல்ல னமையும் லோகவாரியின்
நாகு சொர்க்கம்
அல்லம பாதாளலோகம்
ஆதியில் ஜிபுரில் காணும்
எல்லையின் ஜிபுரிலென்று
இடக்கையில் பிடித்துச்சொல்வான் 199

பிடித்தகை நீக்கி ஜிபுரில்
பெரியவ னருசைச்சேர்ந்து
படித்திடுங்கல்வியுள்ள
பார்த்திப னபுலாத்தானே
மடித்தல்லால் மூசாதீனை
மண்ணினில் விளக்கமாட்டார்
எடுத்தவ ருரைக்கவல்லோன்
ஏமனுக் கருளினானே 200

அருளுவான் இஸ்ராபீலே
அபுலாதூ னுயிரைவாங்கி
கருளுவான் காவியாவில்
கடுமைகளனேகஞ்செய்ய
இருளுவான் கசையெடுத்து
இடக்கையில் வேலுங்கொண்டு
மருளுவா னபுலாதூனை
மவுத்துமே நாடிவந்தார் 201

வந்தவர் நெருங்குமுன்னே
வாயினால தட்டினாலே
அந்திர வானமேழும்
யணியணி பூமியேழும்
விந்தையான் கோட்டை விடுதி
சிங்காரத்தோட்டம்
வந்திட இஸ்ராஹீலும்
வழியில்லா தவனமைத்தான் 202

அமைத்தவன் திலீசுமாத்தா
லாசனுமிருக்கும்போது
நிமிந்தமுங் குறியும்பார்த்து
நின்றனர் இஸ்ராஹீலும்
வகுத்தவ னுரைப்பான்
வர்ண ராஜன் கல்மழை பொழிய
சமஸ்தமும் அமைத்தவானஞ்
சகலதமு முருகப்பெய்யும் 203

பெய்திடுந் தமரை மூட
பின்னையுந் திலிசுமாத்தால்
காந்திகள் இஸ்ராஹீலே
கல்மழைக்குள்ளே வைத்து.
ஏந்தலர் னெரியும்போது
எமனும் நபுலாதானே
ஆய்ந்தவர் பார்க்கும்போது
அதட்டினான் திலீசுமாற்றால் 204

மாத்தில்லா வாசனைப்போல்
மண்டல மாளும்பேருய்
எத்தமாம் னபுலாதானல்
எண்ணஞ்சி பேரமைத்தான்
சாஸ்திரக் குறியினாலே
சகலமுமறிந்துபார்த்து
வேற்றுமை யொன்றுமில்லா
வேதனெல்லோர்க்குஞ்சொல்வார் 205

சொல்லுவார் நவுலாதானே
கருதிக டமைந்ததோவே
செல்லுஞ் சிங்காரத்தோப்பில்
சிறப்பென்ன வறிவோமென்னில்
யெல்லையில் நபுலாதானும்
எண்ணஞ்சுபெருங்கூட
வல்லவ னிசுராஹில்
மாத்தோப்பிற் சென்றார் 206

சென்றவர் சிங்காரத் தோப்பில்
செம்மை யனைத்தும் பார்த்து
இன்று நீரமைத்த தோட்ட
மிதிற்குறை யிருக்குதென்றார்
யென்றுட னவுலாத்தானும்
யென்னவே வென்றதுக்கேட்டான்
கண்டவர் நவுலாத்தானே

கையினால் பிடித்துக்கொண்டார் 207
கையினில் பிடிக்கும்போது
கண்ணுமே அடித்தருண்டு
ஐயனே ஒரு விஷள
மறைகிறேன் கேளுமென்றான்
பெய்புர விதத்தினாலே
யென்னைநீ ரறிந்தீரென்றான்
மெய்யதா பிடிக்கும்போது
மேனியில் நடுக்கங்கண்டேன் 208

கண்டவ னவுலாத்தானே
கண்ணிமை சிமிட்டாதானும்
குண்டுசிங்காரத்தோப்பில்
குறையென்ன வென்றதானும்
என்றிந்த விதங்கள் மூன்றும்
எல்லவர்க்கிணைந்ததில்லை
என்றுட நபுலாதானும்
ஏந்தல் மகனே யென்றான் 209

என்றவன் மகனை கூவி
எடுத்தொரு கிதாபு தன்னில்
நன்றவ ரிறந்துபோக
நாற்பது நாளதென்ன
அந்த ஞானம் புத்தி
அனைத்துமே எழுந்துபோகும்
மண்டலத்தறியவென்று
மன்னவ னெழுதினானே 210

எழுதியே யின்னுஞ்சொல்வான்
யென்னறி குறைந்ததாலே
விழியெலாம் சிமிழியாமல்
வேந்தனெல் லாமமைத்தேன்
பழுதெங்கள் காதில் கேட்க
படைக்கவும் படிமறந்தோம்
கழுவனும் பிடிக்கும்போது
கலங்கியே நினைவிலானேன் 211

ஆவியு மவுலாதானும்
அனேகமு முறைக்கும்போது
ஏவியே யிருள்கசையை
எடுத்தவன் சிரசடித்து
பாவியே வேலால் குத்தி
பத்தியே யிழுத்தகாலே
காவியா நரகில் சேர்த்து
கடுமைக ளனேகஞ்செய்தார் 212

செய்யுமுன் னுரைத்தானந்த
செம்மல னபுலாதானும்
ஐயெட்டு நாளிருக்க
கறிவுகள் குறையுமென்றான்
எய்யும்நாள் நாற்பதுக்கு
ளௌவருப தேசம்பெற்றால்
துய்யவ னருளுமில்லை
தொகுப்பது ஹராமிதன்றே 213

தென்றவ னபுலாதூனும்
திரவே ஞானமாய்ந்து
கண்டவ னிறந்து காவி
யாவினி லழிந்ததாலே
மண்டலத்திறை தீனில்லா
வவர்செய்யும் தவசும்ஞானம்
விண்டிடும் நரகிலன்றி
வியநபிக் கூறினுமே 215

## சத்தார் விபரம்

கூறிய விஷளம் சரியெங்கள் நபியே
ஹூதாயிரசூல் மஹ்மூதே
வேறினில் கேட்போம்வேதியர் நபியே
வெகுபுகழ் தரித்துலகுதனில்
மாறுசெய் காபீர்கள் தருமத்தை நாடி
மண்டகமாவியும் மானிடர் கமுது
அறிய நீர்ப்பந்தல் அன்னச்சத்திரமு
மன்னமுஞ்சொர்னமுமாடை 215

ஆடையு மேடையு மனைவர்க்குமீந்து
அருந்திய அமிர்தமுங்கொடுத்து
பேடையும் நடையும் பெருமணமுடித்து
பின்னையுந் தருமத்தைநாடி
நாடையு நகரையு மாண்டிடும்பேர்க்கு
நரகமோ சுவர்க்கமோ நாயக நபியே
ஆடியே விஷளம் அனைவருமறிய
ஆதியின் தூதே அருள்வீர் 216

அருளுமென் றாசர் கேட்க
அஹம்மத ரருளிச்செய்தார்
இருளுறுங் குபிரை நீக்கி
இறையவன் றிருநாமத்தை
பொருளெனுங் கலிமாச்சொல்லார்க்குப்
பொலிந்திடும் நகரமெல்லாம்
இருளெனும் நரகில் தாழ்வா
ரவரயக்கிடங்காவியாமே 217

காவிய ராவுதேனு
கடும்பசி தீரத்தின்னும்
மேவிய விதமேதென்றால்
இதுக்குமுன் னொருநாளில்
தேவியு மாளநாருந்
திசைகடலேரும்போது
வாவியி னடுக்கடலில்
வங்கமு முடைந்ததப்போ 218

அப்பொழு தருங்கடலி
லனைவரு மிறந்துபோனார்
செப்பனி முலையினாளுஞ்
செம்மனுக்கோர்பலகை
தப்பியே வருகும்போது
தம்பிரான் வரிப்படியின்
எப்பொரு ளுயிரைவென்றும்
ஏமனுக்கிறையுரைப்பான் 219

உரைப்பவ னிஸ்ராஹீலை
ஒன்றடிக்காலை வேண்டும்
தரிப்பது ஒருபலகை
தய்யலீர் தனியேவிட்டு
கப்பிர வருகுமுன்னே
காலையை யுயிரை வாங்கி
இறப்பவள் தனைக்கடலி
லெறிந்துநீர் வாருமென்றான் 220

வாருமென் றிறையோன்
அதின்படி யெமன் முடித்தார்
நாரியர் சூலுளோந்து
நடுக்கடல் பலகைதன்னில்
வீரியன் சத்தாரென்னும்
வேங்கைபோலொருபாலன்
ஆரியாப் பெத்தாளாதி
அவயமு மிவனுக்குண்டாம் 221

ஏமனு மதலேயின்ற
ஏந்திளையுயிரை வாங்கி
தாமதியா மல்முயிரும்
தண்ணியி விழுத்தெரிந்து
நாமமும் சத்தாரைநீர்
நடுக்கடல் மீதில்விட்டு
சேமமே வாருமென்றான்
செப்புவா ரிஸ்ராஹீலே 222

இஸ்ராஹீ லிறைதன்னையே
நோக்கி யேகா யிறையேயென்னயகனே
நஸ்ரா ஆதை நடுக்கடல் மீதில்
நடுங்கலுயிரை நாயகனே
கஸூரா பரித்தவன் காரிகை மதலே
கடல்மே லின்றுவவளுயிரை
விசுரா வலையால் விசிரி இழுக்க
வேந்த னுரைத்த விதமென்ன 223

என்னவன் றியம்ப
ஏமனிறையவ னேதுரைப்பான்
சொன்னது செய்வதல்லால்
சொல்லுக்குச் சோம்பலுண்டோ
இன்னமு பாலனுர்க்கு
இருப்பது நாளோ நீயோ
மன்னவன் சொன்னபோதே
மலக்குயிர் வாங்கினரே 224

வாங்கியே மயிலுயிரை
வம்பனு மிழுத்தெரிந்தார்
தாங்கியே பலகைபாலன்
தனையலை யடித்தெழுப்பி
நீங்கிடா சமுத்திரத்தில்
நீஞ்சியே கரையோரமாய்
ஓங்கியே பெருவனத்தி
லொருகரை சேர்ந்ததப்போ 225

சேர்ந்தது வனத்தில் வேங்கை
சேனைக ளனேகங்கோடி
கூர்ந்திடும் வேங்கையொன்று
குளவியெல் லாமிறந்து
மாய்ந்துமா ரமுதங்கட்டி
மயங்கியே கண்ணிருண்டு வந்து
சாய்ந்தது திரைநீருண்ண
சத்தா ரறிந்து அமிர்தமுண்டான் 226

உண்டிட வுணவால் வேங்கை
ஊணியே பருகும்பாலன்
கண்டது பொதுவில் சேர்த்து
காவலன் தனைவளர்த்து
மண்டலம் வேங்கைக்கெல்லா
மன்னவ னுனபின்பு
கண்டொரு வனத்தில் வேந்தன்
காளையைக் கயிறால் சிக்கி 227

சிக்கியே பிடித்துச்சென்று
செம்மலன் வளர்த்தெடுத்து
தக்கம நகர்க்கிவனை
தலைவனன் றோர்திருத்தி
பச்குவத் துடன்சத்தாரு
படையுடன் வனத்தில் வந்தான்
ஒக்கவே வருகுஞ்சேனை
வுடனொரு மரத்தைக்கண்டான் 228

கண்டொரு மரம் வனத்தில்
கைப்பொரு ளிலையுமில்லை
நின்றிடு மரத்தின் மீதிப்
நிகரில்லா ரூபமான
ஒண்டியா உமாயப்பக்ஷி
வுச்சத்தி லிருக்கக்கண்டு
இந்திதைப் பிடியுமென்று
இயம்பின னிந்திரகோமான் 229

இந்திர கோமான் சொல்ல
ஏறியே பிடிக்கும்போது
அந்துச்ச மாப்பொதும்பில்
முந்திய தலைகீளோடி
வந்திது பூமிக்குள்ளே
வருணமண் டபத்திலோரம்
இந்திர பேழை மீதில்
யேறியே யிருந்ததப்போ 230

இருப்பதை யறிந்துவேட
ரீந்தனர் மரத்தின் பொந்தை
தரிப்பர புகழும்பக்ஷி
தனையவராசன்முன்னே
நிரப்பிட வரசனந்த
நிகரில்லாப்பேழைதன்னை
துறப்பினுல் துறந்தா னதில்
தோன்றிய சிமிழைக்கண்டான் 231

கண்டவன் சிமிழ் திறந்து
கண்ணினுல் பார்க்கும்போது
மண்டல மெல்லாந்தோண
மையது வுருகியத்தில்
அண்டர்வான் குருசருசும்
அருநகர் க்கணிசுவர்க்கம்
விண்டுது பூமியேழும்
விரைப்பொடு திரைபர்தாளம் 232

பாதாள வுலகங்காண
பாய்ந்துருமை யுருகி
ஆதாள உலகிலுள்ள
மனேகமாய்த் திரவியங்கள்
வேதாளங் காத்ததெல்லாம்
வேந்தனு மறிந்தெடுத்தான்
சீதள ஜலத்திலுள்ள
சிவந்திடும் வயிரமெல்லாம் 233

வைரமும் மரகதமும்
வகைநவ ரத்னங்கோடி
அப்ரவென் றாளவெப்பு
அறிந்தவன் பழிங்குமேரு
மைரிடை ஒதுங்கிடாமல்
மன்னவன் பிழந்தெடுத்து
பைரிடை சுவர்க்கந்தன்னை
பார்த்திபன் நினைவிலுற்றான் 234

உத்தவ னிருக்கும்போது
வுலகுமிடமுமில்லை
கத்தவன் மலக்கைகூவி
கனதியா வுலகுதன்னை
மெத்தவே விரியுமென்றான்
மேதினி விரிக்கும்போது
பத்தலன் சுவர்க்கமாக
பத்துநூராண்டு தூரம் 235

தூரமோ ராயிரந்தான்
துலைந்திடா வருஷமாக
பாரமா யிடத்தைக்கண்டு
பார்த்திபன் சுவர்க்கஞ்செய்ய
வாரமா சுவர்க்கந்தன்னை
வளைந்தவன் மாகதத்தால்
ஆரமா ஐம்பொன் விட்டு
அணிமதி லெழுப்பினனே 236

எழுப்பிய புருசைக்குள்ளே
யிலங்கிய மாடகூடம்
களிப்பவர் பால்மதுக்கள்
கனியுடன் மலர்வகையும்
செழிப்புர ளபாகங்கள்
நிகரில்லாத் தூங்கமென்று
சுளிப்பிர செய்தான்
சுவர்க்கத்தில் கனிகளில்லை 237

கனியில்லா தேக்கமாக
காவலனிருக்கும்போது
அணிபுக சுமழ் சுவர்க்கத்துள்ளே
யனேகமு கனியெடுத்து
இனியவன் கரிலக்கூவி
எமையவர் வருகும்போது
பனிபலகனி நிபய்யவேண்டி
பார்த்திபன் பயிரைச்செய்தான் 238

செய்துடன் கனிநிறைந்து
சிறப்புடனிருக்கும்போது
அய்யவன் சுவர்க்கவாச
லருகுகா லணியுமில்லால்
கைதவங்குறைந்ததென்று
காரணமிருக்கும்போது
வையக மமைத்தவல்லோன்
வானவர்க்கருளினனே 239

நானிலந்தன்னில் சொர்க்கம்
நாடியே சத்தாரென்போன்
ஆணிய சுவர்க்கவாச
லருகுகால் நிலையில்லாதால்
பூணிய வேலையெல்லாம்
பூமியில் நிறுத்திவைத்தான்
கோணிய நிலைசுவர்க்க
துகையொரு மதிகமுண்டே 240

அந்த திக்கதிகமான
நிலைசேர்ந்து நவரத்தின
விந்துசேர் பச்சை
மரகதம் தான் ஒன்று
செந்தணல் வானமதி
மாணிக்கமதுவொன்று
பந்திபுரம் கீழ்ப்படி
பளிங்கி மரகதம் 241

மரகத விதமும் நாலு
மதிப்பில்லா நிலையெடுத்து
அரண்மனை வாசல் முன்னே
அணிந்துநீர் வாருமென்றான்
திரமுள்ள விண்ணோரந்த
திருநிலை யெடுத்துவந்து
பரிவுரு சுவர்க்கவாசல்
பாரினில் சாத்திப்போனார் 242

போனபின் வுலகமெல்லாம்
பொழுதது விடிந்தபின்பு
நானிறை யென்ற சொல்லை
நாடெங்கு முகந்ததில்லை
ஏணியில் நிலையேயின்று
யிரவினில் அமைத்தேன்பாரும்
பூணியே வுலகிலென்னை
புகழ்ந்திடு மாதியின்றே 243

ஆதிபி னரசன்தன்னை
அனைவரும் வணங்கவென்று
வீதியின் நகரம் நாடு
விரைந்திட முரசடித்து
ஓதிய தவசு ஞானம்
வுரைப்பவர் சத்தரொன்று
வீதியின் சுவர்க்க வாசல்
வேலையில் துடங்கினானே 244

நானிலத்துரையுமந்த
நாரியர் புருஷரெல்லாம்
ஏணியில் சார்ந்துகொண்டு
ஏறிய சுவர்க்கவாசல்
ஊணிய வுச்சமோர
ஓங்குஞ் சிங்கார சித்திரம்
தோணியோர் தோகை
சூலுடையாளொன்று 245

சூல்முலை மாதர்சந்தை
தூக்கியே யேணியேறக்
காலது தவளும்போது
காரியக்காரர் கையில்
தோலொரு சவுக்கிஞலே
தோகையை யடிக்கும்போது
மேலவன் பொருத்திடாமல்
இவளிங்கீழ் சாந்துமேலாய் 246

மேலுச்ச மிருந்துமங்கை
மேதியில் விழுகும்போது
பாலனுங்களண்டுதந்த
பாரினில் சிதரும்போது
ஆலமெல்லாம்படைத்
தளித்திடு மாதியேநீ
யேனுமிப் பழியைவாங்கி
யெனக்குநீ கொடுப்பாயென்ருள் 247

கொடுப்பாய் பழியெனக்கோதை
யுரைத்திட கொற்றவ னேதுரைப்பான்
அடுகுலு கினிலவனுக்
கேய்ந்த தியாரமெல்லாம்
முடிமடிப்பேன் காவியா விண்ணுநரகில்
மன்னவனைது யின்றது தீர்ப்பான்
அடிப்பேன் முடிப்பேனென்ருன்
ஆதியுரைத்ததம்மையறிந்தான் 248

அறிந்தவ னகத்தில் போக
அருநிலை சுவர்க்கவாசல்
இருந்தவர் முகிழ்ந்ததென்று
யேந்தலுக்கியம்பும்போது
தெரிந்திட சுவர்க்கமெல்லாம்
திருவிளக்கேற்றுமென்று
சிறந்திடுஞ் சுவர்க்கங்காண
செம்மலனெழுந்து போனன் 249

போனவன் ரிஷபமேறி
பொன்மலர் சொரியும்போது
தானக னிறையேன் எம
தாமனுக்கருள்வான் சுவர்க்கங்
கானக மன்னன் கண்ணால்
காணமுன்னுயிரைவாங்க
வானக னிசுராஹீலும்
வதிவிரைக் கேதுசொல்வார் 250

சொல்லுவா ரிசுராஹீல்
றப்பிலா மீன்சோதிநீயே
யெல்லையில் சுவர்க்கம்பார்த்து
இவனகம் வந்தபின்பு
நல்லது வுயிரை வாங்க
நாயனே அருள்வாயென்ன
அல்லலிலான் றனுகிடானே
ஆமென அறிவீரோகாண் 251

ஆமென வறியேனென்று
அண்ணலுமுரைக்கும்போது
பாரெலாமமைத்த வல்லோன்
பாங்கனுக் கேதுசொல்வான்
வாரியில் பிறந்த பாலன்
அன்னையும்பிதாவும்போக
வீரியன் தனையும் வேங்கை
வியன்னூர வளக்கும் நாளில் 252

நாளினி லாசனத்த
நகரையு மாளவைத்தேன்
வாளிய சுவர்க்கமொன்று
வகுக்கவும் வலுகொடுத்தேன்
ஆளிய வுலகமைத்த
ஆதியும் நானே யென்றான்
நீளிய நாகேயல்லால்
நிமிஷமுஞ் சுவர்க்கங்காணான் 253

சுவர்க்கமே நோக்கி
சுருதியி னுயிரை வாங்க
அவர்க்கிறை யருளும்போது
ஆதியின் மலக்குநாலும்
மவர்க்கவர் சுருதியாகி
மன்னவன் தனையேமாட்ட
சுவர்க்கமுன் புகுந்திடாமல்
சூழெடுத்தூதினாரே 254

வைதிட வாதராஜன்
வுடையவன் மீக்காயிலும்
பாதகன் தனையே மாட்ட
பருமனை யிடியிடித்து
வாதகன் ரிஷபமேறி
வலதுகால் சுவர்க்கவாசல்
யேதகன் ரிஷபம் வைக்க
யிடியது விழுந்ததப்போ 255

இடியினால் சிரமுருண்டு
யிருநிலம் விழும்போது
கொடி முடி சிரசுமேவராய்
கொற்றவன் ரிஷபம் வேறாய்
வடிவுள்ள மனைமேய
மன்னவன் சிரமுநோக்கி
கடகட வெனவுருண்டுதப்போ
கனமழைச்சலம்பிரண்டு 256

பிரண்டிடும் சலத்திளேடை
பிரபலன் சிரசுருண்டு
அருண்டடி அதில் விழுந்து
ஆரிலை மதலையின்ற
யிருண்டிடுங் குழல் மனையில்
ஏரிய படியள்வாசல்
உருண்டுருண் டோடியோடி
வோய்ந்திடா தடிக்குமப்போ 257

அப்பொழு தாசன்மாள
அவணணி ரிஷிபங்காலை
யெப்பொழு திறைதன் தூதன்
யெமயவா ஜிபுரில் வந்து
நர்ப்புட னிரூத்தெரிந்தார்
நரகினில் விழுந்துபோக
செப்புதல் காரியந்தான்
செம்மலன் சுவர்க்கந்தன்னை 258

செம்மலன் சுவர்க்கந்தன்னை
சிறகினு லெழுப்பி விண்ணோர்
நன்மையாய் ஒருபேர் வைத்து
பிர்தவூஸ் சென்று
வண்மையாய் சுவர்க்கத்தோடோ
வைத்தனர் ஜிபுரிலுந்தான்
தன்மையாய் சிரமுருளுந்
தலைவனும் சிரசைக்கண்டான் 259

கண்டவ னிரவில் வந்து
கதவினி லடிப்பதென்ன
யென்றவ னெடுத்துக்கையா
விருளையு மிலக்கிப்பார்க்க
மண்டல மெல்லாமாண்ட
மன்னவன் சத்தாரென்போன்
துண்டமா சிரசைக்கண்டு
தேர்க்கைக்கும் மேதுசொல்வான் 260

சொல்லுவா னிறையைக்கூவி
சுருதினுடை மைத்தனேகாலே
யெல்லையி லிவன் பணியை
யெனக்கு நீ யீந்தாயிப்போ
வல்லவ னுயிர்நரகில்
வாதைகள் படுக்கச்செய்வாய்
மெல்லியா துவாவை வல்லோன்
மெத்தவும் கபுல்செய்தானே 261

செய்தவ னிசுரா ஹீலே
செம்மலன் சத்தாரென்போன்
அயிதவா மறியாதாலே
அவனுயிர்க்காவியாவில்
வையகச்சுகங்கள் தீர
வாதைகள் படுவதின்று
துய்யவ னுரைக்கவின்னோர்
துலைந்திட ருத்தாரவுசெய்தார் 262

செய்தவ னிறை பரிமான்
செப்புவான் கலம்லெவ்குவை
வையகத்திருப்பே ரெந்தன்
வாத்திகர் பயகாம்பர்தீன்
மெய்யெனுங் கலிமாதன்னை
மேதினி லறியார் காபிர்
செய்திடுந் தானதர்மம்
சேர்வது நரகமென்றே 263

நரகினில் யிருந்து ஆள்வார்
நாடிய தருமந்தானும்
அரம்பயர் கேட்டதெல்லா
மனுதினங் கொடுப்பேனென்று
வரையுமென் றிறைகலத்தை
வாக்கினு லுரைக்கும்போது
முறை முறையிறையோன் சொன்ன
முறையெல்லாம் வரைந்ததப்போ 264

அப்பொழு திறைபரி மானை
துவாகபு லதலாச்சு
யெப்பொழுஞ்சத்தா ரெட்டாஞ்
சுவர்க்கமே எடுத்ததற்கு
ஒப்பொழு முலகிலுள் ளோர்
வொருதர்மஞ்செய்வதுண்டோ
நற்பொழு தவனுக்கில்லா
ஞனிலக் குபிரோர்க்கில்லை 265

குபிரவர் இறை கவிமா
குணவகை யறிந்திலாரும்
புவிதனில் தருமஞ்செய்தால்
பொலிவது வாழ்வேயென்று
கவிதவம் புகழ் சுவர்க்கங்
காண்பது அறிவேயென்றும்
நபிகள் தீன் வுகந்தபேர்கள்
நாடியே தருமஞ்செய்தால் 266

தர்மமுஞ் செய்தபேர்க்குத்
தரணிவாழ்வது குறையும்
மருமையில் சுவனவாழ்வு
மன்னவன் கொடுப்பானின்னங்
கர்மமுங் கொடுமைசெய்வோர்
காபிருக்கதிகமாகும்
அருமையில் புவிவாழ்வு
முண்டா மாகிரி லரிதுதானே 267

மகதீப்பு ராஜ்ஜியம் பூமேனு மொஸியா காபிர் அரசர் இருவர் களுடைய குழுசேனைகளும் தீனுல்இசுலாம் மார்க்கம்வரநபிநாயகம் அருளிபது தவுருத்து வேதப்படி அபுலாஹான் விசையம்சபூர் வேதத்தின்படி ஷத்தாது விபரம் கன்ஸுல் ஆரிபீனில் அறியவருகிறது.

# அறிதுடைய வகை.

அறிதொரு பெரிதேயென்று
அருகிய சிரிதேயென்றும்
உறிதொடு கொடிதே யென்றும்
வுலகினில் வுகமையாக
பெரியவன் துரைகயஞ்சும்
பேரசுமென் றரசர்கேட்க
சரியிணை யில்லான்தூதர்
சாத்தினர் கேளறிதே 268

அறிதுரெண் டுலகமீதில்
அருங்குயிர் கடனேரொன்றும்
விரிவாக்குமறை யீன்று
வெரிப்பில் விடேத்தகுஞ்செய்ய
அறியபெண்ணாசையாலே
அரசன் வரவழிந்த செய்தி
பரிவர நடந்துதிந்தி
பழமையை கேளுநமுன்னே 269

முன்னொரு சுல்த்தானுளில்
முடிந்திடா குமரெண்டேங்க
மன்னவன் கொலுவைக்கல்லால்
மண்டபமெழும்பச்சாட
பின்னைபு மாங்கல்லாலும்
பிரபல னைப்பசாட
வர்னமா சொர்ணத்தாலே
வார்த்தவன் ஐம்பொன்வீட்டே 270

ஐம்பொன்னு மிடியும்போது
அரசனு மலிபாச்சாவும்
வெம்பியே அழுதழுது
வியாகூல மதிகமாக
தும்பமாய் மனதிலெண்ணி
தொழுதவ ரிறையைப்போற்றி
அம்புடன் ஒருநினைவா
அன்னல ருறங்கினரே 271

அன்னல ருறங்கும்போது
அரம்பையின் கிற்றளைத்து
தன்னகர் வீதியெல்லாம்
தடையற நடந்துசென்று
பொன்னணி முலையுனார்தன்
பொற்கொடி வாசல் புக்கி
மன்னனுங் கிதூர்நபியு
மங்கையா யிருக்கக்கண்டார் 272

கண்டிட மயிலாளேங்கி
கனதியால் மூச்செரிய
நின்றவ ளெரியுமூச்சு
நெருப்பொடு புகையெழும்பி
சென்றது அரசன்மேடைக்
கூடமுமிடியக்கண்டார்
* * *
* * * 273

கண்டபின் மயிலேயுந்தன்
கவலைகளென்னவென்னில்.
அண்டிட வுலகத்தாசை
காணுமில்லையென்றாள்
வண்டணி குழலி யேங்க
வன்னக ரழியுமென்று
விண்டிடக் கிதுரு வேந்தன
வெருண்டனன் விழித்துப்பார்த்தான் 274

பார்த்தவன் கனவுகண்ட
பாங்கையும் நினைத்தெழும்பி
தோற்றிய மயிலகத்தே
தோன்றலன் னெருங்கிச்சென்று
மாத்தொரு குறியும் வைத்து
மன்னவ னகத்திற்சென்று
ஆதவன் விடிந்தபின்பு
அரம்பையை யறுகழைத்தான் 275

அழைத்தவன் கனவிற்கண்ட
அரம்பைதா னிவளேயென்று
கிழைத்தவன் வாழ்வின்று
கிளிமொழி மணமுடித்து
வாழ்த்தினன் கொலுவை முன்போல்
மாடமாளிகையின் கூடம்
தனைத்தவ னிருந்தாலே
தையலா குமரிதே 276

அறிதொரு கடனே கேளும்
அன்னையும் பிதாவுங்கூடி
வறிலொரு மகனே யீன்ற
வேந்தனுமிறந்துபோனன்
வறிமுலே பாலனன்றும்
வளர்ந்தவன் காளையாகி
பறிவுரு பாலன்மேலே
பாங்கியர் போகமானள் 277

ஆனவன் மகன்குளக்கி
அனேகமு மயக்கமுட்டி
தானவன் மதிமாந்தான்
தையவீர் தானெருங்கி
பூணிட தாய்மகனும்
பொற்கொடி கெற்பமாகி
மானிட மடந்தையாளும்
மக்கமா பதியில்வந்தாள் 278

வந்தவ னிறையோ னீசா
வடிதனில் பணிந்தே சொல்வாள்
பந்தயத் துடனே செய்த
பாவங்க ளருகுமவுரைத்தாள்
கந்தமாம்பாலன் தன்னை
காரிகை பெற்ற பின்பு
விந்தையா யகற்றிசெய்து
விளங்கிட தவுபாச்செய்தாள் 279

செய்தவள் திரும்பி யவள்தன்
தேசம்போய் மகனைக்கண்டு
மெய்யணி தாய்மகனு
மிருவரு மிருக்கும்போது
வையகத்தெவர்க்கும் பாதம்
வணிந்திடும் தோல்கவுசூ
செய்திடுஞ் செம்மனுளாகச்
சிலதுநா நாளிருக்கும்போது 280

போதவு மொருவன் தோலை
பொன்கொடுக்காமல் வேண்டி
காதல னிறந்துபோனான்
கடனிவன் மேலேயுண்டு
ஆதலன் உளியடித்த
அவனுடன் கூலியொன்று
யீதலால் கடனுலகி
லிவனுக்கு யிருப்பதில்லை 281

இல்லகன் கடன்கொடுத்த
யிருவரு மிறந்துபோனான்
நல்லவன் தன்னையீன்ற
நாரியு மிறந்துபோனாள்
யெல்லையில் கபுரைக்காத்து
யீன்றவள் தனை நினைத்து
அல்லவ னழுக அவ்வூ
ரனைவரு மேதுசொல்வார் 282

சொல்லுவார் தாயைச்சேர்ந்த
சுகத்துக்கோ அழுதாயென்பார்
மெல்லியர் சொல்லைக்கேட்டு
மெற்றவுந் துயரமாகி
யெல்லவர் தனையுங் கேட்டான்
னியம்புணுற் புதுமையாக
கொல்லவுந் தாயேகோபம்
கோதையு மிறந்துபோனுள் 283

இறந்தவள் கபூருதன்னை
யீர்ந்தன னிருப்புளப்பா
துறந்திட கபூரில் தோகை
தோன்றிடா ததுபிரத்தில்
சிறந்தொரு வாசம் பூத்து
சிங்காரத்தோப்பிலாக
உரைத்தொரு மரத்தி லூஞ்சல்
ஆய்ந்திடா தாடக்கண்டான் 284

ஆடியே யூஞ்சல்மேலே
அவனையே யீன்றதாயும்
பேடியா யிருவர் நின்று
பின்பிடித்தாடக்கண்டு
பாடில்லா முறையுனக்கு
பதவிக ளீந்ததென்ன
ஓடினுன் செய்தபாவம்
நபிபிரந் துலைந்ததென்றுள் 285

துலைந்திடா பாவமெல்லாம்
தோன்றல ரீசாமுன்னே
சலந்தனில் முழுகி ஹச்சு
தானவர் செய்தபின்பு
அலைந்துடல் மோக அாபா
அருமலை மீதிற்சென்று
இலங்கிட தொழுதென் தௌபா
யிப்படி யிறைகொடுத்தான் 286

இப்பதி யிறைகொடுத்தான்
இதுவழி வுனக்கேயாகும்
தப்பிடா நடத்தி னூடே
தரணியில் போகவென்றாள்
அப்புர மிப்புர
மலைந்தவன் போகும்போது
ஒப்புடன் வுளிஅடித்த
ஒருகடன் காரன்கண்டான் 287

கண்டவ னேதுசொல்வான்
கடனுண்டு யெந்தனுக்கு
அன்றுநான் உளியடித்த
அதனுடன் கூலிக்காக
விண்டிடச் சதைகளெல்லாம்
வெந்து வெந்துருக
தக்க குண்டொரு கொளுமழுவும்
கொதிக்கவைத் தவனைச்சுட்டான் 288

சுட்டுடல் தேகம் வெந்து
சோரியே நடக்கும்போது
மட்டொரு தோல்கொடுத்த
மருகடக்காரன்கண்டு
கெட்டியாய்க்கீழே தள்ளி
கீறியே முதுகுதோறும்
வட்டமா யறுத்துக்கொண்டான்
வழியினில் வருகும்போது 289

போதவு மொருவருக்கொருவர்
பொன்பொருள் கணக்கைப்பேசி
ஆதனப்பொரு ளில்லாமல்
அவர்செய்யுந் தருமதானம்
வீதமாப்பகுரு தீவார்கள்
வெகுவித மனத்துமங்கண்ட
தேனெப்புதுமை பொங்கியிவன்
வழிவருகும்போது 290

வழியினில் லொருவன் வந்து
வாக்கொடு தாசன் முன்னே
தெளிவுரு பெரியோர் தம்மை
தினந்தினம் பேசுமுன்னே
பணிசெய்ய வேணுமென்று
பதரிய அவன் தன்னாலே
சுளியுமா அருத்துக்கொண்டான்
சுளண்டவன் வருகும்போது 291

வருகையில் பலபேர்கூடி
வகுத்தவன் தசைபகிர்வான்
சரிநிறை யில்லையென்று
தசையவன் மேலருத்து
குறைவாககூறு மீயே
குத்தமுமறிந்துகொண்டு
வரிமுறை பலபொருளும்
வையக்த்தவனும் வந்தான் 292

வந்தவ னீசாபாதம்
வருந்தியே துவைக்கும்போது
முந்திய பாவந்தீர
முரைத்தவன் தௌபாச்செய்து
யெந்திரத்துடனே கத்தும்
யிவன் ஹச்சு தொழுதுகொண்டான்
விந்தைகள் நடந்ததாலே
விளம்பிய கடனறிந்தே 293

---

மகரீப்பு ராஜ்ஜியம் [illegible] யா காபீர் அரசர் இருவர் களுடைய குழ்ச்சினைகளை [illegible] தினால் இசுலாம் மார்க்கம் வந்தபின் நாயகம் அருளியது இஞ்சில் வேதப்படி அறிவுடையவகை 293-நிம்பர் பாட்டு வரை பக்கம்-வது படலம் 1-வது பாகம் 5ஃ1-நிம்பர் பாட்டு வரை இஞ்சில் வேதப்படி நாயகம் அருளியது கன்ஸுல் ஆரிபினிலும் அக்குபர் என்னும் கிதாபிலும் அறியவருகிறது.

# பெரிதுடைய வகை

விளம்புவோம் பெரிதே கேளும்
வெகுதன வாழ்வுமற்ற
புழங்கிய தனங்களெல்லாம்
போதவு மீந்திட்டாலும்
களும்பிரப் போதுமின்னு
காசினியோர்க்குமில்லை
வளம்பெற அசனமொன்று
வருத்தமாய்ப்போதுமென்பார் 294

போதவ முலகிலுள்ள
பொருந்திய விதங்களெல்லாம்
ஆதனந்தனக்கில்லாமல்
அவசர மெவர்க்குமில்லை
பாதகா பெரியோர் மற்ற
படைத்திடு முயிர்களெல்லாம்
வேதனை பசியினாலே
வெருத்திடு முலகந்தானே 295

உலகத்தில் பசி தெளிக்க
வுணவினை வகுத்தான் வல்லோன்
கலைகளில் உணவைப்போலே
கனதியா பெரிதுமில்லை
அலகையாசன மாகி மக்கா
அரசணி சுலையுமானார்
நலமுறை கொணுவு நாளில்
நடந்திடுங்கதையாமென்றார் 296

மீண்டொரு வெகுதி முன்னாள்
மிடுமையும் வருத்தமாக
ஊண்டிய காலமெல்லா
முண்பது அரைவயிறு
ஆண்டவன் தனைநினைத்து
அழுதவனேது சொல்வான்
மாண்டிடும் அழிவெனக்கு
மன்னவர் கொடுப்பதெல்லாம்
யின்றுநீ கொடுப்பாயுண்டு
யெனக்குயிர்வாங்கச்செய்வாய் 297

செய்யின்று வுடனே செவிக்கு
செப்புவா னிறையோன் சத்தம்
பையவே யுனதுவாசல்
படிதனில் அடியில் மண்ணில்
உப்புமட் டுலகிலுண் ணும்
வுடைமைக ளனைத்துங்காண்பாய்
மெய்யென தனத்தைக்கண்டு
மெத்தவும் புதுமையாகி 298

புதுமைகள் மனங்கொள்ளாமல்
புகழ்ந்திறையோன் பாதத்தில்
விதனமும் வருத்தம்போக்கி
மேதினி யெளியோர்க்கெல்லாம்
அதுமுத லசனமாக
அனைத்துமே ஈந்தானப்போ
விதியழித் தெழுதவல்லோன்
விளம்புவான் கலம் லெவ்ஹுவை 299

கையினில் கொடுத்ததெல்லாம்
கத்தவன் றனக்கே யீந்தான்
மெய்யுர நாள்வரைக்கு
மிவன் குடையாளமென்று
ஐயெட்டு வயதிவனுக்
காதியே அறுபதுண்டு
செய்வயதா மென்றுஞ்
செல்வமுந் தனக்குமின்றே 300

தளைக்குமின் றிறையோன் சொன்ன
ததின்படி வரையலாச்சு
கிளைகுலஞ் சுலையுமானார்
கீர்த்திகளிருக்கும்நாளில்
தளைத்திடும் வனத்தில் வேடன்
தானவன் விரகெடுத்து
எளைத்திவ னகரில் வித்து
எப்பொழு தசனஞ் செய்வான் 301

செய்திடும் வேடனந்த
திகைவளத் தொருமரத்தில்
வையகப்பக்ஷியொன்று
வாழ்ந்தனின் முட்டைரெண்டு
கையினி லெடுத்துவந்தான்
கத்தவ நபியே யெந்தன்
மெய்யெனும் குலம் விளங்க
மிவனுட நீருரையும் 302

உறைத்திட வேடன் தன்னை
ஒருபிழை பொருத்தேனென்று
வருத்தினார் சுலையுமானார்
வையகப் பக்ஷிதானும்
தரித்திடும் மரத்தில் முட்டை
தானும் ரெண்டிருக்கும்போது
மருத்துமுன் போலுஞ்சென்று
மகிழ்ந்தவ னெடுத்துவந்தான் 303

வந்தவன் பின்னே பக்ஷி
வந்தது நபிதன்முன்னே
யெந்தனுக்கிடையூர் செய்தா
னெனக்குத்தாரஞ்செய்யும்
சிந்திய பள்ளிவாசல்
துரும்பதை நாற்பதுநாள்
வந்துநா னெடுத்தவந்தன்
வாசலில் சொருகிவைப்பேன் 304

வைத்துட ஞற்பதுநாள்
வன்னகமெரிந்துபோகும்
எத்தனை தவஞ்செய்தாலு
மிவன்குலமெரிந்துபோகும்
குத்தமு மென்மேலில்லை
கூறுமின் நபியேயென்றும்
உற்றசொல் லுறைக்கப்பக்ஷி
ஓதினர் சுலையுமானர் 305

சுலையுமா நபியுமந்த
சொற்பிழை வேடன்தன்னை
நிலையினில் பிழையே செய்து
நீயண்ட மதுயெடுத்தாய்
கலையென்னுங் கருணைகந்தான்
கடிக்குமென்றுரைத்தாரப்போ
நிலையினில் பிடிபாடில்லா
வேடனுமெழுந்துபோனன் 306

போனவ ெனருநாளந்த
பொதுகுரு கானகத்தில் போக
கானகத்தொருவர் வந்து
கடும்பசி தெளிப்பாயென்றார்
தானவன் காத்தில் நாட்டி
தடையில்லா தவர்க்குமீந்தான்
வின்னமும் பசிதெளிந்து
வுடையவன் தனக்கேசொல்வார் 307

சொல்லுவா ரிறையேயிந்த
சுகந்தரும் வேடன்தன்னை
யெல்லையி லிவனுயிரை
யிறையவா காப்பாயென்ன
வல்லவ னுதையமானன்
வனந்தமா மாத்திலேஎரி
சொல்லிய பக்ஷியண்டம்
சுகம்பெற யெடுத்து வந்தான் 308

எடுக்கையில் கருநாகந்தான்
எதிரிட யெழுந்தகோபம்
மடக்கலு முகத்துமுன்னே
மறைந்திடும் வுராட்டிதானே
படத்துடன் கடிக்கவந்த
பல்லுக ளனைத்துந் தைத்து
மடக்கமா மாவிக்குள்ளே
மடங்குதே வுராட்டிவாயில் 309

உராட்டியு மாவு மொன்று
வொடுங்கிய விரகுதன்னை
திரத்துட னெடுத்துவந்தான்
திருநபி முன்னே பக்ஷி
வெருத்துட சுலையுமானார்
விசைகொண்டு யெழுந்துசென்று
அரத்தவன் விரகைப்பார்த்தார்
அதில்கரு நாகங்கண்டார் 310

கண்டவர் கருநாகத்தில்
கதுப்பினி லுராட்டியாக
உண்டுட யீந்த பிச்சை
வுன்னுயிர் காவலாச்சு
கண்டுநீ பிழைப்பாயென்றார்
காரண மனர்க்குந்தோணை
விண்டுநற் பசிப்போர்க்கீந்தால்
விதுபெரிதாகுங்கேளீர் 311

கேளுநீ ஆழுனுற்கு
கிளி மொழி வுலகிலில்லை
நாளையே பிறப்பதென்று
நபி ஜிபுரில் சொல்ல
காளையே சுலையுமானார்
கவலைக ளுண்டோ வென்றார்
வாழவு முலகத்தாசை
வருத்தமு மனதிலுண்டு 312

வருத்தமு விதனந்தீர்க்க
வையகச்சுலையுமானார்
நரைத்தவர் நாளே மாள்வார்
நானிலப்பொருளுமில்லை
ஒருத்தர்க ளோரிரவு
வுலகினில் வுகையமுண்டோ
உறைத்திடும் பைத்துல்முகத்
தீசுரெல்லாம் பறையடித்தார் 313

பறையொலி முழக்கங்கேட்டு
பாரியென் றொருத்திசொல்ல
நிறைமதி வதனத்தானே
னீழிய வயதானார்க்கு
யிறைநபி மணமுடித்து
யிவர்களை யகத்தில்கூட்டி
அரையினி லரம்பையாளும்
யாழனுமுறங்கும்போது 314

உறங்கிய நடுச்சாமத்தி
லுடையவ னருள்தரித்த
கரங்கில்லா ரகீமென்னும்
கத்தவ னவுலியாவும்
யிரங்கியே மலையை விட்டு
யிப்பதி வீதியெல்லாம்
அரங்கொடு பசியே யென்றார்
அனைவரு முறங்கினரே 315

நாரியே மணமுடித்து
நாளையோ அருப்பதென்று
பாரியன் தனக்கிரங்கி
படைத்தவன் தனை நினைத்து
ஆரியா தொழுதழுது
அசனமும் ரொட்டிதன்னை
வாரியே யெடுத்தாளுண்ண
அவர்சத்தம் செவியில் கேட்டார் 316

சேட்டவ ளெடுத்த ரொட்டி
கிளிமொழி யுண்டிடாமல்
வாட்டமா வருவோர் முன்னே
வணங்கியே ஈந்தா ளப்போ
தேட்டமா கொடுத்தரொட்டி
நாயகன் ரகீம்பசியை
ஆட்டமா யமத்தக்கண்டு
அவர் திவா யிருந்தாரப்போ 317

அப்பொழு திறையைக்கூவி
ஆதியே அழிவில்லானே
எப்பொழு திவளும்வாழ
இவளுட னனைரும்
செப்பணி முலேயினுளும்
சேர்ந்தவர் நீடூழியாய்
கட்புடன் வாழ்ந்திருக்க
நாடியே குலமும் வாழ்க 318

வாழவே யிறையைக்கூவி
வல்லவன் ரஹீமுறைக்க
மாளவிண் டவனேச்சொல்ல
மன்னனுக்கையமில்லே
ஆளெனுங் தேவிவாழ
ஆதியு ஆமீனென்றான்
வாழவும் வூழிகாலம்
வரைந்ததில்வரைந்ததுஹலம்லெவ்ஹால் 319

வரைந்திடு மெழுத்தினுலே
அவர்களுக்கழிவில்லாமல்
இருந்தனர் விடிந்தபின்பு
யீறைநபி சுலேயுமானுர்
அறிந்துட ஜிபுரில் சொன்னர்
ஆதியே மிகப்புகழ்ந்து
வரைந்தனர் கிதாபுதன்னில்
வையகத்தோரறிய 320

அரிவது யெழியோர்க்கெல்லாம்
அசனமா ரீந்திட்டாலும்
புரிந்திடு முதலைச்சேர்க்கும்
பிழைகளும் பொருக்குமென்று
மரந்திடா வணக்கஞ்சேரும்
மறணமும் விலக்கிவைக்கும்
இரப்பவர் தன்னமன்றுடும்
இதுபெரிதாகுமென்றார் 321

## சிறிதுடைய வகை.

பெரிதெல்லாம் உரைத்தேன் பேசிய
சிறிது பெரியவ ரெளியவராக
ஒருவர்களிடத்தில் வுடலுயிரொடுங்கி
வுலகினிலிரப்பதுஞ்சிறிது
அரிகிய பசிக்கையமில்லை யென்றுரைப்பதில்
சிறிதாகுமென்றறியும்
பருகிய வுலகவர் பிதா இபுராஹீம்
பாருலகாளுமன்னாளில் 322

நாளினி லொருவன் சூதன்
நபிஇபு ராஹிம் முன்னே
நீளிய பசியமத்தும்
நீதியிபி னபியேயென்றான்
மீளவுங்காபிரான
எளியருக் கீயொண்ணாது
ஏழவே தீனில்சேர்ந்து
இருப்பவர்க் கீவோமென்றார் 323

என்றிறை நபியுறைக்க
ஏந்திய காம் வீணுக
நின்றவன் விலகிப்போனுன்
நீதியின் ஜிபுரில் வந்து
மண்டல மமைத்தோன் சொன்னுன்
மன்னவா நபியேகேளும்
என்றுமே அழிவில்லாதான்
எல்லவர் நினைவிலுள்ளோன் 324

உள்ளமை யறிந்த நாயன்
வுலகுயி ரனைத்தையு மமைத்தோன்
தெள்ளிய மறையில் ரப்பி
லாலமீ னவனல்லாது
எள்ளவே தனை ரப்பில்
முஸ்லிமீ னென்னலாமோ
வல்லவன் படைப்புக்கெல்லாம்
அனுதின மிரணமீந்தான் 325

ஈந்தன னிவனிரப்போன்
எண்ணைந்து வயதுமட்டும்
பாந்தியம் படைத்தவல்லோன்
பசித்திடா வுணவளித்தான்
ஆய்ந்தநன் னொருநேரந்தான்
வுடையவ னபிநீர்தானே
ஏந்துவன் தளக்கா யீய
இளைப்பது நபியைக்கேட்க 326

நபிகளைப் படைத்த வல்லோன்
நாடியே ஒஹி யிறக்க
புவியினில் வெளியோன் வந்து
போனவன் தன்னைத்தேடி
தவித்தவ ரலைந்து கண்டு
கடையற அகத்தில்கூட்டி
கவிமறை வுரைத்தோன் தூதர்
கனவிருந் தவனுக்கீந்தார் 327

ஈந்திடும் விருந்தையுண்டு
வெளியவ ரேதுசொல்வார்
பாந்திய னுலகுயிரை
படைத்தவ னபியுல்லாவே
எந்தனுக் கீயொண்ணுதென்
றதா ளிளகிப்போனேன்
வந்துநீர் சலிக்க வென்னால்
வருத்தமு முமக்கேனென்றான் 328

வருத்தமா இறை தூதான
வல்லவ னிபுறாஹீமும்
உறைத்திட வெழியோன் தீனை
யுகந்தவ னுறுதிபெற்றான்
கருத்துட லொடுங்கி ஐய
மிரப்பவர் சிறிதேகாண
இரப்பவர்க்கில்லையென்
றியம்பிய மொழிசிறிதே 329

## உரிதுடைய வகை

தேசமில் சிறிதே சொன்னேன்
தெளிவுட னறிதெக்கேரும்
ஆசையி னுலகத்துள்ள
அனைத்தும்பாள் நினைவைப்போக்கி
நேசக மமைத்தவல்லோன்
நீதிமே லொரு நினைவாய்
வாசகத்திருநாமத்தை
வணங்குவ துறுதியாகும் 330

வணக்கமும் நெறியமைத்த
வல்லவ னேதுசொல்வான்
இணக்கமா யொரு நினைவா
யெந்தன்மே லாசை வைத்து
நுணுக்கமாகிலும் ரெண்டுரக்
காயத்தொழுத பேர்க்கு
கணக்கில்லா சுவர்க்கப்பட்டு
கற்றவ னீந்தான்ரெண்டு 331

இரண்டுபட் டொன்று பச்சை
ரெம்பவும் செகப்பழகாம்
கொண்டுவர் திறை ஜிபுரில்
குவலயத்திரக்கு முன்னே
விண்டனர் விஷளந்தன்னை
விரித்தனர் யார்களெல்லாம்
நன்றென அலியுல்லாவும்
நானினித்தொழுவேனென்றார் 332

தொழுதன ரொரு நினைவாய்த்
தொழுகையு முடியும்போது
தழுவிய சலாம் வலத்தே
தாங்கியே கொடுத்தா ரப்போ
ஈளினமா யிடதுபக்கம்
ஞடியே திரும்புமுன்னே
யெழியபட்டோ பெரிதோ
யெது நமக்கென நினைத்தார் 333

நினைத்தாலவற்கொன்றில்லை
நிலத்தினில் அலியைப்போல
கனத்தனோர் வணக்கமிந்த
காசினிதனிலுமில்லை
மனதினி லொருநினைவா
மகிழொடு வணக்கந்தன்னை
யிணக்கமு முரிதா மின்று
யாரகுலியம்பினுரே 334

# கொடி திறுடை வகை

இயம்பிய கொடிதே கேளு
யேந்திளை மயக்கமொன்று
மயங்கிய மொழியாள் சொல்லை
மகிழ்ந்தவ னடந்திட்டாலும்
செயங்கொண்ட வாழ்வு மீறி
சேர்ந்திடும் பெருமையாலும்
பயங்கொண்ட பிணியும் மேவந்தன்
பாரெல்லாம் கொடுமையாண்டான் 335

கொடும்பசி அறிவில்லாரை
குவலையத்தி ணக்கஞ்செய்ய
ஒடுங்கிய மெலிந்தவேளை
ஒருநொடி வழிநடந்தால்
யிடங்கொடு கரும மெட்டு
வியம்பிய விதத்துக்கெல்லாம்
விடங்கொள்ளுங் கொடிதாமென்று
விளம்பினர் நபிபுல்லாவே 336

நபிஅன்னை ஆதந்தன்னை
நானிலத்தமைக்குமுன்னே
புவியில்மண்ணெடுக்க வந்த
காரூத்து மாரூத்துமுன்னே
மவியும் பெண்ணாசை யாலே
மருமைகள் வருகமட்டுங்
குவியவிம் படுகும்பாடு
கூறுவோம் கொடிதேயாகும் 337

ஆகிய நபிதா னுதம்
ரம்பையா மொழியே கேட்டு
தாகிய கனியே யுண்டு
தனுமைக ளனேகம் பட்டார்
யேகிய மடவாள் சொல்லை
எவருங்கேட் கெட்டிடலுமாகும்
பாகிய கொடிதே யென்று
பாரினிலறியவேணும் 338

பாரினில் சலையுமானூர்
படைத்திடுந்தனத்தைப்பார்த்து
ஆரவர் பொருளையெண்ணி
அறிவது வுலகிலுண்டோ
மீரியபெருமை யெண்ண
மிவர்பர தேசியாக
ஊரெல்லா மிரந்தே யுண்டார்
உலகினிலிது கொடிதே 339

உலகினில் நபிஅய்யபு யுடலெல்லாம்
விதனமாக்
சலமொடு புழுச்சொரிய
தன்னகர் பதியிழந்து
நல்நெறி மறந்திடாமல்
நாடெல்லா மிரந்தேயுண்டார்
உலகினி லிவர்படும்பா
டுரைக்கொணுக்கொடிதேயாகும் 340

ஆகிய நபி அய்யூபு
ரவர்ஹைர் ரெடுக்கும் நாளில்
தேவியார் ரகீமாவென்னும்
தேன்மொழி ரூபந்தன்னை
பாவியன் குபிராசன்
பத்தினி தனையேநத்த
மாவியு மளியத்தேச
மன்றுமே எரிந்துபோச்சு 341

யெரிந்திடக் கொலுவுந்
தேச மெவ்வுயிரன்றமாள்
இருந்துமுன் கொலுவையாண்ட
இவன்பிழை கொடிதினுலே
வருந்திய விதனங்காண
வையகமாளும்போர்கள்
யிருந்தரசாளும் லோக
மிதுகொடிதாகுமென்றார் 342

கொடும்பசி யடக்குமீசா
குவலயத்திருக்குநாளில்
மிடுமையா யவர்தன்கால
முப்பது வயதுமட்டும்
மிடங்கொள்ளு மீனு பசாரி
னென்றிடு மக்கமீதில்
நடந்தனர் காலமெல்லாம்
நாடிக்கா சொன்று தேடி 343

தேடியே யித்தங்கனியைத்
திண்ணவு மனதில் நாடி
வாரியே வணக்கஞ் செய்தார்
வாக்கொரு காசீயாமல்
நாடிய பொழுது வீனு
நடந்தவர் காலம்போனர்
வாடிய மிடிமையிந்த
வையகங்கொடிதாமென்றார் 344

கொடுமைகள் மலியப்பொங்கும்
கொணத்த அபூசகில் மனதை
படிதனில் வணங்கனேர்மை
பட்டதும் பாளல்லாது
கொடிப்பொழு தவனுமீமான்
னேக்கவும் வணக்கமில்லை
கடினமா யிணங்கிக்கொள்ள
கல்மனங்கொடிதாமென்றார் 345

கொடிநிலு மிதனைக்காண
குவலயத்திருப்போர்யாரும்
வடிவுறு வயசுஞ்சத்தி
வாலிப மொடுங்கும்போது
பிடியெனும் வலுப்பந்தானும்
யேரிய தவசினாரும்
நொடிப்பொழு தவர்நடையில்
நொந்திடும் மலைதகர்ந்து 346

தகர்ந்துட லழிந்துசத்தி
தானது அழியுஞ்சேதி
ஜெகந்தனி லறிய சிறிது
காலம்போய்த்தெரியுமென்றார்
வுகந்தவர் கேட்டனாரு
முலகினிலறியுநாளும்
வகுத்திர சூலுரைக்க
வரைந்தனர் கிதாபுதன்னில் 347

தனியவ ரெழுதிவைத்த
தரணியில் கெடுவுமாகி
அணிபுகழ் நபிஇரசூல்
ஆண்டுபின் முடியும்போது
துணிவுற யார்களெல்லாம்
தோன்றவு மொசியத்தோதி
வணிவுற வளவுக்கேக
வழியினிலிருந்தெழுந்தார் 348

யெழுந்தவர் மனையில்சென்று
ஏந்திளை ஆயிசாதன்
குளிர்ந்திடு மடியில்சாயக்
குவலயந்தெரிந்திடாமல்
வழியின் மின்னொழி மறைய
மிக்கணை சேறந்ததாலே
தெளிந்தவ ரெழுதிவைத்த
தீர்ந்த தின் கெடுவைப்பார்த்தார் 349

பார்த்தவர் பெரியோ ரீந்த
பாரமும் வருத்தந்தன்னை
தோத்திய இறையோன் தூதர்
சொன்னருள் கெடுவுமாண்டில்
மாத்தில்லா முதக் கொடுத்தான்
வசனமே லறியலாமேனும்
பாத்திரமான வள்ளல்
வளமைகள் தான்சிறிதே 350

சிருவுரு மனுவைப்போல
செகத்தினி லிருந்த வள்ளல்
அருசொடு குருசுங்கண்டு
யருந்திறை யதுக்குள் சென்று
யிருந்தன தலத்தில் முன்போல்
யிரவினில் விஷளஞ்செய்து
பொருந்தவு முயிர் படைத்த
புகழ்கொண்ட தாலமெல்லாம் 351

ஆலங்கள் அனைத்து மவற்
திருக்கையிலனுவெனம் வேந்தர்
மேல்முடி யிறையே காணும்
மிருபதம் தகுத்தராவில்
ஆலமின் டமைத்ததெல்லா
மவாணி புரண்டதாலே
மேலுரு மனுவுருவாம்
மெலியவும் படைகொடிதே 352

கொடிது ரெண்டாங்கெடுவை
குவலயத்தெ வருங்கானா
யிடியொலி அதிகமான
யிறையொலி அலிபுல்லாவை
அடியனு மப்துராஹிமா
னருங்கொலை செய்ததாலே
மடியினில் குடல் சரிய
மன்னவர் வெடித்தழுதார் 353

அழுதிடு மவியார் முன்னு
எதிர்ந்திட யிடிபோல் காணும்
பழுதுவந் துரைத்ததாலே
பருங்குர லொழித்துச்சோம்பி
தெளிவுரு மனையைக்காணத்
திருப்புவி நடக்கும்போது
வழியினில் சோர்ந்து வீழ்ந்து
வாய்விட்டழுதார் வேந்தர் 354

வாயெல்லாங்குரலை விட்டார்
வாக்குமே கேட்டதில்லை
ஓய்ந்தனர் மனையிற்சென்று
ஒடுங்கின ருடையோன் வேங்கை
பாந்தியம் வள்ளல்சொல்ல
பாரினில் கெடுவும்ரெண்டாம்
ஆய்ந்தவர் பெரியோ ரெல்லா
மனைவரு மேதுசொல்வார் 355

சொல்லுவா ரரசில் வேங்கை
சுகக்கனையாளி பெற்றோர்
வல்லவ னபிக்கசன
மதுக்கொரு கரத்தை யீந்தோர்
எல்லையி னிபுனியந்த
னிருபுளப்பாஞ்சிரசு
வல்வன் புவியே முருத்து
வாழுமே ரிஷபங்கொம்பில் 356

கொம்பினில் பன்னீராயிரங்
கூறுபட்ட ரியும்போது
இம்பர்கோன் யிரகில் தாங்க
இருபத்தோ ரிரகுமான
பதியிரகொன்று லெந்த
ஆலமு மரைக்கலாகும்
வம்பவம் பருக்காசுரான
வல்லவன் அலியுல்லாவும் 357

என்றவ னொலித்த வோசை
யிறையவ னவிடுவிக்கு
கொன்றுட செவியில் வள்ளல்
கூடிய படையில் பார்த்தார்
அன்று ஆறுண்டு தூரம்
முரச திரில் பாய்ந்த வீரம்
யாண்டிவா மனையிலாக
யிதுக்கிவ ரிணைக்கலாச்சே 358

இளைப்பொடு வருத்த மீதி
விது நடை கொடிதேயென்று
தழைத்திடு நபிமுன்சொன்ன
தான் கெடுவ ரிந்தவல்லோர்
இழைத்திடும் வேதமென்னும்
கித்தாப்பினி லெழுதிவைத்தார்
எளைத்திடும் வருத்தமீதில்
எவர்க்குமே நடை கொடிதாம் 359

நடைகொடிதாகும் பின்னே
முடியே அறிவீரின்று
இடங்களும் நாளுங்கண்டு
யியம்பிடக் கெடுவும் ரெண்டு
படங்களி லெழுதிக்கொண்டார்
பாரெல்லாம் படைத்தோன் தூதர்
திடம்புரக் கருமமஞ்சும்
செப்பினன் சரியேயென்றார் 360

# பருக்கத்து ஈமானும் தவராதவகை

சரியிணை யில்லான் தூதர்
சாத்திட அரசன் கேட்பான்
பெரிய வாழ்வு சத்து
பிரிந்திடா திருக்கவேண்டும்
தரித்து மீமான் சத்தும்
தவரிடா திருக்கவேண்டும்
வருத்தமும் விதனமான
வையக கொடுமையெல்லாம் 361

கொடுமைகள் மிடிமை மற்ற
கொடும்பிணி யணுகிடாமல்
வடிவொரு முகமிலங்க
வாக்கொடு செயலிலங்க
படி தனில் மனுவால் செய்யும்
பாங்கினர் குறையுமின்று
அடி பணிந் தாசன் கேட்க
அருளினாகமது நபியே 362

நபிகள் நாயகம் நவிண்டிடும் பொருளால்
ஞனிலத்தெளியவர்தனக்கு
புவியிலய்யம் சக்காத்தொடு சதக்கா
போதவும் வாழ்வுமுண்டாகும்
கவியும் வாழ்வொடு பாக்கத்துண்டாகவும்
காணவும் பூங்காவனம்போல்
அழியும் பூங்கா வனமது
அழியு மாடு விட்டிடுங்காடதுபோல் 363

ஆட்டிக ளாடுங்காடு
அழிந்திடுங்காவும்போல
கூடிய ஹறும்ஜனுவும்
கொல்லுமே செல்வந்தன்னை
வாடிய பெருமையாலும்
வாய்மொழி நிசத்தினாலும்
பாடிய கமலத்திமான்
பளிங்குபோ லொழிவாய் நிற்கும் 364

நின்றிடு மீமான்தானும்
நிலத்தினில் புலவரைப்போல்
கொன்றிடும் வேங்கையிந்த
குவலயமிருகமெல்லாம்
அன்றவர் கோபம் பொய்யும்
ஆர்க்குமே புரஞ்சொன்னாலும்
உண்டிடுமீமான் தன்னை
வுயிரொடு வேங்கைபோல 365

வேங்கைபோ லுடனே வுண்ணும்
விதனமும் வருத்தமாகும்
பாங்கினில் பின்மதுக்கள்
பலபல ஹறுத்தையுண்டால்
நீங்கிட பலஹறுமு
நிலத்தினில் விதனமில்லை
வாங்குடன் தொழுது சல
வாத்தையு முணர்ந்தபேர்க்கு 366

சலவாத்தை யுணர்ந்த பேர்க்கு,
சாந்தமா முகமிலங்கும்
பலபல சியலிலங்கும் பதி
மூக மதிபோல்காணும்
கலைநெறி யுரைக்கவள்ளல்
காபருக்கரசன் சொல்வான்
நலநெறி சுவர்க்கவாதி
நலக்கவி அறியவேண்டும் 367

# சுவர்க்கவாதிகள், நரகவாதிகள் அடையாளம்.

அறிவது நரகவாதி
அவர்மொழி கடுமையாக
யெரியுஞ்சொல் அவர்மொழியாம்
யெறிப்பொடு இடரும் பொய்யும்
கருகிய மனது கையும்
கல்வினுங்கடினமாகும்
உறியொடு கோபமீறும்
வுதாசன மொழிந்திடாதே 368

மொழியினி லிருநாங்குள்ள
மோடனு நரகவாதி
வழியுட னுரைப்பாச்சொல்லும்
வாகுடன் பொருமையாக
தெளிவுரு நிசமே சொல்வார்
தீனவர்க்குபசரிப்பார்
நளினமாச் சரகின்படிலசனமீவார்
நல்லவர் பெரியோர்க்கீவார் 369

ஈவது இறையை நாடி
இவர்மனக்கோபம் போக்கி
ஆவியில் மொழியி லல்லா
ஆதியின் திருநாமத்தை
ஓவிய கலிமாமீதில்
உயிருமே நடுங்குமாகில்
கூவிய சுவர்க்கவாதி
குணமீதென் றறியலாகும் 370

அறிவது இன்னமுண்டு
ஆதியின் நபிநயினாரே
பருகிய வுலகில்மற்ற
படைத்திறை படைப்பதெல்லாம்
பெரியவன் படைத்தவாறும்
பரிவினமானவாரும்
உருவுட லாகுமுன்னே
வுயிரணி தலத்தின்வாரும் 371

உயிரெல்லா மிறையைச்சேரு
மொடுங்கிய தவத்தின்வாரும்
பயிரிடு சுவர்க்கவாரும்
பருநரகளியும்வாரும்
அயிரணி நரகஞ்சென்றோ
ரவர்வெளி மீள்வதுண்டோ
வயிரமுஞ் சுவர்க்கம்போக்கி
வையகம் வருவதுண்டோ 372

உண்டென்ன யிறையோன் தன்னை
வுகந்தவர் தங்கேமெதல்லாம்
சென்றிருந்தலந்தா னெங்கே
செய்திடில் பதவியுண்டோ
அன்றொரு தவசுமில்லா
தவர்க்கொரு பதவியுண்டோ
விண்டிட வேந்தர்க்கெல்லாம்
வியநபி விளம்பினாரே 373

விளம்பினர் விளக்கொளியா
வியனொளி விளங்குஞ்சோதி
களிம்பர சுடர்துலங்கி
கனவிருளகலமாற்றி
வளம்பெரு மணியிலங்கும்
வருத்தநன் கடலேயொன்று
யெழும்பிய யெக்கீன் விருக்ஷந்
தெரியே மயிலைப்பார்த்தான் 374

மயிலண்டம் பதினெண்ணாயிரம்
மண்டலமோ ராலமாகும்
கவியெனுங் கனியேயுண்ட
கனமயில் சப்ரூத்தேற்றி
செவியெனுங்கடலே யன்னங்
கீழ்முகம் பார்க்கும்போது
புவியுயி ரமைக்க வல்லோன்
பொங்கிய கிருபையாலே 375

## உயிரையும், சடலத்தையும் படைத்த விதம்.

கிருபைகண் ணிறையனைத்தைத்
திருக்கண்ணால் நோக்கும்போது
வெருவித்தன் அன்னமஞ்சி
வேர்வையி லொழிவளிய
உறுவினத் துயிர்களாக
வுகந்தோனுச்செவியை நோக்கி
வருமுயி ரனைத்தும்
ரஹீமத்தென்னும் கடல்மீதிலாச்சே 376

கடல்முழு திடநிறைய
கனசுடர் திரளையற்றால்
இடங்கொள்ளும் பெரியவன்று
நிறைதிருப்பாற்கடலில்
அடங்கலு முயிரொழி
னிரைந்த நீருடன் கலந்து
திடங்கொண்ட பாலர்ச்சனை
திக்திப்பு தினமும்போலே 377

நிணமுலை பால்கலந்து
நிற்கும்வாற் றனைப்போலே
கணக்கில்லா வுயிரொழிநீர்
கலந்துபாற்கடலில்
பிணக்கமு மிரண்டுமொன்று
யேகநால் கலந்ததாலே
வணக்கமாம் ரஹீமத்தென்னும்
வல்லவன் கடல்முன்னமம் 378

நாமமும் ரஹிமத்தென்னும்
னுயகன் கடலுக்கின்னம்
காமமீண் டிருந்த நீரும்
கடலுடன் கலந்ததாலே
நேமமாங் ஹியாத்துல் கைபார்
யென்றொரு நாமமாச்சு
சேமமாக்கடல்நீரோட
சேர்ந்து யிரிருந்ததப்போ 379

அப்பொழு தருங்கடலி
லணைத்துயிரிணங்குமுன்னே
எப்போது மழிவில்லாதான்
யிறையவனுதி நாயன்
வைப்புக ளொழிவு பொங்கி
வழிந்தது விருசுடரை
செப்புயி ரிருபத்தைந்தாஞ்
செம்மலன் வகுத்துவைத்தான் 380

வகுத்தமொன்று மிருபத்தைந்தாய்
மதிலொரு வுயிரு ரெண்டாம்
மகுத்துவச்சுடரை வல்லோன்
மானிடர் உரைக்கொண்ணுது
மிகுத்திடுஞ் சுட்டுரெண்டில்
லிருபத்தே ழுயிருண்டாச்சு
தொகுத்தமற் றுயிர்களெல்லாம்
துலங்கிய கடல்நீராச்சே 381

நீருயிர் கலந்து வல்லோன்
நீதியினருள் சிறந்து
பேரொளி கடலுயிரில்
பிறப்பவதாரஞ்செய்து
தோரிய முகர்ரமா தந்
திருமுன்னே வுருவாய் முந்த
ஆரிய ஆலந் தன்னை
அமைத்தனன் அஞ்சா நாளில் 382

நாளினின் ஞயான்று
ஞனிலம் புவியுமேழும்
எணியு யிருளும்போக
யிரவியன் றமைத்தநாளா
பூணிய ஆறும்நாளில்
புகன்றிடுந்திங்களன்
ஆணிய மதியும் ரெண்டு
யணி யணிவான மேழும்

எழுவான் குருசருசும்
மிலங்கமேவமைத்த லலாறு
சூழவு மமைத்தான் செவ்வாய்
துலங்கிய ஏழாம் நாளில்
ஆழிய நரகு ஏழு
மதிலணி யாவு மீதளும்
மீழவு மமைத்தெட்டாநா
ளிலங்கிய புதனதன்று 384

அண்டிறை சுவர்க்கமேழு
மரம்பையு மருவிமாறும்
விண்டிடு நன்மைதின்மை
வெகுவித மமைத்தநாளா
மண்டலத்துயிர்கள்
மதமலே கொடுபுல் பூடெல்லாம்
உண்டென வியாழனன்று
ஒன்பதா ளாமைத்தான் 385

அமைத்தவ னனைத்தையெல்லா
மாதியின் திருமுன்னுகை
சமத்தனே வணங்கலெல்லோர்
சாற்றிய தவச்சொல்லாகிமுத்தனன்
பத்தென தெய்தி
நீதிநாள் வெள்ளியன்று
அமைத்தனன் பகலில் பாதி
அனைத்துமே னிரையலர்ச்சு 386

நிரைத்தது படைப்பு நீதி
நாள் வெள்ளிபத்தில்
சிரந்திடும் பகலில்பாதி
சேரவே அனைத்துங்கூடி
குறைந்திடா கருணையான
கொத்தவன் சமுகநாடி
பரந்திறை தனைத்தொழுது
பத்தினில் பணிந்தநாளாம் 387

பத்தியில் பணியுமந்த
படைத்திறை படைப்புக்கெல்லாம்
யிதுவெள்ளி பகலில்பாதி
யிறைதனைப்பணியவென்று
நிதம் நிதம் யிறை வணக்கம்
நீதியின் படைப்புக்கெல்லாம்
விதமுறை யிறைபரிமான்
விதித்தநாள் வெள்ளிபத்தே 388

வெள்ளிபத் திறைபரிமான்
வெகுவுயி ரனைத்துக்கெல்லாம்
கொள்ளிய நரகை வல்லோன்
குறித்தல்லா லகஅனைத்தில்லை
வள்ளல்முன் னனைத்துயிர்கள்
யிருபத்தே முதனிலொன்றும்
உள்ளமில் லுயிர்பிறிக்கும்
வுடையவருணராசன் 389

வருணராசன் பிசுராபீ லென்றே
வல்ல நாயகன்சொல் பரிபானமாம்
மருணமாம் புலியா னெருப்பானதை
மாத்து பேழை துறந்து நரகத்தில்
தருணமா அனல் மூட்டிடு
மென்னவே தானும் பேளைத்
திரந்தார் யிரணமார யிடுமவுத்தாம் புலியேரி
நின்று ரிறையு நெருப்புதன்னில் 390

நெருப்பினில் வேங்கைபோல
நின்றுவா லடித்தெழும்பி
வருத்தியே யிறை படைத்த
வணியணி படைப்பதெல்லாம்
திருத்திய விறை தவிர
தின்பனுணனைத்தையெல்லாம்
ஒருத்தரே நிலைநிறுத்த
வுடையவன் தனையே யல்லால் 391

அல்லவி ஞசையெல்லா
மனைத்தையுங் குலைப்பேனின்னம்
நல்லவர் பொல்லாரின்ற
நாட்டமுங் குலைப்பேனின்னம்
வல்லிய ராளரின்ற
வையகத்திறைபடைப்பு
அல்ல வானவர்கள்மெத்த
ஆதிமுன் படைத்ததெல்லாம் 392

படைத்திறை படைப்பதெல்லாம்
பருகின வதுகுலைய
சடைத்தைவிட் டுயிரகற்ற
சற்றுமே யிறக்கமில்லான்
மடைத்துயி ரனைத்துமுன்னம்
மவூத்துநாள் மறணமென்று
படைத்துவா னிடியில் கோடி
பருங்குரல் வெடிக்கச்சொல்லும் 393

சொல்லிய ஒலியைக்கேட்டுச்
சோர்ந்து இறை படைத்த
வல்லவன் படைப்பனைத்தும்
வாடியே நடுநடுங்கி
எல்லையி லிறையமைத்த
யிருபத்தே ழுயிருங்கூடக்
கல்மனக்கவலையாகி
கனல்மெழுகாயுருகும் 394

உருகிய தனைத்தும் நொந்து
வுணவொடு குணமழிந்து
பெரியவ னுயிரமைத்த
பெருவுயி ரிருபத்தேழும்
தருவிய இறையை நோக்கி
தான் சுஜூதிட்டுமற்ற
அறிபல வுயிருருகி
அனைத்தும்பாற் கடலிலாடி 395

கடலுயிர் கலந்தகாலங்
கத்தவ னிசுராஹீலே
இடங்கொள்ளும் நரகுதன்னில்
யெறியனல் மூட்டியந்த
விடங்கொள்ளு மறணவெங்கை
வியனுரு பேழை மீதில்
அடைத்தனல் நரகில் மூட்ட
மாதியு மருளினானே 396

அருளிய மறணப் பேழை
அடைத்தனல் நரகில் மூட்டி
மருளிய வேங்கை முன்னம்
மவுத்தென்ன வெடித்தபோது
யிருளெனுங் குகையை நோக்கி
யிளகியே கருகப்பூமி
கருளென்னுங் ஹயாத்தல் கைபார்
கடலினில் ரிஷபஞ்செய்தான் 397

செய்தினி ரிஷபங்களை
சிரசெனும் வளர்ந்த கொம்பு
வுய்யுமொன்பது லெக்ஷம்
ஒதுங்கிடப் புவியைத்தாங்க
மெய்ப்புட ரிஷப னிற்க
யிதுக்கொரு தருத்திராவும்
யெய்யுங் கீழசிதன்னை
யேந்திய கிண்ணமொன்று 398

கிண்ணத்தைச் சுமந்தரவு
மிதுக்கொரு சிவந்தமாளி
அன்னத்தை மகாமீதி
லணிந்து மீன்கடலிலாக
வண்ணத்தைக் கடல் மலைமேல்
வணியவும் வகைகளெல்லாம்
முன்னுத் தகைபாற் றுகைபார
முளங்கிய கடல்நீராலே 399

நீரெல்லாங் கலிமாவாக
நிரைந்ததில் விதங்களெல்லாம்
சீரெல்லா மமைத்துப்பாரை
சுமக்கவுந் தரிகொள்ளாமல்
வாரெல்லாம் தெளித்துக் கீழே
வருகிலே யிழகும்போது
வேரெல்லா மிபுலீசாக
வெடித்திடும் நரகந்தன்னில் 400

நரகினில் அழலை மூட்டனு
மூண்டொரு நரகும்
பரவிய நரகமெல்லாம்
பத்தொன்பது நாவெழும்பி
யிரைந்துகொண் டிறைபடைத்த
யெவ்வையு மெரிப்பேனென்று
பரந்தது வுயர்ந்தெழும்பிப்
பாராங்காரம்பொங்கி 401

பொங்கிய நரகவானம்
புகையினு லழியுமென்று
அங்கிவிட் டுயர்ந்திடாமல்
அமைத்திய பாரமாக
தங்குவா ருலகின்கீழே
தரித்திடுங்கடலைத்தாங்கும்
செங்கரு வுளிமலையைச்
சுமத்தினள் நரகுமீதில் 402

நரகுமேல் வடதிசையில்
நாட்டிய கருமலைதான்
அரங்கொடு பாரார்தன்னால்
அமுத்திய நரகமுக்குஞ்
சரிந்தமுன் னுலகமைத்துத்
தரித்திடும் நிலையதாக
வருந்திய படைப்பனைத்தும்
வல்லவ னமைத்தபின்பு 403

அமைத்தவ னருளா
லருநரகெரியமூட்டி
சமத்தென்ற வுயிரளிய
சத்துரு மவுத்தமைத்து
மவுத்தினு லழிவோமென்று
மயங்கியே மயங்கிச்சாட
சமத்தெல்லா மளிக்கும் வேங்கை
சமைத்தநாள் சனிக்கிழமை 404

சனிக்கிழமை யேழுஞ்
சரியென சமைத்தவல்லோன்
இனியபால் ரஹீமத்தென்னு
மிலங்கிய கியாத்துல்கைபார்
துணிவெனுங்கடலெழுந்து
துலைந்திடா விண்ணோராச்சு
அணிதிரள் நரகமோங்கி
ஆளவே ரோடும்போது 405

# இபுலீசு ரூபத்தின் விபரம்

வேரது வெடித்துப்பொந்தில்
விழுந்தன னசாசிலென்னும்
பாரமா கழுதைபோல
பருங்குரல் வெடித்தவாயும்
ஆரமா குரங்கைப்போல
அவனிரங்கரடியாக
சீரெல்லா மிருகஞ்சீர
சுமந்திடு மவன்குணந்தான் 406

குணத்தினால் நரியொழுங்குங்
கொடுவிச மரவுந்தந்தம்
தனத்திடு தலையிற்கொம்பு
தானது நடுவேயொன்று
யனைத்திடு மதகரியின்
பாங்கென வாலுங்காலுங்
கனத்தகால் கையிலேந்திக்
கசடனும் பிறந்தானப்போ 407

கசடன் விண்ணோர் குலத்தை
காத்திடுங்காவல்காரண்
அசடொன்று மணாகா விண்ணோர்
ஆதியின் மலக்குநாலு
விஷளமு மிருபத்தேழு
விதித்துள்ள வுபிரதாகி
பதன மதனைத்தும்பாரி
பாக்கிட பரிமாணச்சு 408

ஆச்சியா பாதுகாவல்
அனைவற்கு மிவன் தலைவன்
சூட்சியா யிருக்க வல்லோன்
சொல்லுவா னுதந்தன்னை
காட்சியா மமைக்க மண்ணை
கையிலே யெடுக்கவல்லோன்
மீட்சியால் மகாபிலவி
ரேவலுக் காரனென்றான் 409

என்றிட காரூத்துமா
ரூற்றிருவரு மெழுந்துசொல்வார்
என்றைக்கு மழிவில்லானே
எங்களா லேலுமென்னச்
சென்றிட யேலாதென்றான்
செம்மலன் மொழியைத்தட்டி
அன்றவர் நடக்கத்தாப
அவர்களையாகும்போது . 410

## ஆதநபி

## ஜடத்தை உண்டுபண்ணின வகை

---

தாவத்தால் வருவோர்க்கின்று
தய்யலீர் பூமாதேவி
பாவத்தை வருத்துமோகப்
பணியென மதுவையேந்தி
தாவத்தை யடக்குமென்று
தையலீ ரீந்ததுண்டு
ஆபத்தால் மோகமீறி
அருஞ்சனைச்செய்தாரப்போ 411

அப்பணி மலைக்கின் பிண்ட
மச்சணமே புறந்து
குப்பணி முலையா ளீன்றக்
குளவியைக் கொலையெசெய்து
தப்பியே யிறைமுன்போக
தம்பிரா னிவர்கள் தன்னை
கப்பினைப் பெரும்பாடாக
கியாமமட்டளவுஞ் செய்தான் 412

செய்திட விண்ணோரெல்லாம்
செப்புவார் யாரஹிமே
வையகம் புரக்குமண்ணே
வாரவும் வனுப்பமில்லை
துய்யவன் மலக்குநாலும்
தோகைமண் ணெடுக்கவந்தார்
கையினு லெடுக்குமுன்னே
சுத்தன்மே லாணைசொல்லும் 413

ஆணையே விலகி விண்ணோர்
அவரு முவருமபோக
நாணமென் றணுகா நெஞ்சன்
நாயக னிசுராஹீலும்
வானகன் மேலையாணை
வாய்ந்துரைக்காதே யென்ன
ஆனமன் னெடுங்கையால்
அள்ளியும் பரத்தில் சென்றார் 414

சென்றதை வருச்சமைக்கச்
சேர்விண்ணோர்களெல்லாம்
வின்றன ரேலாதென்று
வேந்தனுமேதுரைப்பான்
கொண்டுவந் தவர்கையாலே
குணவரை யெழுப்புமென்ன
அன்றவ ரச்சுவம்போ
லமைத்தன ரூபமொன்று 415

அமைந்ததோரு ருவைப்பார்த்து
அவரவர் தனியேசெய்தார்
சமைந்திசு ராஹீல் செய்த
சடத்தொன்று தவிரமற்ற
நமைத்தவிண் ணவர்கள் செய்யும்
நானிலத்துருவந்தன்னை
எமையவர்க்காசை கூவி
யிறை பரிமான் சொல்வான் 416

சொல்லுவான் ஜிபுரிலே
சோதியின் கடல்நீர்தன்னில்
வல்லதோர் சிரசைத்தோய்த்து
வாரி நீ ரடியுமென்ன
அல்லலிலான் றனுகா விண்ணோ
ரடித்திடப்பரியனந்தம்
வல்லவ னுயிர்கொடுத்து
அனைத்துமே யெழுந்ததன்றே 417

எழுந்திடும் பரியைப்பார்த்து
ஏதுரைப்பா னசாசில்
தெளிந்திசு ருஹீல் செய்யுஞ்
சேமமுமுருவமானல்
வளர்ந்திடும் பரிகுலத்தை
வதைப்பது மவன்குலந்தான்
யெழுந்திடா துருவந்தன்னை
யேறிநீமிதிப்பாயென்றான் 418

மிதித்தருக் கலைத்தானுன்னை
மேதியிலாழ்வாரில்லை
யிதையவன் கருத்திலுண்டோ
யேரியைய பரியுளக்க
விதனமா யிசுராஹீலும்
வெகுமனச்சலிப்புமாகி
அதனமா ரூபமொன்று
யமைத்தனன் விதம்வேறாக 419

விதவித மமைத்து வைத்து
வேறுநாள் பார்க்கும்போது
பதிமிரு வுருவப்பிண்டம்
பாங்கெல்லா மழியக்கண்டார்
இதம்பெரு வுருவம் வேறு
யெண்பத்தி நான்குலட்சம்
நிதமொரு விதமே செய்ய
நீதியின் மலக்கதெல்லாம் 420

மலக்கெல்லா மியற்கைபாங்கா
மருவுரு சமைத்ததெல்லாம்
கலக்கொணு ரகீமத்தென்னும்
கியாத்தினில் கைபாலின்னும்
நிலக்கொணுக்கடல் நீர்தன்னை
நீதியின் சிறகால் விண்ணோர்
தலைக்குமே லெடுத்துவீச
தம்பிரான் படைப்பதெல்லாம் 421

படைப்பெல்லா மெழுந்த வண்ணம்
பார்த்திசு ராஹீல்சொல்வார்
திடப்பெரு வுருவே யின்று
செய்திடும் ரூபம்போல
நடப்புடன் செய்ததில்லை
நாளையு வையோதீ
சடப்பெருங் கோபமாகி
காரியே வுமிழ்ந்ததாதில் 422

காரலேச் சிருவிரலால்
கவ்வியே யெடுத்தெரிய
வாரொரு கீத்துமீரென்னும்
வடிவுள்ள ஞயுமாகி
நேர்மிகு லச்சடத்தை
நெருங்கியே யுழக்கிடாவல்
தாரைவிட் டகலவோட்டி
தானதைக்கார்க்கும்போது 423

காத்திட இசுராஹீலும்
கண்டனர் சலியதாக
மாத்திலா சிரத்தை வல்லோன்
மகிழ்ந்ததை ரூபமாக்கி
சேர்த்திடச் சிரமிணங்கி
செய்தலி விதைப்போலில்லை
பாத்திர மானவல்லோன்
படைத்திடு மலக்குநாலும் 424

மலக்கினுல் மற்றோரெல்லாம்
மகிழ்ந்ததைப்பார்க்கும்போது
அலையுத்த ணயன் பார்க்க
அருசினி லணிந்த ஹீந்தில்
பலகுத்த மனுஷர் ஜடத்தை
பார்க்கவு மனுசிரஞ்சு
உலகினில் மவுத்தேயென்று
உயிர்சடந்தாண்டலாச்சே 425

சடத்துயிர் நிரைந்த மூக்கில்
சுவாசமுமெழுந்துதும்மல்
திடத்துட னெழுந்துவாயில்
தீரவே அல்ஹம்துலில்லா
எடத்துயி ராலமாளும்
யாரகீமானேயென்று
அடைத்திடும் விளிதிறக்க
அருசினில் கலிமாக்கண்டார் 426

கண்டவரெனக்கு முன்னே
கருணையுந் தூதரென்ன
என்றுமே கருணைபொங்கி
என்றிருந் தோழபான
மண்டலம் புகழுங்கோமான்
முஹம்மது நபிவுன் பாலா
அண்டவர் பொருட்டாலெந்தன்
ஆலத்தார் பிழைபொருப்பேன் 427

பொருத்திட பிழைமன்ருடும்
புகழ்மகு மூதாலே
வருத்தமென் பிழையுமெந்தன்
மக்கள்செய் பிழைகளெல்லாம்
பொருப்பது நீயேயென்று
புகழ்ந்திட இறைபரிமான்
ரொப்பிய கலம்லெவ்கில்
நேரிட யெழுதச்சொன்ஞன் 428

வரிப்படா விதங்களொன்று
வையகத்தமைத்ததில்லை
தரித்திட பலகைசொல்லும்
தம்பிரான் செயலதெல்லாம்
யிருப்பிட மிணையேயெல்லா
தேதிமுன் னிடத்திலுண்டோ
முறைப்பட ஜிபுரில்தன்னை
மூந்திய கடல்நீராலே 429

கடலினில் சிரகைத் தோய்த்து
கடுமையா யடிக்கும்போது
இடங்களி லனேக பக்க
மிருந்தது அனேகபக்கம்
அடங்கலு மழிந்தவாறும்
அமையுங்கா லழிந்தவாறும்
சடங்களி னுயிர்நடுவில்
சாவதின்றுறுதியாச்சு 430

அருதியா யெழுத்தழி
யாதியின் பரிமாஞச்சு
இருத்தியா கடல்நீராலே
பெரியவன் திட்டிமுத்தால்
அரிய பட்டணமுமேழு
மமைத்தன ஞென்றைப்போல
விரியொரு வீதியொன்று
விளம்புமன்பதிஞயிரம்

விளம்பிய வீதிக்கெல்லாம்
விளக்கொளி மாடங்கோடி
எழும்பிய மாடமொன்றுக்
கேந்திழையாளனென்று
வளம்பெரு வயசு
வகுப்பதுமாயிரந்தான்
களிம்பில்லா தெளிந்த ழுத்தா
லமைத்தனன் மனுடரெல்லாம் 432

மனுடரு மிணைசோ
டாகமங்கிடாத் தேசர்தன்னை
யணிபுகழ் கொலுசெலுத்த
ஆதமுமாசனுக
துணிவுர வகுக்கவல்லோன்
தோற்றிய விண்ணோர்க்கெல்லாம்
பணிந்து சுஜூது செய்ய
பாரிறை யுரைத்ததன்றே 433

# இபுலீசைத் தள்ளின விபரம்

உரைத்திட விண்ணோரெல்லா
முதயமென்றெழுந்தாரப்போ
விரைத்தசொல் அசாசிலென்ற
வம்பனுமேது சொல்வான்
திருத்தமண்ணெடுத்து நாங்கள்
செய்திடும் படைப்பறிந்து
வருத்தியே வணங்கச்சொன்ன
லதுக்குநான் வணங்கமாட்டேன் 434

வணங்கிட அசாசில்தன்னை
வல்லவன் வாக்கினாலே
இணங்கிட இபுலீசென்று
இரங்கவின் னுலகைவிட்டு
கணங்கொள்ளு மிறைபரிமான்
கண்டிபு லீசுசொல்வான்
தனந்திரள் விண்ணோர்க்கெல்லாம்
தலைவனின் நாளிருந்தேன் 435

இருந்தவின் னுலகைவிட்டு
யெழுகினர் காலமாச்சோ
சொரிந்தர சாளதேசம்
மேவலுக்கிணைந்தபேரும்
வருந்தியே நினைத்ததெல்லாம்
வல்லவா கொடுப்பாயென்ன
பொருந்தியே துனக்கே யென்றான்
பொங்கியே யெழுந்து போனான் 436

போனவ னருகைப்பார்த்தான்
பொன்னணி குருசைப்பார்த்தான்
வானொளி மதிபோலப்பேழை
குருசில் வைத்திருந்தது
ஈனனும் தூரந்தானத்தி
லியம்பிடா வயிரமாலை
தானொரு சாமாயேழு
தரித்ததில் பதைக்கமாக 447

ஆகிய களபமாலை
அதிலணி நகையுமேழும்
வாகுடன் சரத்தைக்கையால்
வணிந்தன னிடந்தமார்பில்
யேகனே யெவர்க்கிதென்று
னியம்பினா னுனக்கேயென்று
வாகுடன் குருசைவிட்டு
வந்தவன் கீழிரங்கி 438

இரங்கியே புயத்தில்பூண்ட
யிடங்கொடு கடியமாலை
கரகில்லா வடத்தைக்கண்ணால்
காணவுங்குனிந்து பார்க்க
அரங்கொள்ளும் நரசமேழும்
அரவில் லாபரணமாக
கரங்கொடு விஷமுஞ்சிந்த
கழுத்திலா பரணங்கண்டான் 439

கண்டவ னடுங்கிநிற்க
கத்தவ னேதுசொல்லான்
கண்டிடு மாவுந்தேளும்
கடுநரகேழுமுனக்குச்
சென்றிடும்பதியுஞ்சொல்லை
சேர்ந்த நீரேவலாளாய்
நின்றுநீ கொலுநரகில்
நீயரசாளுவென்றான் 440

விண்டுவிண்ணுலகைவிட்டு
வெளிப்பிரங்கடந்தாலென்னை
மண்டலம் புகழுவிண்ணோரில்
மலக்குமீ காயில்தன்னை
என்றைக்கு மழிவில்லாதா
னிறைபரிமானஞ்சொல்ல
அன்றுமுன் னலியார்க்கென்று
ஆகிமுன் வகுத்தவாளால் 441

வாளதை வலக்கரத்தில்
வாங்கியே மீக்காயீலும்
காலையென் றிபுலீசென்னும்
கசடனைச்சினந்து வெட்ட
பாழ்பட வொருகால் கையும்
பரிபடத்தரித்தவனை
மீளவு மிடதுகாலால்
மிதித்துக்கி ழெடுத்தெரிந்தார் 442

எறிந்திடும் விசையால்வான
மேழையுங்கடந்துபாரில்
சிறந்திடும் புவியின் கீழே
செப்பிய அதனின்கீழே
வரைந்திடும் பெரும் நரகில்
வந்தவன் விழுந்தானப்போ
பரந்தவன் தலைகீழோடி
பாதாளம் விழுந்தானன்றே 443

விழுகையில் காடிரூபம்
மேலெல்லா முருக்குச்சட்டை
கழுவன்பெண் ணுருவமாகி
கன்னியா பரணம்பூண்டு
வழுவில்லா தெளிந்த முத்தால்
வல்லவன் படைத்தலோகம்
முழுதுமே யழியமோசம்
வருத்தமின்றெழுந்து போனான் 444

வருத்துவான் றெளிந்த முத்தால்
வரைந்தன னிறையனைத்தும்
ஒருத்தனை ஆதமென்று
உலகுமண்ணால் சமைத்து
பருத்தவ னிவனேயென்று
பதத்தினில் பணியச்சொல்வான்
கருத்துடன் பணிந்தால் பின்னே
கத்தவனேது சொல்வான் 445

சொல்லுவா னறிவில்லாத
சோரமென் றெழுதிவைப்பான்
எல்லைமண் ணுருவைப்பார்த்து
இறையெனப்பணிந்தாயென்பான்
நல்லவரொருவரில்லை
நரகினில் படைப்பேனென்றான்
தொல்லைவந்தணுகுமுன்னே
சொன்னேன்நான் பிழையுமென்றான் 446

சொன்னதை யுறுதிகொண்டு
சுருதியின் னுடனெல்லாம்
அண்ணலே மறக்கவின்ளோர்
ஆதமின் பாதம்நோக்கி
நிண்ணய சுஜூது செய்ய
நீதியினுதந்தன்னை
வண்ணமா யிமையோர் முத்தா
லெழுந்திடுந்தேசம் வந்தார் 447

## முத்துப்பட்டண மழிந்த வகை.

வந்துமுத் துலகோர் தன்னை
வல்லவன் ஜிபுரில்சொல்வார்
அந்திரத்திரை படைத்த
எழுபது நகருக்கெல்லாம்
பந்திரு ழுாசனுக
படைத்தன னிறை யிவரை
வந்திவர் பதத்தே யெல்லோர்
வணங்குமின் னுறைக்கும்போது 448

வணங்கமன் ஞதமென்று
அனைவரும் பெருமையாக
பிணங்கினர் ஜிபுரில்சொல்வார்
பேதகப்பெரு நினைவை
கணங்கொள்ளு மிறை ஜிபுரில்
கத்தகவன் சமுகமேவி
இணங்கிடாப் பாவியென்றார்
இறை திரு கோபமானன் 449

கோபமா யிஜ்ரா ஹீலே
குவலயத்துயிர்களெல்லாம்
நேபமா மவுத்துவேங்கை
நேரிடும் விழியினாலே
தாபமாயேறிப்பார்க்கத்
தம்பிரானுரைக்கும்போது
சாபமாயெரியப்பார்த்தார்
சகலமும் பெருந்தீ சுற்றி 450

சுற்றிட இஸ்ராஹீலும்
சூரொடுத் தூதும்போது
பற்றியே யெறிந்துதப்போ
பட்டணமெழுபதெல்லாம்
வெற்றியா ஆதந்தன்னை
விண்ணவர் சிரகிலேந்தி
கத்தவ னருள்மீக்காயீல்
கனமழை சொரிந்தாரப்போ 451

மழைவிழ எரியணலும்
மங்கியே கரியதாக
விளஎழுபதுங் கருகும்
மியனூர வுலகமீதில்
பழுதிலா யிறைபரிமா
பருங்கட லொளிவு நீரே
தெளிவுரு சிறகைத்தோய்த்து
திருக்கையா லடியுமென்றார் 452

அடித்திட ஜிபுரிலந்த
கருங்கடல் நீரையள்ளி
துடைத்தொரு ஆணும்பெண்ணுந்
தோன்றியே ஜோடு ஜோடாய்
எழுந்திடுஞ் சடநெருப்பா
லெழுந்தனர் யெழுபதாதம்
வடித்திடு மனையாரோட
வாழ்ந்தவ ரிருக்கும் நாளில் 453

நாளினி லிவர்கள் வாழும்
நகரினி லாதந்தன்னை
ஆளரசு மிருந்தமற்ற
அனைவரு வந்தடிபணிந்து
ஊழிய னுரைக்கவிண்ணோர்
வுடையவனுதந்தன்னை
வாளிய நகரிற்சேர்த்து
வணங்குமென் றனர்க்குஞ்சொன்னார் 454

சொல்லுவார் புவிக்கிவன்ன
சோம்பியே பணிவருண்டோ
வெல்லுமவர்க்கிறை ஜிபுரில்
வேண்டியதெல்லாஞ்சொல்ல
கல்மன மிளகா வண்ணம்
கத்தவனுரைக்கும்போது
வல்லவன் மீக்காயீலே
வருஷிக்க வகுத்தோன் சொல்வான் 455

# எழுபதாதமும் அழிந்தவகை

சொல்லவுங்கருங்கடல் நீர்
சோம்பிடா தவபெடுத்து
எல்லையில் விழுநீராதம்
எழுபதுமிரக்கும்போது
தொல்லையொன் றணுகா நாயன்
தொகுத்திய ரிருபத்தேழில்
எல்லைநீ திருத்தவென்று
ஈசுரன் தனைவகுத்தான் 456

ஈசுரர் கிளையுமையாள்
ஈந்துமுவ்வரு மஞ்சு
மீசுரர்க்கதிபர் களைந்து
மிவருட வாய்வுறலே
காசினை தனைத்திருத்த
கத்தவன் பரிமாறுக்கி
தேசமென்றுருவமாக
செய்தன னீசநாதன் 457

நாதனுயகன் முன்னுளில்
நாடியே வுலகந்தன்னை
நீதமாங் கடற்றுரையில்
நிறுத்தினன் மலைக்குவடாய்
ஈதெல்லாங்கடலொதுக்கி
யிருவித மலைப்புவியும்
ஆதென புவிதிருத்தி
யவர்களும் வாழ்ந்திருந்தார் 458

வாழ்ந்தவ ரிவர்குலத்தில்
வரம்பெருந்தேவராக
ஏந்தல் முப்பத்திமுக்கோடி
எண்ணஞ்சு லக்கமாண்டு
பாந்திய வுலகையாண்டு
பரிபாரமா யாளுநாளில்
காந்தியி னொளியிலங்கும்
கத்தவன் ஜிபுரில் வந்தார் 459

வந்தவர் ஜிபுரில் சொல்வார்
வல்லவன் எல்லோர்தன்னை
பந்தியா ஆதம் பாதம்
பணியவேன்றுரைத்தானென்றார்
யிந்திர வடிவுமாய்கை
யிணையில்லாதெழுந்தகோமான்
செந்தள லெழுப்புமாதம்
சிறிய மண்ணதுக்கெளிதோ 460

மண்ணடி வணங்க வண்ண
மன்னவன் நிரை ஜிபுரில்
வண்ணமும் யிறைசமுகம்
வணங்கிடா பாவியென்ன
முன்னவ னிறைவனுதி
மொழிந்தனன் விண்ணோர்க்கெல்லாம்
வன்னியுஞ் சலத்துமுத்து
வழிந்திடும்வாறுபோல 461

வழிந்திடுஞ் சலத்தின் முத்து
வன்னியின் கூட்டத்தாரு
தெளிந்திடு வாதரூபம்
நீளிய படைப்பு மூன்று
அளிந்திய நரகமாளும்
அஸாஸீலென்றிபுலீசோடு
செளுங்கொடு நரகமாள
செய்தனன் தலைவன் சேனை 462

நவச்சுட ரொளியிலங்கும்
னுயகனு தந்தன்னை
தவமுறை சுவர்க்கந்தன்னில்
தரித்தவர் கனியருந்த
எவையுமே படைத்தவல்லோ
னிமையவர்க்கருளும்போது
புவிவர ராதந்தன்னைப்
பொன்னக ரெத்தினுமே 463

பொன்னகர் கனியருந்தி
புகழ்ந்திறை தனைவருந்த
அன்னைய ரிருக்கவல்லோ
னமைத்தனன் ஹவ்வா தன்னை
மின்னெழி வதனமாக
இடையொரு கனியதாக
கண்ணுமுன் னமைத்தானதைக்
கண்டவ ராதங்கண்ணல். 464

கண்ணொளி மறைய வீசுங்
கனியுண்ணக்கவலையாகி
எண்ணிய தொழுது வல்ல
வரிக்கனி கொடுப்பாயென்ன
அண்ணலர் ஜிபுரில் வந்து
அருங்கனி தனையுமீந்தார்
திண்ணவும் வயிற்றில் சூலாக
திரண்டது இடதுபாகம் 465

இடைவிலா புரமொதுங்கி
எழும்பியே சிலந்திபோல
மடக்கொடி மின்னுளான
மங்கைய ருலகமாதா
திடத்துடன் பிறந்தெழுந்தார்
திருமணமுடித்தான் வல்லோன்
இடத்தினில் ஆதம் ஹவ்வா
யிருவருமிருக்கும் நாளில் 466

நாளினி லிபுலீசென்போன்
நாசிய குருவைப்போல
தோளிய ரென்று சொல்லி
துவண்டவ னடிபணிந்து
நீழிய காலமெல்லாம்
நிகரில்லா கனியேயும்
போந்தோழியர் தனக்குமீந்து
தோன்றலுக் கீயுமென்றான் 467

ஈந்திடுங்கனியே யண்டருக்
கொடுத்தொரு கனியதனை
ஏந்தலுக் கீயும்போது
எரித்தன ரிடத்திலக்தே
தாழ்ந்தவர் பதத்தைகையால்
தாங்கியே தலைமேல் வைத்து
பாந்திபத் துடன்கொடுக்க
பருகினார் படைத்தோ னுதம் 468

ஆதனன் நபிக்கவ்வாதன்
ஞசையா விபுலீசிந்த
கோதும்பை கனியையுண்ண
கொத்தவன் சுவர்க்கமீதில்
நீதமும் வணக்கமற்ற
நேர்மையு மறந்துபோகி
பேதக வலஞ்சலமாம்
பெரியவன் கோபமாகி 469

கோபத்தா லெடுத்தெரிந்தான்
குவலயமெழுவான் படுவான்
பாவத்தைப்பொருத்து மதின
பதியினி லவரைச்சேர்த்து
தாவத்தா லிருவர் வாழும்
தகமையிற் குழவியல்லால்
மெத்தவே இரக்கமாக
மெல்லிய ரிருக்கும்போது 470

இருக்கையில் கசடனுனேன்
எழுந்தன னொலியைப்போல
பெருக்கமா ஹவ்வா முன்னே
பிரபல ரனேகம்பேசி
தரிக்குமுன் குலமிப்பாலன்
தாயே நீ வளப்பாயென்ன
வரிக்குயில் வம்பனீன்ற
மதலையை வேண்டிக்கொண்டார் 471

கொண்டட னுதங்கண்டு
கூறுகூறாய்த்தரித்து
அன்றவர் தணலே மூட்டி
ஆற்றினில் தனைக்கரைத்தார்
வண்டனேவந்துமகனேசல்என்றுன்
வந்துமே யிறந்தபாலன்
பண்டுபோ லீந்துபோனுன்
பாலனையாதருகண்டார் 472

கண்டவ ரருத்தார் தறைபினில்
புதைத்தார்
பண்டுபோல் வரவழைத்து
பாங்கிய ரிடத்திலீய
அன்றுபின் றுதம்பால
னருத்தவ ராக்கியுண்ண
என்றைக்கு மெனக்கு வெற்றி
என்றன விபுலீசப்போ 473

அப்பொழு தாதமந்த
அஹமதை ரருத்தருந்த
செப்பியே மனுவுக்கெல்லாம்
சேர்த்தது நினைவுமுண்டு
நற்பொடு நவுசானியும்
நாட்டமா ரகுமானீயும்
தப்பிணை வினையும் பொல்லா
கசடறு சைத்தானீந்தான் 474

தானிந்த நினைவுமுண்டு
தரித்துமே றுதற்கெல்லாம்
ஆனமன் ஜடலமாகு
மதுனபு சானியென்று
காணுமுன் பலதையெல்லாம்
காதலால் நமக்கேயென்றும்
ஊணிய சடத்தினுள்ளே
வுயிர் ரஹிமாணீயாமே 475

ரஹீமா நினைவது யேவலைச்செய்யு
மார்க்கமெனும் பதியே
தகுமா வணக்கமுந் தக்கவணக்கமும்
தரித்திடும் வாரிதுவாம்
வெகுவாசை சிரிதிபுலீசும் வேண்டிய பொல்லா
விருமையே செய்து
னெகுமாயின்ன விதத்தினில் பாவம்
நிகழ்த்துவதென்று நினைப்பதுவாமே 476

ஆகிய விதங்களோது
அறிவிளிக்கெதிரே தோன்றில்
மோகமென் ஞைசமண்ணல்
முளைத்திடும் சடலமாகும்
ஏக நாயகனுக்கோரா
தின்பது நரகின்பங்காம்
பாவமும் விலக பங்கை
நினைப்பது சைத்தான் பங்கே 477

பங்கொரு மாசையெல்லாம்
பளித்தகி ஆதிபங்கி
பொங்கிய கமலத்தீமான்
போதன தரித்தவல்லோன்
செங்கையே குமிளடித்து
செப்புர ணிறையினைம்
பங்கவொன்றனுகா வல்லோன்
பதவியிற்சேரும்பேரை 478

பேருடனைசை முந்த
பின்னையு மருத்துச்சொல்ல
மீறியே செய்துபாவ
மிதுக்கொரு சடங்கைச்சாட்ட
சாரிய கமலத்தீமான்
சரிகியே நிலையில்லார்க்கு
கூர்மன நினைவை வப்பன்
கொழுநிலை நிறுத்திவைப்பான் 479

நிலைப்படுங் கருமமெல்லாம்
நீர்நிலத் தவருக்காக
கொலைபடும் வம்பனென்றும்
கொடியகன்ஞசுமாகி
வலைபடி பேரும் அஹமரென்ற
வடிவனை யருத்தேயுண்ட
கலைபெருங் கடுமையாலே
கமலத்துக்கருகிலாச்சு 480

கமலத்துக்கருகா நிற்கும்
கண்ணொழி விலங்குமீரல்
சமயத்திலிரு செவியில்
தாரையா மதினுள்பித்து
அமையுத்த யிதுகள் ரெண்டி
லவனுட அசடு கலந்து
நேமயுத்த விழிசெவியு
நிரைத்தது அசனபங்கு 481

அசடன் பங்கதனுல் லீரல்
அக்கினி நிறமதாச்சு
கசடனும் நினைத்த பித்து
கசப்பதிற் குடியுமாச்சு
வசனமிண் டிவர்வயத்தில்
வகுத்திடும் படைப்புக்கெல்லாம்
துஸ்மனென் றிபுலீசங்கே
துலங்கியே வாழ்ந்திருப்பான் 482

## கயாத்துல்கை பாற்கடல் வளமை

இந்தவா ரிருவருக்கும்
இல்லுர பொருதும்போது
முந்தனயகன் கயாத்துல்
கைபாவெனுங் கடல்நீர் தன்னில்
விந்தையா வுலகிலுள்ள
விருக்ஷம்பூண் டதனின்வித்தும்
ஏந்திரத்துயிர்களாக
எண்பத்துநாலுலக்ஷம் 483

எண்பத்து நானுலட்சம்
இணங்கவுஞ் சோடுசோடாய்
உம்பர்விண் ணுலகம்விட்டு
வுலகினி லிரக்கிவைத்து
துன்பமொன் றணுகாநாயன்
தொன்மல ராதங்கையால்
அம்பரத்திமையோர் புல்பூ
டனையவித் தனைத்துமீந்திருந்தார் 484

ஈந்ததை ஆதம்வேண்டி
இறைத்தன ருலகமெல்லாம்
பாந்திய முகரம்பத்தில்
பதிபெரு நாயரன்று
ஏந்தல்கை விபரத்தாலே
யெவையுமே முளைத்தெழும்பி
ஐந்து கோதும்பை வித்தை
அவர்பரி பாரஞ்செய்தார் 485

செய்ததை அறிந்து ஆதம்
சிலதுநாளிருக்கும்போது
வையகத்திறை யிரக்குவா
னனேகமும் படைப்பதெல்லாம்
மெய்யுர முளைத்தெழுந்த
மேதினிற் பூண்டருந்தி
உய்யுமா மிருகமெல்லா
மொன்றையொன் றருந்திநாளில் 486

அருந்தியே வுலகுயிர்கள்
அதுபரி பார்மீண்ட
சேர்ந்திடுங் குலமுண்டாகி
செய்திறை வுயிரமெல்லாம்
இருந்தது கயாத்துல்கைபார்
இறைதிரு அமானமாக
உரைந்ததி லிருந்துதின்றூர்
ஓதுவான் மகரீபாண்டோன் 487

மஹரீபுக் கதிகஞ்சொல்வான்
மன்னவன் நபியுல்லாமே
நகரியி லொருவமில்லா
நாயகன் கையாத்துல்கைபார்
நிகரில்லா அகலமாளம்
நீருடன் வளமையென்ன
உகமையில் நிலேயில்லாதான்
உடையவன் தூதர்சொல்வார் 488

சொல்லுவா ரிறையமைத்த
சுகித்திருப்பாற்கடலாம்
நல்லபால் நிறமாய் வெள்ளே
நற்பொரு ரசனேயில்லே
வல்லவன் சுடராலன்னம்
வடிந்த நீர்வேர்வையெல்லாம்
எல்லவா ளுயிர்விந்தாக
இரங்கியே கடலிலாச்சே 489

கடலெலாம் பாலாசினே
கனி இனிப்பதிலுண்டாச்சு
திடபொரு நினேவுமொன்ருய்
தித்திப்பு சேராலாச்சு
எடம்பெருங் கடல்வலுப்பம்
யெரைந்தலே யடித்தெழும்பும்
துடந்தலே அடிக்க ஆற்றில்
துள்ளியுஞ் சிதருந்தானே 490

துள்ளியின் வலுப்பந்தன்னே
தொகுத்ததை யுரைக்கக்கேளும்
முள்ளதோ ருலகமீதி
லோதிய கடல்களேழும்
வல்லவன் கடலிடையில்
வகுத்தகி யேழுமொன்ருய்
தெள்ளிய வுலகமென்று
செப்பலாமிதுவின்னுமம் 491

இதுவொரு உலகஞ்சிக்கி
யிருக்குமாங் கோபுக்காபும்
பதியெனுங் கோபுக்காவே
பாற்றனையாக்கோனும்
துதிசெயுங் கிரியுமெட்டு
தூணென வளர்ந்துவோங்கி
அதிசிய வர்ணந்தன்னை
அளவும் நிருத்தி வைத்தான் 492

வளர்ந்திடும் கிரியோடெட்டு
மதில்நடு மகாமேர்ருென்று
தளர்ந்திடா வானந்தன்னை
தாங்கிட நவகிரியும்
தெளிந்துடர் விதமனைத்து
நீதியா னமைத்ததெல்லாம்
களிந்திடு முலகமொன்று
காட்சியாய் நிலைநிருத்தி 493

நிலத்தினி லதிகமாக
நிகரில்லாக்கோடிகொண்டத்
தலத்துயர் வானமேழும்
தட்டொரு பூமியேழும்
உலகினர் தலத்துமீன்ற
ஒருமயில் அண்டமொன்று
பலபல இதனைக்காண
பதினெண்ணாயிர மண்டமாகும் 494

அண்டமோ சாலமாகு
மாலமு மனைத்துங்கூடில்
யெண்டிசை புவனமென்று
யியம்பலா மிதுவின்னுமம்
கொண்டிடும் புவனமிருநூற்
றிருபத்திநாலுங்கூடில்
அண்டிசை வகுத்த ஆதி
யகிலாண்டமென் றுரைக்கலாமே 495

உரைத்தகி லாண்டங்கோடி
வோதிய பிரளயமொன்று
சிறந்திடும்பிரளய மொன்பது
கோடி செப்பலா மதில்லையென்று
இரைந்திடுங் கடல்நீர்துள்ளி
யியம்பலா மதில்லையென்று
மறைபுகழ் நபியுரைக்க
மன்னவ னேதுசொல்வான் 496

சொல்லுவா னபிநயினாரே
சோதியின் தூதேமெய்தான்
எல்லைசூ ழிறைபடைப்பு
யியம்பிய விதங்களெல்லாம்
வல்லவ னமைத்த இந்த
வையகந்தானோ யின்னஞ்
சொல்லவு மிதுக்கிணையா
சோதியின் தலமுமுண்டோ 497

இத்தல மண்டமொன்று
இயம்பியே பதினெண்ணாயிரம்
எத்திசை பலதுக்கெல்லா
மிறையவனொருவனாக
உம்மத்திங்கிருந்து
மகிழ்வொரு ஆலமெல்லாம்
உத்தமு மரையையு மற்ற
வுயிரிரு விதத்தைப்போல 498

இவ்வித மாலந்தன்னை
எவ்வித மமைத்தானப்போல்
ஒவ்விய ஆலமெல்லாம்
ஒன்றுக்கொன் றுயர்த்தியாக
செவ்விய படைப்பு ஆதம்
சில சில படைப்புயெல்லாம்
எவ்வித மமைத்தானிப்போல்
யாவுமே வனத்திலுண்டு 499

உண்டென ஆலமெல்லா
மொன்றுக் கொன்றுயர்த்தியாக
நன்றென ஆலமெல்லாம்
நவமணி சுடரொழிவா
தென்றனக் கிறையேயொன்று
திருமறை நபியே ஒன்று
என்றந்த ஆலமெல்லா
மிறைநபி யீதார் தேரீ 500

தேரிய மறைபி நல்லோன்
திருநபியொன்றேயாகும்
யேரிய ஆலமெல்லா
மிறையவ நபியிருந்து
ஆரிய விஷளமிங்கி
லனேகமு முரைப்பதைப்போல்
வாரிது ஆலமெல்லாம்
வகையிது நடக்குமென்றே 501

அன்று முன் னமைத்தானிந்த
ஆலமின் நபிஇறசூல்
என்றுமே அழிவில்லாதான்
யெங்குமே நிரையவைத்து
நன்றென இறையோன் றன்னை
நாடிய புகழ்ந்திருக்க
ஒன்றென ஆலமெல்லாம்
வொருகுடை ஆளவல்லோன் 502

வல்லவ னலமெல்லாம்
வகுத்தனன் விதத்தைப்போல
எல்லையி லாலமெல்லாம்
இயம்பிய வுயிர்களெல்லாஞ்
சொல்லிய கியாத்துல்கைபார்
சோதியின் கடலேவொன்று
பல்லூபி ரீனத்துங்கடல்நீர்
பாந்திருந்தது பிறக்குமுன்னே 503

பிறக்குமுன் னுலகுயிர்கள்
பொங்கியே வொளி திரண்டு
கரக்கும்பால் கியாத்துல்கைபார்
யென்றுமே கடல்நிரைந்த
சிறக்கும்வின் ணவர்மீக்காயில்
செங்கையா லளந்தநீரை
பறக்குவான் மேகமெல்லாம்
பரித்துடல் சூலுமாகி 504

சூலது நிரைந்து ஐந்து
மாதமுஞ் சுமந்து முத்தி
ஆலத்தி லபாவ னீன்ற
அளவிலா துருவில்லாமல்
பால்நிரம் பசுந்தநீரும்
பலபலத்துயிர்களெல்லாம்
வேலையின் கடல்மலையின்
விருக்ஷம்பூ டதனிற்பெய்யும் 505

பெய்ந்துநீ ரதுவிந்தாக
பெருங்கல்லும் வயிரமுத்தும்
உளந்திடும் புழுக்கள் பூண்டு
வொருநிலை விருக்ஷமைத்தார்
நத்துமுய்த்தி யெந்த
தானியங்காய்கனியும்
ஆய்ந்தது வுலகமெல்லாம்
அனேகமும் நிறையுமன்றே 506

நிரைந்திடும் புளூவையுண்டு
நிலத்தினில் வெகுபடைப்பு
பறந்திடும் பக்ஷிமற்ற
பாரினி லூர்வினங்கள்
சேர்ந்துடல் வுதிரவிந்தால்
சேர்ந்தது பரிபாரமாய்
பிறந்தது மிருகமெல்லா
புல்லொடு புனலையுண்டே 507

உண்டிடு மிருகந்தன்னை
வுலகினில் மிருகமுண்டு
விண்டிடுந் தடியவாய் வேங்கை
வெகுவுயிர் பரிபாரங்கள்
கண்டிடு மிருகமற்ற
கனிவகை தானியங்கள்
மண்டலத் தமுதமுண்டு
மனுவகை யனந்தங்கோடி 508

கோடியின் மனுவுமற்ற
கூறிய படைப்பதெல்லாம்
பாடிய கிபாத்துல் கைபார்
பருங்கடல் நின்றமேகம்
ஓடியே வுண்டுமெத்தி
வுலகினில் மழைவிழுந்து
ஆடியே படைப்பதெல்லா
மனைத்துமே முளைத்துண்டாச்சே 509

முளைத்திடு மதனையுண்ட
மோகமுந் தாகத்தாலும்
கிளைத்திடுந் தானியங்கள்
கீர்த்தியி னுலகந்தன்னில்
வளர்த்திடு முருகமற்ற
வாரியினூர் வினைகள்
இளைத்தவ ருண்டுபாரி
லிப்படி பரிபாரமே 510

பாரினில் ஆணும் பெண்ணும்
பாங்குடன் சேர்ந்திடாமல்
வாரியில் புழுவெடுத்து
வைத்ததை வுருச்சமைக்கும்
ஏரிய விருக்ஷம் பூண்டி
லிருப்பதை எடுத்துருவாம்
கூறிய வுலகமெல்லாங்
கொண்டஅ பரிபாரமாம் 511

பரிபாரம் புவிபல வுயிர்களெல்லாம்
பாங்காய் முளைப்பதும் பாரினாலே
அறிவாய் வுரைத்தி ருமையறிந்தோம்
ஆகிய தீன்குலத்தார்க்கு
கூரிவர மிருக மூர்வினம் பரவைகள்
கொள்வது தெக்கெது ஹறுமுஹலாலும்
நெரியாம்பொருளை நிகர்த்திடுமெனவே
நீதியின் தூதரு முரைப்பாராம் 512

உரைத்திடு னுலகினுள்ள
வுகந்திடு மிருகமற்ற
நிரைத்துமே நீரில் வாழும்
நிகரில்லா வூர்வினங்கள்
அகத்தினில் விருக்ஷம்பூண்டு
தரணியில் பறவை பக்ஷி
வுரைத்திடு மறையோன் வேதம்
வரைந்தது ஹலாலதாமே 513

ஆகிய இறையோன் வேத
மறிந்திடும் நபிமார் தன்னை
மேவியகலிமாச்சொல்லி
இதுகளுந் தீனிலாச்சு
ஓதிய கலிமாமுன்னே
வுகந்தது ஹலாலதாகும்
பாகிய கலிமாச்சொல்லாப்
படைப்பெல்லாம் ஹராமதாகும் 514

ஹராமொடு ஹலாலீதென்று
கருதுமுன் ஈமான்கொண்டு
தராதர மறியவென்ன
தரணியில் விதங்களென்று
பரிபுர புவியும்பூண்டும்
பயகரம்பரை பணிந்ததெல்லாம்
நிராகரஞ் செய்திடாது
நிலத்தினில் பசிதெளிக்கும் 515

பசித்தென்னை தெளிக்குமின்னும்
பலபல ரசனையுண்டாம்
கசியுருகுபிர் பூண்டெல்லாங்
கசப்பொடு கடுமை கொல்லும்
ஊசியா வுதகச்சொல்லி
உரைத்தனர் நபிகள்முன்னே
சீபத்தோன் றறியாப்பூண்டு
யார்க்கும் நஞ்சாகுந்தானே 516

தானிந்த விதங்களெல்லாந்
தம்பிரான் தூதேமெய்தான்
வானகம் பார்க்கும் பக்ஷி
வையகம் முறுகம் பூச்சி
தோணிய ஹராம் ஹலாலும்
தொகுத்ததை யறியச்சொல்வீர்
கோனுரை கேட்டுவள்ளல்
கொத்தவர்க்கேதுரைப்பார் 517

முதற் படலம் முற்றிற்று.

பிஸ்மில்லாஹிர்ரகுமானிர்ரஹீம்

# திருநெறி நீதம்

## இரண்டாவது படலம்

### 1-வது குக்கும்வகை

வள்ளலார் நபிமற்றோரும்
வரிசையாங் காபாமீதில்
வெள்ளிநாள் பகல்தொழுது
விரைவுடன் வெளியிலெஃகும்
பள்ளியில் வாசல்முன்னே
பாங்கியா தடம்போலப்பாக
ஒள்ளிய அடிதுடந்தோ
ரொருமிக்க நடந்ததன்றே 1

நடந்திடும் நபியுமற்ற
நாலியார் நாற்பத்திராயிரர்
துடந்திட நடந்தோர் நத்த
தோகையைத் தோன்றுமாகில்
நடந்திட மணம் பொருந்த
யனவருமனத்திலுன்னி
கடந்திடும் காதானேகிக்
கடற்கரைக்கருகிலானர் 2

அருகினில் தடமுந்தோன்ற
அப்புவி லாருங்காணா்
வருமுகம்மது நபியு
மருங்கினி லிருத்தி
தெரிவையின் மணமிணங்கத்
தேடியும் தெரிசித்தல்லோ
மரிய நினைவிலெல்லா
மன்னவரு முறையிரென்றார் 3

உரைத்தன ரபூபக்கரு
மருதுமா னலியாரும்
வரைந்திடுங் குளலிணங்க
வருந்திய மனந்தானென்ன
திரத்திடும் மீதோர்முன்னே
திவானெனு மொருவர் சொல்வார்
கரைத்திடாப்புவியின் வாழ்வைக்
கருத்தினில் கருதக்காணேன் 4

காணேனென் றுரைத்த போது
ஹபிபிரசூல் யார்மற்றும்
போனவானரும் மீழப்
புரிசையாங் கருபாமீதில்
வானகன் வேதமோதி
வகைபல தரிவுஞ்சொல்லி
யானதோர் கருமஞ்செய்வா
ரனைவர்க்கும் கருத்துமேதா 5

கருத்தினி னுலகவாழ்வைக்
காதலித்தறியான்தேவி
பருகக்கூத் தம்மாள் தன்னை
யழைத்து வள்ளலுன் வழமைவிள்ளும்
பொருத்தனு னுகையம் புவியின்
வாழ்வின் றதுவரியேமெனன்று
வருத்தமா யுரைக்கவள்ள
லவர்குமு நோக்கிச்சொல்வார் 6

சொல்லிய விதனத்தாழ
தனசுகம்பெற ஒருவர் தோன்றில்
எல்லையில் பிழைபொருத்து
யிறையருள் சுவர்க்கமீவான்
நல்லதென்றிரசூல் முன்னே
நகிமவ ருகையமென்ன
மெல்லிய தலாக்ஹில்லாமல்
மிகமண முடித்தார் வள்ளல் 7

வள்ளலா ரிரசூல்லா
ரவரிரு பேரைச்சேர்த்து
தெள்ளிய மறையோர்க்கெல்லாம்
திருநெறிநீதஞ்சொல்வார்
உள்ளமி னுலகத்தாசை
யுகந்திடான் சாகுக்கோான்
கள்ளனும் வணக்கமீமான்
கருத்தைவிட்டேகுமென்றார் 8

ஏகுமென் றிரசூல் சொல்ல
யார்களெல்லோரும் கூடி
யாகமே பொருத்த நீதி
யகமதே நபிக்கரசே
கோபமோ புரைத்தவென்சொல்
கொத்தவன் வழியின் வாரோ
மேகமே கவிகைவள்ள
லெங்களுக்குரையுமென்றார் 9

உரைத்திடு முலக வாள்
வின்னுகைய மொன்றறியானகில்
கரைத்திடுங்கூலி நினைவு
கலைநெறி நினைவைக்காணன்
விரைத்தொரு நெறியறியா
வெக்கமென் றிமானில்லை
தரத்திறை யருளிலான
தரணிவா வனைத்துந்தானே 10

தாணியை யமைத்த நாயன்
தாபரத்திருவுருவில்
கிரணியக்கலைகள் பூக்கும்
மெக்கீனதில் மயிலைப்பார்த்து
வரணியபூண்டவாசை
வணிகரு வணிந்ததண்ட
மரணியீ டாயிரந்தா
னடையொன்று கருமூன்றுமே 11

ஆகிய யண்டமெல்லா
மதுயது ஆலமொன்று
கூவிய மயிலை வல்லோன்
தொழுகையின் மகின்றதாலே
யாகிய மயிலினண்டம்
பதினெண்ணாயிர மாலமாகும்
பாவியா யழிந்திடாமல்
பல பல வுயிர்க்குமீந்தான் 12

பலவுயி ரமைக்குமுன்னே
பிதாவென உதித்தஆதம்
உலகவானம் பொருட்டா
லிந்த உலகெல்லா மிலங்கியோங்கும்
பலபல கலைகளாய்ந்து
பாக்கியம் பெருகவாழ்ந்து
உலகைவாழ்வு கையமில்லா
உம்மத்துக்கொதுக்கமென்றே 13

உம்மத்தாயிருக்கும் பேர்கள்
உலகைவாழ் வரிந்துமாத்தி
தர்மத்தை பொருந்தும் ஞானம்
தவத்தினி லிருப்பாராகில்
ரகிமத்துக்கிறையருளுங்
கிட்டிடும் பலனேயென்றும்
தர்மமுந் தரைச்சுகமுந்
தவிழ்ந்தவன் பாவியென்றே 14

# 2-வது

## ஹலால் சுரிகத்து வைக்கிற வகை

பாவியில் பெரிய பாவி
பாரினி லிறந்திட்டாலும்
மேவிய குலமில்லாதான்
மிவன்பிழை பொருக்கானென்று
கூறிய குரானைப்பாருங்
குறிப்புட னஞ்ச மூசாவென்ற
மேவிய கித்தாப்பைப்பாரு
மிவன்பெரும்பாவிதானே 15

பாவியை மீள்க்கவள்ளல்
பயகாம்பர்தன் மருகாலி
மேவிய யிரசூல்முன்னே
மெத்தவும் பணிந்து சொல்வார்
பூவியே உலகிலுள்ளசை
பொங்குவாருதியை மாற்றும்
தேவியை யிணங்க வல்லோன்
திருநெறி யறியச்சொல்லும் 16

சொல்லிய உலகி லாதஞ்
சுகம்பெற வாழ்ந்திருந்தார்
மெல்லிய ரொன்றே யல்லால்
மேதிமா ரதிகமில்லை
எல்லைவா முலகமெல்லா
மிறையவன் வழமையாக
வல்லிய ராளர்க்கொன்று
வகுத்தன னீதந்தானே 17

நீதமா யிபுராகீம் முன்னாள்
ணிறைகலா லணியரெண்டு
வாக்குடன் நபியைக்கூவி
வணியும் ரெண்டாம்பையென்ன
வேதக னிபுராகீமும்
விதமென விளங்க யெங்கு
வீதமா உலகமைத்தோன்
விரித்தவாக் குரைக்கதப்பா 18

உரைத்திடு முலகுயிர்கள்
ஒருமுகத் திருவிழியாய்ப்
பாத்திமை யொழிவை னோக்கப்
பகுர்திரு விழியால் காண
தாத்தினி லமைத்தேனும்மை
தமக்கிரு விழியால்காண
பாத்தினிலிருந்து வாழும்
பாங்கிரெண்டுமக்கு வேண்டும் 19

வேணுமென் றிறையோன் சொன்ன
விதிப்படி ரவர்முடித்தார்
பூணிய நபியார்க்கும்
பூவைரெண்டணியும் நாளில்
ஆணிய நபியை வல்லோன்
பணியுமூன் றம்பையென்ன
தோணிட வுரையாயென்னத்
தொகுத்தவாக் குரைத்ததய்யா 20

உரைத்திடு முமதுபங்கி
லுலகவாழ் மடந்தைரெண்டில்
தரித்திடு மருளுமில்லை
தானவ னீன்றபாலா
வரத்தினில் நபியுமாகார்
வகையதா லுமக்கு மூன்று
விரைத்திடுங் குளலாரென்ற
விதிப்படியவர்முடித்தார் 21

முடித்திடும் நபியுமூன்று
முலைகவாழ் மடந்தைசொந்த
படிப்படி வெகுமேபிரிந்தப்
பாதைபாத்தறிந்து யானும்
வடித்திடு மனையாள் மூன்று
வைத்துநானிருக்கும்போது
துடித்திட வுலகினுளு
தோகையருமக்கே யென்றான் 22

மூன்னுள்ள நபிகள் வேத
மூன்றல்லா லதிகமில்லை
இன்னுள்ள நபியுமக்கா
யொக்கிய நாலாம்வேத
மன்னுள்ள நபிகள் சுவர்க்கத்
தவர் கலால் மூன்முஞ்சூழ
யென்னுள்ள நபியே நீரு
மிருப்பதோ எவரும்போல 23

எவர்தமக் கதிகமாக
யெனதுயிர்த் தோழனுக
அவரவ ருமக்கதாக
அமைத்தன னுலகமாக
இவர்கலை பெரிதா மென்ன
யாவரு முஹப்பத்தாலே
நல்குல நபிவிளங்க
நானுபேர் ஹலாலதாமே 24

நால்மறை சபகுநாலு
நாவிமாம் நாலுபீர்கள்
மேலின்னம் பலவிதங்கள்
ளெடுப்பவரு மதும்மத்து
நூல்முறை வழிகள் நாலா
னுன்னிடை நால்வரிய
ஆலமு மமைத்தவல்லோன
னவர்க்கும் ஹலாலே சொன்னான் 25

சொல்லிய ஹலாலுநாவில்ச்
சுகம்பெற வாழும்பேர்கள்
மெல்லியர் தனைவைத்தாள
மிகவலுத்தனம் பொருந்தில்
வல்லியைக் கிரையம் வேண்டில்
வைப்பது சுரிகத்தாக
நல்லதென் றிறையோன்சொன்னன்
நபிகளும் நடந்தவாறே 26

நபிகளி லொருவரான
நவமணி சுலையுமானர்
புவிதனி லொருஹலாலைப்
போதவைத்திருக்கும்நாளில்
செவிவிழிக்கிணைந்தபேரை
செம்பொன்னீந்தவரைவேண்டி
எவ்விதத் துலகவாழ்வுக்
கேற்பது சுரிகத்தாமோ 27

ஆகிய ஹலாலு ஞவி
லிறையருள்ப்படியமைத்தான் வல்லோன்
நேகிய சுரிகத்தென்பா
லியம்பின னெண்ணஞ்சென்று
மோகிய முடைய வல்லோன்
முடிப்பது ஹலாலுநாலு
போகிய சுரிகத்தோரு
னாருயிர முகையந்தானே 28

உகையமென் றுரைத்ததெல்லாம்
வோதிய குரானைப்பாரும்
யிமையவ ருரைக்கவள்ள
லியம்பவு முலமாவெல்லாஞ்
சமையுரு கஞ்சில்லாரிபீ
னென்று சாத்தின ரொருகிதாபில்
தகமையும் பெருமை யோங்கும்
தலிலொரு முரையில்தானே 29

தானவன் வேதந்தன்னில்
தலிவொரு முறையைக்கேளும்
ஊனமொன் றணுகா
சாகிலுள்ள வருலகவாழ்வை
வேண்டுமென் றுகந்தறிந்து
வெருத்ததை தவுள்க்கனுடில்
மானிலத் திறையின் வேசம்
பஃறிகிரொரு பாங்கேகத்தி 30

நத்திரை வுலகமைத்தோன்
நாயனோர் பஃறிகிருகும்
குத்தமொன் றணுகா நந்த
தூதர் குரு நபிமுஹம்மதென்னும்
எத்திமாம் பஃறிகிருகும்
யெல்லவர் தனையுமீன்ற
முத்தொழி விலங்குமாத
முறையுடன் பஃறிகிராமே 31

ஆகிய அலியுல்லாவு
மவரொரு பஃறிகிராகும்
ஏகிய பஃறிகிர்நாலாம்
யியம்பினுல் பஃறிகிரென்றும்
கூவிட எழுத்து நாலாங்
குரித்திடு மெழுத்துக்கொன்று
மேவிய வறிவுமொன்று
இயம்புவேன் கேளுமையா 32

இயம்பிய பஃறிகிரென்னி
விருக்கும்பே முதலெழுத்து
வியம்பொருபுவி நினைவை
வெருத்தபேர்பஃறிகிராகத்
துயம்பெற விருபதாகும்
தொகுத்தஹாபுதனறிவு
நயம்பெற யிறைகொடுக்க
நல்லுண வருந்த வேண்டும் 33

அறிந்துவ தறிவு முன்றை
அறிவது யே யெழுத்து
திருந்தவும் னினைவு மூச்சி
விறைதனைப் பிசகொண்ணாது
நிரைந்த ரே அரிவா லறி
நிகரில்லான் செய்தமெதல்லாம்
பொருந்திய பொருமையுள்ளான்
புகழ்ச்சியில் பஃறகீராமே 34

பஃறகீரென்னும் பதவியுள்ளம்
பாத்திப ரெவர்களென்னில்
ஹக்கிகத்தி விறையைக்காணும்
கண்ணுடியாஞ் சரிஹத்தென்னும்
எக்கினில் தரிபாடாக
இயம்பிய இசுலாமாறும்
தக்குவா நிலைசரகை
யாருஞ்சநுகியே யிருக்கொண்ணாதே 35

சரகினி லெழுகலிமா
சலாத்தென்னும் தொழுகைநோம்புந்
திரவியஞ் சதக்கா ஹச்சுந்
தீனிசுலாம் வகையாரும்
புரவியின் நடனம் வேணும்
போதில்லா நினைவை யின்னு
ரிலவர விய்யி தினம்
பொருளின் வகைதன்னையறியலாகும் 36

அறிவது கலிமா தன்னில்
தவரிடாக்கலிமாவுண்டு
முரிந்திடா ஒதுத்தொழுகை
முகிந்திடா விதமுமின்ன
சிரந்தொழி யாதனோம்பு
செம்மயி லொழியாஹச்சு
சிறந்திடும் துலையா சக்காத்தும்
செம்மயிலறியவேணும் 37

வேண்டிய நினைவையெல்லாம்
வெருத்திறை ஒருவனென்று
ஊண்டிய கமலத்துள்ளே
ஒளியுள்ளே விழிநடுவே
யீண்டிய கருத்தைக்கண்டா
லிருவிளி சிமுளவல்லோன்
பூண்டதோர் கலிமாதன்னில்
பொருள்தவராக்கலிமா 38

கலியென்ற தீங்கையோங்கும்
கசடொரு விலகலெல்லாம்
துலைத்தொரு யேவல்செய்யுந்
துதிப்பினி லிருப்பாராகில்
விலைபெருத் தெழுந்த முத்தா
முறிந்திடா ஒலுவுமாகும்
நிலைத்திறை பரத்தைச்சாட்டி
னினைவெல்லா மறிந்தால் மூச்சு 39

மூச்சினி லிறையொழியா
முகிந்திடாத்தொழுகையாகும்
பேச்சினில் பலதீங்காலும்
பெருமைபொய் ஹறும்பகிலும்
ஏச்சொரு பொய்யுரை
யாத்தினைந்திடா ஹாரமருந்தால்
சூட்சமா விலக்கனேம்பு
செம்மலி லொழிந்திடாதே 40

ஒழிந்திடா ஹவாநபுஷை
ஓர்மையாய் வெருத்திருக்கில்
அழிந்திடா திறைகொடுத்தா
லசனமென் றருந்தவல்லோன்
ஒழிந்துல கதைவெருத்தா
லோய்ந்திடா தவனுங்கச்சு
தெழிந்துட லழுக்கை நீக்க
ஷஹாதத்துக் குறைந்திடாதே 41

தேசமில் விதங்களாருஞ்
சேர்ந்திடில் தவசியாகும்
நேசமாஞ் சரிகத்தான
னிலமை யொன் றிசுலாமாரும்
தேசமில் விலக்கிவைக்க
திரவியன் றனக்குமின்னம்
ஓசையா மிசுலாமாகும்
உட்பொருளாறுமொன்று 42

ஆறொரு மீமா னுறு
மகத்தி னிசுலாமாருந்
தேரவே பொருந்தவல்லோன்
தீனெறி குருவாமின்னங்
கூறிய விதத்தானிந்தக்
குவலய வாழ்வு தாழ்வான்
மீறிய விதம்பொருந்தி
உலகவாழ் விணங்கநாடில் 43

நாடவு முலக வாழ்வு
நபிகளும் நடந்ததாகும்
தேடிய சபாயத் தீமான்
தீதாரும் பொருந்து மின்னம்
பாடிய பளமையல்ல
பயகாம்பரு முரைத்ததாகும்
நாடிய கலால் சுரிகத்தும்
நடந்திட வுகையமாகும் 44

---

* சுரிகத்துவைக்கிறது. பு[illegible]க்கான்மே[illegible]ப்படி அரபி தேசத்தாருக்கேஅன்றி, மற்றவர்க்காகாதென்று கன்ஸுலாரிபீன். முஹிமாதியாமத்து நாமா வென்னும் கிதாப்புகளில் அறியவருகிறது.

# 3-வது

## ஹாராமான ஸ்திரீயை அறியும் வகை.

ஆகுமென் றிசூல் சொல்ல
அபுபக்கரெழுந்து போற்றி
மேகமென் குழலதான
மெல்லியா மணமிணங்க
ஏகுமி தேகா தென்ற
யேந்திளைமார்கள் தன்னில்
பாகுமின் பலவிதமும்
பாங்குட னுரையுமென்றார் 45

பாங்குடன் பெற்றதாயும்
பாரினிலவளைப்பெற்றாள்
ஓங்கிய மாதாகூட
வுடப்பிறந்திருந்தார் யாரும்
தீங்கில்லா தகப்பன் தாயும்
தேன்மொழி வயிற்றினளும்
பூங்குழ லுடப்பிறந்தாள்
புவிதனிலவர்க ளீன்றோர் 46

ஈந்தமி தா ரவன்குமாரி
யேந்திளை பிரம்பீன்றாலுந்
தோன்றலுந் தோகையாரும்
தூர்வா தனக்கீன்றாலுங்
கானர்கன் தமையன் தம்பி
கன்னியை யீன்றதாலும்
பூண்டவள் தேவியாரேப்
புவிதனிலீன்ற பேரும் 47

என்திந்த யீராருள்ள
யேந்திளை மார்களெல்லாஞ்
சென்றிட மணமாமென்று
செப்பவும் பெருங்ஹறுமாம்
மிண்டிந்த விதமறியா
இவர்தனை மணமுடித்தால்
ஒன்றடி தனைவிலக்க
வுடையவன் சொன்ஞரென்ருர் 48

சொல்லிய விதமுடைய
சொந்த இம்மடந்தை தன்னை
எல்லையில் ஹலாலாமென்று
எவர்களு மணமிணங்கில்
மெல்லியர் தலாக்குமில்லை
யிவர்க்கொரு மஹருமில்லை
நல்லநூரடியாந் தெண்டம்
நகரை விட்டகலவேணும் 49

வேணுமக்காளர் தன்மேல்
விளைப்பது மடியும் நூறு
தோணிய நகரைவிட்டுத்
துலையெழுகாத மட்டும்
பூணிய மாதம் நாலும்
போகவிட்டழைக்கலாகும்
வீணெனும் விதமறியா
விளைத்திடும் ஹாவிஹத்திபு 50

ஹாவிகள்ஹத்திபாக
கருமத்துக் குகந்தோரெல்லாம்
தோணிய பாவமீதில்
தொழுதவர் தௌபாச்செய்து
ஏணியி லருசுக்கேரும்
இறைநபி இருவர்க்கென்று
ஆணிய நோம்பவர்க்கு
அறுபது நோம்புமுண்டே 51

அருபது நோம்புவைத்து
அவர்மனைக்கிணங்க வென்று
அறுபதுக்காண்மையில்லா
னுறுநோம்பவன் தன்மேலே
பெருங்கடன் தலைக்காவாழ்ந்து
பெத்திடும் புதல்வர்க்கெல்லாம்
பரிந்தவன் முத்துமில்லைப்
பாலரும் ஹராமதாமே 52

ஹராமதே ஹலாலென் றெண்ணும்
காளையாக் கன்னிதன்னை
பருமதித்தடித்து நூறு
பாரைவிட் டகன்றபேர்கள்
தருதா மறியமுன்னே
தானவ னீன்ற பாலர்
பருயம தறியமட்டும்
பருங்குபிர் யென்னலாமே 53

குபிர்நிலைப் பிறந்தபாலர்
குருநெறிபாலக்காகி
ஹபீபிர சூல்தீன் கத்து
கருத்தது தெளிந்துதென்றால்
நபிகளைப் படைத்த வல்லோன்
நால்மறை நெறியதாகும்
புவியினில் பாலனெங்கில்
புகழ்நெறி விலக்கவேணும் 54

வேணுமென் றிவனையீன்றோன்
வெகுமுத லவனுக்கில்லை
தோணுமுன் மறித்திட்டாலும்
தொழுதகை மடக்கொண்ணாது
ஊணிய பதியை விட்டு
ஒதுக்கமா யடக்கவேணும்
ஆணிய வேதம் ஓதி
அஹம்மதா ரிரசூல்சொன்னார் 55

# 4-வது

# இவ்விதத்துடைய பேர்களும் ஹறாத்துக்கு சமதையாகும்.

சொன்னதோர் நபியைப்பார்த்து
சோதிமா மலரைப்போற்றி
அன்னவர் நபியெல்லோர்க்கு
மாசனு மதினு வேந்தே
இன்னித மடவார்மட்டோ
இன்னமும் பலதுமுண்டோ
விண்ணெலாம் படைத்தோன் தூதர்
விரித்துரைத்தா ரனைவருக்கும் 56

பேருடன் மங்கை யாளே
பெத்தவ ளுடப்பிறந்தாள்
சீருடன் மங்கைவாழ
சிறந்திடப்பிறந்த மாது
பாரினில் பிதாவும் முன்பின்
பரத்தினில் வாழ்ந்தபேரும்
ஊரினி லிவர்கள் யார்க்கும்
ஒன்றேடி ஈன்றதாலும் 57

ஈன்றவள் தனையே அல்லால்
லெடுத்தவன் வளத்ததாயும்
ஊன்றிய முலையளித்தாள்
உணவொடு முலையுண்டாலும்
என்றுதீன் வருத்திவைத்தா
லியம்பிய வுபதேசத்தாள்
மண்டலத்திசையில் காணு
மற்றவன் தேவியாரும் 58

தேவியர் புருஷர் வாழ்ந்து
தலாக்கில்லா திருக்கும்பேரும்
காவியே பலர்க்கடிமை
கயவிலேப்பாரிதானும்
வாலிபம் தீனிழந்தாள்
வயிற்றினில் சூல் சுமந்தாள்
மேவிய நகரின் வேசை
மிகுந்தொரு கொலை செய்தாலும் 59

செய்வகை பதினேழுள்ள
செயலெல்லாம் ஹராமதாகும்
வையகத்தறிந்தா னில்லை
அவர்க்கொரு தெண்டமில்லை
மெய்வகை அறிந்தபோது
மிகுத்தது பெரும் ஹராமாம்
கையினில் கசையெடுத்து
கடுக எண்பதடி யடித்து 60

அடித்து நோம்பா ரேழாகும்
அதுதனக் காண்மையில்லால்
தொகுத்தடி யேழுநோம்பு
னுலைப்பது இருவர்க்கென்று
விடித்திடும் தலாக்குமில்லை
இவர்க்கொரு மஹருமில்லை
படித்தவர் தௌபாச்செய்து
பாங்குடன் தொழுகலாமே 61

தொழுதவர் தௌபாச்செய்ய
தோகையுமாளனுர்க்கும்
தெளிவொரு மணமுஞ்செய்ய
சேர்ந்தவ ரனைவர்க்கெல்லாம்
நளினமா தொழுது தௌபா
நால்வரு கசனமீந்து
பரிபுழை தெழிக்கவென்று
பயகாம்பரு முரைத்ததன்றே 62

# 5-வது

## ஹராத்துக்குச்சமதை பாதி.

உரைப்பது ஹராத்தில் பாதி
ஒழுங்குக ளுரைக்கக்கேளும்
நிரப்பிய தனமீந்தோறும்
நீழ்பிணி துலைத்தமாதும்
மரப்பினில் மருத்துவத்தாள்
மயங்கிய பயம் தெளிந்தாள்
வெருப்பினி லுணவீன்றாலும்
வெண்சம ரிறந்தான் தேவி 63

தேவியின் விதங்களாறும்
செப்பவும் ஹறாத்தில்பாதி
கூன்குரு டூமை குட்டம்
குதிரையின் வலிவெரியும்
மாண்கலை பொருந்திரோம
அரம்பையும் நரையுமத்தாள்
பாங்கில்முன் வாழ்ந்திருந்து
பருமல டிரிசியென்றில் 64

என்றுமே ஈரெட்டுள்ள
யேந்திழைமார்களெல்லாம்
பண்டுள்ள பெரும் ஹராத்தில்
பாதியிற் பாதியாகும்
அன்றுமுன் னறிந்தானில்லை
அறிந்திட ஹராமதென்று
வின்றிடத்தவர்க்கு மூன்று
மிவள்கட னிலொன்றே 65

ஒன்றெனு பெரும் ஹறாமும்
உரைப்பது பாதிதானும்
என்றுள்ள ஹறாமதுக்குள்
பாதியில் பாதிதானும்
வின்றிட குறானும் ஹன்சில்
விளம்பிய ஆரிபீனில்
பண்டுள்ள விதமறிந்து
பாரினி லறிந்துசெய்யும் 66

## 6-வது

## மக்கூரான ஸ்திரீயை அறிய

---

செய்திடா விதமிதான
செப்பிய பெரும் ஹறாமும்
வையகம் புரிந்து வாழும்
வகை பல சிறுஹறாமும்
மெய்யதா உரைத்தீ ரின்னம்
மேதிமார் மக்ரூஹ் மென்ன
துய்யவன் தூதே சொல்வீர்
தொகுத்திற ஞுலுரைப்பார் 67

உரைத்திடு முலகமாதா
உடலினில் கலைகள் சோர்ந்தாள்
பெருத்திடும் குடி களவு
பெருவய ரிடைபெருத்தாள்
பருத்தவா படரும்பொய்யும்
பாலனே பதமை செய்யா
ளருத்திய ஆடைதன்னை
அவிழ்த்தவிழ் உதிரினளே 68

உதரிய மொழியின்ளும்
ஒழுங்கில்லா உதாசனத்தாள்
பதரிய நெடுஞ்சொல் மற்ற
பயங்கர மனதிலில்லாள்
அதிபடி நடையுடையா
அடுத்த வீட்டகலச்சென்றாள்
பதிகுலம் தாழ்ந்த மின்னாள்
பகலிரா உறங்கினளே 69

உறங்கிய பதமையற்ற
ஒருமதி தயவுமில்லா
ஏிரங்கிய களரிசென்று
எதுச்செட்டு கூறினளும்
திறங்கொள்ளும் கடைக்கண் பார்வை
தீயெரிந் திடும் விழியாள்
கரங்கில்லாக் கழுத்துங் கண்ணும்
கண்டிடும் உறுப்பில் வின்னம் 70

வின்னமாம் பாவையாரும்
வேந்தனுக் குயந்து சொல்லில்
பன்னிய பிருபதமும்
படம் விரித்துடித்தகாலாள்
எண்ணிய புருஷர் முன்னே
ஏந்திளா அசனமுண்டாள்
இன்னம் தெண்டனைக்கிசையா
ஏந்திளே மார்கள்தாமே 71

தனிமயிர் சிவந்த சென்னி
தனங்கருத் தரியாகன்னி
இனிஇவள் ஸ்தனத்தைக்காட்டி
வெடிசிரிப் புரைக்கும்பேரும்
குனிந்திவள் உடல் குலுங்க
குதித்திடும் நடையின்ளும்
மானிபம் ஒருவரீய
அதுக்குமுன் னெடுத்தபேரும் 72

பேருரை நாமமென்ற
பெருங்கலிமா உரையாள்
வாரிநீலக்குழந்தையான
வல்லிமா ருவயமில்லாள்
கூறிய தீன்வழியின்
குன்னெறி அறியாளான
நாரியர் நாலுபத்து
நானிலத்ததிகம் நாலே 73

ஆகிய ஆரேழு ரெண்டு
அம்பைமார் மக்ளாகும்
பதிதனில் குலமுயந்தான்
பாங்கனுக்குவயமில்லை
விதிதனி லிவர்கள் தன்னால்
விளைந்திடும் லானத்தென்று
துதிசெய்யும் உலகோ ரிவ்வார்
தோகையை அறியவேணும் 74

அறிந்திருந்தெடுத்த பேர்கள்
அசாசிலின் கூட்டமாகும்
அறியமுன் னெடுத்துப்பின்னே
அறிந்து பார்த்திருப்பானாகில்
மருவிய குழலினாளும்
வருத்தவும் விளைந்தாளில்லை
அறிந்திடத் தெரியச்சொல்லி
அடிப்பது நூல்தானாலே 75

நூலடிக் கிணைந்தில்லாத
நுண்ணிடை மார் முக்காலும்
தோலடி கணைந்தில்லாளை
துலைப்பது அவள்கடனில்
காலது குறைத்து முக்கால்
காரியர்க்கீய்ந்து தள்ள
மேலவன் வேதமோதி
இதை இரசூலுஞ்சொன்னார் 76

சொல்லுவார் குரானில் பின்னே
சோதித்தால் தெரியுமின்னம்
எல்லையி லுலமா வெல்லாம்
எடுத்தனர் தக்காயிக்கென்ற
வல்லமை பெருங்கிதாபில்
வரைந்தனர் அறிந்துபாரும்
நல்லவர் பெரியோரெல்லாம்
நடக்கவும் அறியச்சொன்னேன் 77

# 7-வது

## ஹலாலான ஸ்திரியை அறியும் வகை

---

சொன்னது உண்மையென்று
சோதிதன் மாமறுனை
மன்னவரும் ரெழுந்து
மலரடி வணங்கிப்போற்றி
இன்னவார் ஹறாம் மக்கூரும்
எங்களுக்கறியலாச்சு
எண்ணிய ஹலால் தான்
எந்திரைமார்களாமோ 78

ஆரென உமறுகேட்க
அஹம்மதா ரருளிச்செய்தார்
பாரெல்லாம் படைத்தோன் தீனை
படித்திடும் பாங்கியாக
காரிகை கருங்கொடிபோல
கண்முளித்துரங்கும்போரா
நாரியர் தலையுதாழ்ந்த
கானிலப்பார்வையாமே 79

பாரினி லவளைப்பெற்ற
பாக்கியர் வயிற்றினேரும்
ஊரினில் பாலர் நால்வர்
உடப்பிறந் திருக்கும்போக
பேரினிலிருவர் நாமம்
பேதக புணக்கமில்லா
வாரினில் குலமுயர்ந்தவர்கள்
பெற்றிடவும்வேணும் 80

வேண்டிய மானமுள்ளாள்
வெக்கமும் ஈமானுள்ளாள்
காண்டிதன் பருவமீரீ
கன்னிதா னிமைந்தமாது
தோன்றிய வாய்மொழியும்
துலங்குமங்களமதாக
தாண்டிய அறிவு சொல்லும்
தோகை மந்திரி மதியாள் 81

மதிமுகம் அரம்பை ரூபம்
வளமுடி கருங்குழலீர்
விதியிது ஈராறுள்ள
விதித்துள்ள மங்கையாரைப்
பதிதனில் மணமிணங்க
படைத்தவன் ஹலாலாமென்றான்
துதிசெய்யு மறியோர்க்கெல்லாம்
தோகையின் வளமைதானே 82

வழமையும் விதங்களெல்லாம்
வரைந்தனர் லெக்குவா வென்னும்
பழமையென்றொரு கிதாபை
பாரும் நீர்சரியதாக
எழுமையும் பெருமை மற்ற
ஏந்திழை வளமையெல்லாம்
ஒழுங்கெல்லா மறியவென்று
உலகுரு உரைத்தவாசே 83

# 8-வது

## ஸ்திரி ஜாதிகள் 40-க்கு ஹலாலாம்.

வாரிச சூலுரைக்க
வாழ்த்தியே உமருகர்த்தா
கூறிய குழலியார்கள்
கொண்டவன் தனையகன்று
தேரியே யிருந்துவாழத்
தீனெறி நீதம் தன்னில்
நாரி இத்தனைபேர்க்கென்று
நானிலதுகையுமாகும் 84

ஆகுமென் றுமருகேட்க
அஹம்மத ரருளிச்செய்தார்
பாவையர் வாழ்ந்திருந்து
பாரினில் புருஷன் மாண்ட
தோகையர் சுவர்க்கமீதில்
தொடுப்பனர் தனக்கேயாகும்
மாசைபின் வாழ்தால் அந்த
மருபையில் இணங்கிடாரே 85

இணங்கிவாழ்ந் திருக்கும்நாளில்
ஏந்திழை தலாக்கு பெற்றால்
குணங்கியே இறந்தாலந்த
கோதைமா றுகிரத்தில்
கணங்கொள்ளும் கன்னியில்லா
காளைமார் இறந்தார்க்காகும்
சனந்திறை வாழ்ந்தாலங்கில்
சாகுவான் தேவியாமே 86

தேவியா புருஷர் மாண்டால்
தேன்மொழி தலாக்குபெற்றால்
பூவியா ருலகில்வாழ்க
புருஷரும் எண்ணஞ்சாகும்
மேவிய விதமேதென்று
விதுக்குமுன் நபியாக்கூபு
தாவியே மிசிரிலாள
தனையிறை வகுத்தபோது 87

போதவு மொழியிலங்கும்
பொற்கொடி சுலையுகாளே
மாதயை மஹறிபாழும்
மன்னவ னீந்தபின்பு
காதலன் மிசிரிலாளும்
காப நக்காசன் கொண்ட
பேதையை இணங்கிடாமல்
பிரபல னிறந்துபோனன் 88

போனபின் னிறைநபியே
பூவையப்பொருந்தாயென்ன
நாணியே நபிசூப்பு
நாயனைத் தொழுதிருந்து
ஆணிய ரெனக்கு மூப்பு
அரசிடம் வாழ்ந்திருந்தார்
பூணிய வகைக்குமென்னப்
பொருளென கேட்கும்போது 89

கேட்டவர்க் கிறையோன் சொல்வான்
கிளிமொழி தொழுதுநோம்பு
நாட்டமு மிறையைநாடி
நாற்பது நாளுமட்டும்
வீட்டறை பொதுப்பில் இத்தா
இவர்களு மிருக்கவென்றான்
தேட்டமு நபிஇணங்க
தேன்மொழி இருந்தவாறே 90

இருந்தவர் இறையை நாடி
இரவெல்லாம் வணங்கிடாமல்
பொருந்தவும் நபிதன்மேலே
பிரியமா யிருந்ததாலே
சிறந்தவர் துயிலும்போது
சேரவும் நபியைக்கண்டார்
தெரிந்தவர் விழித்துப்பார்த்து
தேன்மொழி முழுகினரே 91

முழுகியே தொழுதிருந்தார்
மோகமும் நபியை நாடி
எழுதிய கெடுவதாக
எண்ணஞ்சு நாளுந்தானே
தழுவிய நபியிருக்க
தையலார் கண்டதாலே
தொழுதவர் விடிந்துநித்தம்
பொற்கொடி முழுகினரே 92

நாரியர் கெடுவதான
நாற்பது நாளுஞ்சென்று
வீரிய நபிக்குமிந்த
விரும்பிய மடவாள்தன்னை
கூறிய மணமுடிக்க
கொத்தவ னுகையமாகி
ஆறிய உலகமைத்த
ஆதியுமவர்க்குச்சொன்னன் 93

சொன்னனீர் நபியே இந்த
சொந்த இம்மடந்தையே
யெண்டின்னவாறுமை
இணங்கி யிருந்ததும் எண்ணஞ்சாகும்
நன்னில உலகமாதா
நாற்பதுபேரிணங்க
முன்னமே லெவ்கில் செய்தேன்
யென்றனன் இறையோன்றனே 94

தானிந்த நபியே அந்த
தையலரிணங்கக்கண்டு
நாணவும் நாளுக்குநாள்
பொற்கொடி முதுமை போகி
ஏணிய ஈரெட்டாண்டி
லிலங்கிய அழகதாக
தோணிய நபிக்குமந்த
தோகையை மணமுடித்தார் 95

தானிந்த விதத்தை யல்லால்
தையலர் காசீம்பீவி
பானிலம் புகழும்பீவி
பாத்துமாநாச்சியாரும்
காணிப்பொன் தங்கத்தா
லாதிதன் திருக்கையாலே
ஆணிய பணிசமைத்து
உலகினிலவர்க்கு மீந்தான் 96

ஈந்திடும் பணியதன்னை
ஏந்தலுமெடுத்தணிந்து
வாழ்ந்தவ ரிருக்கும்நாளில்
அதுதெரித் திடத்தில் வீழ
தாவந்த தவர்கள்தேட
அனேகநா ளகப்படாமல்
ஏந்லு மீன்வயிற்றி
லிருந்தவ ரெடுத்தணைந்தார் 97

அணைந்தவ ரிருக்குநாளில்
ஆதியில் ஜிபுரில்வந்து
மணந்திரள் குழலார் விட்ட
மணியைப்பின் னணிந்ததாலே
உணந்த ரும்மத்தோர்க்கு
உலகினி லெண்ணஞ்சாள
திணநக வெருத்திருந்தீர்
அதனை இறை இறக்கச்சொன்னான் 98

சொல்லிய விண்ணோர்போக
சோதித்துப்பார்க்கும்போது
வல்லியர் காஜிம்பீவி
வணைந்த ரிருக்கக்கண்டேன்
எல்லையி லுமதும்மத்தோர்
ஏந்திழை எண்ணஞ்சாழா
வல்லவன் ஜிபுரில் சொன்ன
என் வசனமு மவர்க்குரைத்தேன் 99

உரைத்திடும் மொழியைக்கேட்டு
உடையவன் தனைநினைந்து
கரைத்தவ ருருகியேங்கி
கத்தனைத்தொழுதழுதார்
நிரைந்தவ ரழுதிட்டாலும்
இறையுரைக் கிருவாக்குண்டோ
திரத்திடும் வழியாமென்று
தீனவர்க்கிறை வகுத்தான் 100

வகுத்தவ னிறையோன் சொன்ன
அதின்படி வங்கமேறி
தொகுத்தவன் குபிரை சர்க்கூன்
துலைத்தவன் தீனிலாக
மிகுத்தவர் படையில்மாழும்
இருபத்தை யாயிரம்பேர்
மகுத்தவர் தனையடக்கி
மக்கமா னகரிலானோம் 101

மக்கமா நகரில் வாழும்
மாதருக்காளாமாள
ஹக்கனு னவன்படிக்கு
கன்னிய ரழுகக்கண்டேன்
ஒக்கவே நகரமெல்லாம்
ஒருமிக்க அழுகும்போது
தக்கவன் ஒஹியும் கொண்டு
தலைத்தினில் ஜிபுரில்வந்தார் 102

வந்தவ ரிறையோன் சொன்னான்
வாழ்ந்தவர் புருஷர்க்காக
நொந்தவர் அழுவொண்ணாது
னுண்ணிடை மார்களின்னம்
எந்தவா ரவாளே் வென்று
இதுக்கிறை உபயமானான்
அந்திரத்திமையோர் சொன்னா'
ரனைவரு மறியவென்று 103

அறிந்திடும் விதங்களெல்லாம்
ஆலமில் லருவாகென்றும்
பொருந்திய நாமமுள்ள
புஸ்தகத்தொரு கிதாப்பில்
வரைந்தன ருலமாவெல்லாம்
வையகமறியவென்று
தெரிந்தவ ரறியவள்ளல்
திருநெரி நீதர்சொன்னார் 104

## 9-வது

## இவ்வித புருஷஸ்திரிகளுக்கு ஹறாமாகும்.

சொன்னது நபியேபுண்மை
சுகம்பெரும் உலகமாத
ரின்னுவாழ்ந் திருப்பதென்றாலே
தையல ரிணங்கத்தக்க
மன்னவா வர்களின்ன
மங்கையர்க்கோரு.
கன்னியர் தவிள் ஹறூமும்
கடுமக்கூர் ஹலாலதாரு 105

ஆறென உமருகேட்க
அஹமத ருளிச்செய்தார்
பாரினி லவளைப்பெற்றேன்
பாட்டனும் பாலன் றானும்
வாரினில் சகோதரங்க
ளவர்வயிற்றுதித்த பாலர்
சீருடன் தாயைப்பெற்றேன்
செம்மல நீன்றகாளை 106

காளையர் புருஷன் மக்கள்
காவலன் புருஷன் தகப்பன்
மீளவும் தாயைக்கொன்ற
வன்வயிற்றுதித்த பாலன்
பாளையா சிறுதகப்பன்
பன்னிரெண்டுபேர்களுமாம்
ஆளென ரிணங்கொண்ணுத
ரவர்களை விலக்கவேணும் 107

விலகுத லறிந்திடாமல்
விரும்பியே மணமுடித்தா
னுலகினி லவருக்கெல்லா
முரைத்திடுந்தெண்டங்கேளீர்
விலகிய தலாக்குமில்லை
யவர்க்கொரு மகருமில்லை
கலைகளி லவர்க்கு நூறு
கத்தடி விதிக்கலாமே 108

அடித்தல வேழுகாத
மகத்திப்பின் னுலுமாதம்
விடித்திடும் பதியில் மீழ
யிவர்களும் வருகலாகும்
தொகுத்தவர் ஹாலி ஹத்திபு
தொழுதவர் தௌபாச்செய்து
கொடுப்பதுக் கெழியோர்க்கையங்
கொத்தவன் பரத்தைச்சேர்த்து 109

தேத்திடு மவர்கள்க்கெல்லாஞ்
செய்யும் நோம்பருவதுண்டும்
ஆள்த்திர மில்லானாகி
லாறுநோம் பவனுக்குண்டும்
தோத்திரஞ்செய்ய வாழ்ந்து
தோன்றிய புதல்வர்க்கெல்லாம்
நேத்திபு மிளந்துகாபர்
நிலையென நிறுத்தலாகும் 110

நிருத்திய மிகவுடைய
நேரிலை புருஷரீன்ற
வரத்தினில் மதலையெல்லாம்
பாலக்காய் தாகமட்டும்
சருத்தினில் தீனுமில்லை
சபாயத்து மதுக்குமில்லை
உரைத்திடும் குபிராமென்று
உலகவாரறிய வேண்டும் 111

## 10-வது

## இவ்வித புருஷன் ஹராத்துக்குச் சமதையாகும்.

வேணுமிவ் விதத்தையல்லால்
விரும்பிய மாதைமார்கள்
பூணிய புருஷன்தன்னை
பெற்றவனுடப்பிறந்தான்
யேழையில் பாலனேந்தி
யெடுத்தவள் தனைவளத்தான்
நாணிய முலைகொடுத்த
நாரியர் புருஷனாரும் 112

நாரியர் ஒருமுலைப்பால்
நானிலத்துண்டகாளே
வீரியனவளடிமை
விலைகொடுத்தவளத்தடிமை
தேரிய களவுசெய்து
திருக்கர மறுபட்டானு
மீறிய கூன் குலைக
ளெவரையுஞ் செய்தபேரும் 113

பேரிறை நாமமிந்த
பெருங்குரு ஒஸ்தாதந்த
ஊரினி லாண்மலமிடன
ஒன்றொடி அறிந்திருந்தால்
கூறிய பெருநோயோடுங்
குரித்திடும் வகையீராரும்
வாரிவை மணமுடித்தா
லவர்களுஞ் சிறுஹாரமாம் 114

சீரிய சிறுஹாரத்தை
சேர்ந்தவர் மணமுடித்தால்
வாரடி எழுபத்தைந்தா
லவர்க்குமெண்ணஞ்சுநோம்பு
கூறிய தலாக்குமில்லை
கோதயர் மகருமில்லை
தேரிய விதங்கள் செய்ய
தீனவர்க்கிதே தெண்டம் 115

தெண்டமுமிருபத்தைந்து
தீரவே யடிக்கவேண்டும்
மன்றவ நோம்புமேழு
ஆதியினம்பரத்தால் வைத்து
மண்டலப்பிழைகள் செய்த
மங்கையர் காளையீன்ற
கண்டது மிகுந்ததெல்லாம்
ஹாராமுமுன்னுரைத்ததாமே 116

# 11-வது

## இவ்விதப்புருஷர் மக்கூராகயிருக்கும்.

---

உரைத்திடும் விதத்தையல்லா
லொன்ருடி மார்களக்காரும்
பெருத்திடும் வயறுஊமை
பினங்கிய வலிமுடமும்
நிறுத்திய வெறியினேடு
நிலந்தெரியாக்குருடு
சருத்தினின் சாகறியான்
சாற்றுமுதாசனத்தான் 117

உதாசனம் படரும் பொய்யும்
உடலினில் பின்னமேதும்
யேதாகிலும் வெரியைச்சேர்த்
திருந்ததை யருந்திஞலும்
அதாவது பன்னிரெண்டுள்ள
ளாளனும்மக் கூருகும்
நிதானமு யறிந்துபார்த்து
நேரிலே பொருந்தவேண்டும் 118

பொருந்திடா விதமறியாப்
பூவையர் பொருந்திஞேர்க்கு
வருந்திய தெண்டமில்லே
யவர்களே விலகநாடி
லறிந்தவள் விலகொண்ணுது
ஆழலே யறியாளாகில்
தெரிந்தபின் விலக்கச்சொல்லித்
தீனெறி நீதர்சொன்னூர் 119

# 12-வது

## இவ்வித புருஷர்கள் கலாலாகும்.

---

சொல்லிய மடவார்க்கின்னஞ்
சுகம்பெற வாழும்போர்கள்
எல்லையில் குலத்திலுள்ள
யேந்தலி னிளவரசாய்
வல்லியர் தனக்கு மூப்பு
யவனஞ்சு வயசுள்ளோனாய்
நல்லவ ரீன்றபாலர்
நாரியர் முறையுள்ளோனாய் 120

நானில மமைத்தோன் றீனை
நடபடி யறிந்துள்ளோனாய்
ஊணிய வணக்கஞ்செய்ய
உகந்தவ னிருப்பானாகில்
பூணிய உடலில் பின்னம்
பொருந்திடா திருப்பானாகில்
நாணமு முடல் நிறைந்து
நாரியர் வேசை நாடான் 121

நாட்டமும் தேட்டமெல்லாம்
நபியிரசூல் ஷரகை
வீட்டிமை பெருமைகோபம்
வெடிசிரிப்புறைத்திடாமல்
கூட்டிய களரிகூத்து
கொளுக்களைப்பார்த்திடாமல்
நாடிய பெரியோர்க்கெல்லாம்
நமைந்தவன் வணங்கவேண்டும் 122

வேண்டிய மதுவெறிகள்
விரும்பியே யருந்திடாமல்
தோண்டிய ஹறுங்கண்டாலும்
தௌபாவை ஞவுரைப்பானுகில்
ஆண்டவன் கருமஞ்செய்ய
மாசையு மனதுள்ளோனுய்
மாண்டவன் தனையடக்கி
யவர்க்கிறை வேதமீவான் 123

ஈந்தவன் களரிதன்னில்
யேதொரு சவாலும் வேண்டான்
சேர்ந்தவர் கெடுமை கேளான்
சிலமொழி இவனுரைப்பான்
போந்தவன் கரமுடனும்
பிரயாசமுமதிகமாக
வாழ்ந்திடு மங்கையார்க்கு
அவர்களும் கலாலதாமே 124

கலால் விதமறிந்து அந்தக்
காரிளை யிணங்கவேண்டும்
பலாபல னறிந்துயர்ந்த
பாங்கனுமிணங்கவேண்டும்
நிலாமுகத் தரம்பைக்காளர்
நிலத்தினில் மணமுடிக்க
உலாவிய பொருத்தஞ்செய்ய
உடையவ னுரைத்தானென்றூர் 125

உரைத்திடுங் குழலாளர்த
வொழுங்கனைத் தெளிந்தெடுக்க
பெருத்திடுங் ஹராமெழிதாய்
பேசிய ஹாரமக்கூறுங்
கரைப்பெருங் ஹலாலாமிந்தக்
கருமங்கள் நால்வகையும்
நிரம்பிய குரானுங்கஞ்சில்க்
னுக்குமாவினில் வரைந்தவாரே 126

# 13-வது

## இவ்விதமா நிஷ்றஹாகுசெய்யவேணும்

வாரிறை சூலுரைக்க
வாழ்த்தியே உமருகத்தா
கூரிய விஷளமெல்லாம்
குதாயிரசூலே மெய்தான்
ஆறிய ராளர்க்கென்ற
ருமணமுடிக்கும் வாரும்
கூறுமென்றுரைக்க வள்ளல்
கோதாருரைத்த சீரே 127

சீரெல்லாம் பொருந்து மங்கை
யவர்மண முடிக்கும்பேர்கள்
பாரினிலவளைப்பெற்ற
பாங்கியர் பாங்கரோடுங்
கூரிய குழலினுழுங்
கோர்வையொன் றொருமனதாய்த்
தேரியே யிருவரொன்றாய்த்
தெளிவது அருமையாக 128

அருமையிலின்னு னின்ற
ஆண்கலே யரசனுர்க்கு
மருமைக்கு முகையமானேன்
மஹர்மரு சாட்சி ரெண்டு
முருமையா யவள்தன் வாக்கா
லொருதர மிருகால் மூக்ககால்
பொருமையா யவளுரைக்கப்
பொருத்தமும் பொருந்துந்தானே 129

பொருந்திய விதத்தைப்போல
பூவையர்க் குடையபேர்கள்
திரந்தனி லின்னுனீன்ற
தேட்டிய னின்னுனுக்கு
வரைந்திடுங் குளவின்னுளே
வாக்குட னீங்தே முக்கால்
பரந்திரு சாட்சியோடு
பாங்கியின் விலைபொருந்த 130

பொருந்திய மடவாள்பேரும்
புவிதனி லீன்றோன்பேரும்
தெரிந்திட யின்னுனீன்ற
தேன்மொழி யின்னுள் தன்னை
வருந்தியே மணமிணங்கி
யவள்க்கிது மகரென்றோதி
அறிந்திரு சாட்சியோடு
மவருமுக்காலுஞ்சொல்வார் 131

சொல்லிய மூவர்வாக்குஞ்
சோதித்து சாட்சியானோர்
நல்லதென் றுரைத்தபோது
நகரினுக் கதிபன்ஹாலி
வல்ல உத்தாரஞ்சொல்ல
வதின்படி கத்திபானோர்
எல்லையி லிறையினும
மெடுத்தோதிடும் வேதந்தானே 132

வேதமே இறையினுமம்
விதிமுறை வகையுமோதி
ஆதியி னுமமுன்னே
அஹமதர் பேருமோதி
ஆதம்பின் நபிகளான
அம்பியா பேருமோதி
சோதியின் கலிமா ஆமீன்
சொல்லிட முகியுந்தானே 133

தாஞெரு குலத்தில் மங்கை
தாபரத்தில்லையாகில்
தானவர்க்கதிகமாகும்
தாய்தமர் தன்னையின்ருேர்
தானது மில்லையாகில்
தாதம ருடப்பிறந்தோர்
ஆனது மில்லையாகி
லவளினம் பூணவேண்டும் 134

பூணிய குலமிருக்க
பொருப்பில்லை வளர்த்தபேர்கள்
ஆணிய மணமுடிக்க
அவர்கள்பேர் கருமதென்றும்
வேண்டுமென் றினங்களில்லால்
வேண்டியே வளர்த்தபேர்கள்
ஆனவள் குடையராகு
மவளன்னை தந்தையாகும் 135

ஆகுமிவ் விதங்களில்லா
தவமுடை யோர்க்ளீய
தாகவு மினங்களில்லா
தன்கருத் தறியவென்னும்
தோகைய ருகையமாகித்
துலங்கவே யவளுரைக்கப்
பாவையை மணமுடிக்கப்
பாரவ ரறியும்வாரே 136

பாரினில் வளமனதும்
வாக்கது முகையமாகி
ஊரினில் கத்திபன
ஹாகிக்குரைத்தவழுகையவாக்கால்
நீரென்னை வக்கீலாக
நிரைவேற்று மென்றேயொருவர்
பேரினி வெளுஞ்சாட்டப்
பெரியவன் சொன்னதாமே 137

சொல்லிய மாந்தராரும்
சொந்தையா புருஷாரும்
யெல்லையி லவரையீன்றோ
யெவரென்னு ஞமமில்லை
வல்லவ ரடிமையாழும்
வளர்த்தவர் பேர்ஹராமாம்
நல்லவர் குபிரிளந்து
காடிதீ ஞனபேரும் 138

பேருமுன் குபிர்நாமத்தைப்
பிரிக்கவும் பெரியோன் சொன்ஞன்
வாரினில் தீன்விளங்கும்
மவர்க்கொரு ஞமம்வைத்து
ஆரவர் தனையுமீன்ற
ஆதமா மகளேயென்றும்
பேரிவை ஞமஞ்சொல்லப்
பேதையர் தனக்குமாகும் 139

ஆகிய குலத்திலாரும்
அன்னைதா புரங்களத்தோர்
வாகுடன் வளர்த்தார் நாமம்
வைத்ததை மணமுடித்தால்
தோகையர்ஹறுமதாகும்
தொடுவதுக்கடிநூர்தெண்ட
மாகவு மருத்துச்செய்ய
மறையிரக்கிய பெரியோன் சொன்ஞன் 140

பெரியவ னிறையோன் சொன்ஞன்
பேதையர் புருஷனர்க்கு
வருவிய மணமுடிக்க
வசுறுக்கென்றோர் வழியைச்சொன்ஞன்
அரியசொல் லெழுத்துமஞ்சு
அதின்பய னறிந்தபேர்கள்
பரிவுடன் மணமுடிக்க
பருமலென வுரைத்தான் வல்லோன் 141

வல்லவ னுரைத்தவேதம்
வாக்கினுல் வசுராக்கென்று
சொல்லிய யெழுத்தஞ்சுஞ்
சோதித்தால் வாவுஞ் சீமும்
எல்லையில் றே அலிபும்
யியம்பிய ஹாவதஞ்சுந்
தொல்லையொன் றணுகான் சொன்ஞன்
தொகுத்ததின் பொருளின்வாறே 142

வாவென்னும் வரைந்தெழுத்து
ஒக்கிலது வொலியுமாகுஞ்
சாவென்ற யெழுத்தை ரெண்டு
சாட்சியென்றுரைக்கலாகும்
ராவென்ற யெழுத்தே ராளி
ராசியா யவள்பொருந்தி
ஆவென்ற யெழுத்துஹாபும்
வளுக்குடைய வாரியவேணும் 143

ஈன்றபின் காபதாக
இருப்பது கவுலத்தாகி
பாந்திபம் வழக்குண்டான
பருசமும் கொடுக்கநாடி
சாந்தக மொருமனதாய்
சம்மதித்தவளேவேண்ட
ஆய்ந்திதைப்பருலாயஞ்சும்
அஹம்மத ருரைத்தாரன்றே 144

உரைக்கும்வாறுலமா வெல்லாம்
ஓதினர் கஞ்சில்ப்பாதி
சிறக்கும் வார் சரகினிவில்
யின்சா னென்று சாற்றினு ரொருகிதாபில்
நிற்கும் வாசகந் தீனவரறியவும்
பலகலை முறையையும்தெளிவாம்
மறக்கொண்ணு லகியாம் மீதில்
மகிழ்ந்திறை யிதைவகுத்தனனே 145

## 14-வது

## நிக்காகுடைய பருவுண்டான

## வகை அறியவும்.

வருத்தவ ளுதந்தன்னை
வருத்தவ னிருக்கும் நாளில்
தொருத்தவ ரிடவிலாவில்
தோன்றிய சிலந்தியொன்றில்
மருத்துவ உலகமாதா
மங்கையென் றுருப்பிறந்து
திருதிகென் றெழிவிலங்கும்
திருவிழிக் கெதிரே வந்தார் 146

வந்திருபேரே திருவர்களும்
முகத்தை நோக்கி
முந்தவா யுரைத்திடாமல்
முகத்தைப்பார்த் திருக்கும்நாளில்
இந்தவா ரமைத்தவல்லோ
னிருவரைத்திருக்கண் பார்க்க
புந்தியி லிறக்கமாகி
பொங்கும் வெங்காமத்தாசை 147

ஆசையா லிவர்கள் மீறி
யடக்கொண் ணு திருக்கும் நாளில்
நேசகர் தனைப்பாரென்று
நினைத்தனர் நேரிளையும்
தேசியாளைப்பாரென்று
திரத்துடனிருக்க வாதம்
மாசையி லிவர்கள்பார்த்து
அனந்தமாண்டிருந்ததன்றே 148

இருக்கும்போ தொருநாளாதம்
யேந்திழை முகத்தை நோக்கி
பொருக்கொண்ணு மோகம் பூவை
பொருந்துமென் றுரைக்க யிந்த
சிறக்கும்வா றுலகமைத்தோன்
செப்புவான் மார்க்கமெல்லாம்
மறக்கொணு கருத்திலூன
மன்னவன் சாக்ஷியென்றான் 149

சாட்சிவைத் திமையோர் நால்வரு
மற்றதனவரும் வாருமென்றழைத்துப்
பேச்சொன்று முறையா திருந்தவாதம்
பெரிதுரை பேசினா முதவுங்
காட்சியென் றுலகுள்ள கன்னியர்க்கரச
ராக காளையாவரை வைத்தான்
சூட்சியி லமைப்பேன் சுருதியென்நபியே
சொல்மறை மேலெனத் துலங்க 150

துலங்கிய வானோர் நால்வரும் வாருமென்
றுய்யவ னுரைத்திடும் பரிமான்
இலங்கிய தரம்பை யேந்திழை கவ்வா
யென்பவராதமே நோக்கி
கலங்கிய நினைவைத் திடங்கொள்ள
நிருத்திகளிப்பொடுங்காதலித்துகந்தார்
இணங்கு முன்னிரங்கி யவர்களைமணமுடித்
திடுமென் னுரைத்தன னிறையோன் 151

இறையவ னகரினிக் கதிபனுங்ஹாவியே
னுரைத்திடும் பரிமான்
முறைப்படி சுபுரியி லிரங்கி மீக்காயில்
முதலவன் வாதனும் வர்ணன்
சிறப்புட னிவர்கள் சிந்தையில் பொருத்தமுஞ்
சீரையு மறிந்திடும்போது
ஒப்பினி லாத முகைகமென் றுரைத்தார்
சொன்றடி யுரைத்திடுவாரே 152

பாரினி லென்னை வருந்தியே யழைத்தா
மவனெனக்கீவது பருசஞ்
கூறுமென் றுரைக்க ஜிபுரிகிலெழுந்து
கொற்றவன் சமுகத்தேகி
தேரியவிசள முரைத்திட யிறையோன்
யீந்தது வாயிரந்தங்கம்
நாரியே வருந்திய நாட்டத்தி லழைத்தார்
நானிலத்தவர் கொடுப்பதுவே 153

கொடுப்பதென் றுரைக்க கொத்தவன் ஜிபுரில்
குவலயத் தருகினிலிரங்கி
அடுப்பவராதமா யிரந்தங்கமரம்பை
யாக்கிய வென்றுரையக்
கொடுப்பதுக் கேதென் றவர்மொழிகூற
கொத்தவன் ஜிபுரிலேகி
விடுப்பன றுலகில் விசளமதுரைக்க
வேந்தனு முரைத்திடுவானே 154

வானகம் புவியே ழுருசொடு குருசு
அனைத்தையு மமைத்தே னஹமது ஒழிவால்
தீனவர்கோமா னுமதுட பாலர்
திருநெறி நபியையும் னினைந்தான்
ஏனென நபிமே லாயிரஞ் சலவாத்
தாதமு மோதியே புகழ
நானிலம் விளங்குமா யிரந்தங்கம்
நான் தருதுவேனென வோதும் 155

ஓதவு மிறையோ னுடையவன் ஜிபுரீல்
வுலகினி லாதமை நோக்கி
ஆதிதன்னபிமே லாயிரஞ் சலவாத்
தரைந்திடுமென் றவ ருரைக்க
ஆதநன்னபியும் நீதியை நினைத்து
ஒதுவுட னிருந்து
நேர்மையி லோதினர் தொழுதே 156

தொழுவ ராயிரஞ் சலவாத்
தோதவுர் துய்யவன் ஜிபுரியிலெழுந்து
பழுதொன்றுமணுகா திரையவனேக்கி
பாடியே விசளமு முரைக்க
தெளிவுரு கோவக்காமலே தங்கம
திரட்டியே யாயிரத்தெட்டுரைமாற்றில்
நெளிகணையாளி நினைத்தவன் சமைத்தே
நீர்கொடு மாதரன்நபிக்கே 157

நபிக்கென யிறையோ னுடியே யீந்தா
நானிலத்தது விலே யாயிரந்தங்கம்
குவிக்கவு முலகி லதுநிரை சொல்வே
கூறிப் பொருளா யொருமனு நிரையே
கவிப்பிரகார மெண்ணஞ்சிலொன்றே
காண்பது எண்ணஞ்சிலொன்ருய்
புவிப்பிரகார மொன்றையு மூன்ருய்
பிளந்திடி லதுநிறைசரியே 158

சரியெனப்பொருளாச் சமைத்திரு வாளி
சகலமும் படைத்தவன் ஜிபுரில்
வரிவொரு பணியா வரைந்தொரு பணியா
வரைந்தொரு னெழியாவானவராதமின்கையில்
திருமகள்க்கீந்தா தெரிவையர்க்கிதுதான்
தித்தது வாயிரம் தங்கம்
பரிவுர வுரைத்து பரமொழியுடனே
பாத்திப ரவர்கையி லீந்தார் 159

ஈந்திடும் பொருளோ ராயிரந்தங்க
மிறையவனேந்தவர்க்குரைப்பானு
மீந்திடுமுதலே யரம்யைர்க்கீயு
மவர்க்குநீ ருரைத்திடும்பரிமான்
காந்திகன் முந்த வருந்தியதாலே
கைப்பொருள் வரியலாச்சு
பாந்திய முமக்குப் பரிசம தல்லால்
பாலரி லுமக்கொன் றுமில்லை 160

பாலருக்குடையோ ராதமே யாகும்
பார்த்திபர்க்குரைத்திடும் பரிமான்
மேல்க்கடன் கொடுக்க மெலிந்திடும் வகையா
லிறையவன் கொடுக்கவுமாச்சு
பாலரில் நபியா வருமவர்பலதும்
படைத்தவன் நபியெனப் பகர்ந்து
மேலவர்தீனை விரும்பவும் வேணு
மெவர்களும் தனதுமக்கில்லை 161

இல்லையென்றுரைத்து யீந்திடும் பொருளும்
ஏந்திளைமார்மனமிணங்கி
நல்லதென்றேந்தி நகைதனையணைந்தார்
நாரிமா ரனைவரும் நாட
வல்லமை யுடையோன் வையகங்ஹாவி
வகுத்தவ னுரைத்திடும்படியே
சொல்லிய வாதராசனு மொலியா
சுந்தரி தனையவ ரீன்றார் 162

ஈந்திடும் வாரும் மேந்திளை மொழியு
மிறைஜிபுரியி லிசுராபீ
லாய்ந்திடு மொழியே யறிந்தவர் பார்த்து
ஆதிதன் சமுகத்தேகி
காந்திதன் னுகையங் கன்னியு மிணங்கிக்
காரிகைக் குடையவர் வாகன
ஈந்திட மீக்காயில் ஹத்திபா கயிதுக்கு
நீரிருவருஞ் சாட்சி 163

சாட்சியு மிருவர் சம்மதி யிருபேற்
சகல விண்ணோர் முன்னே ஒலியு
மீள்ச்சியி லிவர்கள் வாய்மொழியறிந்து
மீக்காயிலு மிறையவனுமங்
காச்சிகளோதுங்ஹத் திபதுவாக
கருமங்கள் முடித்திட வானோர்
சூட்சியி லிறையோன் நாம மூட்ட
மின்சொல்லிட முகிந்ததுமணமே 164

மணந்திரள் வாசக மறைபொருள் விதமு
மதகபு நாலையுமுறைத்த
இணந்திரள் பரவிக்கோதிய கரமென்
றேறிய மரக்கலத் தூளியில்சேர்க்கும்
கணந்திரள் நபியு மறைதனி லுரைக்க
கனதியு மாதமிலருசின்
டிணந்தரக் கித்தாப்பி லாரிபின் வளமை
யெழுதினு ரெவையுமே முகிய 165

# 15-வது

## மகர்றுகுடுக்கிறதுங்

## கடனுகையிருக்கிறது அறியும் வகை.

---

முகியுமென் றிரசூல் சொல்ல
முகம்மதை மாமன் போற்றி
நபிகளுக் கரசறுன
நவமணிச்சுடரே கோவே
புவிதனில் மாதையார்க்கும்
புருஷர்கள் பொருளதென்ன
எவ்விதம் காவிமார்க
ளீவதோ கடனேமென்றூர் 166

என்றவர் கேட்டபோது
வேதிய ரேதுரைப்பார்
அன்றவர் கொடுக்கவல்ல
ததுமக றுகையமாகும்
ஒன்றுபத் தொருநூராயிர
முகந்தது பரிசமாகும்
மண்டல மறியச்சொல்வார்
மகிழ்வொடு மக்கமா நபியே 167

நபிகளி லொருவரானோர்
நமக்கெல்லாம் பிதாவதானோர்
கவிகளில் விளங்கும் செம்பொன்
கைவசம் கனதியில்லால்
புவிதனில் விளங்காத்தங்கம்
பொருளிறை யவர்க்குமீந்தான்
மவ்வித மகர்கொடுத்து
வாழ்ந்தனர் மக்கமா நகரில் 168

மக்கமா நகரில் வள்ளல்
முகம்மத ரிரசூலுல்லா
பக்கலி லீன்ற கன்னி
பாத்திமா வெனுமயிலைக்
ஹறக்கனுனவன் புதல்வன்
காலியாலிதனக்கு
மிக்கவே மணமுடிக்க
இறையவ னுகையமாகி 169

ஆகிய உலகமாதர்க்
கனைத்தும்மண்டாட்டத்தினில்
ஏகனு மகரெழுதி
யெமையவர் சாட்சி வைத்து
தாகியே வுலகறிய
தன்கையா லொப்பம் வைத்து
தோகியன் கொடுத்ததா
லுடன்கையில் கொடுக்கவேண்டும் 170

வேண்டுமென் றிறைகொடுக்க
வேண்டிய உலகமாதா
பூணிய வெழுத்தையெல்லாம்
முடனிர வேத்தயென்ன
நாணியே உமதும்மத்தோர்
நாரியர் பிழைகளெல்லாம்
தோணிட வரியோநாளே
தோகையை மீழுமென்முன் 171

பீழுமென் றிறையுரைக்க
இதுக்கவ ருகையமாறு
ராழுமுன் றெழுத்தை யெல்லா
மா தியுங்கடனே வைத்தான்
வாழுமுன் னுலகத்தோர்கள்
வாசியலறியாதாலே
தோளமேல் கடனுமென்று
தோகைய ரிணங்கவன்றே 172

# 16-வது

## இவ்விதமுடையவர்கள் ஹாலியாகும்.

---

தோகைய ரிணங்குவாரும்
தொகுப்பது வகுப்பதெல்லாம்
பாகமு மறிந்தோமிந்த
பருல்வகை முடிக்கும்பேர்கள்
ஆகவும் ஹாலிஹத்தி
பதுக்கிரு சாட்சியானோர்
தேகுமி தேகாதென்றே
எங்களுக்குரைக்கவேண்டும் 173

வேணுமென் றுரைக்க வல்லோன்
வேதியரேதுசொல்வார்
பூணிய தீன்வழியில்
புரந்தவன் மகவதான
ஆண்கலையான தாலு
மாம்பைய ரென்னதாலு
மீனவ ரெளியோர்க்கெல்லா
மீவதுஇயந்தானே 174

அய்யஞ்சு வயதில் மூத்து
ஐந்துமோ றூறிந்து
செய்வகை யதின் சியலுஞ்
சினத்திடும் கோபமில்லான்
பையவே நடையும் பார்வை
பாரிரு பதத்தைநோக்கி
வையகபிழை செய்தாலும்
வன்மனம் பொருப்பதாமே 175

பொருத்திடும் குலமுயர்ந்தான்
புத்திமான் புகழ்ச்சியுள்ளான்
வெருத்தவர் கருத்தைக்கண்டால்
வெக்கமு மீமானுள்ளான்
ஒருத்தரின் உணவருந்தான்
றுண்பதா மவனசனம்
வருத்திய வுலகத்தோரே
வணக்கத்தில் வருத்தவன்றே 176

வேண்டிய பலகலையின்
விதமெல்லா மறிந்தாராகில்
ஆண்டவ னிரக்கும்வேத
மறிந்தவ ஞலிமாக
கூண்டிடு முலகத்தோர்க்கு
குருமுரை கொடுக்வல்ல
வேண்டிய அறிவு சொல்வான்
வேறுள்ள விஷளங்கேளான் 177

கேட்பவர்க் கிவானிந்தக்
கெடுமொழி யுரையாஞகில்
மூப்பவ ருலகத்தோரே
முகந்தடி பணிவாஞகில்
தோப்பஞ பாலனென்று
தொடும்வளக் குரைத்திடாமல்
சாப்புத முரையைக்கூவி
காந்தகன் பொருந்தொண்ணுதே 178

பொருந்திய வுடலின்ன
புரப்படன் புதுமை தோன்றில்
திருந்திய யாடை வெள்ளைத்
தேகமில்ப்புனை வாணகில்
வருந்திய ஒலுவலக்கை
வனைந்திடும் தஸ்பீயோடு
இருந்தவ னடக்கும்போது
யிருபதம் கவுஸின்மேலே 179

மேலின்னம் பலவி தங்கள்
இவர்சியல் தீன்வளில்
ஏலவே பொருந்திவாக்கி
லேலொரு புதுமையில்லான்
காலமும் வரும்பில னுங்
கருமமு மிகையுள்ளானும்
கோலமின் குலத்தின்வாரும்
கொடுமையு முடிமைதானும் 180

தானிந்த விதமறிந்து
தன்கருத் துருதியாகி
யானதுக் கிறையோன் சொன்ன
அமலின்ன விதமிதென்று
நானிலத் தவர்கள் மெய்க்க
நகிமறை தெரியக்காட்டி
ஆனவன் வேதமோது
மவர்களும் ஹாலியாமே 181

ஹாலிக ளாகுமிந்தக்
கருமங்க ளன்பத்தொன்று
மீளவே பொருந்துமாகில்
அவர்களும் ஹாலியாகும்
கோலமிக் குரையுண்டானல்
கொத்தவ னீதன்வல்ல
ஏலவே பொருந்தவேண்டும்
இனிவருங்ஹத்தீபாமே 182

## 17-வது

# ஹத்தீபாகிற விதம்.

ஆகுமிவ் விதத்தையல்லா
லமலுள்ள ஹத்திபானோர்
ரேகம ருமவேண்
டியம்பிய கலிமா நாலு
மாகிய கலிமா வுள்ளே
அமர்ந்திடும் பருலுநாலும்
பாகிய மறையறிவும்
படிப்பதும் நால்வழியே 183

நால்வழி பீர்கள் நாலு
நாலிமா மதகபாக
மேலின்ன மிசுலாமாரு
மிடையொண்ணு மீமானரும்
நூல்முறை நடக்கவல்லோ
னுன்னறி யறியவேண்டும்
ஆலமும் படைத்தவல்லோ
னஞ்சஞ்சா வகுத்தஞ்சே 184

அஞ்சிமா மஞ்சுபீர்கள்
அஞ்செழுத் தஞ்சுநேரம்
மஞ்சணி கிபுலாவேறு
மஞ்செழுத்தமைந்தவாரும்
மஞ்சொரு மிருாபான
னடுத்த சுன்னத்தை பிசகானகில்
மிஞ்சவு மவன்வணக்க
மிரவெல்லாமுளிக்கவேண்டும் 185

இரவினி லுறக்கமற்று
　　　னிருதய பயமுள்ளோனைப்
பருவயர் பலரைக்காண
　　　அவன்விழி சுழிக்கவேண்டும்
மருவிய கடுமுழுக்கு
　　　மனமும்வாக் கோர்மையுள்ளான்
கருவிய ஹராமதெல்லாங்
　　　கருத்தினில் னினைக்கொண்ணாதே 186

நினைக்கொண்ணா விதமிதான
　　　நிச்சயக்கருத்தைத்தள்ளி
இணக்கமா யிருபத்தைந்து
　　　யெடுப்புள்ள காரியங்கள்
தனக்குள்ள னினைவில் வல்லோன்
　　　தவத்தையே நினைக்கவேண்டும்
கணக்கில்லா லுண்பதெல்லாங்
　　　ஹலாலதா யுண்ணவேண்டும் 187

வேண்டிய பார்வையெல்லாம்
　　　விழியினில் ஹலாலைநாடி
பூண்டிய ஆடையெல்லாம்
　　　புனைவது ஹலாலதாக
தூண்டிய இருசெவியில்
　　　தூருமொழி ஊன்றுனகில்
ஆண்டவன் தனக்கொப்பாக
　　　மன்னர்போல் பெருமையுள்ளான் 188

பொருத்திடு முலகுயிரே
　　　புவிதனிலிறக்க நாடான்
வருத்தமும் பலதீங்காலும்
　　　வாயினி லிடக்கும்பொய்யும்
உரைத்துடன் தவுபாச்செய்வான்
　　　ஒருத்தரைப்புரங்கள் பேசான்
குடித்து ரோகங்கள் ஓர
　　　குலைகளும் கொடுமைநாடான் 189

காட்டமும் தொழுகை மீதில்
நபிகளி லஹம்மதான
கூட்டிய வெழுத்து நாலும்
கோர்வையு மறிந்து முன்னாள்
வாட்டமாயது வேலைவேறாய்
வணங்கிமுன் னிருந்தவாரும்
பூட்டிய வெழுத்தையெல்லாம்
புகழ்ச்சியில் நிலையறியும் 190

நிலையினில் அலிபாக
நீதிமுச் சுடரோநாடி
யுலகெல்லா மமைக்குமுன்னே
யுடையவ னிலையிதென்று
தலைகுனிந்திடும் ருக்கூவில்
தன்மனம் ஹேயேனுடி
கலைகள் முன் வணங்கும் ஹாமீ
தர்க்கு முஹம்மது ஹேயதாமே 191

ஆகிய ஷஜியிதாச்செய்ப
அவர்மன மீமைனுடி
ஏகமு முஹம்மதாக
யிருந்தமீம் முஹம்மதாக
வாகுனில் முகையதீனு
வளர்ந்தமீம் ரெண்டுமொன்றாய்
யாகியே வணங்கி நின்ற
தினம்பயி னறியவேண்டும் 192

அறிந்தவர் தொழுதிருக்க
அவர்மனம் தாலேநாடி
தெரிந்திடு மஹம்மதென்று
தீன்வழி முஹம்மதென்றும்
சிறந்திடு முஹையதீனும்
செப்பிய ஆதம் நாலும்
குரைந்திடாக்குதாயே யென்றுங்
கூறியதா லுமஞ்சே 193

அஞ்செழுத்தான தானு
மாதிமுன் னருள்தரித்து
ஐந்து நேரத்தொழுகை
யமைந்தது வணங்கிநின்ற
ஐங்தெழுத் தமைத்த முன்னு
ளதின்பய னறிந்துநாடி
ஐந்தன வணங்கி நிற்க
வல்லோனவர்களும் ஹத்திபாமே 194

ஹத்தீபென்னும் நிலைபொருந்தும்
கருமங்களன்பத்தொன்றும்
புத்தியி லறிந்து தோய்ந்து
புகழ்ச்சியின் வழியே நோக்கி
நித்தமும் நெறியுள்ளாரே
நிறுத்தலாம் மிமாம் ஹத்திபா
குத்தமே குறையொன்றானால்
கொத்துபா யோரதோதா 195

ஓதிய விதங்களிந்த
ஒழுங்குகள் ஹாலீஹத்தீபு
ஈதன்னை அறிந்தில்லாமல்
இருப்பவர்க்கேது தெண்டம்
மாதிமுன் ஆதி தெண்டம் முன்னுதம்தன்னை
அமைத்தனன் அம்பத்தொன்றும் வள்ளல்
வேதமு மிலங்க இந்த
விதமெல்லாம் பொருந்துவாரே 196

பொருந்தவே நபி ஷரகின்
புவிதனில் ஹாலிஹத்தீபுந்
திருந்தவே நடந்தில்லார்க்கு
தெண்டமாமறியக்கேளீர்
ரரிந்தவா வராத பின்னி
வகுத்தனம்பத்தொன்றில்
சிறந்தவர் நடக்கவள்ளல்
செய்வகை யன்பத்தொன்றே 197

அன்பத்தோ ரடிக்குத்தாங்கா
ரஞ்சடி அடித்து மேலும்
அன்பத்தோர் நோம்பு வைக்க
மனசின் வாரி
அன்பத்தோ ரறிவகையும் அன்பத்தொன்றதில்
குறைந்தா லன்பத்தோரடியாந்தெண்டம்
அன்பத்தோர் நோமபு வைக்க
அவன் பிழை தீருந்தானே 198

தீரவே நோம்பு வைக்க
திரமில்லா திருப்பானுகில்
வாரடி அஞ்சடித்து
வைப்பது அஞ்சுநோம்பு
ஊரினில் மிஸ்கீனுக்கு
ஓசிபனம் ஈவானுகில்
பேரினில் யிழைபொருக்க
பெரியவ னுரைத்ததன்றே 199

உரைக்கொண்ணு விதத்ததிக
ஒழுங்குள்ள ஹாலீஹத்திபு
மரைக்கொண்ணு விதமறிய
மறை யுரைத்திட வரமொழியே
இரைக்கொண்ணு பொருளென
இரசூலியம்பிட உலமாவெல்லாம்
முரைக்கொண்ணு பிக்குவிலுலமா
மீதில்லுருபொருளனேக் கூறினேனே 200

# 18-வது
## சாக்ஷி சொல்லப்பட்டவர்கள் வகையறியவும்.

---

கூறிய பிக்குவி னுலமாமீதில்
குவலய சாட்சியானோர்
ஆறிய பேர்களல்லால்
அதட்டிய பேர்களாகார்
மீறியே சிதரிடாமல்
யெவர்க்கும்வாக் குருதியான
தேறிய மனதுள்ளோனாய்
தீனவர் குலத்துள்ளோனாய் 201

குலத்தினில் ஜாதிமானாய்
கோபமும் கொடுமையில்லான்
தலத்தினில் பவுசையாளும்
தக்கவன் தகமையோங்கும்
நலத்தவ னிருபதுமேல்
எழுபதுக்குயர்ந்திடாமல்
துலைத்தவன் பொய்யைமாற்றி
தொழுவது இறையைத்தானே 202

இறையவ னிரக்கும் வேதம்
ஏவலின் விலகலாய்ந்து
முறையினில் நடப்பானாகில்
மூமீனாயிருப்பானாகில்
உரவுட னுலகத்தோர்க்கு
ஓர்மையும் தாட்சியுள்ளான்
சரகதின் படியீதென்று
சாற்றவும் தகமையுள்ளான் 203

தகைமையில் பாலரின்று
தனம்பிரையாசமுண்டு
உகமைமி லசனுடமை
ஒருவனு மருந்தானாகில்
பகமையில் வருமையில்லான்
பல ஸ்திரி நாமஞ்சொல்லான்
ஜெகமதி லடிமையில்லான்
செம்பொன்னுங்கடனு மில்லான் 204

கடனிறை சக்காத்தென்று
கணக்குட னீன்றுமிக்க
இடங்களில் ஷக்காத்தான
யேதொரு சவாலும் வேண்டான்
மடங்களில் பொது நிலத்தில்
மனஞ்சகித்துறங்கானாகில்
துலங்கிய களரி சண்டை
துலைத்தவ னகத்தவன்றே 205

அகத்துவான் பாவங்கண்டா
லதுக்குமோர் தௌபாச்செய்வான்
வெகு குற்றம் செய்தபேரை
மீளவு முபசரிப்பான்
மகுத்துவம் பெருமையென்று
மனத்தெண்ணு விதமிதான
தொகுத்திடும் நாற்பதுள்ளோர்
தோற்றிய சாட்சியாமே 206

ஆகுமிவ் விதம்பொருந்து
மாளனார் சாட்சிரெண்டு
வாக்குட னிருந்து தில்லை
வதிலிரு பேர்க்குநாலு
ஏகுமிவ் விதபொருந்து
மெந்தினை சாட்சி நாலு
மாகவு மவரவர்கள்
மேனியில்க்குறையாகாதே 207

# 19-வது

## சாட்சிக்கு ஏராதவர்கள்வகையறியவும்

மேனியில் பழுதுமுந்த
        இருந்தவன் பிறந்ததாலும்
ஞானிலந்தனில் பிறந்து
        நடுவினில் பழுதென்றாலும்
ஊனமா யிருந்ததாலு
        முனைக்கும் வாய் குழறினாலும்
ஈனமாங் கூன்குருடு
        யிருசெவி செவிடனாமை 208

ஊமையுங் குடிகளவு
        முருதிவேர் கெடுமதியும்
ஆண்மையுங் குலக்குறவே
        அவகடித்தாணைக்கஞ்சான்
நாணமு முடலிலில்லான்
        நடக்குங்கால் கவுசு மில்லான்
ஈனமாம் பெருநோயோடு
        யேதொரு குஷ்டந்தோன்றில் 209

தோன்றிய ரோமமெல்லாம்
        துயில் வெள்ளை நிறத்துள்ளோரும்
பூண்டிய செம்மயிரு
        புலிமயிர் பூனைரோமம்
தீண்டிய யிருவிழியும்
        தீயென யெரியுமாகில்
மாண்டவர் புரஞ்சொல்வோரு
        மனத்தினில் ஹவா நபுஜை 210

ஹவா நவு ஷதியமிந்தக்
காரியம் முப்பத்தொன்றும்
உபாயமில் விலக்கிவைக்க
உலகவ ருகையமில்லார்
அபாயமாஞ் சாட்சியென்று
லவர்களா லதுஹறாமா
மிவையெல்லாம் பிஹ்குபி லுலமா
மீதில் தெரிந்தன ரறியவென்றே 211

## 20-வது

## நிஹ்ஹாஹு செய்கிறநாளறியும்வகை

---

வேண்டிய விதமே தெல்லாம்
விதமறிந்திடுவீர் ஹாலீ
தோன்றிய மஸ்பொருந்தி
தொழுபவர் ஹத்திபானோர்
ஈன்றிய மஸ்பொருந்தி
யிருப்பவர் சாட்சியாகும்
ஆண்டுடன் மணமிணங்கு
மாசமுந்தெய்தியென்ன 212

மாசமா வருஷமுந்த
முஹாமில் மணமிணங்கும்
பேதைமார் மறுபிறத்தில்
பிறந்தவள் வாளலாகும்
சாதகம் சபாமணங்கள்
சகலருமிடியமாக்கும்
பேதவம் ரப்பியுலவ்வல்
பேதயி னிடஞ்சலாவான் 213

இடஞ்சலு வருத்தந்தோன்றும்
ரப்பியுலாகர் மாசம்
சடங்கெட இடஞ்சலுண்டு
ஜமாதினி லவ்வல்மாசம்
திடங்கொள்ளும் ஜமாதிலாகர்
தீன்துனியா வளரும்
மடங்கிய ரெஜபு சஹ்பா
னவன் பரதேசியாவான் 214

ஆகிய ரம்லான் மாதம்
மாம்பைய ரகத்தால்சன்டை
ஏகிய சவ்வால்மாதம்
இலங்கிய வாழ்வுண்டாகும்
ஆகிய துல்கையில்
மலடல்லால் மக்களில்லை
பாக்கியம் பவுசுண்டாகும்
படைத்தவன் ஹஜ்ஜுதானே 215

தானிந்த மாசந்தன்னில்
தலப்புரை கடைநாள் ரெண்டு
மீனமாம் நஹஸ் ஏழு
இரவினில் அதாப்போடும்
மானவர் மணமுடித்தா
லதுக்கிறை லானத்தென்று
பானிலம் புகழும் நாள்
பதிணெண் பகரலாமே 216

பகுந்திடும் புரையில் ரெண்டு
பதிதனிலாறு நாளும்
உகந்திடும் எழும் நன்று
உயர்த்தி ஒன்பதும் பத்தும்
ஜிகந்தனில் பதிணென்றுன
செப்பிய பதிலைாகும்
வகுத்திடும் விதத்துக்கெல்லாம்
அதிகமாம் பதினேழாகும் 217

ஆரும்பத்தொம்பதோடு
அதிகமாம் இருபதன்று
ஏகவன் பகிமத்தாக
இரங்கிடு மிருபத்தாரும்
பாவையர் மணமுடிக்க
பதினொரு தினமுமென்று
வாகுட னிதில் வருகும்
வாரமுங் குறியுநாளே 218

நாளினில் ஞாயிறானல்
நன்மையு குறைந்துகாணும்
வாழும் நாள் திங்களானல்
அவர்களால் வளருஞ்செல்வம்
மீளவும் செவ்வாயாகி
லிவர்களை விலக்கச்செய்யும்
ஊழியில் வினையே மீழும்
உரைக்கொண்ணு புதனதாமே 219

தானவர் புகழ்வியாழன்
தன்கொணுவாழ்வுண்டாகு
மீனமொன்றணுகா வெள்ளி
இரவெல்லாமேற்றதாகும்
கானகம் போஞ்சனியில்
காலனை குறுகிக்காணும்
மானவர் மணமுடிக்க
மங்கையே இணங்குநாளாம் 220

இணங்கிய நேரமிந்த
இரவினில் பின்சாமந்தன்னில்
கனங்கொள்ளும் வயிற்றில் கெற்ப
மகண்டஞ்சு மாதமேனும்
இனங்களில் மதலையீன்ற
எண்ணஞ்சு நாளில் முன்னும்
புணங்கொண்ட காமத்தாசை
பிரவடை யேழுநாழும் 221

நாளினில் முஹற்ற தன்னில்
நானில மமைத்தபத்தும்
மீளவும் றம்லான் நோன்பு
முப்பதும் பெருநாள் ரெண்டும்
காளேயர் ஹஜ்ஜு கூட்டும்
களரியும் அறப்பாநாளும்
எழுகஹ அடன்பூரையும்
மிடகட நாளறியும் மாசம் 222

# பெண்ணேடே இணங்கி இஷ்டகழபம் செய்கிற வகை தவிர்த்த

அறிந்திடும் பகல் முழுதும்
ஆடுமாட தணேப்போலும்
எறிந்திடும் வெளிச்சம்
இஷாதொழ திடுநேரமுன்னும்
புரிந்திடும் களரிபள்ளி
பொதுமடம் பொதைக்குளிகள்
சிறந்திடும் நதிகுளமும்
திடரிலும் விருக்ஷம் கீழாய் 223

கீழ் நிலம் சாலமீதில்
கிளிமொழி நோம்பின்போதும்
தோழியர் தொழுகுமுன்னே
துயில்புரிந் திடவென்றாலும்
ஆழிய குளிகிணறு
மதுகளி லிணங்கினாலும்
பாழ்மடம் பாழ்மனேயில்
பயிரிடும் நிலங்கள் மீதில் 224

நிலையினில் பஜருநேரம்
நிலாமழை பொழியும் போதும்
உகைவரிணங்கி னோர்க்கு
உடையவ லானத்தெல்லாம்
தலையினி லிரங்குமென்று
தானவன் வேதந்தன்னில்
விலக்கவே இதுகளுக்கெல்லாம்
விதித்திடுந் தெண்டந்தானே 225

தெண்டமாம் இந்தவாயில்
தேன்மொழி இணங்கினோர்க்கும்
உண்டவ னடிமைதன்னை
உருமைவிட்டிடவு மில்லான்
அன்றொரு தங்கக்காசு
அதுகொடுத்திடவு மில்லான்
மண்டலத்தெளியோர் நாலு
மனிதருக்கசனமீயும் 226

ஈந்திட மனம்பொருந்த
இருப்பவர் முதுகுதன்னில்
ஆய்ந்திடும் நாற்பத்தஞ்சு
அடியதும் கடனதென்ன
மாந்தரில் படருபொய்யு
மருபுரம் பேசினலும்
சாய்ந்திடும் தெண்டமென்று
சகலரு மறியவேணும் 227

வேணுமிவ் விதஞ்செய்தாலு
மிவர்களுக்கிந்தநேரம்
ஊணிய தரித்த பிள்ளை
உலகினில் பிறந்திட்டாலும்
நாணமும் கரைந்து தீன்
நடபடி விலகிக்காபர்
ஆனது நிசமேயென்று
ஆலமுமறியவேணும் 228

அறிந்திட ஆலமெல்லா
மஹம்மத ருளிச்செய்ய
பொருந்திய விதங்களெல்லாம்
புரவலநலமா வென்போர்
வரைந்தனர் தக்காயிக்கென்று
பலக்காளெனும் கிதாபுரெண்டில்
அறிந்தவர் தெளியவென்று
ஆலமும் அறியச்சொன்னேன் 229

## 21-வது

## இவ்விதமாக பெண்சாதியை ஆளவேணும்.

அறிந்திடும் கிதாபின் வாறும்
மாளனுமடவாள் தன்னை
சிறந்திடுமனையே விட்டு
சிலரகங்கா ணொண்ணாது
இருந்தவர் பொருந்த வண்ண
மிடுவது வந்திளைக்கு
அறிந்தவ ளுடுத்தவாடை
வருஷத்தில் களஞ்சிபத்தே 230

ஆடியே வெள்ளையல்லா
லதிகமு மவளுக்கில்லை
கூடிய புணர்ச்சிக்கல்லால்
குடித்தனங்கோதைக்கில்லை
பேடியர் பாலந்தன்னை
பிசக்கடன் வளர்ப்பதில்லை
பாடில்லா மடவார்க்கெல்லாம்
பணிவிடை அடிமைநன்றே 231

அடிமையை அகத்தனுமவன்
அனைத்தும்மே செய்வதல்லால்
கடிமையாய் மனையாள்தன்னை
கண்டிக்க உவயமில்லை
கூடும் எடும் என்பதல்லால்
கொடியிடை எண்ணெண்ணது
முடுமையொன்றணுகில்லார்க்கு
உரைத்திடும் வாரிதாமே 232

முடுமைகளொருவன்மீதில்
மூடியே நிரையவந்தால்
படிதனி விருந்தருந்த
பலவிதத்திட பாடில்லான்
வடிவுள்ள மனையாளந்த
வாழ்வதுக்கடிமையாக
குடிக்குல மாதுசெய்ய
குடித்தன குலத்துக்காகும் 233

குடித்தனங் குலத்தாள் செய்யாள்
கோதையர்க் கோர்வையில்லாள்
விடித்திடுவின்னமேது
மிவளுடன் பொருந்தினாலும்
மடுத்தடு முடிமையின்ன
மதிகமும் தெளிந்துதில்லால்
தொடுத்தறு ரொன்று ரெண்டு
தோகையர் மூன்று நாலே 234

நாலணி மாதர் வாழ
நால்வகை நவக்காயில்லான்
மேவின்னம் வருமைதீங்கு
மிடஞ்சலு மிடிமைதாவில்
சாலவு மாதமார்கள்
சகலமும் பிரையாசத்தால்
ஏலவு புருஷர்க்கன்னம்
இடும்பணி விடைசெய்வாளே 235

26.

இடுவது பணிவிடைக்கு
ஏந்திழை இணங்கில்லாளே
விடுவது மிவனைமாது
விலக்குவ தொழிவதல்லால்
கடினமா மிடக்காயொன்றைக்
காரியர் புருஷர்தம்மை
கொடினமா யுரைத்தபோதெ
கோதையர் தலாக்குமில்லை 236

தலாக்கது கிடையாதென்றே
தாரதர மேதுக்கென்றால்
அலாக்கினி லாதிமுன்னே
யஹம்மதை யணிவகுத்தான்
உலாக்கவ னசனமுண்டு
ஒருவனைவணங்கிக்கொண்டு
கலாக்குடன் குரைந்த மற்ற
கருமங்க ளுயத்தவன்றே 237

அன்றிந்த விதமதாக
மாளனு ரசன்முண்ணக்
கொண்டவ ளுயனைப்போல்
கோதையர் பணியவின்னம்
உண்டிட வசனமில்லா
தொன்னரொடி அசனமீய
மண்டலந்தனில் வகுத்தான்
மார்க்கமில் நெறியைக்கேளீர் 238

மார்க்கமா நபிகள் மற்ற
மனுடர்க ளாயதாலும்
மூர்க்கமு மிறையசன
முண்பதும் வணக்கமல்லால்
தோர்க்கமி விறை கருமம்
துலைப்பதுக் கிறையைக்கூவி
ஆர்க்கமா விழித்துவைத்தோ
ரவர்களும் காபரூமே 239

ஆகிய விதத்தைப்போல்
ஆழுரு ரசனமுண்ணத்
தேவியர் புருஷர் தம்மை
தினந்தினம் பணிவதல்லால்
காவியா பலதீங்காலும்
கன்னிய ராளர் தன்னை
கோபிய மொழியுறைக்க
கோதையர் ஹராமேயென்றார் 240

என்றுள்ள தேவிதன்னை
இணங்கியாண் டிருக்கும்பேர்கள்
பண்டுள்ள பிழைகள் மற்று
பல பல விதத்தைநாடி
என்றொடி மார்கள் தம்மை
உகையமா மனது வைத்தால்
கொண்டபின் தேவியார்க்கு
கூறிடக் குலம் வளமை 241

கூறிய விஷளங்கேட்டு
கோதையர் புருஷனார்க்குத்
தெரிய மண முடிக்கத்
தேன்மொழி பொருந்தில்லார்க்கு
வேறின்ன மணமிணங்க
என்றவள் தனக்குரைத்து
ஆரிய கருமஞ்செய்ய
ஆண்டவ னுரைத்ததாமே 242

உரைத்திடு முலகமாதா
ஓர்மையு முவமையில்லாள்
பொருத்தனுத்தாரமற்றுப்
பூருகம் போன பூவையாக்
குறைத்திட வகையொன்றில்லை
கோதையர் கொடிதிறைலே
திருத்திய மணமிணங்கத்
தீநெறி நீதந்தானே 243

தானிந்த விதத்தையல்லால்
　　தையலர் முதலேவேண்டி
மானவ ளகத்துள்ளாள்
　　மணவாளனை அடக்கியாண்ட
தேன்மொழி தனக்கு முக்கால்
　　தேசகனுரைக்கவல்லி
ஆணிய கருமஞ்செய்ய
　　உடையவன் சொன்னதாமே 244

சொல்லிய விதத்தைக்கேட்டு
　　சொந்தய ருகையமில்லார்
வல்லியர் மொழியுமில்லை
　　வாக்குமூன் றதிகமில்லை
எல்லையில் மணமிணங்கி
　　யிடங்களி லிருந்துவாழ
தொல்லைமுன் தோகைபக்கல்
　　தொடுப்பெனத் தொடுக்கொண்ணுதே 245

தொகுத்தவ ரிறையிபுராஹீம் தன்னைத்
　　தோகையர் விரும்பி சாரா
அடுக்குமு னவருட னணலிலும் வீழ்ந்தார்
　　அடுத்தவ ரனேகமு மாதனமீந்தார்
படைத்திடு மிறையோன் பாவை
　　ரெண்டுறைக்கப் பைங்கிளியார் மனம்பதரி
அடுத்திடக் கூடாதென வுரைத்தன
　　ரதுக்காதிக னவர்க்கென முடித்தான் 246

ஆதித னருள்படி அரம்பையர் ஹத்திஷா
　　அவர்முதல் கொடுத்தே காரிளையானூர்
காதியென் விழினேர் கண்டிடுமாதர்
　　கல்லெனக் கறிந்தவர் கடுகி
ஓதியே யெனக்குரைத்தன ரனேகம்
　　லென்றுடியார் மொழி ஒதுங்கி
சோதிக னுறைத்தருள்ப்படிநாலு
　　சுகமடவாரெனத்தொகுத்தேன் 247

தொகுத்திடும் நால்மடவார் சுரிகத்துத்
தோகைய ரெண்ணஞ்சுபேரும்
வகுப்புடனுதி தன்னுரைத்திடும்படியே
வைத்ததுக்கிளங்கொடி பொருந்த
பகைப்புட னிருக்க பராபர னருளால்
பதியெனப் பலபுகழ்படர
உகப்புடனிருந்த ஓர்மையுமறிந்து
உலகவர் நடந்திடு முகப்பே 248

உகப்புடந் தேவிமற்ற
ஒன்றொடி சுரிகத்தாரே
நகைப்பினில் பிரிசத்தோடும்
நாணிலத் துகைபத்தோடும்
சிகப்பொடு கருப்பைச்சாட்டி
சிப்பமும் பெரிதைக்காட்டி
வகுப்புட னீன்றதாயா
ரவளைப்போ லிருக்குதென்றால் 249

என்றவ னுறைத்தபோது
யேந்திளை தாய்க்கிணையாம்
அன்றவர் பாவந்தீர
சடுமைகொண்டுருமை விட்டான்
மண்டலத் தடுமை யில்லான்
மன்னவனிறையே நாடி
அன்றவ னிடைவிடாம
லறுபது நோன்புவைப்பான் 250

வைத்திடும் சுரிகத்தாக
வணைந்திடுந் தேவிமாரே
பெற்றவன் மகளைப்போலே
பேச்சொடு மிணையே சொன்னல்
குத்தமில் மகளே யாகும்
கொடும்பிழை தெளியவென்றால்
அத்தலமவனு மீவா
னுடுமாடொட்டகங்கள் 251

ஒட்டகம் நடையெருதுக்
கொன்றதுக் குதையமில்லான்
நஷ்டமும் கொடுமை தீர
நாற்பது நோம்புவைத்து
எட்டுப்பேர்க் கெளியோர்க்கன்னம்
யீந்தவன் தொழுது தெளபா
திட்டமா யுரைப்பானாகில்
தீனவர் குலமதாமே 252

குலத்தினி லொருவனேனன்
கோதையைப் பலவிதத்தால்
தலைத்தினி லுடப்பிறந்த
தையலுக் கிணையேசொன்னல்
நிலத்தவன் பிறப்பேயாகும்
நானிலம் பிழைகள் தீர
வலுத்தவன் தங்கம் செம்பொன்
அணிந்திடு மாடை யீவான் 253

ஈவதுக்கிடம்பாடில்லா
ஙிருபது நோம்புவைத்து
யேகனைத்தொழுதிருந்து
இருபது யிரவுமொன்ருய்
வாகுடன் தெளபாச்செய்தா
லவன்பிழை பொருப்பேனென்று
ஆகுமிவ் விதஞ்செய்யாமல்
அரம்பையை பணுகொண்ணுதே 254

அணுகிய அரம்பைமாரே
அனேகமும் விதத்தைச்சாட்டித்
துணிவுள்ள வுலகமீதில்த்
தோகையீ ராறுபேர்கள்
பிணியுள்ள பெருங்ஹறுத்தை
பேதையர்க்கிணையே சொன்னல்
முனிவது தெளிய நோன்பு
முடிப்பது மூவஞ்சாமே 255

மூவஞ்சு நோன்பு வைத்து
முடையவன் பாத்தை நாடி
ஈரஞ்சு மிசுக்கீனுக்கன்ன
மீவதுமய்யமாகும்
ஓரஞ்சு முளபுடவை
ஒருதங்கம் சதக்காச்செய்து
ஆறஞ்சு நோன்புவைக்கத்
தரம்பையர்க்காகுந்தானே 256

ஆகிய மடவார் தன்னை
ஆங்காரம் பலவிதத்தால்
ஏகிய சிரு ஹராமா
மியம்பிய விதத்திலொன்றே
வாகுட னினையே சொன்ன
லவர்களுக்கிணையே யாகும்
தோகைய ரிணங்குங்காலை
தொடுத்தநோம்பஞ்சு வைப்பான் 257

அஞ்சுநோம் பவனும் வைத்து
கஞ்சுபேர்க்கன்னமீந்து
மிஞ்சவு முளப்புடவை
இதுக்குங்கால்க் களஞ்சிபொன்னும்
பஞ்சையா யிருபேர்க்கீய
படைத்தவன் பருமேல சொன்னான்
வஞ்சகம் விலகுமுன்னே
வாழ்பவன் தீன் குலத்தோர் 258

குலத்தினி லொருவனானோன்
கோதையைப்பல விதத்தால்
மலைத்திடு மக்கூறுன
மங்கைமார் தங்களொன்றில்
தலத்தினி லினையே சொன்னால்
தையலர் மக்கூறுகும்
நிலத்தினில் பிழைதெளிய
னிருத்திய நோம்பு மூன்றே 259

மூன்றுநோம்பவனு வைத்து
முகிந்தபின் தொழுதுகொண்டு
ஆண்டவன் பாத்துக்காக
அழைத்தெழியோர்கள் தம்மை
வேண்டிய தானியங்க
ளிவனிரு கரத்தாலீய
ஆண்டவ ரிரசூல் சொன்ன
ரணைவரு மறியவென்றே 260

# 22-வது
# பெண்சாதி உடலில் ஹலாலும் ஹராமு மறிய வகை.

ஆறிவது மின்னமுண்டு
மாரிஷேமார்கள் தம்மை
மருவியே யிருக்கவல்லோன்
மார்க்கமும் நெறியைக்கேளும்
மருவய ரங்கமெல்லாம்
மடங்கலுங் ஹலாலதாகும்
தருவிய உடலில் மூன்று
தலமது தவிரத்தானே 261

தலை முதலவள் பதத்தில்
தங்கர முடலுக்காகும்
கலைநெறி காணுங்கண்ணால்
கருவழித்தெளிய நோக்கில்
நலநெறி படைத்தவல்லோன்
நடப்பதுக் கிது ஹராமாம்
உலகினி லுலமா வெல்லாம்
உரைத்திடும் வாரிதாமே 262

உரைத்திடு மடவாள் தன்னை
யுகந்தவன் சேரும்போது
எறுவெழி வழியைக்காண
யிருகரமிடஞ்சினாலும்
வருத்தியே யிணங்கும்போது
மவளுடல் பொருந்தினாலும்
பெருத்திடுங் கருமீதென்று
பெரியவ னறியச்சொன்னான் 263

சொல்லிய மாதாமாதஞ்
சுளிகணக்காலின் கீழே
வல்லவன் காணலாகு
மவனிரு கரந்தொட்டாலும்
மெல்லிய பாதம் ரெண்டு
மிவனுடல் சிரத்தில் பட்டால்
அல்லலின் பெரும் ஹராமா
மாதியுமருளினானே 264

நாளினில் மடவார் தன்னை
நாயகன் பொருந்தும்போது
பூணிய யாசக்காலே
பூவைதன் றேகமெல்லாம்
ஊணியே சுவைத்து வுள்ளே
உகந்தவ னிரக்கினாலும்
வானியு முலையும் பாலும்
வடுக்களி விரத்தம் தானும் 265

தானிந்த விதங்கள் மூன்றாம்
தையலைப்பொருந்தும் நேரம்
மானிய னாசை மீறு
மயக்கமி லருந்தினோரால்
தானவ னாசையாகும்
தையலே ஹலாலேயாகும்
ஊணது ஹலாலமென்று
உடையவன் சொன்னதாமே 266

சொல்லிய மாதை வாய்நீர்
சொர்தையா பாலுரெத்தம்
எல்லையில் பொருந்தி வாழ்ந்து
இருக்கையில் ஹலாலாமின்னங்
கொல்லிய வருத்தந்தானுங்
கொடும்பிணி தீர்த்ததாலும்
வல்லியர் வாய்நீரெத்தம்
வளதமு தருந்தலாமே 267

அருந்துவ தாசையொன்று
அரும்பிணி அவர்கட்கெல்லாம்
உரங்கொள்ள வேண்டுமென்று
வுணவுக ளதிகமென்று
திரங்கொள்ள பலவகையும்
திண்ணவு முகப்பா ளுகில்
அரங்கொள்ளும் குயிர்க்குலையி
னதிகமாங்காபி ராமே 268

ஆகிய விதங்கள் செய்தா
லரம்பைய ரணுகொண்ணாது
பாவையை யிணங்கவென்றால்
பத்தடியாகுந்தெண்டம்
தேவியு மாளமாரும்
தினந்தினம் முழுகி நோம்பு
ஏகியே பரத்னைதருடி
ஏழுநோம் பிவர்கட்குண்டே 269

இவர்குல மடவாராக
யிருப்பவள் ரேகந்தன்னில்த்
தவங்கிய மலஞ்சலமும்
தையலறு திறந்தானுங்
கவங்கொள்ளுங் காமமந்தக்
காரிகை எழுவகையும்
வனங்கலைந் தாய்தெரிந்தா
லதில்வரு மிடிமை கேளீர் 270

மிடிமைக ளிவனுக்குண்டு
மிடிமைக ளதிகமாகும்
துணிந்தவன் பொருத்ததாலே
தொடுப்பது சிரு ஹராமாம்
பணிந்ததைத் தொழுது தௌபா
பத்துநோம் பவனும் வைப்பான்
பிணியது மங்கைமீதில்
புரப்புட னடுமையில்லான் 271

இல்லக மடவார்க்கேது
மெத்தல பொருந்தவேண்டும்
வல்லவன் செய்வதெல்லாம்
மக்கூ ரென்றே
சொல்லிய பிழை தெளிய
தொழுதவர் தௌபாச்செய்ய
நல்லதென் றிரசூல் சொன்னார்
நாரியர்க்கின்னமுண்டே 272

நாரியர் புருஷன் தன்னை
நாடியே மருந்துசெய்ய
கூறிய கஷ்டமற்ற
கோதைய ருடலிலேதும்
ஆரிய ரெடுத்தவளின்
ஆளனுக் கருந்த யீந்தால்
பாரினி லவளைச்சேர்ந்தால்
பாங்கியர் பெரும் ஹராமா 273

ஹராமதை அறிந்திடாத
காளையர்க்கொன்றுமில்லை
தராதர மறிந்தா னாகில்
தானவ ளிணங்கொண்ணாது
அது முத லறிந்திருந்து
தோகையை யிணங்கினாலும்
நிருகாஞ் செய்யநாடும்
நேரிளையான பேர்க்கும் 274

நேரிலே காலேமார்க்கு
நிலத்தினில் தெண்டமில்லே
பாரினி லவர்கள் மாண்டு
பருநர கழிவதென்று
மீறிய பாவத்தாலே
யிவர்களு மீளாரென்று
கூரவு மிரசூலுல்லா
குறித்தனர் தகியாவென்றே 275

## 23-வது

## ஸ்திரி சாதியுடைய நடப்பு.

வேண்டிய வுலகவாழ்வை
விரும்பிய காலேமார்க்குத்
தோன்றிய மாதைமார்கள்
தொழுதிறை தனேப்புகள
ஆண்டவன் வணக்கம்போ
லாளனே வணங்கவேணும்
யீன்றவள் குளவிபோல
இரக்கமும் தயவும் வேணும் 276

வேணுமென் றடிமை கொண்ட
விதத்துள்ளான் பணிவிடையும்
ஆணிப்பொன் வயிரம்போல
வடக்கத்துக்கமா வேண்டும்
பானிலம் புவியைப்போல
படும்பாடெல்லாம் பொருப்பாளாகில்
நாணமு முடல்நிரைந்தால்
நாரியர்க்கழகுதானே 277

தானவர் தந்தை தாயார்
சகோதர மிறந்திட்டாலும்
வானகன் வணக்கத்துக்கும்
அறிவுகள் படிப்பதற்கும்
மானவன் புருஷன் வாக்கால்
மகிழ்ந்துத்தாம் பெற்று
போனவள் வருகமட்டும்
புருஷனும் காவலாமே 278

காவல னுகையத்தோடு
கன்னிமார்தானும்
போகவும் துணையதாகப்
பொழுதுபோ யிருண்டனேரம்
மாகமு மெலிந்துகூனி
அவள் கையில் கோலுமூன்றி
யேகமு மொடுக்கியாடை
யென்பது மழுக்குத்தாமே 279

ஆகுமிம் மடவார்வாழு
மவர்தலை மீதிலெல்லாம்
ஏகனுத் தாரமாக
யிரங்கிடும் ரகிமத்தென்றும்
பாகுசேர் மொழியாளிந்த
பன்னிரெண்டுபேர்கள் முன்னே
ஏகமு மக்கணுயிட்டு
இருகர முகம்காட்டலாமே 280

# 24-வது

## ஸ்திரி சாதி இந்த 12-பேர்கள் முன்னே நிற்கலாம்.

---

காட்டுவ தவளையீன்ற
காரிகை யுடப்பிறந்தான்
நாட்டினி லிவளையீன்றோன்
நாரியர் புருஷனாரும்
தேட்டிய ஞானமக்கள்
தென்மொழி புருஷன்மக்கள்
ஊட்டமு துடப்பிறந்தோ
ருடப்பிறந்தவர் பாலர்தானும் 281

தலைத்தவர வுலியாக்கள்
தனக்குள்ள அடிமைதானும்
மருத்துவ மதிகமான
மனிதரில் வயதுள்ளோரா
தொகுத்திடு மிசுலாமான
தோகைய மருத்துவத்தார்
வகுத்திடு மீறுறுள்ள
வாரீசென்றெண்ணலாமே 282

ஆகுமிவ் வாகுள்ளோர்க்கு
அரம்பையர் காமுகரும்
ஏகமு மக்களைவிட்டு
இவர்கள் முன்னிற்கலாகும்
பாகைய ருலகோர்தம்மைப்
பார்த்திபம் மொழிந்தா ளாகில்
ஏகவன் லானத்தெல்லா
மிரங்கிடுமிவர்கள் பங்கில் 283

இவர்களிவ் வாறுஞ்செய்ய
யிவர்க்கென்ன தெண்டமென்னில்
அவர்களைத்தோலொன்றுமேலே
அடிப்பது மோரடியாய்
யெவர்களு மிஸ்க்கீனென்று
யீந்துதன் னேம்புமொன்று
அவர்கள் வைத்தொழுது கொள்ள
அரும்பிழை யிரங்கிப்போகும். 284

# 25-வது
# ஸ்திரி சாதியை தள்ளுகிறதும் சேர்க்கிறது மறியும் வகை.

இரங்குமென்றிரசூல் சொல்ல
இருபதம் மாமரர் போற்றி
திறங்கொள்ளுந் தீனெறியில்
தெளிந்துபார்த் தெடுத்தமங்கை
அறங்களின் செயலே யல்லால்
அதிகவெவ்விதமுள்ளாரே
உரங்கிய மனைவிலகு
மொன்றேடி மார்களாரு 285

ஆரென ருமரு கேள்க்க
அஹம்மத ரருளிச்செய்தார்
சீருடன் வாழ்ந்திருக்கும்
செம்மலின் பாத்திறனும்
பாரினில் புருஷரில்லா
வாலிப மடந்தை தாமும்
ஊரினில் ஞதியுள்ள
ஒன்றிய அடியார்கள் மேலும் 286

மெல்லியர் தலைநரைத்து
மேனிஉ திரரியங்குமுன்னே
எல்லையி லிவர்தனக்கு
ஏதொரு வருத்தமின்றில்
அல்லினும் பகலில்நேரம்
அப்புரம் வீடுவீதி
சொல்லிய அரண்மனையில்
சொந்தமாமரசர்கூட 287

கூடமாம் மேடை மெத்த
கொலுவதி மண்டபத்தில்
ஆடிய களரிமற்ற
அறிவுகள் படிப்பதற்கும்
பேடியா வொருவராக
போய்வருஞ் செயலுள்ளோர்கள்
தேடிய வேசையாகும்
திருநெறி தப்பினளே 288

தப்பிதம் விலகதென்றால்
தையலர் முதுகுதன்னில்
ஒப்புடன் தோல்கவுசால்
உரைக்க பத்தடி அடித்து
அப்பொழு தொன்று நோன்பு
மவள் பிடித்திடவும் வேண்டும்
கற்பினைச்செய்யாராகில்
கடும்பிழை தெளியாதப்போ 289

தப்பியே யொருத்தியாகத்
தனிவழி நடந்தாளாகில்
எப்படி யிருந்ததாலும்
ஏந்திளை எழுந்ததாலே
கற்புடை யவளானாலும்
கற்பபழிந் தவளே போனாள்
ஒப்புடன் மிகையாருள்ளாள்
உலகவர்க்கையந்தானே 290

தானவ னொருக்கால் வென்று
தனிவழி தினஞ்சென்றாலும்
ஆனவன் மிகைபொருத்து
மன்னவனளைக்க வென்றான்
நானிலத்திருக்கால் பார்க்க
நபிகளும் நயந்து சொன்னார்
பூமியில் முக்கால்போக
பொருத்தமும் விலகிற்றன்றே 291

தனிவழி ஒருக்கால் சென்ற
தையலைத்தள்ளவென்றால்
இனி இவன் கடனலொன்று
இருத்திமுன் னீயவேண்டும்
துணிவுள்ள மங்கையாரும்
தோன்றலு மிணங்க நாடில்
பிணியது தெளிய இந்த
பேசிய தெண்டமாமே 292

தெண்டமாம் விளக்கிடத்தி
தேசியர் முதுகுதன்னில்
கொண்டொரு சவுக்கடிகள்
கோதையர்க்கிருபதாகும்
யென்றொரு தங்கக்காசு
எழுமுளத்தாபிலேழ் நோம்பு
அன்றவள் தொழுதுவந்த
ஆளனை யிணங்கலாமே 293

இணங்கியே யிருந்தமாதர்
இருதரந்தனியே சென்றால்
துணிந்தவள் தனை விலக்க
துலைப்பது கடனில்பாதி
கனங்கொள்ளும் புருஷனோடே
கன்னிய ரிணங்கநாடில்
குணங்களில் பிழை தெளிய
கோதையர்க்கிது கடனே 294

இனக்குமுன் ஒருகால் சென்று
ஏந்திழை துலத்துள்ளோர்க்கு
அதுக்கிது இருபங்காக
அருங்கடன் துலக்கவேண்டும்
ஓதுக்குமுன் பிழைகள்தன்னை
ஒன்றொடு துலத்தில்லார்க்கு
அதுக்கிது இருபங்காகு
மதுமூன்று மூன்றுமாமே 295

ஆகிய மடவார்க்கென்று
அடியுமுப் பதுவுமாகும்
ஏகிய அவள்காரத்தா
விருமுளத் துயிலுமொன்று
தோகைய ரிறையை நாடி
தொழுது நோன்பி லவளுமூன்று
மாகந்தன் காம்விளங்கும்
காசவள் சதக்கா மூன்றும் 296

மூன்றணி கொடுப்பதெல்லாம்
மிடியருக்கிறையை நாடி
ஆண்டவன் கொடுக்கச்சொன்ன
ததின்படி அவள் கொடுத்து
வேண்டிய தொழுகை நோன்பு
விற்கவுமவள் முடித்து
தோன்றலை இணங்கவென்று
தொகுத்திர சூலுஞ்சொன்னார் 297

சொன்னமுன் விதத்துக்கெல்லாம்
சொல்லுவ ததிகமாகும்
முன்னுள்ள கடனே யெல்லாம்
முடித்துள்ள குழலினற்கு
வின்னமாம் கடனேயொன்று
விதிப்பதும் மார்க்கமாகும்
ஆன்றுள்ள கடனுங்கூட்ட
அரம்பையர் ஹராமதாமே 298

ஆகிய பெரும் ஹரா
மாரிஷை பிழைகள் தீர
வாகவா முதுகுதன்னி
லடிப்பது சவுக்கினாலே
ஆகமு மவள்தன் மேலே
அறுபது அடி யடித்து
தோகையர் தொழுது நோம்பு
வைப்பது மாறுதாமே 299

வைத்தவள் புடவையாறு
முளத்தினி லவளும்வந்து
சுத்திய புடவையாறு
முளத்தினி லிருக்குமொன்று
குத்தமும் தெளியவாறு
காசொரு கோதும்பைரொட்டி
இத்தனை யொருவர்க்கேனு
பக்கீர்களுக் கிடுகவேண்டும் 300

இடுவதுக் கில்லாரென்ற
ஏழியர்க ளென்றதாலும்
படுவதுக்கடி பொருக்கப்
படும்பிணி பொருக்கதாலும்
மூடிவது கொடியதெண்ட
முழுதுமே பொருக்கவென்று
வடிவுரு நபியுஞ்சொன்னார்
வகையவை யறியவென்றே 301

அறிந்திடும் விதங்களேது
மாரிழை பிழைதெளிக்க
சிறந்தவள் வயிற்றில் கெர்ப்பம்
செமித்தவள் குளவிதானும்
பிறந்தவள் நாலுபத்து
போனபின் செலுத்தவென்று
அறிந்திடா குழந்தைகன்னி
யவருடன் சிமந்திடாதே 302

சிமந்திடும் விதங்களெல்லாம்
சேரவே தெளிந்தமாதா
அமந்தடி பொருந்திடாம
லன்றமுன் னடக்கையானல்
முந்தவ னிறந்திட்டாலும்
னூரியே நாடொண்ணது
கந்தவ னிணங்கில்காபர்
நிலையென நரகிலாவான் 303

ஆகிய பிள்ளைமுன்றல்லா
ரரம்பையர்க்கதிகமில்லை
யேகிய மடவார் கடனி
லிடுவது மெட்டி லொன்று
போகிய மடவாரின்னம்
பொருந்தி வாழ்ந்திருக்கநாடில்
பாகையைக் குளியில்நாட்டி
பலருங்கல் லெரியவேணும் 304

எரிந்திட விதமில்லாம
லிணங்கியாண் டிருப்போரெல்லாம்
தெரிந்திட அறியச்சொன்னேன்
தீவினறி யுடையோரல்ல
முறிந்தவன் முன்போல் சொல்ல
முழுதுமே கொடுக்கவேணும்
தரிந்தவ ளய்யமென்னில்
லளிதுலத்தவளுந்தானே 305

தானவள் குலத்தின் வாருந்
தையலுக்கிது செயலே
கூன்மிகப் பொருந்திருந்த
குற்றமு மாளன்மீதில்
மானவள் குலத்தாளான
மங்கையிருக்கும்போதில்
பூணிய மிகை விளங்கப்
புரவல ருலமாவெல்லாம் 306

புாவல ருவமாவெல்லாம்
புகழிர சூனுரைத்த
மறைபொரு ளறிந்துமாலீக்
கென்றிடும் னுகுமாமீதில்
நிரைப்பிணு ரொழுங்கு
நிகழ்த்திமுன் தரிக்கும் வாரும்
முரங்கிய அகம்வெருத்தல்
லொன்ருடிக் குகையர்தானும் 307

## 26-வது

## ஸ்திரி ஜாதி வெளியில் பிரசங்கமாக இருக்கிற வகை.

தாங்கொண்ணு வருமை தீங்கு
தப்பிடுஞ் சமையத்தாலும்
பாங்கவர் குலங்களோடே
பாதையள் வருகையாலும்
பூங்குழல் மடந்தைசொல்லின்
புருஷனும் நடப்பானெங்கில்
ஏங்கிய பசியினுலு
மேந்திளை னினவற்ருலும் 308

ஏந்திளை வேசைமாரை
எடுத்துவைத்திருந்ததாலும்
தாழ்ந்திடும் வயசுபாதி
தான்சென்று யிருந்ததாலும்
மாந்தையர் பிரவூர் செல்ல
மனம்பொருத் திருப்பாணுகில்
ஆய்ந்திடும் புலவர் மற்ற
ஆண்கலை யில்லாளாமே. 309

ஆண்கலை யவளேயாகும்
அரண்மனைபேரலாகும்
திங்கவள் வீதிலென்று
தீனவருரைக்கொண்ணுது
ஒங்கிய மாலிக்கென்று
உரைத்திடுமனுகுமாமீதில்
மாங்கலைப் பிணையின் வள்ளல்
முகம்மது நபியுஞ்சொன்னூர் 310

# 27-வது

# இவ்விதமான ஸ்திரி ஜாதிகளுக்கு மகரு கிடையாது.

சொன்னதோர் நபியின் பாதம்
சோதிதன் நாமம்போற்றி
இன்னமு மடவார் தம்மி
லெவ்விதத்துடையபேர்கள்
தன்னிலே மகரில்லாம
னையலரிளக்கும் வாரும்
மன்னவன் மஹர்கொடுக்கும்
மங்கய ரார்களென்றூர் 311

ஆளனே வெருத்து மங்கை
யசலிடம் வாழ்ந்ததாலும்
மீளவும் பதியிளந்து
மெல்லியர் வேசையாளுல்
தோளனே சதி செய்தாலும்
துணிந்தொரு கொலைசெய்தாலும்
வாழ்வு மொருபுரத்தில்
வாழவென்றெழுந்தபேரும் 312

பெருமையாப் புருஷர்க்காகப்
பேதையரிழந்திட்டாலும்
வரும்பினி லிவர்க்குண்டான
வாரி சரிவழுங்கூடி
யுருமனை யிளந்தவார்த்தை
யுரைத்தக மெழும்பினாலும்
கருமமென் றிவர்கட்கிய
காசொரு கடனுமில்லை 313

இல்லையென் றுரைத்தோர்பாத
மெழுந்தடி வணிங்கிச்சொல்வார்
வல்லிய பேழுபேர்கள்
வகையவ ரேதுனாலே
சொல்லிய பொருளில்லாமல்ச்
சொந்தையரிளந்ததென்ன
வல்லவன் தூதரான
வாத்தியா ருரைத்தவாரே 314

உரைத்திடும் புருஷன்மாரை
ஒன்றொடி வெறுத்தெழும்பி
யிரத்தினில் வாழ்ந்திருந்தால்
பேதையர் குபிரேயாகும்
பரைத்திரை தீதாரில்லா
பாங்கியர் மகருமில்லை
சருத்தினில் தீன்விளங்கும்
சபாயத்து மில்லைதானே 315

தானவள் குலமிளந்து
தையலர் வேசையானால்
வானகன் தீனிளந்து
வையகர்க்குபிறானாலும்
நானிலந்தீர்ந்தபின்பு
நாகல்லா லவர்க்கொன்றில்லை
ஊணிய கருமமில்லை
உம்மத்தென் றுரைக்கொண்ணாதே 216

உரைக்கொண்ணு புருஷன் தன்னை
ஒன்றோடி கொலைசெய்தாலும்
மரக்கொண்ணு நபிமற்றோரை
மானிடர் கொலைசெய்தாலும்
சிறக்கும் வாரிறையோன் தன்னை
செய்திடும் கொலையேயாகும்
பாத்திரைக்கெதிரேயானால்
பருமறை நெறிதானேது 317

ஏதொரு கொலைசெய்தாலும்
மெவ்வரையுங்கெடுக்க நாடில்
ஆதியின் குருமார்தம்மை
அநீதங்கள் செய்திட்டாலும்
ஏதொரு களவு செய்து
மெவர்தமக்குருதிமாரி
ஈதெனப் பிழைகளைந்து
மிறையவன் பொருப்பதில்லை 318

பொருத்திடா விதமிதான
புவிபஞ்ச பாதகரில்
ஒருத்தருக்கிறைதீனில்லை
உம்மத்தென் றுரைக்கொண்ணுது
வருத்தமி லஞ்சிலொன்றில்
வயங்குலை பெரிதுனாலே
பொருத்தமும் பொருளுமில்லை
புகழ்மறை நீதர்சொன்னார் 319

சொல்லிய மாதைமார்கள்
சுகம்பல சொந்தநாடி
மெல்லியர் புருஷர்க்காக
யிவர்மக ரிழந்தோமென்றால்
வல்லியர் வேண்டனுடி
லவர்களுக்கேதுமில்லை
வல்லவன் வேதமீந்தோன்
வாங்கினு லவர்க்குமுண்டே 320

ஒன்றரை மாதஞ் சென்ற
ஒன்றொடிக்குழந்தையில்லை
என்றிடும் விதமேதென்றால்
எவர்களும் குபிரில்வாழ்ந்தோர்
வென்றிரை தீனைநாடி
வெகுமுத விழுந்தவந்தோர்
பண்டுள்ள முதலுக்காக
பருங்குபிர்சேர்ந்த தொக்கும் 321

சேர்ந்திருந் தரம்பைமார்கள்
சியவிதி லெழுந்தபேர்கள்
வாழ்ந்துமுன் புருஷர் சேர்ந்து
வந்தவ ளிருக்கநாடில்
ஏந்திளை மார்கள்க்கிந்த
இவ்விதஞ் செய்திட்டாலும்
பாந்தக மவளுக்கிந்தப்
பகர்ந்திடும் தெண்டந்தானே 322

தெண்டமிவ் விதத்துடைய
தேன்மொழி யேழுபேரில்
கொண்டவன் கடனே வாழ்ந்த
கோதைய ரிழந்தபேர்க்கு
என்றொரு தெண்டமில்லை
யிவரல்லா லருவர் தம்மை
மண்டலத் திறக்கவேண்டும்
மதுவில்லா தீதிவர்க்கே 323

அவர்களை ஒருந் துளியி
லைவருட லைரபுதைத்து
எவர்களு மிளையர் நூறு
எறியும் கல்லாயிரந்தான்
இவர்களு மிறந்தாலந்த
இடந்தனில் புதைக்கவேண்டும்
அவர்களுக் குயிரிருந்தா
லன்னக ரகற்றவேண்டும் 324

நகாந்த பதியை விட்டு
நாலரை காதமட்டும்
இவர்களு மாதமூன்று
வானபின் வருகவேண்டும்
இவர்களு மேழுநோன்பு
இருந்துபின் னிணங்கலாகும்
அவரிந்த விதம்செய்யார்க்கு
மருவித மிதுவேயாகும் 325

ஆகுமிம் மடவார்க்கென்று
அடிப்பது ஐயெட்டாக
தோகைய ரிருபத்தொன்று
துலைத்திடா நோம்பு வைத்து
வாகுநால் மூளப்பிடவை
யதுக்கொரு களஞ்சிபொன்னும்
ஏகுமோர் பக்கீர்க்கன்னம்
இடுவது விதங்களெல்லாம் 326

விதனமில் முழுதும் செய்ய
விதனவாரென்ற தாலும்
ஆதனமின் முதவில்லார்க்கு
அனுவதில் குறைக்கொண்ணுது
பதிதனில் விதமே யல்லால்
பாரினி விதுமேவில்லை
இதுவினை தெளியாவாழும்
என்னும்மத் தல்லதானே 327

தானிந்த விதங்கள் செய்த
தையலர் மஹாநமுண்டு
கூன்கொலை யவள்பின் செய்தால்
குத்தமு மாளன் மீதில்
வினதி விளக்கொண்ணுத
விவள்கட னனத்துமுண்டு
பூணிய சரகில் சமஞ்சிலப்
பொருளிளந்தார்க்குமில்லை 328

# 28-வது

## இவ்விதமான ஸ்திரி ஜாதி வாங்கின மஹரைக்கொடுத்து விடவேண்டும்.

இல்லையென் றுரைத்திடாமல்
ஏந்திழை மஹருபெற்றால்
தொல்லையென் றிவனைக்கண்டு
தோகையர் விலகநாடில்
எல்லையி லவன்கொடுத்த
ஏந்திழை கொடுக்கவேணும்
சொல்லிய கடனுமென்று
தொகுப்பது மங்கைமீதே 329

மங்கைய ரிறந்துகாலை
மண்ணதி லடக்கிகார்க்கும்
மங்கினி லீசாவந்து
மவளுயிர் பாதியீந்து
கொங்கையர் தனையுங்கூட்டி
கொண்டொரு காலைதன்னை
குங்கணி யாசன்முன்பாக
கூறிட நீதமங்கில் 330

அங்கிலு மீசாசொல்ல
அவன்கட னவள்கொடுத்து
அங்கவ னனருங்காண
அவளொரு பிடிமண்ணுனள்
தங்களால் போகுமந்த
தையலர் தனக்குமாள
றனகட னிழந்துதான்
கொடுத்தது வாங்கவேண்டும் 331

வேணுமென் றிவள்க்கு முன்னாள்
வெகுமுத லீந்திட்டாலும்
மானிய மஹாரவனுக்
கடங்கலுங் கொடுத்திட்டாலும்
தோணிய மிகனிவன்மேல்
தோகையர் சிமத்திதள்ள
பூணிய மிகை நிரைந்தால்
பொருளவள் கொடுத்திட்டாளே 332

கொடுத்திடா கடனுந்தானம்
கோதையர் விலகநாடி
வடுத்தவன் முதலுமில்லை
யாளன்மேல் மஹருமில்லை
எடுத்தவள் கொடுக்கவென்று
ஏங்கினை யிழந்ததாலே
அடித்திட அடியெண்ணஞ்சும்
அவள்மஹ ரீனத்துந்தானே 333

தானவ னிறையோன் சொன்ன
ததின்படி நவிலவள்ளல்
ஆனநல் லுலமாவெல்லா
மரைந்தனர் சாருல் அயினன்.
ஈனமொன் றணுகா கிதாபில்
இவ்வித மிலங்கமின்னம்
மாணிப மாதை தள்ள
மருத்தினன் விதமுமுண்டோ 334

# 29-வது

## இவ்விதமுடைய ஸ்திரிஜாதிகளை தள்ளிப்போடலாம்.

உண்டென்ன உலகமாளும்
    ஒன்றுடி மாரைக்காளை
கண்டெடுத் தவர்கள்தேரி
    கன்னியை இணங்கு நாளில்
பண்டவள் தனக்கு இந்த
    பழுதுகள் ஒன்றுங்காணுன்
கொண்டபின் கண்டானந்த
    கோதையர் விதியும் நாலும் 335

கோதையர் விதியாலிந்த
    கொடும்பிழை விழைந்துதென்றால்
மாதையர் தனைவைத்தாள
    பனஞ்சகித் தில்லையாகில்
பேதையில் வாரிலொன்று
    பேசலா மென்பதாகில்
வேதையென் றிதை விலக்க
    வேண்டினுல் விலக்கலாமே. 336

ஆகுமிவ் மடவார் வாழும்
    வங்கொடு காத்தம்காரில்
பாவைய ரிருதம்ரூப
    பருத்தொரு தமராதாகில்
தோகையர் பதத்தை மூடி
    தோல்வெழி முழிதோன்றில்
ஏகமில் கூன்குருடு
    யேதொரு குஷ்டம் தோன்றில் 337

தோன்றிய பயித்தியமும்
தோகையர் வலிப்பு மூமை
வேண்டிய அபின்மதுக்கள்
வேரியுடன் சேர்ந்தகஞ்சா
காண்டிகை யறிந்திணுலும்
கருமமீ ருறிலொன்று
ஊன்றியே விலக்கநாடி
உலகவ ரறியச்சொன்னேன் 338

சொல்லிய வின்னமுன்னே
சோதினை யறிந்திணங்கில்
எல்லையி லகலப்பாதி
யிணங்கிப்பின் னறிந்தாணுகில்
நல்லவ னீன்றதெல்லாம்
நாரியரேந்தவென்றும்
வல்லியர்க்கிதுவே யல்லா
வதுக்குமேல் கடனுமில்லை 339

கடனிந்தக் காரிமாரைக்
காளைய ரிணங்கநாடில்
திடங்கொள்ளு மபின்மதுக்கள்
தேன்மொழி யருந்திஞேர்தன்
சடங்கெட வுடல்குலைய
சவுக்கடி யென்பதாகும்
துடங்கிய யேழுநோம்புத்
தோகையர் பிடிப்பதன்றே 340

பிடித்தவர் முடித்தபின்பு
பேதைய ரிணங்கலாகும்
படித்திடும் வின்னம் தப்பா
வையகர்க்கேதுமில்லை
அடுத்திட மனஞ்சகித்தே
ரவர்க்கொரு தாழ்வுமில்லாத்
தொகுட்திடக்குத்தமென்று
இறையவன் சொன்னதில்லை 341

## 30-வது

# இவ்வித ஜாதியும் தள்ளிப்போடலாம்.

இல்லையென் றிரசூல்சொல்ல
இருபதம்மாமர்போற்றி
மெல்லிய ரிவர்கள் தானோ
மின்னமும் பலதுமுண்டோ
சொல்லுமென் றிரசூல்தன்னை
தொழுதடி வணங்கி கேட்கத்
தொல்லையோன் றணுகான் தூதர்
தொகுத்தவ ருரைத்ததாமே 342

நாரியர் கஷ்டமென்று
நசீஸ் சென்றும் விலக்கமில்லாள்
ஊரினி லிருவர்காண
ஒன்மிருடி யளிந்தபேரும்
ஆரிய ஆழர்தம்மை
யடுத்திடுமரம்பைமாரை
வாரிவை யாரிலொன்று
லவள்தனை விலக்கலாமே 343

விலகிடும் மடவார்க்கிய
வேந்தனும் பருசம்தன்னில்
உலகினி லவளுக்கென்று
புரைப்பது பாதியாகும்
கலைகளி லின்னமுண்டு
கடனவ னுலிமொன்று
பலபல விதமுடைய
பாங்கியே விளங்கவுடில் 344

நாட்டமா நெறியின் தீனின்
நடபடி யறிந்திலானே
கூட்டவுமேழு மூன்று
கோதையற்கடியு முண்டும்
வீட்டைவிட் டகலவென்று
மிவள்கடன் பாதியாகும்
தேட்டிய மஹடிக்கிதே
தெண்டமு மவளுக்கில்லை 345

தெண்டமாந் திருடினோர்க்கு
திருக்கர மறுத்துச்சேர்க்க
அன்றவள் தனைவிலக்க
அவள்கட னுவிலொன்று
கொண்டவன் தனையடித்த
கோதையைக் கொல்லவேண்டும்
என்றிவள் தனைவிலக்க
இவளுக்கு னுவிலொன்றே 346

ஒன்றொடிமாதை மார்கள்
உதிரமாய் கஷ்டந்தன்னை
கண்டிடில் விலக்கில்லானே
கவுசடி நாற்பதாகும்
அன்றவள் தனைவிலக்க
யறைமக ரவளுக்குண்டு
கொண்டவ னிருக்கமங்கை
குலஸ்திரி யளியொண்ணாதே 347

அளிந்திடும் மடவார்க்கென்று
அடிப்பது னூறடியாந்
தெளிந்திடப் பிழைகளெல்லாம்
தெண்டமு வஞ்சுநோம்பு
சுழுந்திட வுடல் முழுகி
குதாவென தொழுதுகொண்டு
எழுந்தவ னிறையைநாடி
யென்பிழை பொறுப்பாயென்றே 348

என்றவ ளெழுமுளத்தி
லெடுத்திடும் துயிலும் வெள்ளை
கொண்டொரு தங்கக்காசு
கோதும்பை யுரொட்டியொன்று
மென்றொரு பக்கீர்க்கன்னம்
யீந்தொரு விதுகொடுத்து
வண்டணி குழலினளும்
வாழ்வது பண்டுபோலே 349

பண்டுள்ள பாவந்தீர
பாவைகள் செய்திலார்க்கு
அன்றவ ளவரை மககொடுத்
தகத்தைவிட் டகலவேண்டும்
மண்டல மமைத்தோன்றூதர்
முகம்மது நபியுஞ்சொன்னர்
சென்றதை இணங்கினோர்கள்
செழுநர கழியுவாரே 350

## 31-வது

## இவ்விதமுடைய ஸ்திரி தள்ளிப் பொருத்திஞல் தள்ளலாம்.

வாரினில் கணவனோடு
மவன்குல மூத்தரோடும்
ஆருமறிய மனம்பொருந்தி
யவளுவாழ்ந் திருப்பதில்லை
தேரிய குடித்தனங்கள்
தேன்மொழி தெரிந்தில்லாளுங்
காரியர் குலமடந்தை
காரியன் குலந்தபெரும் 351

பேரிறை நாமஞ்சொல்லி
பெரும்பொய்யி லாணையிட்டு
வாரினில் பெருமை பொய்யும்
வகிலொரு படாரும்பேசி
ஆரவர் பொருளைவைத்த
அமானித மழித்திட்டாலும்
மீரிய பெருங்கினுண்ண
மெத்தவும் கோபமுள்ளாள் 352

உள்ளக பெருமைதானும்
உதாசன மொழுங்கில்லாளும்
கள்ளிய கணவன்வெக்கம்
களரியி லிளைத்தபேரும்
துள்ளிய வீரியத்தாள்
தோகையும் வெடிப்பு நாரில்
தள்ளியும் புருஷன் றன்னை
தகப்பனார் பாலமொன்னில் 353

என்றிந்த மூவாருள்ள
யேந்திளை மார்களெல்லாம்
கொண்டவன் விலக்கநாடி
கோதையை விலக்கலாகும்
பண்டவை னறிந்திருந்தால்
பருகடனொன்று முக்கால்
கொண்டபின் னறிந்தானுகில்
கூறுமுக்காலில் பாதி 354

பாதிரை விழிகள் சேறும்
பதினெண்பேர் மடவார்தன்னில்
னீதவன் குலத்துக்கென்றாள்
நீதக்குடித்தனங்கள் செய்வாள்
பேதமை பெருமை பெருந்
தீன்பேச்சொடு கோபமுள்ளாள்
மாதைய ரொழுங்கில்லாமல்
மானங்கள் தெரியக்காட்டில் 355

காட்டிய குணமாறுள்ள
காரிகை மாரைத்தள்ள
நாட்டினில் முன்னறிந்திருந்தால்
நபக்காயவள் தனக்குமுக்கால்
கூட்டிப்பின் னறிந்தா ளுகில்
கூறுமுக்காலில் பாதி
ஆட்டிய சவுக்கடிகள்
வஞ்சடித்திணங்கலாமே 356

இணங்கிய மடவாரின்னம்
யிருப்பிடங் களரியகண்டு
குணங்களில் வீரியமும்
கோதையர் படரும்பொய்யும்
எனங்களை வெருத்திருப்பாள்
இவள்மொழி உதாசனங்கள்
கனங்கொள்ளு மாரிலொன்று
கண்டுமுன் னிருப்பாளுகில் 357

கண்டுமுன் னிருந்தாலந்த
காரிகை மஹாருபாதி
கொண்டபின் கண்டால் பாதி
தனக்குமுக் காலதாகும்
வண்டியை யிணங்கத்தெண்ட
மடிப்பது நாற்பதாகும்
கெண்டையின் விழியாளந்தக்
கெதியினில் வாழலாமே 358

வாழ்ந்திடுங் குலத்தாள் பொய்யாள்
வல்லவன் பேரைக்கூவி
ஆயிந்தவ ளாணையிட்டு
யமானித மழித்திட்டாலும்
காத்திகன் புருஷன் வெக்கம்
களரியில் தூத்தினுளும்
பாந்தியா புருஷர்தம்மை
பாவனர் பிதாவென்றாலும் 359

என்றிந்த விதங்கள் நாலும்
இவளைமுன் னறிந்தாருகில்
அன்றவன் பொருத்தந்தன்னில்
அரையதில் முக்காலுண்டு
பண்டுமுன் னறிந்தில்லார்க்குப்
பாதியில் பாதியாகும்
ஒன்றுடி தனையிணங்க
உரைத்திடுந்தெண்டமாமே 360

தெண்டமிவ் விதமுள்ளோர்க்கு
திருக்கையில் கசையெடுத்து
அன்றவள் தன்முதுகி
லருபத்தோ ரடியடித்து
வண்டியார் பிழை தெழிய
வைக்கும்நோம் பிருபத்தைந்து
சென்றவர் நிதந்தொழுது
சேர்ந்தய ரிருக்கலாமே 361

சேர்ந்துமுன் னிருந்தமங்கை
சேர்ந்திட மணம்பொருந்த
வாழ்ந்திடும் பவமுந்தேகம்
வலிப்பொடு வெரிப்பு நாரில்
ஆய்ந்தமுள் ளகமுங்கண்ட
ரம்பயர்க்கரை மகராம்
வாழ்ந்திட அடியுமில்லை
வையகர்க் குகையந்தானே 362

உகையமாஞ் சாகிலியி யென்னும்
முரைத்தன ரிதுகித்தாப்பில்
சமையுரு மடவார்க்கெல்லாம்
சாத்திய பொருளறிய
யிமையவ ருரைக்கவள்ள
வியம்பிட வுலமாவெல்லாஞ்
சமையுரு தக்காயிக் கென்னில்
சாத்திய விதங்களுண்டே 363

## 32-வது

## இவ்வித ஸ்திரிசாதிகள் மகர் கொடுக்கிறதை அறியும் வகை.

உண்டெனா இரசூல் சொல்ல
உமராவர் மலரைப் போற்றி
மண்டலம் புகழுங்கோவே
மாதையர் மகருபெற்றால்
அன்றவள் பொருத்தமென்ன
அரம்பையர்க் கீவதென்ன
விண்டிதை புரையீரென்ன
வேதிய ரிரசூல்சொல்வார் 364

வாழ்வும் பரிசமென்று
வல்லியைப் பொருந்துமந்த
வேளையில் கொடுக்கவல்லா
னிவன்தலைப்பாரமாகும்
ஆழனு மிறந்துபோனா
லவன்கழுத் தாபமாலை
தோளமை பிறிந்தபோது
தோடிசாக் கொடுக்கவேணும் 365

தோடிசாக் கொடுக்கவில்லான்
தொகுத்தவன் பொருளில்பாதி
வடிவுள்ள மனையாட்கென்று
வகுப்பது வேதநீதம்
படியினில் முதலைக்காண
பருங்கட னிருக்குமாகில்
குடியினில் மாதையான
கோதையர் கடனுஞ்சேரும் 366

சேருமிக் கடனுக்கெல்லாம்
செம்மலன் முதலைப்பார்த்து
கூறுமூன் றுகவைத்துக்
கொடுப்பது காலைக்கொன்று
பீரியா கூறும் ரெண்டும்
வீதமாங்கடலிறுகும்
பாரினில் முதலுமில்லாப்
பாங்கியர் பலர்க்குமில்லை 367

## 33-வது

# இவ்விதமான புருஷரை ஸ்திரிகள் தள்ளிவிடலாம்

பாங்கினி லிரசூல்பாதம்
பணிந்தும ரேதுசொல்வார்
பூங்குழல் புருஷன் தன்னைப்
பொருந்திவாழ்ந் திருக்கும்நாளில்
தீங்கென்ன விதத்துள்ளானை
தென்மொழி விலக்கலாகும்
நீங்கிடும் விதத்தை விள்ளீர்
நிகழ்தின ரிரசூல்தாமே 368

தானவன் தீனெறியை
தாணியி லறியானாகில்
ஈனமாங் குடிகளவு
மெய்ந்தினை மேவசைமாரை
பூணவன் மனையாளுக்கு
போசன மாடை யீயான்
தோணுமி தஞ்சிலொன்று
தோகையர் காணேமீதே 369

ஞாலைமேல் சுமந்துமென்று
கன்னிய ரகலவென்றால்
ஆளநா ரின்னமுன்னை
அறிந்தவள் விளக்கொண்ணாது
தோளனை யறியாதானும்
தூர்ச்செயல் தோன்றுமானால்
மீளவும் மீதத்தோர்க்கு
மிகையவன் மேலை மூன்றே 370

மூன்றவன் மேற்சுமந்த
முடிமைகண் டவள்விலக்க
பூண்டவன் விலக்க நாடில்
பொருள்தலாக் கழுவுமுண்டு
தோன்றலுக் குவயமில்லா
தோகையர் விலக்கொண்ணாது
தெண்டனை வருத்தி வைக்க
திருநெறி நீதந்தானே 371

நீதவர் குழுநடுவி
விருத்தியவன் தனக்கு
சூதகன் தலையத்தெண்டம்
தலைத்திடும் வழியைக்கேளீர்
ஆதியின் செயலறியார்க்
கடிப்பது எழுபத்தைந்து
ஏதொரு களவுசெய்தா
லிடக்கரந்தரிக்கவேண்டும் 372

தரித்திரியக் குலைவளரும்
தான் மது குடித்தபேர்க்கு
உரத்தடி யெண்பதாகும்
ஒன்றுடி வேசைசேர்ந்தால்
ஞாத்தினில் கசையெடுத்து
கடுகனூறடியுமுண்டு
வரைத்திடு மனையாட்குள்ள
ஆடையு மசனமீபான் 373

ஈந்திடா விதத்துள்ளோர்க்கு
எண்ணைஞ்சு மடியாந்தெண்டம்
பாந்திகன் பொருந்த வில்லால்
பருங்கட னனைத்துமுண்டு
சாந்தகன் பொருந்தினாலும்
சம்மதித்திருந்தாளில்லை
வாழ்ந்தவன் கடனுமில்லை
வார்த்தையுண் டவளுக்குத்தானே 374

# 34-வது

# இவ்விதமான புருஷரையும் ஸ்திரி சாதிகள் தள்ளிவிடலாம்.

தானிந்த விதத்தையல்லால்
தையல ரிழக்கும்வாறு
கூன்குருடூமை குட்டம்
குதிரையின் வலிவெரியும்
வீங்கிடும் பெருவயிரும்
வெடித்திடும் பெருநோ யெட்டும்
தீங்கிந்த விதத்துள்ளோரே
தேன்மொழி விலக்கவென்றால் 375

வென்றிடும் விருநான்குள்ள
விதத்திலொன் றவன்தன் மேலே
கண்டுமுன் னிருந்திணங்கு
கன்னியர் விலகவென்றால்
கொண்டவ னுகையமுண்டால்
கோதையர் விலகலாகும்
என்றவ னுகையமில்லா
ஏந்திழைபவனைத்தள்ளல் 376

தள்ளுமிவ் விதங்கள்முன்னே
　　தையலா ளறிந்தாளில்லை
வள்ளலை மணமுடித்து
　　வாழ்வதை வாழ்ந்ததாலும்
தெள்ளிய மொழியாளிந்த
　　தீங்கென விலக்கநாடில்
உள்ளதும் கொடுத்தவளே
　　ஒதுக்கவு மவன்மேலுண்டு 377

அவன்மனத் துவைகயமில்லா
　　தாரிளை பிரியநாடில்
இவன்தலை கடனீதென்ற
　　ஏந்திளை மஹருமில்லை
தவனிறை மறைவிளங்கு
　　தலாக்கவர் ஒருப்போதில்லை
நவகுல நாடிவாழ்க
　　நாடிய ருகையந்தானே 378

## 35-வது
## இவ்விதத்துடைய ஸ்திரி ஜாதிகள் தலாக்கில்லாது மறு நிக்காஹு செய்யலாம்.

தானிந்த விதத்தையல்லால்
　　தையலர்க் கின்னமுண்டோ
கூன்குலை செய்யுநாளில்
　　கோதையர் ஹராமதாகும்
ஆண்மல டிருந்ததென்றால்
　　அவன்மொழி யவழுக்கில்லை
மான்விழி மாதெழும்பி
　　மறுபிரம் வாழ்வதன்றே 379

வாழ்வில்லா மலடனுகி
லவனவள் தனைப்போலாகுங்
காளையர் தேவியானல்
கன்னியர் கவர்வாக்கில்லை
தோளைய ரிறந்திட்டாலும்
தோகையர்க் கித்தாயில்லை
யாளனே விடப்பொருந்தா
தவர்க்கொரு தெண்டமில்லை 380

தெண்டமாங் கொலைகள்செய்தால்
தேன்மொழி தலாக்குமில்லை
அன்றவன் குபிரேயாகு
மவன்பிழை தெளியவென்றல்
கொண்டவன் றனையேகொல்லக்
கொத்தவ னீதஞ்சொன்னன்
வண்டணி குழலைச்சேர்ந்தா
லவனெறி நரகிலாமே 381

நரகினி லழிந்திடாமல்
நபிகளு மிதுக்குச்சொன்னர்
திரவிய மொருதிராசில்
தீங்கனு மொருதிராசில்
நிரைசரி யெடுத்தபொன்னை
நிலத்தினி லெழியோர்க்கீயத்
தரையினில் வாழ்வுமில்லான்
தனக்கடி ஆயிரந்தான் 382

ஆயிர மடியும்பட்டு
ஆயிர நோம்புவைத்து
ஆயிர மெளியோர்க்கன்ன
மளிக்கவு மாண்மையில்லான்
ஆயிர மாலீங்கூடும்
அரபாவினில் ஹச்சும்செய்ய
ஆயிரங் கொலையுந் தீர்ப்பா
ஞயிர நாமத்தானே 383

தானிந்த விதங்கள் செய்தால்
தையல ரிணங்கலாகுங்
கூன்குலை செய்த பாவங்
கொடுமையும் விலகிடாமல்
மான்விழி மாதிணங்கில்
வள்நக ரழிந்திடாமல்
தீனவர்க் குழுவுமுன்னே
தெண்டமும் வளக்கிதாமே 384

அவளிரு கரம்பிடித்து
மடிப்பது மறுமூன்றாகும்
இவள்தலை முழுகினோம்பு
மிருப்பது மிருபதாகும்
தவகுலத் திறையைநாடி
தாணவள் தொழுதுதௌபா
நவகுல நடத்தைசெய்ய
நாயக னுரைத்ததாமே 385

தானொரு குலத்தின்மாது
தன்கருத் தறியமுன்னே
ஆனதுக் குடையபேர்கள்
அறுமண முடிக்கக்காலை
கானமே னெழுந்தா னந்த
கன்னியோ ரிணக்கமில்லான்
ஊனது முடையோ னீயா
ரொன்றடிக் கொருவரில்லை 386

இல்லையா மெளியமாத
ரெங்கினு மிணங்கலாகும்
வல்லவன் பொருளையுண்டு
அவள் பிரத்தேகொண்ணது
எல்லையில் தனமிருந்து
எழுந்திடுந் திசையைக்காணார்
வல்லிய ரிழந்தமற்ற
வாலிப முதியமாது 387

மாதினில் குலத்தையாளு
மன்னவன் திசையில்காணு
நீதமா வருடமேழும்
நிறுத்திய காலமூன்று
வீதமே யிணங்கவென்று
யிறையுரைத்திடவும் வள்ளல்
ஆதியும் நபியுஞ்சொல்ல
ஆலமி னுலமாவெல்லாம் 388

ஆலமி னுலமாவெல்லா
மறைந்தனர்க் கஞ்சில்பாதி
மேலொரு தக்காயிக்கென்னும்
விளம்பின ரதனில்கொஞ்சம்
ஆலமி லறிவையெல்லா
மறிந்திடு பகருலாவீம்
மேலொரு கிதாபைப்பாருமீதி
யின்னமும் பலவிதஞ்சொல்வேனே 389

## 36-வது

## ஸ்திரிகளைத்தலாக்குச் சொல்லுகிற வகை.

சொல்லிய நபியைப்பார்த்துச்
சோதிதன் மாமாசொல்வார்
வல்லிய தலாக்கில்லாத
அவர்களு மறிந்தோ மின்னம்
மெல்லியர் தலாக்குப்பெற்று
யிவளைவிட் டகலவென்றால்
சொல்லிய தலாக்கதென்ன
சொல்வது வகையதென்ன 390

என்னவென் றுமருகேட்க
யியம்பின ரிரசூலுல்லா
மன்னவன் தேவிதன்னை
மனமவ னிணங்கிமுந்த
என்னவர் மணமுடிக்க
எவ்வித மிணைந்தோமென்றால்
அன்னவார் கண்டோமென்று
அவனுமுக் காலுஞ்சொல்வான் 391

சொல்லிய தலாக்குமூன்று
சேர்ந்தமார் பிரியவென்றால்
எல்லையி லின்னுனீண்ட
யேந்திழையின்னுள் தன்னை
வல்லியை யொருதலாக்கு
வாக்குட னீந்தேனென்று
நல்லவ னின்னுனீன்ற
நாரிய ரின்னுள்தன்னை 392

தனையவ னொருக்கால் விட்டேன்
தையலை யிருக்கால்விட்டேன்
குணவனுமின்னு னீண்ட
கோதைய ரின்னுள்தன்னை
இணையொரு தலாக்கு சொன்னேன்
யிருதலாக்கதுவுஞ் சொன்னேன்
துணைவனு முத்தலாக்கு
தோகையர்க் குறைத்தே னென்பான் 393

உரைத்திடு முத்தலாக்கு
ஒன்றுக்கொன் றுவ்வாணுகில்
மரைந்திடும் விதஞ்சொல்லாமல்
பாங்கியே விட்டோடுமென்றால்
விரைந்திடுங் கோபமாக
விடுதியென் றுரைத்திட்டாலும்
உரைந்திடு மடவாள் கெற்ப
மயள்தரித் திருந்திட்டாலும் 394

இருந்தவ னினைவில்லாமல்
யேதொரு விருமைதோன்றில்
பரிந்தவன் அபின்மதுக்கள்
பலபல வெரியுண்டாலும்
வரிந்தடி பொருக்கமாட்டார்
வார்த்தையொன் றுரைத்திட்டாலும்
இருந்துவாழ்ந் திருப்போர்செய்பு
மிடஞ்சலுக் குறைத்திட்டாலும் 395

உரைத்திடு மடவாளந்த
ஊரினிலிருக்கக்காலை
பிரத்தினி லிருக்கப்பெண்ணை
பெத்திடுங் காவலோர்கள்
வரவழைத் திடுமினென்ன
வாக்குமுன் றுரைத்திட்டாலும்
பொருத்தநான் வாரேனென்று
பொற்கொடிக்கெழுதினாலும் 396

எழுதிய ஓலைமெத்த
யேதொரு வாய்மொழியில்
பொழுதையுங் கெடுவைச்சொல்லி
போனபின் வருகாவிட்டால்
அருவியே அருதியென்றும்
அப்புர மிணங்கவென்றும்
வரியொரு மொழியீதெல்லாம்
விடுதியென் றுறைக்கொண்ணாதே 397

உரைத்தது போதுமென்று
ஒன்றொடி பிரம்வாழ்ந்தாலும்
கருவன்றி கையில்காணக்
கன்னிவாழ்ந் திருக்கும்போக்கும்
நிருத்துவன் றனையேயந்த
நேரினை கண்டபோது
பிரத்தினில் வாழ்வதெல்லாம்
பேதையர் ஹறாமதாமே 398

ஹறுமதென் றறிந்திணங்கு
காரிஃேக்கடியுநூறு
தராதரன் மூன்றுநோன்பு
தையலுக் கேழுநோன்பு
பராபர இறையைநாடி
பதிமருக் கன்னமீந்து
காரகரன் தனக்குநூறு
ஹத்தன அடிக்கவேண்டும் 399

அடிப்பது மடவார்க்கேதால்
அசலிடம் வாழ்ந்ததாலே
முடிப்பினி லிருந்தாளாகில்
உரைத்திடுந் தெண்டமில்லை
அடுத்துமுன் சொன்ன தெண்டம்
ஆளினமேல்பொறுக்குமென்று
வடித்திடும் வேதமோதி
வகைபல தறிவும்சொன்னூர் 400

சொல்லிய விதங்களாலே
சொந்தமார் பிரியாளின்னம்
வெல்லுவார்க் கிதனில்ச்சொன்ன
தினம்படி தலாக்குவிள்ளும்
எல்லவர் தனக்குமிந்த
விதத்திலும் விலகிடாது
அல்லவன் தலாக்குச்சொன்ன
தவன்செய லறியவேணும் 401

அறிவது கலிமானுலு
லதிபரு லொருநான்காகும்
பாவிய கலிமாதன்னில்
பன்னிரெண்டு றறிவரிந்து
திரமுட னடக்கவல்லோன்
தீர்க்கமா யல்ஹம்துதன்னை
வரியெழுத்ததுபிசகா
வாசிக்கக் கேட்கவேண்டும் 402

வேண்டுமல் ஹம்து தன்னில்
வெகுபிழை குபிருமேழு
நாணிட விலை வோதி
நாக்குகள் தவரிடாமல்
ஊணிட னுத்திப்பதிநா
லுரைத்திடு மெழுத்தும் நன்ருய்
தோணவும் கலகலென்று
தொடுத்ததிகராபுனீங்காண 403

ஓதவுந் தகமையுள்ளான்
ஓர்மையு மொருவாக்குள்ளான்
சேதமும் நிரப்பமாகும்
செயல்வழி யறியாராகில்
ஈதெல்லாம் விள்ளலாகும்
இன்ன மேந்திழை யகன்றுசேர
ஆதியு மறையுமோதி
ரஹமதுநபியுஞ்சொன்ஞர் 404

## 37-வது
## தலாக்கு சொன்ன ஸ்திரியைச் சேர்த்துக்கொள்கிற வகை.

சொல்வது நபியேவுண்மை
சொந்தையர் மடந்தைமார்கள்
யெல்லையில் தலாக்குப்பெற்று
ஏந்திழைமகரும்பெற்று
சொல்லுவார்க் கித்தாவென்ன
சேர்ந்திடத்தெண்டமென்ன
வல்லியர் புருஷர் மாண்ட
யவர்களுக் கித்தாவென்ன 405

என்னவெவன் றமருகேட்க
இயம்பினு ரிசுலுல்லா
மன்னவன் தலாக்குச்சொல்லி
மஹரவர்க் கீந்தபின்பு
கன்னியர் முழுகிநோம்பு
கர்த்தனை ருடிமூன்று
இன்னமும் தொழுதுஇத்தா
யிருப்பது ஏழுநாளாம் 406

ஏழுநா ளரம்பையார்க
ளின்னமு மிணங்கநாடில்
களம்பது போகயிந்த
காரிகை மார்கள் தம்மை
விளம்பியே ஒருவன்பக்க
மிவள்மண முடித்துவாழ்ந்து
தளம்பிடா தொருமனதாய்
தலாக்கவன் விடுகவேண்டும் 407

விட்டவன் விலகிப்போனல்
விதமிவள் தனக்குயித்தா
மட்டுமுன் விதத்தைக்காண
மாசமொன் றரையுஞ்சென்று
கட்டிமுன் தரித்திருந்து
அமல்தரித்தில்லையாகில்
விட்டமுன் புருஷர்க்காகு
மிவளையு மணமுடிப்பான் 408

முடிக்குமுன் தலாக்கதாக
முந்தவு மிணங்கிப்பின்னே
விடுத்தவ ளித்தாவாகி
யிவட்கம லிருந்தமெதன்றால்
அடுத்தவன் தலாக்குமுண்டு
அவன்பத்து மாதஞ்சென்று
கொடுத்தவன் பாலன் றன்னை
கோதையர் பெறவும் வேண்டும் 409

பெத்தவ ளெண்ணஞ் சாகப்
பேதையர் துடங்கும் போகி
அத்தவ னிறந்து போனா
லதுக்குவே றித்தாவாகும்
தத்துவைத் திருப்பானாகில்
தலாக்கு முன் னித்தாவாகும்
குற்றமுந் தெளிந்தா தென்றால்
கோதையை மணமுடிப்பான் 410

முடித்திடும் விதஞ்செய்யாமல்
முறிந்துபின் சேர்ந்தாராகில்
அடித்தெழு பேர்க்குநூறு
அசற்றவும் பதியைவிட்டு
கடத்தவும் காதமேழு
கருமமீ தேழுபேர்க்கும்
கொடுக்கநூ றெழியோர்க்கன்னம்
கூறுநோம் பிருபதாமே 411

ஆகிய யெட்டுமாத
மானபின் வருகலாகும்
அவர்க்கிந்த விதஞ்செய்யா
தவர்களும் காபராகும்
சாகவும் நரகமென
சமுகத்தில் புதைக்கொண்ணாது
ஏகவன் வேதஞ்சொன்ன
ததின்படி இரசூல் சொன்னார் 412

# 38-வது

## மவுத்தாய்ப் போனவர்களுக்கு இத்தாவும் சடங்கும்.

சொல்லிய வுலகமீதில்
சொந்தய ரிருக்கக்காளே
எல்லெயி லிறந்துபோனு
லேந்திழை யித்தாவென்ன
வல்லவன் தூதே சொல்லீரென
வாழ்த்தியே வுமறுகேட்க
இல்லல்லா தூதரான
யாரசூ லியம்பினுரே 413

நாரியர் புருஷனுர்கள்
நாநிலத் திறந்தபின்பு
வீரியஞ் செய்திடாமல்
இவளும் வாயழிதிடாமல்
ஆரியே மனதொடுக்கி
ஆதிதன் பாதத்தைநாடி
பாரிய னிறந்தார்க்காக
பக்கீர்களுக் கன்னமீந்தே 414

மீய்ந்தவள் புருஷனுர்க்கு
எச்சடங் கெல்லாஞ்செய்து
மாய்ந்தவர் தனையடக்கி
மருத்தவ னேழுஞ்சென்று
ஆய்ந்திடு குழலார் ரவரன
மனத்தையு மகத்திவைத்து
நேந்தவள் நோம்பு வைத்து
நித்தமுந் தொழுவதாமே 415

தொழுதவ ளுடுத்துஞ்சேலை
துயில்வெள்ளை மருப்படாமல்
பொழுதவள் மேல் காணுமல்
புகழ்வது இறையே நித்தம்
மழுதிறை தனை நினைந்து
ஆதியின் னுமங்கூவி
பழுதொன்று மணுகிலானே
னெம்பாவமும் பொருப்பாயென்றே 416

பாவங்க ளுலகந்தன்னில்
பலபல விதத்தால்ச்செய்த
கோபமும் பொருத்து றெனக்
குகந்திடும் பர்த்தாவான
காவலன் பிழைகளெல்லாம்
கத்தவா பொருப்பாயென்று
ஆவலில் செய்தபாவ
மதாபுகள் தெளிப்பாயென்றே 417

என்றவள் நிதமுஞ்சொல்லி
இடுவது பக்கீர்க்கன்னம்
அன்றைவ ளிளந்தையான
ஆரிளை மார்களாகில்
ஒன்றே கால்காலமட்டும்
ஒன்ருடிக் கித்தாவாகும்
கண்டவள் பாலக்காகி
கணவனை யிணங்கிலார்க்கே 418

இணங்கிடா மடவாரெல்லா
மிருக்கும்ரெண் டரைக்காலந்தான்
கணங்கொள்ளும் புருஷர்வாழ்ந்த
கன்னிமார் பாலனில்லாள்
தனக்கித்தா மூன்றேமுக்கால்
தையலர் காலமாகும்
பிணங்களின் மதலை யீன்று
லிருப்பது மஞ்சுகாலம் 419

காலமொன் றுவதிந்த
கருமங்க ளறியக்கேளீர்
ஆலமும்படைத்த வல்லோன்
அனைவர்க்கு முயிருமீய்ந்தான்
மேலவர் வயசு நூறு
மிருக்கு மாயிரங் காலந்தான்
யேலவும் வருஷ மொன்றுக்
கிடுவது பத்துக்காலம் 420

காலவ னெழுந்துமேற்கே
கதிரவ னடைந்தபின்பு
ஏலவுங் கதிரெழும்பி
யிரவொரு நாளதாகும்
ஆலமெல் லாம்படைத்தா
ஞதியு மாறுநாளில்
கோல்மிதா ராறுநாளேக
கூர்வது அணியதன்றே 421

அணியென்று ஆறுனாளாம்
ஆரணி காலமாகும்
துணிவொரு கிரேகமென்று
சொல்லுநா ளொன்பதாகும்
இனி யிந்தக்கிரேகம் நாலு
மிதுக்கொரு காலமாகும்
நணிபுகழ் முப்பத்தாறு
நாளொரு காலந்தானே 422

காலங்க ளிதுவறிந்து
கன்னியரிருக்க வேணும்
மெலிவர வயிற்றில் கெர்ப்ப
மிருப்பவர்க் கித்தாவாகில்
பாலனெப் பெருகமட்டும்
பருலவர்க்கித் தாவாகும்
காலங்கள் பத்தென்றாலும்
கன்னிய ருடன்பெத்தாலும் 423

பெற்றிடும் புதல்வனுனேன்
பிறப்புட னவளைப்பெற்றேன்
குற்றமொன் றணுகா மாமன்
கோதையர் புருஷன்மக்கள்
இற்றவள் தவிரவல்லா
லெவரையுங் காணொண்ணது
சுற்றத்தா ருரைத்ததெல்லாம்
தோகையர் கேட்கொண்ணதே 424

கேட்டிடா செவியை மூடி
கிளிமொழி யிருக்கலாகும்
நாட்டினில் பலபேர் தம்மை
நாரியர் கண்டதாலும்
தாட்டியன் பலமொழியைத்
தையலர் கேட்டதாலும்
கூட்டில்லை யண்டவாக்கு
கோதையா வதனிப்பாள 425

இருப்பது விதமேயாகும்
இவள்க்குள்ள கெடுவுமாகில்
பருப்புட னரிசி பதார்த்தம்
பலகறி எண்ணஞ்சாக
திருக்குமொன் றமனுவரிசி
யிதுக்குமெண் ணஞ்சுரொட்டி
வருக்கமு மிறைகறியா
வகுப்பது முரட்டிமீதில் 426

உரட்டியு மிறந்தார்க்காக
உலகவ ரெளியோர்க் கீந்து
மறைப்படி மாண்டார் நாளே
மஹ்ஷரில் நடக்கும்போது
உரப்பினி லெண்ணஞ்சுநாளும்
உடையவ னசனமீவான்
பிறப்பட யவன்புகழ்ந்
திறைதனைத்தொழுதே 427

தொழுதவ நோன்புவைத்து
துய்யவன் பரத்தை ளுடி
அழுதவ ளிறையை நாடி
ஆழுனர் பிழையைச்சாட்டி
பழுதொன்று மணிகிலானே
பராபரா பொருப்பாயென்று
எழுவர்கள் மிஸ்கீனுக்கன்னம்
யேந்திழை கொடுப்பதாமே 428

கொடுப்பவர் மஹருமுண்டு
கோதையர் பங்குமுண்டு
அடுப்பவ ளவனையந்த
ஆகிருக் குடையாளாகும்
முடிப்பது விதங்கள் செய்யா
முதலைவைத் திருப்பாளாகில்
தொடுப்பவன் மஹருமில்லை
தோகையு மிவனுக்கில்லை 429

தோகைய ரெளியராக
துலங்க ரிளப்போர்க்கெல்லாம்
ஆகமும் பகல்முழுதும்
அடக்கமி லிருக்கவென்று
வாகுட னிரவெழுந்து
வன்னகறய் யமேந்தி
தோகையர்க் கொன்றுகாலது
துலைத்திட தவனுக்கில்லை 430

இல்லக மடவாரில்லா
தேதொரு காளைமார்கள்
எல்லையில் கருத்தில் வைத்த
இணங்கிய புருஷன் மாண்டால்
வல்லியர்க் கித்தாவில்லை
வையவர்க் கொன்றுமில்லை
சொல்லிய மஹருங்கூறுஞ்
சொந்தையர் சொல்லுமில்லை 431

சுகந்தனில் மாதர்மற்ற
சுரிகத்தார்தானும்
வாழ்ந்தவ னிருந்தாலந்த
வகையவள் செய்யாளாகில்
ஆய்ந்தவள் ஹறுத்திருந்த
ததியமு மவளேயாகு
மாந்தரில் மடவாரில்லால்
மாண்டிடும் பேர்களாகில் 432

ஆகிய புருஷர்க்கென்று
அரம்பைய ராறுமூன்று
பாகையை மணஞ்செய்யாமல்
பாரினி லிறந்தானகில்
தோகையர் மணமில்லாமல்
துனியாவி லிறக்கும்பேரை
ஏகவு மிவரை நாளை
இறையவன் கூட்டிவைப்பான் 433

கூட்டவு மவர்கள் தன்னை
குதாயவன் கருமமாகும்
நாட்டினில் மாண்டதாலே
நானிலக்கடனை யெல்லாம்
தேட்டியன் தனக்குண்டான
தீனவர் செய்யவேணும்
சூட்டிய காலமற்ற
தோகையர் பலர்க்குமாமே 434

ஆகிய விதங்கள் செய்யா
தாகிரி லரும்பயணம்
போகையில் வழிதுவண்டு
பொன்னகர் புகுந்திடாமல்
வேகமுங் குலைந்து சேர்ந்து
வெகுகலை நூரதாண்டு
மாகவுஞ் செல்வாரென்று
முகம்மது நபியுரைத்தார் 435

உரைத்திடும் விதங்கள் வள்ளல்
வோதிட வுலமாவெல்லாம்
நிரைத்தனர் கஞ்சில்பாதி
நிகரில்லா முகீமா வென்றும்
பரப்பிய கியாமத்தனுமா
பாதியில் பாதியாகும்
சிப்புட னுரைத்து வள்ளல்
சிறந்தர சாளும்நாளில் 436

ஆக பாடற்றொகை 436. முதல் படலம் பாடற்றொகை 517.
ஆக மொத்தம் பாடற்றொகை 953.

---

## திருநெறி நீதம் இரண்டாம் படலம்
## முற்றுப்பெற்றது.

---

# திருநெறி நீதம்.

## மூன்றாம் படலம்.

---

## முதலாவது
## சிங்காசன கொலு அலங்காரம்.

---

நிச்சயப் பொருளாயெங்கும்
　　　　நிறைந்திடு மாதி னையன்
முச்சுடர் மூன்றிலொன்று
　　　　முன்னொளி சிவந்த
பச்சிர லெச்சமோரிரு
　　　　பத்திநாலாயிரம் நபிகளுக்கரசருன
வச்சிரபுய முஹம்மதுரசூலுல்லா
　　　　வச்சிரசிங்காசனத் திருந்தார் 1

புகழ்பெரு மிறையொழிவில்
　　　　புறந்துமுன் பகழுமாகி
மகிழ்வொடு ஆசைமாசை
　　　　மதலையுஞ் சுடருமொன்றாய்
சிகதல மணத்துஞ்செங்கோல்
　　　　செலுத்தியே ஹாபத்துல்லாவில்
பகளமி லதிக முஹம்மது றசூலுல்லா
　　　　பகழ சிங்காசனத்திருந்தார் 2

நூறென்னும் மொழிவைக் கிருபை
        நோக்கவும் கடலின்மீதே
சீர்பெரு அயின்பத்துமாகி
        சிறப்புட னஹம்மதாகி
நேருள்ள தனைத்துமொன்றாய்
        நிரைந்தெங்கு முலகையாண்டு
பீருமுஹம்மத ரிரசூலுல்லா
        பெரியசிங்கா சனத்திருந்தார் 3

பத்துநா வெனுமொரு கடலில்
        பருமணி ஹாபத்து முத்தாய்
மித்தகா ளாதமுத்தாய்
        கபிகளின் சிரத்தின்முத்தாய்
எத்திசை புகழுமப்துல்
        லாதனி லங்கிய னுதலின் மீதே
முத்தொழி விலங்கும் முஹம்மதுர் ரசூலுல்லா
        மூத்துசிங் காசனத்திருந்தார் 4

துய்பவன் திருமுன்னுக
        துலங்கிய வைடூரிகம்
செய்யதே அஹம்மதென்றும்
        சாத்தவும் மஹமூதாகி
மெய்யெனு மிருபத்தஞ்சா
        எழுத்தஞ்சும் படிதுலங்கில்
செய்யது லாரீபீனை
        சகலர்க்கும் குருவுமாகி
வைடூரிகப்புய முஹம்மது ரசூல்லா
        வயிரசிங்காசனத் திருந்தார் 5

அன்று ஹாபத்து மொழியது பிரிந்து
        அதியவன் றுளநூறொழியாய்
கண்டுகாலையும் தீநிலை நிறுத்திப்பின்
        ஹாபத்துல்லாவெனும் பதியில்
மண்டலத்துயிர்மனு மலக்கு ஜின்பரியனரும்
        மகிழ்ந்தனர் பதத்தினிற்பணிய
வென்றளபுய முஹம்மது ரசூலுல்லா
        வென்றுள சிங்காசனத்திருந்தார் 6

பெண்ணெனு மயிலெக்கீனில்
பொரித்திடு மதளைநாளும்
பின்னையும் பதினெண்ணாயிரம்
பெருமண்டலந் தனையுமீன்று
விண்ணவ ருலகோர்க்கெல்லாம்
வெற்றி முத்திரை தரித்து
பொன்னிலுமதிக முஹம்மதார் ரசூலுல்லா
பொன்னுச் சிங்காசனத்திருந்தார் 7

மயில்வெள்ளை வைடூரிக
மன்னவனெக்கீன் மீதில்
மயிலென்னும் மரக்கனியை
மகிழ்ந்துனல் மதலையுண்டு
தைரியத்துட னுலகில்
தனக்குநால் தோழர்சூழ
வைரவெண்ணெழி முஹம்மதுநபியுல்லாவும்
வைரசிங் காசனத்திருந்தார் 8

துங்கவெண் மயில் புராவாய்
துலங்கிய தங்கனுருத்தில்
எங்கணும் புகன்று இருபதிக்கரசா
இலங்கிய ஹாபத்துல்லாவில்
திங்களைப் பகிர்ந்து தீன்பயிர் விளங்க
திக்கெல்லாம் ஒருகுடையாக
தங்கமீ லதிக முஹம்மதுநபியுல்லாவும்
தங்கச்சிங்கா சனத்திருந்தார் 9

கோமேதகத் தொழிவாய் கூவிய குயிலாய்
குலாவிய மலக்கூத்ததனில்
பூமியி லாமினார் மகவெனப் புறந்து
புகழச னுசன்றிருப்பேர்
நேமமும் நெறியும் நீதியும் புகழும்
நிறைந்திட இலகுசெங் கோலாய்
கோமேதகத்ததிய முஹம்மது நபியுல்லாவும்
கோமேதக சிங்காசனத்திருந்தார் 10

அரியவன் றிருஜெப் ரூற்றில்
ஆடிய மரகதத்தன்னம்
ஒருவனே இணங்கி மத்தனத்தையுமீன்று
உலகத்தி லுலமா நபியாய்
அறுபத்தி நாற்றிசை யரசரை வென்று
யாகிருக் குதவிய பதவி
மரகதத் ததிய முஹம்மதுநபியுல்லாவும்
மரகத சிங்காசனத் திருந்தார் 11

நபர்புகழ் லாகூத்தென்னும்
நாயகன் பள்ளிமீதில்
புஷ்பருகக் குருவின்மாய்ப்
புகள்மறை யனைத்துமீன்று
இப்புவி யுலகோர்க்கெல்லாம்
இலங்கினல் மறைக்குருவாய்
புஷ்பராகக் குருப்புய முஹம்மது நபியுல்லாவும்
புஷ்பராகச் சிங்காசனத்திருந்தார் 12

மாணிக்கமுகந்த மன்னவ னருசில்
மாணிக்க மெனுங்கிந்தில் விளக்காய்
ஏணியில் பதினல் முகமொழி விலங்க
விருந்தவ ருலகத்தில் நபியாய்
காணிக்கை யுலகோர் நடைபுடை சூழ
ஹாபத்துல் லாவெனும் பதியில்
மாணிக்கத்ததிக முஹம்மத ரிரசூலுல்லா
மாணிக்க சிங்காசனத்திருந்தார் 13

வெள்ளியின் குத்தூபென்று
விளங்கிய நாலாம் வானில்
உள்ளுமே பிரம்புலாவி
உலகத்தி லுலமா நபியாய்
வள்ளலார் யார் அசாபு
மசஹுச னருகில்சூழ
வெள்ளியி லதிக முஹம்மத ரிரசூலுல்லா
வெள்ளிச்சிங் காசனத்திருந்தார் 14

சூத்தமோன் றனுகா ரத்தின
சிங்காசன கொலுவினில்கோதையர்வடிவாய்
பத்துநல்லுஹூவத் தணிந்தனர் பணிய
பாருலகனைத்துக்கும் நபியாய்
வெற்றியும் விருதுடன் புத்தியும்
மகிழ்ச்சியும் நிறைந்த
ரெத்தினத் ததிக முஹம்மத ரிரசூலுல்லா
ரெத்தினச் சிங்காசனத்திருந்தார் 15

ஊணிய பதினல் முகனுஹூ பத்தும்
உற்ற முத்திரை லாஞ்சனையும்
தோணிடச் சுவர்க்கசிங் காசனமீதில்
துலங்கும் பட்டாபிஷேகமுஞ்சூட்டி
நாணிலம் புகழும் நபிகள் சிகாமணி
நாற்றிசைக் கரசருக்கரசாய்
தானவன் தூதர் முஹம்மது ரசூலுல்லாவும்
தர்மச்சிங்காசனத் திருந்தார் 16

அந்தர மேகவெண்குடையு
மாடிடு மீரஞ்சுகொடியும்
வந்தவ ருலக வானநாற்புடைசூள
வானவர் மனுடர் ஜின்பரவை
விந்தையில் கவிமா தனைப்பயிறேற்றி
வெற்றியும் புத்தியும் விருதுகளிலங்க
சந்தணப்புய முஹம்மது நபியுல்லாவுஞ்
சருகைச்சிங் காசனத்திருந்தார் 17

அந்திரக் குடைமுடிய யருசுயர்ந்த
தடிபடர்ந் தடிபாதாளம்
விந்தை கஸ்தூரி வாடையு மிருபுரம்
பார்வையு மசதியுமனுகா
எந்த நாள் வலஞ் சலம் பேன்புளுப்பூச்சியும்
எப்போதும் கிழலடி சாயா
கந்தமா மலர்புய முஹம்மதி ரிரசூலுல்லா
கனகச்சிங் காசனத்திருந்தார் 18

அரசருக் கரசரான
அஹம்மத ரிரசூலுல்லா
குருசரு சுயர்ந்தவானக்
குவலயத் திறையின் வெற்ப்பும்
மறுநரகேளும் சொர்க்கமெட்டும்
அன்பதா யிரபாதாளம்
பாவிரச் செங்கோலாண்டு
பயகாம்பரும் கொலுவிருந்தனரே 19

பதினெண்ணாயிர மாலங்களனைத்துக்கும்
பதித்தகண் மணிமொழி நபியாய்
மதினமன் னரசாய் மக்கமென் பதியில்
மகிழொடு இறையவன் தூதாய்
சிதநபி யார்கள் அசுஹாபுகள் ஜின்கள்
சேரவிண்ணவரொலி அனர்க்கும்
அதிபதியெனவே அரசருக்கரசாய்
அஹம்மது கொலுவிருந்தனரே 20

கொலுவிருந் திரசூல் குவலயமாளும்
குருசியின் மக்கமாநகரில்
வனுத்தனம் பொருந்தும் சாபியாவென்ற
மன்னவன் சாபிதன் மனைவி
கலையுரு நிறமதி வதனமின் கையாள்
ஹாமியா வெனு மிளமையிலே
பிலம்பெரும் நபிஅசு ஹாவியிலொருவர்
போவரீசுவென்பவரே 21

ஈசெனு மசாபிதானும்
ஏந்திளைகாமியா மயிலும்
னேசமுற் றிருவர் ஜனனினல் கொழுகி
நிட்சயம் நடப்பதையறிந்து
தேசமுமனக்குரையால் மெலிந்துடைந்து
திருநபி பாதமில் வந்து
ஆசையென் மனைவி ஹாமியா வுடனே
அசுஹாபி லீசுயென்பவனே 22

ஈசெனுமசாபீ தன்னை
டேந்தினை ஹாமியாவும்
நேசமாம் ஜனுவிற்கூடி
நீளியே வருகுதென்று
பேசியே சாபியாவென்ற
பிரபல ஷாபிதானும்
தேசங்க ளனைத்தும் செங்கோல்
திருநெறி நபிமுன்சொன்னர் 23

திருநெறி நீதமென்று
திக்கெல்லாம் விளங்கியோங்கும்
குருமுஹம்மத ரசூலுல்லா
கூறுவார் ஹாமியாவே
இருவர்க ளிருந்ததொன்றாய்
இருவர்கள் அறிந்ததுண்டோ
ஒருவனே அறிந்தேனென்று
ஓதினர் சாபியாவே 24

ஓதவும் வுலமா மூஹம்மதிரசூல்
உரைப்பவ தேதொருவிஷளம்
ஈதொரு ஜலத்தின் கூசை
இருத்தியுன் அகத்தில் மிக்க
ஏதொரு சிரங்கை நீரும்
இல்லம்விட் டகத்துயென்ற
ஆதியின் தூதர் சொன்ன
அதன்படி யவரும்செய்தார் 25

செய்தவ ரிருக்க வீசென்
போரும் செழுமதி ஹாமியாவும்
வையகக்கொடும்பிழை வருவதறியாமல்
இருவருமிணங்கியே யிருந்து
துய்யுமோர் சிரங்கை ஜலமில்லா தேங்கி
ஒருகூசிறுவரும் பிடிக்க
கையொரு நான்கையும் பிடித்திடக்கூசில்
கவலைகொண்டிரு ளகத்திருந்தார் 26

இருளகத் திருந்தவ ரிரவெல்லாம்
விடிந்தபின்காலை
குருநபி இரசூல் முன்னே
கூறினர் சாபியாவும்
இருவரைப் பார்க்க வள்ளல்
யார்களை யனுப்பும்போது
அவர்வளி கொடிதாய் மூடி
யனைவரும் காணேனென்றார் 27

## ஹறும் பிறந்தவனை அறியும் வகை.

காண்கில்லா புதுமைதன்னை
காண்கவ ருண்டோவென்ன
பாங்குள்ள மதின வேந்தர்
பரைந்திடா பிலால்முன்பாக
ஓங்கியே இளையகாளை
ஒருபயல் ஓடிவந்து
பாங்குட னிருவர்தன்னை
பார்த்தவந் தேதுசொல்வான் 28

சொல்லுவான் நபிமுன்பாக
சுளிப்பொடு சுணையில்லாமல்
வல்லவன் தூதே கேளீர்
இருவரு முடையில்லாமல்
சொல்லிய கரமுநாலுஞ்
சொருகியே கூசிலொட்டி
நிற்கநான் விழிகூசாமல்
நேரிடக் கண்டேனென்றான் 29

கண்டவன் விழியுங்கூசான்
ஹயாவும் நாவடக்கமில்லான்
கண்டோ ரபிமானத்தை
களரியி லிரைக்கவல்லான்
வண்டனே ஹறும்பிறந்தா
னிவனேயே யீன்றதாயே
கொண்டுவந் திரசூல் கேட்க
கூறுவார் கோதைநல்லாள் 30

கோதையா மாதவிடையா
யாலகம் வெளிபிரத்தினிலிருந்தேன்
போதினிலாள ரிணங்கியே போனார்
பொன்னொரு வேசையைக்கண்டேன்
ஈதலாலொரு பிள்ளையா னறியே
னிவனேயே யீன்றே னெளியாள்
மீதனக்கொடிய ஹறுமிலும் பெரிதென்
றியம்பின ருலமாநபியே 31

நபிகள் நாயக முஹம்ம திரசூல்
நானிலத்தவர்க் கேதுரைப்பார்
புவியினில் ஹறாத்தில்
பிறந்தவர் கொடியோர்
புகழ்பதி தனையே விட்டகத்தகவியு மிருவிழியால்
புழைகண்டு களரியில் கூறிய கொடியோன்
ஏவியு மிருபத் தஞ்சடியடித்து
இன்னக ரகத்துமென் றுரைத்தார் 32

உரைத்துயார் அசாபுக
ளனர்க்கும் ஒதுவாருலமா நபியுஞ்
சருத்து மாதவர் பிரவிடை விலக்காய்
சாஞ்சக மிருக்கவொண்ணுதே
பொருத்து மிருவரை பிடித்திடுங் கூசை
போய்த்துயி லுடுத்த துடையனரையுமனுப்ப
ஒருத்தரொருவருய்ப் போய்த்தொட வனுவாய்
ஒட்டியே யிருந்தது கூசே 33

இருந்திடுங்கூசை விடுவதுக்கேதென
யார்க ளசாபிக ளியம்பத்
தரிக்கும் ஹலா லுருப் பிறந்திடும் புதல்வர்
தான் தொட விடுங்கூசெனவே
வுருக்கமாகிய யலியுடன் பாத்திமா
யருள்பெற யீன்றிடு மதலை
உருக்கமாகிய யசனுசன் போய்த்தொட
ஓதினா ரஹமது நபியே 34

அஹமது நபிதிருப் பேரர்களிருவரை
யருகினி லழைத்தே துரைப்பார்
தகமையில் வானிறை தவத்துதித்தவரே
தாமிருவரும் போயித்துட வுரைக்க
முஹம்மது பேரர்க ளிருவரும்போயித்துட
முழங்கிய காங்கூசாக்கண்டு
ஜெகம்புகழ் முஹம்மத ரிரசூல் முன்னே
சேரவே இருவர் குசுல்முழுகி யனைவரும் வந்
(தனரே 35

வந்தவவர் நகருள்ளோரும்
வள்ள லசனுசனும்
கந்தமாஞ் சஹாவிலான
ஹாமீயா னீசன்போரும்
பந்தியா யனைருமொன்றாய்
பணிந்தனர் நபிபதத்தில்
இந்தவாா் விஷளமெல்லாம்
எடுத்தெடுத் துரைத்தார் இமாமே 36

உரைத்திடுந் திருநெறி மூன்றும்
படலத்தில் முதல்வருந்திட்டம்
வரைந்த சிங்காசனக் கொலு அலங்காரம்
வளமையும் ரோசுமீசாக்கில்
அரைந்த நான் வாகிதில்லகது கிதாப்பில்
அணியணி வருதிந்தவகையே
உரைத்திடு மூன்றில் ஒதுமாண்டாவது
ஒழுங்கு செங்கோல் நவரீதம். 37

செங்கோல் நவநீதமின் வளமையின்
விஷளம் செப்பிய அதாலத்தின் மௌலி
எங்குமே நிரைந்தோன் இறையருள் தூத
ரிருந்தா சாண்டமுன் வளமை
தங்களையுலமா மவுலிகஸ்சாலி
சாத்திஞர் தாலத்து மௌலி
இங்குலகறியத் திருநெறி மூன்றும்
படலத்தி லுரைத்திட்டோ மிரண்டே 38

# இரண்டாவது திட்டம்.

---

செங்கோல் நவநீத வளமைமுற்றும்
உவந்தவர் நகருள்ளோரும்
வையக பிழைசெய்தோரு முந்தவு யிறை தூதரான
முஹம்மதர் சமுகந்தன்னில்
பந்தி சூழ்ந்தனரும் நிற்கப்
பணிந்தார் மரபியா நபிபதத்தில்
இந்தவார் ஜனவுள்ளோர்க
ளெவ்வித முடிவார்சொல்வீர் 39

சொல்லுவா ரிறைமுன் னுளில்
சோதியா யாதந்தன்னை
எல்லையி லமைக்கமண்ணே
யெவரெடுப் பார்களென்ன
கெல்வியே எடுக்கவல்லான்
காருத்து மாருத்தென்போன்
வல்லமை யுரைத்த வல்லோன்
வார்த்தையைத் தட்டிப்போனர் 40

போனவர் புவியெடுக்க
போம்வழி பூமாதேவி
ஆனதோர் மதுவை யேந்தி
அவளவரருந்த பின்னும்
தானதை யழித்துப்பாலன்
தன்கொலை செய்ததாலே
வானக மழியுமட்டும்
வாதையைப் படுவதானார் 41

ஆனதோர் ஆபில்க்காபீ
லவர்கள்வாழ்ந் திருக்கும்நாளில்
ஏணிய கறுத்துக்காக
இபுலீசின் மொழியைக்கேட்டு
ஊனிய ஆபீல்தன்னை
உலகினில் காபீலென்போர்
கூன்கொலை செய்ததாலே
குபிர்க்குல மதிகமாச்சே 42

அதிகவெண் மதியழகு
அரம்பையாள் சுலேயுகானே
மதியது தவரீசுபு
மனதினில் நினைந்ததாலே
பதியினில் விருதும் வெற்றி
பயகாம்பரென் றருமைபோகி
இதங்கெடச் சிறையிலானு
ரிருமூன்று ஒருவருஷம் 43

வரிசையா மிறையோன் மூசா
நபிபடை யனைத்துமான
பரிசமாங் குமரிமாதா
பலதெடுத் தவர்கள்கூறி
பரிசமா வருக மூசா
நபிபடை சனுவிலாக
கரிசர நபியிணஞ்சேனை
களிச்சலா யெரிந்துபோச்சே 44

எறிந்திட மூசாசேனை
ஏந்திழை மயக்கத்தாலே
வெருந்தியே வலக்காங்கேட்டவ்
வரங்கொடுத் திறைபின்னுக
நிறைந்தவ னீமான் தன்னை
நிமிஷத்தில் பிடிங்கினுக்கி
எரிந்ததா லவுலியாவு
மெரிநரகதனிலானூர் 45

உலகினில் மூசாநாளில்
உற்றதோர் பணியிசுரா
நிலைதவத்துகந்திடாமல்
நேரிளை சனுவினாலே
நலநெறி குறைந்து நாற்ப
தாயிரம் நகரெறிந்து
பலனெறி தௌராத்தென்ற
பேர்பரி பட்டுப்போனதாமே 46

தாமந்த பணியிசுறாயில்
தங்களில் குரையென்போர்முன்
நேர்மையில் குறைந்ததாய
னேரிழை ஜனுவினாலே
தாமவ ரமளிப்பட்டு
தையலால் நகரெறிந்து
காமனும் குலாவி மற்றும்
கடல்கொண்டு போனதாமே 47

ஆகிய யாமினூர் கலாலே
அரசனு மருக்கானென்போன்
வாகுடன் சனுவை நத்தி
யவநக ரெரிந்ததல்லால்
தோகையும் கல்லா லரசனும்
துலேநகர் வேசையாகி
ஆகமும் குறைந்ததாலே
அருஞ்சனு கொடிதேயாகும் 48

கொடியதோர் சனுவுக்காக
கொற்றவ னெழியோன் பெண்டை
கடினப்போய் சாட்சிகேட்ட
காரண நபிதாவூது
பிடித்தசெங்கோலை விட்டு
பேதையி லெழுமையாகி
கெடுத்தமுன் னரசன்கேட்டு
கீர்த்தியுங் குலைந்துபோனர் 49

குலத்தினில் தமையன் பெண்டை
கொடுமையா இளையான்நத்த
தவத்தினில் ஹாஃகீன் மோதின்
தலையாரியு மமளிசெய்ய
பிலத்திடு மாளர்போலே
பேதையு மரசனுகி
தலத்தினில் கொடியார் பாவந்
தையலால் பெருத்ததாமே 50

பொருத்தில்லா அலிபாதுஷாதான்
பூவையைக்குபிரசன்
கருத்தினில் நினைத்ததாலே
கையொடு கால்குறைந்து
வருத்தமு மலிபாதுஷாதான்
வரத்தினு லெழிதுமானுர்
கருத்தினுல் சனுவை நத்த
கைப்பலன் தவரிப்போமே 51

கைப்பலன் தவரிப்போகும்
கடும்பழி யாமுறவு
வையகம் வாழ்வுங்கல்வி
பார்க்கத்தும் குறைந்துபோகும்
மெய்யுரு அழகுவெற்றி
நினைத்தது மழிந்துபோகும்
கொய்யும்பஞ் சிட்ட தீய்க்கும்
கோதையர் ஜனுகொடிதே 52

# மூன்றாந்திட்டம்.

---

கோதையர் ஜனுக்கொடிதாகக்
கூறிய விஷளமுற்றும்
ஈதென் திருநெறி மூன்றும்
படலத்தில் மூன்றாந்திட்டம்
ஓதிய கஞ்சிலம்பியா
உலமாக்களும் ரோசு மூசாக்கில்
கோதில்லான் சூபியானத்ததினிலுங்
கோதையர் சனுகொடிதே 53

கோதையர் ஜனுவினுலே
கொடும்பிளை விழையுமென்றே
ஈதென உரைக்க வள்ளல்
யார்களும் மாபியாவு
ஆதியின் தூதரான
அஹமதே நபிக்கரமே
மாதர்கள் சனுவினஞ்சொன்னீர்
மங்கைதன் னகர்த்தார்க்குண்டோ 54

மங்கையர் பிரத்தினுளும்
வானம்புரை மதித்தனுழும்
திங்களின் முதனுள் பின்னுள்
சேமநாள் பகையினுளுந்
துங்கவர் இறைமதினுள்
தோகையை புணர்வீராகில்
அங்கமும் மெலிந்திறந்து
மாதன மழிந்துபோமே 55

ஆதன மழிந்துபோகு
மருந்தவம் பார்கத்துப்போகும்
மாதைக்கு மாளனூர்க்கு
மருத்திடுந் தலாக்குமட்டாய்
வேதினை பிணியுண்டாகும்
வெற்றியும் விருதும்போகும்
சோதியின் தூதர் வள்ளல்
முஹம்மத ருரைத்ததாமே 56

உரைத்திடு முலமா முஹம்மது
நபிபதம் நோக்கி
பெருத்தயா ரசாபியு மரபியார்
சரணமிட் டெழுந்து
உரைத்திடு விசள மெய்யே
நிகரில்லா சனுக்கள் தன்னில்
சிருத்தது பெருத்ததுண்டோ
திறங்குறை யறியச்சொல்வீர் 57

சொல்லுவா ரிருபதிக்கும்
திருநெறி நீதமானும்
வல்லவன் தூதரான ரனைவர்க்கும்
வாத்திக ரிரசூலுல்லா
எல்லவ நகரிலுள்ளோர்
அனரையும் மருகழைத்து
சொல்லுவார் கடலுலக
மலையும்கல் லுருகத்தானே 58

உருகிட மனங்களெல்லாம்
மோதுவார் முஹம்மதிரசூல்
அரியதோர் நகரிலுள்ள
ஆணும்பெண் ணனருங்கேளும்
மருவிய ஹலாலில்லாதா
ரவர்சனுக் கடியும் நூறு
சருவிய ஹலாலிருக்கச்
சனுச்செய்ய கொடியதெண்டம் 59

# சனுச்செய்தவர்களுக்கு தெண்டம் அறியும் வகை.

செய்தவர்க் கடியும் நூறு
செய்யுமப் பதியும் விட்டு
பையவே காதமொன்று
மகற்றியே காலமொன்று
வையமு னகரந்தன்னில்
வருகால மின்னுங்கேளீர்
அய்யமி லடுமையான
ஆணும்பெண் சனுவைச்செய்தால் 60

செய்திட ஜனுவில் பாதி
சிறந்தடி யன்பதாகும்
அய்யமாங் காதமூன்று
மகற்றியே மாதமூன்று
வய்யகம் வரலாமின்ன
மதிலொன்று மடுமையில்லை
செய்வது அவரவர்க்குச்
செய்வது யிருவிதமே 61

இருவர்க்கு தனித்தனியே
அவரவர்க் குரைத்ததெண்டம்.
மருமவர் குலத்திேனாடு
மருசிறு யெழியரோடுஞ்,
சிரியரைப் பசிதெளித்து
சிறையுள்ளான் தேவியோடும்.
மருவிய சனுவுசெண்டு
மதுக்கடி ஒரு நூறுமே 62

ஆகிய காலம் ரெண்டு
மகற்றியே காதம்ரெண்டு
தோகையு மாளனும்
துகைபதி வரலாமின்னம்
தேவிய ரிருக்க பீசபில்
சென்றவ னிறந்தான் மங்கை.
ஒவிய ஹலாலிருக்க
அவளுடன் பிறந்தமாது. 63.

மாதைய ரிருவருக்கும்
மதிப்பது சனுவுமூன்று
வேதினைக் கடியு நூறு
விரட்டியே காதமூன்று
மாதமு மூன்றே யாகி
லப்பதி வருகலாகும்
தீதுனு லாளர் மங்கை
தெகுட்டொரு மருந்துமாய்கை. 64.

மாய்கையு மருந்தினாலு
மவளுட னடத்தினாலும்.
ஆகமாஞ் சனுவும் நாலு
அதுக்கடி ஒருநூறாகும்.
வாகுடன் காதம் னாலு.
மகத்தியே மாதம் நாலு
தோகையு மாளனரு
மப்பதி வருகலாகும் 65.

வருகலா முடப்பிறந்தார்
வயிற்றினில் பிறந்ததாலும்.
அருகிய சனுவுமஞ்சு.
அடிக்கொரு நூறாகும்
வருவது மாச மஞ்சு
மகற்றியே காதமஞ்சு.
உரியவன் மகளுமாது
முலகினி லீன்றமாதும். 66.

ஈன்றதா லிவர்களொப்பா
ஏந்தியே வளர்த்தமாது
பூண்டிடும் நசிகத்தான
பெண்களும் சளுவுமாரு
தோன்றிய யடியும் நூறு
தூத்திய காதமாரு
மீண்டிடு மாதமாரி
லப்பதி வருகலாமே 67

வருகலா மங்கையீன்ற
மாமியுமவள் சகோதரியு
மரியவன் தகப்பன் கூட
யாரிளைபிறந்தமாது
பெருகிய சளுவுமேழு
பிடித்தடி ஒருநூருகும்
வருவது மாதமேழு
மகற்றியே காதமேழு 68

ஏழ்வகைப் பொருள்குரு
மங்கை மவளுடமகவும்
பேதைய ரவளையீன்ரு
ளவளுடன் பிறந்தமாது
ஈதிரு நாங்குமாகு
மிதுக்கடி ஒருநூருகும்
காதமு மெட்டுக்காதம்
ஹச்சொன்று செய்யவன்றே 69

வேண்டிய முருகஞ்சேர்க்கே
விளம்பிய தொன்பதாகும்
தோன்றிய யடியும் நூறு
தூத்திய காதமாறு
மீண்டுமே வருஷஞ்சென்ரு
லப்பதி வருகலாகுஞ்
சென்றுதான் குபிர்களோடே
சேர்ந்திடச் சளுவும் பத்தே 70

பத்துர மடியும் நூறு
பத்தியே காதம் பத்து
குற்றமும் வருஷஞ்சென்றால்
அப்பதி வரலாமின்னம்
பத்துள்ள ஹலாலினோடு
பையவெள் ளாட்டியோடு
மத்தவ ரெவரென்றாலும்
மானிடர் மாணுமாணும் 71

ஆணுட னாணுங்கூடி
அடர்ந்துட னாட்டிசெய்தில்
இன்னமு மய்யத்தோடும்
இருபெண்க ளிணங்கினாலும்
தின்னமா யின்துவாரஞ்
செய்திடும் வார்த்துக்கெல்லாம்
ஒன்றுக்கு பத்துநூறு
முறைத்திடுந் தெண்டம்கேளே 72

## நாலாந்திட்டம்.

தெண்டமோ ரடியுமில்லை
திருநபி யும்மத்தல்ல
அன்றுதா னவரைச் சுட்டு
அந்தநீ ரனுச்சிந்தாமல்
கொண்டொரு குழிவனத்தி
லவைத்தையும் புதைத்துமிக்க
அந்தந்த நகரோர்க்கெல்லாம்
அருமையாய் ஒருகோன்பனர்குண்டே 73

னூன்றுள்ள நபிலூத்தென்போ
ரவருமுமத்தோர் செய்தார் முன்னாள்
சென்றிடும் பிழையால் வள்ளல்
ஜிபுரியி லுலகிரங்கி
அன்றந்த உலகை வாரி
அரியவான் வரை உயற்றி
பன்றந்த இடமடித்தார்
பாதாளம் நரகிலாச்சே 74

ஆச்சிந்த உலகோர் செய்தா
லறுநரகளிவார் திண்ணம்
காச்சியு பர்கத்தான
கைப்பலன் தவரிப்போகும்
மூச்சில்லா முனிவுபெற்று
முன்னவ னருள்தவரி
மீட்சிமண் டாட்டமான
சபாயத்து மில்லைதானே 75

தானவன் தூதர்வள்ளல்
முஹம்மத ரோதிய விஷளம்
தீன்குலம் திருநெறி மூன்றாம்படலமில்
நாலாந்திட்டம்
தோணிய நவநீத கற்பினைத்தொகுத்து
முன்னெடுத் தயிமாங்கள்
ஊணியே அதாலத்து மவுலியுலகாக்கி
முத்தா பித்தூரிலறைந்தார் 76

தாமிதை யுரைக்கவள்ளல்
தாழ்ந்தடி வணங்கிப்போற்றி
ஏகமா யசாபு மாபியா
நபிபதம் பணிந்து
மூமினே யிருபதிக்கு
முஹம்மதே முஸ்தபாவே
ஏகிய சனுவுக்கெல்லா
மெடுத்திடுங் கசையதென்ன 77

கசையது தோல்சவுக்கு
கவுருறால் மாமுமட்டை
இசையுரு குறையாப் பாரம்
எடுப்பது மிருசோரகும்
நசலொரு இடையதாகில்
நாலிலோர் பாதியாகும்
விசையொரு யகனிநூறு
வீச்சடி ஒன்றுதானே 78

தான்மதுக் கெண்பதாகுந்
தையலைத் தலாக்கில்லாமல்
பின்னையும் நிக்காஹு செய்தா
லன்னவர்க் கெழுபத்தஞ்சு
ஊணியே பெரும் ஹறுத்தை
உண்டவர்க்கெழுபதாகும்
கண்கண்டால்க் களிக்கூத்து
கறுபது அடியுமாமே 79

அடியொரு அன்பதாகு
மப்பதி யிறந்தார்க்கெல்லாம்
துடிபெருஞ் சஹாத்தொழாமல்
நின்றவர்களுக்கெல்லாம்
நெடிய சொல்வாங்கு நிமாசு
மெண்ணஞ்சு ளில்லார்க்கு
அடிப்பது மறுபத்தஞ்சாம்
அசல்ப்பிரம் படரேசொன்னல் 80

சொல்லிய படுதூர்க்கெல்லாந்
துகையடி றற்பதாகும்
வல்லதி னறியாப்புத்தி
வகுப்பது ஆறஞ்சாகும்
எல்லையில் பிழையைக் கண்டு
எவர்களுங் களிகூவில்
நல்லடி இருபத்தஞ்சு
னாரியர் புருஷர்தம்மை 81

காரிய ராளர்தம்மை
நகைத்திடில் படரேசொல்லிக்
கூறினே மிருபதென்று
குவலயத் தீனோர்க்கெல்லாம்
நேருள்ள தொழுகை வெள்ளி
தவரிடி லடியுபத்தும்
பாரினில் குபிரைச்சேர்ந்தால்
பாதகக் குபிருமாமே 82

குபிரோடு சேர்ந்திருந்தால்க்
கோதைய ரூழருங்
குபிரினு மதிகமாகுங்
குவலயத் திணங்கினோர்க்கு
கவியுரு நபகல்லாது
கத்தவ னருளுமில்லை
நபிகுலத் திணையுமில்லை
நல்முழுக் கிறங்கிடாதே 83

இறங்கிடா முழுக்குமற்ற
எழுதிய கருமமெல்லாந்
திரங்கொள்ளுந் தீனோர்க்கெல்லாம்
திருநெறி மூன்றும்படலம்
சிறந்திடு மஞ்சாந்திட்டம்
செப்பினர் காக்கிமுல்த்தாபித்திரில்
தெரிந்திட நவநீதத்தின்
தெண்டனை யறியச்சொன்னேன் 84

**நவநீதத்தெண்டனை முற்றிற்று.**

---

# தெண்டனைக்குட்படுத்துதல்.

அறிவுக முரைக்கும் வள்ள
லஹம்மத றசூல் முன்னே
நிறைந்திடுங் குளுக்கள் யாவும்
நேர்பத்தம் பணியும்போது
கர்ங்கில்லாக் ஹாமியாவும்
காளையி லீசென்போரும்
ஓங்கியே முழுகிவள்ள
விருப்பம் பணிந்து நின்றார் 85

நின்றனர் நபியுல்லாதன்
நிலையிடித்தனைப்பணிந்து
இன்றென்னை இறையோன் சொன்னே
எவ்லின் படியே செய்யும்
என்றவ ருரைத்த போது
யிறைதிருத் தூதர்வள்ளல்
தெண்டனைக் கசையெடுத்து
திருக்கையில் தாங்கிநின்றார் 86

தாங்கிய பெருங்கசையைத்
தானவ ருக்காசென்போர்
வாங்கிய நபிபதத்தை
வாழ்த்தியே யிறையைப்போற்றி
பாங்கிய முதுகு சாய்த்துப்
பாமல்லா வெனப்படுத்தார்
ஓங்கியே விசை குறையா
ஒக்காச வடித்ததாமே 87

ஓங்கியே யடிக்க வல்ல
ஒக்காசவ ரடிக்கும்போது
வாங்கியே சிரங்காங் கால்
வல்லவர் பிடித்திருக்க
ஆங்கியே வேகத்தாலே
யடிவிடுந் தடிக்கும்போது
ஏங்கியே எழுபத்தஞ்சில்
இறந்தன ரீசென்போரே 88

ஈசவரிறக்க வள்ளல்
அனைவருக் கேதுசொல்வார்
நேசகன் புதல்வன் சல்மான்
றன்னையும் மருகனைத்து
யீசெனு மசாபிதன்மே
லிறைகடன் டேதுமுண்டோ
பேசுவ னிறைசக்காத்துப்
பெருங்கட னுண்டோவென்றார் 89

கடனிறை சக்காத்தோடே
கபுரினி லடக்கொணுது
இடம்பெரு முதலைபாய்ந்து
எண்ணைஞ்சி லொன்றெடுத்து
மடங்கலு மெளியோர்க் கீந்து
மடிந்தவர் தனையடக்கு
மிடந்தனி லீசென்போர்தன்
னேந்திழை யொருத்தி வந்தாள் 90

வந்தவள் நபிபதத்தில்
வணங்கியே வழக்குரைத்து
எந்தனும் பர்த்தாவான
ஈசவ ரிறந்தார்தம்மை
பிந்தவே யடக்குமெந்தன்
பெருங்கடன் றலையுமென்ன
அந்தா மறைநிரைந்த
அல்லாவைக்கொண் டாணையிட்டாள் 91

ஆணையென் றவளுரைக்க
அஹம்மத ரிரசூல் சொல்வார்
நாணமும் னிறையில்லாத
நாரியே னடந்த பின்னால்
ஆணியே கருமம் பத்து
மாணையுந் தடையுமில்லை
மானிலத் தவர்க்குரைத்தார்
மனந்திரள் முஹம்மது நபியே. 92

மணம்பூணு மங்கைவாழ்க்கை
யறிவுடன் வணக்கங்கேள்வி
பிணங்கியே மலஞ்சலமும்
பின்னையு மூணுறக்கம்
இணங்கியே கருமம்பத்துமே
தடை யணுகாதென்றே
கணங்கொள்ள வேதமோதுங்
கபீபிர சூலுஞ்சொன்னார். 93

சொல்லுவா ரின்னங்கேளீர்
சொந்தையன் றனையுடக்கி
அல்லவன் சடங்கும்போக்கி
அதியமா ரினோமற்றோர்க்கு
எல்லையில் வகுப்பதாகு
மிதுக்குமுன் கடன்சக்காத்து
இல்லையா யில்லையென்று
இறந்தனை யடக்குமென்றார் 94

இறந்தவன் றனையடக்கி
இருபத்தஞ் சடிகபுரில்த்
திறங்கொள்ளு மடித்துப்பின்னுந்
திருநெறி நீதர் சொல்வார்
மருங்கத்து குலைந்த மங்கை
ஹாமியர தனையழைத்துக்
கரங்கொள்ள அடியுமென்ன
அமலஞ்சு மாதமென்றாள். 95

மாதமுந் தங்கி ஐந்து
மதிப்புள்ள சூனுமானால்
வேதினை பொருக்கப்பாலன்
வேதினைக்கே தெரியும்
காதலாள் பாலனீன்றால்
கடனடி அவளுக்கென்று
ஆதியின் றூதர்வள்ளல்
முஹம்மத ரருளிச்செய்தார் 96

செய்திடுந் திருநெறி மூன்றில்த்
தெண்டனைக்குள்ப்படு விஷளம்
வையக மறியுமாகில்
உரைத்தது முஹம்மதர்மொழியைத்
துய்யவன் ஹரிபின் வுஹ்ஹா மில்
தொகுத்தனர் ஹலு இமாமுஞ்
செய்யது மவுலியான
சாபி யிமாஞ்சொன்னார் சரியே 97

**தெண்டனைக்குட்படுதல் முற்றிற்று.**

## அனந்தர சுகந்திர பிறிக்கிற விபரம்.

மக்கமா னகரி வள்ளல்
முஹம்மத ரிரசூலுல்லா
பக்குவ நபிகட்கெல்லாம்
பண்டுள்ளோர் பின்னுகொனோர்
திக்கெல்லா மறைநெறிபோற்றும்
திருநெறி நீதானோர்
மிக்கசூ ளுலகுமற்றோ
ரனைவருக் கேதுரைப்பார் 98

உரைத்தன றுலமா
முஹம்மது ரிரசூலுல்லா
சிறப்புட னுலகு நீளே
ரனரையு மருகழைத்துத்
தாத்துட னுலகுதன்னில்
தன்கொளு வரசு நிற்க
நிரப்பமா யிருப்போர்க்கெல்லாம்
னிதித்தன மிருக்குமாகில் 99

தனங்கொளு வாழ்வுமிக்க
தரணியில் வாழ்வோர்க்கெல்லாம்
அனந்திர முதல்கள் மற்று
மனந்திரக் காரரெல்லாம்
மினந்திரள் சூழ்குலத்தோர்
யாவரு மெடுக்கும் வாறும்
அனந்திரம் புரியும் பங்கு
பாரயிலு பகரக்கேள்மோ 100

பறுயிலும் புரியலாகப்
பகின்றிடும் விதமேதென்றால்
ஆறுகிலு மொரு வனுத்தா
தனத்துடைய ராகில்
காரகான் தேடுமற்றக்
கனதனந் தனைத்தொகுத்து
பறுபாத் திறைசக்காத்துப்
பகிர்வது நாற்பதிலொன்றே 101

நாற்பதிலொன் றிறைசக்காத்து
ஞனிலத் தெளியோர்க்கீந்து
கோப்புள்ள முதல்கள் முற்றும்
கொற்றவ னளலாகும்
தகப்பனுந் தாயுமக்க
ளெவர்களிலக் கீயவேண்டில்
மூப்புள்ளான் மனதுபோலே
முதலையுங் கொடுக்கலாமே 102

முதலையுங் கொடுக்க வாங்க
முதல்வ னிருப்பானாகில்
இதமுரு குலத்தார் மக்கள்
யாவருக் கேதுமில்லை
துதிபெரு மவனும் யாவுந்
தேர்க்கையு மிருக்கும் நாளில்
பதிதனில் மடவார்க்கில்லா
பாங்குள்ள குலத்தைக்கேளே 103

குலத்தினி லாளன் தேவி
கூடியே யிருக்கும்நாளில்
பிலத்திடும் ஹுருமீ ராறு
பின்னையு மிருபத்தெட்டு
நலத்திடும் மக்கூரல்லால்
நாற்பது இரு ஹுராமும்
குலத்துக்குள் ளென்பதாக
கூறிய ஹுருமுங்குற்றம் 104

குற்றமென் றறிந்தபோதே
கோதையு மாளனாரும்
உற்றபா லமுர்தமுண்டால்
உண்டல்லா தெடுத்ததில்லை
எத்தனை ஈன்றதாயு
மிருவருக் கேதுமில்லை
மற்றவ ரேதுமுண்டு
மணவகைக் கேதுமில்லை 105

இல்லகம் கருமற்றனத்தையு
மீந்திட்டாலும்
வல்லவ னரிதன்னை
வாங்கியே முறியினம் பாதி
நல்லவன் மனதுக்காரி
நானிலக் கடன் தெளித்தால்
எல்லையில் மஹர்பகுதி
இயம்பிய தலாக்குமில்லை 106

தலாக்குடன் புரிந்தமாது
தனக்கு நூர் நாள் வரைக்கும்
தலாக் குள்ளசன மிட்டு
தையலர் சூலில்லாத்தாய்
துலக்கவும் அடனுஞ்சொந்தை
தோகையர் மதனைமுற்றும்
நிலைக்கவும் தகப்பனில்லால்
நேரினைக் கேதுமில்லை 107

நேரினை ஹறுமதாகில்
நீதமும் தலாக் கில்லாதால்
பாரினி லீன்ற பால
னனைத்துமே அவளுக் காகும்
பாரினி லவன் முதலும்
பாலனுக்காகு மல்லால்
ஊரிலே யெவர் தொட்டாலும்
உயர்ந்தோர் பெரும் ஹறுமாம் 108

ஹறுமரியாமற் செய்தால்
சுத்தில்லை யடியுமில்லை
ஹறுமரிந்தவர்கள் செய்தால்
ஹத்துடன் கடியதெண்டம்
தருதர மரியாபாலர்
தங்களுக் கேதுமில்லை
பருபானிறை குர்ஹானில்
பகின்றிடும் விதமிதாமே 109

ஆகிய குர்ஹானில் வல்லோன்
யகம்மதர்க் கருளிச் செய்தார்
யேகவநபியும் மற்றனைவருக்
குறைத்த வார்த்தை
வாகுள்ள இமாம்கள் நாலும்
மற்றுள்ள உலமாமுற்றும்
பாகிய பகிரியுத்த
பாங்குள்ள விதமிதாமே 110

விதம்பெரு குர்ஹான் தன்னில்
விளம்பினு ரிறையனுதி
இதம்பெரு மடவாளொன்று
இருந்தவ னிறந்துபோனல்
பதிதனில் புல்ஹத்தில்லா
பாலனு இருப்பாளாகில்
அதமுட னவரும்பூண்ட
பணிமுத லாண்டமற்றும் 111

ஆடையு முதல் பணியு
மார்பொருட் டானதாலும்
சூடியே புருஷன்பாதி
தோகையர் குலத்தார் பாதி
பேடியே குலத்தினுர்க்கும்
பிறந்தவள் மஹரேதென்று
நாடிமுன் னுரைத்த வார்த்தை
நாவிலொன்றும் மகரே 112

ஒன்றுடி யிருக்க வந்த
உடையவ னிறந்துபோனல்
அன்றவள் நகைமுதலு
மவள் மஹர் பாதியென்றே
மண்டலம் புகழும் வள்ளல்
முஹம்மத ரிறசூல் சொல்ல
அன்றுள்ள விஷளமாய்ந்த
அஹம்மது மபுஷி யமைந்தார் 113

அமைந்தனர் பருவமாக
உலகினி லிணங்கி யாண்டால்
அறிந்துள்ளள நகைமுதலும்
அவனுக்குப் பாதியென்று
பொருந்திய மகருதன்னீ
விடுவது மூன்றிலொன்று
இடத்துட னவளிருக்க
தேட்டிய னிறந்து போனல் 114

இறந்தவன் தேவி முன்னாள்
இடுநகை முதலும் பெற்று
பொருந்திய மகருமூன்றில்
ஒன்றுபோல் இரண்டு பெற்று
சேர்ந்தவ ளிருப்பாளென்று
செய்யது முஹம்மத ருரைத்தார்
ஆரிவர் உலகோர்க்கெல்லாம்
ஆரீபு சூடியானவ ரனைந்தார் 115

ஆரிலை மதலேயின்று
அதுவுட னவளும் போகில்
பாரினில் மஹரு பாதி
பருமுதல் நகையும்பாதி
ஊரினி லவளிருக்க
உடையவ னிறந்துபோனல்
கூறிய மதலே மாண்ட
கோதைக்கு மகர்முக்காலே 116

மகரவள் தனக்கு முக்கா
லவள்பணி முதலுமுற்றும்
சிகமதி விறந்தா ளொருத்தி
செல்வி யொன்றிருக்குமாகில்
நகைமுழு தரியபாலி
நாரியர் மகர்நாலொன்று
தருமவர்க் குலத்தார்க்குண்டு
தையல ரிருக்கக்காலே 117

காலேய னிறந்தா னீன்ற
கன்னிக்கு முதல் நகையும்
உள்ள இன்மகரில்பாதி
ஒன்றொடி தனக்கேயென்று
ஆளனுந் தேவிமாண்டு
ஆணென்று யிருக்குமாகில்
ஆளவு மவனிவனென்றே
அஹம்மதுக் கப்புலி யறைந்தார் 118

அஹம்மத ரிரசூலுரைத்தார்
அதாலத்தும் புவியின் விஷளம்
செகமதில் குவிந்தால் முதலுஞ்
சிந்திடா திருப்பாளுகில்
பகுந்திட மனைவி மக்கள்
பாங்கணு முகையமாகில்
அகம்புகள் மடவாள் மகரில்
அரைவகை கொடுப்பனன்றே 119

## பங்கு விபரம்.

அரைவகை மஹர்கொடுத்து
அதிகமா முதலையெல்லாஞ்
சிரிவகை ஏழா வைத்து
சார்ந்துள்ள குமருக்கொன்று
அதிகமு மாறுபங்கு
யணியணி யிருக்குமாகில்
இதமுட னெடுக்கும் பங்கை
யாவர்க்கு மறியச்சொல்வேன் 120

சொல்லுவே னறு பங்கு
துகையுட னிருக்கும் நாளில்
நல்லவ னீன்றபாலன்
ஞனிலத் தொருவனுகில்
அல்லவன் மூன்றுபங்கு
அன்னைக்கும் பிதாவுக்கு மூன்று
கல்லவ ரிருவரீண்ட
நாரியோன் றிருப்பாளாகில் 121

இருந்திடில் ஒரு பெண்ணுகில்
ஈவது பாதியாகுஞ்
சிறந்தொரு ஆணும் பெண்ணும்
செகந்தனி லிருக்குமாகில்
புறந்திடு முதலார் பங்கில்
பெண்ணொன்று ஆணிரண்டு
இருந்திடும் பங்குமூன்றும்
எடுப்பது தாய்தகப்பன். 122

தகப்பனுக் கிருபகுதி
தையலுக் கொருகூறென்ன
செகத்தினி லிவர்களீன்ற
சிலதுபெண் ணுணிருக்கில்
வகுத்திடு மாறுபங்கில்
வல்லவன் தகப்பன் மூன்று
உகப்புட னீன்றதாயும்
ஒருபங்கு உகையமாமே 123

ஆகிய நாலுபங்கு
அன்னையும் பிதாவுமாகும்
ஏகிய இரண்டுபங்கு
இவர்களு முலகிலீன்ற
தோகையர்க் கொருபங்காகும்
தோன்றவ னிருபகுதி
சாகுமுன் தகப்பன் தாயுஞ்
சம்மதித் தீந்திடும் விதமே 124

ஈந்திடத் தகப்பன் தாயு
மிருக்கையி லவர்கள் பாலர்
எந்தன் கூர் தருகாயென்ன
யாவருக் குகையமில்லை
அந்திர மறை நிறைந்த
அஹம்மத கருளிச்செய்தார்
மந்தர மறைமொழி பொழியும்
மாலிக்கு இமாமு சொன்னார் மறையே 125

மறை நெறி நீதர்வள்ளல்
முஹம்ம திரிசூல் சொன்னர்
சிறப்புட னிருந்துவாழ்ந்த
செம்மல னிறந்துபோனல்
இறந்தவன் றனையடக்கி
யெச்சடங் கனைத்தும்போக்கி
இறப்பவன் முதல் சக்காத்து
எண்ணஞ்சொன் ரெளியோர்க்கீந்தே 126

ஈந்தபின் னுலகி லிவனுந்தான்
கொடுக்கின்ற கடனனைத்தும்
மாந்தயர் மஹருமந்தக்
கடனுடன் சரியேயாகும்
ஈந்திடக் குறைந்திட்டாலும்
எடுப்பது நிரவியச்சரியே
ஆய்ந்தவன் முதலுமின்ன
மதிகப்பட் டிருக்குமாகில் 127

இருந்திடு முதலை மூன்று
எடுத்தொரு பகுதிதன்னை
வருந்திட ஒசியத்தோர்க்கு
இதுக்குமே லதிகமில்லை
பகுந்ததில் மீதிதானும்
பங்குமுன் னுரைததரெண்டுஞ்
செகந்தனி லிறந்தவனையீன்ற
இருவரு மிருப்பாராகில் 128

இருந்திடி லிருவரென்று
யிவர்களுக் காசிலொன்று
இருந்திடில் தகப்பன் மட்டு
மிருப்பது னிலொன்று
இருந்திடி லீன்றாள் மட்டு
மிடுவது மூன்றிலொன்றே.
அறிந்துபின் முதல்கள் மற்றும்
ஆறுபங்காக வையே. 129

ஆறிலோர் பங்கிலொன்றே
ஆறாறு பங்குசெய்து
கூறிய பகுதி யெட்டை
கொற்றவ னுடப்பிறந்தார்
ஆரியர்க் கொருபங்காகும்
ஆளனுக் கிருபங்காகும்
வேறுதாய் தகப்பன் மக்கள்
எடுப்பது ஏழுபங்கே 130

பங்கொரு ஆறு தன்னை
பெற்றவ ருடப்பிறந்தார்
பெண்களும் ஆளனும்
பிரிப்பது முதற்பகுதி
பங்கொரு மஞ்சுமவனை
பெற்றவன் தனையே பெற்றோன்
பங்கஞ்சு பாட்டனுகும்
பாட்டிக்கு நாலுபங்கே 131

நாலது பாட்டியல்லால்
ஞனிலப் பாட்டன் தேவி
மேலின்ன மிருப்பார்க்கெல்லா
மிடும்பங்கு மூன்றதாகும்
ஆலமி தவனையீன்ற
ஆறினை தனையு மீன்றான்
ஏலவு மிருப்பாளாகி
விடுவது மிருபங்காமே 132

இருபங்கு போகமீதி
இருக்குமோர் பங்குதன்னை
அறிவைய ரவளே யீன்ற
அன்னையி னுடப்பிறந்தார்
இருப்பவர் ஆணும்பெண்ணும்
எடுப்பது முதல்பகுதி
சரிவகை பகுதி வீதஞ்
சாத்திய முப்பதாரோ 133

ஆருறு பங்கு எந்த
மவர்களி லொருவரில்லை
வேறொரு தலைவனாரும்
வேண்டவு முறைகயமில்லை
கூரதில் மீதியெல்லாம்
குரித்தமுன் முதலில்ச்சேரும்
சேரவே யிதையு முந்த
சேர்த்திடு மஞ்சுபங்கே 134

பங்கொரு மஞ்சுமிந்த
பகுந்ததில் மீதிதானும்
மிங்குலத்திறந்தான் தேவிக்
கிருந்திடில் ஒரு பெண்ணாகில்
அங்குள்ள முதலை ரண்டா
யாய்ந்தொரு கூறெடுப்பாள்
பெண்களு மிரண்டேயாகில்
புரிந்திடு மூன்றுபங்கே 135

பங்குள்ள மாதையர்க்குப்
பாலக னொருவனானல்
தங்களும் சரிபங்காகும்
தாட்டிய னிருவ ரென்றில்
இங்கிலும் சரியா மூவ
ரெடுப்பது வேத நீதம்
அங்கொரு ஆணும் பெண்ணும்
அன்னையும் மிருப்பாராகில் 136

இருந்திடி லாணும் பெண்டு
யேந்திளை யிருவரென்னில்
இருந்திடில் மூன்றிலொன்றும்
எடுப்பது யீன்ற மாது
இருந்திடு பங்கதனை
இருக்கின்ற ஆணும்பெண்ணும்
இருந்தவ னிருபங்காகும்
யேந்திழைக் கொருபங்காமே 137

ஏந்திழை யீன்ற பாலர்
இருந்திடி லதிகமாக
சொத்தையு மகருந்திரா
தோகைக்கு நாலிலொன்று
ஈந்திடு மூன்றுபங்கு
இருக்கின்ற ஆணும்பெண்ணும்
ஆய்ந்தபெண் ணொருபங்காகு
மாளனுக் கிருபங்காமே 138

ஆகிய விதமுள்ள ஆதனப்புரியல்
அதாலத்து மவுலியின் விஷளம்
ஏகவன் முஹம்மது உரைத்திட வலமா
யாவரும் நாலு இமாமும்
பாகியே பலபல தனத்திலு முரைத்தார்
பரைந்தன ரறிந்துள்ள மதியே
வாகுடன் பொரு ளனைத்திலும் தெளிந்த
பிஷ்குவிலே வருகுதிந்த ஹுக்குமே 139

வரம்பெரு மிறை தூதரான
முஹம்மது இரசூலுல்லா
திரம்பெரு முலகோர்க்கெல்லாம்
தீனிலே நிறுத்து கோமான்
வரம்புக ளுலகில் மாண்டா னவன் குல
மடவார் மற்றும்
எரம்பிய குழுக்கயாவும்
எடுத்திடும் பகுதிடங்கே 140

பங்குள்ள பாலர் தம்மை
பாரினி லீன்றபாலர்
தங்களின் மஹரின்சொத்தை
தடையாத் தீர்திருந்தால்
அங்குள்ள ஆண்பெண்மக்க
ளம்மைபமா ரடுமைமற்றும்
பங்குவைத் தெடுக்குமந்த
பாரயிலு விஷளஞ்சொல்வேன் 141

சொல்லிய முதலே பத்தாய்த்
தொழுதொரு பகுதிதன்னை
அல்லவன் குமரிருந்தால்
ஆணும்பெண் சரிபகுதி
எல்லையில் குமரில்லாதா
லனைத்தையும் தொகுத்துவொன்றாய்
எல்லையில் தொகுத்த பங்கே
எட்டுப்பங்காக வீந்தே 142

ஈந்ததில் எட்டோர்பங்கே
இறந்தவன் மனைவிபாரில்
சொந்தமா ஹலாவின் மார்க்குச்
சொத்தையு மிருபங்காகும்
கந்தமாஞ் சுரிகத்தார்க்கும்
கைவிலை மாதையார்க்கும்
அந்தவன் கூறில்பாதி
யதிகமு மேழுபங்கே 143

பங்கொரு ஏழுதுண்டாய்
பகுந்ததை யொன்றாய்ச்சேர்த்து
அங்கவன் ஹலாவின் பின்னை
ஆனபிள்ளைக் கிருபங்காகும்
பெண்களுக் கொருபங்காக
பிரிப்பது வேதநீதம்
கங்குசேர் சுரிகத்தாளும்
கைவலை யடிமையாளே 144

அடிமைகள் சுரிகத்தீன்ற
ஆண்பிள்ளைக் கரைப்பங்காகும்
திடப்பெரு மங்கையாளல்
தீர்ப்பது காலிலொன்று
அடங்கிய அடிமையான
ஆண்பிள்ளைக் கரைக்காலாகும்
ஒடுங்கும்பெண் அடிமையாகி
லுரைத்ததில் பாதிதானே 145

தானவ னிறந்தான் மங்கை
தனிமல டிருந்தாலொன்று
போனது போக வஞ்சு
பதிதமொரு பகுதிதன்னை
ஆனவள் மட்டுக்காக
அதிகமு மெட்டாய் வைத்து
ஏணிய குலத்தாய் முன்போல்
எடுப்பது வேத நீதம் 146

வேதமாம் நீதமாய்த்து
விளம்பினு ருமரு சாதி
மாதையர் சகோதரிமா
ரிருவரில் சரிபங்காகும்
பூதலே னிருவருகில்
பிரிப்பது சரிபங்காகும்
ஆதல னிறந்தான் பாலன்
அனந்தா மெடுக்கலாமே 147

ஆகிய பகுதி யேந்தும்
அரம்பைமாரிருக்க மட்டும்
யேகமாய் பகுதிதன்னை
யெடுக்கலா மவர்கள் பாலர்
தோகைய ரிறந்துபோனு
லவர்களின் புருஷன்மார்கள்
ஏகவா ரீசர்கள் மற்றோர்
யாவர்க்கு மில்லைதானே 148

தனத்திரள் புகழ் நிரைந்த
முஹம்மத ரிரசூல் சொன்ன
அனந்திரம் புரியலுகோ
பணவரு மரியவென்று
கனந்திர இமாங்கள் முற்றும்
கசாலியா ருரைத்தார் மெய்யா
கனத்திரள் புகழ் நிரைந்த
கஞ்சிலிலே வகுத்துதானே 149

தானொரு மாதையற்கு
தரணியி லொருமகளா
மானவ னீன்ற மக்க
ளதிகமொன் றில்லையாகில்
இன்றுள்ள நிதிதனங்க
ளிருவர்க்குச் சரிபங்காகும்
பெண்மக்க ளிறந்துபோனால்
புவியினி லீன்றபாலர் 150

பாலக னிருந்தால்
பங்குதா னவிலொன்று
ஏலமிக் குழலாளென்ன
எட்டிலொன் றவருக்காகும்
பாலரை யீன்றுறோடே
பிறந்தவ ரிருந்தாருகும்
பாலரும் பாலியார்க்கும்
பாட்டியின் பங்குமில்லை 151

பங்கில்லா மனந்தரமில்லை
யுலகத்தி லாறுமொன்னில்
அங்கொரு சேர்ந்தபாலன்
சலமஞ்ச னீன்றபாலன்
தங்களின் புதல்வர் கேட்டு
தரணியில் குபிரானாலும்,
அங்கவ னிறந்திட்டாலும்
அவன் முதல் குலத்தார்க்கில்லை 152

குலத்தொடு குபிறோர் தன்னி
லொருவனு மிசுலாமாகில்
துலைத்தவன் குலத்தோர்பகுதி
தொடுவது பெரு ஹராமா
குலைததவன் முதலைக் குபிறோர்
நிலத்தினி லெடுக்கொண்ணாது
விலைபடக் கொடுத்தபாலர்
வேசையு மவர்கள் பாலர் 153

பாலரு வளர்த்தடுமை
பண்டுள்ள முரிகிளித்து
வூரினி லுருமை விட்டா
லொருபங்கு மவர்கட்கில்லை
ஆரைத்தா னுருமை செய்தோ
மதுக்குமுன் அவர்கள் பாலர்
சீருடன் சேர்ந்திருந்தால்
சென்றிடு மவர்கள் பங்கே 154

பங்குசு ளடுமைதன்னை
பாரிவைத் தாழும்நாளில்
ஓங்கிய எனக்கு பின்னு
லுருமைநீ யென்றே சொன்னன்
அங்கவ னிறந்துபின்னு
லவர்களுக் கேதுமில்லை
அங்கவ ளதுக்குப்பின்னு
லீன்றிடும் பாலர்க்கில்லை 155

இல்லதி லடுமையாளே
இணங்கியே அடியா னென்போன்
எல்லையி லீன்றபால
ரிருப்பவர்க் கெசமான்பங்கு
வல்லவ னிருக்குமட்டும்
அவர்களுக் கேதுமில்லை
அல்லவன் தனக்குப்பின்னு
லாதனத் துகையந்தானே. 156

தரணியில் பிறந்தவர்க்கு
யாரும் தரணியி லில்லையாகில்
என்னுள்ள சிலவுபோக
ஏந்திழை கனத்துமென்ன
உன்னிய, குலத்தோன்
இருந்தவ னிறந்தானுகில்
காணிக்கி மகனே யில்லா
காரியர் மஹருமொன்றே 157

உடப்பிறந் தவர்களொன்று
இருந்திடுங் காலந்தன்னில்
திடமுட னிருக்க எல்லோர்
ஒருவனுக் கருதியாகில்
அடவுட னிவர்கள் முன்னால்
கண்டகண் ணிருப்பாறாகில்
மடவாளுக் கரைக்கூர் மஹறு
மரித்தவன் குலத்தவ ரீவார் 158

குலத்தினில் தமையன்தம்பி
கூடியே பிரிவில்லாதா
நிலத்தினி லிறந்தான்போக
னீன்றவ னறக்கனத்தும்
தலத்தினில் மஹர்முன் சொன்னேன்
தையலர்க் கூறுமில்லை
பிலத்தொரு புதல்வ னுண்டில்
பேசிய மஹறுமுண்டே 159

கூருடன் மஹறுமுண்டு
குறிப்புள்ள புதல்வனுண்டிலை
பேருள்ள ஆணில்லாமல்
பெண்களாய்ப் பிறந்திருந்தால்
ஆரியர் குமர் முடிப்பார்
அதிகமு மவனுக்கில்லை
நூறுநா ளசனமிட்டு
னுண்ணிடை மஹறுதானே 160

மஹறுமே யவழுக்காகு
மங்கைய ரீன்றகன்றில்லை
செகதல வளர்த்த பாலர்
செய்யவும் ஹறாமதாகும்
அக்கருத் தறியாக்கன்னி
ஆளன்முன் னிறந்த மங்கை
துகையுள்ள மஹறுமுன்னால்த்
தோகையர்க் குறைத்தேன் தானே 161

தானவ ரிணங்கி கெர்ப்பந்
தரித்தபின் னிறந்துபோனல்
ஆனவள் கடனுஞ்சொன்னேன்
அவர்குலத் தார்க்குமுண்டு
ஏனவ ரிறந்தா னீன்ற
தெவரினு மில்லையாகில்,
தானவ னுடப்பிறந்தா
தந்தையுந் தாயுந்தானே 162

தந்தையுந் தாயுமற்ற
தனவருங் குலமுமொன்றாய்
வந்ததி லொருவனப்போ
அருதியின் காலமாகி
தந்தையின் தன்னையீன்ற
தந்தையு மிருக்குமட்டும்
ஆந்திப மனைத்துந்தந்தை
யவர்க்கல்லா தெவர்க்குமில்லை 163

இல்லத்தி லிறந்தான் தேவி
கியம்பிய மஹருமற்றும்
எல்லையி லிறந்தான் றன்னை
யீன்றவ ளீயவேண்டும்
அல்லது மஹரே நீத
மவனுங் கூரவளுக்கில்லை
சொல்லிய மஹரில்லாதாய்
சொத்துக்குப் புதல்வனுனன் 164

புதல்வர்க ளிறந்தான் தந்தை
புறப்பவ ளிருந்தாலென்ன
பதிதனி லிறந்தானீன்ற
பாலரொன் றிருக்குமாகில்
இதமுரா றிறந்த பாலர்க்
கதிகமா மீன்றபாலர்
இதமுற அவனிவனு
யிருப்பது நீதம்தானே 165

தானவ னீன்ற பாலர்
தரணியில் வளர்த்தபாலன்
தானிருபேர் சரியென்று
உரைப்பது பெரும் ஹரமாம்
ஆனவ னீன்ற பாலர்க்
கரைக்கரை அசல்புதல்வன்
ஊனமாய்ச் சேர்ந்திருந்தால்
ஒசியத்தில் சேர்த்திருந்தால் 166

நசிகத்தால் வளர்த்தபாலர்
நயந்திடுங் கூறும்பெற்று
நிசமதா யவனை யீன்ற
தந்தையின் கூறக்காலில்
நிசமுள்ள தந்தைகூறு
நிலைப்பது நீதந்தானே

167

நீதமா தந்தை கூறும்
நிலைத்தபின் வளத்தான் கூறும்
ஏதொன்று மவனுக்கில்லை
எவரில்லா தவனுக்கென்ன
ஆதனத் திருவதொன்று
யடங்கலு மவனுக்கென்ன
மாதவன் மனைவி செல்வி
மானிலச் சிரியரல்லால் 168

சிரியனே யீன்றுனில்லை
சிலதுபெண் ணீன்றுளாகில்
வருவிய தமருபக்கம்
வாழ்ந்தவ ளிருப்பாளாகில்
குரியவர் மரித்தபின்னும்
கூறுவைத் தனருங்கொள்வார்
அருங்கும ரிருந்தால்போக்கி
யனைவருக் கரியச்சொன்னேன் 169

அறியவன் குமருமுற்று
மப்புரம் வாழவென்றே
ஒருவனுக் கீந்தவனை
உமருனைக் கவணை பூணில்
பரிகரி முதலிருந்து
பருங்கடன் குமரிருந்தும்
பரந்தர னவனையென்று
பருமறை நீதர்சொன்னார் 170

சொல்லிய திருமறை யனைத்தையு மாய்ந்த
முஹம்ம தானவ ருரைத்தார்
அல்லவொன் றணுகா அனபி யிமாமுங்
கஜாலியு முரைத்ததை யுலமா
எல்லவர் துகைபட வரைந்திடும் விஷளம்
யாவரும் தீன்குலமறிய
வல்லமை புகழ மறை யனைத்திலுந் தேர்ந்த
பகரிலே வருகுதிந்த வகையே 171

பருகிய புதல்வ ரெல்லாம்
பிரிந்திடும் பங்கினப்போ
உரிமைவிட் டடிமைதன்னை
உலகவர் பிரிக்கவேண்டும்
உரிமைவிட் டடிமையின்னும்
உகைபமாய்ச் சேர்ந்திருந்தால்
உரியவன் தனக்கு பங்கு
ஒன்றிலும் காலதாமே 172

அடிமையித் தெரிவையாணு
லதிலுமே பாதியாகும்
அடிமையாள் பாலன் தன்னை
ஆரவர் தனக்கீன்றாலும்
வடுசெரி குளார்க்கில்லை
வயிற்றினி லுதித்த பாலன்
வடியுள்ள புதல்வனாகில்
வைப்பது காலில்பாதி 173

காலினில் காலாம்பை
காலுங்கை கண்ணில்லார்க்கும்
கால்வரை சரியேயாகும்
கனதிமுன் னுரைத்தார்க்கெல்லாம்
ஏதொரு வினத்தார்க்கு
ஈவது பகுதியாகும் .
ஈயவுந் தலைவனின்ற
தெவரினு மில்லையாகில் 174

இல்லையா லாணும்பெண்ணும்
இருவரும் மலடாகில்
வல்லவன் குலத்திற் சேர்ந்த
வாரிசு ரில்லையாகில்
எல்லையில் வளர்த்த பாலர்
எடுக்கலா மனத்துமென்ன
வல்லவன் குலத்தில் மற்ற
வாரிச ரிருப்பாராகில் 175

வாரிசர் வளர்த்த பாலர்
எடுத்திடும் வேத னீதம்
ஆரியர் சிலவு போக
அனைத்தையும் மூன்றாய் வைத்து
ஊரினில் வளர்த்தார்க்கொன்று
அவர்களு மில்லையாகில்
ஆரிய தனத்துமொன்றாய்
ஆரஞ்சு பகுதிதானே 176

பங்கொரு முப்பதாக
பகுந்ததை எட்டுப்பங்கே
அங்கவ னுடப்பிறந்த
ஆணும்பெண் ணிருந்தாரெல்லாந்
தங்களி லாணுக்கொன்றுந்
தையலர்க் கரையுமாகும்
பங்கதி லாறைந்துல்
பார்த்திபன் தகப்பனோடே 177

தகப்ப னுடப்பிறந்த
தைபலா ளாளர்க்கெல்லாம்
வகுப்பது ஆளர்க்கொன்று
மதிலலை மாதர்க்கென்ன
துகைபெரு பங்கினாலே
தோன்றலை யீன்றதாயின்
உகப்புடன் புறந்தாரென்று
ஒன்றொடிக் கொன்றுமாமே 178

ஒன்றொடி இறந்தான் முந்த
உடப்பிறந் திருப்போர்க்கெல்லாம்
இன்றிதி லாறுபங்கு
ஏந்திழைக் கிருபங்காகும்
மன்றதில் பகுதிபாதி
ஆளருக் காகுமென்ன
நன்றவ னிறந்தானந்த
நாரியர் தாயிருந்தால் 179

இருந்திடில் பங்குமூன்று
எடுப்பது இவளுக்காகும்
வருந்திய தவளுக்கல்லால்
அவளுடன் பிறந்தார்க்கில்லை
இறந்திட்டா லவர்கட்கில்லை
வேறில்லை தவர்கள்க்கில்லை
உரைத்திடும் புதல்வர்க்கில்லை
உடப்பிறந்தவர்க் காகுந்தானே 180

உடப்பிறந் தவர்கள் முந்த
ஓதிய பங்குமுண்டு
இடங்களி லாணுக்கொன்று
ஏந்திழைக் கிருபங்காகும்
மடக்கனு மெடுத்துக்கொள்வா
ரவர்குல மனத்துமாச்சு
திடம்பெறு பங்கிலொன்றே
தினெறி மஹாலி மோதின் 181

மஹாலிக்கு ரெண்டுமோதின்
ஒன்று முசாபிருக்குகாலாஞ்
செகந்தனி லொருபங்காக
சேர்வது வேதநீதம்
வகையுரு பங்குநாலாம்
வகுத்ததில் ஹாக்கிமொன்று
பகையில்ல மூன்றுபங்கு
பக்கநால் முறையார்க்காகும் 182

ஆகிய பங்கு ஒன்றே
அஞ்சுபங்காக வைத்து
வாகுள்ள ஆலிமொன்று
வரும்பிணி யாளரொன்று
தோகையர்க் குமருக்கொன்று
துலங்க ளெளியோர்க்கொன்று
போகுவர் ஹச்சுசெய்ய
பொன்னில்லா தவர்க்கொன்றுமே 183

ஒன்றொடிக் காளைமார்கள்
உயிருட னெதுமிந்தாலும்
மண்டலத் தவளுமாளன்
மஹாரதை இழந்திட்டாலும்
தெண்டனைக் கடங்காமங்கை
திருநெறி தப்பினாலுங்
கண்டில்லை கடனுங்கூறுங்
காரியர் குலர்க்குந்தானே 184

தானவன் தூதர்வள்ளல்
தரணியி லுரைத்திடு விஷளம்
தீனவ ருலமாமுற்றும்
அறிந்திட இமாங் ஹசாலி
ஷணிய பொருள் இமாம்கள்
அனைவருந் தெரிந்துமிக்கத்
தானவ ருறைத்தியார்
தன்னிலே வருதிதுதானே 185

அறிவது கடனும் போக
ஆறஞ்சு பங்கா வைத்து
ஒருபங்கைப் பத்தாய் வகிர்த்து
வுயர்பதி பள்ளி மோதின்
குருநெறி மகுலி மவுலா,
கூன்குருட ரூமை
மரூர்பேருக்கு மாரூர் மிசுக்கின்
ஹச்ஜிபேசிய சொந்தைய பந்தோர்க்கும் 186

ஈந்திடும் பதிமார்க்கெல்லா
மீந்திடு மொருபங்காகும்
உய்ந்தபங் கினைத்துமொன்றாய்
ஒன்றொடி தனக்கே யெல்லாம்
பாந்திப மகருங்கூறும்
பாலனைச் சேர்ந்ததல்லால்
உய்ந்தவள் தாய்தகப்ப
னுடப்பிறந் தவர்க்குமில்லை 187

இல்லையா வுலகிலப்பால்
ஒடுக்கமுன் னுரைத்தபேர்கள்
வல்லவன் பால னல்லால்
வாரிஷர்க் கேதுமில்லை
எல்லை தீன் பிரிவுமுற்றும்
யார்க்குமரசனூர்க்கு
வல்லவன் றூதிரசூல்
உலக முஹம்மதருரைத்தவாறே 188

உரைத்திடும் பரவை பட்சி
உயிரொடு புழுவையுண்டு
கரைத்திடுங் காலந்தன்னில்
கையைப்போ லள்ளியுண்ணும்
வரைத்திடு மசனமுண்ட
வாயைமன தடைத்திடாது
குரைத்திடும் நெறியின்பட்சி
குமுகம்குலம் ஹறுமதாமே 189

தானிந்த விதங்களில்லாத்
தரணியி னெறியின் பட்சி
வானவ னெறியின் றீனை
வகுத்திடும் நபிமார் தன்னை
பானிவத் தறிந்து ஈமான்
பகின்றது ஹலாலா மின்னம்
ஊனிய னூர்வினம்புழுக்கள்
உரைத்திடுங் கருத்தைக்கேளும் 190

ஹறாமதெண் டறியுமந்தக்
காசினி னூர்வினங்கள்
தருதர மறியானஞ்சு
தரித்திடும் விசத்தின்சாதி
பராபரக் குலம்வித்தில்லாப்
படைப்பினில் புழுத்தபூச்சி
நிருகர வித்தில்லாமல்
நிலத்தினில் மழையாம் பூச்சி 191

பூச்சியும் புழுக்களெல்லாம்
புசிப்பது பெரும்ஹறாமாம்
மீச்சியா நீரில் வாழும்
மீன்புழு ரூபந்தன்னில்
ஆச்சியா மதனை யீன்ற
அண்டத்தி லாகாதெல்லாங்
காச்சிகோல் கையாலுண்ணும்
கரையில் சென்றுவியாமே 192

ஆனது உடலுதிர
மற்றது ஹறாமதாகுங்
கானக மிருகமுண்டு
கக்கிப்பின் னுண்ணுமதெல்லாம்
பார்நிலம் புகழும்வல்லோன்
நபிகளைப் பணிந்ததில்லை
ஆனதா லிறையிருக்கா
தனைத்துமே ஹறாமதாமே 193

ஹராமுள்ள விதங்களெல்லாங்
காவல ருரைத்தீர் மெய்யே
ஹராமென்ற விருக்ஷம்பூடு
காசினியோர்க் கேறுது
ஹராமது தள்ளிமற்ற
ஹலாலெனும் விருக்ஷம்பூடு
ஹராமது ஹலால்திருருங்
காவல ருரைத்தீரென்று 194
இதம்பெரு நவுலாக்கு முதாரி
யாவரு மெழுந்த கூட்டம்
மதினமின் றிசையை நோக்கி
மண்டுவார் கடலே லொப்பார்
கதிரொளி மறையச் சென்று
கடிகியே நடப்பாரப்போ 191

அப்பெருந் தளமுதாரி
யாவரும் வருகும் நாளில்
ஒப்பில்லா மருதிவேந்தர்
முஹம்மது அனுபா வள்ளல்
எப்புகழ் மருதினு டையோர்
எண்ணிலாப் பெரும்படை வீரர்
ஒப்பினி லடங்கா திறை பதினோக்கி
ஒருமிக் நடந்திடுஞ் சேனை 192

(வேறு)

சேனை திரளுக் கதிபதி
ஞான அனுபாவு
மானிலத் தரசருக் கரசர்
முஹம்மது மருதி தீனவர்கள்
தீன் தீனென்று
திக்கிறைல்முளங்க
வானவர் கூறுனி சேனை
வந்தவர் தொழுக 193

வானவ ரடியளிக்கப்
பாதமடி தோயார்
காதவழி சுற்றும் நரை
யுற்றது கஸ்தூரி
னீதமுடி மேல்கவிகை
மஞ்சு குடை சூழப்
பேதக மலஞ்சல
மறிந்தவருமில்லை 194

எல்லையில் முஹம்மதர்க்
கிறைகொடுத்திருந்த
வல்ல அடையாளமும்
வலக்கையு மேனீளம்
வல்லவன் ஜிபுரியிலே
ஓகி வருவதில்லை
நல்ல கொடி பத்துமாடும்
ஞற்றிசைகளெல்லாம் 195

எல்லவர் முடிக்கிமேல்
லுயர்ந்த முடியுள்ளோர்
ஈரேழு னுஹுலவத்துட
னிலாஞ் சினைமுள்ளோர்
வெள்ளை மரகத நிலா
வீசு மொழிமேனி
புள்ளி மருப்பேன் புழுவும்
பொய்யணுகா மேனி 196

மேனி மொழி சூளதியம்
வாஞெளிவு போல
நானிலத்திலுள்ள பாஷை
முற்றுமே தெரிந்தோர்
தீனவர்க் காசருக்
காசர்களுக்காசர்
ஆனபடை யோடே மக்கம்
மேருக்கியே நடப்பார் 197

நடந்த படையா மகுதி
நாட்டையுங் கடந்து
திடந்திரள மகரிபென்னும்
தேசமுங் கடந்து
இடம்பெரு மிசிறுப்பதித்
தேசமும் கடந்து
அடங்கலு பைத்தல்
முகத்தீசருகிலாவார் 198

அன்னகரி யுத்தபல
முற்றுமெதிர் கொண்டு
மன்னர் மகுதிபதம்
வணங்கி நின்றுகண்டார்
என்ன டதியுள்ளவர்கள்
என்று மிமாங்கேள்க்க
மன்னவரை நோக்கிவந்த
முன்னவ ருரைப்பார் 199

எத்திசை புகழும் நபி
நூருபடை நாளில்
அக்கட லெழுந்தபெரு
வெள்ளமித்துலவு
மிக்கபதி யாவுமளியக்
கண்டு வெற்றி
மிக்கமக முறை வந்து
விண்ணவ ரெடுத்தார் 200

விண்ணவ ரெடுத்து நாலாம்
　　விண்ணுலகில் வைத்தார்
மண்ணுலகி லாண்ட சாலூத்
　　தென்னும் மன்னன்
தன்னையின் னுலகில்வென்ற
　　நபிதாவூது மைந்தன்
பொன்னுலகு மாள
　　சுலையுமா நபியுமாமே 201

அந்நபி கொலு விசைந்த
　　தின் னகருமாகும்
மன்னவ ரெடுத்தபள்ளி
　　மண்டபமிதாகும்
பின்னமவர் தானடங்கு
　　மின்னகருமாகும்
முன்னவ னருபயித்தல்
　　முகத்தீஸ்செங்கோ லாமுவாரே 202

அத்தலத்தி னுள்ளபல
　　ருத்தனரு மொன்ருய்
எத்திசை புகழனுபாவு
　　மருதீயும்
அத்தலம் வீதிகளில்
　　முற்றுமே நடந்து
முத்ததிக மானபயித்தல்
　　முகத்தீசுக் குள்ளாவார் 203

சென்றிமா முடனே
　　சேர்ந்தவர் தொழுது
மன்றலம் புகழ் சுலைமான்
　　பதமுங்கண்டு
அன்று நகருத்தவீரர்
　　முற்றுமே எழுந்து
வென்றறிவார் தரிசினை வேந்தன்
　　மலைகாண்பார் 204

தேசக் காணியும் விளித்
துரிசினுவி லுள்ளோா
நாசகு பிரின்படைக்
கொதுங்கியே யடங்கி
ஓசைபுகழ் மலேயினுத் தவர்கள் முற்றும்
மதிலொளிந் திருக்கும் நாளில்
வாசம் புகழ்வள்ளல்
மஹ¬மூது கொடிகாண்பார் 205

கண்டகொடி தீன்குலங்கள்
கவலேகள் தெளிந்து
அன்றுமலே யுத்தவர்கள்
முற்றுமெதிர் காண
கண்டவகை எப்பதியோர்
என்று இமாங்கேட்க
மண்டலத் தாசுமூன்
மகிண்டன ருரைப்பார் 206

மூன்னவ னருள் தரித்திருந்த
நபிமூசா
மன்னனேடு பேசியே
மண்டாடிய மலேயாம்
பின்னுமவர் தானடக்கும்
இம்மலேயி தாகும்
இன்னவகை கானுபல
யாவுமலே சொல்வார் 207

கத்த னருள் பெற்றநபி
மூசாவுமடங்கும்
எத்திசையும் புகழ் மலேயில்
லேரியுன றென்றுய்
மெத்தவுந் தொழுது மூசா
பாதஞ்சென்று கண்டார்
அத்தலருஞ் சேர்ந்து
மதின நகரைக்காண்பார் 208

மன்னரிலு மன்னர்
மதினு னகரைக்காண
அன்னகரிலுள்ள பல
ரனைவரு மெதிர்காண
என்னபதி யீயாரென
யிமாமவரைக் கேட்பார்
மன்னவரை நோக்கி
மதினு வுள் ளாருரைப்பார் 209

மண்டத்தி லுள்ள மனுமற்
றனைக்குமுன்னே
அண்டிறை வகுத்த நபி
ஆதமொடு ஹவ்வா
எண்டிசை யெரிந்த இருபேரை
யொன்றாய்ச் சேர்த்து
மண்டலத்தில் வாழ்ந்திருந்த
மதினு னகருமாமே 210

கத்தனருள் வெற்றிபெற்ற
மற்ற நபிமார்கள்
எத்தனையனே கம்பே
ருண்ட திருனகரம்
முத்திலு மிருபதி
நிரைந்தமருமூது
இத்தலத் தடங்கு
மதினு நகருமாமே 211

இந்த விஷளமோத
மருமூதெனு மருதி
யாவரும் நடந்து மதினு
நகரும் வீதி
அவ்வலாகிற் ஆனநபி
பாதம்பணிந்தோதி
இவ்வுலகி லுள்ளனருஞ்
சேர்ந்தெழும்புவாரே 212

சேர்ந்தவர் மகுதிபதியுள்ள
குலமுள்ளோர்
முந்திய பயித்தல்
முகத்தீசுப் பதியுள்ளோர்
பிந்தவுமே துரிசிஞ
அந்த மலையுள்ளோர்
விந்தைசெரி வள்ளல்
மதிஞ நகருள்ளோர் 213

இன்னகர முள்ளகுல
மியாவருமே தொன்று
எண்ணரிய சேனைதிரள்
யாவுமே நடந்து
வண்ணமணி மாமலை
வனந்திரள் கடந்து
மன்ன ரிரசூல் பிறந்த
மக்கநகர் காண்பார் 214

மக்கநகர் மிக்கபல
ருத்தனரு முற்று
மிக்கதிசை சூழ்மகுதி
வேந்தரையுங் காண
நிக்கபதி யுற்றகுல
மிக்கவரை நோக்கி
பக்குவம் நிரைந்தபதி
யுங்குலம தென்ன 215

தக்க வருள் பெற்ற நபி
ஆதி இபுராகீம்
மக்கள் இசுமாயில் குல
மான நபிநீதர்
மிக்கநபி தன்குலத்தில்
ஒக்கநிலை பெற்றோர்
ஹக்கன் நபியுற்ற
மக்கமா னகர்முன்னாள் 216

முன்னுமிறை யாதநபி
தானடங்கும் நாடு
எண்ணரிய மற்ற நபி
தான் பிறந்தநாடு
பின்னுமிசு மாயில்நபி
தான்பிறந்த நாடு
மன்னரிர சூல் பிறந்த
மக்கநகர்நாடே 217

(விருத்தம்)

எத்திசைக்கு முயர்ந்தபதி மக்கநாடு
இறை தூதர் மனுவடிவாய் இருந்தநாடு
பத்திநெறி வழுவாமல் நடக்கும்நாடு
பனிரெண்டு பறுனுவகை யுதிக்கும்நாடு
கத்தனரு ளனுதினமும் நிறைந்தநாடு
காசினியோர் செய்த பிழை பொருக்கும்நாடு
குற்றமில்லா திறைவேத மிறங்கு நாடு
குவலயத்துக்கதிபதி மக்கநாடே 218

(வேறு)

மக்கமா னகரிலுள்ளோர்
அனைவரு மெதிரே காணத்
தக்கவன் முஹம்மது மருதியுந்
தலைவருங் குலாவியே தழுவி
ஒக்கவு மனுபாமற்ற
ஒன்றுள்ள குலமனைத்தும்
மக்கமென் பதியில் வந்து
மகிழ்ந்தனர் தொழுவாரப்போ 219

அனைவருந் தொழுது வள்ளல்
மருதியை இமாம் நிருத்தி
இருவருங் குலங்கள் சூழ
யாவரு மிருக்கும் நாளில்
அனைவரு மருதிமுன் வந்து
அருங்குபிர் படைவருமெனவும்
தனுவுள்ள பெருந்தளமருதி
தரந்தரம் வகுப்பாரப்போ 220

அப்பெரு மகுதிசேனை
யணியணி வகுந்திருக்கும்
செப்புவார் தூதனுப்பி
செய்தியை அறிந்திங்கே வருக
இப்படி தூதுபோ யறிவார்
இருபது நாள் வழிப்பயணம்
ஒப்பில்லா திருக்கும் படையவர் பயந்து
ஓடிவந் திடுவார் தப்பி 221

தப்பியே வருவோரெல்லாந்
தாட்டியா மகுதிமுன்னுரைப்பார்
இப்புவி யரசர்கோவே
எண்ணிலாப் படைக்கடலதியம்
ஒப்பில்லா பெருங்கடலுலகை
அளித்திடு மொருநூர் காதம்
இப்புவி மதினமக்க
மெரிந்திட வருகுதென்பார் 222

உரைத்திட மகுதி யிமாமும்
உலகுள்ள தீன்குலமனைத்தும்
நிரைந்திடு மெழுகடர் ரிரளாய்
னீளிய பெருங்கடல் படையெழுந்தது
குரைந்திட குபிர்குலம் நோக்கி
குரைசியின் பெரும்படை யெழுந்து
பெருத்திடும் காரமு சென்ற
பெரும்படைக் கடலையும் காண்பார் 223

காணவு முஹம்மது மகுதி
கணக்கில்லா பெருந்தள மனைத்தும்
ஆணிய வகுப்பேபார் நாலாய்
அனைவருந் தெதிரிருக்க
பானிலம் புகழும் வள்ளல்
அலியுல்லா பாலனை
தீனவர்க் கரசர்கோமான்
முஹம்மது அனுபாத்தானே 224

தானவர் மருதிதன்னைத்
தளர்ந்தடி வணங்கி போற்றி
ஆனநந் நபிமா ரசாபு
அசனுச னனரையும் போற்றி
ஈானிலத் திறந்தோ ரனரையும்
போற்றியே வாழ்த்தி
மானிலம் புகழும் வள்ளல்
பாதத்தைபரிபடி வைப்பார் 225

வைப்பது குதாத்தில் வல்லோன்
வரிசைபெற் றவர்தன்பாதம்
கத்தவ னருளனு
பாக்கடும்பரிமீதி லேரி
சுத்தேழு காதம் வீசும்
சூரவாள் தனையுருவிக்
குத்துக்கால் பரியைத்தூண்ட
குதித்திடும் நடுப்படையில் 226

படைநடுப் பரியின்மேலே
பார்த்திப னலியுல்லாதன்
திடம்பெரும் புதல்வனை
தீனவர்க் காசர்கோமான்
நடம்பெரு முஹம்மதனுபா
நாற்றிசை படையுலாவு
மிடந்தனில் மருதி வேந்தர்
எண்ணிலாப் பெரும்படை யடுக்கும் 227

அடுத்திடும் மருதியும் படையும்
அலியுல்லா புதல்வருமனுபா
தொடுத்தவ ரமளியில்த் துடங்கத்
துய்யவ னருளுமுதாரி
நடந்தவர் மலேவனங்கடந்து
நானிலம் புவிவானதிர
கடத்திய கதிரொளி மறைய
கருமூசு படையது காண்பார் 228

(வேறு)

கண்டவர் குபிறேறென்று
கடிய வாங்காரம் பொங்கி
மண்டல மனைத்துமொன்றாய்
நிரைந்திங் நசுறுசேனை
என்றொரு திசையு மில்லை
லெக்கமுந் துறையுமில்லை
நின்றிடு மொரு நூர் காதம்
நிறைந்தவன் சேனைதானே 229

தானந்த பெரும் படையில்
தாரை வெண்மேகம்போல
வானவன் அருள் முதாரி
மொட்ட பக்கீர்கள் கூட்டந்
தீனொளி தீன் தீன் முஹம்மதென்று
திக்கு நாலொலி முழங்க
ஊணிய வானமட்டும்
ஒலியிட அடிப்பாரப்போ 230

அப்பொழு தனுவா வள்ளல்
அரசர்கோன் மகுதிவேந்தர்
ஒப்பெருஞ் சேனை முதாரி
ஒன்றுசேர்ந் தமர்பொருந்திச்
செப்பெரு கறுமு சென்ற
சேனைமுற் றிறந்து போகும்
ஒப்பில்லா இசுலாந் தன்னில்
ஒருத்தரு மிறப்பாரில்லை 231

இறந்திடா தீன்குலமொன்று
மிறந்திடும் நசுரா முற்றும்
சிறந்திடு மனுபா வள்ளல்
முஹம்மது மகுதி இமாமும்
நிறைந்திறை யருள் தரித்து
னிகரில்லா தீன்குல மனைத்தும்
பெருந்தளத் துறையில் முதாரியளான
பெருங்குல மணிவரைக்காண்பார் 232

குலங்களும் பெரும்படை யுடையோர்
கூறுவீ ரெவ்வூரெனவும்
நலம்புகழ் மருதியை நோக்கி
நவுலாக்கு முதாரிய ளறைவார்
பிலம்புகள் மூசாவேதம்
பெற்றிடும் பனிசுராயீல்
குலங்களுதவு ரேத்துவேதம்
கூடியே யிருக்கும் நாளில் 233

நாளினில் நபியார் சொன்ன
நடபடி நடந்தில்லாதால்
பாள்பட நாற்பத்தீராயிரம்
பட்டண மெரிந்ததல்லால்
நீளிய குலங்களெல்லாம்
நீருபட் டெரிந்து தூளாம்
ஊளிய யின்தவுரேத்தப்போ
உலகைவிட் டெழுந்து போச்சே 234

ஏந்திடி விறையோன் மூசா
ஏரினர் துரிசினுவில்
எழுந்தவர்க் கெதியாயெண்ணி
யாங்களு மவரோடெழுந்தே
மொழிந்தன ரிறையோன் மூசா
முஹம்மது நபிக்குப்பின்னுல்
நெளிந்திடுங் குபிர்க்குல மறுக்க
முஹம்மது மருதியும் வருவார் 235

வருபவ ரிறையருள் தரித்தோர்
யவர்க்கனர் படைக்குலமெனவும்
குருநபி முஹம்ம திரசூல் கூரிய
குலத்துள்ள கலிமா
இறையவ னருள்பெரு மூசாயெங்களை
யவர்குலம் வருத்தி
இருக்கையி விறையவ னருளால்
இறைநபி யிறைபரமானுர் 236

பரமிறை சேர்ந்தபின் நபியை
பள்ளிவைத்தே மலை யிருந்தோம்
பெரியவன் ஜிபுரிலெங்கள் யனைரையும்
பிசகிடா ஒருதிரள்க்குளுவாய்
குருவென்னு மாவுல் ஹியாத்து
குகைக்குள்ளே அடைத்தா ரப்போ
அரியவன் ஹியாத்து நீரை
அனைவரு மருந்தியே யிருந்தோம் 237

மிருந்திடு மிதுநாள் வரைக்கு
மிறப்பொடு பிறப்பூ நூர்க்கம்
அருந்திலோ மிரையருள் வருந்தி
அன்னுள்ள இன்றுமே இருந்தோம்
நிறைந்திறை ஜிபுரீலந்த
நீளிய மலைதனைப்பிளந்து
சிறந்திறை ஹாபாச்செல்ல
செப்பிவிண் ணுலகத்துப்போனர் 238

போனவ ருரைக்க வல்லோன்
புகழ்பதி யனைவரும் னுடி
சேனையும் வருகையில் கொடிய
திடர்குபிர்க்குலம் வரக்கண்டோம்
தீனவர்க் கெதிர் குபிரெனவே
திடத்துடன் பொருதித்தங்கள்
மாணிக்க மலரடி கண்டோம்
மகிழ்ந்தன மென்றனர் பணிவார் 239

பணிந்த முதாரியள நவுலாக்
கொன்பது லக்ஷம் பேறென்று
இனந்திரள் குலங்களு முந்த
யாவரு மிறைமக்க நாட்டில்
அனந்தமும் பெருந்தளஞ்சேர்ந்து
அரபாவினி லனைவருந்தொழுது
மனந்திளனைவருமெழுந்து
மதினமாம் நகர்சேருவாரே 240

சேர்ந்தவ ரனைவரு மொன்றாய்
திருநபி தருஹாமீதில்
மரந்தலர் பணிந்தனர் போற்றி
மகுதியை இமாம் நிருத்தி
ஆய்ந்தவர் தொழுதார் செற்று
யனைவரு மாமீன் கூறிப்
பார்த்திப மதினமாள
பட்டமு மகுதிக்காமே 241

மகுதியை இமாம் நிருத்தி
மண்டல மதினமாளப்
பகுமென மஹம்மதனுபா
பரும்படைத் தலைவனுகத்
துகைப்பெரு முதாரி முற்றுந்
துதிபதி திரைகடல் போலச்
செகதலமனைத்துஞ் செங்கோல்
செலுத்தவு மெழும்புஞ்சேனை 242

சேனையின் றலைவன் மகுதி
பாத்திசா முலகமெங்கும்
வேனலுங்கடலேழ் தீவு
மிடத்திலு மிடையில்லாமல்
நானிலக்குபி ரளித்து
நபிமறை யுலகமெங்கும்
தீன்கொலு விளங்கிச் செங்கோல்
சிங்காசனஞ் செலுத்துவாரே 243

செலுத்துஞ் சிங்காதன முலகை
ஜின்பரி தேவுமற் றுயிரும்
வலுத்தனங் குரைந்து மகுதியைப்பணிந்து
வர்னரும் ராசதானரும்
மலுக்கிடும் புவியில் பதுக்கிடு முகலு
மச்சணங்கொடுவா பூதஞ்
செலுத்தனஞ் செலுத்தி ஆலங்க ளனைத்தும்
சார்ந்தா சிருப்பார் மகுதி 244

(வேறு)
விளைந்திடுந் தீன்பயிர் தழைத்திடுமுலகை
விளம்புரேனிந்த உலகவரறிய
வளம்பெரு மிறையவன் வகுத்துள்ள தனைத்து
மறிந்தவ னிரையவனுதி
ஒழிந்தும்மற்றூரும் வருமறிந்தில்லை
யாவு மொருவனும் வகுத்துள்ள தனத்தில்
மொழியினில் பதினெண் ணாயிரமாலமும்
முன்னவ னுரைத்திடு முறையே 245

# ஆலங்கள் விஷளம்.

---

உரைத்திடும் பதினெண் ணாயிர மாலங்க
ளொன்றுக்கொன்றுகமை யில்லாமல்
குறித்திடும் ரிஷபம் பதினெண்ணாயிரங்
கொம்புக்கோ ருலகமாச் சிமக்கும்
இருத்தியே பதினெண் ணாயிரமாலத்திலிந்த
உலகமு மாலமொன்றாகும்
நிறை இந்த உலகமு மாலங்களனைத்து
நீதியே நிரைந்த நாயன் 246

நாயகன் வகுத்தனத்துள்ள பதிக்கும்
நாயனும் வேதமு நபியும்
ஆயக்கமிதுதான் அனைத்துமே பலதர
மமைத்துள் இறையருளாலே
கூவிய ஆலமென்றுரைப்பது மேதால்
குவலயத் தனைவருங் கேளும்
போலவன் றருகாக் குருசருசதின் கீழ்
உரைத்தன வின் னுலகமுமேழே 247

(வேறு)

ஏழுவான் முதலா யிவ்வுலகாகும்
ஏழு வானத்தில் முதல்வான கீழ்
ஆளியும் பெருவெளி யஞ்சு நூறாண்டு
தலமும் இடந்திடஞ் சரியா
கீழுந்தென்வட மேல் இடமொடு
நீளம் கிருபையி நிறைவெளி யதின்கீழ்
தானுல கெழுபு விதனை யெழு கடலையுந்
தரிப்பது பாரையில் சரியே 248

சரிதிசை வருஷமோ ரஞ்சு நூறாண்டதில்ச்
சாத்திய உலகெழுகடலு
மிருந்திட ரிஷபமு மொருகொம்பிலேந்திட
இருக்கின்ற பாரையைச்சூள
பெரியவ னருள்பெருக் கோபக்காமலையை
பிசகிடா தெழும்பிய கோட்டை
வரிசையும் புரிசை யுவானள வுயரம்
வல்லவ னமைத்திடும் வகையே 249

அமைத்திடும் புருசையும் வானள வுயர்ந்து
அடிதட்டு பாரையை வளைந்து
சிமந்திடும் ரிஷபமும் பாரையு மலையுஞ்
செப்பிய புருசையின் பாரைக்குள்ளேதால்
பகுந்தொரு பாதியு பருங்கடலாகும்
பாதியே புவியேழாகும்
அகந்திடுங் கடலா யிரத்தயி னூர்
கடலமைத்திடு மாளம் 250

ஆளமா யிரத்தைநூறு
அக்கடல் தரித்திடும் பாரை
நீளமுங் கிளமேலயினூறாண்டு
நிதானத்தி விடமதில்பாதி
ஆளியகடலு மமைந்ததில்பாதி
ஆலமுமிவ்வுலகேழ்பாதி
நீளமுங்கிழமே லஞ்சு நூறாண்டு
னிதானத்தில் பாதியு மிடமே 251

இடம்பெரு முலகமொன்றில்
எழுபுவி யணியணியாகும்
மடிமுதல் பாரை பூண்டு
மதுமுதல் பூமிகளேழுந்
தொடுசர மிடை விடாமல்
தொகுத்தொரு வலம்புரித் திருக்காய்
அடங்கலு மெழுபுவியொன்று
யடிப்புவி பாரையில் தரித்தே 252

தரித்திடும் புவிக்கன் மஞ்சு நூறுண்டு
தங்கியே யிடமுமவ்விதமா
இருப்பது மெழுபுவி யிடையொரு
எழும் லக்க மாயிரத் தைநூறு
தரித்துள்ள புவிகளேழுமே சரியே
சாத்துரேணப்புவிக் கேழு நாவும்
பருத்திடுங் கடலின்மேல் படர்ந்துதான் வளர்ந்திட
பாட்டவ னமைத்திம் பாங்கே 253

பாங்குள்ள புவிக்கேழுநாவும்
படர்ந்திடங் கடலின் மேலே
தாங்கிய கடல் முழுதொன்றாய்
தரித்துள்ள பெருங்கடல் நாவும்
மெங்குள்ள புவிக்கேழுனவா
மிருப்பது புவிமீதில் படர்ந்து
அங்குள்ள புவியெழுங்கடலு
மணியணி மிவ்விதம் படர்ந்தே 254

படர்ந்தெழு கடல் நாவுலகில்
பாருல கேழு மேவொடிங் கடலில்த்
துடர்ந்திடு மெழுபுவி யொருதிரளாகுந்
துகை பெருங்கடலு மொன்றுகு
மிடந்திட மடங்கலும் புவி சரியாம்
இறையவ னமைத்தெழு புவியில்
லடிப்புவி தனில்படை யிருப்போர்
அடங்கலு மாகதமாமே 255

(வேறு)

மரகதத் தொளிவினுலே
மற்றுள்ள தமைத்தவல்லோன்
சிரமொரு நாலும் பூண்ட
செருக்கியர் குலங்களாகுந்
தாமந்த புவிக்கு மேலே
தங்கிய புவிதான் ரெண்டில்
உரஞ்சிர மிரும்புதங்க
முருக்குக ளருக்குஞ்செம்பே 256

செம்புகள் நவலோகத்தால்
சேனைகள் சயிலர்சாதி
இயம்பெரு மலையிலும் பெரிதா
எண்ணில்லா தெழுந்திடுங்குலமாம்
மன்பெரு புவிக்குமேலே
அணிந்திடு மேல்புவியில்
வம்புள்ள பரிஜின் தேவும்
வாழ்ந்திடு புவியுமாமே 257

ஆகிய புவிக்குமேலே
அமைத்திடு மேல்ப்புவியில்
லோகமு னெருப்பினாலே
எண்ணில்லா பெருங்குலத்தளமாம்
வாகுள்ள புவிக்கி மேலே
வல்லவன் அமைக்கின்ற புவியில்
பாகிய படைப்புக்கல்லால்
பாவய னனந்தமாமே 258

அனந்தமும் படைப்பனைத்தும்
அந்திர பார்வையாகுந்
தனந்திர னுலகுமேலே
தங்குமே லுலகந்தன்னி
லினந்திரள் குலங்கள் முற்றும்
ஏகமு மொருமுத்தாகுங்
கனந்திரள் புவிக்குமேலே
காசினி வுலகமாமே 259

(வேறு)

காட்சியு மோட்சியுஞ் சூட்சியு
காரணச் சூழுலகிதுதான்
ஆச்சிப மணுகா வள்ளல்
ஆதிமியா குலநிறைந்து
தாட்ச்சியொன் றணுகா வள்ளல்
முஹம்ம திரசூல் பொருட்டால்
நிச்சயம் மதிறு மக்கம்
நிகரில்லா துலகுமாமே. 260

உலகமுங்கிழமேல் நீளங்
கோதுமேன் அஞ்சு நூறாண்டு
அகலமு மதனில் பாதி
அமைத்த இவ்வுலகந்தன்னில்
பல திசையும் பத்தா
பகுந்திந்த ஆலந்தன்னை
வலம்பெரு வடதிசையில்
வகுப்பொரு நாலுபங்கே 261

பங்குநா லுலகைச்சூழ
பருமலை வளர்ந்திடும் புரிசை
அங்குள்ள உலகமுற்று
மாண்டிடுங் குலமாரென்னி
இங்குல காண்ட நூகு
நபியுட குலத்தில் வந்த
எங்குமே யளிக்குங்கொடிய
யாஜூஜு மாஜூஜு தேசம் 262

தேசங்க முளிக்குஞ் சேனை
திக்குலகாள் பங்குநாலாம்
காசினி வடதிசை யுலகை
கனதியாய்ப் பெருமலை வளர்ந்து
பாசனச்செருக்கியுர் சயிலர்
பங்கிறு லான்றிடு முலகா
மாசில்லா துலகொருபங்கு
மனுடரில்லாப்பெருவனமே. 263

மனுட ரில்லா வனமாறு
மண்டல மளிக்கின்ற கொடியே
தனுவுள்ள நாலூத்தி விருறு
மனைகமுங்காண்டா மிருகம்
மனத்துள்ள பாம்புகள் சிங்கமண்டான்ற
பட்சியின் குலமும்
வனத்துள்ள நரகத்துக்கொசுவும்
வண்டொடு செவியின் பாம்பே 264

வண்டொடு செவியின் பாம்பும்
வாழ்ந்திடு முலகோர் பங்காம்
உண்டுள்ள புவிபங்கு பத்திலொன்பது
போய்யொன்று மீதி
அண்டுள்ள ஆதங்குலங்க
ளாண்டது மனந்தமுமிதுதான்
மண்டல மனைத்துஞ் செங்கோல்
முஹம்மது மகுதியுமாசே 265

அரசருக்கரசர் கோமான்
அதா தலத்து மகுதி யிமாமு
முரசொலி மதிரவு முலகை
முப்பது வருஷமுலாவி
பரவிய பலதிசை முழுதும்
பாந்திட அஹம்மதர் கொடியும்
திரையிட உலகமுத்தனைத்துந்
தீன்பயிர் விளைந்திடுந் திடமே 266

# மகுதிஇமாம் அரசுநிலை.

திடம்பெரு முலகமுற்றும்
இருத்தியே யிசுலாமாக
விடம்பெரு மதிணைட்டில்
யாவரும் புடைசூழரசா
அடங்கலு மகுதிதன்னை
அரசரா இமாம் நிருத்தி
தடம்புகழ் மதினத் ததிபதியாக
சார்ந்தா சிருப்பார் மகுதி 267

மகுதியென் றிசைக்கு மாகிர் ஒலியாம்
முஹம்மது நபிக்கிறை கொடுத்த
பகுமையி லிருபத்தி னலடை யாளத்தில்
பத்தடை யாளமுண் டவர்கு
தரைமீதிலடிபடாதே அவர்க்குமே லுயரமுடி
செம்மத்தில் னிணலடிசாயார்
உகந்திடு லாஞ்சினை முகனுஹாபத்து
முண்டது மிக்கவெண் குடையே 268

குடையிட மேகமு முடல்புழு கனுகார்
குளுந்திடு மெழுந்தகஸ்தூரி
நடனமுமிருபுரம் விழியொளி துலங்க
நானிலத்தூண் வலஞ்சலம் வெளிகாணர்
அடவுட னசதியும் மாதியு மில்லை
ஆடிடு மீரஞ்சு கொடியே
திடமுடன் ஜிபுரிலே ஒகிவருவதில்லை
சிங்காசனஞ் செலுத்தியே யிருப்பார் 269

இருப்பவர் மதினத்துக் கதிபதிக்கரசர்
ஈரஞ்சு வருஷமுஞ்சரியே
சிறப்புட னிருப்பா ருலகத்து வளமை
சேர்ந்திடு முதலவர் தனைப்போல்
நிரப்பிய குலத்தில் மணமொன்று முடித்து
நிலத்தில் வாழ்ந்திருக்கும் நாளில்
உலகினி லபுதுல்லா வென்று
உலகினி லவர்பெருவாரே 270

(வேறு)

பெற்றிடு புதல்வனு மக்க சுத்தமுங்
குலங்களு முற்றும்
உற்றவ ரிருக்கும் நாளில்
உலகுள்ள குலங்கள் முற்றும்
எத்திசை யுலகு முற்றும்
இலங்குசிங் காசனஞ் செலுத்தி
கத்தவ னருள் பெரு முஹம்மதுமகுதியும்
கனக சிங்காசனத்திருப்பார் 271

இருப்பது மகுதியுந் தினமென்பதியில்
லெண்ணஞ்சு வருஷமுஞ்சரியாய்
சிறப்புட னுலக மனத்துடுந் தீன்குலஞ்
செலுத்துஞ் சிங்காதனநாளில்
நிரப்பமுங் குறையு னெரியிட அறிந்தோன்
னீதியன் றமைத்திடும் படியால்
மறை நெறி மகுதி யிமாமுட கால
மன்னவ னருள்ப்படி முடியும் 272

முடியுமுன் னெவர்க்கு முரைத்திடும் விஷளம்
முஹம்மது மகுதி இமாமும்
வடிவுள்ள பயித்தில் முகத்தீசு பதியில்
வல்லவன் சுலையுமா னபியருக்காய்
படிதனி லடக்கவு முரைத்திடும் படியே
பள்ளியில் வைப்பா ரவாருகாய்
நெடியவ னருள்பெரு முஹம்மது மகுதி
நீடிய காலமு முடிவே 273

# முஹம்மது அனுபா அரசு நிலை

(வேறு)

முடிந்திடு மகுதி காலம்
முஹம்மது அனுபா பின்னும்
இடங்களுங் குறையில்லாமல்
எப்போது மரசரைப்போல்
அடங்கலு முலகு செங்கோல்
அணிந்திடு பாத்திசாவாய்
திடம்பெருந் தீன்கொடியே
செலுத்தியே இருக்கும் நாளில் 274

நாளினி லனுபா வள்ளல்
நபிகள் முன் நடந்தமார்க்கம்
வளமையி லிருந்து வாழ்ந்து
வையகத் தனுபா யீன்ற
மதலையு முஹம்ம தென்ற
மைந்தனு மிருக்கும் நாளில்
பழுதில்லா துலகு செங்கோல்
படர்ந்துதீன் வாழ்ந்திருப்பார் 275

இருப்பது முலகையாண்டு
இருபது வருஷமுஞ் செங்கோல்
நிரப்பிய அவர்தன் காலம்
நீதியாண் டமைத்த மாத்தஞ்
சிரப்பிய அனுபா செங்கோல்
செலுத்திமே முடியும்போது
இருப்பவ ரனர்க்கு மனுபா
இயம்பிய ஒசியத்தாமே 276

ஆகிய துரிசினுவில்
அருள் பெரு இறைமூசாதன்
வாகுட னிடதுபக்கம்
வைத்திட வுரைப்பார்வள்ளல்
ஏகவ னருளனுபா
இறைபரத் தாகும்நாளில்
ஏகவ னருள் பெரும்பெரியோர்
எடுத்துப்போ யனவருந்தரிப்பார் 277

தரித்திறை மூசா யிடத்தில்
தாணியுந் தனவருமடங்கி
நிரைந்திடு தீன்குல மனைத்தும்
நிதிபெரு மதினுவந்து
சருத்தொடுந் தீன் தவருமல்
சகலரு மொருவரைப்போல
இருப்பவ ராசில்லாமல்
எங்குமே யிசுலாமாமே 278

(விருத்தம்)

அரசனில்லாப் படை
ஆளனில்லா மங்கை
தேரில்லா வளிதெளி
வில்லாப்பஞ்சம்
மாசில்லா வேக்கம்
மங்கையில்லா மனை
பெரிசில்லா மதி
பேரில்லா மனுவு 279

மனுவில்லாத
வரச்னு மில்லாதவர்
மண்ணில்லாதவர்
மனையுமில் லாதவர்
கண்ணில்லாதவர்
கால்கை இல்லாதவர்
உண்ணில்லாம
லருந்த குலங்களை 280

குலமில்லாதவர்
கூட்டமில்லாதவர்
தலமில்லாதவர்
தனமு மில்லாதவர்
னிலமில்லாமல்
னீரேமு பாசங்கள்
அலையு மாட்டம்போல
அலைந்திடு முலகமாமே 281

(வேறு)

உலகமு கலங்க செங்கோல்
ஒளிந்து நின்றலையும்போது
நிலையில்லா துலகமெல்லாம்
நிரைமன்னர் மாரகந்தப்பி
விலங்கினத் தனையாத்தேசம்
வேந்தரு மொருவ ரில்லால்
தலத்தவ ரவரவர்க்கு
தானே தானரசனுமே 282

தானேதா னரசனாக
தாணியில் நீதமற்று
ஆணொடு பெண்ணுமுற்றும்
அருதிகெட்டடங்கலாண்டா
ஈனமா மெளியோரெல்லாம்
இடரிட்டு ஒலியாருண்டு
தான்முந் தவங்குலைந்து
தனக்கு தானரசனுமே 283

தனக்குத்தா னரசனாகத்
தாணிமுற் றலையும்போது
வணக்கமு நெறிதவறி
பறுகத்துங் குரைந்துபோகும்
கணக்கில்லா திறைகொடிய
லானத்து மிரங்கும்போது
தனக்கிணை யில்லான் ஜிபுரீல்
தாணியி லிரங்குவாரே 284

இரங்கிய ஜிபுரீல் வல்லோன்
வேதமின் குருவா னுயிரின்
உரங்கொள்ளு மாறாயிரத்தறு நூறு
ஆயத்து மெடுத்துக்கொண்டு
சிறந்திடுங் கசடர் யீமான்
சேரவே பரித்துக்கொண்டு
பரந்துவின் னுலகில் போவார்
பர்சத்து குறைந்துபோமே 285

பறந்திடுங் கொருபானீமான்
பாறுகத்து முலைகை விட்டு
இறந்திட வுலகளிக்க
யின்னொரு புதுமைசொல்வோன்
நிறைந்திடு முயிர்களெல்லாம்
நிருத்தியே ரூசுமீசாக்கில்
வருந்தியே ஆதம்பாதம்
வணங்கவு மிறை வகுத்தான் 268

வகுத்தவ னுரைத்த வார்த்தை
அனைத்துமே பிசகக்கண்டு
மருத்துவம் நிரைந்த வள்ளல்
முஹம்மதை சுவர்க்கமீதில்
தருக்குறிங் காசன மிருத்தி
தானவன் படைத்து பிரனைத்தும்
கருத்ததை யெழுதிறப்பிரக்கணஞ் சுந்தி
தானதில் பணியவும் வைத்தான் 287

வைத்தவ னிறையுரைத்த
வார்த்தையும் விஷளந்தட்டி
உத்தமக் கொலுவரசாய்
ஒரு நிலை யாகநின்று
மெத்தவும் பெருமையாக
மேனியை வணங்கிடாமல்
கத்தவன் முஹம்மது வடிவைக்
கண்ணினல் பாராபாவி 288

பாவியில்க் கொடிய பாவி
பத்துப்பே ரவர்களாகும்
பூவுல காளத்தானே
புகழவும் நாயனின்றேன்
ஏவியே பாவிபத்தில்
எட்டுப்பேர் மனுடராகும்
பாவியில் சயித்தான் ரெண்டு
பண்டவ னமைத்த பாங்கே 289

அமைத்ததில் சயித்தான்காமான்
அன்னிதன் கொடியதச்சால்
தொகுத்திடுங் காமானோடு
தொசியொன்பது மூன்னுள்
மருத்துவங் குலேந்துமாண்டு
மங்கியே நாகிலானுர்
கவுத்துவங் கொடிய பாவி
கசடனும் பெரியதச்சால் 290

## தச்சால் வருதல்

---

பெரியவன் முனிவுபெற்றோன்
பேய்க்குலத் தறியா ராசன்
எரீநர கெரியுங்கொள்ளி
எகுதியள் குலத்தில் வந்து
புநந்திடு மாறுநாளில்
பொருதவும் படையெழும்பி
நிரைந்திடு முஹம்மதோடே
நேரிட யெதிர்த்துப்பாவி 291

பாவியின் படை பொருத
பலித்திடா யார்கள் வாடி.
ஆவிகள் தவிக்கும்போது
அஹம்மதர் சேனையான.
யார்களும் அலி அசாபும்
அசனுசன் வீரர் முற்றும்
பாவியன் மலைப்பொதும்பில்
அடைத்தொரு மலையால் மூடி 292

மூடியே உலகளிக்க
மூர்க்கமாய் வேகங்கொண்டு
ஓடிய மக்கநாட்டை
தேடியே வருகும்போது
வாடியே இறை அசாபும்
வள்ளலை இறையைப்போற்றி
ஓடியே ஜிபுரி விறையோன்
உத்தர வாளெடுத்தாரே 293;

எடுத்தவர் இறை ஜிபுரீல்
இடுக்கியே ஒருகாலாலே
அடைத்திடு மலைதுரந்து
அவனையுங்கீழ் விடாமல்
முடுக்கியே வானமட்டு
முயற்றியே சுழற்றித்தாங்கிக்
கடுக்கெனக் கோபக்காலில்
கையிஞ லெரிந்தா ரப்போ 294

எரிந்தவர் ஜிபுரீலே
இடதுகாலுயர்த்தி யேத்தி
அரங்கொடு தச்சால் தன்னை
ஆதியின் ஜிபுரீலப்போ
உரங்கெட விலகிப்பூட்டி
உருட்டிச் சங்கிலியால்கட்டி
இரம்பெருங் கொருவான் ஆயத்
தெழுத்துமுத் திரைவைத்தாரே 295

வைத்த முத்திரை யேதென்றால்
வல்லவ னபியினுமைம்
உத்தம்ம-ஹேயு-மீமும்-காபுங்
ஹெயாம் அய்னொடு ஸாதுமாக
வைத்திடும் முத்திரை கெல்லா
தரித்திரை கோபக்காவில்
மெற்றவு பார மேத்தி
இருத்தினர்ரிறை ஜிபுரீலே 296

இறை ஜிபுரீலும் வைத்தே
படி யிருக்கும் நாளில்
பரந்திடுங் கொருபா னுயிருடனிருந்த
முத்திரை எழுந்தேபோகும்
உரம்பெரு மகிழ்ச்சியாலே
உதருவான் றுடலைவிம்மி
அருந்திடும் விலங்கும் பூட்டின்
சங்கிலி தெரித்துப்போமே 297
தெரித்துடன் கடலில் முழ்கித்
திக்குமந் திரத்தை யோதி
தாத்துட னழகு வலுமை
தம்பிறுன் தானேயென்று
பெருத்திடுமலை ரெண்டும் பிடிங்கி
இருபுரங் கொடுங்கையி லணைத்து
வருத்திய நரகொரு மலையா
மதிலொன்று சுவர்க்கமாமே 298
ஏந்தியே நரகுசொர்க்கம்
எத்திசை உலாவுங்காலம்
முந்தவு தச்சால் பிறந்த முனிவுக்
கெதுவிதமாக செய்வகை யணைத்துஞ்செய்து
கவுத்த பேய் பிசாசு கன்னி
மாரிமை யோராக்கி
வகுத்தொடு விலாவிலேத்தி
அணைத்தொன்றை சுவர்க்கமென்று
மகுத்திடும் நரகென்றனே
இடப்புரம் விலாவிலேந்தி 299

சுவர்க்கமது விதமாக
செய்வகை அனைத்துஞ் செய்து
கவுத்த பேய் பிசாசு கன்னி
மாரிமையோருக்கி
வகுத்தொடு விலானு முனிவு பெற்ற
மாந்தரில் லெகுதி முற்றும்
மகுதினு ளிசுலாமானோர் பிந்தவுங்குபிரிலாகி
பெரும்படைத் திரளெழுந்திடுமே 300

எழுந்திடும் யெகுதிக்கூட்டம்
எழுபதி னாயிரம்பேர்கள்
நெளிந்திடு பெரும்படையெதிர் போய்
நீளிய முனிவனை நோக்கி
விழுந்தனர் பணிந்தடி தொழுது
வேந்தனென் றனைவருஞ் சூழ்ந்து
எழுந்திடு முனிவனு மெகுதியின் குழுவும்
உலாவுவா னேந்தியே யெங்கும் 301

ஏந்தியே நரகொடு சுவர்க்கம்
எடுத்திடுச்சால் சொல்வான்
தாழ்ந்தென்னை நாயனென்றால்
தருவனான் சுவர்க்க மென்பான்
மாந்தரில் சிறுமன துடையோர்
மயங்கியே தொழுதிரங்கி
ஏந்தலே எங்கள் முன்னோர்
அனரையு மழைபுமென்பார் 302

அழைத்திடி விறையோ னென்று
அடிதனில் தொழுவோமென்ன
முளைத்திடும் பேய்பிசாசு
முன்னுள்ளான் வடிவைப்போலே
களைத்தது தெளியப்பேயு
மனுவுமே தழுவிமேவி
பழுதில்லா நாயன் தச்சால்
படைத்தவ னீயேயென்றார் 303

நாயனென் றுரைத்தபேரை
நலங்கெட்ட தச்சாலப்போ
காய்பழந் தேன்பாலுள்ள
காவென்னுஞ் சுவர்க்கஞ்சேர்ப்பான்
தாய்தமர் காணு தேங்கி
அச்சணம் நரகாய்ப்போகும்
பாவிக்கு நரகா மற்ருேர்
பார்த்திடில் சுவர்க்கந்தோன்றும் 304

தோன்றிய சுவர்க்கமென்று
தொழுதவர் நரகிலானுர்
ஆண்டவன் வேவே எந்த
ஆலமும் படைத்த ஞயன்
பண்டுள்ளான் லானத்து முனிவு
பெருகிய தோசிதன் தச்சால்
விண்டிடும் வளமையெல்லாம்
அறிந்திடும் பெரியோர் தம்மை 305

பெரியவ ருரைப்பாரப்போ
பேயனே ஞயன்நீயோ
அரியவன் முனிவதிகங்
கொடியவன் தச்சாலென்பார்
எரியுரு கோபமாகி
எடுத்தவ னரகில்போடப்
பெரியவர்க் கிறையோனந்த
நரகத்தை சுவர்க்கஞ்செய்வான் 306

நரகமுஞ் சுவர்க்கமென்று
நடத்தியே யுலகமெல்லாம்
இருபத்தி ஞல்வருட
மெத்திசை யுலகு செங்கோல்
நிரையும் பொன் மகாமேரென்ற
நெடுமலை யாசிருப்பான்
வரையுரு மதிஞமக்கம் பைத்தல்
முகத்தீசுந் தூரிசிஞவே 307

துரிசினு யின்னுலிடம் வருகில்த்
தோசியு மதிமயங்கிடுவான்
வாரினில்ப் பெரியோர் அனைவருமொன்றாய்
வந்திருப்பா ரிந்தலத்தில்
ஊரினிலொருவரு மெதிரில்லாது
உயர்ந்திடும் வலுமையுமோங்கி
நேருள்ள நாலுதலத்தையு மளிக்க
நினைத்தவ னெருங்கியே வருவான் 308

(வேறு)

வருகவு ஞல்பதியு
மிருக்கின்ற மனுவனைத்தும்
ஒருவனைத் தொழுதழுது
உன்னுட தோளரான
குருநபி பதத்தைச்சிந்தக்
குரித்திடுந்தச்சால்தன்னை
உரங்கெட வினையகத்தேன்
ஒருவனைப்புகழ்ச்சிசெய்வார் 309

புகழ்ச்சியான் றிறையோன் றன்னைப்
போற்றவு விண்ணோர்மற்றும்
நிகழ்ச்சியா யிறையோன் றன்னை
னினைத்தவ ரிருக்கலாமோ
உகழ்ச்சியா யுரைக்க யெல்லோர்
ஓதுவா ஞதினயன்
மகிழ்ச்சியா யிறையனுதி
யனைவருக் கிரங்குவானே 310

இரக்கமுந் தயவுமுள்ளான்
யாவர்க்கு பொதுவனுன
தாத்துட னுகந்தபேரை
தானேதான் கார்க்கும் நாயன்
பொருத்துவிண்ணேரைப்
பொங்குவாருதி யுலகநரை
வருத்தமு மிடுக்கந்தீர்க்க
வருவமீர மறியம்பாலன் 311

மரிய முமிருனின்ற
மன்னவன் குமாரிதானுஞ்
சரியிணை யொருவரில்லா
தையலர்க்கரசியான்
தெரிவையு மிணங்கிடாமல்
ஜிபுரிகீ லாதும்பாலன்
அரியவ னுதம் வயிற்றில்
ஆரஞ்சு வயது பெற்ருேர் 312

பெற்றவர் தனையறியார்
பெண்ணுட லனுகாமேனி
எத்தனை கொடிய தச்சா
லிமையருக் கதிகவீரன்
குற்றமொன் றணுகாவல்லோன்
குதர்த்தா லமுதுண்ணுதார்
உத்தமம் உலகுக்கீசா
நபியபசென வுரைத்தார் 313

அரசென உரைத்து ஈசா
நபியை விண்ணுலகில் விட்டு
விரசுட னிருக்குமென்ன
விண்ணவர்க் கிறையுரைக்க
பிரங்கிய மலக்கிருவர்
பிடித்திட அவர்புயத்தில்
பெரியவ னீசாகையை
பிடித்தவ ரிரங்குவாரே 314

இரங்குவ தெங்கேயென்று
விறையவன் பதிதிமிசில்
வரம்பெரும் புரிசை கீழ்திசை
வடக்கிலுந் தென்கிழக்கில்
இருபுர மரசர்கள் கொலுமன்னர்கழரி
இலங்குமண் டபமாமனையாம்
பெரியவ ரிருபிர மெழுப்பு மணரு
பிரபலர் கூடிய சபையே 315

கூடிய பிரபல ருமனைவர் கழரி
குவலய மாழ்கின்ற தலமாஞ்
சூடிய தீன்குலஞ் சிலபேரிருப்பார்
சூரியன் கீழ்த்திசை யெழும்பும்
நாடியே ரமுலான் மாதமு முதல்நாள்
ஞனிலம் புகழ் வெள்ளி நாளில்
வாடிய தீனரிருப்பா ரனரு
வருத்தமில் மெலிந்துகொண்டிருப்பார் 316

இருக்கையி லனைவர்க்கு தோன்ற
இடிமுழக்கது போலோசை
பெருக்கிய திறையோ னருள்பெரு மீசா
பெருமலக் கிருவர்கள் புயத்தில்
இருத்தியே இருகையும் பிடித்து
இருமலக் கவர் தனையேந்த
இருத்திவா னுலகத்தை நோக்கி
இரங்குவா ரிருமண்டு னடுவே 317

இருமண்டு பொதுவிடை நடுவி
லிரங்கவு மிறையோ னீசா
வருபவ ரிருமண்டு நிரைந்தோர்வள்ள
லாரென அவர்கேட்பார்
பெரியவன் மலக்குகளுரைப்பார்
பெரியவ னருள்நபியீசா
அரியவ ருலகையாள
ஆலத்திலிரக்குவா னிறையோன் 318

இறையவ னருள்பெருமீசா
யெத்திசைக் கரசரு மிவரும்
பெருகிய முனிவுதச்சாலே
பிழக்கவு மிரக்கினு னிறையோன்
அரியவன் திருத்தூ தீசா
ஆகிழு நபியிவரெனவும்
பெரியவன் மலக்கிரு பேரும்
பேசினின் னுலகடைவாரே 319

(வேறு).

விண்ணகத்தை யிரு
விண்ணவரும்போக
மண்ணுலகை யாழுமிரு
மண்டிலுள்ள மன்னர்
அன்னகரி லுள்ள குல
முற்றுமே யெழுந்து
முன்னு னிறைதூது நபி
முத்துமலர் காண்பார் 320

காணும் நகருத்தனர்
கலக்கந் தீர்ந்துதென்றே
வேணமட்டுமே மகிழ்ந்த
அங்கமுங்குழிர்ந்து
மாணிக்க மிலங்கும்பரி
மீதில்வைத்து சூழ்ந்து
நானிலம் புகழ்திமிசு
நார்பதிக்குள்ளாவார் 321

ஆனபதியுந்திமுசு
மற்றப்பதி முற்றுஞ்
சேனையுந் திரள் நபியை
முத்தும் வருத்தி
இன்ன கரையாளவந்த
ஏகனிறை தூதே
மன்னவரை வந்தது நீர் போதும்
போதுமென்பார் 322

உரைத்து நபி மற்றகுல
முற்றுமே எழுந்து
நிருத்து மலையும் வனமும்
நீழ்பதி கடந்து
வரத்ததிக பைத்தல்
முகத்தீசுப் பதிதன்னில்
இரந்தகுல முற்ற
வருமுகத்தீசுலாவார் 323

(வேறு)

ஆகவும் பைத்தல் முகத்திசிலுள்ளோ
ரனைவருமெதிரே வந்து
ஏகவனீசா பாத
மியாவரும் வணங்கிப்போற்றி
சேகரத் துடனெல்லோரும்
சேர்ந்தவ ரிருக்கும்போது
ஆகமா பைத்தல் முகத்திசிலுள்ளோர்
அனைவரு மேதுசொல்வார் 324

சொல்லுவார் நகரிலுள்ளோர்
சோதியின் தூதரான
வல்லவனீசா நபியை
வந்தமேத போதுமெங்கள்
எல்லவர் வருத்தந் தீர்க்க
இறைக்கிறை னிறையனாதி
எல்லவருரைக்க பைத்தல்
முகத்திசை யாளும்வேந்தன் 325

வேந்தரு மதினையாண்ட
முஹம்மது மகுதி இமாமும்
மிந்துல கனைத்துஞ் செங்கோ
லிருந்துல காளும்நாளில்
முந்தவு மகுதியீண்டபால
கனவு துல்லாதான்
விந்தையின் றவததால்பிறந்த
வேந்தன முஹம்மதென்போர் 326

முஹம்மது யிபுனி யபுதுல்லா
முன்னவன் அருள்தரித்தவருஞ்
செகம்புகழ் பைத்தல் முகத்திசை
சிறந்துல காளும் நாளில்
செகம்புக ளீசாவுடனே
முஹம்மது இபுனி அபுதுல்லாவும்
மகிழ்தவ ரிருவருமொன்று:
மற்றுள்ள கருமங்கள் பேசி 327

பேசியே இருக்கும்போது
பெரியவ னமைத்திடுமற்ற
தேசத்துக் கரசர்கோமான்
முஹம்மது இபுனியபுதுல்லாவும்
வரசினை சுவர்க்கம் வீச
வையகமரந்து மேனி
மாசில்லா திறையோனீசா
மடிதனில் சாய்வாரப்போ 328

அப்பொழு திறையோனீசா
அருள்பெற்ற மடிமேல்சிரத்தை
வைத்தவர் படுக்கவு மிறையோன்
வகுத்திடும் படியேமுடிவாய்
இப்புவி இசுலாஞ்செங்கோல்
முஹம்மது இபுனி அபுதுல்லாவுங்
கர்ப்பினைப்படியே அவர்தன்
காலமு முடிந்து போமே 329

முடிந்திட முன்னேனீசா
முடிவில்லா தேக்கமாகி
மடிந்தவர்க்கதிகமாகி
மயங்கியே விழுந்தவரேங்கிப்
படிப்புக ளுலகிலுள்ள
தனைவருமேதுரைப்பார்
வடிவுள்ள யீசாவலது
பாரிசம் திரந்துதென்பார் 330

அதிர்ந்துதென் றழுதெல்லோரும்
ஆகிரு முடிவோமென்று
இறந்தகி மவுதுல்லா யீன்ற
யேந்தலன் முஹம்மதவனை
சிறந்திடு மீசா நபியு
மற்றனைவரு தொழுதெடுத்து
நிரைந்துல கனைத்துஞ்செங்கோல்
நிருத்தியே சுலையுமானபியவர் 331

நபியிடப் பிறந்தரித்தார்
நாயகன் மகுதியிமாமும்
புவியினி லவரடங்கும்
பொன்னணி தருகா இடத்தே
கவிபுகழ் முஹம்மதிபுனி
அவுதுல்லா தனையடக்கி
குவியுமற்றுலகு யீசா
கூடவே யெழும்புவாரப்போ 332

எழும்பியே அனருமொன்றாய்
இறைபதி தரிசினாவில்
வளம்பெற இரங்குமூசா
வரிசையின் மவருங்கண்டு
முழங்கியே அபுதுல்லா குமாரன்
முஹம்மது அனுபாத்தனையுங்
களங்காப் புகழ்ந்து போற்றி
கடல்த்திரளொருமன முத்தே 333

முத்துள்ள குலமெழுந்து
முன்னவன் மதினாவந்து
மற்றுள்ள நபிக்கு முன்பின்னா
மகுசருக்கதிபதியான
எத்திசை புகழுங்கோமான்
நிறைதிருத் தூதரான
முத்திரை தரித்தவள்ளல்
முஹம்மது நபியுல்லாவே 334

முஹம்மது நபியுல்லாதன்
மலர்தனில் பணிந்தெல்லோருஞ்
செகம்புகழ் மதினத்துள்ளே
ரனைவருஞ்சேர்ந்தெழுந்து
உகமையி லடங்காவள்ளல்
முஹம்மது நபி பிறந்த
பகுமெனத் திறையருள் மக்கம்
பதியில் வந்திறங்குவாரே 335

இரங்குவ தெங்கேயென்றால்
இறையவன் ஹூருபாமீதில்
அரசருக் கரசரீசா
ஆதியைத் தொழுதிறைஞ்சி
வருமிறைக் கொடியவாளும்
வாடையும் பொடிக்குடுக்கை
திருபெருசுக்குமாற்றடியு
முடன்வருந் தீய்க்குடுக்கை 336

குடுக்கையில் நரகத்தீயும்
குவலயம் வெல்லும்வாடை
இடுக்கமும் தெளிக்கும் வாளும்
யாவையு முடைக்குந்தெண்டம்
மடுக்கென வனுங்கொண்டு
ஆதியின் ஜிபுரீல்வந்து
குடுக்கவு மீசாகையில்க்
குதிரையு மிரங்குந்தானே 337

இரங்கியே வாசியேதா
விறையவன் மலக்கிலொன்றாகுக்
திரமுள்ள பரியுரவாய்
திரமுள்ள சுவர்க்கநாட்டில்
இருந்திடுங் கியாமமீதில்
ஏரவு மீசாக்கென்றே
இருந்ததை யுலகிலீசா
நபிக்கு முன் னிரக்கினனே 338

முன்னை னொருநாளீசா
முதியவெண் பரியின்லரி
மன்னவ ரனையங்கோட்டை
மலைகட லுலகறிந்து
அண்ணலிருக்கும் நாளில்
ஆறஞ்சு வயசிலீசா
விண்ணகத் தெழும்பும்போது
வெற்றிவெண் பரியைத்தானே 339

தானவ னீசாவேறு
தக்கவெண் பரியைச்சூழ
வண்ணமா மலைக்கு வட்டில்
வளத்தென்ன புரிசையாக
என்னுமே யளியாவாசி
இறையவன் மலக்குமாகும்
ஊனொடு உரமில்லா
தொருவனைத்தொழுதிருக்கும் 340

இருக்கையி லுலகைவிட்டு
எழுந்திடும் விதமேதென்னில்த்
திருத்தியே உலகனைத்துந்
திரையிடத் திசையள மன்னர்பணிய
வரத்துட னிருபது தலமுறை முதலாய்
வையக மாசர்கள் வாசா
பொருத்திடுஞ் செங்கோல்அணிந்திருந்தவாசில்
பிரபலன் கொக்குப்பார்த்திருந்தான் 341

இருக்கையில்க்கொக்குப்பார்த்து
இரவினில் கனவுகண்டிடுவான்
பருத்துள்ள வேங்கைமற்றும்
புலியொன்று சிங்கமொன்று
யுரத்தவன் கொடியுளக்கி
உலகெல்லா மளிக்கக்கண்டான்
கருத்துள்ள கவலையாகிக்
காவல னிருக்கும் நாளில் 342

இருப்பவன் கனவுதன்னை
எடுத்தவ னுரைக்க வல்லோன்
பெரியவர்க் ஹாசா பக்கீர்
மெதித்திடுஞ் சமுகனுன்
திரப்பெரும் பூதா சமுகா
செப்பவு மாசருங் குழுவு
மிருக்குமுன் பலவினை தெளிக்க
யாவரும் பெருந்தளமெழுந்தே 343

எழுந்திடு மக்கமான கரி
விரங்கியே யாசீன் குலத்தில்
வளம்பெரு மவுதல் முத்தலிபை
வாழ்த்தியே வளமையும் வரிசை
குழுந்திட வகுந்திடில் கோமான்
குவலயத் தமுசா பிறந்தார்
மொழிந்திட வளத்தேகாத்து
லேந்தினர் பூதாசமுகர் 344

பூதலர் சமுகரென்பார்
பொன்னணி கரத்திலேந்தி
ஓதிறைமுசா இவர்தான்
உமாமியா இவர்துணைவன்
பார்தல கொக்கு பாத்தும்
பாத்துஷா கெடியுளக்கி
ஈதலத்தரசை வெல்ல
யாவரு மிறங்குவாரே 345

இரங்கவு மீசாவாசி
இருக்கென்று மலையினுள்ளே
உரங்கொள்ளும் புரிசைக்குள்ளே
உலாவியே இருக்கும்நாளில்
பெரும்புகழ் மூசா கவ்வேற்
பிடித்தனர் உமருமிய்யாரா
திரம்புகளமுசாவேரி
திக்கெல்லாம் வென்றதாமே 246

வென்றந்த மூசாவேந்தன்
வெற்றியுற் றெதிர்த்தாரெல்லாம்
மண்டலம் புகழும்கொக்கு
பார்த்துஷா கெடியுளக்கி
அன்றுதான் உளக்கிவாசி
யச்சென மூலகைவிட்டு
பண்டுவின் னுலகை நோக்கி
பயந்தது வாசிதானே 347

பரந்தது பதிக்கிமேலே
பாரவா னுலகைநோக்கி
இருந்தது ஈசாயெப்போ
இரங்குவா ரென்றுபார்த்து
சிறந்திடும் நபிக்குப்பட்டம்
செய்தியை நிலையறிந்து
பரந்துவந் தீசாநபிதன்
பதத்தினில் பணிந்தேனிற்கும் 348

நிற்கையி லிறை மக்களுட்டில்
நிரைத்திடுந் தீன்குலஞ்சிலபேர்
தக்கவன் பெருமுனிவுடைய
தச்சாலுட னெகுதியும் படையும்
மக்கமென்பதியை நோக்கி
வருமொரு நாள்வழிமூன்றில்
முக்கியங் கொடுமையென் றுரைத்து
முன்னணி பாதத்தில் பணிவார் 349

பாதத்தில் பணிந்துநின்ற
பரிதனில் தரித்து வள்ளல்
நீதத்தி லிறைபிசுமில்
நபிசல வாத்துமோதி
வாதத்தில் பெரிய சொர்க்க
வாடையின் பொடியெடுத்து
வேதத்தில் பெரிய அல்ஹம்
தையோதுவாரே 350

ஓதிய அல்ஹம்து தன்னை
உடையவன் தனைநினைத்து
ஆதத்தைக் கூவி வள்ளல்
வாரியே பொடியை வீச
யாதொரு அணுப்பிசகா
தனைத்தையுங் காத்துக்கொண்டு
பாதகன் தச்சாலிரு
ஞசியி லேரிப்போமே 351

ஏரவுந் தச்சாலென்போன்
இருண்டுகண் மதிமயங்கி
வேறொரு எதிரியில்லா
துலகெல்லா மாண்டிருந்தேன்
ஆறொரு எதிரி யென்னை
யங்கத்தைப் பிளக்கவாறுன்
ஏறுள்ள தனர்க்குச்சொல்வான்
எடுப்பவ னேட்டந்தானே 352

ஓடுவா னுலகமெல்லாந்
தொருவரு மெதிரோகாணுன்
கூடிய வாடை மூக்கில்
சுளித்திடும் வாசத்தாலே
ஆடுவான் திசைகளோடி
நடுங்குவான் வாடையெங்கும்
ஓடுவா னொளிவா னழுவான்
ஒருதலம் நிலைநில்லானே 353

நிலையில்லா தோட்டமாக
நெடும்புவி யுலகமெங்குங்
மூலமனுச் சூழ்ந்திடு முலகுங்
கொடுமலை வனமுதலு
மலைகட விடையுள்ள துலகு
மன்பது வருஷமென்பதியு
பலபல திசையுமே ஓடியே யலைவான்
பதியொரு திசையுமில்லாமல் 354

பதிபுக ளிறைமோனீசா
பருங்கையால் வாடைவீசி
இதமுரமுங் கீர்த்திபெற்ற
எடுத்திடும் தண்டாயுதம்
சிதையுமே மிடதுகையி
லேந்தியே வலதுகையித்
துதிபெரு மிறையோன் கோப
பார்வையின் வாளெடுப்பார் 355

எடுத்தவர் குடிக்கையுள்ளே
இருக்கின்ற நரகத்தீயில்
விடுப்பவ ரனுமெடுத்து
வீசுவா ருலகைச்சுற்றி
தொடுக்கியு கனல்ப்புகையுந்
தொலைந்திடா தெழுந்துகொண்டால்
முடுக்கியே தச்சால் மூச்சை
யடைத்துமே விழிதெரிக்க 356

தெரித்திட மூச்சடக்கத்
தீய்நரக மளிசெய்யுங்
காத்தில் வாள்க்கசையு மேந்திக்
கடியவெண் பரியைத்தூண்ட
ஊரத்துவர்ன் வரை பார்த்து
ஒருநொடி யதனில்வந்து
எரித்திடு முனிவுதச்சால்ப்
பிடரியி லுதைக்குந்தானே 357

பிரடியி லுதைக்கும்போது
பிரண்டவன் விழுந்துருண்டு
கிடக்கையில் சுக்குமாற்றால்
அடித்திடச் சிரம் வெடிக்கும்
நெடியவன் நாற்பத்தெண்ணு
யிரமுளத்தினில் கிடக்கும்போது
இடதுகால் சிரத்திலெற்றி
இருத்தியே சிரசருப்பார் 358

அருந்திடத் தச்சாலென்போன்
அச்சமு மற்றேபோச்சு
கருத்துட னீசா லோக
மனைத்தையுங் குடையிலாக்கி
தரித்திறை பதி மக்கம் நகரில்
சகல தீன் குலமுற்றுஞ்சூழ
உரைத்தமுன் புருக்கான் வேத
முலமெல்லாந் தீன்பயிர் விளைப்பார் 349

விளைத்திடுந் தீன்குலமனைத்தும்
முஹம்மது வேதமே புருக்கான் முளங்கி
வளம்பெரு மீசா நபியு
வல்லவன் முஹம்மது நபியின்
தெளிவுள்ள தீன்குலமாகி
திருநபி யும்மத்தாவார்
அளிவில்லா தீன்குலம் வளர
அதாலத்து செலுத்துவாரப்போ 360

அப்பெரு மிறைதூதான
அஹம்மது நபியும்மத்தோர்
ஒப்பினி லடங்காப் புருக்கா
ஞேதியே யிருக்கும் நாளில்
இப்புவி யிசுலாங் குலங்க
ளிருப்பவா னகருக்காசர்
ஒப்பினி லடங்கா வள்ளல்
முஹம்மது அனுபாபாலன் 361

முஹம்மது அனுபா பாலன்
முஹம்மதென் றொருவனாகுஞ்
செகந்தனி லவர்தனபாலன்
முஹம்மது அலியென்போரே
தகுமெனா தீன்குல மனர்க்குந்
தலைவரு யிமாம் திருத்தி
உகமையி லடங்கா யீசா
உலகெல்லா மாளுவாரே 362

உலகத்துக் காகிருநபியா
முடையவ னருள்பெரு மீசா
நிலைபெற்ற நபிதீன் பொருந்தி
நிதிபதி யாளும் நாளில்
குலத்துள்ள குரஷியின் வழியில்க்
கோதையை மணமுடித்திடுவார்
நிலத்துள்ள மனுக்குல மனைத்தும்
நிகழ்த்துரன் றொருமொழியாய் 363

அனைவரு மேதுரைப்பா
　　ரூதியி னீசா முந்த
இனத்தொடு தாய்தகப்பன்
　　இணங்கிடாப்பிறந்த பாலன்
தனத்தினில் அமுதுணைணுதார்
　　தகப்பனை யறிந்தில்லாதா
ரினத்தொடு குலத்தைவிட்டு
　　இலாஹியா யிருந்தவரே 364

இருந்தவர் தனக்காய்வல்லோன்
　　இரக்கிய இஞ்சில் வேதம்
னிரைந்தது குரைந்ததாலே
　　னிலத்தைவிட் டெழுந்துபோனார்
இருந்தமுன் னீசாவானு
　　லிஞ்சிலேத் தவுழ்க்கமாட்டார்
மறந்துமுன் னிருந்த வேத
　　மறுகுல மாவதுண்டோ 365

குலத்தினில் தாய்தகப்பன்
　　கூடியே பிரகாப்பாலன்
தலத்தினில் மணமுடித்து
　　தாணிவாழ்ந் திருப்பாருண்டோ
நிலத்தமுன் னீசா வல்லோன்
　　. னிலத்தினி லவர்பேருள்ளோன்
பெலத்திலும் வரத்திலும்மதியோர்
　　பெரிரியவ னருள்தரித்தவரே 366

பெரியவ னருள் தரித்த
　　பெரியவ னிவர்தானெனவும்
பெரியவன் சிரியவானரும்
　　பேசவு மீசாநபியும்
வருஷமு மாறஞ்சு சரியாய்
　　வகுத்தது யிறையுலகாள
அரசருக்கரசர் கோமான்
　　அதாலத்தி லிருக்குமன்னுளில் 367

அதாலத்து செலுத்தும் நாளில்
ஆதியின் பரிமாணுகும்
விதனமா யுலகளிக்க
வருதொரு பெரும்பஞ்ச மெனவும்
மிதமொரு வளமை முதலே
யாவுமே யறிந்திறை யுரைக்க
மதினமு மக்காவோடு
முகத்தீசு துரிசிணுவே 368

துரிசிணு பதிணுலு மிருப்போர்
தொகையஞ்சு வருடமதாக
மீரிய பெரும்பஞ்சம் வருவதை யறிந்து
மேதிகு ளனைத்தையும் வேண்டி
நேரினி லிருக்கவும் னிதிபதியனைவ
நிலத்துள்ள தனவருமறிந்து
ஆர்தல முடையவானர் பதியுடையோ
ரப்படி யிருக்கின்றநாளில் 369
(வேறு)
நாளினி லுலகளிக்க
நான்மறை நெறிதவரி
மீளியசஹீமத்தென்று
இரங்கிய மழை யில்லாதால்
வாளவு முலகில் செய்த
வானிபம் பயிர்களெல்லாம்
ஊளியின் முதல்நாள் செய்த
விதைமுதலொன் றுமில்லை 370

ஒருவிரைக் கொருதானிய
முயர்த்தியே மணியுமில்லைக்
கருக்கியே இலைமரங்கள்
கரும்விரைக் கிழங்கும்வேரும்
பருகவு மனுடர்க்கில்லா
பஞ்சமுமெழுந்ததாலே
அருமையா மனுக்குலங்கள்
அங்கங்கே யிருப்பதாமே 371

இருக்கையி லீசாநபிக்கு
இறைபரி மானமாகும்
மருக்கிய குலங்கள் நபியு
மாதியின் துரிசிறைவல்
இருக்கவும் மலையை விட்டிரங்கா
திரைபரி மானமும் நபிக்கு
தரிக்கவும் நபியு மற்றனரும்
தம்மலைமீதிருப்பாரே 372

மலைதனில் தரிப்பார் வள்ளல்
மற்றனவருஞ் சூழ்ந்தே நிற்பார்
உலகினில் மதினமக்க
முயர்ந்தமேதோர் பைத்தல் முகத்தீசும்
நிலையுள்ள பதியிதுநாலும்
நிரைந் திசுலாமிருக்கு
முலகெல்லாம் பலபல கெதியில்
ஒடுக்கியே சிலபேரிருப்பார் 373

இருக்கையி லெழுநாள் வரைக்கு
மிறையவன் கொடுமிருளிரங்கும்
கருக்கியே விழிமொழி மரைய
கதிர்மதிக் கடலிடத் துரையும்
மருத்துமே கதிர்மதி
எழும்பி மண்டல முலகத்தையாளும்
நிரைந்திடும் பரவைபட்சி
யனைத்துமே யிறந்துபோமே 374

இறந்துடனுலகளிக்க
இன்னமோர் புதுமைகேளும்
மிறுந்தல காளும் னூகு
நபிமக்களொருவன்பங்கில்
பிறந்தொரு வயிற்றுச்சூலில்
பெண்ணொடு ஆணுமாக
னிரைந்தொரு பையினுள்ளே
இருந்தது நாற்பதாமே 375

நாற்பதி லிருபதாணும்
நாரிய ரிருபதாகுங்
கோப்பொரு படைப்புமூன்று
மாதிரிக் கூட்டமாக
ஏற்படு பரிபாரமா
எண்ணில்லாச் சேனையாகிச்
சீப்புக ளுலகளித்துச்
சேனைகள் வருமந்நாளில் 376

சேனை துல்க் கருணியான
சிக்கந்தர் பாக்ஷாகண்டு
தானவ னிறையருளால்
தடுத்ததை யுத்தஞ்செய்து
ஆனவன் மலைநாடோடி
யடைத்தவன் வாசல் தன்னில்
ஊணியே ஐம்பொன் றன்னை
யுருக்கிவைத் தடைத்திட்டாரே 377

அடைத்தவர் வார்த்த ஐம்பொன்
ஞரிடாச் சூடெப்போதுங்
கொதித்துட னுருக்கிய மளுவாங்
கியாமத்து ளுள்வரை இருக்க
எடுத்துக்கை யிறையை நோக்கி
யிருந்திடுந் துவாவினாலே
அடுத்திடுங் கியாமமட்டுங்
காரிடா சூடதாமே 378

ஆரிடா சூடதாக
ஐம்பொன்னு மிருக்கும் நாளில்
கூரிய கியாமங்காலம்
குருகியே முடியலாகி
நேருள்ள பெரியோர் யாவும்
னிதிபதி ளுவிடமிருக்கில்
யேருள்ள தனைத்தையு பளிக்க
இருளும் வந்திரங்கிய காலே 379

இரங்கியே யிருள்க்கடலேழுநாள் வரைக்கும்
மெரிகதிர் மதியுல கில்லாதால்
நிரைந்திடுங் குளிர்ச்சியாலே
நிதிபதி யுலகுமற்றனைத்தும்
கரைந்திடு மலையுங் கசிந்திடு மனைத்துங்
கனசலப்பிரளயத் திரளால்
அறிந்தவர் முதல் ஞானுருக்கியேவார்த்த
ஐம்பொன்னுமாரிடுஞ் சூடே 380

# யாகூசு மாகூசு வருதல்.

(வேறு)

சூடுதாறை அந்த
சூழ்படை வெகுளுளாண்ட
நீடிய மலைவளத்தி
னீண்டிடு மரிதிகாலங்
கூடியே ஆகூசு மாகூசு
குறையில்லா தெழுந்த சேனை
ஆடியே படையெழுந்து
ஆலமு மளிக்குமப்போ 381

அப்பொழு தெழும்புஞ் சேனை
அய்யெட்டு முளமோர் கூட்டம்
ஒப்பெரு மிடம்பெருப்பம்
உயரமுஞ் சரிசிதானம்
ஒப்பெரு முளமுமஞ்சு
உயரமு மிடந்திடஞ்சரியா
தப்பியே அரைமுழத்தொன்று
தடிப்பமு மிடமுமப்படியே 382

இப்படி தினுசுமூன்று
எண்ணில்லா தெழுந்தசேனை
அப்பெரு மலைதிறந்து
ஐம்பொன்னுந் தகத்தெடுத்து
இப்புவி யுலகமுற்று
இன்றைக்கே யளிப்பேனென்று
மெய்ப்பொடு உலகிலுள்ள
மலைகல்லு மரங்களெல்லாம் 383

மரங்கல்லு மலையருந்தி
மண்டல முலகமெல்லாந்
திரிந்திடப்புவி யிருத்தித்
திக்குலகாள ஞடி
நிரைந்திடும் பெரும்படைப்பு
நிலத்துள்ள மலைகெவியும்
இருந்தனு ருருட்டிமுட்டை
எங்குமே திருத்துனளில் 384

நிருத்தியே இறைநாமென்று
திரத்துடன் வருகுஞ்சேனை
வருத்திய தொருவன் சொல்வான்
வானத்தில் ஞயனுண்டு
உரத்துநாம் பொருது
உலகெல்லா மாளவேணும்
பெருத்திடுஞ் சேனையெல்லாம்
பெரும்படை யெழும்புவானே 385

எழும்புவா னிடக்கைவில்லு
மெரிகணை வலக்கைதொட்டு
அளிம்பனு ஆருசு மாருசு
அன்றொரு மொழியாய் நின்று
வளம்பெரு நாணில் வாளி
யணைவரும் மேலில்யேவ
எழும்பிய கணைபிடிக்க
இமையருக் கிறையுரைப்பான் 386

உரைத்திட இமையோரெல்லா
மொருகணை பிசகிடாம
லிரைத்திடுங்கணை பிடித்து
இறையவன் முனிவுபெற்ற
இரத்தமுந் தசையுமூளை
எழுந்திடுங் கடலில் தோய்த்து
இமைத்திடப் புவியில் மீன்று
மெல்லவ ரெடுத்துப்பார்த்தார் 387

பார்த்தவர் வானத்துள்ள
படையெல்லா மிறந்துபோச்சே
ஏத்துவானத்து நாய
னிறையவன் மிறந்துபோனான்
நாற்றிசை யுலகு நாயன்
னுமமல்லா தில்லையென்று
மாற்றெறதி ரில்லையென்றே
மகிழ்ச்சியாய் வருவானப்போ 388

வருகவும் னுலிடத்தில்
வருகவும் நெருப்பாக்காந்தும்
பெரியவ னுல்பதியிடத்திலு மனுகப்
பெரும்படை வலுமையுங்குரைந்து
அறியவ னிறைபதி னுலேயும் விலக்கி
அப்புரமொருநாள் வழியில்
எரிநர களியுஞ்சேனை
எங்குஞ்சூழ்ந்திருக்கும் நாளில் 389

எங்குஞ்சூழ்ந்திருக்குமந்த
எண்ணில்லா தனைத்தையுமளிக்க
தங்கிய மனுக்குல மனைவையுமளிக்கத்
தரணியுமளிந்திட இறையோன்
இங்குள்ள மனுவுலகத்தையுங்கடந்து
எண்ணில்லா பெருவனமாழுங்
தங்கிய குபிரிருள் நிரைந்திடுங்கொடிய
தாவூத்தி லிருள்வருந்தானே 390

தாவூத்தி லிருள்வருங் கதையைத்
தாரணி யனைவருங்கேளு
காவுதல் கொடிய கன்னுசு
சேமென்னுமிபுலீ சென்போன்
ஹாவுதல்க் ஹபாத்துல்கைபார்
ஆளத்தில் மூழ்கியே யெழுந்து
பாவுத லவன்குல மதனைப்
படைப்புக ளனந்தமுமீண்டான் 391

ஈண்டது பனிரெண்டு மவன்குலமாகு
மெண்ணில்லாச் செருக்கியர் சயிலர்
ஆண்டதில்ச்சயிலாத் தாரொரு முக
மங்கமுமுருக்குள்ள கருக்காம்
ஒண்டுதான் செருக்கியா குலத்தினி லுருவாய்
உதித்திடுங்கோடிபெண் வடிவாம்
நீண்டிடு மிருகமுங் காடியும் நரகில்
புனைந்திடில் பிறந்திடு மிருகம் 392

(வேறு)

மிருகமும் நினைத்திடும்படியே
முடிந்திடும் பலபலகோலம்
அருநர கிருந்ததும் வெகுநாள்
அங்கமு மிருளென்னு முருவா
அரியவ னுலகினிக்கெடுக்க
ஆலத்தில் வருமிருளுருவாய்
உரியவ ரவர்குலம்போல
உலகத்தி லனைவர்க்குந்தோன்றும் 393

தோன்றிடு மனைவர்க்கு மனுவாய்த்
தோன்றிடுமிருகத்துக் கிணையா
என்னுள்ள ஊர்வினை பரவை
யனைவர்க்கு மவரவர் குலம்போல்
மன்றல மனைத்துமே யாயிந்து
மன்னவ னிறை தூதான்
பண்டுள்ள நபிதாவூது
பாதத்தில் வருமிருள் தானே 394

தானவ னபிதாவூது
தாள்தனில் பணியும்நாளில்
வானவன் நபிதாவூது
வைத்திடும் நாமமேதால்
ஆனதைத் தாவூத்தி லிருளென்
றரைந்திட யேவலிலிருக்கும்
தனக்குப்பின் புதல்வனுன
சுலையுமான் றன்னுட யேவலிலிருக்கும் 395

இருந்தது தாவூத்திலிருளும்
ஏவலில் தாவூது நபிபோல்
பெரியவன் தாவூது நபியும்
பெற்றிடுஞ் சுமுகனுன
அரியவன் சுலையுமானுர்
அபசிருந்தாளும் ஞளில்
ஊர்வினத்துயிர்கள் பக்ஷி
யாவருள் கொலுவின்போதே 396

கொலுவினிற் சுலையுமானுர்
குவலயமாளும் நாளில்
அலகைவாள் சின்பரிதேவு
மண்டாண்ட பக்ஷிக்கெல்லாம்
கலகெரி புகழும்போது
கவிலுவா ரெருவிஷளக்
தலைவரில் தகுத்தீ ரல்லால்த்
தத்துயிரி ஞலாவதில்லை 397

இல்லையென் றுரைக்க அண்ட
ரண்டபட்சி மிருள்மொழிகேட்டு
வல்லமை வலுப்பத்தாலே
வல்லவன் ரகுதீர் தன்னை
எல்லையி லகற்றிவைக்க
எந்தநா லேலுமென்னச்
சொல்லுவா ருன்னுவில்லைத்
தொகுத்தது முடியுமென்பார் 398

முடிந்திடுங் கருமஞ்சொல்வீர்
அனைத்துமே தவிர்ப்பேனென்று
இடத்தினில் மகரீபாழு
மேந்தலன் பாலகரீண்ட
திடப்பெரும் புதல்வன்கன்றுன்
றனக்கிறை மணமுடிக்க
கடல்ப்பிர மசரீக்காளுங்
காவல ருபியான் கன்னி 399

கன்னியாள்மை மூனுளேக்
காளையன் கண்ணுனுக்கு
உன்னிய மணமுடிக்க
ஒண்ணரை மாசமென்பார்
விண்ணிலே எழுந்து பக்ஷி
பாந்துகீழ் திசையிலாகிக்
கன்னியை எடுத்துனுலாங்
கடலிலோ ரிடத்தில் வைக்கும் 400

வைக்கவு கன்னுனப்போ
வாரியில் வங்கமேச
தக்கவன் அருள்காத்தோங்கி
தையல்பா லிடத்தில்ச்சேோக்க
ஒக்கவே பக்ஷி தூக்கி
உடையவன் நபிபால்வைக்க
மிக்கதோ ரிருளும் பக்ஷி
மனுக்குல மளிக்க நாடும் 401

நாடியே யிருக்கும்போது
நாயகன் சுலேயுமானுர்
பாடியே பைத்தில் முகத்தீசு
பள்ளியைப் பளிங்குமேருல்
மூடியே முடிக்கபக்ஷி
மூக்கினுல் கீரி யீந்து
சூடவுஞ் சுலேயுமானுர்
சுருதியின் காலங்கூட 402

கூடவுஞ் சுலையுமானர்
கொலுவுட னிறந்து நிற்பார்
நீடியர் மடியக்கண்டு
னிதிக ணுசாக்கோலுஞ்
சூடியே நபிகையாளி
மெண்டையு மெடுத்துக்கொண்டு
ஆடியே யிருளப்பக்ஷிப்பாம்பு
மந்திர வனமேசெல்லும் 403

சென்றது இருள் பக்ஷிப்பாம்பு
சிங்கமுஞ் செவியும்பாம்பு
மன்றல முலகளிக்க
மதங்கொண்டு மலையதொப்பாய்
வண்டனுங் காண்டாமிருகம்
வண்டொரு நாகத்து கொசுகு
மண்டியே மனுவில்லர் வனத்தில்
மன்னரு யிருக்கும் நாளில் 404

நாமெல்லர்ம் நடத்தியேலோக
மளித்திடுங் காலங்கண்டு
நீளிய கோபங்கொண்டு
நினைத்தது அனைத்துமொன்றாய்
ஆளியு மாசர்க் கோலு
மனுந்தர மனுவடிவாய்
தாளிய பகைக்குலமளிய
தாவூத்தி விருள்வருந்தானே 405

தாவூத்தி விருளென்னு மிருகமுமத்
தரணியுத்தனத்துள்ள காண்டாமிருகமும்
பூவுலகளிக்க வருஞ்சிங்கப்படையும்
பூந்திடுஞ்செவியுள்ள பாம்பும்
ஆவுதல் மலையா யனந்தமுங் கொடியே
அண்டாண்ட பக்ஷியுந்திரளும்
ஒவுதல நாகத்து வண்டொருகொசுகும்
உலகில் வந்தடருந்தானே 406

அடர்ந்துதான் மனுக்குலத்தை
ஆளியே சிரத்தில் வைக்கும்
தொடுமந்த ஆசாக்கோலால்
தொத்திடும் அதுவிளிக்கு
சடங்களில் இசுலாங்காபீர்
சகலமுந் தெரியுமப்போ
மடங்கலு மிசுலாமெல்லா
முண்டிடும் பட்சிதானே 407

பட்சிதா னிசுலாமுண்ணும்
பாம்புண்ணு மற்றோரெல்லாம்
நச்சம்பு ஞாருசம்போல்
நடுங்கவும் செவியில்பூந்து
வச்சிர வாளிபோல
வந்திடு மறுபுரத்தில்
அச்சண மதில்த்துள்ள பூனரெ
உண்டிடு மிருகந்தானே 408

மிருகமும் பாம்பு பட்சி
யளித்திடு முலகந்தன்னை
மிருகங்க ளனைத்தையெல்லா
முண்டிடும் பெருஞ்சிங்கப்படையு
உருவுள்ள ஊர்வினையனைத்து
முண்டிடும் செவிப்பாம்பு கொசுவண்டு
ஒருவருக்கொருவரில்லாமல்
உலகெல்லா மிறந்துபோமே 409

இறந்திடு முலகமெல்லா
மிறையவன் மதிஞமக்கஞ்
சிறந்திடு பைத்தல் முகத்தீசு
துரிசிஞப்பதிஞலில்
நிறைந்திடுந் தீன்குலமிருப்பார்
நிலமுற்று மனுப்பூடில்லை
தனந்திரள் பதிமக்சம் மேஞக்கி
தாவூத்தி விருள்வருந்தானே 410

# தாவூத்திலிருள் வருதல்

வரும்பதி மக்கமா னகரில்
வளர்ந்திடுந் தாவூத்திலிருளும்
இருப்பவ ரனவருந்தொழுது
இறைவனை னினைந்தவராழுவார்
வரும்படை யனைத்தையும் நிருத்தி
தாவூத்தி லிருள்மனுவடிவாய்
அரியவன் திருமக்கவீதி
அனைத்தையு மறிந்துள்ளே வருமே 411

வருமந்த வீதியின் கடையில்
அவர்மாமணி பலவகையும்
பெருக்கிய சுடரொளியாடை
இலங்கிய துகைவிலைப்பட்டு
பெரியவ ரனைவருங்கொள்ளும்
பெருங்கடை மீதினில் வந்து
ஒருபட்டு விலையிட்டுப்பேசி
ஒன்றியா னின்றிடுந்தான் வென்றும் 412

வேண்டியே யிருக்க
வேறொரு அராபியுஞ்சொல்வார்
ஆண்டவர் கபுர்மேல் கல்பு
ஆலத்தில் விலையில்லாப்பட்டு வொன்று
எனஅகத்தினி லுண்டு
ஒருநூறு அசரபி கொடுத்தால்
இன்றுநான் தருவேனென்று
இயம்புவர் சாபிதானே . 413

தானவ னுரைக்கவந்த
தாவூத்திலிருளது மொழியும்
ஆனபட்டது தான் வேணும்
அதியமு மிகவிலைதருவேன்
என்னவும் அரபியுங்கொடுக்க
இருள் விலையாகவும் வேண்டி
முன்னவன் முனிவுகள் தரித்திடு
மிருளை முடிமீதிலணிவானப்போ 414

அப்பொழு திறைதூதானே
ஆண்டவ ரபுலா கல்வை
எப்போது மிறைமுனிவுடைய
யிருள்தரித்திடச்சிரமீதில்
ஒப்பினி லடங்காதிறையோன்
ஓங்கிடக் கோபமுங்கொடுமை
செப்பிய தாவூத் திருளுஞ்
சிரம்பொடிப் பொடிக்கவே வெடிக்கும் 415

வெடித்திட தாவூத்தி லிருளும்
வீதியி லிறந்தங்கே கிடக்கும்
வந்தவ ரனைவரும் பார்த்து
யாளியு மாசாக்கோலு
மெடுத்ததைப் பார்த்தவ ருரைப்பார்
இறையவன் சூலையுமானபியின்
வடிவுள்ள ஆளியுங்கோலுமென்றே
வுய்யவ ரனைவரும் புகழ்வார் 416

புகழ்ந்தல ருளியுங்கோலும்
புதியவன் காபாமீதில்
மகிழ்ந்தவர் தரித்தன ருரைப்பார்
மாருள்ள தாவூத்தி லிருளாஞ்
செகம்புகழ் பதிவரக்கெதியோ
சிரசினி லணியவுங்கலவை
தகமையில்க் கொடுமைகள் விளைந்திடும்பாவி
தாவூத்தி லிருள்மடிந்ததுவே 417

தாவூத்தி விருள்மடிந்திடவும்
தரணியுற்றனைவரு மிழுத்து
ஆவூசும் பதிமக்கங் கடத்தியப்பிரம்
பெரு வெளியெ ரிவார்
தாவூத்தி விருள்த்திரள்
வரும்பெரும்படையு
தங்கிடா தெழுந்
தோடிப்போமே 418

எழுந்திடும் பெரும்படை அனைத்துள்ள திரளும்
இறைபதி துரிசினில்
ஒழிந்துகொண்டிருப்பார் அவர்குலந்தனையே
ஒருமிக்க வளைத்திடுஞ்சேனை
நெளித்திடு ஆசூசு மாசூசு கொடிய
நெடும்படை தாநெதுப்படுக
அளிந்திட இருபடை யெதிரு
யமர்க்களத் ததிசெய்தானே 419

அதிசயம் பெரிய ஆசூசு மாசூசு
அடர்ந்தெதிர்ப்படை யெதிர்பொருத
விதமொரு நரகத்துக்கொசுப்படையனைத்து
விழுந்திட நுசியில் புகுந்து
இதம்பெரு நரகத்து வண்டுகள் விழியி
லெரிந்திட இவ்விழி தெரிக்கும்
பதம்பெர செவியுள்ளே பாம்புகள் புகுந்து
பட்டிடுவார்வெகு பேரே 420

பாருள்ள சிங்கத் திரள்படை யனைத்தும்
பெரும்படை யனைத்தையும் பிளக்கும்
கூறிய காண்டா மிருக்மும் பொருதி
கொடும்படை மடிந்திடு மிடத்தில்
வீரியம் பெரிய பட்சியு மெதிர்த்து
வெகுதிர ளனைத்தையு மடிக்கும்
கூறிய ஆசூசு மாசூசு பொருத
கொடியவ னெதிர்ப்படை மடியும் 421

எதிர்த்திட பொருதிடும் யிருபடை யமளி
இறந்திடும் பெருபந்திரள்க்களத்தில்
விதத்தினி லடங்கா மலையாவனத்தும்
வெகுதிரள் படையையுமடிக்கும்
பதிதனில் மனுக்குலம் ஜின்பரி தேவுகள்
படைப்புகள் பொருதரப்படையாம்
விதத்தினி லடங்கா யிருபடை யமளி
யளிந்திடுமீரஞ்சு மாதம் 422

மாதமு மொருபத்தாக
மட்டில்லாப்பெரும்படை யிறக்க
பார்தலம் திசைகள் முற்றும்
பருந்திரள் பிணக்குமியல்
காதலம் புகழும் வள்ளல்
கத்தவ னீசாநபியும்
ஆதலந் தூரிசினாவில்
அனைவருமிருக்கும் நாளில் 423

இருக்கையி லிறையோ னீசா
இறைவனைப் புகழ்ந்துபோற்றி
பெருக்கிய பிணத்துள்ள றற்றம்
பெருமலையனைத்துமொன்றாய்
இருக்கவு நடுங்குதென்ன
யாவரு மிறையைப்போற்றி
உருகியே தொழுதழுது
ஒருவனைப் புகழ்ந்திருப்பார் 424

இருந்திடும் யாசூசு மாசூசு
எண்ணில்லாப் பெரியசேனை
நிறைநதிடு மிருபடையனைத்து
நெறியில்லா தமளியின்னாளில்
அறிந்தவ னனைத்தையெல்லாம்
அழிவில்லா ஆதிநாயன்
சிறந்தவிண் மீக்கா யீலை
செப்புவா னிறைபரிமான் 425

இறைபரிமான் மேதால்
இறையவன் மீக்காயிலே
னிரையுவெண் டுலகமெல்லாம்
நீடிய மழை பொழிய
இறந்துட இருபடையனைத்து
இரங்கிடும் பெருமழை காற்று
இருப்பிட மில்லாதோடி
இருந்திருந் தவிந்துபோமே 426

அவிந்திட இருபடை யனைத்தும்
அடர்ந்துதானெழுந்திடும் வெள்ளம்
நிமிர்ந்திட யெழுபது முளமும்
நிதிபதி ஞலையுந்தவிர
அழுந்திட வுலகமுற்றனைத்தும்
அருபத்தி ரெண்டாம் நாளில்
சிமந்திடும் பெருவெள்ள மனைத்தும்
செத்திடுங்குமியல்தன்னே 427

குமியலின் பிணமற்ற உயிருங்
கொண்டுபோய்க் கடலில் சேர்க்க
நயமுரத் துரிசினவும்
நாரல்போய் நவமணந்தோன்ற பூமி
வானங்கள் சூழனைத்துங் கோமான்
புகழ்பெரு மறையோனீசா
தலையிறை மலையை விட்டு
தரணியி லிரங்கச்சொல்வான் 428

இரங்கிய நபியு மீசா
இறையவ னருள்தரித்தமக்கம்
நிரைந்திட காபத்துல்லாவில்
னித்தெனப் போத்தியே புகழ்ந்து
சிரந்தர சிருப்பார் வள்ளல்
சலையுமா னபி கையாளி
அறிந்தெடுத் தணிந்து கையில்
ஆசாவும் பிடித்திருப்பாரே 429

இருக்கையில் விரைபதினுு
　　மிருந்திடும் நிரைந்திறை இசுலாம்
மருத்தொரு தலத்தில் மற்ற
　　மனுக்குல மொருவரில்லை
நிறுத்திய பதிகள் நாலும்
　　நிகரில்லா தானுமகாளில்
இருப்பது இருபதிதவிர
　　எங்குமே யிறந்திடும் யாவே 430

இறந்திடு மிருகம்பட்சி
　　இருந்திடு மின்னஞ்சில வுயிர்கள்
நிறைந்திடு முலகு சூரியன்
　　நீர்க்கட லடையுமப்போ
திறங்கொள்ள வடைந்திடு
　　மகத்தினுங் திரும்பவு மெழுந்து
விண்ணுலகி லெழுந்துமுன் கீழ்த்திசை ஞேக்கி
　　இறவியு மடையுமப்போ 431

அப்பெரும் புதுமை யேதால்
　　ஆலமு மளிந்கவேண்டும்
எப்போது மனுவில்லாதான்
　　இறையவ னுதிநாயன்
ஒப்பினை உகையமில்லா
　　உத்தர வதனை விறவி
இப்படி மாதமூன்று
　　எழுந்துகீழ்த் திசை யிருக்கும் 432

இருக்கையில் பறவை பட்சி
　　இறந்திடுஞ்சில வுயிர்கள்
விரப்பிய மதியுமப்போ
　　எழுந்திடு மேல்திசையில்
சிரந்திடும் பதியுலாவி
　　சேர்ந்திடுங் கீழ்த்திசையில்
எழுந்திடு மதி மறுபடியும்
　　இலங்கிட மேல்த்திசைதானே 433

மேல்திசை மதியெழுந்து
மேதிகீழடையப்பின்னும்
மற்றொரு நிலவுதானே
மறுபடி உதையமாகி
மாதியே னிலவு ரெண்டு
மாதமொன் றுலாவும்போது
காற்றுமே பரவை பட்சி
அனைத்துமே யோய்ந்துபோமே 434

இறந்திடும் பரவை பட்சி
இருந்திடுஞ் சிலதிட மிருகம்
எறந்துட நெருப்பெண்ணு மழையும்
ஏகமா நெறுப்பென்னுங்காற்றும்
இருந்துள்ள மிருகமற்
றுயிருயாவுமே யிறந்திடுமுலகில்
சிறந்திறை நால்ப்பதி முழுதும்
சேர்ந்திசுலாம் நிறைந்திருப்பார் 435

இருக்கையில் மதிகதி ரெழுவான்
திசையில்முன் னெழுந்திடும் வகைபோல்
திருக்கியே எழுந்துவிண் ணுலாவி
சேர்ந்திடும் படுவான் திசையில்
பெருக்கிய இறைநபி யீசா
பிரபல ருடன தீன்குலமும்
இருக்கையில் சிலபேரப்போ
இயம்புவா ரெண்ணில்லாப்புதுமை 436

எண்ணில்லா திறையருள் தரித்த
எங்கள் நாயக நபியரசே
வண்ணியின் வடதிசை யுலகை
வளைந்திடு மலைதனை யிடித்து
உன்னியு மலைப்பெரும் படைப்பு
ஒருநூறு சிரமுள்ள சேனை
அன்னியா யுருக்கிச்செம்பிரும்பி
ஐம்பொன்னு மவருடலங்கம் 437

# செருக்கியர் சயிலர் வருதல்

அங்கமும் பெருமலையுடையோர்
ஆளத்தி லடிப்புவியாமும்
கண்களு மிருநூறுடையோர்
கைகளு மிருநூறுடையோர்
இங்குள்ள மலைகடலுலகும்
இடித்தர னனைரையும் நெருக்கி
எங்குமே செருக்கியர் சயிலர்
எண்ணில்லாப் பெரும்படை வருமே 438

சயிலர் படை செருக்கியும் படையுஞ்
சாஞ்சும் திசைகடலதிகம்
பருக்கியே வடவையி மலையும்
பருமலை மேனையுமிடித்து
நொருக்கியே பொடியா யெடுத்து
நொடியினில் கடலையும் நிறைத்து
முருக்கியே உலகத்தைத் திருத்தி
முட்டையு முருட்டியேவாரான் 439

உருட்டியே எழுவான் படுவான்
உலகத்தை நிரைத்திடுஞ்சேனை
அருட்டியே படைவருமெனவும்
அதாலத்து யீசாகபியும்
பொருட்டுள்ள தனைவமைச்சேர்த்து
போயவரறிந்தவரனுப்ப
அருட்டியா மனுக்குலஞ்சிலபேர்
யடைந்தவர் வடதிசை போவார் 440

வடதிசை வெகுதுலை யறிந்து
வரும்படை திடமெனத்தெரிந்து
இடைதனில் தரித்தில்லா தோடி
இரவொடு பகலுமே ஓடி
நடையினி லுரைக்கமுன்னோடி
நாயனை யனுதினம் நாடி
அடர்த்தியா யனைவருங்கூடி
அவசரமவரவ ரோடி 441

வருகுமுன் மக்கமா னகரில்
வல்லவ னீசாநபியும்
அரியவ ரனைவருமொன்றாய்
ஆதியின் ஹறமீதில்
பெரியவன் தனையனர் தொழுது
பெரும்படை கலகத்துக்கேங்கி
உரியவ ரனருமொன்றாய்
ஒருமிக்க சுஜூதிலாவார் 442

ஒருமிக்க இறைசுஜூதில்
ஓய்ந்திடா யனைவரு மிருக்கில்
அருமையின் சுவர்க்கத்தின் வாசம்
அடர்ந்தசந் ததுவந்து வீசும்
உருமையின் வாசத்தாலே
உள்ளே மூச்சிருப்பதல்லால்
மறுபடி வெளிவிடாததால்
மகுத்தாகிக்கிடப்பார் வெகுபேர் 443

# ஈசா நபி முடிவு

கிடக்கையில் வெகுபே ரிறந்து
கிளம்புவார் வெகுபேரப்போ
இடத்தினி லிறையோனீசா
இறையவனைத் தொழுஞ் சுஜூதில்
நடப்புக ளனைத்தையு மறிந்த
ஞயக னமைத்திடும் படியே
கடத்தியே உலகுசெங்கோல்
காலமு முடிந்துபோமே 444

முடிந்திடு மீசாகாலம்
முன்னவன் ஹாபத்துல் லாவில்
இடந்தனில் தொழுதும்
சுஜூதில் யிறைபுரஞ் சேரும்போது
அவ்விடந் தனிலிறந்தில்லா
தீனவ ரெழுந்துபார்த்து
அடங்கலு மழுதுதீனோர்
அனைவரை யடக்கஞ்செய்வார் 445

அடக்கவு மதில்சிலபேர்
எழுந்து யீசா தன்னை
எடுத்தவர் மதினம் நோக்கி
யாவரும் நடந்திடத் திரளாய்
தடத்தினில் ஒருநாள் வெளியில்
தங்கிடா தோடியே நடந்தார்
வடதிசை யறியவும் போனோர்
அனைவரும் வருகையில்காண்பார் 446

கண்டவ ரனைவரு மழுது
　　கியாமமு முடிவிண் ணுமாச்சே
மண்டல முலகமு மாண்ட
　　மரியமு மகனு யீசா
இண்டிறை பாத்திலானார்
　　இனிவுலகளிவது திடமே
ஒண்டிலு மடங்கான் சேனை
　　உலகில்வந் தடுத்தது முரைப்பார் 447

உரைத்திடும் புதுமையைக்கேட்டு
　　உயிருட னனைவருமிறந்து
நிறைத்திடுந் தீன்குல மனைத்தும்
　　நீதியின் மதினப்பதியில்
பெருத்திடு மிறையருள் தரித்த
　　பெரியவன் முஹம்மது நபிதன்
வரத்துள்ள பதத்திலீசாவே
　　வைத்தவரனவரும் பணிவார் 448

பணிந்தவர் தீன்குல மனைத்தும்
　　பாத்தியா ஓதியே புகழ்வார்
இணையிலு மடங்கான் தூதே
　　இருபதி நாயகம் நபியே
நணிபுக ழிறையோனீசா
　　நபிதனி லடக்கவு முலகில்
இனியிட மரியோ முங்கள்
　　வுத்தர வுரையுமென் றுரைப்பார் 449

(வேறு)

உத்தர வுரைக்க
　　அங்குத் தனைரும் கேட்க
கத்தனிறை தூதுவள்ளல்
　　ஆனமஃதுமூது
முத்தினி லுதித்து பாலன்
　　முத்துமவர் பெற்றோர்
மற்றவகை பெற்றது முன்
　　மெத்தவும்பின் னானோர் 450

பின்னவரு முன்னவரு
மான இறை தூது
இன்னிலத்தி லுள்ளமனு
குற்றம்பிழை முற்றும்
விண்ணகமளிந்த பின்
னெழுந்தமஹாமசெரில்
மன்னனிறை முன்னணி
மன்றுடி மகுமூதர் 451

(வேறு)

மன்றுடியே சுவர்க்கஞ் சேர்க்குமகுமூது
மற்றுள்ள தமைக்குமுன்னெழுத மகுமூது
னின்றிசுலா முத்தகுல மற்றனர்க்குந்தோண
நீளொளிவு சூழ வீசும் வானடியைக்காண
அன்றிசுலா முற்றகுல மற்றனனை நோக்கி
அல்லலாபமேலயக்குமென ஆதிநபியோதி
என்று புகழாசரி மரியமீன் றெடுத்த பாலன்
ஏக னருள் பெற்ற யீசா யென் றுணைவராமே 452

என் றுணைவரே மஹாசர்க்கதிப ரீசா வென்னுட
இடப்பிறத்திலே தரிப்பார் வள்ளல்
என்னிலு மடங்கா னிறைதூது மகுமூது
யாவருமறியா வகை யோதுகின்றபோது
மன்னவ னருள்தரித்த யென்னும் பெரியோர்கள்
நின்னவ ரெடுத்துநபி யீசாதமையேந்தி
மன்ன னிறை தூதுநபி மாளிகையில்ச்செல்ல
எண்ணிலு மடங்கா னிறைதூதுநபிவள்ளல் 453

வள்ள லிரகுலடக்க மாயிருக்குமந்தப்
பள்ளிகபு ரும்பிளக்கும்பெட்டகமுந்தோப்பாய்
வெள்ளிமலை யுங்கதிரும் விம்மலுமதிகம்
வேணமட்டும் வானமட்டும் வீசும் ஒளிசூழ
எள்ளிறை நிரைந்த இறை தூதுமகுமூதே
அத்தலத்தி லுள்ளமனு முத்துமலர் காண்பார்
உள்ளவர்க ளீசாநபி தமையெடுத்து யேந்தி
வள்ளல் மகமூது கபுறு நருள்ளிசக்குவாரே 454

(வேறு)

இரங்குவா ரிரசூல் கபுறறுக
 லிறையவ னீசா தம்மை
திரங்கொள்ளு நல்வரேந்தி
 திருநபி இடது பாலில்
இறையவ னுமருகத்தா
 இருப்பதுக்கிடது பாலில்
வரம்புக ளிறையோனீசாவை
 வைத்தவர் கிடத்துவாரே 455

வைத்தவர் கிடத்தும்போது
 வல்லவரனைருங் காண்பார்
அத்தலம் புகழும் வள்ளல்
 அபுபக்கர் தனையுங்காண்பார்
முத்திரை தரித்தவள்ளல்
 முஹம்மது நபியுல்லாகை
சுத்த கனபூபக்கர் தோளைச்
 சூளவும் வளைந்தணைந்திருக்கும் 456

அணைந்துடன் நபி வலக்கை
 அபுபக்கர் புயந்தழுவி
இணைந்திடு மபுபக்கர்தன்
 னிடக்கரம் நபிபுயத்தில்
புணைந்தொரு புயந்தழுவிப்
 பூமெத்தை மீதுறைந்திடவும்
மிணைந்திரள் முஹம்மது நபியின்
 னிடக்கரமு மவர்புயத்திருக்கும் 457

இடக்கரம் புயந்தழுவி
 இணைந்திடக் கொழுகியே யிருக்கில்த்
திடப்பெரு முமர் வலக்கரமுந்
 திருநெறி நீதரான
கடப்புகள் முஹம்மது நபி புயத்தைக்
 கட்டியே தழுவியே யிருக்கும்
நடப்புள்ள உமருதன்னிடத்தில்
 நாயக னீசாநபியே 458

நாயக னீசா நபியை
நலம்பெறக் கிடத்தும்போது
ஆயனை மரியெழுப்பி
ஆதத்தையு மலையிடத்திலேற்றிக்
காயுறக் கதிர் மதிக்
கன்னிக்குச்சுவாலித் தேரு
தூய்யவ னுமருகத்தா
துணையிடக் காமணைவாரே 459

(வேறு)

அணைந்திடு மிடக்கா மிறை
யவனுமரு மண்ணல் யீசா நபியு
மிணைத்திடும் வலக்காரத் துமருட் புயத்தி
லேற்றியே இருவருந்தழுவி
மணத்தொடு படினே ருமர் முகம்நோக்கி
முஹம்மதிறசூல் மொழிவார்
இனத்தொடு இருபிர மிருநபி தழுவ
இறையருள் தரித்திடுமமரே 460

தரித்திடு முமரென துரைத்திட நபியுந்
தலத்தவ ரினத்தவ ரறிய
கரைத்திடும் நபியுட னபுபக்கருமரு
முடையவ னீசாநபியும்
ஒருத்தரை யொருத்தர் திருமுகம் நோக்கி
ஏந்துவா ரிறைசலவாத்தை
பொருத்திடக் கிடத்திப் பெரகரை யேரில்
பெட்டகம்போல்கபர் மூடும் 461

மூடிடு மிறை தூதான
முஹம்மத ரிசூ லுல்லா
மூடிடுங் கபுரைப்போற்றி
சுஜூதிட்டுத் தொழுதெல்லோருங்
கூடியே குலங்களெல்லாங்
கோத்திர வளமைசெய்து
நாடியே ஹாபாநோக்கி
நடந்தவர் வருவா ரப்போ 462

(வேறு)

அப்பவு மெழுந்தபதி
யுத்தபெரியோர்கள்
ஒப்புற நடந்துமலை
காவனங்கடந்து
எப்பொது யதிதுள்
தரித்தபதியான
நற்புக ழிலங்குமக்க
மானகரிலாவார் 463

மக்கநக ருத்தகுல
முத்தன ரிருப்பார்
மிக்கமதினு நகரி
லுள்ளவரிருப்பார்
துக்கமணுகாத இறை
துரிசினுவி லுள்ளோர்
ஒக்கவே பைத்தல் முகத்திசுப்
பதிதனிலு முள்ளோர் 464

பதிபுக ளிதுனு விடமுமே நிரைய
பாருள்ள தீன்குலனைய
மதிபதி யொருவ ரில்லாமலுமேங்கி
ஆகிரு முடிவுக்குமயங்கி
மதிகளுந் தவரியே பதியிளந்தவர்போல்
மலையுந் தீயிலிட்டதுபோல்
விதனமில் மெலிந்தன பேர்களுமிருக்க
வெகுபடைத்திரள் வருகுந்தானே 465

(வேறு)

வந்திடும் பெரும்படை யேதால்
வல்லவன் முனிவு பெற்றோ
ரிந்தவா னுலகமெங்கு
மிறையவ சாகுநாமென்ன
முந்தியா செருக்கியாசயிலர்
முடிவில்லா தெழுந்தசேனை
முந்தவர் மலையுல கிடித்து
வாரியே யெடுத்தெரிவாரே 466

எடுத்தவ ருலகத்தைக் கடலினிலெரிய
எண்ணில்லா வலுமையும் பேசி
இடித்தவர் மலைகளை நொருக்கி
எடுத்ததைக் கடலினிலெரிந்து
முடித்தவன் வடதிசைக்கடல்மலை முதலாய்
முட்டையு முருட்டியே பார்த்து
அடுத்த ஹாபாபதிக் கொருநாள்வழி
அக்கினி யெரிபவுங்காண்பான் 467

(வேறு)

அக்கினி பெருந்திரள் மலையா
மடங்கலும் வளைந்தொரு புரிசை
தக்கவ னருள்பதி ஹாபாத்
தன்னையே வளைந்துகொண்டிருக்கும்
முக்கியம் பெரும்படை யடுத்தோர்
மூன்றுநாள் வழிக்குப்பின் தரிப்பார்
மக்கமென் பதியோ ரனர்தொழுதழுது
மயங்கியே சுஜிதினிலழுவார் 468

அழுகையில் கிடக்கும்போது
ஆதியின் பரிமாணரும்
பொழுதுட னிலவு மேற்கே
பிறந்து கீழுடையவென்று
மொளியவுங் கதிர்மதிமீன்
முப்பதுநாளுமப்படியே
வழிவரும்போது சொர்க்க
வாடையு முலகத்தில் வீசும் 469

வீசிய சுவர்க்கவாடை
வெகுமணங் குலங்கள் முற்றும்
ஆசையாய் சுவர்க்கமாண்ட
அனைத்தையு முடலுக்குள்ளிருப்பார்
வீசிய வாடையி னுயர்த்தி
விட்டிடாதிழுப்பார் மூச்சை
தேசமில் லுல்பதியில் மனுக்குலம் வெகுபேர்
தேங்கிய மூச்சினு விறப்பார் 470

இறப்பவ ரிறைனல்பதியி
விருப்பவர் தீன்குல மதிக
மிறந்தவ ரவர்களை யடக்கி
இருப்பவ ரிறைனல்பதியில்
தரிப்பது பதிக்கு நாற்பதுபேர்
தவிராமற் றனைவருஞ்சரியா
மறைபுகழ் கதிர்மதி பிரண்ட
மாதமொன் ருகிடுஞ் சரியே 471

சரிவர முடிந்திடில் மாதஞ்
சாடிய வகைவருது
எரிகதிர் மதியுங்கிளெழுந்து
எப்போதும் போல அடையும்
அரியவ னிறைபதி மதின
அருள்பெருந் தரிசினவில்
இருப்பவ ரிருபதி மனித
ரெண்பது பேர்களு மெழுந்தே 472

எழுந்தவர் பைத்தல் முகத்திசிடந்தனி
லவர்களும்போக
மொழிந்திடு மிறைபதி மதின
மொழிபதி தரிசினவும்
ஒழிந்தொரு குழந்தையில்லாமல்
உடையவ னருள்நிறைந்திருக்கும்
மெழுந்த ரென்பது பேருமிருப்பது
பயித்தல் முகத்திசில் 473

இருந்தது என்பதல்லாது
இறைபதி பைத்தல் முகத்திசு
நிறைந்திடுங்குல முற்றுமே யிறந்து
நிலைத்திடும் பதிதனில்மீது
இருந்தவ ரெண்ணஞ்சு பேரு
மெண்பது மொருமிக்கச்சேர்ந்து
நிறைந்திடும் பெரும்படைக்கருண்டு
நினைத்தவ ரழுதழுதிருப்பார் 474

இருப்பது ஒ நநூற் றிருபது ஒலிக
ளிவரல்லா நபமெருன் றுமில்லை
மறைபுக முரும்பொருள்நிறைந்த
மக்கமா னகரிலுள்ளோரும்
இறப்பவ ரனந்தமு மடக்கி
இருப்பது எண்ணஞ்சு மீதில்
இருக்கையில் பதிதனை வளைந்து
யெரிந்திடு பெருந்தள புரிசை 475

புரிசையுந் தணலுடன் கொடிதாய்
பொங்கிய பெரும்படை தடையா
இருக்கையி லிறைபரிமான்
எண்ணில்லா மலக்கன் பெயரை
வரிசையும் பெருகிய ஹாபாதனையுமே
உலகைவிட் டெடுத்து
பிரிசமு ரஹுமத்து கடலில் பிலப்படத்
தரித்திட வுரைப்பான் 476

தரிக்கவு மிறையருள் நிறைந்த
தனையிணைக்குரியாகி யப்பதியை
பெருத்திடு ரஹீமத்தென் றுரைக்கும்
பெரியவன் ஹயாத்துல்கைபார்
நிருத்திய பதிமக்கமெனவும்
நீளும் விண்ணவர் குலம்பணிய
இருத்துமென் றிறைவ னிமையவர்க்குரைத்தா
னெண்ணிலு மடங்காதொருவன் 477

எண்ணிலு மடங்காவல்லோ
னிமையவர்க் குரைக்கும்போது
எண்ணிலு மடங்காவிண்ணோ
ரிறைவனைப் புகழ்ந்துபோற்றி
ஒண்ணுட ஹாபாச்சிந்த
ஒருவிரல்க் கொடுத்தெழுக்குலங்கள்
எண்ணுமே நரகத்துக்கிறையென்
றெழுதிய வரிமுறை யறிவோம் 478

எழுதிய வரிமுதல் பலகை
யாவருமறிந்திடும் வகையால்
தெளிவுள்ள ஹாபாத்தன்னை
திசையைவிட் டெடுக்கவுந்திரமோ
வழிகெடு சயிலர்கள் செய்தால்
அதனையு மருத்துமே யெடுத்து
அழிவில்லா ரஹீமத்துக்கடலி
லருள்ப்படி தரித்திட வைப்போம் 479

வைக்கவு மிறையருள் கடலில்
வல்லவன் ஹாபாதன்னை
முற்றும்விண் ணவர்களு முகைய
முலகைவிட் டெடுக்கவு நடுக்கங்
குற்றமுங் கொடிய பாவி
இடித்திட ஹாபாத்தன்னை
முற்றிலு மறிந்தநாயன்
முன்னவ னுகையமானன் 480

(வேறு)

ஒளிவினில் பலதல மனைத்தையும் படைத்து
ஒன்றுக்கொன் றுயர்த்தியாய் வகுத்து
இளகியே சருகா தனைத்தையும் நிருத்தி
எவ்வினை யணுகாப்போற்றி
முழுதினு மொருவனை நிரைந்தாசாக
முன்னவன் காத்திடுங்காலம்
வந்தடுத் திடுங்கொடிதால்
ஆதியுஞ் சம்மதித் திருப்பான் 481

மற்றுள்ள பதினெண் ணாயிர மாலமும்
மதிகதிருடன் குருசருசு
மித்துல கனைத்தும் விண்ணெழுபுவிகடலு
இலைபூண்டு புல்லுடன் விருக்ஷம்
திசை பல பலதனைத்தும்
மேனிரைந்த யெள்ளிடை பிசகா காவல்
அத்திடுங்காலம் வந்தடுத்திடுங்கொடிதால்
ஆதியுஞ் சம்மதித்திருப்பான் 482

சிறந்திடு மிறையவன் வகுத்துள்ள தனைத்தையுஞ்
சிந்திடா தவனருள் நிரைந்து
பறந்திடும் பலவகை யனைத்தையும் வளர்த்து
போஜனங் குறையாதளித்து
நிரைந்திடும் பலவகை யனைத்துக்குமுயிராய்
நிதானமும் பிசகிடா திருந்தோன்
குறைத்திடுங் காலம்வந் தடுத்திடுந்துக்கம்
கொற்றவன் சம்மதித்திருப்பான் 483

பரவையு மிருகமும் ஊர்வினம் பலதால்
படைப்புகளனைத்துமே படைத்து
நிறைந்தெங்கும்பொருளா யனைத்துக்குமுயிராய்
நினைவெனும் சூடுடன் மூச்சாய்
ஒரு அணுப் பிசகா தனைத்தையுங்காத்து
டையவன் வளர்த்துயிரனைத்தும்
இறந்திடுங் காலம்வந் தடுத்திடும்படியா
இறையவன் சம்மதித்திருப்பான் 484

படிபுகழ் மனுக்குல மனைத்தையும் படைத்துப்
பருமறை நாலையுங்கொடுத்து
நெடியவன் மனுடர்க் காகமற்றனைத்தையும்
நினைத்தவ னமைத்தவன் கொடுத்து
அடியானு மாதியென் றவனையே புகழ்ந்து
அவரவர்க்கொருவன்போலிருந்து
மடிந்திடுங்காலம்வந் தடுத்திடுங்கொடியதால்
மன்னவன் சம்மதித்திருப்பான் 485

தெளிவுள்ள ஹாபாத்தனை முதலிடிக்கத்
திரள்கரிப்படை வரமடித்தான்
வழிகெடுங்குபிர்கள் முன்னிடித்திட னினைத்த
அவர்களுக் கெதிரியே விடுத்தோன்
ஒளிவுள்ள ஹாபாதன்னை யிடித்தளிக்கு
மூலகெல்லாஞ் செருக்கியர் சயிலர்
தெளித்திடுங்காலம் வந்தடுத்திடி லதுக்கு
நீதியுஞ் சம்மதித்திருப்பான் 486

படிபுகளாதத்தை யடக்கிய இடத்தில்
பருமதி ளெடுத்தி வுருகி
விடந்தனில் நபிகள் அனைவரும் புகழ்ந்து
யாவரு மடங்கிய தலமாம்
மடைந்திடும் வினைய னுகாமலுங்காத்து
அவனருள் நிரைந்ததுவும்
முடிந்திடுங்காலம்வந் தடுத்திடலதற்கு
முதலவன் சம்மதித்திருப்பான் 487

வளர்ந்திடு மிறையவன் குருசருசதின்கீழ்
வையக மனைத்துக்குந் தலையாம்
முளங்கிய கதிர்மதி விலகிட வள்ளல்
முஹம்மது நபிபிறந்திடும்பதியாங்
களிந்துடப் பதிக ளனைத்தைபுந்தெளிக்குந்
ஹாபத்துல்லா வுலகத்தை விட்டு
எழுந்திடுங்காலம்வந் தடுத்திடுங்கொடிதா
யிறைபவன் சம்மதீத்திருப்பான் 488

சம்மதித் திறையெழுதிச்
சயிலநுஞ்செருக்கியாசேனை
தம்மையு வருகமக்கா
பதிக்குள்ளே யுகையமாகி
வம்மையாய்க் கதிர்மதியும்
வையகம் வெகுளாண்ட
செம்மையை யறிந்து வல்லோன்
செய்திடும் வெகுமதிதானே 489

வெகுமதி செய்யருடி
விரும்பியே இறைகதிர்மதியே
உகையமா யருசுதன்னி
லுடையவ னளிக்கும்போது
அகமகிழ்ந் திறையருசி
லாகிடு கதிர்மதியும்
பகுமென நிரைந்துலகை
பாரமா யிருளிசங்கிடுமே 490

இரங்கிடு முகைினி விருளும்
மெண்ணிலா காத்தொடு மழையு
மிரங்கிடி விறையருள் தரித்த
இலங்கிய வூரபாச்சூள
பிரிந்திடு பெருந்தண லவித்த
எண்ணாஞ்சுபேர்களுமிருந்தோர்
துரந்திறை விழியொழிகொடுக்கத்
தூரங்களோடிடுவாரே 491

ஓடியே பைத்தல் முகத்தீசுள்ள
வருடனே போயிருப்பார்
நீடிய உலகனைத்தும்
நிரைந்திருள்க்கடலாயிருக்கும்
கூடிய கதிர்மதி யருஷில்க்
கொத்தவன் சமுகத்திலிருக்குஞ்
சூடியகதிர் மதிக்கினிய
நாயகன் வெகுமதி செய்வான் 492

செய்திடும் வெகுமதி யேதால்ச்
சிரசுடன் கழுத்துட னுடலாய்க்
கையிரு சிரகுடன் ரூஹ
காலுடன் வாலுட னுருவாய்
வையகத்திணை யொட்டகம்போல்
வளவுள்ள வுருவமுமுருவாய்
எய்புரு சிரத்தின் மீதில்
எழுந்திடு மிருக்கொம்பாமே 493

உருவ மொட்டக மினத்தினுக்
கிணையா புடையவ னருசினில் மதியா
மரியவன் கதிர்மதி யருசில்
ஐயெட்டு நாளுமே யிருக்க
கருகியே யிருள்க்கடல் நிரைந்து
காசினி யனைத்துமே மரைந்து
இருக்கையி லருள்ப்படி யெழுவா
எழுந்திடுங் கதிர்மதிதானே 494

கதிரவ னெழுந்திட வுலகுங்
கனயிருள்பகலாய் விடியும்
பதிதனை யளித்திட னினைத்த
பாவியா செருக்கியர் சயிலர்
அதிசயப்பதிமக்கத்தடுப்பார்
ஆவியுமண் ணுமில்லாதால்
விதத்தினி லடங்கா மகிட்சி
வெற்றிகொண்டவரும் நடந்தே 495

நடந்தவா பதிமக்கம் வீதி
அனைத்தையு மிடித்தவர் நொறுக்கி
கடந்திறை புகளருள்னிசைந்த
கண்மணி ஹாபத்துல்லாவை
அடங்கலு செருக்கியர் சயிலர்
அடிமுத லனைத்தையு மெடுத்து
இடந்தனி லணுச்சிதராமல்
எடுத்ததை வடதிசை விடுவார் 496

வடதிசை யுலகத்துக்குருதி
வல்லவன் கோபக்கா மலையாங்
தடையாப் பெருமலை முதலே
தவுடெனும் பொடிபட யிடித்து
அடங்கலுங் கடலுட னிரைந்து
ஆலமுந் திருத்தியே வளியா
இடம்பெற னிரைந்திடுஞ்சேனை
யாவரு மொருவரிதரிப்பார் 497

யாவரு மொரு வரினிறையா
யிறையவன் பதிமக்கமுதலாய்
வாஙியின் வடமலை பிரத்தில்
வடகடல் வரையொரு நிறையா
பாவியா செருக்கியர் சயிலர்
படைத்தவ னிறையருள் னிரைந்த
ஹாபத்துல்லாவெனு மணியைக்
கடல்வடதிசை யிினிலெரிவார் 498

(வேறு)

எரிந்திடும் ஹாபா மணியை
இறையவன் மலக்குகள் பிடித்து
இருந்திடு முதல்வகை யதிலும்
யெழுபது மடங்கதுக்கதிகம்
சிறந்திட மலக்குகளெடுத்து
செம்பொன்னின் பாரையில் தரித்து
நிறைந்தி ரகீமத்துக் கடலில்
நிருத்துவார் நடுநிலை பொதுவே 499

பொதுநிலை யுலகுக்கு நிலையாம்
புகழுக்கு புகழதாயிருந்த
அதிசய ஹாபத்துல்லாவு
ஆகிரு முடியுமென்றறிந்து
இதம்பெற சிறந்திட நடந்து
இமையவ ரெடுத்திட சிறந்து
நதிபெரு ரகீமத்துக்கடலில்
நடுநிலைக் கரசிருந் ததுவே 500

இருந்திட இறைபதி ஹாபா
எண்ணில்லா செருக்கியர் சயிலர்
நிறைந்தவர் பக்கமாம்பதியை
நிமிஷத்தில் நொருக்கியே பாவி
இருந்திடும் பெருந்தளமெழுந்து
இறையவன் பைத்தல் முகத்தீசு
சிறந்திடும் புரிசையையடுப்பார்
சேர்ந்தவன் புரிசையுமெரியும் 501

எரிந்திடுந் தனைல்வளர்ந் ததிறை
யிறைபதி யணுகா திருப்பார்
சிறந்திடும் பைத்தல் முகத்தீசு
சுலையுமான் நபிபதம் பணிந்து
இருந்ததின் குலமொரு
நூற்றருபது பேர்களுமிருப்பார்
மரந்துடல் மதிகளுந்தவறி
மங்கியே விழுந்தழுவாரே 502

(வேறு)

அழுபவ ரிறையைக்கூவி
யாகிலே யழிவில்லானே
மொழிமதி முஹம்மது யிபுனி
அபுதுல்லா தமைபிந்த வுலகில்
எழியவர்க்குதவியாக
இறைவனே இரக்குவாயெனவு
மலிபுக மொழிகளு மழுது
வருந்தியே தொழுதிருப்பார் 503

இருக்கைபி லிறைவனுதி
எரிகதிர் மதியை நோக்கி
அருக்கியே யடைந்திடும் படுவான்
அதிலிருந் தெழும்பவும் பரிமான்
இருத்திடுங் கதிர்படுவானில்
எழுந்திடு மருபடி மேலே
உரைத்திடு மொளிவுகள் துலங்க
ஒட்டகம் போல்வருமுயர்ந்தே 504

உயர்ந்துவிண் ணுலகமு மூலாவி
ஒருபகல் பாதியில் வருக
பயந்துவிண் ணுரைத்த
பாதியில் நிலையாநிற்கும்
சியம்பெரு மலக்கிரு பேர்கள்
செங்கையால் பிடித்ததின் கொம்பை
பயம்பிர இழுத்தகைப்படுவான்
தலத்தினி லிருத்துவாரே 505

இருத்திடி லிரவியுங் கடலில்
எழுந்திடு மதியுமப்படியே
நிரைத்துவிண் ணுலகத்தில் பாதி
நிலாவது மூலாவியே வருகு
மருத்துமே இருமலக்கிழுத்து
மதிமுகமிருகொம்பைப் பிடித்து
வருத்தியே படுவான் திசையில்
வாரியி லழுத்தியே பிடிப்பார் 506

பிடித்திட மதியைவிண்ணவரும்
பெருங்கதி ரெழுந்திடு மருந்துக்
கொடித்திறை யழகுட னொளிவுங்
குறைந்துடல் முழுதுமே கருத்து
துடித்திடும் நடைகளுங்குலைந்து
தூங்குவொட் டகங்கிணம் போல
படுத்திடும் படுவான் எழுந்து
பையவிண்ணோரியே வருமே 507

வருகையி லிருமலக்கவர்கள்
வந்திரு கொம்பையும்பிடித்து
ஒருநொடி தனில் வந்தவர்கள்
உளண்டிட படுவான் திசையில்
மருபடி நிலவுமே கருத்து
மங்கியே மயங்கியே தொடங்கித்
திருகியே படுவானெழுந்து
சென்றிடும் பாதிவிண் ணுலகை 508

விண்ணவர் மருபடி இழுப்பார்
வடிந்திடுங் கதிர் மருபடியுந்
தன்னையு மறுபடி யிழுப்பார்
தான்வரு நிலவுமப்படியே
இன்னவர் கதிரொடு மதியு
மெண்ணாஞ்சு நாளுமப்படியே
மன்னவன் மலக்குக ளிழுப்பார்
மங்கியே குறைந்திடும் நிரமே 509

நிரங்குறைந் திரவியும்மதியு
நீடிய மலக்குகளிழுக்க
சிறந்திடும் பைத்தல் முகத்திசுள்ள
இருந்த வனருமருண்டு
அருந்திரள் முஹம்மது இபுனி
அபுதுல்லா வருகவு மழுவார்
இருந்தவர் மனங்களையார்
இறையருள்ப்படியவர் வருவார் 510

(வேறு)

ஆதமின் முதலா யாகிருவயையில்
அகம்மது இரசூல் தவிரப்
பார்பதி புகழ்தல மனைவருக் குயர்ந்த
முஹம்மது யிபுனியபு துல்லாவும்
வேதமின் குலத்திசு லாமனபோர்க்கும்
வெத்திபுத் தருள்மதியுதவ
ஆதவனருளா லனைவருமகிழ
அச்சண மனைவர்க்கும் வருவார் 511

வருபவ ரிறைபுரமிருந்து
வருந்தியே அவர்களைத்தெளிக்க
அரியவ ரிருந்தவரொரு நூற்
றறுபது பேர்களும் வணங்கி
உருகியே அழுவா ருனரையும் னோக்கி
ஓதியே மதியுரைத்திடுவார்
பெரியவன் மூமீன்றனக்கவன் றுணையெனப்
பேசிய மறைநெறியறியோமோ 512

அறிந்திடு முலகமும் ஆகிறுமுடிவே
அனைத்தையு முதலே யறிவோமோ
மிருந்தினி யென்ன இனி மனுக்குலங்கள்
எழுந்துல காழ்வது மில்லையே
பிறந்திட மனுக்குலம் பெண்ணுரு விலையே
பொய்த்துனியாவது நிசமோ
இறந்தமுன் மனுக்குலத் ததிகமோ
னுமளிருக்கவு மினிமனம் வருமோ 513

பொருமையில் பெரிய பிதா நபியாதம்
புகழ்ச்சியில் பெரியவர் புலூக்கியா
அருமையில் பெரிய அவ்வாவுடன் பாத்துமா
அழகிலுமவர்கள் சுலேயுகாள்
உருமையில் பெரியவ ரிறை இபுசாஹிம்
ஒளிவினில் பெரியவ ரிறையவன் மூசா
தருமத்தில் பெரியவ ரீசுப்பு நபியுந்
தவாவினில்கோலத்தின் சுபுகா பெரியோர் 514

அருளினில் பெரியவர் கிலுருமில்லியாசும்
அதாலத்தில் பெரியவா துல்க்கரணி
சுருதியில் பெரிய அவுலா தூனெனவுஞ்
சூானில் அதாலத்தூன்
பொருளினில் பெரியவர் சுலையமா நபியும்
புவியினில் பிலத்தவ ரீசாநபியும்
உறுதியில்ப் பெரியவர் சாகிரு முல்கில்
ஒழுங்குள்ள வணக்கத்தில் அதியமய்யூபே 515

அறிவினில் பெரியவ ரிறையபு பக்கர்
ஆண்மையில் பெரியவர் அருசினில் புலியாம்
மறையினில் பெரியவ றிறையவ னுதுமான்
மார்க்கத்தில் பெரியவ ரிறையவனுமரு
உரைத்திடுங் கருமங்க ளனைத்துமே நிறைந்த
உடையவன் முஹம்மது நபிநயினாாம்
ஒருத்தரு மிருந்தா ரில்லையே னிலையா
யுலகினி லிருக்கவு மினிமனம் வருமோ 516

அறிவுக ளாய்ந்து குலைந்திவுலீசு
அடார்த்தினில் பெரியவ னம்றாது.
திரவியத்ததிக வேந்தன்சத் தாது
தீங்கினில் பெரியவன் பிரகூன்
உாத்திலும் பெலத்திலும் பெரியவன் தச்சால்
உகைத்தில் வூச்கல் பேச்சினில்திறவான்
கருவினில் பெரிய வகிலநில்க் காரூன்
கவருள்ள வருமத்தில் கொடியவனேசீதே 517

திரமையில் காமான் றெகிட்டினில் மருவான்
தீங்கினிபெரிய யாசூசுமாசூசு
புரித்திரளதிக கருமூசு சேனை
படைத்திரளதியுவர் செருக்கியர் சயிலர்
அருக்கிய யனைத்துமுன் மடிந்திடும் வகையால்
அத்திடுமிதுவொரு ஞெடிதனிலே
இருக்கவு முலகினி லினிமனம் வருமோ
இறக்கவு முலகினி லினிப்பயம் வருமோ 518

மனத்தொடு எழுந்து யிறைவனைப்புகழ்ந்து
முஹமது நபியையும் புகழ்ந்து
தனத்தொடு நிரைந்த தீன்குலமான
தனரையும் போற்றியே புகழ்ந்த
இனத்தொடு ஒருநூற் றறுபதுபேரு
மெழுந்திடு பீசபீலெனவு
மனத்தொடு ஒருநூற் றறுபதுபேரும்
மவுத்துக்கு துணிந்தெழுந்திடுவார் 519

எழுந்தவ ரிறைதனை தொழுதவர் போற்றி
இறை மருமறையும் வாழ்த்தி
அழிந்திடும் பெரியோர் ஆதமின் முதலாய்
அனைவர்க்கும் பாத்திகா ஓதி
மொழிந்திடு மதிபதி முஹம்மது இபுனி
அப்துல்லா பாதமும் போற்றி
தெளிந்தொரு மனதாய் மகிழ்ந்தன பெருந்தீன்தீன்
முஹம்பதென் றியம்புவாரே 520

எழுந்திடு மொருநூற் றறுபது ஒலியு
மெண்ணில்லாக் கடல்த்துரும்பதுபோ
தெளிந்தவர் நடக்கவுந் தளமென்னும் புரிசை
தீனவர்க்குதவியா யொதுங்க
நெளிந்திடும் பெருங்கடல் செருக்கியர் சயிலர்
நின்றிடும் பெருமலை யெனவே
தெளிந்தவ ரொருநூற் றறுபது வொலியுந்
திருக்கையா லிருகைமண் வாரி 521

வேறு

மண்ணெடுத் திருகைக்கொள்ள
மன்னர்பேர் நபிபேர்சொல்லி
எண்ணிலு மடங்காப்பெரியோ
ரனைவர்கள் பேருஞ்சொல்லி
பின்னையும் அல்கம் தோதி
பெரியவரனவரும் வீச
உன்னிய தீன்தீனென்று
ஒருமிக்க பீசபீலுகந்தார் 522

பொருத்திடில் செருக்கியர்சயிலர்
புவனங்க ளனைத்துமே னிறைந்தோர்
அதிரிடி யொலிகளும் பொருந்தார்
அனுப்பா காதவ ருடலம்
அதிபதி மனுக்குல மமைத்தோன்
ஆகிர்மனுக்குல முடிவாய்
இதம்பெருந் தீன்குல மியாவு மிறையருள்
சுவர்க்கமு ஆமீன் யாரப்பிலாலமீனுமீன் 523

ஏரினர் சுவர்க்கந்தீனோர்
இறையவ னருளினாலே
வாரியே எறிந்த மண்ணும்
வானமும் புவி னிறைந்து
வீரியா செருக்கியர் சயிலர்
விழியெல்லாம் நிறைந்திடப்புழுதி
வேறொரு பகைக்குலம் போல
அவரவர்க் கெதிர்பகைதோணும் 524

எதிரிய ளுருவாய்த்தோண
யாவரு மொருவருக்கொருவர்
அரிதிடும் பெரும்பகைக் குலம்போல்
அவர்களு மொருவருக்கொருவர்
சதிரிடப்பொருதிய தனருஞ்
சயிலருஞ் செருக்கியர் சேனை
பதிதனி லொன்றில்லாமல்ப்
படைப்பனைத்தும் மற்திறந்திடுமென்றே 525

அனைத்துள்ள படைப்புக ளெதுக்கும்
அடங்கிடா பெரும்படைக்குலமாஞ்
சினத்திடு மிறைமுனி வுடைய
செருக்கியர் சயிலர்கள்சேனை
இனத்தொடு குலங்கள்முற் றனைத்து
மிறந்திட முடியுங்கியாமம்
அனைத்துயி ரனுவில்லை யுலகில்
ஆலமும் பெரும்பிணக்குவியல் 526

(வேறு)

குமியலின் பிணத்தைக்காத்து
கொண்டுபோய்க் கடலில்சேர்க்க
இமையவர் இசுரா பீலும்
மிறைபரிமா னிருப்பவரைச்
சமைத்துள்ள தனைத்தும்மே பார்க்கச்
சடுதியி லூதிடுமெனவும்
அமைத்தவன் பரிமான்கண்ட
அக்ஷண மூதுவாரே 527

ஊதவு முதல் வலுமை
ஓங்கியே எழுந்த காற்றில்
ஆதியு முகத்தீசு பதியு
மதுவுடன் துரிசினுவும்
மதினமு மக்கமுன்னிருந்த
பதிபுக ழிதுநால்தலமும்
மிதுவகை நாலையு முந்த
எடுத்திடும் பூமியோட 528

பூமியை பாரையோட
பிடுங்கியே மதுக்கித்தூக்கி
இமையவர் அதனையேந்தி
இறையவன் றகிமத்துகடலில்
ஆமெனப் பதிகள்முன் னிருந்த
அதிகமு மஞ்சுபங்காகத்
தாமென்ற ரகீமத்துக்கடலில்த்
தரித்தது நிருத்துவாரே 529

வாரியின் ஜலத்தைபுண்ண
வானவ ரூதும் வாதம்
வீரிய மெழுந்தவானும்
வெடித்திட உலகமான
பாரியன் பதினெண்ணாயிர மால
மாலமும் நடுநடுங்கிக்
கூரிய மாலமொன்றுக்
கிருப்பது பூமியேழே 530

வழ்புவி யுகைமுற்று
மிருக்கின்ற மலைபுல்பூடும்
ஆளத்தி லடிப்புவி முதலா
யதுகளில் மத்தியத்தனைத்தும்
நாழிகை தரிகொள்ளாமல்
நானிலப்புவி பிணக்குவியல்
ஆளிய கடலில் சேர
அதிர்ந்திட ஆறுவாரே 531

ஊதிடும் ரெண்டாஞ் சூரில்
உலகங்க ளனைத்துமே னிரவி
னீதியின் பெருந்தகை வெளியாய்
நிதிபதி யணுவுமில்லாமல்
ஆதியின் வானொடு வெடித்து
அதிலுள்ள மீன்குலந்தெரித்து
ஓதிய மீன்களும் பொடிபட்டு
நெருங்கியே வொன்றில்லாதுலகத்தில்விழுமே

விழுந்திடு மீன்குலமனைத்தும்
வெண்ணில்லா கதிரொளி வீச
அளிந்த மீன் வலுப்பமொன்று
அகலமு மாறஞ்சுகாதம்
விழுந்தொன்று மேலே யொன்றாய்
வெடித்தது நொருங்கித் தூளாய்
பனிங்கியின் மாப்பொடிபோலே
பார்முத லெழுந்த மேருமே 533

மேலிருன்று மீன்குல மனைத்து
மேகத்தின் குலங்களுமனைத்து
பார்தனி பளிங்குமாக்குமியல்
படைத்தவ னிசுராபீலும்
சூறுமூன்றா துஞ்செய்தி
சொல்லவும் வலுப்பமில்லைக்
கூறிய தனைத்தும் ரகிமத்
தெனுங்கடல்சேர்த்துபோமே 534

சேர்வும் எமனைக்கூவிச்
செப்புவா னிறைபரிமான்
நேருள்ள மலக்கின் கூட்ட
மனைத்தையு மாகுவாங்க
ஏரிய நெருப்புவேங்கை
எதிரிட்ட விழியால் நோக்க
னீறுபட் டுருகி விண்ணோ
ரனைவருங் கடலில் சேர்வார் 535

சேரவு மிமையோர் முற்றுஞ்
சிரப்புள்ள மலக்குநாலும்
ஒருரு மலக்கின் காலம்
ஊனினுள் முடிவுஞ்சொல்ல
மாரியே மூவர்போக
மலக்கலின் மவுத்திருப்பார்
நீருமே வுயிர்பிரியு
மென்றிறை பரிமானப்போ 536

அப்பொழு திசுருபீலும்
அனந்தநாள் பாடுபட்டு
கைப்பினை உயிரைமாய்க்க
கையினாலேலாதென்பார்
எப்போதுமழிவில்லானே
என்னுயிர் பிரிப்பாயென்ன
நற்புட னுவால் பெரிய
நாயக னுயிர்பிரிப்பான் 537

உயிரொன்னு மிறைவகுத்த
தனத்தினு மொன்றில்லாமல்
பயிரிட வழிக்கவல்ல
பருபா னுதிநாயன்
பயிர்க்குல மனத்தளித்திடுவான்
படைத்தவன் வெகுதனப்பதியும்
மயிரணி பலதல மிருக்க
ஆதியுந் தனித்திருப்பானே 538

இருந்திடு மிறையனாதி
எண்ணில்லா வகுத்துள்ள தனைத்தும்
உரைந்திடும் பயிர்க்குல மனைத்து
மொன்றில்லா திறந்திடு மிறைவன்
வகுத்துள்ள பெரும்பதியனைத்தும்
வல்லவன் அனைத்திலும் நிறைந்து
உகந்தல ரொருவரில்லாமல்
ஒருவனே தனித்திருப்பானே 539

தனிப்பவ னிருப்பான் மற்ற
தலங்களு மழியா திருக்கும்
இனத்தொடு மிறைபதி குலங்கள்
யாவுமே அழிந்திடுமெனவும்
அனைத்தையு மமைத்தோன் தூதர்
அஹம்மதிரசூல்சொன்னார்
அனைத்துள்ள இமாங்கிதாப்புகள்
ஆலத்திலுரைத்த தன்றே 540

(வேறு)

அன்றுள்ள கிதாப்பு அக்குபார்
அறிந்ததை யுரைத்தார் ஆகிரு உசமாயியில்
கண்டிடு மமளியின் காரணக்கடலில்
ஹாலிலும் கவர்க்காசினியுரைத்தேன்
மண்டல முலகங்க ளனைத்துமே புகழும்
முஹம்மது நபிநயினாரும்
கண்டில்லா தினிவரு மாகிறு அமளி
கியாமமு முடியுமென்றுரைத்தார் 541

ஆமீன் யாரப்பிலாலமீன்.

ஆகப் பாடற்றொகை 541.

1, 2, 3 படலங்களுஞ்சேர்ந்து பாடற்றொகை 1706.

# நான்காவது படலம்.

## இரண்டாம் பாகம்.

---

### கடப்புகள் காரணம் கியாமத்து வழமை மஹ்ஷர் பவனியுஞ்சொல்கிறோம்.

---

உரைத்த வாசக முஹம்மதிரசூலுல்லா
ஓர்மைகொண் டரசரும் குழுவும்
பொருத்துமுன் மனக்குபி ரனைத்தையுமகற்றி
புகழ்மறை பாலூரப்புகட்டி
திருத்தும் வாசகம் பலகலையறிந்து
தீனவர் நடபடி நடந்து
கருத்தினி லாமினார் மகன்தனைப் போற்றி
காவல ரிருக்குமன்னாளில் 1

நாளெல்லாம் புகழ்ச்சியோங்கு
முஹம்மதிரசூலுல்மலரை நோக்கி
காளையா அரசுமற்ற
காவலன் சேனைமுற்றும்
ஆளிரு முலகுதீனோர்
அசுகாபின் யார்கள்முற்றும்
தாழ்ந்தடி பணிந்தெழுந்து நின்று
சாற்றுவார் நபிபதம் போற்றி 2

போற்றியே முஹம்மதர் பொன்னணி மலரைப்
புரவல னரசனுங்குழுவும்
யெற்றிசை புகளுமக்கா நபியே
இறை திருதூதருக்கரசே
வெற்றியும்விருது நிறைந்திடுங்கோவை
வினவுதலினமொருவிஷளம்
உற்றவர் கேட்க முஹம்மதிரசூ லுல்லா
ஓதுமென் றுரைத்திட்டாரே 3

திட்டமாந் திருநெறிநீதர்
முஹம்மது நபியே மெய்தான்
மட்டில்லா வேதமோதி
மனுவர சனர்கரி வுரைத்தீர்
வட்ட வானங்கவிகை வள்ளல்
முஹம்மது நபியே பின்னம்
மட்டுடன் பிறந்திருந்தார்
மறுபிறப் புலகி லுண்டோ 4

உண்டென்று உரைப்போரெல்லாம்
ஊழிநாள் நரகில்தாழ்வார்
விண்டுவிண்டிறந்து பின்னும்
வேலையில் பிறப்போமாகில்
என்றைக்கு மிருப்பதாகு
மிறையவனேதுகண்டாய்
பிண்டத்துக் குயிரில்லாமல்ப்
போனதைப் பொருந்துவானோ 5

போனதைப் பொருந்திமிக்கப்
புதுமையும் வலுமையுள்ளான்
தானதா முயிர்முளைக்க
தன்மையால் யேலாதானோ
பூனையை யானையாக்கப்
புலிநரி நரிபரியாக
மானிலத் துயிரைமாற்ற
மன்னவன் திலுசுமாத்தோ 6

மாற்றியே உருவெடுத்த
மனுமற் றெவையுமாகில்
ஏத்தியி னுயிர்கள் மூன்று
மெவ்வித முளைத்தவாறு
ஆத்துமத் துயிர்வகுத்தான்
செத்துப்போ யிருந்தாராவி
மாத்தியே உருவிலெற்ற
மன்னவன் மங்கையாளோ 7

மங்கைபா லுடல்செல்லாது
மதலையும் வயத்தோராது
உங்கு நெய் பால்புகாது
உருந்திலை மாத்திலாமோ
திண்டிறந்தது விளையார்
தீயில் வெந்துருவாகாது
கங்குல்வான் மழை யெழுது
கடல்முத்துஞ் சலமாகாதங்கே 8

தங்கிய ஜலத்தினாலே
தாணிமுற்றனைத்தும் பூண்டாம்
இங்குள்ள விருக்ஷம்பூண்டு
இனிஜலமாவதில்லை
எங்கினு முதுமையாவும்
இளமையில் வருவதில்லை
எங்கினுமிறை படைப்புக்
கினியொருபடைப்புமில்லை 9

## எழுபிறப்பு அறியும் விபரம்.

---

பிறப்பொரு ஏழுமுண்டும்
பொய்யில்லா துரைக்கக்கேளும்
சிறப்புட னொருவொழிவில்
இருந்துமுன் பிறந்ததொன்று
நிறப்பிய ரூபத்தன்னம்
நிறம்பிய ஒழிவழிந்து
மறைபெரும் ரஹிமத்தென்னும்
மன்னவன் கடலிலாச்சே 10

கடலுடன் சேர்ந்திருந்த
காரணப் பிறவிரெண்டாம்
அடங்கிய உயிரொளிவும்
கருங்கடல் நீருமொன்றாய்
துடங்கிமங் குலங்களுண்டு
சூலது மாதமூன்றும்
மடங்கலும்பொழியு மேகம்
மழையொரு பிறவிமூன்றே 11

மழை யொரு பிறவிமூன்று
மழையுட னிடியுமின்னல்
வளம்பெர குமுரிமேகம்
வையகத்துயிரை யீன்று
கழும்பெற மழைநீரோடே
கியாத்தொழி கலந்ததாலே
தளம்பிடா துலகு முற்றும்
தானிய மனைத்துமாச்சே 12

தானியமா வுயிர்கள்
தாணியெல்லாம் நிறைந்து
பூணிய விளைந்துயிர்கள்
விருந்ததும் பிறவிநாலாம்
ஊணினால் தாயுந்தந்தை
உடலதி லுதிரம் விந்தாய்
ஆணிய பிறவியஞ்சா
மமைந்தது தாய் வயிற்றில் 13

வயிற்றினி லுறப்பொருத்தி
வளர்ந்தது பிறவியஞ்சு
செகத்துயி ரனைத்துமொன்றாய்
சேர்ந்துறப் பிறந்துடலாவி
உகப்புடன் பிறவி ஆறில்
உலகத்தை யாண்டிறந்து
துகைப்பெறு கியாமமீதில்
பிறப்பது பிறவியேழே 14

பிறவி தானேழிலப்போ
புதுமையானுருவம் வேறாய்
அறிவுரு பாவனம்மைக்
கருதியோ ருருவமாகும்
உருவுடன் மஹஷர்மீதில்
பிறப்பது நிசமேயாகும்
உருவழிந் துலகுதன்னில்
ஒருவரும்பிறப்பதில்லை 15

பிறப்பது கியாமமீதி
லிறப்பது வுகைமீதில்
பிறப்பிறப் பிதுதான் ரெண்டும்
பொய்யில்லை நிசமேயாகும்
இருப்பது பெய்யேயாகு
மிறப்பது நிசமேயாகும்
இறக்குமுன் பிறக்கும் வாறே
யாவரு மறியச்சொல்வேன் 16

சொல்லுமேவன் பொருளறிய
சுருதியி னிலையறிய
எல்லையில் தீன்விளங்க
யாவருமிசுலாமாக
சொல்லுமேவன் மனுவரிய
ரகசியக்கடவு தன்னை
சொல்லுமேவ னணுக்கணுவாய்
சுளிகொண்ட நாதவிந்தே 17

விந்துமுன் னிருந்தவாரும்
விடம் விட்டு எழுந்தவாறும்
அந்தவிந் தாடும்வாறும்
அதிலஞ்சு குலத்தின்வாறும்
விந்துருப் பொருந்தும்வாறும்
வெடித்துரு எற்கும் வாரும்
இந்தவா றனைத்துங்காத்து
எடுத்துட லுடைத்ததுக்கொடுத்திடவே 18

(வேறு)

குடுக்கைக்குளிட்ட ஜலங்குளனூதக்
கொடுங்காற்று குமரியுள்ளே ஜலமெழுந்து
குடுக்கைநீர் காத்தூணிக் குமுறித்தூக்கிக்
குமிளிகொண்டு குழல்வெளியே துள்ளுமாப்போல்
எடுத்தமெதன்ன ஜலத்தையுள்ளே காத்துக்கொண்டு
இருக்கமட்டும் குமிளிஜல முடையதாடும்
எடுத்தகாற் றுடைந்தோடில் குமிளிபோச்சு
இறப்பதுதான் குமிளியந்த ஜலத்திலாமே 19

ஆமான விந்தணலு முருகியொன்றாய்
அண்டத்தில் னின்றாடு மீதாம்போலே
காமனின்ற காத்தானச கொண்டுதூக்கி
கலந்துள்ளே குமிளி கொண்டு கருவில்பாயும்
தாமான தலத்துடைய நலத்தினாலே
தாயுதிரஞ்சேர்ந்தல்லோ தனம்போலாகும்
நாமான விந்தாதி யனலுஞ்சூடும்
நடுக்கொண்ட காற்றாயிருங் குமுளியாச்சே 20

ஆச்சரிய ஹூவல்லவோ குமுளிகொண்டு
ஆடுமந்தக் குமிளிடல்லா வேசத்தாலே
மிச்சமா எழுந்த புகை காற்று தூக்கி
மேலந்த காற்றுடைய சுளுமைமேரால்
அச்சணமே மூன்றொன்றாய் யுதிரஞ்சேர்ந்து
அங்கமுரு அதுதானே மண்ணுயாகும்
நிச்சயமா இதுநாலு மொன்றாய் நிற்கும்
நிலைவென்ற அக்கினியால் பிரியும்வேறே 21

வெவ்வேறே பிரியுமந்த விதமேதென்றால்
விருத்தமா யிதுநாலுங் கீழிறங்கி
அவ்வாறு தாரடியுந் தீமூலம்
மடிவயரே ஜலம்மல்லே மகனும்பாதம்
ஒவ்வாத தலமில்லா தந்திரத்தில்
ஓடிவட்ட மாடிநின்று உடைந்துபோகும்
வெவ்வேறே இதுநாலும் புரியலாகி
வீடான தந்தந்த யிடத்தில்ச் சேரும் 22

இடமென்ன பிருதிவியைக் காற்று தூக்கி
இட்டமுடல் வீடாலே பேச்சுமாச்சு
திடமாக ஜலத்தையுமே காற்றுதூக்கித்
தினியாண்டாம்வீடாலே பார்வையாகும்
நடனமா வக்கினியைக் காற்றுத் தூக்கி
நடுவீட்டிலிட்டவுடன் கேள்வியாகும்
இடவலமா யறுகோணம் வாசியோடி
இளையாம லோடுகின்ற மூச்சுமாமே 23

# ஆதிமுச்சுடர் விபரம்.

மூச்சாலே பார்வையுடன் கேள்வி பேச்சு
மூச்சில்லா திதுநாலும் எழும்பிடாது
மூச்சல்லோ அக்கினியை தூக்கிநிற்கும்
மூச்சணலு முதிரத்கா லுருவுமாச்சு
மூச்சாலே மந்திரமே குழுளியாச்சு
மூச்சோடில் குமுளி யுடையலாச்சு
மூச்சதால்க் குமுளியத்து மரணமாச்சு
முச்சுடரு மெவ்வகையு மகன்றுபோமே. 24

அக்ண்ட வெளிக்குள்ளடங்கு மக்கினியு
மதுதானே நினைவுவகை காற்றுமாச்சு
அகண்டத்தி லிதுமூன்று மடங்கும்பேச்சு
அரப்புதிரம் உப்புநீரம் உப்பில்சேரும்
மகிண்டவுட னுப்புநீரற்றபோது
மனற்தனிலே மடிந்திறந்து மண்ணாய்ப்போகும்
அகண்டவெளி நின்றுவுருக் கொண்டஜோதி
ஆதியென்ற முச்சுடரே அருளக்கேளே. 25

முச்சுடரை யறியாத மூடர்க்கெல்லா
முறை கோடி சொன்னாலும் புரியாதொன்றும்
முச்சுடரை யறிந்தகுரு பெரியோரெல்லா
முறைக்குமுன்னே அத்தனையு மறிந்துகொள்வார்
முச்சுடர்தான் முன்னதும் பின்னுமாகும்
இதனிடையி லுள்ளதெல்லாம் அதுக்குள்ளாகும்
முச்சுடர்தா னென்னமுதல் கடையுமென்ன
முச்சுடர்க்காதியென்ன அனாதியாமே. 26

அனாதி யென்னு மாகாச மகண்டமாகும்
அணுவில்லாப் பெருவெளியா மிருளுமாகும்
கோதில்லா திருள்வெளியேகுமரியோங்கிக்
குரித்தூணிச் சுளிமுனையா விந்து முத்தாய்
ஆதியென்ற ஆதிமுத்து விந்துசுளி அலிபா நின்ற
ஞாதியிலே ஆதிமுத்து ஒளிவுமாச்சு
கீதமாக் கமரிமுத்து ஓசைகொண்டு
கிருபையா லத்தினையுஞ் சூடுண்டாச்சே 27

# அங்கமு மச்சுடர் விபரம்

சூடெழுந்த முத்தில் நின்று சென்னிமேருடி
சுற்றிலுமே பவளவர்ணம் சோதியாச்சு
கூடிரெண்டும் பொங்கியிலோ குமரியோங்கி
கொதிபிட்ட புகையல்லோ பச்சையாச்சு
பாடியதோர் பச்சையாதம் வேதமாச்சு
படைப்பெல்லாம் பச்சையினு லமைக்கலாச்சு
ஆடியதோ ரனாதியிலே ஆதியாகி
அதில்சோதி வெத ஆதநு சுடர்மூன்றுச்சே 28

முச்சுடர்தான் யாதென்றால் நன்றாய்க்கேளு
முன்னை பெருவளியே யனாதியாகும்
அச்சுடரில் முத்தொழிவு ஆதியாச்சு
அதில் பவளஞ் சோதியென்ற அஹம்மதாச்சு
அச்சுடரே பச்சையாதம் வேதமாச்சு
அமைத்தவகை முந்துமிந்த சுடர்மூன்றுச்சு
நிச்சயமா யண்டமா யப்பிண்டத்துள்ளே
மேயான முச்சுடரே நிசமாய்க்கேளே 29

நிச்சயமா முச்சுடரை நிசமாய்ச்சொன்னேன்
நிசமாக யெவ்வகையு மிதுதானாகும்
அச்சமில்லா துருவமுட னுருவுங்கூடி
அவருடலி லவர்தா னாகும் வாரு
மிச்சமுள்ள யெவ்வகைக்கு முதிரஞ்சோதி
மேலான சோதிவிந்து கீதம்பாடி
பச்சமுடன் றன்னைத்தான் தனுதும்போது
பாய்ந்துபார் அந்த இருளறையில்தானே 30

அந்தக்கரு குளியிருளே அனாதியாகு
மதில் விந்து முத்தொளிவே யாதியாகும்
அந்தவிந்தைச் சுற்றிநின்ற உதிரஞ்சோதி
அதுதானே பவளநிறம் மஹம்மதாச்சு
இந்தவகை ரெண்டுமொன்றாய்க் கூடிமேவி
யெழுந்த புகை பஞ்ச அஞ்சு யெழுதும்வேதம்
விந்தைசெரி வேதமஞ்சு மாதமாகும்
வெவ்வேறே முச்சுடரின் விபரங்கேளே 31

## ஏழுருகுடைய விபரம்

வேறு

கேள் கெர்ப்ப குளியிருள்குள் வெளியனாதி
ஆகாச மதிலாதி விந்து
வெள்ளை ஒளிவுமது நக்கத்தலிபு னினவுருடு
உருவில்லா தருள்தாத்து
அலிபுந் ஆகுமழியாத நூதுவட்டம் ரூகுநூறு
ஆசையன்பத்தோமெழுத்தும் பிதாவுமாகும்
ஒளியாத ரூப்பகலா வுருக்கங்கிருபை
ஹறூவல்லாவென்ற பொருள் குத்துசிதானே 32

ஆனவிந்தை சுற்றிநின்ற உதிரம் தாயாம்
அதுசெசட்பு ஒங்கார ஒழிவுவட்டம்
உன்னறிவும் புத்தியுடன் கோபம்பொருமை நன்மை
உருவமுடல் இடம் நீளம் சிரிப்பழுகை
தானமத்தின் தனஞ்செயனும் நிரமழகு
தாய்குலமே சிற்றுதும்மல் சீபத்தாகும்
மனதுமதி மகிழ்ச்சியுடன் மானமென்ற
மவுத்து அது முஹம்மதென்று சுபுலியாமே 33

ஆனவிந்தைச் சேர்ந்ததிரம் சேர்ந்தொன்றுமேல
அக்கினியும் புகையல்லோ காற்றுப்பச்சை
தனிச்சலத்தில் வெள்ளை மண்ணால் உடல்தசையில்
தங்கியே நாள் பொருமை பொய்யும்
வடிவு வல்மை ஊணுாக்கம்
நன்மை தின்மை
பார்வை கேள்வி உரைப்பேச்சு
மூச்சு தம் யிதுதான் வுலாவி 34

இதுதானே மண்ணுதம் உலகு பெருகுது
இதுக்குள்ளே நாலுவகை ரூகு
கேளு மதில் நெருப்பு ஆங்காரங்கோபம்
கேள்வியதில் முளிப்புமினுக்கொடுமை நஹிமாவாரு
விதிப்பலனே நாமியா மூச்சு தாத்து
வீணைசை நாபியா தண்ணீர் பார்வை
அதுநசனு முருச்கமதில் நாத்திகாமண்
அன்னவகை பலவுருசை பசிபேச்சாமே 35

ஆமான குத்தூசி யுடன்சுபுலி
தானுமது ரென்டுபின்னுமேல ஒன்றேயாகும்
நாமியா நாத்திஹா நாபியாவும்
நஹிமாவும் உலவியுடன் பாதமாகும்
ஆமான இதுநாலு உடலெடுத்து
அழிந்தெழுந்து யென்றளவும் பிரியாதாகும்
கோமான நன்மை தின்மை உற்றுப்பெத்துக்
குலமான நாலுமொன்றாய் ரூகானியாம் 36

# ஏழு ரூகுடைய மக்காம்

ரூகாணி யானதொரு நாலுரூகும்
உலவியுடன் குலமாயுள்ளடங்கும் ஆதம்
பொத்துடல் மிதுதானாகும் மங்கமெங்கை
அனைதுமிடத்தே தரிப்பதாகும்
சாகுமுரு செத்துடலை யெடுப்பதாகும்
சடமெடுத்து யிதுநாலும் பொருந்தலாகும்
உகையமா நன்மைதின்மை யிதுக்கேயாகும்
உடலாதம் உலவியென்ற ரூகுதானே 37

தானான உடலாதம் உலவி ரூகு
தாயாகும் மதினுடைய கீதநட்கெழைதா நாலும்
யின்னவகை உடலாட்ட மிதுதாலாகும்
இன்பதுன்டஞ் செப்தமெல்லா மிதுதானாகும்
மண்ணூடே மண்ணோடே மடிந்துபோகும்
மடிந்திவிடத்தே யிதுநாலுமிருப்பதாகும்
அன்னிடத்தே நன்மைதின்மை பலனுக்காக
அங்கமெங்கே அத்திடத்தே யிருப்பதாமே 38

இருந்திடத்தே நன்மைதின்மை பலதேயாகும்
இனிமேலு முருவெடுத்தால் யிருப்பதாகும்
எரிகதிரின் மஹ்ஷரிலே இதுதானிற்கும்
எவ்வகைபு மீண்டதுன்ப மிதுக்கேயாகும்
இருந்தமுதல் இறைவிடாதிவு குத்தூசிராணும்
இதமான சப்லீடுமே ஒன்றாய்க்கூடி
பிரிந்துபின்பு இனிவருகா உடலுக்குள்ளே
பிரியார்க்கு விபரம் நன்றாய் உரைக்கிறேனே 39

உரைத்திடும் விஷலமேதால்
உலகுள்ள வுயிர்களியாவும்
தாத்தில்வாழ்ந் திருக்கும் நாளில்
அனத்துடல் யேழுருகில்
ஒருத்தரு மறியாமேவந்தன்
உடையவன் குத்துசிருசா
உரைத்திடுஞ் சுபிலி ருகு
ஒசிரென்னும் முஹம்மதாமே 40
முஹம்மதே ஒசீரும் ருகும்
மண்ணுடல் ஆத்மமேதால்
செகத்தல முடலாங்கோட்டை
சிங்காசனம் உல்பி ருகு
உகமையில் லாதகோட்டை
ஒசிருட னரசுமாச்சு
பகுமையில் நன்மை தின்மை
பயிர்செய்யும் குடிகள்நாலும்
மிகையுடன் பெருமைமுற்று
மனைத்துநால்ருகுக்காமே 41

(வேறு)

நாலுருகு குலத்தின்
நாமமும் உரைத்தேன் முன்னால்
நாலதில் நாமியாவும்
ஏலவே நஹிமா நாலும்
ஏவலின் குடிகள் நாலு
மேலுள்ள யேழுருகும்
உடலுக்குள் ளிருக்கும்நாளில் ஆலமும்
அமைத்த வல்லோன் ஆதியுமுடிவுஞ்சொல்வேன் 42

வேறு.

முன்னவன் வகையஞ்சும் பொருந்திய துருவா
மூளைத்துயிர் குலங்களுக்கெல்லாம்
தானையே தொருவ ரிந்திடாதிறையால்
தானேதானிரைந்திடும் விதங்கள்
உன்னைய மகியால் உன்னவல முதிர
முவந்தவ மாசையு மிணைக்கம்
பின்னையும் தாகத்தால் குடியும் நீரிக்கம்
பேதகம் உரக்கமிறுமே 43

பத்தொடு ரெண்டுமுள்ள பார்பல வுயிரும்
பாசையும் பயமரி நினைவும்
புத்தியு மூச்சுடன் பார்வையுங் கேள்வியும்
போசனம் பொருத்துத விடமறிகோபம்
இத்தொடு பனிரெண்டும் இருபத்தி நாலுள்ள
எவ்வுயி ரிறைவகுத்தனதும்
மெத்தவும் பெரிய மவுத்தெனும் வருத்தம்
எவ்வகை யனைத்துந்தானே 44

# மவுத்தாகிற விபரம்

தாமொரு வுருவில்லாமல்
அந்திர மகண்ட ஜோதி
கானலும் வாய்வு நீரும்
கலந்துமண் ணுருவாய் ஐந்தும்
ஊமொருடு எலும்புந்தோலு
உதிரமூந் தசையுமற்றும்
பூணிய தனத்துமொன்றாய்
புகட்டிய நாதவிந்தே 45

விந்துட னுதமொன்றாய்
விளைந்திடுங் கருவுருவாய்
உந்தியில் கெர்ப்பமாகி
ஊணவே சுளியா நின்ற
அந்தநாளுடனே கூட
அவதரித்திடுமவுத்து
தந்தனுமுடலுக்குள்ளே
அனேகநாள் துலையாய்க்காணும் 46

துலைநெடுந் தூரமான
துகையடங்காமவுத்து
நிலையல்லா தனத்தும் நில்லா
தழிந்திடும் நிசமுந்தன்னில்
வலைபடு மானைப்போல
மவுத்தினி லுயிர்மயக்கும்
நிலையுள்ள மவுத்துக்கஞ்சி
நிலத்தினில் வணங்கவேண்டும் 47

வணக்கமும் நெறிபுகழும்
வையகத்துயிர்கட்கெல்லாம்
கணக்கென்னும் மொழியருதி
கண்டிடும் பலகைநாமம்
பிணக்கமு மழிய வானோர்
யேமனுக் கெதிராமேலே
துணைப்புரத் தலைகீழ் நிற்கும்
துவாவெனும் விருக்ஷந்தானே 48

விருக்ஷமி லிலைவரியா
விழுமவர் மடியிலப்போ
தரித்திடம்தங்குலமும்
தரம் வயதுடையாள் மூச்சும்
பரிச்சிட விடுமின்னார் யின்றூன்
பாலன் இன்றெனன்று
அரைச்சணம் பிசகுமுன்னே
அவர்விழி அவனை பார்க்கும் 49

பார்க்கவுங் கணக்கோரப்போ
பட்டோலையு முடிந்துபின்னுள்
கார்க்கவும் நன்மை தின்மை
கண்டக்த விளியாலூணி
நோக்கவும் நினைவும் பார்வை
நொடியினில் பலதுருவாய்
ஆர்க்கமா எம தூதர்
என்று மழைப்பது முயிரைத்தானே 50

# ரூகை அறிகிறது.

உயிர்பிடித்திடும் வளமை
உலகினி லவர்செயலை
மயிரொதுங்காக் கணக்கை
மதித்திடும் கடியடென்ன
ஆயிர் வாள் விதியால்கண்டு
அதுக்கணி முகத்தின் பார்வை
பயிரழித் திடுகவல்லோன்
பார்வைவந் திரங்குமன்றே 51

இறங்கவு முலகமெல்லாம்
இவன்விழிக்கிருண்டே போகும்
மறந்திடு முலகமெல்லாம்
மருகுல மிவன்விழிக்குத்
துறந்தவன் பார்வை முன்னே
தோன்றுவா ரிசுருயீலும்
இறந்திட இமையோர் தூதர்
இவன்விழிக் கெதிர்வருவார் 52

வருவதின் விதத்தைக்கேளும்
வையகநன்மை தின்மை
பெரியவன் கொடியானென்று
பேதக விழியேகண்டு
உரியவர் பலவிதமா
உகந்தவ ரழைக்கும்போது
அரிகிய வுடலைவிட்டு
ஆவியு மெழுந்துபோமே. 53

எழுந்திடு மாவியேதால்
எவ்வுயிரமைக்க வல்லோன்
ஒழிவென்னுங் கதிர்மதியால்
ஒக்குஞ்சூ டியிருமற்றும்
அழிவில்லா ஊன்உதிர
மங்கமு மெடுத்திருந்த
தெளிவுள்ள நினைவுஞ் சூடு
மூச்சுமே எழுந்துபோமே 54

எழுந்திடு மிதுதான் மூன்று
மிறையவன் குத்தூசியாகும்
எழுந்திடுங் குதுசியோடே
சுபுஸியுஞ்சேர்ந்தே போகும்
ஒழிந்திடும் ரூகும்
உடலென்னு மூலவிக்குள்ளே
அளிந்திடா குத்தூசிதானே
ஆவியா யெழுந்துபோமே 55

எழுந்திடு மாவிதன்னை
ஏந்தியே பிடித்த தூதர்
வழர்ந்துவிண் பதியில்போக
வழியில்மூன் றிடத்தில்நின்று
தெழிந்திடு மிறையின் பேரும்
திருமறை நபியின்பேரும்
விழைந்திடுங் கேள்விக்கெல்லாம்
வெத்தியுத் தடந்தாணுகில் 56

நாவெல்லா முடலையாண்ட
நாயகன் குத்தூசி ரூகு
ஏலவே நடுநடுங்கி
யெமையவர் காவல்பட்டு
சாலையில் கேள்வியுற்று
வெற்றியும் விருதுபெற்றால்
ஆலமி லுயிர்பிடிப்பான்
அடர்தண லெரியும் மேனி. 57

அடர்ந்தணலெரியு மேனி
ஆதியி விசுருயில்தன்
இடந்தனில் விடுவாரப்போ
எவரின இவரைத்தேரி
சடமதில் மதித்த பாலன்
அனைத்துமே இசுருயில்தன்
இடமதி விருக்கும் நாளை
எரிகதிர் மஹ்சரிடத்தே 58

# நாலுருகை அறிகிறமூலமாகியஸ்தலம்

சடத்தினில் தகப்பன் தாயின்
தாகத்துக்கமுதளிக்கும்
திடங்கொள்ளும் வயசுபத்து
பாளையி விறந்தகாளை
இடங்களில் நபிஇபுராகீ
மவருட னிவரைச்சேர்த்து
சடங்களில் தகப்பன் தாயின்
தாகத்துக் களிப்பதாமே 59

அழிபடா காளைபத் தாண்டது வரைக்கும்
ஆறிளை இறந்தவர் சுவர்க்கம்
தெளிவுரு மடவா ருடன்குலமாரும்
தீர்த்தமும் தாய்தமர் களிப்பார்
ஒழிவுள்ள சாராயிடத்தினி லிருப்பார்
உலாவெனும் ஒருகனிச்சோலை
வழியினில் ஞவுக ளொடுங்கிய பெயரை
வருத்துஞ்சிச்சீனிலே யிருத்தி 60

அளிப்பது பாவியே கொடுங்குபிர்க்குலத்தை
அது குபிர் ஜின்பரி தேவை
தெளிவுள்ள பெரியோ ரிருப்பிடம் இல்லின்
இடை இருபில் யிலாஹீ
தெளிவுள்ள குபிரும் இலாஹியின் குலர்க்கு
எப்போதும் நடுத்தரம் பதவி
மொழிவனுப் பெரியோர் எங்கிலுமிருப்பா
ரனைவர்க்கு மிமையவர் காவல் 61

காவலி லிருப்பாரந்த
கியாமத்து நாள்வரைக்கும்
ஏவலின் குலங்கள் முன்னாள்
செய்பவன் செயல்பொருந்தி
மேவியே கியாமமட்டு
மிருந்திடு மந்தரூகு
பூவுல காண்டரூகு
மூலவியு மாதமண்ணே 62

மண்ணுட லெடுத்துமாண்டு
மையத்தாக்கிடக்குமந்த
மண்ணுட லமையத்துள்ளே
மதித்திடும் நாஹுரூகும்
நிண்ணய முரைக்கக்கேளும்
நினைவென்னும் குத்துசி போகில்
எண்ணுமே உடல்கள் முற்றும்
இருந்திடும்உயிர்கண்ணாலே 63

நாஹுரூ குடல்மூலத்தி
லொன்றுபட் டொதுங்கி நிற்கும்
ஏலமேவ னுஹுரூகும்
எப்போது மிருக்குமூலம்
ஆலமில் மூலமென்பா
ரனைவரு முலகினுள்ளோர்
கோலமா மூலமென்ற
குகையுட நிசத்தைச்சொல்வேன் 64

சொல்பிறந் திடுமிடமா
யிருவிழி நடுநிலையாம்
அல்லிராப் பகலுமற்றும்
ஆடிடும் நடனவீதி
வல்லமை பேச்சு மூச்சு
பார்வையுங் கேள்வியொன்றாய்
அல்லது மெழுந்தடங்கும்
அடிமுடி சுழிமுனை முடிச்சே 65

இடமது சிரசுமூளை
யிருத்திய அடிக்குகையாம்
இடம்வலம் நடுநிதானம்
எழும்பிய முதல்மணியாம்
நடனமா யிருவிழிக்கும்
நடுநிலை யதுதான் மூலம்
ஒடுங்கு ஓங்காரவட்டம்
உள்ளரை மூலந்தானே 66

ஆகிய குகைமணி மூலம்
அந்திய மாகநின்றடும்
ஓகிய நாலு ரூகும்
ஒன்றுபட் டொடுங்கு முள்ளே
ஆகமில்ச் சூடெழுந்த
அச்சணம் உதிரம் நீரதாகி
ரூகுசுபுலி தண்ணியா
ஒழுகிப்போமே 67

தண்ணியு மண்ணேடாகி
தானவன் கடலில் சேர்ந்து
பின்னையு முஹம்மதான
ஒளிவுடன் சேர்ந்துபோகும்
உண்ணுட லெடுத்தநாளும்
ஒன்றுபட் டிருக்கும் நாளில்
மண்ணுட லழிந்தாலந்த
இடத்தினில் தரித்துநிற்கும் 68

தரித்திடு மிடத்தை முன்னாள்த்
தன்செயல் பலனுக்கென்ன
கருத்துள்ள ஒலியாத்தோனும்
காரணம் பலதுங்காணும்
வருத்தமும் ஷய்த்தான்
மழிவகை யிதுநாலாலாகும்
தரித்தமுன் யில்லீன் சிச்சீன்
அதகுலமிதுபதவி 69

## நாலு பதவியின் விபரம்

பதவியில் பெரிதென்றாலும்
பாவியின் குலமென்றாலும்
இதம்பெரும் நாலுரூகும்
இதுக்குப்பேர் ரூகாணியாம்
அதிசயம் பெருமை பொங்கும்
அமழியும் கொடுமையாகும்
இதமுரு விதமாயிந்த
விதத்திலும் பதவிநாலே 70

பதவியில் முதலது பருவுட லெனும்பும்
பாழ்பட புவிபருகிடுமாம்
உதிரமும் தசையு மருந்திடும் புவியும்
முடலெலும் புருக்குலையாது
பதவினி லிறந்தோர் மஹா ஷருவவைக்கும்
பருவமுமுதிரமும் ரோமமுங்குரையார்
இதம்புர மடிந்தவ ரோடுயிர்
கொழுகியெத்திசையுல கெங்குமிருப்பார் 71

இருப்பவர் பதவி நாலி
　　லெத்திசை யெழுந்தவர் நாளே
தரிபடும் கியாமமட்டும்
　　இப்படி யிருப்பதாகும்
வரிப்படும் பதவிமூன்றும்
　　வல்லவன் மகுஷரு வரைக்கும்
இருப்பிட மங்குமிங்கும்
　　இமையவர் காவல்தானே 72

காவலிலிருக்கும் நாளில்
　　கியாமமுமுடிந்துபோனால்
காவலு மழிந்து கட்டுக்
　　குலைந்துபோய்க் கலந்தொன்றாகும்
ஆவலி லிறை வகுத்த
　　அனைத்துயி ரணுவில்லாமல்
ஏவலுக்கொருவ ரில்லா
　　இறையவன் தனித்திருப்பான் 73

# ஆதியுமந்தமும் ஒன்றாய்ப் போகிற விபரம்.

தனித்தவ னிருக்கும்நாளில்
　　தானேதான் நினைவுபொங்கி
இனத்துடன் குலமாமுற்றும்
　　யாவையு மமைத்தேனென்றால்
இணையில்லா தவனனின்று
　　யாவரும் வணங்கவைத்தேன்
அனையவ ரெனைவணங்கும்
　　அடாத்தெல்லாம் நினைப்பா னப்போ 74

நினைத்தவன் கோபத்தாலே
நெருப்புமின் னிடியெதிரா
கனைத்திடுங் குருசருசு
கதிர்மதி தருத்துவானம்
சினத்திடு நரகுசொர்க்கம்
யிச்ராபுடன் யில்லீன் சிச்சீன்
தனந்திரள் புவிபுரத்தாளந்த
தருத்திரா முதல்நடுங்கும் 75

நடுங்கிய தலத்தின் முன்னாள்
நாட்டிய கலிமாமுற்றும்
அடங்கலுந் தெரித்தெழுந்து
அவன்பாத் தாகுணமந்
திடங்கெட வனைத்துமொன்றாய்
திரண்டது உருண்டலைந்து
அடங்கலும் ரஹிமத்தென்ற
அக்கடல் சேர்ந்துபோமே 76

சேர்ந்திடுங் கடல்நீராலே
அனைத்துமுன் னெழுப்பிவல்லோன்
எங்கெந்த நிலையில் நிற்க
இறையவ னிருத்திவைத்தான்
அந்தநாள் மரணவேங்கை
அதட்டில் துலைந்துலைந்து
சிந்திடா தொன்றேயொன்று
சிமக்கவும் வகுத்ததாமே 77

ஆகிய படைப்பனைத்தும்
அலைந்துகெட் டுலைந்துநிற்கும்
தாமென்ற நிலைநிதானம்
பிசகிடா தனைத்தும் நிற்கும்
என்றவன் கிருபைக்கண்ணால்
உருக்கவு மெழுத்துரெண்டும்
னேமமிக் கலிமா யெங்கும்
எழுத்துண்டாம்தலத்தைச்சொல்வேன் 78

எழுதிய தகுத்தொடு குருசரு
செழுவான் லெவ்கொடு கலமும்
தழுவிய கோபக்கா உலகனைத்தும்
தாங்கிய ரிஷமும் தகுத்தரு ஊசி
செழுங்கதிர்க் கிண்ணியும் சிமந்திடும் அரவமும்
சிவந்த மாளிகையுடன் மகாம்
வளம்பிறக் கடலையும் தாங்கிய மலையும்
வதுவணிந்திடும் வட திசைநரகம் 79
நரகமேழொடு நரைபதி சுவர்க்கமும்
நடுங்கிய பாலமு மோடை
ஓடையுங்கீழ் நரக மைம்பதினாயிரமும்
ஓங்கிய புருசைகள் யாவும்
நிறையுமங்கதிர்மதி வானவர் நெற்றியும்
நெஞ்சுமச்சிரகும்
சிரகும் நீர்க்கடல் கூறுலீன்
நெஞ்சிடைதனிலும்
வரையு மிறையவன் வாசகக்கலிமா
வல்லவ னருள்ப்படி எழுத்தே 80
எழுதிய கலிமா யாவும்
எழுந்திறை பரத்தைச்சேரில்
தழுவியே யிறை தகுத்தும்
தாங்கிய குருசருகும்
பழுதில்லா ஹலம்லெவ்கும்
பருங்கதி ரேழுவானும்
பொழுதணிக்கோபக்காபும்
பொர்ப்புகள் கடலுலகும் 81
உலகின்கீழ் ஆலம் யாவும்
உரைத்திடும் விதங்களெல்லாம்
நிலைபெற அதுகள் நிற்கும்
நிலைதனில் தரித்திடாமல்
அலைந்துகெட் டலைந்து கீழ்மே
லாகியே ஒன்றாய்க்கூடி
கலந்தது அனைத்துமொன்றாய்
கந்ரத தனில் சேரும் 82

சேர்ந்திடும் நரகும் செப்பிய பதியும்
சேர்ந்து ஒன்றாய்க்கலந்து
ஆய்ந்திடு நரகின்கீழ் ஐம்பதினாயிரம்
அரியபட்டணமுமே கலந்து
ஓய்ந்தொரு கொடிக்கோ டாயிரவருஷம்
ஓங்கிய வழிவிசை கலந்து
பாய்ந்திடும் இருள்பாதாளமே நோக்கி
பத்து நூறாயிரமாண்டு 83

ஆண்டொரு பத்துநூறாயிரம்
அவ்வழி துலைக்கும்போது
தாண்டிய நரக வேகம்
தானதிலெரிந்ததெல்லாம்
நீண்டிடும் படைப்பனைத்தும்
நிமிஷத்தில் கருகி நீராய்
தோன்றிய நீருங்காணு
தோடியே பாய்ந்துபோமே. 84.

போகையி லெரிந்தனைத்தும்
போய்விடும் நரகமட்டும்
தாவியே பாதாளத்தைத்
தானது நோக்கிப்போகும்
மேவியே வெகுகாலம்போய்
அதுகளுந் தெரித்துடைந்து
ஆவியும் மணலும்போலே
அதுகளும்பறந்துபோமே 85.

பறந்துபஞ் சணுப்போல் தூசி
பனித்துளி புகைபோலிரங்கி
நிறைந்திடில் தகுத்திராவும்
நீருபட்டெரிந்து தூளாய்
கரைந்திடும் ஜலமு முப்பு
கரக்கும்பால் நிணமும்போலே
சிறந்திறை தவிர மற்றும்
சேர்ந்திடும் சகிமத்தென்றே 86.

சேர்ந்திடும் ரஹிமத்தென்ற
செப்பிய கியாத்துல்கைபார்
தாழ்ந்திடும் கடலேனுக்கி
தன்னுடன் மகிழ்ச்சியாலே
எந்தனுள் கிருபையாக
யிருக்கின்ற கடலேகேளும்
உந்தனிலமைத்ததெல்லாம்
உன்னுக்குள் ளாகிவைத்தேன் 87

வைத்திடு மனைத்துமுன்னாள்
அமைத்தது முன்னாலென்ன
சித்தமு மகிழ்ந்து வல்லோன்
செப்பவுங் கடலேனுக்கி
எத்தனை வகையோ கோடி
இறைபடைப் பனிந்ததெல்லாம்
உத்தமங் கடல் நீரோடே
ஒன்றதாய்க் கலந்துபோமே 88

கலந்திடுங் கடலில் வல்லோன்
காட்சி முன்னமைத்தயாவும்
அமைந்தது விதம்வேறில்லா
தனைத்தொன்று யிருக்கும் நாளில்
நலம்புக ளிறையாகாசம்
நடுங்கிச்சூடதுவுருவாய்ப்
பிலம்பெருங்காற்றிலந்தப்
பெருங்கட லெழுந்துபோமே 89

எழுந்திடும் படைப்பனைத்தும்
எடுத்திறை முன்னாள் மண்ணை
அழிந்திடும் படைப்பனைத்தும்
அந்தமண் ணாகிப்போச்சே
எழுந்தமண் ஜலத்தால் முன்னாள்
அமைந்ததில் அழியலாச்சு
குளிர்ந்த நீர் தன்னையீன்ற
காற்றைப்பின் குடித்துப்போச்சே 90

காற்றையு மீண்டகானல்
கடுகிய கோபத்தாலே
காற்றுமே ரணுவில்லாமல்
கானலு முண்டுபோச்சு
ஆற்றவுங்கொடிய கானல்
அமைந்தமு ளுகாசத்தில்
ஆற்றில்லா கனலாகாசம்
அதுக்குள்ளே ஐக்கியமாச்சே 91

ஐக்கிய மாகாசந்தான்
அவனுக்கு ளடங்கிப்போகும்
மயக்கமோர் ஆகாசந்தான்
மன்னவ னதுவேயாகும்
செயப்படு மிறையுமுத்துஞ்
சேர்ந்தொரு பெருவெளியாய்
நயந்திரள் சமதே ஹூவாய்
நாயனே தனியுற்றுனே 92

உத்தம னமைத்தமற்ற
தனைத்துமே கடலில்ச்சேர்ந்து
முத்துமே இறைபடைப்பு
வித்துமே ஒன்றாய்க்கூடி
அத்தனுங் கடலில் சேரில்
அவனொளி யவனே சேரும்
அத்தனை குத்தூசிருகும்
அருள்சமத்துடனே சேரும் 93

# கடப்புகழ்.

---

அருள்பெற்ற குத்தூசி முன்னாள்
அவனெழி வானதாலே
இருள்குபி சகத்தி இறையை
சேர்ந்திடு மினிவாரது
அருளுடன் அருளுமொன்றும்
பொருளுயிர் பொருளைச்சேர
இருளென்னு முடலுக்குள்ளே
இருந்திடும் நருளுயிசை 94

நருளுபி ரெடுத்தனுலு
ருகுக்கும் குத்தூசி விட்டு
உருவுக்குள் ளுறைந்திருந்த
தொக்கவே கடலில்சேரும்
அருளவன் கிருபையாலே
யனைத்துமே யமைந்ததாலே
அருள் பொருள் நருளிருணும்
அருளுக்குளடங்கிப்போமே 95

அருளுக்கு ளடங்குமந்த
கடப்புகளனுச்சொல்லக்கேளும்
இருளினில் கதிர்மதி மின்னிருந்
தெழுந்த துக்குளாம்போல்
அறியவு முலகத்துள்ளே
அனேக ஒப்பனையுமுண்டு
உரியவரறியக்கொஞ்சம்
ஒப்பினையுரைக்கக்கேள்மோ 96

ஒப்பினை மழைபொழிய
உலகெல்லா முளைக்கும் பூண்டு
அப்பினில் குலமனந்தம்
அப்பினில் குலம்வேறுண்டோ
இப்புவி யனேகம்பூண்டு
யாவுமே நிறமே பச்சை
கப்புரு அழியவென்றால்
கரிநெருப்பதுநீர் மண்ணே 97

மண்ணினில் முளைத்தெழுந்
தனைத்துமே மடியுங்காலம்
மண்ணொரு விதமல்லாது
மற்றொரு விதமுமில்லை
பொன்னென்று பணிதிகோடி
ஒன்றுக்கொன் றொவ்வாவண்ணம்
பொன்னதை யுருக்கப்பொன்னும்
புரவியன் வேறுமுண்டோ 98

உண்டென்ன குசவன் மண்ணால்
எடுத்திடும் அனந்தம் பாண்டம்
மண்டலத் தனையும்பேரு
மளித்திடில் மண்ணேயாகும்
மண்டலத்துயிர்கட்கெல்லாம்
அவனொளி வொன்றேயாகும்
என்றுள்ள படைப்பும் வேறாய்
எவ்வகை தோறுந்தானே 99

தோத்திய பெரும்புயானை
துகை உயிர் சரிநிதானம்
எத்தனை பெரிய பூடம்
யானையெவ்வுயிர்களுக்கும்
எத்தினை விதம்படைப்பின்
விந்துபால் கிரமோர்வெள்ளை
அத்தனை குலமுதிரம்
ஒளிவுயிரதுவேருண்டோ 100

மெழுகதை யுருக்கி வார்த்து
முறைமுறை யுருச்சமைப்பார்
மெழுகென வுரைப்பதில்லை
மொழிவது பலதுனுமம்
மெழுகதை யுருக்கிப்பின்னு
மெழுகல்லா துருவமுண்டோ
அழியுமுன் உலகம்யாவும்
அழிந்திடில் வெளியாமாதி 101

ஆதியாம் பெருவெளியில்
எழுந்திடும் புருசைமுற்றும்
ஆதியாம் பெருவெளியும்
அதற்குள்ளே யடங்கிநிற்கும்
ஆதியாம் பெருவெளியாம்
அழிந்திடில் புருசையாவும்
ஆதியும் புருசையாவும்
அனாதியு மதுவேயாகும் 102

தங்கமும் ஐம்பொன்மற்ற
தாணியின் நவலோகத்தை
தங்களின் குலத்துக்கொர்க்க
சமைத்திடும் பணிகள் முற்றும்
அங்கங்கு விலக்கஞ்சொல்வார்
அங்கினி யுருக்கத்தங்கம்
எங்கிலு மிறைபடைப்புக்
யிறைக்கரு வழியாதாமே 103

கருவுக்குள் கருவுமாகும்
காரணப்பொருளுமாகும்
உருவுக்கு ளுமைந்திருந்த
ஒழிவெல்லாமொன்றேயாகும்
அறிவுக்கு ளனுவைப்பூட்டி
அனுவுக்கு ளிசைந்துநின்று
அனுவுக்கு ளகண்டவெளியை
அடைத்தவன் தனித்திருந்தான் 104

# இரு பிறவியை அறிகிற விபரம்.

தனியனை யொருவனாகத்
தானே தானிருக்கும் நாளில்
இனியவன் படைப்புமுன்னால்
அமைத்திடும் வகையனைத்தும்
மணியவ னொளிவிலாகி
மனுக்கு ளடங்கிப்போன
இணையில்லா புதுமைதன்னை
எண்ணியே நினைப்பானப்போ 105

நினைதிடும் புதுமையென்ன
நிலத்தில் முன் னடந்ததெல்லாம்
அனையமுநினைத்துப்பார்த்து
அவரெல்லா மெங்கேயென்று
அனைத்தொடு நல்லார் பொல்லார்
அனைவரும் ஞானமென்று
இணையில்லா தொருவனாக
எண்ணில்லா தனந்தங்கோடி 106

கோடியா அனந்தங்கோடி
கொற்றவன் தனிப்புலம்பி
வாடியே யிருக்கும்போது
வல்லவன் முஹம்மதென்று
நாடிட இறைமகிழ்ந்து
நாற்றிசை நடுநடுங்கி
பாடியே நபியைப்போற்றி
பத்து நூரனந்தமாண்டு
ஆடியே சலவாத்தோதி
அதிலொரு சுளியுண்டாமே 107

சுளியது சுடுந்தீயாகி
சுளண்டதில் புகையுண்டாகி
தெளிவுரு புகைகுளிர்ந்து
காற்றுமா அதில்சலமா
ஒளிவிறை சமதினின்ற
உயத்திய ரஹிமத்தென்ற
அளிவில்லார் கியாத்துல்கையார்
ஆதியின் கடலுண்டாமே 108

கடலென ரஹிமத்தென்னும்
கத்தவன் கியாத்துல்கையார்
இடம்பெரு மிறை சமதில்
இருந்துமுன் பிறந்ததாகும்
அடங்கலும் கியாத்துல்கையார்
அதிலிருந்தெழுந்ததாகுந்
திடமுட னனைத்துமுன்போல்
சேர்ந்தது கடலில்தானே 109

சேர்ந்திடுங் கடலில் முன்போல்
சிரந்திடும் சமதில் மேவி
ஆய்ந்திட சலவாத்தோதி
ஒன்றுபட்டிருக்கும் நாளில்
பாந்திபத்திறை மகிழ்ந்து
பொருங்கடல் பிரிந்துமுன்னல்
ஏந்தலின் கடலேனைக்கி
இறைபரிமான் மேதில் 110

இறைபரிமான் மேதால்
என்னுட படைப்பனைத்தும்
அறிய உன்னிடத்தில்சேர்த்த
அமானித மெழுப்பாயென்ன
இறையவ னுதிநாயன்
இலங்கிய தகுத்தெழும்பும்
நிரைந்தெங்கும் சமதுஹூவா
நிலைப்படி னுகத்துபாதி 111

ஆதியு மந்தமில்லான்
அரசணி நிலைநிறைந்து
கீதமா முஹம்மதரை
நினைத்தவன் சலவாத்தோதி
சோதியின் கடலை நோக்கிச்
சொல்லுவான் நிரை பரிமான்
ஆதியென் மலக்குநாளும்
அச்சணமெழுந்திடுமென்பான் 112

இறைபரிமான் மேதால்
இமையவ ரிசுராபீலே
வரையில்லா பெருங்குழலை
வாயில்வைத் தொடுக்கிமூச்சை
அறிவென்னும் கியாத்துல்கைபா
ரூழத்திலககுளவிருத்தி
குறையில்லா ஊதுமென்ன
கொற்றவன் பரிமானுமே 113

எழுந்திட பரிமான் வல்லோன்
இறைஜிபுரில் மீக்காயில்
ஒளிந்தவர் மருணரூசன்
உடையவன் வாதராஜன்
எழுந்தவர் கடலின்மீதே
விழுந்தவர் இறைசுருதில்
தெளிந்திறை அனந்தங்காலம்
சென்றிறை பரிமானுமே 114

கொத்தவன் பரிமான் கொண்டு
ஹூவென்னு மூச்சொடுக்கி
உத்தமங் குழலெடுத்து
ஒருதலை வாயில் வைத்து
மெத்தவு மாலத்துள்ளே
யொருதலை யிருத்தியூத
கத்தவன் ரஹிமத்தென்ற
கடல்கொதி யெடுக்குமப்போ 115

அப்பெருங்கடல்முழுதும்
அதிர்ந்து கீழ்மேலாய்ப்பொங்கி
கப்பிளைக் கடலும் நீரும்
கியாத்தொழி யனைத்துமொன்றய்
நிற்பது மிடையில்லாமல்
நீண்முகப்பாலும்போல
அப்பெருங்கடல்பால்தாளி
அதிலு மத்தாடும்போல. 116

மத்திட்டு கடைந்தபாலில்
நிணந்திரண்டெழுந்தாப்போல
எத்திசை கியாத்துல்கையார்
எங்குமே மிதக்க யாவும்
எத்தினை கோடாகோடி
இறையவன் படைப்பனைத்தும்
உத்தம மிறைபடைப்பு
உயிரில்லா துடலெழும்பும். 117

உடலுருப் பிறந்தலோகம்
தெவ்வகை புரிந்ததெல்லாம்
அடவிட னுருப்பொருந்தி
அன் றுதா னிருந்தாப்போல
நடமுடன் பொருந்தினுலும்
நுகுமுன் னடைத்துமுன்போல்
திடமுட னனைத்துமுன்போல்
நிதானத்தில் நிலையா நிற்கும் 118

நின்றிடும் உருப்பொருந்தி
நிரை நிரை வரிநிதானம்
மண்டல முலகமுன்னுள்
மண்ணெல்லாந் திரண்டெழுந்து
ஒன்றுபட் டொருபாபாக
உலகெல்லா மொருவெளியா
பண்டுள்ள உயிருடலை
பதித்துள்ளே கீழுமேலு 119

மேலுங்கீழுரையப்பூமி
யெவ்வகை யுடனுமுள்ளாய்
ஆலமுமிறை வகுத்த
தனைத்துமே யமைந்துநிற்க
ஏலவு மிறைபரிமான்
இமையவ ரிசுறாபீலே
கோமென்னுங் குழலெடுத்து
குறைந்திடா தூதுமென்பான் 120

ஊதிட இறைபரிமான்
உடையவன் இசுறாபீலும்
ஆதிகன் பரிமான்கொண்டு
அதிறந்தவர் மருந்துமூத
எவொரு குறைவில்லாம
லிறையவன் படைப்பனைத்தும்
ஊதவு மனமுமெல்லாம்
உயர்த்துவானுதிநாயன் 121

ஆதியின் அருளால்யாவும்
எழுந்ததும் விழுந்திடாமல்
நீதியின் கலிமா வல்லோன்
நினைக்கவு மனதில்பாயும்
சோதியின் அருகொடு குருசும்
சொல்லிய விண்ணுமண் ணுலகும்
மீதனக் கதிர்மதியாவு
மெழுந்தது மீண்டிடும் பண்டிடத்தே 122

பண்டுள்ள கதிரொளி யின்றிடும் புகைக்கும்
பனிரெண்டு நொளொளி பகின்று
மூன்றுலகாள மூன்றுநாள் நிரமதி
முன்னுள்ள கதிரெதிர் நடுங்கி
மூன்றுள்ள பனிரெண்டு நொளொளிவாங்கி
மூன்று நுரைநிலொன்றாயிணங்கி
மண்டல மாள மருபிரை யெனவே
மன்னவ னீண்டிருத்திண்டான் 123

ஈண்டது மவனை எவ்வகையனைத்து
மிறைபர மறிந்தில்லா கொடிதால்
மீண்டுமே குறைந்திறை எவ்வகை யனைத்தும்
ஒன்றுபட் டொருவழியாகி
அன்றுள்ள விதம்போல் அனைத்தையுமீண்டு
அவனும் வேரனைத்தும்வெவ்வேராய்
என்றுள்ள பெரியோ னருள்ப்படி யனைத்தும்
மெழுந்தது மங்கங்கே தங்கும் 124

தங்குவான் கதிர்மதி மீனெங்கே நோக்கிடில்
தனக்கெதிர் நோக்கிடும் வகைபோல்
தங்களில் நிறைந்திறை பொருளறியார்குல
மன்னர்க ளழிவது திடனே
எங்குமே நிறைந்து எவ்வுயிர்க்குமிரா
யாவையு மமைத்தனித்தவ னெழுப்ப
கங்குலவான மங்குலகாண
நிதிருந்து கண்ணிமை நிரைந்திதுதானே 125

தானவன் தருத்திராவும்
தரிக்குமே பலவிதமும்
அன்றுள்ள பதினெண்ணுயிரம்
மாலமுமொன்றுய்ச்சேர்ந்து
இன்றுள்ள கடலில்லாம
லெங்குமோர் பெருவெழியா
நானில மதினமக்க
மனத்தொரு நாடுதானே 126

தானவ னொருநாடாக
வனத்தொரு பெருவெழியா
ஆணிமுன் னிருந்த முத்து
அணுக்குலையா திருக்க
காணுமப் புவிமுழுதும்
கபுரல்லா தொன்றுமில்லை
வானுக்கும் புவியிடையில்
வருமொரு பெருவழிதானே 127

வருமொரு பெருவெளிதான்
வல்லவன் மஹுஷர் முத்தம்
ஒருபெரு வருஷ மாயிர
மொருதிசை துலையாத் தூரம்
மஹுஷருக்குள்ள தரையுஞ் செம்பு
மதில்மணலுருக்கச்செம்பு
ஒருதிசை வழியுங்காணு
துயர்ந்த வானளவுங்கோட்டை 128
கோட்டையுமுருக்குச்செம்பு

கொடுந்தணல் நரகத்தீயும்
நாட்டிய கதிர்விழியின்
னுயிரஞ்சுடரும் வீச
மூட்டியே ஒருபத்தாரு
மூளத்தில்நின் றெரியும் வேகம்
ஆட்டியே நரகேழ் மூச்சு
யதிர்ந்ததுந்தடர்ந்துவீசும் 129
அதிர்ந்திட நரகவேக

அக்கினி காந்திகோட்டை
யிதம்பெரும் குகையுருக்கு
ஈயம்போல் மணலுருகி
பதிமிதி செம்புப்பாரை
பழுத்தது மழுவாக்காந்தி
அதிசயம் மஹுஷர் முத்தம்
அக்கினி மயமாய் நிற்கும் 130

நிற்கையி லிறைபரிமா
நீதியின் மீக்காயீலை
மிக்கவு கியாமத்துநீரை
யளந்திடு மேகமுண்டு
தங்கமங் குலமாமின்னி
பிடித்துடன் குமுரியோங்கி
பக்குவப் புவிமுழுதும்
விங்தென்னும் மழைபொழியும் 131

மழைபொழிந்திடுக மன்னன்
மலக்கிசு றாயில்தன்னைக்
குழலெடுத்தூதுமென்ன
குறைந்திடா தவறுமூத
மழைபொழி விந்துமுன்னாள்
அடைத்துமுன் வெடித்துக்காய்த்து
மழைக்குள் ளடங்கிமுன்போல்
மனுவிந்துக் குமிளிபோல 132

மழை விந்து குமிளிகாத்து
மனதுள்ள உடலில்சென்றும்
வளம்பெரு முயிர்கள் முன்னா
ளிரக்கமுன் னிருந்ததைப்போல்
எழும்புவார் கூட்டமொன்றாய்
யாவரு முடையில்லாமல்
எழும்புவா ரொருபேருள்ளோர்
கபூரொன்றுக்கெழும்பேரே 133

எழுபே ரொருபேருள்ளோர்
ரிருவிளி வானைநோக்கி
வாழ்பெரு மலக்கோர் யாவு
மற்றுக்கூரானியாவும்
அணிந்திடா திறை வகுத்த
அனைத்துள்ள பரிஜின்தேவும்
எழுந்திடுங் கடல்காற்றில்
யாவுமுன் னுருவைப்போல 134
உருவங்க ளனைத்துமொன்றாய்
உடையில்லா தெழும்பும்போது
குருமுஹம்மதற்குமட்டும்
குத்தூசியும் நிரைந்திருக்கும்
உருவமும் விழியுடையும்
உள்ளமுன் படியேயாகும்
பெரியவர் சிறியோர்மற்ற
தனதொன்றாய் எழும்புவாரே 135

எழும்பியே புவிநிரைந்து
யாவரும் நிலையாய் நிற்பார்
களிம்பர மஹஷர் தன்னில்
கணக்கெல்லாம் தீரவென்று
வளம்பெற முஹம்மது நபியை
எடுத்திங்கே வருவீரென்ன
எழும்பியே ஜிபுரீல் வள்ளல்
முஹம்மதை யேந்துவாரே 136

ஏந்தியே மஹஷர் முத்தம்
மிறைதிரு சமுகமுன்னே
முந்தநாள்சுவர்க்க மீதில்
லிருந்தசிங் காசனத்தை
அந்திறை சமுகத்தூண்டி
அதில்முஹம்மதரை வைக்க
வந்துவெண் மேகமெல்லாம்
குடையாநிற்கும் 137

குடையிட மேகமெல்லாம்
குருசொடு அருசை விண்ணோர்
கொடியினி லெடுத்துவந்து
முஹம்மதர் சிரத்தின்மேலே
பிடித்திடும் நினைவில்பீறு
முஹம்மத ரிருக்கும்போது
இடத்தினிற் றகுத்துரெப்பில்
ஆலமின்னிரங்கும்போது 138

அப்பொழு முன்பதாக
அஹம்மதர் வசனஞ்செய்ய
மெய்பொடு அருசின்மீதி
லேரிய மிகுராசுக்கன்று
நற்புகழ் நபியுல்லாவும்
நபில்தொழு தெழுந்தகலு
ஒப்புடன் றுடாநாளை
உடையவன் தரிப்பாளென்ருர் 139

தரித்திறை யிருந்து உன்மேல்
தாணியின் கேள்வி முற்றும்
நிருத்திறை பார்க்க வல்லோன்
நிற்கவும் பதவிபெற்றாய்
நிருத்தவும் புவிவானுக்கு
யிடையிலே தரித்துநின்ற
குருபத்த ருரைத்தவட்டக்
குத்துக்கல் வந்தே நிற்கும் 140

நின்றிடுந் தருத்து ரப்பி
லாலமீன் சமதுமாகி
மண்டலம் புகழும்மந்தன்
முஹம்மதே முஸ்தபாவே
என்றுமென் றுயிர்த்துணையே!
இருகண்ணின் மணியே கேளும்
மண்டலத்துயிர்களெல்லாம்
மஹாஷரி லறியவேண்டும் 141

அறிந்துதா னன்மை தின்மை
யடியாரை மீளுமென்ன
பெரியவன் றூதுபீரு
முஹம்மது நபியுல்லாவுஞ்
சரியென வுகையமாவார்
சாத்துவான் ஜிபுரியீலே
அரியபல் லுயிரனைத்தும்
மழைத்திடுஞ் சணத்திலென்பான் 142

அழைப்புமென் றிறையோன் சொன்ன
தச்சணஞ்ஜிபுரியீலும்
முளையொரு யனுவில்லாமல்
அனைத்தையு மஹாஷமென்ற
வெளிதனில் நிரைத்துவல்லோன்
றிருமுன்னே ஜிபுரில் நிற்பார்
எழியவர் மஹாஷருள்ளோர்
ரனைருடன் வளமை சொல்வேன் 143

சொல்லிய வளமை முற்றும்
உலகவர் நினைவாய்க்கேளும்
எல்லவர் மஹாஷர் நிற்பார்
இருவிழிவானை நோக்கி
நல்லவர் பொல்லார் நப்ஜி
நப்ஜியேன் றுணரநாவும்
மெல்லிய உடையுமில்லை
மேனியில் குறையுமில்லை 144

குறைந்திடா வுடலுயிரும்
உலகத்தி லிருந்த நாளில்
நிறைந்துட லேழுருகும்
நிதானமா யிருந்துதப்போ
இறந்துபின் முளைத்ததாலே
இறையவன் குத்தூசி ருகு
பிறந்துமுன் னிருந்திடம்போன
திருந்திடம் வருவதில்லை 145

வந்திடா துடலுக்குள்ளே
வல்லவன் குத்தூசி ருகு,
முந்தவே வுரைத்த வுலவி
உடலுயி ராகிநிற்கும்
நந்துல குலத்தின் ருகும்
ஆடிடும் ஞானமொன்றாய்
வந்திடா ஹாத்தூசிபங்கை
வையகா றியச்சொல்வேன் 146

சொல்லிய உடலில் முன்னு
ளுடலுயி ரிருக்கும்நாளில்
எல்லையில்பிறந்த பாலன்
இழமையு முடல்வளத்தி
வெல்லுமே வுடல்சுருக்கம்
மேனியி னிறம் வளக்கம்
கொல்லுமா பசியுந்தாகங்
கோபமுஞ் சுகமுந்துக்கம். 147

சுகந்துக்க மாய்கையாசை
சுணையரி னினவுணவும்
பகுமுட னுருசைபுத்தி
மவுத்துட னிருபத்தொன்றும்
அகனிடல் பொருந்தாதாலே
அங்கமும் பதுமையாகும்
இகதல முருக்கில்லாத
இருப்புத்தா னிணையாமேனி 148

இணை இருபத்தொன்றும்
உடலுக்குள் பொருந்திமுந்த
இணையில்லா துலகில் முந்த
இருந்தவ ரிருக்குமாகில்
இணையில்லா மஹாஷர் மீதில்
நிமைக்குமுன்னெரிந்தேபோகும்
இணையில்லா தெரியுந்தீயில்
இரும்புருகுந்தானே 149

உருகிடும் கருமான் குகையில்
ஊதிடுமிரும்புத்தூணை
நெருப்புடன் நெருப்பாய்ச்சேர்ந்து
நின்றிடு மழுவாக்காந்தி
சிரக்கும்வா ரெழுமுன்றில்லா
துடலுமே இரும்புத்தூணும்
உருக்கிய குகையா மஹாஷர்
உலைமழுவாகியே நிற்கும் 150

நின்றவ ருடலமெல்லாம்
நெற்றும்பென்று மழுவல்லாது
பண்டுள்ள மேனியாலும்
பஞ்சுதீப்பாந்த மாத்தம்
மண்டையும் வெடித்துமூளை
உருகியே நிணம் வடிந்து
நின்றிடும் பாதமட்டும்
நிணைவழிந்துருகியோடும் 151

உருகியே யோடும்போது
உயிரென்ற படைப்பனைத்தும்
பெரியவர் சிறியோர் நப்ஜி
நப்ஜியென் றுரைக்கும்போது
அறிவய ளுதிறுயன்
அனைத்தையு நிருத்திமுன்னே
பெரியவர் சாபி இமாமை
பின்னையு மெடுக்கச்சொல்வான் 152

எடுத்தவர் சாபி இமாமை
இறையவ னருகில் வைப்பார்
மடித்துயிர்களெல்லாம்
மஹுஷரில் நிலையாய்நிற்கும்
மெடுத்திடு மருசின்கீழே
இலங்குசிங்காசனத்தில்
பிடித்திடும் நிழலிப்பீரு
முஹம்மத ரிருப்பாரப்போ 153

இருக்கவும் நபியுல்லாவும்
இலங்கும் சிங்காசனத்தில்
தரித்திடும் லாஞ்சினை நூஹுபத்திரேழு
இருபத்திரு லடையாளம்
பருத்திடு லிவாவுல் ஹந்து
பத்துமே கோடிநிழலப்போ
திருக்கையில் நபியாராதந்
திருமுன்னே வருவாரப்போ 154

அப்பொழு திறையோ னுதம்
மருகினில் நபிமற்றோரும்
மெய்பெரும் யார்கள் அசாவும்
அசனுசன் அவுலியாக்கள்
ஒப்பினை வுகையமில்லா
தொலிகுத்துபு யுயர்த்தி பெற்றோர்
நற்புகழிமாங்கள் நாலும்
ஆபிது வுலமாமற்றும் . 155

மற்றுள்ள நபியும்மத்துஞ்
சுன்னத்து சமாக்கள் மற்றுங்
கற்றவன் மலக்குஞ்சின்னும்
கடும்பரி தேவு பூதம்
மற்றுள்ள குயிர்கள் முற்றும்
இலாஹீயின் தவத்தா மற்றும்
உற்றது பரவை பட்சி
ஊர்வின மிருகம்யாவும் 156

யாவையும் நிருத்தியொன்று
இறைதிரு சமுகமுன்னே
கூவியே ஆதஹவ்வா
சுலையுமானபி ஐயூப்
ஆகிய நபியு மூசா
ஐவரை யழைத்துமுன்னே
தாகியே இறை சமதின்
தகுத்தின் கீழ் நிருத்திவைப்பான் 157
வைக்கவுங் கிருமன் ஹாத்திபனிருவரு
மவர்கணக்கைக்கொண்டு
மிதித்தொரு திராசைக்கொண்டு
வருபவர் மீக்காயீலும்
மற்றவ னிறைதிரு முன்னே
யனைவருங்கூட்டியொன்றாய்
வெத்திமை புரிவில்லாமல்
எழுங்கொன்றாய்த் திரண்டுநிற்கும் 158

நின்றிடு விறைபரிமா
நீதிவிண்ணவர்கட்கெல்லாம்
கொண்டுவந் துயிர்கள் முற்றுங்
கூட்டமொன் றிருப்பதெல்லாம்
மென்றுள்ள படைப்பும் வேறாய்
யெழுபத்திரெண்டாய்த் தோன்ற
விண்டிட வுரைக்கவானோர்
பண்டுள்ள படிசெய்வாரே 159

பண்டுள்ள உருக்கின் கூட்டம்
பட்சமுற் றெழுந்த கூட்டம்
பண்டுள்ள பணியாதங்க
அனேகமாங் கீதவஞ்சாடும்
மண்டல பரிஜின்தேவு
ராட்சத கணங்கள் பூதம்
என்றுள்ள சயித்தான் அருத்தான்
எலி எறும்புடனே பட்சி 160

பட்சிகள் மிருகமற்ற
ஊர்வினம்புழுக்கள் வண்டு
மிச்சனீர் வாழுஞ்சாதி
மேனியின் விஷத்தின்சாதி
நிச்சய மிருப்பது கூட்டம்
நின்றிடும் தனித்தனியே
துச்சணங்கொடுமை யென்றே
தூரத்தில் நிறுத்தி வைப்பான் 161

வைத்தபின் மேன்மையாக
வருந்திடும் கூட்டமேதால்
மற்றுள்ள மலக்கின் கூட்டம்
மங்கைகூ ருனிகூட்டம்
முத்துமே நபியின்கூட்டம்
முருசலி நபியின்கூட்டம்
மற்றுள்ள பிசாசுகூட்டம்
முஹம்மது நபியின் கூட்டம் 162

கூட்டமாம் ஆலீம் உலமா
ஆபீது அவுலியாக்கள்
சாட்டமா ஒலிஹூத்தாபு
செய்யது ஷாதாத்து மவுலா
வெட்டியே எசிது கூட்டம்
விரும்பிய தவத்தின்கூட்டம்
மாட்டுக்கான வர்தாகாசி
குருபக்கீர் பதினெல்கூட்டம 163

கூட்டமா நவுலாச்கு
முதாரிகளந்தக்கூட்டம்
நாட்டினில் சுலையுமான
பட்சியும் பரியுஞ் சின்னுமிருகம்
மட்டுநீர் வாழுஞ்சாதி
மஹ்ஷரு வழியளோடு
ஏட்டினி லடங்காக்கூட்டம்
எண்ணாஞ்சு விதமதாமே 164

எண்ணாஞ்சு விதமல்லாது
இலாஹியின் கூட்டமொன்று
மன்னவன் றிருமுன்பாக
வகைவகை கூட்டம்நிற்கும்
இன்னமுங்கொடியபாவி
எண்ணிலாக் கூட்டஞ்சொல்வேன்
மன்னவ னிறைனெனன்று
மண்டலமாண்டபாவி 165

பாவிகள் பத்துப்பேரும்
அவன்குலந் தளமனைத்தும்
யேவனு மிறைநபிமற்று
மில்லையென் றுரைத்தார்கூட்டம்
பூவுலகாளுந்தச்சால்
அவன்குல மடியார்கூட்டம்
மேவுயா சூசுமாசூசு
மெண்ணிலாக் கூட்டந்தானே 166

கூட்டமா மிசுலாந்தன்னை
கொடுமைசெய்தவர்கள் கூட்டம்
சூட்டியே இறைமுனிவு
முருகிடும் மணல் மெழுகென்ன
கோட்டியை மடக்கும்நாயன்
குதாத்தின் பிரத்தே நிருத்தல்
ஏட்டினி லடங்காகூட்டம்
இடப்பிரந் தரித்தே நிற்பார் 167

நிற்பது குபிர்குலங்கள்
நெருப்பையும் வணங்குங்கூட்டம்
ஒப்பினை பொழுதைக்கல்லை
யுருச்சிலை தண்ணீர்மண்ணை
இப்புவி யேந்திணை சயித்தான்
இருந்தமுன் மனுவைபெவ் வகையே
செப்பிரேன் கோஷா கூட்டம்
சேர்வது இடதுபக்கம் 168

பக்கமோ ரிடத்தில் தூரந்
தரிப்பது மிதுக்குபிர்க்குலங்கள்
இப்புவி யறியச்சொல்லே
னிலக்கமு மெழுபத்தொன்ரும்
ஒப்பினை யுகையுமில்லான்
உடையவ னாதிநாயன்
மெய்ப்புக மொளிபகுந்த
முஹம்மது நபியுமாமே 169

முஹம்மது நபியுல்லாதான்
முத்திரை கலிமாச்சொல்லி
செகமதி லிசுலாமாகி
சேர்ந்திடுங் குலங்களெல்லாம்
தருமன வரிவரியாய்த்
தருத்திறை வலதுபக்கம்
வகைவகை எழுபத்திரெண்டு
வரிகுழு நிருத்திவைப்பான் 170

வைத்ததில் முதன்மையாக
முன்னணி கூட்டமொன்று
ஒப்பினைவுகையமில்லா
துயர்ந்திடுமருள்தரித்த
செப்புதற்கரியதான
சுன்னத்து ஜமாக்களாகுந்
தப்பியே எழுபத்தொன்று
தவஞ்செய்யா தெளியர்ப்பாவி 171

பாவிக ளெழுபத்தொன்று
சுன்னத்து ஜமாவுமொன்று
மேவியே சுன்னத்து ஜமாவை
எழுபத்திரெண்டாய் வைத்து
கூவிய வதிலோர் பங்கை
குறித்திறை யஞ்சாவைத்து
மாவு சூழ் ஆதிகேட்கும்
மஹாசரு கேள்வி சொல்வேன் 172

கேள்விதான் முதல்வனாதி
கேட்பது யாதையென்றால்
ஊளிநாள் அழிவில்லாதான்
ஒளிவினில் பகுந்தவள்ளல்
நாளெல்லாம் புதுமை பொங்கும்
முஹம்மது நபியை இந்த
நீளிய மஹாஷர்கேள்வி
குத்தரவுரையீரென்பான் 173

உரைத்த வுரையீரென்ன
வுடையவன் கேட்கவள்ளல்
மெத்தவு மிறையைப்போற்றி
முஹம்மது நபியுல்லாவும்
உத்தர வுரைக்க ரப்பி
லாலமீன் வுகையமாகி
மெத்தவே அனர்க்குந்தோன்ற
விரைந்தொரு சத்தமாமே 174

சத்தமாம் யிறைபரிமான்
சாத்திய விஷளமேதால்
எத்தனை படைப்புக்கெல்லா
மிறையவனாதிநாயன்
எத்தனை படைப்பையெல்லா
மிறையவனென்றுயக்கேட்பான்
கொத்த மன்அனு வென்று
கூறுவா னனுவென்றே 175

மன் அறு வென்றுமிலன்ன
மன்னவ ஞறுரென்பான்
எண்ணில்லை படைப்பனைத்தும்
எதுமொழி வுரைத்திடாது.
பின்னையும் மஅறு வென்று
பெரியவனுரைக்கும்போது.
எண்ணில்லா ஆலிம் கூட்டம்
யாரப்பனு நீயேயென்பார். 176

யாரப்பு நீயேயென்பா
ரிறையவனுதிஞயன்
மாரியு மஅறு வென்று
மன்னவன் கேட்பானப்போ
கூறுவார் ஆலிம் ஆபிது
அவுலியா ஒலிகுத்துபு
நேரா மறிந்தவர்பெரியோர்
மனைவரும் ரப்புநீயேயென்பார் 177

நீயெங்கள் ளுயனுகும்
நாங்களு மடிமையாகும்
நீயல்லா தொருவனில்லை
நிச்சயம் நிறைந்தனுயன்
நீயென வுரைக்க வல்லோன்
அனைத்தையுங் கிருபைநோக்கி
நாயனென் றறிந்தாரென்ன
நபிகுலத்தடியார்தானே. 178

என்னுட னடியார்தன்னில்
முஹம்மது வும்மத்தோரை
என்னுட முஹம்மதொன்று
இணைத்துநீர் கலிமாச்சொன்னீர்
உன்னிய மனதுவாக்கால்
உரைத்திடுங் கலிமாதன்னில்
முன்னொளி தரித்தோருண்டோ
மூடியுடி யறிந்தாருண்டோ 179

அடிமுடி கலிமாவாகும்
மடியென்ன முடிவுமென்ன
நெடியவன் கேட்கயாவும்
நின்றிடும் ஊமையாக
அடிமுடி வேதமாய்ந்து
அறிந்தவ ரனருஞ்சொல்வார்
அடிமுடி கலிமாதன்னில்
அல்லாஹுவென் றனருஞ்சொல்வார் 180

அல்லாஹுவென் றுரைக்குமந்த
அச்சாப்பொருள் தானென்ன
எல்லாமு மவனைப்போல
பாவையும்போலவனும்
அல்லாஹுவென் றுரைக்குமந்த
அலிபுதான் முதன்மையாகும்
அல்லாவென் றுரைத்த
அந்தமுங்ஹேயுமாமே 181

ஆகிய கலிமாதன்னில்
அலிபுதான் முதன்மையாகும்
ஏகமும் நிரைந்துஒன்றாய்
முடிந்தது ஹூவுமாகும்
ஆகையால் கலிமாதன்னில்
அடிமுடி அல்லாஹுவாம்
ஏகனை அறிந்தாரெல்லா
மிப்படி கூறுவாரே 182

இப்படி யுரைப்போர்க்கெல்லாம்
மிறையவ னருளினாலே
செப்புதற்கரிய விவாவில்
ஹம்தென்னுங்கொடிநிழத்தும்
நற்புக ழறியா ரெல்லாம்
நாவில்லா ரூமையாவார்
ஒப்பில்லா கதிரின் வேகம்
வீசிய கனவெழும்பும் 183

எழும்பிய சதிர்வேகத்தில்
யாவரு முருகும்போது
ஒழுங்குடன் குரு ஆன்றன்னை
ஓதிய பேரைக்கேளும்
வளம்பெரும் குரு ஆனுள்ள
வகைப்படி நடந்தாருண்டோ
களிம்பறக்குரு ஆன் வேதி
கட்டிப்பின் னெடுத்தறியோம் 184

அரியமென் றுரைக்கப்பின்னும்
ஆதியின் பரிமானோதால்
நெறியுடன் பிசபீலில்
நின்றுயிர் மாண்டபேரை
இறைபரம் ஞடி நீங்க
ளிறந்த பேருண்டோவென்னப்
பெரியவ னெளியானென்
பொருள்போ யிறந்தோமென்பார் 185

இறந்தது பொருளுக்காகும்
யாவரும் பெருமைபேச
நிறைந்திடும் முதலைவைத்து
நிதிபெருஞ் சீமான்றன்னில்
அறிந்திறை கடன் சக்காத்து
எளியருக்கீந்தாருண்டோ
குறைந்திட முதல்சக்காத்து
கொடுத்ததுமில்லை யென்பார் 186

இல்லையென் றுரைத்தோர் மற்ற
அனைவர்க்கு மிறை பரிமான்
வல்லனைத் தொழுதவர்க்கு
மனமுற்று ருண்டோவென்ன
சொல்லுவா ருலகுக்காக
சூழ்ந்தவர் பெரியோரென்ன
அல்லஹின் குலத்தார்செய்யும்
அவதிக்குத் தொழுதோமென்பார் 187

தொழுதவர் மனுடர்க்காக
சக்காத்தில்லார் குருனுமோதார்
பழுதுள்ள முதல்வைத்தாண்டோர்
பெருமைக்கும் படையில்யாண்டோர்
எழுதிய கூட்டமஞ்சும்
எறிந்திட கனல்யெழும்பு
முழுதுமே அனலில் வைத்த
மெழுகென வுருகுவாரே 188

## கேள்வி விபரம்.

தொழுகையும் பிசபிலும்
துகைபெரு முதல்சக்காத்தும்
எழுதிய கொருஆன் ஒதியும்
இறையவன் கலிமாதன்னை
முழுதுமே யறிந்தவல்லோன்
உரைத்திடும்படி செய்வார்க்கு
எழுதிய லிவாவுல் ஹம்து
கொடிநிழல் நிளத்தும்தானே 189

நிழலினில் தரிப்பதேதால்
நினைத்திறை பாத்துக்காக
பழுதுபட் டலைவதேதால்
பாவங்கள் நிரைந்ததாலே
முழுதினுமறிந்த காயன்
முன் அனைபேரும் நிற்கில்
எழுதிய நன்மைதின்மை
ஏட்டுள்ள கேள்விகேட்பான் 190

கேள்விதா னிறையனுதி
கேட்கிற விபரமேதால்
ஊழியில் நீயாருந்தன்
ஊரேது யிருந்ததெங்கே
மீளவும் போனதெங்கே
எவ்வகை செய்திரின்னுள்
நாளினில் வந்ததெங்கே
யெதுகொடு வந்தீர்சொல்லும் 191

வந்தவர் முதலுமென்ன
வகைசொல்லும் நானுரின்னம்
உந்தனை வகுத்ததாரு
உன்னுட குருவுமாரு
உந்தனின் குலந்தலமும்
உயர்ந்தவ நிலையுமென்ன
சொந்தவுன்பதிகெதியும்
சொல்லெனச்சொல்லுவானே 192

சொல்லுவா ரறிவறிந்தோர்
சோதியே அழிவில்லானே
அல்லாவுன் யேவல்ருஹு
அனு அப்து அடியார் நாங்கள்
குலக்குமுத்தாபியாவில்
குடிமுதலிருந்து பின்னால்
நலச்சியல் ஆலம் அசுகர்
கடனுடன் சேர்ந்திருந்தோம் 193

இருந்தபின் தாருல் பனுவில்
யிரணத்தைக் கொண்டேவந்தோம்
சிசந்து உன் ஏவல்செய்து
பக்காவுக்கே வழியாய் வந்தோம்
பொருந்தியபுகழ்ச்சி நன்மை
காணிக்கை உனக்கேமுற்றும்
அறிந்துமற் றனைத்தும்தன்னே
அமைத்தவ னுதிநீயே 194

நீயென்னை யமைத்தருறுயன்
நாங்களுமடியாராகும்
என்குல வாதமண்ணுலவி
யெந்தை மக்கநாடு
என்தவங் கொருஆன்வேதம்
எனகெதி சுவர்க்கநாடு
பேணிய பதியுமீமான்
பீருமுஹம்மது குருவுமாமே 195

குருயெங்கள் முஹம்மதென்று
கூறிய குலத்தையெல்லாம்
பெரியவ ஞதிநாயன்
பிரியம்வைத் தனரைநோக்கி
சரிநிரை நன்மைதின்மை
திராசினில் நிருக்கும்போது
நிரையுள்ள நன்மைதட்டு
நின்றிடுங்கனம் பொருந்தி 196

பொருந்தியே நன்மைதட்டு
போதவே கனத்தபேரை
வருந்தியே நன்மையென்ற
வலக்கையில் கொடுத்துமிக்க
நிரைந்திடும் விவாவுல் ஹம்ந்து
நிழலிட அருசின்கீழே
சிரங்தொழி விலங்க அங்கம்
சினங்களை யாருவாரே 197

ஆரிய கூட்டமல்லா
லனேகமுங்கூட்டமெல்லாம்
நெலத்துள் ளநியாயப்பாவி
அனைரையு மமனிசெய்து
வறிவரி அணிநிருத்தி
வல்லவன் திருமுன்னுக
அறிவுற்ற கேள்வி முன்போல்
ஆதியு மவரைக்கேட்பான் 198

ஆதியா யறுதிமிஜாதி
அனைமுன் னிருத்திக்கொண்டு
நீதியின் பரிமான் முன்போல்
நிகழ்த்திட பாவமுற்றும்
ஏதொரு பதிலுரையா
திருப்பது இறைமுனிந்து
பாதகர் நன்மைதின்மை
பாவங்கள நிருக்கச்சொல்வான் 199

நிருக்கவும் நன்மையொன்றும்
நினைவில்லா தனத்தணிந்து
அருக்கியே பாவத்தட்டு
அதிகமுங் கனத்துநிற்கும்
பருத்திடுங்கொடுமையான
பாவங்கள் செய்தார்தம்மை
வருத்தமு மமளிசெய்ய
வருங்கதிசெழுந்து வேகம் 200

எழும்பிடி லெரிந்துமூளை
இருபதம் வரைவடிவுந்
தழும்பாச் செய்தபாவம்
தானேதா னுரைப்பாரப்போ
கழும்பா னுடலுருப்பு
கையுங்கால் சாட்சிசொல்ல
அரும்பா மழுதழுதா
அனல்மெழுகாய்த்தவிப்பார் 201

தவிப்பவர் தாயுமில்லை
தந்தைதா யொருவரில்லை
புவிசெம்பு மணலுஞ்செம்பு
பொய்யுரைத்திட வாயில்லை
கவிமறை யோர்கட்குள்ள லிவாவுல்
ஹம்தென்னுங் கொடியுமில்லை
இவ்வித மஹஷர் அமளி
எண்ணிலா வருத்தமாமே 202

ஆமிந்த வருத்தமாக
ஆகிரில் மஹரிஷர் கேள்வி
இன்பமுந் துன்பமுமறிந்தோ
மிறையவ னாதிநாயன்
வம்பருங்கொடியோர்மற்
றனைரையுமருகளைத்து
தம்பிரா னனைரையெல்லாம்
தன்செய லுரைக்கச்சொல்வான் 203

உரைப்பவர் பாவியெல்லாம்
ஒன்றுபோ லொருமொழியா
நிறப்பிய நன்மைதினைமை
அனைத்தையு மறிந்த நாயன்
இருப்பதென் றறியோம் நாங்கள்
எவர்சொல்லு மெடுத்தெரிந்தோம்
இறப்பதுபொய்யென் றெண்ணி
ஏவலை மருத்திட்டோமே 204

ஏவலை மருந்திபுலீசன்
ஏவலைச்சுமந்தோம் பாவி
தேனியா ராசையாலுந்
திரவியக்குமியலாலும்
மேவிய பிணியினாலும்
மிகுத்திடும் வருமையாலும்
காவுசூல் மதளையீன்ற
கஷ்டமுந் துடக்கினாலும் 205

துடக்கென்று முடையில்லாமல்
தோன்றலைத் தொழுதோமில்லை
இடத்தினில் பிழைப்பாருத்து
இனிப்பதி யனுப்பிவைத்தால்
திடத்திறை யேவல்தன்னைத்
தெருட்டிடா நலவுஞ்சொல்வோங்
சடல்பெரும் பாவிவெள்ளங்
கரைந்தழு தனருஞ்சொல்வார் 206

சொல்லுவா னிறையனுதி
சூழ்தலப்பாவியோமே
அல்லலின் மலக்குமற்று
மாதமும் அவ்வாதானும்
பலவிதத்துடையில்லாமல்
பகலிரா முழுதுமொன்றாய்
வல்லவன் ஏவலொன்று
மவர்களு மறுத்தாரில்லை 207

இல்லக மனையாளோடும்
எழுபது சுரிகத்தோரும்
எல்லைவான் கடல்மலைசூழ்
எங்குஞ்செங்கோல் செலுத்தி
அல்லவன் திரவியத்தை
யடைத்திடக் கடல்திரையும்
வல்லவன் சுலையுமானார்
வாழ்ந்திறை வணங்கினரே 208

வணங்கினார் நபிஅய்யூபு
மவருடல் புழுச்சொரிய
சுணங்கியே நொடிப்பொழுதுஞ்
சோர்ந்தவ ரிருந்தாரில்லை
மணந்திகழ் குழலாள் பீவி
மரியமு மமளிபட்டு
நணந்திகழ் இறையினைவல்
ணட்டமு மறந்தாரில்லை 209

இல்லாத வருமையாலே
ஈசாவு மக்களுட்டில்
வல்லவ னுலகையாண்ட
வருஷமுப் பதுவுந்தானே
நல்லபேரீத்தங்கனியை
யுடியே யவர்தானுண்ண
எல்லையி லவர்க்கோயக்கே
எய்திடா வருமைதானே 210

வருமையி லீசாவல்லோன்
வணக்கமு மறந்தாரில்லை
சிருமையி லீசுபு நபியார்
சிறையினில் வருடமேழும்
ஒருநொடி மறநதாரில்லை
உடையவன் மூசாதானும்
பெருந்தவ மலையில் சென்று
பேசிய வசனத்தன்று
ஒருமூன்று வருடமொன்றாய்
வுறக்கமு மற்றே நின்றே 211

உறங்கிடா வணக்கஞ்செய்தார்
ஒருநொடி மறந்தாரில்லை
தறங்கொள்ளே நபியூனுசை
தின்றமீனதை மீனுண்டு
இருந்த மீனதைமீனுண்டு
எடுத்தமீ னதைமீனுண்டு
இறந்திட ஒன்றைவொன்று
எண்ணஞ்சு மீன் முழுங்கும் 212

முழுங்கியே மீனுக்குள்ளே
மூகிந்திடா வணக்கஞ்செய்தார்
வளம்பெரும் நபிக்கதிக
வருத்தமு முலகிலுண்டோ
கனம்பெருங் கூட்டமான
கடல்பெரும்பாவி சேனை
அழும்பாக் கிடத்தையில்
அவரவர்கணக்கு யீவான் 213

அவரவ ரிடத்தையில்
அவர்செயல் பாவதட்டை
எவர்களுநேமந்திவாடி
இழைத்தவர் மஹஷர் தன்னில்
தவிப்பவா யய்யோவென்று
தலைமூளை யுருகிச்சாய
இறப்பில்லா திறந்துநிற்பா
ரிறைநபி கூட்டத்தைச்சொல்வேன் 214

இறைநபி கூட்ட மற்ற
தெண்ணிலா நபியின் கூட்டம்
வறிவறி வகையா
வகுத்தமுன் கூட்டந்தன்னில்
குருநபி யும்மத்தொன் றும்
எழுபத்தி ரண்டு கூட்டமே
திருநபி யும்மத்தோரில்
சுன்னத்து சமா வொன்றாகி 215

சுன்னத்து சமாவுமொன்றே
எழுபத்தி ரெண்டாய் வைத்து
அண்ணுற்ற யெழுபத்திரெண்டு
அது வொருகூட்டந்தன்னை
அண்ணுள்ள பாவியென்று
அஞ்சபங் கதுவேர் வைத்து
முன்னுள்ள எழுபத்தொன்று
முதல்நெறி யறிந்தபேரை 216

அறிந்தவ ரெழுபத்தொன்று
அறிந்துகேட் டவரோ டைந்து
ஒவ்வொரு கூட்டமாக
ஒதுங்கியே தனித்துநிற்பார்
ஒருகூட்ட மெழுபத்தாராம்
ஒன்றுபோ யெழுபத்தொன்றும்
அருள்நபி குலமிழந்து
பாவிகள் தனியே நிற்பார் 217

தனித்தனி எழுபத்தொன்றும்
திருநபியும்மத்தோரில்
முனியுள்ள பாவியாகும்
சுன்னத்து ஜமாக்களல்லோ
ஜின்பரி தேவபூதம்
அனைத்துமே தனித்துவேறாய்
துணித்திடு மமளிதன்னை
துகைவகை யறிவாருண்டோ 218

அறியவு மஹாஷரி லமழ்ந்
ஆலத்தி லார்சொல்வோ ருகமை
மூருசனு நபிகள் மற்ற
முன்னுள்ள தன நமொன்றாய்
பெரியவர் நபூசி நபூசி
பிழையொரு கிருபைசெய்யெனவும்
உருகிய முஹம்மது நபியென
உம்மத்தீ உம்மத்தென்பார் 219

உம்மத்தென் றிருகை யேந்தி
உடையவன் திருமுன் நிற்பார்
இம்மத்தாய் பாத்திமாவு
மிருகையு மேந்திநின்று
உம்மத்தைத்தருமிறை யென்பார்
உபத்தியின் யார்கள் மற்றோர்
தன்மையா நபூசியென்பார்
அசனுச அலிகுல் முத்தோர்கள் 220

அசனுச னலியார் பாலர்
அவர்குல மிறை முன்னாக
இசவுட னிறைபதத்தில்
எடுத்துகையேந்தி நின்று
நிசமுடன் தொழுவாராதம்
நபியும் நின் றழுவாரப்போ
இசைபுகழ் முகையதீன் ஒபிசல்க்
கருணைபுஞ்சாமதாரும் 221

ஷாதாத்தோலி வம்சத்தாரும்
செய்யது மஹிதியோடும்
பூமியில் பதுமையுள்ள
குத்துபுகளாயிரத்தெட்டும்
ஆமென அவுலியாக்கள்
அனந்தமாயிரமுங்கோடி
இமாமுகள் கானுவா கலிபாக்கள்
யாவரு மிறைமுன்னிற்பார் 222

நிற்பவ ரிறையை நாடி
அனைவரும் நபுசியென்று
அப்பெருங் கூட்டந்தன்னில்
அஹம்மது நபியின் தோழர்
எப்பெருந்தவம்பெரிய
இறைநபியார்கள் தம்மில்
நற்புக ழுலியுல்லாவை
நாயனுங் கேள்வி கேட்பான் 223

கேள்வியி லவியுல்லாமேல்
கிடைப்பது பதினல்பாவ
மீளவு மொருநூர்நன்மை
மேல்க்கதி செய்ததுண்டு
தோழமை யார்கள்மற்ற
யனைவையுங் கேள்வி கேட்பான்

224

கேள்வியில் பெரியோர்க்கெல்லாம்
கிடைப்பது பாவங்கொஞ்ச
மீளவும் நன்மைதட்டு
மெத்தவுங்கனத்துக்காணும்
வாழவும் நன்மை தட்டை
வலது கையில்க்கொடுத்து
தோழமை யாகச் சூழ்ந்து
சுன்னத்து ஜமாவைச்சேர்வார் 225

சுன்னத்து ஜமாக்களோடு
சூழ்ந்திட நபிகள் யாவும்
அன்னுத்த நபியும்மத்தை
அஹமது நபிமன்றுடி
முன்னுற்ற விதத்தைப்போல
முயர்த்தியின் தவத்தோருண்மை
அன்னுத்த சுன்னத்து ஜமாக்க
ளவருடன் சேருவாரே 226

சேருவார் பெரியோர் யாவும்
பாவியின் விஷளஞ்சொல்லேன்
அருங்குபிர் தீனென்றூனு
மணல்மெழு காயனைபேரும்
நெருப்பினி லுருக்கு தூண்போல்
னீருபட்டுருக்கி மேனி
ஆரிடா மஹ்ஷர்க்கொருநாள்
அன்பதாயிரம்பெரு வருடம் 227

வருஷமன்பதி னாயிரமஹ்ஷருக்
கொருநாள் சரியா
முருசலின் நபிகள்மற்ற
முன்னவன் படைப்பனைத்தும்
பெரியவர் சிரியோர்முற்று
மவரவர் பதிக்குச்சேர்க்க
இறைவனும் பரிமானேத
எண்ணில்லாக்கூட்டங்கள் பிரிப்பார் 228

கூட்டங்க ளனந்தமாக
கொற்றவன் மஹ்ஷரில் கின்ற
கூட்டமாங்குபிர்களும் ஜின்பரி தேவுகள்
குலங்களும் பாவியாகும்
நாட்டமா நபிகள் மற்ற
மலக்கொடு சுவர்க்கமாது
கூட்டமா நபிகுலத்தில்
சுன்னத்து ஜமாவைச்சேரும் 229

சுன்னத்து ஜமாக்களோடே
சூழ்ந்தவ ரனருமொன்றாய்
முன்னுற்ற நபிமார் வேதம்
உகந்ததில் பெரியோர் தாமும்
அன்னுத்த நபியின் குலமும்
அன்பெரு நபியைச்சேர்வார்
என்னுமே இலாஹியாக
இருந்திடுங்கூட்டங்களே 230

கூட்டமா இலாஹிக்கெல்லாம்
குருமுஹம்மதர் தீனில்லை
ஆட்டியே கொடிநிழலும்
அருசுட நிழலுமில்லை
நாட்டிய கதிரின்வேகம்
நன்மையுந் தின்மையில்லை
ஏட்டையுங் கழுத்தில் கோர்த்து
எல்லவர் மஹ்ஷர் நிற்பார் 231

## சாபியிமாமுடைய கேள்வி

நிற்கையி லிறைபரிமான்
நீதியின் சிபுரியீலே
முக்கியம் ஷாபி இமாமை
அழைத்திங்கே வருவீரென்ன
தக்கவன் சிபுரீலேந்தி
மஹ்ஷரில் விடுவாரப்போ
மிக்கவுந் திருமுன்னுட்டி
மிகையுள்ள துரையீயென்பான் 232

உரைத்திடும் பாவநன்மை
செய்வதுக்கென்ன லுண்டோ
உறுப்புகள் கரங்காலப்போ
உண்டென்ன சாட்சிசொல்லும்
நிறப்பிய இறைமுன்னுக
நேரிட்ட விஷளமாக
இறப்பொடு பிறப்பில்லானே
இதற்குநீ சாட்சியென்பார் 233

சாட்சிவைத் திறையைக்கூவி
ஷாபி இமாமுஞ்சொல்வார்
சாட்சியா வுனது ரூகு
குத்தூசிமுன் னிருந்தநாளில்
சூட்சிய இன்பதுன்பம்
அனைத்துக்கும் தலைவனாகும்
நிச்சய முனது ரூகு
நீயல்லா திணையொன்றில்லை 234

இணையில்லா துனது ரூகு
இருந்திடில் யேவல்யாவும்
உணவுகள் சுகமுனக்காய்
உள்ளது நடந்ததல்லால்
குணவகை யனைத்துஞ்செய்த
கொத்தாவனீயேயாகும்
உனதுயி ரெழுந்தபின்னால்
ஒருபிழை செய்ததுண்டோ 235

பேர் பெற்ற வேத நாலும்
பிறப்பவர் ஞானமுற்றும்
ஆறுற்ற தனைத்துமொன்றாய்
அவரவர் குலம்வேறுண்டோ
ரூபத்து நாலுருகை
துயர்ந்துகண்பிஞ்சும்போது
சார்புத்த னீானல்லால்
தவமினியார்க்குச்செய்வோம் 236

தவஞ்செய்யுங் குலமாரந்த
தவத்தையு மேற்பதாரு
பலருலத்திறையாரந்த
பாவத்தையும் பொருப்பதாரு
தவம்பவம் விளையுமந்த
தலத்தினில் தரிப்பதல்லால்
தவம்பவ தலைவனல்லால்
தங்களால் செய்வதுண்டோ 237

செய்யவும் வலுப்பமேது
செய்யுமுன் திருக்கூத்தல்லால்
உய்யுமென் காமுங்காலும்
உருப்புகழ் உனக்குச்சார்ப்பார்
செய்வகை யனைத்துஞ்சொல்லும்
செய்பிழை யெதிலைலாச்சு
உய்யுமென் ருகாயும்
உடலுலாவி யாளும் நாளில் 238

உடலுக்குள் குத்தூசி ரூகு
ஒருவனே நீயேயாகும்
சடமது ஆதமண்ணும்
உலாவி ரூகுண துவீடு
திடமுட னிருந்துநீயும்
திக்குலகாளும் நாளில்
சடமது சுகம்பொருந்தி
சாட்சிமு னக்கத்தாட்சே 239

உனதக முனக்குச்சாட்சி
உன்னுட லுகையமாச்சு
இனியென்ன உடலுருவம்
சுபுவியும் பருசக்காகும்
உணவுகள் சுகமறியா
தசுவீருக் கேதுமுண்டோ
எனவகை தெரியும் ரூகு
இருந்திடும் யேவல்லாலும் 240

நாலதில் நாமியா காத்திஹாவும்
நாபியா நகிமா நாலும்
கோலமா யுனது யேவல்
சூடியும் நீ யிருக்கும்நாளில்
ஆலமில் லாடச்சொன்ன
திப்படி நடந்ததல்லால்
மேலுல கெழுந்தபின்னல்
ஏதுமிது ஜெயித்ததுண்டோ 241

ஜெயித்ததில் உனக்குப்பின்னால்
செய்வகை யுனதுபங்கு
இவ்வகை தெரிந்தில்லாமல்
யாவுமே செய்தேனென்ன
செய்யுமுன் னமழியல்லால்
செயலுட னுரைத்ததில்லை
உய்யுமுன் நன்மைதின்மை
உனையல்லா தறியே னென்பார் 242

அறியனென் றுரைக்கும்போது
ஆதியு மிகமகிழ்ந்து
பெரியவர் சாபி இமாமை
பேசிடா திரியுமென்ன
உரியவர் முதல்நீர்வந்தால்
ஒன்றில்லை மஹுஷர்கேள்வி
இறைவனும் இமாமுமேசு
யாவரு மஹுசர் நிற்பார் 243

மஹுஷருக்கொருநாள் பெரும்
வருடமன்பதாயிரமுடிவாகும்
வகை விதத்தாரெல்லா
மவரவர் பதிக்குச் சேர்க்க
துகையினி லடங்காநாயன்
உத்தரவுமுரைக்கும்போது
இமையவ ரனைருமஹுசர்
புருசை வாசலைத் திறப்பார் 244

---

* ஹஷபத்துஷாபி இமாம் ரலியல்லா அன்னகுவைப்பற்றி 235-வது பாட்டில் சொல்லியது. மஹுஷரில் கேள்விக்கு கடேசி கேட்கிறதாகவும் அல்லாவுத்த ஆலா வுத்தரவின்படி ஷாபியிமாமை மஹுரில் நிருத்தி கேள்வி செய்யும்போது யாரப்பி என்னில் நீ இருந்தாய் உன்னில் யேதும் பிழைசெய்ததுண்டா. என்னை விட்டு நீ பிரிந்ததின்பின் நான் ஒரு குற்றமுஞ்செய்யவில்லையென்று பதில் சொல்ல ஹக்குடைய நாட்டபடி மஹுசரில் உள்ள கல்க்குகள் அறியும்படி அவ்விதமாகிய பாதை சாகின் நிலை தவறாது தவ்ஹீதில் மூழ்கி நடத்திய ஒரு வினாடியாவது ஓயாது இசுலாம்வாசி இசுமை ஓதிய நபிகள் அவுலியாகுத்துபு இமாங்களுக்கே தவிர மற்றவர்க் கில்லையென்றும் கஞ்சில் ஆரிபினிலும் அக்குப்பாரிலும் முகிமா கியாமத்து நாமா இதுகளில் சொல்லப்பட்டிருக்கிறது நாயகம். அருளியதாக இமாங்கள் இயற்றியது

திறக்கவும் புருசைதன்னைத்
கொடுத்துள்ள தனைத்துமே வெளியாம்
மிருந்திடு மஹாசருப்புரிசை
எடுத்தவர் இமையவர் குலங்கள்
பிறந்தமுன் கடலதில்போட
போய்விடும் புருசையுங்கரைந்து
சிரந்திடுங் குருசொடு அருசுமே யெழுந்து
சேருமுன் னிருந்திடுந்தலமே 245

தலத்தினில் தரிக்கவல்லோன்
தகுத்தினில் நிறைந்திறை சமதாய்
நலத்திறை பொருட்டாலிரவிநாட்டி
விண்ணுல கத்திலுரைய
குலத்துள்ள மஹஷர்கூட்டம்
அனைவரும் வெளிதரித்திருக்க
இலகத்தி லடங்கான் றீதா
ரனைவர்க்குமொழிவொன்று தோன்றும் 246

ஒழிவெளியாக உயிர்குல மனைத்தும்
உச்சியில் தரித்திடும் விழிப்பு
மழுங்கியே களிக்கவும் மறைந்திடு மிருவிழி
மறுபடி விழி முளியாது
ஒளிவுள்ள இருவிளி உலகத்திலிருந்த
தெளிவிலுந்தெளிவாய்த்தெரியும்
வழிவழி குலத்தோர் வகைவகை தரிப்பார்
அவரவ ரனைவருங்காண்பார் 247

கண்டவ ரவரவர் சேர்ந்துமுன் குழுவில்
கண்டுமுன் னுலகினில் பழகியபெயரை
ஒன்றுக்கொன்றணைந்து தழுவியே குலவி
யொருவரை யொருவர்காண்பார்
அன்றுமுன் னுலகத்தி லறியுமுன்னிறந்த
அவர்குல மனையையு மறிவார்
மண்டலந்தனிலே அறியமுன்னிறந்த
மற்றுள்ளபேரையுமறிவார் 248

அறிந்தவ ரவரவர் தழுவியே குலாவவும்
அந்தந்தக் கூட்டங்கள் வேருய்
இருந்திடும் சுவர்க்க வாதிகளுடனே
இணைந்திடா செரிநரகுடையோர்
நிறைந்துகொண் டிருப்பா ரிருபடைத்திரளா
நேரிட அவரவரெதிராய்
ஒருவரை யொருவர் எதிரிடக்காண்பார்
ஒருவரையொருவர் தொடாரே 249

தொட்டிட அணுகா துலேதனில் தரித்து
துய்யவன் சலாமிவர்க்குரைப்பான்
மட்டில்லா சுவர்க்கவாதியும் பாவியும்
அவரவர் எதிர் முகங்காண்பார்
சட்டமா வுலகினி லிருந்திடும் வளமையுஞ்
சகலபே ரிறந்திடும் விதமும்
பட்டுள்ள பாடுகள் அனைத்தையுமவர்கள்
ஒருவருக்கொருவர்களுரைப்பார் 250

உரைப்பவ ரிவ்விதத்தாலே
யுயத்தியின் குலத்தினில் ரறிந்தோந்
தரித்திடும் பாவிகள் அவரவர் செய்பலன்
தாழ்த்தியின் குலஞ்சொல்லிதாள்வார்
நிரைந்திடும் பெருவெளி இருகுலஞ்சரியெ
நிற்கயிலனைவரு முரைப்பார்
கருத்துட னுலகத்தி லிருக்கின்றநாளில்
கடனுள்ள கணக்குகளுரைப்பார் 251

## துனியாவில் கொண்ட கடன் தீர்க்கிற

## விபரம்

கடனுள்ள கணக்குக ளனைத்தையு
மவரவர் கடுகியே கொள்கின்றபோதில்
இடம்பொதி விடம்பொருள்கிடையாதுடன்
துலைத்திடுமென்செய்வோ மிதுக்கென்னஏங்கி
இடம்பெரு மீமான் கடனிடை சரியா
ஈபவரவர்க் கொருவர்
அடங்கலுமுள்ள பெருங்கடன் தெளித்து
யவர்வெளி அரை நிரைந்திருப்பார் 252

நிறைந்திடு மிறைபெரும் வெளியில்
நிலத்துள்ள கணக்குகள் தீர்ந்து
இருந்தமுன் னுலகில் இடத்தினையும் பேசி
ஒன்றுக்கொன்றெழுபதுமீந்து
இறந்துமுன் பிறந்து இறைத்துமே நிரைந்து
மிருந்திடு மிறை பெரு வெளியால்
பாரந்திடும் பனிதுள்ளி பரும்புகைபோல
அக்கினித்தூசியும் வீசும் 253

வீசிடுந் தூசியேதால்
வேகமா காவியாவில்
தூசியின் கனலைவாரி
காத்திடுங்கொட்டிய வேகநீரால்
தேசமில் மிருகமற்ற
ஊர்வினம் பரவைபட்சி
வீசிய கனலில் முற்றும்
வெந்துநீர் மண்ணாய்போமே 254

மண்ணுடன் கலந்துபோகும்
மற்றுள்ள படைப்பனைத்தும்
மன்னிய பெருவெளியில்
மற்றது நிலையாய் நிற்கும்
மன்னவராவரவரே
அவர்பதி சேருமென்பான்
பன்னிய படையிபுலீசு
படையுடனெழும்புவானே 255

# இபுலீஸ்படை வந்து நபியை வழிமரித்தல்

எழும்பிய பாவியான
குபிர்க்குல மனைத்துஞ்சேர்த்து
அளும்பெனும் நாகே சேர்க்க
அப்புரப்படுத்திவைப்பான்
வளம்பெரு மிசுலாஞ்சிரிது
பாவியன் வரை நபியின்சேனை
முளங்கியே சாய்க்கும்போது
முன்வந்து மரித்து நிற்பான் 256

நிற்கையில் முஹம்மது நபியும்
நிலைபெரு நபிவும்மத்தோரும்
ஒக்கவிண்ணவர்கள் யாவும்
ஒன்றுபட் டெழுந்துநிற்க
பக்குவமிசுலாம்பாவி
கூட்டமு மெழுபத்தொன்றில்
முக்கிய அன்பத்தஞ்சு
கூட்டத்தை ஒதுங்கிக்கொள்வார் 257

கூட்டமு மன்பத்தைந்து
கொத்தவ னபியே சேரும்
கூட்டமும் பதினூர் தன்னை
கூட்டியே திரட்டிப்போவான்
சூட்டியே இசுலாமான
சுன்னத்து ஜமாக்கள் தன்னில்
கூட்டமும் எழுபத்தொன்றில்
அது ஒரு கூட்டமைந்தே 258

ஐந்துமே யறிந்துகேட்டோர்
அவர்களை நரகில் சேர்க்க
வஞ்சக முரையாநாயன்
வாக்குமுன்னுரைத்ததாலே
தன்செயல் பாவியென்று
தலைவனு இபுலீசப்போ
மிஞ்சவும் வருவானரகு
சேனையைச்சேர்த்துக்கொண்டே 259

சேனையு மிபுலீசென்ற
தளமொன்றாய்ச்சேர்ந்துநின்று
தீன்குலந்தவரிஞோரே
திரட்டியே சாய்ப்பானப்போ
மானிலம் புகழும்வள்ளல்
முஹம்மது நபியுல்லாவுஞ்
சேனையே சுவர்க்கஞ்சேர்க்க
சிந்திடாதழையுமென்பார் 260

அழையுமென் றிரசூல் சொல்ல
அஹம்மது நபியின் சேனை
வளம்பெரு மியராசாவும்
வல்லவன் ஒலிகுத்தூபும்
தளம்பெரு மலக்கின்கூட்டம்
தரணியில் அவுலியாக்கள்
எழும்பிய எத்தீன் குலத்தை
இடைவிடா தனைத்துஞ்சாய்ப்பார் 261

சாய்க்கவு மிபுலீசப்போ
தன்னுடன் சேனையோடும்
மாய்க்கவு மெதிர்த்துவந்து
மவப்படை பொருதும்போதும்
பாக்கிய சுவர்க்கத்தாரும்
பாவிகள் நரகத்தாரும்
தூக்கியே படைபொருந்தி
துலைந்திடா தமளியாமே 262

அமளியேத் திருணவல்லோன்
அனேகங்கா ரணத்தைப்பார்த்து
இமையவர் ஜிபுரிஹீலே
இவர்களை விலக்குமென்ன
நயமவர் சிரருதன்னை
நடுப்படைக் கிடையிலூன்ற
தமையிரு பதியுள்ளோர்க்கு
சரிபங்குபாதிதானே 263

பாதியே நரகுக்காகும்
பாதியே சுவர்க்கஞ்சேரும்
பாதியு முன்னோருடனே
பாங்குடன் வலதுகையில்.
வேதமாங் கணக்கையேந்தி
வெற்றிமங் களங்கள் பாடி
ஆதியின் தூதரான
அஹம்மதைச்சூழ்ந்தேபோவார் 264

சூழ்ந்திடும் நபிமார் முற்றுஞ்
சுன்னத்து சமாக்களெல்லாம்
ஏந்திகை ஆமீன்கூறி
தீனொளி முளங்கியோசை
பாந்திப நபியுல்லாவே
பாடியே சலவாத்தோதி
காந்தியி முஷ்த்தக்கீன் பாலங்
கடந்துதானனரும் போவார் 265

அன்னவர் கடந்துசென்று
அஃதுக்குப்பின் கடந்துபோவார்
எண்ணுள்ள இறையின்வேதம்
எந்த பயகாம்பர்தீன்
நின்னயம் பிடிபாடில்லான்
நிலத்தினில் குபிருமில்லான்
என்னுமே இலாஹியாக
இருந்திடுங்கூட்டந்தானே 266

கலைநெறி புகழும் வள்ளல்
முஹம்மது நபியும்மத்தில்
விலகிய பாவியுங் குபிரும்
வெகுகுலம் பரிஜின் தேவும்
மலைகட லதிர விண்ணோர்
அடித்தவர் சுக்குமாற்றால்
அலைகட லதிரொலிபோல்
அனைருமே மழியும் அய்யோவென்பார் 267

ஐயோவென் றமளிகூவ
அரிகண்ட மடாகம்பூட்டி
கையுங்கால் விலங்கு பூட்டிக்
கட்டிச்சங்கிலிபிடித்து
கைபினி விமையோரெல்லாம்
கசையுடன் கயர்பிடித்து
மெய்யென்றும் பாலன்சொல்ல
விழுந்தவ ரழுந்துவாரே 268

விழுந்தவர் நரகந்தன்னில்
வேகமாங்காவியாவில்
அளிந்தவ ரொலிவோடைக்குள்
ஆதியே அளிவில்லானே
பளிபுகழ் நரகமளி
படித்ததைப் படித்தோம் யாங்கள்
அளியவுமெரிநரகில்
அக்கினிக்கிரையானோமே 269

ஆகிய படைப்பனைத்தும்
அழுதழு தேங்கும்போது
ஏகவன் மாலீக்கென்னும்
இமையவர் வருவாரங்கில்
பாவியின் குலங்களான
படைப்புக ளனைமெயல்லாம்
வாகுட னுடலமெல்லாம்
அவர்கையால் தடவுவாரே 270

தடவவு முடலமெல்லாம்
தனித்தனி ரூபமாகி
சடங்களும் மிருகம் நாயும்
கழுதையுங் கரடி பூனை
அடங்கலுங் குரங்குமந்தி
அனேகமாம்பலவுருவாய்
இடங்களுந் தனித்தனியே
இருப்பிடம் நாகிலாமே 271

நாகினி லவர்கள் செய்த
நடப்புகள் பலனுக்காக
சிரியவெண் ணாருதேளும்
சினத்திடும் பாம்புகாலி
பெரியம னாகமொன்றி
லிடம்பெருங் காவியாவும்
உரம்பெரு மாலீக்கென்போர்
ஒய்ந்திடா அதாபு செய்வார் 272

செய்வகை சிரியபாவஞ்
சினத்திடும் பெரிய பாவம்
வையகப்பெரும்பிழை யறிந்து
வருத்தமும் நிரவியே செய்வார்
இவ்வகைப் பாவியின் விஷளம்
இனிச்சொல்வேன் கரைகடந்தோர்
வையகத்திசுலாங் குபிரிலுஞ் சேறு
வல்லனை வணங்கும் இலாஹி 273

இலாஹியின் கூட்டந்தன்னில்
எவ்விதக்கூட்டமுஞ்சரியே
உலாவிய குபிரென்றாலும்
உலகிசுலாமென்றாலும்
நிலைபெரு நன்மைதின்மை
நிரைசரியா யிருந்தா ரெல்லாங்
கலைநெறி சுவர்க்கமில்லை
கடியதோர் நரகுமில்லை 274

நரகத்தின் வேகம் வீசும்
நரைபுகழ் சுவர்க்கம் வீசும்
நிரையுதத் திருநடுவி
லிருக்கின்ற யில்லீன் சிச்சீன்
சரியொத்த திருநடுவில்
சாத்திய மலரின் காவில்
பருவத்தி விக்ருவென்ற
பளிங்கிமண் டபத்தினுள்ளே 275

பளிங்கிமண் டபத்தினுள்ளே
பசும்பொன்னு மனந்தமேடை
வளம்பிர வதிலிருந்து
வருத்தமுஞ் சுகமுங்காண்பார்
ஒளிவுள்ள மேனிதங்க
ஊனிநாளழிவுமில்லை
எழுதியே இலாஹியே சொன்னேன்
இறைநபி குலங்கடந்தோர் 276

கடந்திறை ஹவுதல் ஹவுதலான
கடலினி லுடல்முழுகி
வடந்திரள் பணிகள் பூட்டி
சுந்திசுத் துயிலுடுத்தி
இடம்பெரு மாளர்க்கெல்லாம்
ஈரூபு நபியழகும்
திடம்பெரு மவர் ரூப
தென்மொழி யனர்க்குமீந்தே 277

கலைபணி புனைந்து சொர்க்கங்
கதமபையின் பரிமணங்கள்
நிலைபெற ஒழிவு சூட்டி
நீள்மதி முகமிலங்க
இலங்கிய பதிணுருண்டு
எவர்களுமொருவயதாய்
நலநெறி ஒழிவிலங்க
ஞயகன் வகுப்பதாமே 278

வகுப்பது உடலமெல்லாம்
வானமீனொளிவிலங்க
மிகுத்திடுமுலமாப்போலே
யாவரு மொருவடிவாய்
மருத்துவத் துடையவள்ளல்
முஹம்மது நபியும்மத்தோரும்
தொகுத்தவ ரனருஞ் சொர்க்க
மாளிகை சேர்வதாமே 279

மாளிகை சுவர்க்கந்தன்னில்
முஹம்மது நபிக்குமுன்னுள்
நீளிய பிருதவுசென்ற
நிகரில்லா சுவர்க்கந்தன்னில்
ஊளியின் னமைத்தான் தாரூல்
கொலுத்தென்னு மேடைக்குள்ளே
ஆளிய மாணிக்கத்தால்
அரண்மனை எழுப்பினனே 280

(வேறு)

அரமனை சிதாமில் அஹம்மதுநபிக்கென்
னமைத்தது மாதிமுன்னளில்
சிறப்புடன் ரூசு மூசாக்கினிச்சுவர்க்க
சிங்காசன மீதிலிருத்தி
நிரப்பிய பதினல்நவூபத்தும்பூண்டு
நேருள்ள வடிவொளி துலங்க
நரை புகழ் முஹம்மது நபியும் முன்னிருந்த
நவமணி குருசெடுத்திருத்தி 281

இருத்தி சிங்காசன முஹம்மது நபிக்கு
ஈரேழு நுஹூபத்தும் பூண்டு
சிறந்திட லாஞ்சனை தாங்குபின் விழியினம்
யார்கள் சாபியும் நபியும்
நிறைந்திடு மவுலி மனுஜின் பரிதேவும்
நீழ்குடை அனர்புடை சூழ
நறைகமழ் சுவர்க்கஞ் சிங்காசன மீதில்
நவமணி குருசிருந்தனரே 282

இருக்குஞ்சிங்காசன முஹம்மது மலரே
அனைவரும் புடைசூழ்ந்திருக்க
வருத்திய தீன்குலப் பாவிகள் நரகில்
வாதைகள் படுவதை நினைந்து
நிருத்துமுன் பிழைகள் அனைத்தையும் பொருத்து
என் னும்மத்தைத் தருமிறையெனவே
கருத்தினில் நினைந்து முஹம்மதுநபியும்
கத்தனையடிக்கடி புகழ்வார் 283

## நபி சயனம்.

புகழ்வது இறையருள் முஹம்மது நபியும்
பிரபலன் றெருமொழியா
உகந்தவ னனரும் விழுந்தவர் சுஜிதில்
அழுகவு மிறையவனுதி
உகந்தவ ரனர்க்கு மசதியே விடுவான்
எழுபத்தீ ராயிரம் பெருவருடம்
அஹம்மது முஹம்மது நபியுமற்றனரு
மப்படி யுரங்கிடுவாரே 284

உறங்குவார் நபியும்மத்தோரும்
உம்மத்து ஜமாக்கள் முற்றும்
நிறைந்திடும் குபிர்குலமுற்றும்
பாவியின் விஷளுஞ்சொல்வேன்
பிறந்திறந்தெழுந்தோர்
பொதுவெனு மஹஷரில் பவி
அருந்திய நரகினி லழிந்தோர்
அமளியு மையோ வெனவே 285

கூட்டமுங் குபல்கூவென்ன
கொடுமையோ ஐயோவென்று
மூட்டிய கொடுநரகில்
அவர்களை யதாபு செய்வார்
விரட்டுமே கொடியபாவம்
விபரமுஞ் சரிநினைவா
எட்டியே கொடுமையெல்லாம்
எழுபத்தீராயிரமாண்டே 286

ஆண்டொரு எழுபத்திராயிரம்
ஆனபின் அவர்கள்வாயில்
தோன்றவ னுகைஸமத்த
துய்யவன் தூதரான
ஆண்டவர் மதினமாண்ட
அஹமது முஹம்மதென்பார்
மாண்டிடும் நரக வேகம்
மகின்றனப் பேருஞ்சொல்வார் 287

## பாவியின் வகை

சொல்லுவார் நபியின் பேரை
சொல்லவும் நரகமேவகம்
சொல்லவும் பெரும்பாடெல்லாம்
கொடுமையு மெழுமைதோன்ற
நல்லவர் பெயரை முன்னால்
நாவினி லுரைத்தோமில்லை
எல்லவரொரு மொழியா
இரைச்சலா முஹம்மதென்பார் 288

முஹம்மதென் றெழுந்த சத்தம்
மூளங்கவுங்கடலொலிபோல்
அஹம்மதென் றெழுந்தசத்தம்
மன்னரேகேழுந்து தூந்து
உகயமா நரகமேமுழும்
ஒக்கவே முஹம்மதென்னும்
தகமையாய் சுவர்க்கமுற்றும்'
தானதி ரெடுக்குமப்போ 289

அப்பொழு தருள் சுவர்க்க
மனைத்துமே முஹம்மதென்றுஞ்
செப்பிய தாநல் குலாத்து
சேரவே அதிரெடுக்கும்
நற்புகழ் நபிமுத்தோரும்
முஹம்மது நபியுல்லாவும்
ஒப்பில்லா சுவர்க்க முன்னுள்
உறக்கமு முளிப்பதாமே 290

முளிக்கவு மிறை தூதான
முஹம்மத ரிபசூலுல்லா
தெளிவுட னுலகிலீன்ற
தேன்மொழி பாத்திமாவும்
ஒளிவுள்ள வுலக மாதா
ஓடியேநபி பதத்தில்
எளியவர் நமதும்மத்தோர்
எமக்கென்ன பழிசெய்தாரோ 291

பளிக்கிறை நரகில்சேர்த்து
பாரபா மமளிசெய்யும்
ஊளியின் காலமாதி
ஓய்ந்தில்லை பெரியகோபம்
ஏழையர் வருத்தம் நீரு
மிரக்கத்தைக்கேளுமென்ன
தாழ்வில்லா முஹம்மதர்கேட்க
மற்றனைவரு முஹம்மதென்பார் 292

முஹம்மதென் றெழுந்த சத்தம்
முஸ்தபா முஹம்மதென்போர்
செகம்புகழ் சுவர்க்கந்தன்னில்
இருக்குஞ்சிங்காசனத்தில்
அஹம்மது முஹம்மது செவியி
லணுவெனக்கேட்குமப்போ
செகம்புகழ் முஹம்மதுநபியுஞ்
சீக்கிரமெழுந்துபோவார் 292

போகவும் நரகவாசல்
பொடிபடகபாடம்விண்டு
ஏகவன் ஜிபுரீலப்போ
இடப்புரம் துடர்ந்தேபோவார்
வேகமா மாலீக்கென்போர்
விழித்திட நபியின் மேனி
ஆகமும் வேர்வையாகி
அனைத்துமே நரகில்சிந்தும் 294

சிந்திடில் நரகமேழும்
செந்தண லவிந்தொடுங்கும்
முந்திய கொடியவேக
மனைத்துமே யவிந்துநூந்து
உந்தியே திரண்டிருண்டு
ஓடுமோ திசையை நோக்கி
எந்தநாள் கொடிய பாவி
இம்மையில் பத்துப்பேபரே 295

# நரகமங்கெதியாக யிருக்கப் பட்டவர் வகை

---

இம்மையில் கொடியபாவி
இறையவ னானேயென்று
தம்மையே வணங்கச்செங்கோல்
தரணிமுத் தாண்டமாவி
உம்மியுஞ் சுபியான் கன்ஞன்
பருரூது நம்ரூது
காமான் தன்னுடன் தகியான்
சத்தாருடன் பிரவூன்தச்சால் 296

தச்சாலுடன் பாளிமற்றும்
தன்னைத்தா னுயனென்றோன்
மிச்சமா யரூசு மாரூசு
மிதமில்லாச்சேனைமுற்றும்
வச்சிர வாளிதொட்டு
வல்லமை டெதிர்த்த பாவி
துச்சனன் சல்மான் சுல்மான்
அருக்காசு மருக்கானுமே 297

அருக்காசு மருந்தான் காண
ஐவருஞ்சேனைமுற்றும்
இருங்கிலி அசுகபு எமனுன
எண்ணிலாக்குத்தானிலுள்ள
முருக்கியா அப்சாருமி
முருக்கியாகிபுத்தியர்க்கதமின்தார
காரமு முசுதா ஆத்தி விருனன்
செருக்கியா சயிலாசேனை 298

செருக்கியா சயிலாமற்றும்
சினாத்தினில் முருக்கியாவும்
உருக்கிப் நரகமேழும்
ஒன்றில்லா தனைத்துங்கொண்டு
நெருக்கியே சுளிநெருப்பு
நிமிடமும் நிலைநில்லாமல்
அருக்கியே காவியாவில்
ஆழத்தி லோடிப்போமே 299

# நரகத்தினுடைய பெருப்பம்

ஆழமா காவியாவை
ஆழத்தி னெருங்கிகளும்
உளரியின் மலையாறென்றே
உருட்டியில் நரகிலோடும்
எழுபத்தீராயிரம் பெருவருடம்
இடைதனில் தரிக்கிடா கோடி
தாளத்திலிராந்தும் பஞ்சு
தவிட்டனு தாசிபோல 300

தூசிபோ லிரங்கிடும் மலையும்
தூரமுந் துலைந்திடுங்கடிதால்
பேசுதல்க்கரிதெனும் நெடிய
பெருநரகதினுடன் கொடுமை
தேசமி லறிந்தறி யாதவர் தனர்க்கும்
தெரியவு முரைத்திடும் விஷளம்
யாவுமுத் தனத்திலும் நிறைந்தோன்
வகுத்திடு நரகமேழே 301

எந்நரகதனில் சிறிதா
இருக்கின்ற நரகமொன்றில்
நீழிய அரவுகளனந்தம்
நெடுமுடி யரவுதேளும்
ஆழிய நரதுட நரவுபல்விடத்தி
லனுப்பரந்திடிலேழு
வானுமமீளிய தனைத்துமேதெரிந்தது
உடைந்துமே நிமிசத்தில் கருகிப்போமே 302

கருகிட விஷமுள்ள நெடுமர வாகுங்
காலியின் தேளுட கொடுமை
உருவுள்ள அரவின்மேல் ஊன்றிடில் கொடுக்கை
உருகிடுமெழுகனலெனவே
சிறுகிய நரகத்தின் அணலொரு அனுவை
செங்கதிருதையத்தி லூன்ற
உருகிடும் படுவான் முதல்மலை கடலும்
உலகமற்றனைத்துமே கருகும் 303

மற்றுள்ள நரகமேழில்
மதிப்பினு மிது சிறிதாகும்
மெத்தவு மிதில் நூறுபங்கு
மேலுள்ள நரகமொன்று
அத்திலுமொருநூறு பங்கு
மதிகமேல் நரகமாகும்
இத்திலு நூறுபங்கு
இதுக்குமேல் நரகமாமே 304

ஆகிய நரகமாறு
யணியணி நூறுபங்கதிகம்
வாகுடனரகமாறும்
வல்லவன் மொழியைத்தட்டில்
ஏகவன் நரகமாறை
எடுத்ததைக் காவியாவில்
வேகத்தி லருகா வைக்க
வெந்திடும் நரகமாறே 305

ஆறிலுங்கொடுமையான
அதிகமா நரகைக்காண
கூறிய காவியாவுங்
கொடுமையு மாயிர மதிகம்
வீரியகாவியாவின்
வேகத்துக்கதிகமாக
நூறுநூறதிகவேகம்
மனுவலரிதா மொயிலோடை 306

மொயிலென்னு மோடையுள்ள
உரம்பெருங்காவியாவில்
அயில் பிழை பெரியபாவி
அனைவரு மழியுநாளில்
சயிலொடு செருக்கிமற்ற
சேனையும் பாவிமற்றும்
அயல்கொண்டு நரகமேழும்
ஆழத்திலோடிப்போமே 307

ஓடியே காவியாவில்
ஒயிலெனுமோடைக்குள்ளே
கூடியே இபுலீசு முன்னாள்
குடிகொண்ட மலைப்பொதும்பில்
நீடியே பாவிகொண்டு
நரகமுன்னரையில்சென்று
சூடியே வழியடைத்து
அனைத்துமுன்னிருந்து போமே 308

இருந்திடு மலைப்பொதும்பில்
எண்ணிலா பாவியும் நரகும்
இருந்தமுன் னரகமேழும்
எண்ணிலாபாதாளந்தான்
சிரந்திடும் நபியின் வேர்வை
சிந்திய மூன்று துள்ளி
கலைந்தனல் விழுந்ததல்லால்
கடலினுமதிய நீரே 309

## நபி சபாயத்து செய்கிறது.

நீரது மடித்தெழும்பும்
நீளிய நரகமேழும்
தாரலை நீரையுண்டு
தாகமுங் களையுமாறி
சீரலை புகழும் வள்ளல்
சருவந்தை சுளற்றி கையால்
நீரலை நரகில் வீசும்
நீளம் படர்ந்து செல்லும் 310

செல்லவு நரகமேழில்
சேரமற் றுயிர்கள் யாவும்
மெல்லவ ரதைப்பிடித்து
யேரியே கரையிலாகி
சொல்லுவா ரனரு நபியே
சோதியின் தூதர்மெய்யே
வல்லவர் தூதர்பாதம்
வணங்குவதனத்துமன்றே 311

மண்டலம் புகழும் வள்ளல்
முஹம்மது நபிபொருட்டால்
விண்டுமுன் னாகளித்த
வெகுதன மனத்தெளுந்து
குண்டெனு மவுதல்கவுதற்
குளத்தினி லனர்நீராட்டி.
என்றுள்ள வுயிர்கள்யாவும்
எரியே கரையில் நிற்கும் 312

நிர்க்கையில் குபிரோரெல்லாம்
நேருள்ள சுவர்க்கவாசல்
ஹருசத்துரவுகோலாங்
கலிமாவுங்கையில்லாதாலே
வெக்கியே யில்லீனிக்காரபில்
மேவுவா ரிலாஹியோடு
மிக்கஜின் பரியுந் தேவும்
மெண்ணிலாக்கூட்டமற்றும் 313

## இபுலீசு தைரியங்கெட்டு நபிபாதத்தில் விழுந்து கெஞ்சுகிறது.

மற்றுள்ள ஷயித்தான் பூதம்
தெவருஞ் சிச்சின்சேரும்
கத்தவன் நபியும்மத்தோர்
கவுதலில் நீருமாட்டி
சுத்தமாய் பணிகள் பூட்டி
சுந்திசுத்துபி னுடுத்தி
எத்திசை புகழும் சொர்க்க
மாளிகை சேரும் நேரம் 314

மாளிகை வாசல்முன்னே
மரித்துநின் றிபுலீசப்போ
நாளெல்லாம் புகழ் நிறைந்த
நாயகன் நபியே கேளும்
ஊளியி லிறையனாதி
யும்முடனாதந்தன்னைத்
தோளனென் றிரு பிறத்தி
லமைத்தொளி யிலங்கு முன்னே 315

முன்னுள்ள இறையனாதி
முன்னுள்ளான் உருவமில்லான்
என்றுமே னுக்கத்தலிபா
இருந்தவ னிருளமையில்
முன்னுள்ள இறை யிருப்பு
முஹம்மதே நீரறிவீர்
அன்றுள்ள காரணங்கள்
அடியேனுஞ் சொல்லக்கேளும் 316

சொல்லிய விஷளமேதால்
சோதிதன் அனாதியாதி
எல்லவர்க்கிறையிருந்த
யிருளமையானையாகும்
வல்லவன் பாத்தைச்சுத்தி
வளைந்திருனானையாகும்
எல்லையி லிறை யொளிவி
லிருந்துநீர் பிறந்தீர் மெய்யே 317

பிறந்தபின் னுமதொளிவில்
பிறந்தவராதம்மெய்யே
இருந்துமுச் சுடருமொன்றாய்
இலங்கிட ஒளி துலங்கில்
சிறந்துமுச்சுடரொளிவும்
சேர்ந்து மனுப்போலென்மேல்
பரந்தருள் பாதாளத்தில்
பாரமாந் தகுத்திராவில் 318

தருத்திராமீதில் சென்று
தானவன் தனை வணங்கி
மிகுத்திடும் பாதாளத்தில்
இப்படி வுருவெடுத்து
வகுப்புட னருகிருந்து
வல்லவன் சமுகம் வந்து
துகைப்பெரு மிமையோர்க்கெல்லாம்
தோன்றலா யிருந்தேன் யானும் 319

இருக்கையி லாதம்பாதம்
இணங்கினன் வணங்காதாலே
கருக்குவார்மீக்காயீலும்
கால்கா மெனத்துணிந்து
உருக்கியே காவியாவில்
ஒயிலென்னுமுதைத்தாரப்போ
பருத்திங்கால் வளர்ந்து
பாதாள நரகிலானேன் 320

பாதாளம் தருத்திராவில்
பண்டுபோ லிறையைப்போற்றி
ஆதல முழுதமைத்த
ஆதியை வணங்கிக்கேட்டேன்
ஆதமுஹம்மதைப்போல்
அனத்துள்ள மனுக்குலத்ததிரு
எதிலு மடங்கிடாலானே
என்குலம் வளர்ச்செய்யென்றேன் 321

என்றுமே அழியாநாயன்
எனக்கிறை கொடுத்திடும் படியால்
பண்டுள்ள கியாத்துல்துகைபார்
பாரமாங் கடலில் சென்று
உண்டுநீ கடல் நீராடி
யுடலை முழுகாயென்றான்
அன்றுதான் கயாத்துநீரை
அருந்தியு முழுகினேனே 322

முழுகியே யுடலமெல்லாம்
உருட்டியே அழுக்கனைத்தும்
எழுதிலு மடங்கா தேவர்
எண்ணிலா வுருக்குலங்கள்
தழுவிய னவயர்சூலுடைய
தையல்போ லுருவாயெழுந்தேன்
நெளித்துமென் னிருதுடையும்
நெருக்கிடப் பரிமானப்போ 323

அப்படி யுடல் முருக்கி
இருதுடை, ஒருக்கால் நெருக்க
இப்படி இருபதாணு
மேந்திளை இருவதொன்றாய்
ஒப்பெருஞ் சேனையாக
உதித்தது கெவியைநோக்கி
இப்படி யாயிரத்திருநா
ரீண்டதுமென்குலமெனவே 324

வேகமாங்கொடிய ஜின்பரிதேவும்
வெகுதிரள் பூதமுமக்கள்
யேகமாச் செருக்கியா சயிலா
எண்ணிலாதெழுந்தபேய்க் குலங்கள்
ஏகமாம்பெருங்கட லுதுந்து
எழுந்திடுங் குலமெந்தன் மகவும்
மாகிய குலமும் யானும்
அனந்தநாள் அமசிருந்தேன் 325

இருக்கையிலெனதுபாலர்
எண்ணிலா தெழுந்திடுஞ்சேனை
குருபத்தர் குலத்தைதனடி
யனந்தமுந்தீனிலாச்சு
குருபத்தர் குலம்வதிலாய்
அனந்தமு மென்குலமாச்சு
பூருவ மிதுகாள் வகைக்கும்
பொல்லாங்கல்லா னினைந்தேனில்லை 326

இணைந்தில்லா யிபுலீசென்று
யாவரு மகத்தினீரெங்கும்
நணந்திரள் கொலுணுண்ட
நரகமு மளிந்துபோச்சே
அனந்தரு மென்பிழைகள் ஙூற்று
மாதியே பொருக்கும் நாயன்
இனந்திர ளிறையைக்காண
இரக்கத்தி லதிகம் நீரே 327

நீரெந்தன் கெதியே யென்று
நிகரில்லா பாதந்தன்னில்
சூரணி லதிக வல்ல
இபுலீசென்போன் சுஜூதுசெய்வான்
நேருள்ள முஹம்மதப்போ
நினைப்பவ ரிறையைநாடி
வாரெல்லா மரிந்தவல்லோன்
வசனமும் நபிக்குச்சொல்வான் 328

சொல்லிய வசனமேதால்
சுஜூதிட இபுலீசோனே
எல்லையா மில்லீன் சிச்சீ
னிகாவுக் காசாவைத்து
அல்லவா நரகமேழும்
அடைத்துத்தா ளிருகப்பூட்டி
வல்லவன் நபியும் வைத்து
வகையுடன் சொர்க்கம் போவீர் 329

## இபுலீசு நபியை மரித்து மோக்ஷம் பெற்றவிபரம்.

வகையுடன் சொர்க்கம் சேர
வல்லவ ருரைத்திடப் பரிமான்
பகையனு நினையா வள்ளல்
முஹம்மத ரிரசூலுல்லா
துரகெனு நரகவாசல்
அடைத்துமுத்திரையும் வைத்து
பகைவனும் பதம்பணிந்த
இபுலீசனை யருகழைப்பார் 330

அழைத்தவ ரிக்கருவென்ற
அதிசய மேடைதன்னில்
தழக்துக்கு அதிபதியாய்த்
தவுதாசனத்திருத்தி வைத்து
இளைத்திட இல்லீன் சிச்சீன்
நிக்காவுக்கு மாசா வைத்து
மழைதிரழ் குடை நிழற்ற
முஹம்மதை யனருஞ்சூழ 331

சுளியுள்ள இறையின் தூதர்
முஹம்மது நபியுல்லாவை
வெளியவ னருஞ்சூழ்ந்து
எங்குமங்களமே பாடி
ஒளிவெனுஞ் சுவர்க்கத்தாறு
மஹகுலூத்தினில் சேரும்போது
பனிசெய்யு மாண்டு வேங்கை
படைத்வ னருகில் தூங்கும் 322

(வேறு)

தூங்கிய வேங்கைதன்னை
துணிவுள்ள இசுறாயீலும்
அங்கவ ரிழுத்துவந்து
ஆடுபோலறுத்துதுண்டாய்
யிங்கிர்தச்சுவர்க்க நரகம்
இக்கறுவுட னில்லீன்சிச்சீன்
இங்குள்ள வாசல்தூக்கி
இனிமவுத்திறப்பதில்லை 333

இறப்பொடு பிறப்பில்லாமல்
எப்போது மிருப்பீர்யாவுஞ்
சிறப்புட னிசுறுகீலும்
செப்பிய ஞெலியினேசை
னிறப்பமா யனருங்கேட்க
நீதியி னபியுமற்றும்
மறைபுகழ் சொர்க்கமான
மாளிகை சேருவாரே 334

சேர்ந்தவ ரனுதரந்தன்னில்ச்
சிறந்தொரு வரியெழுத்து
ஆய்ந்தவர் நரகவாதி
அனேகநாளவதிப்பட்டு
ஏந்தலி னபிமன்றுடி
இவர்களுக்கிடமுண்டாச்சு
மூந்தியசுவர்க்கவாதி
யனைவரு மிதுவே சொல்வார் 335

வரம்பெரு முதல்குலத்தோர்
உரைத்திடு மெழுமையாலே
திரும்பவுங் குலத்திலான
எளியவர் சிறிய கூட்டம்
இருந்தமுன் னரகைக்காண
எழுபது கவலையாகி
அவர்நெற்றி வரியால் ஞானி
யனர்முகம் கவிந்தே நிற்பார் 336

கவிழ்ந்திடு முகத்தோரெல்லாங்
கற்றவன் பாதத்தைனுடித்
தவுள்ந்திடும் நரகைக்காணத்
தகும்பெரும் நாணமென்னில்
அழிந்திடா மறையிரங்கி
• ஆதியின் ஜிபுரீல்தன்னை
நிகழ்ந்திறை பகீமத்தென்ற
நீதியின் கடல்நீர்தானே 337

நீதமாஞ் சிரகைத்தோய்த்து
நெற்றியின் வரியழிக்க
ஆதியில் சுவர்க்கவாதி
அன்றுபோல் அழகதாகி
சோதியின் சுவர்க்கவாதி
சுகமது பொருந்திமிக்க
ஆதியி னிரசூல்மற்ற
அனைவரென்றாய்ச் சேரும் நாளில் 338

(வேறு)

நாளினில் நபிமற்றோரும்
நவமனுமலக்கு ஜின்சுவர்க்கமாதும்
நீள்பதி சுவர்க்கஞ்சேர
அரசருக் கரசர்கோமான்
ஆள்மதி யிரசூலுல்லா
ஆதியின் தூதரான
ஏழைக்குமிரங்குங்கோமான்
எங்குமேநிறைந்தோன் தூதர் 339

# மகாமணி மவுலி சூட்டுதல்

எங்குமே நிறைந்தோன் தூதர்
எங்குமே நிறைந்தவள்ளல்
யெங்குல கனைத்துஞ்செங்கோல்
இருந்துலகாண்டு பின்னும்
மங்கியே முளைத்துவல்லோன்
மருஷரி விறைமுன்பாக
எங்குள்ள பாவிமுற்றும்
எழியவை மீண்ட சிங்கம் 340

சிங்கத்துக்கதிகசிங்கம்
முஹம்மத ிரசூலுல்லா
அங்குள்ளா னருசுஞ்சூழ
ஆதியின் சுவர்க்கமீதில்
எங்கினு முவமையில்லான்
இறையவ னருள்பெருந்தவுசில்
இங்கிர்த தாருல் கொலூத்து
இலங்கிய மேடைதன்னில் 341

இலங்கிய மேடைதன்னில்
இருத்துஞ்சிங்காசனத்தில்
துலங்குமுத்திரை ஒழிவு
லாஞ்சினை ஹுஹூவெத்தீரெழ்
நலம்பெர நிரைந்தருள் கோமான்
நவமணிக்குருசினி லிருக்க
அலங்கரித்தனர்நபி பதத்தினில்பணிந்து
அரசனு மௌலியுந்தரிப்பார் 342

அறிவினுக்கறிவாய் அமைந்தமெய்ப்பொருளாய்
அனைத்துயி ரனைத்துக்கு மருமறைப்பொருளாய்
உருவினுக்குருவாய் ஒருமறைப்பொருளாய்
உலகுயி ரனைத்துக்கும் ஒருதிருமறையாய்
பருதினுக்கரசாய் பகர்தலப்பதிவாய்
பகர்திரு மறையொரு பாமொழிஉத்தவர்
கருவினுக்கருவாய் நிரைந்திடும் பொருளின்
காட்சியிலுதித்த கண்மணியே
மகாமணி சிகாமணி மவுலி 343

முன்னொளி துலங்க முச்சுடரிலங்கி
முழங்கிய கடல்முத்து மயிலே
அன்னமே புருவே வச்சிரக்குயிலே
வணங்கிய குருகுலரத்தினமே
அன்னமே யருசில் விளங்கிய விளக்கே
அந்தவா னிருபித்தொளிவே
என்னமு தனத்துங்கள் பதத்தினில் பணிய இருந்திடும்
சுவர்க்கசிங் காசனமணியே
மகாமணி சிகாமணி மவுலி344

ஆதத்தி லுதித்து யணியணி தரித்த
அப்துல்லா லுதனில் முத்தொளிவே
மாதயரு மினு மகவெனப்பிறந்து
மற்றுயிர்க் கரசென சிறந்து
ஈதலம் புகழுமக்க மதினமும் நிரைந்து
இறையவன் வகுப்பதி லனைத்தும்
ஆதலம் புகழும் சிங்காசனத்தரசே
அரசருக்கரசமா மணியே
மகாமணி சிகாமணி மவுலி 345

என்னுள்ள பெரியவ னிறையருள் தரித்த
எண்ணிலா நபிக்குமுன் பின் முதலே
அன்னுள்ள யார்கள் அசாபுகள் அசனுடன்
அம்பியா அவுலியா ஒலிருத்தாபு
விண்ணுள்ள மலக்கு கூருனி ஜின்பரியும்
வெகுதிரள் மனுபல துயிரும்
நின்னையம் புகழசிச்சின் நிச்சயக்குருவே நிகரில்லா
இறையருள்தரித்த நீதமாமணியே
மகாமணி சிகாமணி மவுலி 346

அறிய விண்ணவர்குலம் அஹமதரெனவும்
அரம்பையர்க்கு ஹாமீது நபிகள் முஸ்தபா
பெரியவர்க்குமென யனைத்துமே ஹூவென
குபிறறி ஷத்தியென் இலாஹி லுள்ளோமெனவே
சபுறுனியில் அபுராமென
வேததவுருத்து யூனுன் பாரூக்கெனவே
சுரியானிஞ்சில் தாபாவினவே புருக்கான்
அரபியில் முஹம்மதென்றே திடும்வேதமா மணியே
மகாமணி சிகாமணி மவுலி 347

உச்சித பொருளே உடலுயிர் ருணவே
ஒளிவெனும் கமலமின்றெளிவே
நச்சரவாடும் நயனமின் நடுநிலை
நவமணிப்பொருள் நீதமே
உச்சிதப்பார்வையில் நினைவையும் மூட்டி
ஒன்பது வாசலும் பூட்டி
முச்சுடர் மூச்சினில் முளங்கிய காட்சி
முடிவில்லாதாடிடும் அமரமாமணியே
மகாமணி சிகாமணி மவுலி 348

என்னுள்ள பெரியவன் வகுத்துள்ளதனைத்தும்
இறந்துபின் னிறையுடன் கலந்து
பின்னுமே பிறந்திறை திருமுன்னே நிரைந்து
பிழைபொருத்திடத் தெளியனை யறிந்துநீ
பொன்னகர் சுவர்க்க பதிக்கதிபதியே
பிறப்பவர்க்கரசருக் கரசர் சிகாமணியே
என்னுமே சுவர்க்கசிங் காசனம்நிரைந்து
இருந்திடு மகாமாமணியே
மகாமணி சிகாமணி மவுலி 349

மன்னர் சிங்காசன கொலுச்சிறந்திருப்பீர்
மங்கை மணக்கோலமுடிப்பீர்
எண்ணுமே யழியா திறையவ னருளா
லனைவரு மனுதினஞ்சூழ
மன்னவன் வகுப்பனைத்துஞ்சிங்காசன
மகிழு மதாலத்து பாட்சா
எண்ணிலு மடங்கா தூலிநாளாசே
யாவர்க்கு மிருகண்மணியே
மகாமணி சிகாமணி மவுலி 350

ஒப்பினி லடங்கான் தூதர்
முஹம்மதைக் கொலுவி லேற்றி
இப்படி யனருஞ்சூழ
ஏத்தியே மவுலியைப்போற்றி
ஒப்பில்லா மதிமீனுெப்பா
யுயர்பதி சுவர்க்கம் நாட்டில்
மெய்ப்புகழ் பெருகியாவும்
விஷயத்தி லிருக்கும நாளில் 351

இறைதிருச் சமுக மீதில்
ஏழியவர் தனைமன்ருடி
நிரையவுஞ் சுவர்க்கஞ்சேர்த்த
முஹம்மது நபிதமக்கு
மரியமு மாசியாரை
மணமுடித் தாளி வாழும்
அறுநபி பவனிகூற
வகுத்தவ னினைத்தது தருவாய் 352

நினைத்துள்ள கருமமுற்றும்
எனக்குநீ யுதவியாக
நினைத்தது தவறிடாமல்
அனைத்துமே தருவாயெந்தன்
நினைத்தது பவிமலிய
நிதிபதிக்கதிசயமாய்
நினைத்தது முடியவுன்ஞல்
நிறுத்திமீய பரமே யாதி 353

ஆதியின் முதல்வனுதி
யஹம்மதை யமைக்குமுன்னே
பேரொரு குறையுந்தீர்க்கு
மிறையவ ஞதிநாயன்
சோதியின் வளமை முற்றுஞ்
சிறப்புமுன் னறிந்த நாயன்
நீதியா நபிக்குமஹஷர்ப்
பவனியும் நினைத்திருந்தான் 354

அலங்காரமாகவே யருசொடு குருசு
மஹஷர் வானுலகமேழுமற்றிறங்கும்
பலகா லுலகு பதினெண்ணாயிரமாலம்
பாதாள மாலமன்பதாயிரம் நகரும்
விலைகோடியான நவரெத்தினத்தாலே
வீடுமாட மேடைகளும் வீதியலங்காரம்
துலையா கதிர்மதிகள் கோடியெண்ணத்
துலையாத விண்ணவர் செப்புமலங்காரம் 355

நீத்தியே ஜோதியெங்கும்
நிரைந்தவன் ஜிபுரி கீலே
மாதைய ராசியார்
மரியமுமுஹம்மது நபிதமக்கு
நீதியின்மணிப்பவனி
யனைவரும் னிசமென்றறிய
ஆதியின் ஜிபுரீ லருசில்
அறைந்தனர் னிறைந்திறை முரசே 356

## பந்தல் அலங்காரம்

நிரைந்தெங்கு பரவெளியா
நிற்பவன் ஜிபுரிகீலே
சிறந்திடுங் குருசருசுஞ்
சிங்காரியுஞ் சுவர்க்கமுற்றும்
அறிந்திறை ஜிபுரில் மற்ற
விண்ணவ ரனத்தெழுந்து
குறைந்திடா சுவர்க்கமற்றனைத்துங்
குருசரு ஸலங்கரிப்பார் 357

இருந்திடு மிறையளுதி
எண்ணிலா மகிட்சியாகி
குறைநதி பலவகை
யனைத்திலும் நிரைந்தோன்
குரு முஹம்மது நபி
தமக்கும் பொருந்துமாசியார்
மரியமு மிருவரை புது
மணமுடித்திடுங்காட்சி
நிரைந்தநல் சுவர்க்க மனைத்தையு மிறையோன்
நீதியுஞ் சிறப்பிக்க னினைந்தான் 358

(வேறு)

அலங்காரமானசொர்க்க
மன்னகரைத்தீட்டி
நிலைகால் பவளச்சிர
மேல் வளையைப்பூட்டி
விலைகோடி ரத்தினமணியால்
பலகை பூட்டி
பலவர்ண ரத்தினமுத்து
மாலைச்சரங்கட்டி 359

கட்டி நவ ரத்தினத்தின்
மாலைச்சரந்தொங்கும்
விட்டுப்பன்னீர் சந்தணமுங்
குங்குமமுந்தெங்கும்
மட்டடங்கா கோடிகோடி
மாளிகைக ளெங்கும்
வட்டமதி சூரியபடம்
வாசலெங்குந்தங்கும் 360
தங்கச்சருகான பட்டு
ஆடையெங்குங்கட்டித்
தாலமெனும் சூந்திர
உலாந்தமொளி சூட்டி
அங்கதிக்கோல்
அசுமான்கிரிகட்டி
அணியணிக்கதிர்மதிமீன்
எங்கும்படமொட்டி 361

எங்குநவ ரத்தின
விளக்குச் சரங்கட்டி
இலங்குஞ்சொர்க்கமான
மலர்மான சரங்கட்டித்
திங்களொழி போல்கவிய
யனேகம்வகைகட்டித்
தீன்கமுகு பாளைமலர்
வாளைமரம்நாட்டி 362

நாட்டி வைத்தவாழை
நவரத்தின மிலங்க
நாலுதிக்குந் தீவெட்டியும்
பந்தமுந் துலங்க
நெட்டுபக வத்தியுடன்
மத்தாப்பிலங்க
நீளமலர் கனிவளியுந்
தேனொழிவு துலங்க 363

பட்டுக் குஞ்சங்கட்டியே
சரிகையு மிலங்க
பவளச்சரந் தங்கச்சர
மெங்குமுத்திலங்க
எட்டுச்சொர்க்க வீதியு
மிலங்கியே துலங்க
இமையவ ரலங்கரிப்பா
ரிப்படியுந்துலங்க 364

அலங்காரமான சொர்க்க
மன்னகர்கள் முற்றும்
இலங்கவே குருசொடு
அருசுமற்றனைத்தும்
துலங்கவு மலங்கரிப்பார்
விண்ணவர்கள் முற்றும்
ஆலநபி பவனிவர
நாயகனினைப்பான் 365

(வேறு)

நினைத்தவ ரகிமத்தென்னும்
நெருங்கஸல் ஒளிருத்தாலே
அமைத்தவெள் ளானையொன்று
அதுக்குப்பேர் மருபுதாகும்
சமைத்தனன் நெடிய ரூப
முடனும்பொன் படளத்தாலே
இமையவர் ஜிபுரீலந்த
கடலைவிட்டெழுப்புவாரே 366

எழுப்பும்வெள்ளானை தன்னை
இமையவர் ஜிபுரிகீலுங்
குழவெனு ஹவுதல்மீதே
கொண்டுடல் கழுவிநீராட்டி
ஒழிபிறந் தவுசுமெட்டாஞ்
சுவர்க்கத்தி லுயர்ப்பதியில்
வழிபெருந்தாரூல் கொலுத்து
வண்ணமாளிகைமுன்னுவார் 367

மாளிகைக்கொலுமுன்பாக
மஹாமூது வெள்ளானைமீதே
நீளிய உடல் முழுதும்
நிறைநவ மணியணிந்து
தாள்வில்லா துயர்ந்த ரட்டினத்தால்
தருமதுமேல் வைத்து
ஆளிய கடல்மாணிக்கம்
அவுதாவை மேலே வைப்பார் 368

வைத்ததுபுத் ததிய குஞ்சம்
வயிரவெண்டாளத்தாலே
முத்தெனும் சாம்வடத்தால்
அனைத்தையும் சேர்த்திருக்கி
மத்திரு பிரத்திலாரினம்
மாணிக்க கிளிக்கூடு வைத்து
முத்திரை தரித்தவள்ளல்
முஹம்மது முஸ்தபாவே 369

முஸ்தபா நபியே சுத்தி
முஸ்தபா ரெக்கீன் சோடினையால்
துனித்தொளி யனந்தங்கோடி
துலங்கிட நபியுல்லாவே
மஸ்தஉத்தரிக்கையேத்தி
ரத்தின மவுலிபூண்டு
சத்திக்கு முஹம்மதிரசூ
விருபுரம் கிளிக்கூடுதன்னில் 370

தானவ ளுதமவ்வா
தவநபி மங்கை மாதும்
வானவர் ணவர்கூருலீன்கள்
வையக ரவுலியாக்கள்
நானிலத்தனருங்கூடி
நாழிகை முளுத்தங்தேடி
தீனொளி கூறியாமீன்
திக்கெல்லாம் சலவாத்தோதி 371

ஓதியே விருதுமுற்றம்
ஒலித்திட முரசுவீணை
கோதைகூருணி மாதர்
கும்மியுங் குலவை பாடி
ஆதமு மவ்வாவோடும்
இபுராகிமு சாராநால்வர்
தாதையா மறிய மாசியார்
தனக்குகை கொடுப்பதாமே 372

கைப்பிடித்தெழுப்பி வல்லோன்
காசியி லதிகம்பெற்றோர்
வையக ரனர்க்குந்தந்தை
தாயுமே வாழ்த்தியேத்தி
சையது முஹம்மதிரசூல்
சார்பிருபிரம் கிளிக்கூடுதன்னில்
தையலார் ஆசியார் மறியம்
தனையிரு பரத்திலும் வைப்பார் 373

# பவனி சிங்காரிப்பு

இருத்தி யிருபிற மாசியார் மரியம்
எங்கள் நாயக முஹம்மது நபிதமக்கு
நிறைத்து பலபல சுவர்க்கத்துப்பணியும்
நிகரில்லா மணவகையனைத்தும்
கருதுஞ்சுவர்க்கத்தில் அதிசயமலரொடு
காரணச்சரத்தொடும் மாலை
நிறைத்தது முஹம்மதுமரிய
மாசியார் மூவர்க்கு மணிவார் மாலை 374

அணைந்தன ரவுதா தன்னில்
அரம்பையு மிருமருங்கிருக்க
மணந்திரள் யானைமேலே
மாகத பலகைபாவி
இணைந்திரு கொம்பின்மேலே
இலங்கிய வைரத்தாலே
கணந்திரள் பலகைபாவி
கம்பமு மனந்தம்நாட்டி 375

நாட்டியே வளையல் பூட்டி
நவமணிப்பலகை பாவி
ஏட்டினி லடங்கா சொர்க்கம்
பொழுந்தது பட்டாடை கட்டி
கூட்டியே மாகதமுத்துங்
குஞ்சமுஞ்சரங்கொத்தாட
பாட்டினி லடங்காப்பட்டு
பருதாச்சுத்து மணவஸ்த்ரமே 376

அணைந்திடும் பருதாப்பந்தல்
அதுக்குள்ளே பவனியுள்ளோர்
இருப்பவர் சலவாத்தோதி
யாவரு மகிழ்ந்து போற்ற
நிரைந்திடு நவமணுவும்
மலக்குள்ளே சுவர்க்கமாதுஞ்
சிறந்திடும் பவனிவள்ளல்
முஹம்மது நூறொளிதுலங்கும் 377

நூறொளி துலங்கும் முஹம்மதர்பவனியின்
வருந்திறள் சூழ்சபையில்
பீருமுஹம்மதன் திருநெறி நீதம்
பிரபந்த மனர்சபையறிய
கூறவு முஹம்மத ரிரசூல் மகிட்சி
கொண்டன பேருமே புகழ
பெருமையு மிருபதியறிய
பிரியம்வைத் தடியேனைப் பேணி 378

பேணியே நபிபதத்தில்
பிரியம்வைத்திடுமடியேன்
ஊணிய தருமமெல்லாம்
ஒன்றுநூறனந்தமீந்து
நானிலத்தவர் மெச்செச
நபிதயவெனக்குமிக்க
பானிலம் புகழும் வள்ளல்
பவனியுமெழும்பும்போதே 379

போதவு முரசுவீணை
புகண்டமல் லாரிதும்பி
நாதமும் தாரை சின்னம்
நலுவத்து நவநீதமுங்
கீதமும் விருதுகொடி
கெடியொலி முளங்க வோசை
ஊதலுஞ் சுவர்க்கமுற்றும்
ஒலித்திடுமோசையாமே 380

ஓசைகின்னாரங்கொம்பு
ஒலிபுமெக்காளபம்பை
வீசுமல்லாரி தப்பு
விரணமுக் தவிலுந்துத்தி
வோசைகள் சுவர்க்க முற்றும்
ஒருவர்சொல் லொருவர் காதில்
வீசமு மனுபுங்கொள்ளா
வெகுதிசை பார்த்ததெல்லாம். 381

பார்த்திடுந் திசைகளெல்லாம்
பகவத்தி தீவெட்டியாம்
தோத்திய கதிர் மதிமின்ன
தொளி துலங்கிவொன்றாய்
நாற்றிசை விவாவில் ஹம்ந்து
நடனமுங்கொடிபத்தாட
வெத்திவெண் குடைமேகங்கள்
வெகுதிசை திரண்டே நிற்கும். 382

நிற்கவானவர்களெல்லாம்
நெடுங்குர லலங்கரித்து
மிக்க கட்டியங்கள் கூற
இருபிரங்கவரி வீச
ஒக்கவெண்சாமாரும்
ஒலிவலம் புரியும் வாங்கு
திக்கெல்லாம் முஹம்மதென்றே
ஜெயகெண்டி முழங்குந்தானே 383

முழுங்கவும் வேதநீதம்
முன்னவன் ஜிபுரியீனும்
விளம்பும் வெள்ளானையான
வெற்றிமஸ்தகத்திலேரி
எழும்பவும் பணிசொர்க்க
மடந்தரு குலவை கூவ
வளமது சுவர்க்கமாதர்
வருமலங்காரஞ்சொல்வேன் 384

வேறு

பாரமுள்ள மேனியர்கள் பன்னீரில் மூழ்கி
பவள மெயகிர்க்கோவை யிதள்வாய்முகங்கழுவி
மேருமதி மின்னொழி போல் பல்லுகள் விளக்கி
மேகவர்ண காவியந்தப் பல்லிடையில் துலக்கி
பாரமுள்ள கூர்விளிக்கு மஞ்சணைமுந்திட்டி
பரிமள சுகந்தமுடல் முத்துமலர் சூட்டி
நேயமொரு வர்ணமுள்ள சுந்திசமும்புனைந்து
நெற்றிதனில் வச்சிய வனைத்திலதமிட்டார் 385

இட்டவர் திலதமே விலங்குமதிப்போட்டு
மெட்டுச் சொர்க்கமுற்றுமே மயக்கும்வாடையிட்டுப்
போட்டுமே ஒளிதுலங்குமான மணிநட்டு
புரமதிகமான மொளிப்பாடகமுமிட்டு
மட்டதிக மிருளான குழல்முடி சீவி
மாணிக்கமு முத்தாரத்தினக்கொத்துமணமேவி
இட்டெழுப தாயிர மிலங்குபின்ன லொற்றை
இருபாதம் வரை நீக்கும் பின்னல்சடை முத்தே 386

மூத்து சொர்க்க மானமண வாடைமலர்வைத்து
முத்துநவரத்தின மதுதுலங்குஞ்சாங்கொத்து
பத்தியிருளதிகமான முடிபின்னி
பட்டுத்துட ரொத்தபணியுஞ் சிரத்திலணி
சுற்றுநவ ரத்தினமு மாணிக்கமுமிழைத்த
சொல்லத்துலையாப்பணியு சிரமுழுதும் வைத்து
முத்துநவரத்தின மிழைத்தபணியுத்து
முகஞ்சிரந்தனம் புயமுழுது மவர்வைப்பார் 387

வைத்தவானவர் வடமாலையுடல் பூட்டி
வலமிட இருபுரம் வைரநகை சூட்டி
பத்தினியளந்தமுத்து ரத்னம்பட்டுள் நட்டுமணமிட்டு
பட்டுநெறி யிட்டகசமே லொழிவுபோட்டு
முத்துநவ ரத்தினமும் முத்துச்சரங்கோர்த்து
சூரிய னிலங்குஷதனமேல்ப்பதைக்கம் வைத்து
ஒத்தநா லிடக்கிப்பட்டு பாவாடையுமிட்டு
ஊனிமதி போலொழிவுஒட்டியாணமிட்டே 388

இட்டவள் நடன இருபாதம்சிலம்பிட்டு
இலங்கும் வெள்ளியான இருநிரையுமிட்டு
மட்டொளி துலங்கு இருபாதசரமிட்டு
மாணிக்கமழுத்துங் குடையுமுடி மேலிட்டு
கொட்டுகுரல் வீணையிட மாமவுகையில தொட்டு
கூவுங்குரல் வீணைவலக்கையா லொலி யிட்டு
விட்டவர் நடந்து மாளி வாசல் வழிப்பட்டு
வேதகபி வீதிவர மாதர் கோலமிட்டே 389

மாது கொலுமண்டபங்கள் முத்தாலலங்கரித்து
மங்கைத்தலைவாசல் வந்து திங்கள்போலே தரித்து
வீதிதனில் சந்தணமுங் குங்குமந்தெளித்து
விட்டெழுதிச் சித்திரம் விதம்பணி னிரைத்து
சோதிசொர்க்கமான மலர் சூட்டியே நிரைத்து
சொல்லரிய வச்சிரத்திறல்குருசுவைத்து
சோதிமதி போலவெற்றி கும்பமதில் வைத்து
சுகந்தபன்னீருத்து மணமுத்து மேனிதனை நிரைப்பார்

நிரைத்தகும்பமேலே வர்ணத்தால்கவசமேத்தி
நீழ்ஒளிவு சூழ்வரன்னப் பானமலரேத்திச்
சிறந்தசொர்க்க மானமலர் மாலைச்சரஞ் சுத்திச்
சேனைகொடி சந்திரனை சூரியனைமாத்தி
இருத்திகும்பம் வைத்தமட வார்கள் கையினேர்த்தி
ஏந்துதட்டம் பச்சை மரகதஒளி தோத்தி
சிறந்திடவு முத்துநவ ரத்தினம் நிரைத்து
சென்றுவழி பார்த்திருப்பா ரேந்தியே ஆலாத்தி 391

ஆலாத்தியான தட்டமேந்தியேந்தி நிற்பார்
அணியணியாய் கூறுனி சேனைவந்து நிற்பார்
காலாட்டமாய்நடன மாடிக்கொண்டு நிற்பார்
கன்னியர்கள் ஆடிப்பாடி பந்துகளடிப்பார்
கோலாட்ட மாடுவார்கள் கும்மிகளடிப்பார்
கூடிக்கூடிப்பெண்களெல்லாம் கொண்டாடிநிற்பார்
மா[illegible]குழலாடியாடி பாடிக்கொண்டு னிற்பார்
மன்னரிர சூல்பவனி பார்த்துவழி நிற்பார் 392

வழிபார்த்து நிற்கும் மாதுயேந்தி யாலாத்தி
　　வள்ளல் நபிவீதிவர வெங்கும் விளக்கேத்தி
ஒளிவாக்கதிர்மதிமீன் ஒளிவையுந்தான் மாத்தி
　　யுத்தமடவார் முகத்தின் பல்லொளியூனேத்தி
பழியாக் கதிர்மதிக்கு நூறுபங்கு வுயர்த்தி
　　பக்தினிலிறை நபிதனையே பாடிப்பாடிப்போற்றி
தெளிவான சொர்க்கமடவார்கள் மெத்தநேத்தி
　　தேடிநிற்பார் மாதரெங்கு மோடியோடிசுற்றி 393

ஓடியே வுலாவியே குலாவிநிற்பார் பெண்கள்
　　ஒருவரை யொருவர்கள் தழுவி நிற்பார் பெண்கள்
கூடியே நபிவளமை கூறிநிற்பார் பெண்கள்
　　கொங்கை தங்கக்கும்பம்போலக்குலுங்குதனப்பெண்கள்
கோடி கோடி மாதுவந்து பந்திநிற்கும்பெண்கள்
　　கொவ்வையிதழ் வாய்மலர் கோரிநிற்பார்பெண்கள்
சாடிசன்னை யாய்ச்சரச மாகநிற்பார் பெண்கள்
　　சந்தோஷமாய் சிரித்துப்பாடிநிற்பார்பெண்கள் 394

பாடியாடு மாதரெல்லாம் பத்தியடிவைக்க
　　பரிமள சுகந்தனமு முந்தியிலேதேய்க்க
கூடியேநடக்கும்பெண்கள் முத்துடல் குலுங்க
　　கூடிய வளமை மாதர் அங்கமுங்குலுங்க
நீள்சொர்க்க வீதிமாது னீள்முகமிலங்க
　　நினைவு நபி மீதில் மாது வைத்தவர்கலங்க
கோன் கோடியானவொளி கொண்டாடிலங்க
　　கோன்றுலங்கு நபிபவனி யுத்த பணிவகுத்தே 395

அணியணிச் சிவிகை திறமேள தினையனந்தம்
　　ஆடியே கோடிநிற்பார்களனந்தம்
நவமணி கவிகைத்திர னெத்தியனந்தம்
　　இனைதரும் கூறுனியனந்தம்
இலங்கும்பட்டை சொட்டை விருதேத்தியனந்தம்
　　அனந்தமில் லனந்தமிலா னந்தம் விருதானோர்
ஆலநபி ஏறியே பவனி அந்தரங்காணுதென்பார்
　　அந்திரத்தில் காணுகிது பவனியொளி யென்பார் 396

அடியன்னமே எனக்குச்சற்றே தோணுதடியென்பார்
எத்திசை யென்றுபெண்கள் எங்கே யெங்கே யென்பார்
எல்லவ ரொருமுகமாய் யெட்டி யெட்டிப் பார்ப்பார்
சந்தோஷ மாகப்பெண்கள் சலவாத்துஞ்சொல்வார்
தஸ்வி மிட்டெழுந்துநின்று சல்லிஞ்சல்லியென்பார்
அந்தமதி யோர் மின்னார் பந்திமுற்றுங்காண
ஆதி நபி வீதி வாரார் சிங்காரஞ்சொல்வேனே 397

சிங்கார மாகவள்ள இப்பவனி
ஜெயமுழுங்கும் சுவர்க்கமும் பவனி
மங்காத சந்திரன் சூரியன் கோடி கோடிபோல
மாணிக்க முத்து நவரத்தினத்தினுலே
எங்குமே துலங்குஞ்சொர்க்க மெட்டுமே யிலங்க
யாவரும் வெள்ளானையின்மீது தரித்திருக்க
அங்கு ஹவுதாச்சு தாவை மாதரெல்லாங்கண்டு
ஆலநபி வீதிவர செய்திகளை ஓதியாதிமுரசிட்டார் 398

ஆதியருளாலே நபிவந்த வரலாறையோதி
ஓதியெல்லவரும் சோதி கிட்டலானர்
அதுமுதலான நபிநீதி வளஞ்சொல்லி
வீதியிலே நின்றனரும் வெற்றி முறசிட்டார்
நீதமிறை முன்னணிமன் முடியதைச்சொல்லி
பாதையிலே னின்றனரும் பாறமுரசிட்டார்
ஏதுங்குறையாப்பவனி யேரியசிங்காரமா
எல்லோரும் பாடியே நாடிச்செல்ல முறசிட்டார் 399

(வேறு)

முரசினேசையும்
பூதண்டத்தோசையும்
உருக்க மாதர்கள்
பேஷா ஓசையும்
வரிசை வீணை
மல்லாரியி னேசையும்
பருக மாதர்கள்
பாடுமோசையே 400

பாட்டிஞேசையும்
பந்தடி யோசையும்
நாட்டிமாதர்கள்
நடனத்திஞேசையும்
போட்ட ஆபாணத்
தடியோசையும்
கூடி பெண்கள்
குரக்குயிலோசையே 401

ஓசை கொண்டு
சயிதுகளுயிரெல்லாம்
பேசிக்கூவி
முஹம்மது நாதர்
நேசமான
சுவர்க்கத்துச்சேலைகள்
பூசி வாடை
பூத்துத்துளிரமே 202

வீசும் பன்னீர்
சுவர்க்கத்துப்பாடங்கள்
நேசமான பொழுது
நிலலொன்ருய்
வாசல் வந்து
உலாவலும்
ஓசைக்குள்
சொர்க்கமான 403

எல்லாம்புக
ளதிகநாடது
நால்மறை
நவநீதத்திஞடது
கோடி கோடி
தவத்துள்ளோர் நாடது
கூடி யுள்ளவர்
வீயநாடது 404

நாடியுத்தவமுள்ள
நாடது
நபிகள் முத்தோற்றங்கு
கூடிய நாடது
பாடிப்பாடிப்
புகழ் வுகந்திடும்
நபிமுஹம்மதிரசூல்
சொர்க்க நாடுவளமே 405

விருத்தம்

வளம்பெரும் சுவர்க்கம் நாட்டில் வல்லவன் நபியுல்லாவும்
இளமையிலாசியார் மரிய மிருவரு மிருமருங்கில்
எழும்பிய பவனி யிந்தா வருகுது வருகுதென்றே
ஒளிவுள்ள பவனிசுவர்க்க மாதையர் யாருங்கண்டு
தெளிவுநல் மொழியார் முற்றும் திருக்கையுமடித்துக்கொட்டி
முளங்கியே யனருமொன்றாய் முஹம்மது புயம்பூரிக்க
அழகுள்ள பவனிபூண்ட பணியெல்லாஞ்சிதரிச்சிந்த
களிம்பர வளமை பேசி யெழும்புவார்விளம்புவாளே 406

(வேறு)

விளம்புவார் கூறுனிமாதர்
வெகுமிட மனைத்துமொன்றாய்
தளம்பெரும் கவிஞர்போலே
தையலரனருங்கூறி
களம்பெருங் கூட்டம்போலே
காரிகை யனைத்துமொன்றாய்
வளம்புகழ் சுவர்க்கநாட்டில்
மங்கையர் கூடுவாரே 407

கூடியே கோதைமாரும்
கொண்டொரு மகிட்சியாலே
நாடியே யொருமுகமாய்
நின்றுதான் பவனிபார்த்து
சூடியே முதல் வளமை
அறிந்தில்லா ளறிந்தபேரை
சூடியே நபிவளமை
சொல்லென்பாள் சொல்லுவாளே 408

தொங்கல்

அன்னமே இதோ வருகுதாச்சரியமென்ன
ஆசியார் மரிய மருமூது கலியாணம்
வண்ண வண்ண வாழ ஒளிவானமட்டுமென்ன
வள்ளலவுதாமாணிக்க வச்சிரவொளி மின்னல்
இன்னமு மிருபிங்கிக் கூட்டுக்குள்ளே ளென்ன
ஏந்திழை யாசியார் மரியமல்லவோ பெண்ணு
என்னத்தின்மேலேரி வருகுதடி பவனியென்ன
ஏகன் மருமூது வெள்ளை யானையடி பெண்ணே 409

இருபத்தாரு உலமா முஹம்மதவர்பேரு
எத்திசையும் புகழும் ஒளிவான பகாமீரு
ஏகபெரி யோனொளிவு
இரங்குதந்த நூறு
முத்து அவுதாக்கிரங்கும் பத்தொழிவாரு
முன்னமவன் கிருபை நூறிரங்குதடி பெண்ணே 410

தையலே இவருடைய பேராரு சொல்வாய்
தாருல் கொலூத்தாசேரெங்கள் நபியுல்லா
எவ்விதமா வந்தவரிவர் வளமைசொல்வாய்
யாவையு மமைத்தவன் அழித்தெழும்புமல்லா
இவ்வுல கமைக்குமுன் னிரையருள தெல்லா
இலங்குமொழி வாய்த்திரண்ட யெங்கள் நபியுல்லா
செய்யும்புக ழானயிறை தோழரிலுமேலார்
செய்யது முஹம்மதிர சூலுமெற்ற நல்லார் 411

நபியனந்த முற்றவர்க்கு மெத்ததிகமானோர்
நாயனவுலாக்களைந் திருக்குமயிலானோர்
நபியாத மிபுராகி இசுமாயில் கிளையானோர்
நாற்றிசையும் புகழுமப்துல்லா நெத்தி முத்தானோர்
எவ்வுலகுக்காமீனு ரீன்றமகவானோர்
ஏகநபி ஆகிருச் கதிபதியுமானோர்
ஹபீபு நபியா மஹூசர் பவனி யொழிவானோர்
ஹாச்சிபெற்ற வள்ளல் மஹூமூதன்னமேகேளாய் 412

அன்னமே அவுதாவி வலக்கூட்டிருப்பத்தாரு
ஆசியார் மூசாவை முன் வளத்தமாதர்
இன்ன மிடப்புரத்தில் கூட்டியிருப்பதாரு
ஈசாநபி தாயார் மரிய மாகுமவர் பேரு
மன்னரவு தாயிடத்தே கூட்டமெத்த ஆறு
மற்றநபி மார்களு மற்றும்
வள்ளலவுதாவலத்தே கூட்ட மெத்த ஆறு
வல்லகுத் தாபுஹலி அவுலியாக்களாகும் 413

மன்னரபு தாப்புரத்தின் கூட்டமெத்த ஆறு
மற்றுமுள்ள வானவரில் மெத்தப்பெரியோராம்
மன்னரவுதாமுன்னே யிருக்குமவராரு
அபுபக்க ருமருதுமா னலியார்ரவர்களுமாகும்
முன்னணி யிருக்கும் வெகு கூட்டங்களுமாரு
முஹம்மது மனையார் மற்ற உற்ற குலத்தாரு
முன்னேகொம்பு மேல்குருசி லிருப்பதவராரு
முஹம்மதிரசூலு மற்று மெற்றதிசும் பெண்ணே 414

மஸ்தகத்தை முன்னடத்தி வாராதாருபெண்ணே
மன்னனிறை தூது ஜிபுரிலல்லோகண்ணே
அஸ்திரம் பூண்டு பின்னு லிருப்பதாருபெண்ணே
வானவர் மீய்காயி லிசுறுயிலடி கண்ணே
துஷ்தணிந்து பின்னுலே யிருப்பதாருபெண்ணே
துய்யமராச னிசுராயிலடி கண்ணே
வெற்றி முன் குருசுமேலிருப்பதாரு பெண்ணே
துய்ய அசனுசனும்பாத்தி மாவுமடி கண்ணே 415

விருத்தம்

இன்னவகை கூறுனியாவுங்கூடி
எங்கள்நபி பவனிவரும் பாதை நாடி
நின்றபெண்க ளனைபேருங் கூடிக்கூடி
நிகழ்த்துவார் நபிவளமை கோடி கோடி
எண்ணரிய பவனி முன்னே யனருங்கூடி
ஏந்துந்தட்ட மாலாத்தி இருகையாடி
மன்னரிரசூல்பதத்தை மகிழ்ந்துநாடி
வாழ்த்துவார் ஆலாத்தியாடி பார்டி 416

எண்ணுள்ள பெரியோன் அணைத்தையு மமைக்க
இறையருள் மகிட்சியும் நிறைந்து
தன்னுள்ள கிருபை ஒளிவந்திடுகில்
தகுபதியனைத்தருள் நிறைந்து
மண்மணியாகி காரணப் பொருளை
காட்சியும் சூட்சியும் நிறைந்த
தன்னுள்ள கிருபை ஒளிவழிந்திடுகில்
தகுபதியனைத்தருள் நிறைந்து
கண்மணியாகி காரணப்பொருளை
காட்சியும் சூட்சியும் நிறைந்த
முன்னவ னொழிவி லுதித்திடும் நபியே
முஹம்மதை யேத்தி ஆலாத்தி போற்றி 417

வாருகள் நிறைந்த வல்லவ னொளியில்
வடிவுள்ள அஹம்மது நபியே
நேருள்ள இறையோன் திருமுன்னே
நிருத்தினினைந்திடும் படிமுடியெனவே
காரணப்பொருளாய்க் கடல் பத்துந்தொழுது
காமிதா நாமொனு மொழிவாய்
ஆரணப்பொருளை யறிந்துமுன் னுரைத்த
அஹம்மதை யேத்தி யாலாத்தி போற்றி 418

சூட்சியின் மயிலை துலங்கிடும்புராவே
தொழுதிடும் மாடமின் குயிலே
ஆட்சியு மனுகா வச்சிரப்புயனே
அன்னமே அமாபதி குருவே
தாட்சியு மனுகா அரசினில் விளக்கே
தங்கவா னிலங்கிய மீனே
காட்சிம் நிறைந்த காரணப்பொருளே
ஹாமீதை யேத்தி யாலாத்தி போற்றி 419

எல்லவர்க்கரசே யுமதுட பதத்தில்
யாவருந்தொழுமென நிறுத்தி
நல்லவர் சுவர்க்கசிங் காசனத்திருத்தி
யாவையு முமதுமுன்னிருத்தி
எல்லவா தனிலும் வுமதுட பதத்தில்
இணங்கிடார்க்குயிர்க்குலம் பிரத்தி
வல்லவன் றானே யாவருக்கரசே
வள்ளலை யேத்தியாலாத்தி 420

நானிலத்தாதம் முதுகினிலுதித்து
நபிமுல மனத்திலும் பதித்து
இன்னிலத் தப்துல்லா மகவெனஉதித்து
யாவரும் நபியெனத்துதித்து
மானிலம் நிறைந்த தனத்துயிர் கருத்து
மறையுங்கள் நெறியென துதித்து
தானவன் றாதே தாணிமுத்தாசே
மேல் ஏத்தியாலாத்தி 421

முன்னவ னருசில் கவுசுடனருசிறந்தீர்
மொழிந்துபின் னுலகத்தில் நிறைந்தீர்
விண்ணுல மதியே யனைத்துநீர் பகுந்தீர்
விக்கினமானதை யுடனுடன் பொருத்தினீர்
அன்றுள தசையை பெண்ணுரு வெடுத்தீர்
அனேகமுங் காரணம் விடுத்தீர்
மன்னுலகாள மக்கமாநபியே
மன்னரே யேற்றியாலாத்தி 422

துங்கவா னுலகு மொருகுடையாளர்
தோற்றிய மகுசரு மீதில்
எங்குள்ள தனைத்து முருகிடும்போது
பொங்கிய இறைவாமீதில்
அங்குமன்ருடி யனைரையுங்கூட்டி
யருள்பதி சுவர்க்கமென் கெதியில்
எங்களைச்சேர்க்கும் யாவருக்காசே
யாசீமே யேற்றிஆலாத்தி 423

ஒப்பி னடங்கா துமதுட தீனை
உலகினி லறிந்திலாக்குலங்கள்
தப்பியே நரகினி லிருந்திடும்பேரை
தங்கள்மன்ருடி நற்பதியில்
எப்போது மழியா திறையருள் நிருத்தி
யாவருக்காசருக் காசே
சுப்பினை நிறைந்த காரணக்குருசே
ஹாசிமே யேத்தியாலாத்தி 424

மகுத்தெனுங் கொடிய வேங்கையை யறுத்து
மன்னுயிர் அனத்தொரு பொருத்து
தருத்துடன் சுவர்க்க கொலுவினில் தரித்து
தாங்களுங் குலங்களுந் தொகுத்து
இகத்தொடும்பவனி இலங்கிடும் ஒளிவே
யாவர்க்கு அமரு மாமணியே
வகுத்தவன் தூதே முஹம்மது நபியே
வள்ளலே யேத்தி யாலாத்தி 425

இன்னுள்ள பவனி முடித்திடுவோமே
யாவரும் வருந்திய தனமே
என்னுள்ள குலங்கள் அனர் புடை சூழ
இருந்தா சாள்வீர் தினமே
என்னுள்ள பொருளே எங்களின் கெதியே
யாவரி லிலங்கிடும் அமருமாமணியே
னிண்ணைய முமது பலகெதி நிசமே
யேற்றியாலாத்தி 426

முளங்கிய சுவர்க்கமாதர்
முத்துமாலாத்திபாடி
எழும்பியே பவனிவள்ளல்
ஏறும்வெள்ளானை
தளம்பிர நடத்ததில் ஜிபுரியில்
தக்கவன் அரசுவர்க்கமுற்று
வளம்பெரும் வீதியெல்லாம்
வலஞ்சுற்றி பவனிவந்தார்கள் 427

சுத்திய சுவர்க்கமெட்டும்
சொல்லிய தாருல் கொலூத்தும் திசைபவனி
சுத்தும் அன்பதாயிரம்
வருடம் பவனிசுற்ற
கத்தவன் தாருல் கொலூத்து
காரண கொலூவில் வந்து
எத்திசை புகழும் வள்ளல்
இரங்கிடும் பவ்னிதானே 428

இரங்கிய முஹம்மது நபியிருப்பதில்
ஏந்திழை யாசியர் மறியத்தை யிருத்தி
திரங்கொள்ளுஆதம் ஹவ்வா
இபுராஹி மூசாரு நால்வர்
மருங்குள்ள ஆதமஹவ்வா
மரியத்தின் தாய்தகப்பன்
வரம்பெரும் மாசியருக்கு
இபுராஹி முசாராவாமே 429

ஆகிய மாதைய ரிருவருக்கு
அன்னையும் பிதாவுமாகி
ஏகவன் ஜிபுரி லப்போ
எல்லவர்களுக்குமோதீன்
வாகுடன் மீக்காயீலும்
வல்லவன் ஹத்திபாகி
ஏகவன் வாதரூசன்
இசுரூகீலும் சாட்சி 430

தானிருபெரும் சாட்சி
தம்பிரூன் னுகயம் காட்சி
நானிலத்திலவரும்மீட்சி
நபிமணக்கோலம் காட்சி
வானவ ரிசுரூயில் மீக்காயில்
வல்லவனுமமோதி
வானக கோமான்
திருநபிபேரோதி 431

ஓதிட பாத்திகாவை
உயர்த்திவிண்ணோர் மிக்காயிலும்
ஆதியின் மலக்குநானு
மனைகவிண்ணோர்கள் தானும்
ஆதமும் நபிமற்றோரும்
ஆதியின் படைப்பனைத்தும்
நீதமா ஆமீன்கூறி
நிறைந்திடு முஹம்மது மணமே 432

மணமது முஹம்மது நபிக்கு
மறியமாசியர் தனக்கும்
இணையில்லா னருள்மணம் முடிய
யாவரும் நபிசின் பரிதேவும்
அணையவின் னவர்க்கதிர்
மதிலெவுரு மருசோடு குருசுமற்றனைத்தும்
இணையில்லா சுவர்க்கமா
தனத்துமே குலவையிட்டிடுமோம் 433

குலவை யிடியொலி குமுர குருசுட
நரசுகதிர்மதி வானம்
ஆலமுந்தருத்றுவுலகும்
ஆதியின் ரகுமத்துக்கடலும்
இலகிய யில்லீன் சிச்சீன்
யிக்குறுவுடன் நற்சுவர்க்கம்
தலைமையில் தாரூல் கொலூத்துந்தானே
தான் குலவை யிட்டிடுமே 434

இட்டவா னுலகமெல்லாம்
எழுந்தொரு இடியாய் மின்னி
மட்டில்லா தலங்கரித்து
மன்னவன் நபிமனமிளகி
கெட்டிய சுவர்க்கத்தில் விருந்துகளனைத்தும்
மகிழ்ந்தது தானே தானெலியா
மட்டில்லா முஹம்மது நபிமண முடித்தே
மகிட்சியின் குலவையிட்டிடுமே 435

மணந்திரள் முஹம்மது சிகாமணிக்கும்
மரியமாசியர் தனக்கும்
கனந்திரள் பவனியின் மணமுடிந் தனவே
காரண குரிசினி லிருத்தி
இனந்திர ளனவும் படைத்திறை கோமான்
யாவருமெழுந்தொரு திரளாய்
தனந்திரள் முஹம்மது நபியேவுன் னிதமான
சிங்காசனத்திருத்தி 436

இருந்துஞ்சிங்காசன முஹம்மது நபிதனை
யனைவரு மெழுந்தொரு திரளா
வருந்திலெ மேருசு மீசாக்கினில் முதலே
வலஞ்சுத்தி யனைவர்வந் ததுபோல்னிருத்தும்
பிரக்கணமாக யனைவருஞ்சுத்தி
எழுதிரமா னீளிய பதம்பணிந்திறைஞ்சி
உரைத்திட யனைத்துமே யெழுந்தொரு திரணம்
ஓடிவந்திறைநபி பாதத்தே 437

நபிநாயக முஹம்மது நபியும்
நவமணி குருசினிலிருக்க
புவியில் நபிமனுசின் தேவும்
புதியவன் மலக்கும் கூருனியெவையும்
குவலயஞ்சூழ் முஹம்மது பதத்தில்
எழுதிரம் புரக்கணம் வருக
கவியும் முஹம்மத நபிபதம் புகன்றே
காரண சோபன முரைப்பார் 438

---

பிஸ்மில்லா ஹி-அல்லாவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கிறேன்
அர்றகுமான்-துனியாவில் நல்லோர்களுக்கும் பொல்லார்களுக்கும் கிருபை செய்கிறவன்.
அர்றஹீம்-ஆகிறத்தில் மூமீனனபேர்களுக்கு சொந்த கிருபைசெய் கிறவன்.

இம்மை மருமையென்றுஅறியவும். நமது நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கு சுபன பதியில் ஆசியா மரிய மிருபேர்களைத் திருமணஞ்செய்ய பவனி வருக மேள தாளம், குலவை, அலங்கார சிங்காரிப்பு, தங்கம், பொன், நவரத்தினம், வைரம், வைடூரியம் இவை யாவும் சுபன பதிக்கேயன்றி, உலக பதியில் கொலுவரசு அன்றி மற்றவர்க்கு ஹறூமென்றறியவும் கியாமத் நாமா கஞ்சில் ஆரிபின் சேகுல் அக்குபர் வுக்குமில்காகிதாபிக்ஹறு கிதாப்புகளில் அறிபவருகிறது.

# நபியுல்லாவுக்கு சோபனம்

## சொல்லுதல்.

ஆதியில் முஹம்மதரை சோபனமே வள்ளல்
அஹம்மது முத்தோரே சோபனமே
சோதி ஹாமீமாவை இறைசோபனமே முத்தில்
சொல்லிய ஆமீனவரே சோபனமே
ஓதும் யாசீம் ஆனவரே சோபனமே
அன்றுஒளியில் விசுமா னவரே சோபனமே
ஆதிதாயே ஆசிமானவரே சோபனமே
தய்யல தாகாவே தாசீமே சோபனமே 439

மன்னருக்கரசரே சோபனமே வள்ளல்
மரகபா நபியே சோபனமே
கண்ணொளியே அயின் மீமே சோபனமே
கல்புக்கரும்பொருளே சோபனமே
விண்ணுலகுக்கரசரே சோபனமே இந்த
மண்ணுலகுக்கரசரே சோபனமே
பொன்னுலகுக்கரசரே சோபனமேஎன்றும்
என்னுந்தாருலகுக்கரசரே சோபனமே 440

நபிக்கும் நபிகளுக்கும் சோபனமே வள்ளல்
நபிகுலமுற்றவர்க்கும் சோபனமே
அபுபக்கர் வுமருக்கும் சோபனமே வள்ளல்
வுதுமான் அலிக்கு சோபனமே
ஹபீபுல் அசனுசனுக்கும் சோபனமே கண்மணி
பாத்துமுத்து தவர்களுக்கும் சோபனமே
புவியி லுள் ளசுகாபுக ளனர்க்கும் சோபனமே
வள்ளல் குத்துபொலிமற்றனர்க்கும்சோபனமே

தினந்தின முஹம்மதருக்கு சோபனமே வள்ளல்
திருநபி மங்கையற்குச்சோபனமே
ஏந்தலான முஹம்மதுக்கே மணமுடித்தமங்கை
ஏந்திழை இருவருக்கு சோபனமே
மாந்தரான பவனி வள்ளலே சோபனமே
மருள் கமலும் மரியம்மாசியற்கு சோபனமே
தீனவர்க்கும் யாவருக்கும் சோபனமே
திருநெறி நீதம் அறிந்தவர்க்குச்சோபனமே
அந்தகுல முத்தவற்கு சோபனமே
ஆமிநல்லாகு முஹம்மதாமின் சோபனமே 442

## மங்களம் சொல்லுதல்

(வேறு)

வள்ளலே கொலுவிலேற்றி வலஞ்சுத்தியாவும் போற்றி
வருத்தியே மனதுக்குள் இருத்தி
வெள்ளமா சேனைமுற்றும்
விழுந்துதான் படைப்பனைத்தும்
வாள்வெண்ணி உண்மைபெற்று
முஹம்மது மலரை உகந்துபோற்றி
வெள்ளமா சேனை முற்றுவிரும்பி
மங்களமே சொல்வார் 443

கருங்குல கங்களின் நிலவே கதிரினின் றொளிவே
கல்வியில் இலங்கிய ஒளிவே
எங்களுக்காசே இருளுவான் பிலுக்கே
எண்ணில்லா ஆலத்தின் விளக்கே
தங்களின் நினைவுக்குள் தறித்திடு நவமணி
தாத்திலும் நடுவே
அங்குள்ள சுளிமுனை நடுவில்நின் றாடிடும்
அருபமில் மருமணியே மங்களம் மங்களம்
நபியே 444

வாசியே பிடித்துவான் விளிநோக்கி
வருத்தியே உள்ளிருத்தி
காசினை வெருத்து கருத்ததில்பொருத்தி
கமலத்தில் ஹூம்மென கூடிகி
ஓசையொன்று விடை விளி தூங்காமல்
உள்ளரை மூலத்தி லேற்றி
காசினில் கதிர்மதி கருத்துக்குத் தோற்றிய
கமலமே அமரமாமணியே மங்களம் மங்களம்
நபியே 445

பச்சமாயெழுத்து பணிமெண்டு வாசியில்
பத்து வீட்டின பூட்டி
நிச்சரவாக்கு நடுநிலைமீதில்
நாட்டியே தாளிட்டுப்பூட்டி
வச்சிர நடுமணி வழியுள்ளே ஏத்தி
வானம் புவியஞ்சு வரபத்தி
உச்சித முடலஞ்சு மொழிவைப்பகுந்திடில்
ஒன்றுபட் டிலங்கிடும் அமருமணியே மங்களம்
மங்களம் நபியே 446

என்னுள்ள பெரியோன் அமைத்துள்ள தனைத்தும்
எப்போதும்குடைசூழ்ந்திருந்து
மன்னவா நபியு மறியமுமாசியர்
மற்றுள்ள குலங்களுமனைத்து
எண்ணிலு மடங்க தூளி நாளே
எப்போது மதாலத்துச்செலுத்தி
நின்னயமிருப்பீர் நிச்சயமா னிசமே
நிகரில்லா தமரு மாமணியே மங்களம் மங்களம்
நபியே 447

மங்களம் மகிழ்ச்சியுற்று
மன்னவ ரிரசூலுல்லா
தங்கசிங் காசனத்தில்
தானவ ரிருக்கும் நாளில்
அங்குள்ள நபியும்மத்து
அனைவரும் குடைசூழ கொலுவில்
எங்குள்ள நபியும்மத்து
சுன்னத்து சமாத்துசூழ்ந்திருப்பார் 448

சுன்னத்து சமாவுடன் வள்ளலுக்கு
சிங்காசன கொலுவில்
என்னிலு மடங்கார் குழலார்
அணைவருமிருக்கும்நாளில்
பின்னுற்ற கருமமெல்லாம்
முன்னமே யறிந்த ஞயன்
அன்று ஜிபுரிலுக்கு
அருள்பரி மானமேதால்
என்றுள்ள வுயிர் துணையா
இலங்கிய முஹம்மதாமே 449

## மகுசர் விருந்து சொல்லுதல்.

முஹம்மதற்கு ஆசியர் மரியத்தை
மணகலியாணமுடித்தார்
தோமம் நன்னய முஹம்மது நயியுடன்
கூட்டம் நாற்றிசை பவனியுற்றவர்க்கு
உம்மத்து அனந்தமுள் ளவர்க்கும் என்னுட னடியாற்கு
எல்லாமென்னுடன் விருந்துசொல்லும் 450

சொல்லவு மிறையனுதி
சோதியின் ஜிபுரியில் வந்து
வல்லவ னடியார்முன்
முஹம்மதும்மத்தோற்கு
நல்விருந் தருந்தநல்ல
நாயகன்பரிமானென்றும்
அல்லலிலான் றனுகாவிண்ணோர்
றோதிய சமையல்செய்வார் 451

செய்திடும் சமையல் நேர்த்தி
சிறியனுங் கவியில் சொல்ல
வையகத் திணையுமில்லாதால்
வருதில்லை கவிக்கு நேராய்
செய்யுரு வுலகின் கீழே
சிவந்தமாளிகை சுமந்து
மையுரு யிருள்க்கடலில்
மகாமமீனென்று நிற்கும் 452

மகாமீன் வலுப்பந்தன்னை
மன்னவ னறிந்த ஞயன்
இமையவர் ஜிபுரி லந்த
மீனையு மெடுத்துவந்து
அமையுறு அவுதாங்கரை
மணம் வாசம் சோலைதன்னில்
இமையவர் தலைவர் கிபுலா
நோக்கி யிருத்தியே துனிப்பார் 453

## துல்பக்கார் வாளின் விபரம்.

நிக்கபா வீசுறுயிலும்
நீதியின் ஞமம் பரிமான்கொண்டு
தக்கவன் கோபப்பார்வை
சுமைகொடு சமைத்த வாளாம்
திக்குளடங்காப்பகையை
தீரவு மறுக்கும் வாளாம்
காபீர் பகையனைத்தும்
கருவறுத்திடும் வாளே 454

கருவுரு வேர்முதலாய்
கடும்பகை யறுக்கும்வாள்ளாம்
அறியாமல் சவடம் பறைய
நெருசற்றவர் குலம் அறுக்கும் வாளாம்
ஒருநொடி தீனில் திருப்பகையை
யுள்ளது மறுக்கும் வாளாம்
பெரியவன் கோபப்பார்வை
பெருகுமுன் னமைந்தவாளாம் 455

வாளையே கரத்திலேந்தி
வல்லவன் மீக்காயீலு
காலையே நிவிலீசோனே
கடுகியே கிளித்துவெட்டி
பழுதுபட் டொருகரங்காலும்
மாறாய்தரித்தவாளாம்
உள்ளியன் வினைகளெல்லாம்
ஒருநொடி யலுக்கும் வாளாம் 456

வாளா லுலகோடிய வரம்பெரும்
வல்லவன் கிருபை பார்வை
நீளிய அரசில் தொங்கும்
நிதம்நிதமும் கடனுதீக்கு நெறி சொரியும்
தாழ்வுடன் கொழுகி இல்லத்
தந்திரம் தொங்கும்வாளாம்
காலையாயாரலிபுக்கு
கைக்குறை கொடுத்தவாளே 457

வாளதைக் கரத்திலேந்தி
வல்லவன் அலியுல்லாவும்
நீளியே யிபுனியன்தம் உச்சிராசனே
வெட்டிவீசி வலதுகைதவரிஉச்சி
வாளுமாம் சிறம்பிளந்து
வென்று பனிரண்டாயிரம்
முளமும் வெட்டி பிளந்தவாளே 58

பின்ங்கிடலாச்சு வெளம்பு
விதனிலிரங்கிய கோபம்
எழுபுவியருந்து ரிஷபம்
ஏந்திமே வாள்கொம்பில்
பழுதர இருதுண்டாக
பன்னீராயிரங்கொம்புமற்று
தழுவிய ஜிபுரீல் காவ
தாங்கிய கொடியவாளாம் 459

சிரகினல் கொடிய வாளே
ஜிபுரிகீல் தாங்கும்போது
அழிவில்லான் நிறைஜிபுரிகில்
நந்தமாகும்
சிறகுதன்னில்
அனுபோ லழுந்து
அறுபட இருபத்தொன்று
மருந்திடுஞ் சிரகிலொன்றே 460

முழுநிறை யாலமுற்றும்
முழுகுபுர் அனரைவெல்ல
மூழுந்டில் படைவெல்ல
அலியுல்லா வலதுகையில்
உள்ளியின் குபிர்க்குலத்தை
உலகத்தில் அறுக்குவாளே
வளபெருநீன்னிழந்தவர் குலத்தை
யறுக்கும்வாளே 461

வாளதை யிசுறுகிலும்
வலக்கையால் எடுத்துந்தாங்கி
நீளிய மகரமீனே
இடகாஞ் சிரத்திலேங்கி
ஆளியே கடலுமீனே
அல்லாஹு அக்பரென் றருக்கும்போது
உன்னிய நிடர்ப்பகையும்
உள்ளதுங்மதிரந்துபோச்சே 462

அஃறுந்து விளைந்த முத்து
மந்தமீன் தனைப்பிளந்து
இருசினை தனையும் வல்லா
யிமையவரிசுரூபீனும்
கருத்துட னெடுத்ததாலே
குலத்தினில் வருகும்போது
சருத்துடன் ஜிபுரில் வாங்க
சகல விண்ணவர்களும் விருந்தளித்தார் 463

வந்தவ றிமையோர் சொல்வார்
வல்லவன் மகரமீனும்
முந்தநாள் ஹயாத்துல்கைபார்
முளக்கத்தில் செய்யும் சேனை கொப்பாம்
இந்த லிசுரூபீலும்
எடுத்தது வந்தவர் காத்தால்
தந்தியுல் ஜிபுரீல் மற்ற
தனைவரு மகிழ்ச்சியாகி 464

அந்தமீன் சினையறுத்து
ஆயிர விதம்சமைப்பார்
சமைத்திரு சாதமற்ற
சகலரு மனுவித்தார்கள்
அமைத்திடு மிப்படி வாளிறை துல்பக்கார்
எவரேவ செய்க்கவல்லார்
வட்டவானகங் கவிகை வள்ளல்
அசனுசனில் மாதாதந்தை 465

தந்தையாம் மலக்கு நாலு
திருநபியும் யார்கள் நால்வர்
மட்டில்லா கினுருமீசா
மகுதியும் பின்வருவாரே
மூவெட்டு கலிமா சொல்லாது
எவர்தொடி லெரிந்துபோவார்
ஹக்குடமாந்திசையும்
அணுபோலு மாசையில்லான்
வெட்டிடில் சுற்றுமுக்காதம்
வெகுதனம் மறுக்கும் வாளாம்
மட்டில்லா வெதிரி பகைவனுக்கு .
மன்னன் முன் கோபவாளே 466

முன்னவன் கோபப்பார்வை
முளங்கிடில் கொடிய வாளாம்
அன்னிய ருடகுலத்தை
அனைத்தையும் மருக்குவாளாம்
திருநெறிநீதம் எட்டு திக்கெல்லாம்
விளங்குமணியை
சிறிதெனை நால்பாகங்கள்
அதிபருல் இன்சானும் மூமீனுவார் 467

கருங்குபிர் யார்பகையை
கசட றயருக்கும் வாளாம்
அறிந்திடும் தீன்குலத்துடபகையை
அனுதினமருக்குவாளாம்
திருநெறிநீதமெட்டு
திக்கெல்லாம் விளங்கும் மணியை
சிறிதெனை நால்பாகங்கள்
அதிபருல் இன்சானும்மூமீன்னுவார் 468

## விருந்துண்ணல்.

முன்னமே அமைத்தொரு
கனிபால் தேனும்
எண்ணில்லா விதங்கள்
கோடி சமைத்ததை
தங்கமா வெள்ளி தாலத்தி
லனைவர்க்குமீவார்
ஈந்தது தன் னிமையோரெல்லாம்
யாவரை வறியாவைத்து 469

பாய்தியச் சொர்க்க பன்னீரால்
பல்வாய் முகங்கழுவி
ஆய்ந்தவா கழுகியன்னம்
நவர்க் கனியும்போது
சேர்ந்த வானோர்
அன்றுமொன்றால்
திகைப்புட நிற்பார்
அப்போ 470

தகைத்வ வானரு மன்னம்
அருந்தவும் பசியில்லாமீச்சியபேரும்
குத்தூசி இல்லா தனைவர்க்கும்
பசியுமில்லை
உகப்போடும் சுவர்க்கத்தாரும்
உருசியும் வரிசையில்லை
சுகப்படு மவநமுற்றும்
சொர்ப்ப நித்திரையே காணும 470

இணையுரு குணவும்போல
இருந்தன ரனந்தங்காலம்
அனையவர் திருமுன்னாக
அன்னம் வைத்திருக்கும்போது
தனியவன் கிருபைகண்ணால்
நத்தினையும் நோக்கிப்பார்க்க
இனியசொல் இறைருத்தூசி
யாவருக்குமிரங்கும்போது, 471

இறங்கவு மிறை ருத்தூசி
யாவர்க்கும் நினைவுண்டாகி
இருந்தமு கனவுபோலு
இப்பதான் முளித்தார்போலும்
அறிந்தனர் நனகம் வல்லோ
னமைப்பையு முஹம்மதென்று
தெரிந்தா ரன்னம் இணையவர்
அனைவரு மறுந்துவாரே 472

அருந்தே அன்னமுண்ண
அடியனுக்குதவி செய்வாய்
திறையாகி இருந்த பாளையத்துக்கெல்லாம்
இறையவன் குரத்தாலே
நிறைந்தருள் குறையில்லாமல்
எப்போதும் பசியில்லாமல்
சிறந்திடும் கனியுமொன்று
மனவருந்தி னார்க்குமப்போ 473

# எப்போதும் சுவனபதி செங்கோல்

அப்போது இறையருள் விருந்தை
அனைவரு மருந்தியே மகிழ
எப்போது மழிவில்லாதான்
இறையவ னருள்குத்தாசி
செப்படி வித்தைபோல
க்ஷணத்தினி லிறையைப்பார்த்துச்சேரும்
அப்பதி சபாயத்துள்ளே நம்மனைபேருக்கும்
பெருமானி லிருப்பவருக்குஞ்செங்கோல் 474

இலங்கியே முஹம்மதற்கும்
நரைப்புகழ் சுவர்க்கத்துள்ளோர்
கருமலர்க்கனியுமுண்டு
சிறப்புட னிலங்கும் வள்ளல்
முஹம்மதை நித்தம்பணிந்து
இருப்பா ரூழிகாலம்
எப்போதும்
அழிவே யில்லை 475

இறப்பொடி பிறப்புமில்லை
எப்போது மழிவேயில்லை
இறந்துநீ மறுபிறவி
எடுப்பது வொருவரில்லை
இருப்பவ ரூழிகாலம்
எண்ணில்லாதுள்ள நாளும்
தரிப்பிடம் தரிப்பதல்லால்
தலம் விட்டுப்பிசகிடாரே. 476

பிசகிடா தூழிகாலம்
இருப்பவர்க்கழிவில்லாமல்
நிசஞ்சொன்னேன் நிறையைத்தொட்டும்
நிசஞ்சொன்னேன் திசைபுகழ
நபிகள் மற்றோர் எவ்வகை
முழுதைத்தொட்டும்
நிசஞ்சொன்னேன் பிசகில்லாமல்
நிச்சயம் தரித்திருக்கும் சத்தியம் 478

சத்தியமாகச் சொன்னேன்
சகலமுமுலகுக்கெல்லாம்
சத்தியமாகச் சொல்வேன்
சாத்துரே னுலகுக்கெல்லாம்
கத்தவன் நபி உம்மத்தானவருங்
காட்சியான சுவர்க்கசோலை
தரித்தவர் இருப்பார் யாரும் எப்போதுமூழிகாலம்
இருக்குமித் தலஞ்சுவர்க்கம் 479

எப்போது மழியாப் பதியாம்
பிறப்இறப்பில்லார் விண்ணோர்
புகழஞ்சு தலத்திலு
மிருப்பார்
இருக்குவிண்ணவர்கள்
இருந்தாசிட இடம் போயிவரலாகு
மருத்தவரிடமே காபீர் முனுபிக்கி
னூக்குமதனுள்ளே ஆகாரார் 480

அருத்தியே மதிகதிரிந்த
அரசிடம்மன்னரி னொளிதுலங்கும்
வருத்திருப்பகலு மில்லையெதொரு
நாளுமில்லை அனேத்தொருநாளாகும்
அல்லிருப்பகலுமில்லை இனத்தொடு
வயசுமில்லை யாபேரும் வணங்கத்தேரி
தனி வலசலமும் ஊனுறக்கம் தாகமோகம்
முதுமையு மிளமையு மசதியுமிறப்பும் 481

எப்போதும் இல்லையாயிருந்ததும்
இவன் வினத்தில்லாதால்
எப்போது மிருப்பார் யாவும்
ஒவ்வில்லாதிறையனுதி
அனைத்தையும்
திருக்கண் நோக்கி
வையகத்தில் செய்வது நன்மை
யன்றும் முண்டியமெய்யனும் 482

இறைத்தா யிரங்கிய
திறைமுன்னும்
முன்னுள்ளான் திருமுன்னுகை
முன்னுள்ள தவகுருசில்
மன்வன் சமதுமாகி
மகிழ்ச்சியுங்கிருபையாகி
என்னில்லா தனத்துமுத்து
தீனவரனருமறிய பாடிடும் 483

மதின்குல மனதிக்கா
படித்திடில் கொடுத்திட தீனே
படிப்பவ நுலகோர்க்கெல்லாம்
பணிந்திரள் பவுசிக்கல்பே
ஏடு எடுப்பவர் படிப்பவர் கேட்பவர்
யாவர்களும் ஆலீமாக
அடுப்பவர் நபிசாகை யனைவருந்தீனிலாக
முடித்திடுங் காவியம் 484

நடுங்கிடில் கலிமா பிரியும்
நாயகன் கடலில் சேரும்
அடங்கலு முன்போல் வல்லேன்
அருளுடன் கலங்கீதே போகும்
இடங்களு மிறைவொளி பெருவெளியாம்
எவ்வகை யொன்றுமில்லை
திடமுட னிறையெப்போதும்
முடிவில்லா தாசிருப்பான் 485

அரசெங்கும் நிறைந்திருப்பான்
அனைத்தொரு பெருவெளியாய்
பிரிசமாயனைநோக்கி
பெரியநாயகன் மகிழ
வரிசையி லிருப்போமென்றும்
வல்லவன் முஹம்மதுநபியும்
அரசர்மற் றனருக்கெல்லாம்
ஆண்டவர்ரசூல் சொன்னார் 485

ஆண்டவரசூல் சொல்ல
அனைவரும் பதம்பணிந்து
நன்றுநாம் செய்தபாக்கியம்
நபிபதங்காணப்பெற்றோம்
கண்டிடு மிறையின் வேதம்
காட்சியின் கலிமாதன்னை
விண்டிடும் நபிபதம் விழுந்தெழுந்
தெவ்வுயிரும் 486

இவ்வுலகுலமா மவுலியும்
இமாங்கசாலியாரும்
அன்புடன்ஒன்பதுநூர்றென்பது
பத்துட னென்பது கிதாப்புமேலவுரைத்தார்
அவ்வழில் உரைத்தது தாபித்தில்
அகமெதன்று மறைந்தது முதல் கிதாப்பு
சொல்லிய தனைத்து பின்னுரைத்தது
ஆகிரில் முரிசலீனே 487

ஆகிரில் முரிசலின் அதாலத்து முக்கீம்
முற்றுமதுக்கு முதலே சொன்ன
ஏகவன் மருஷர் கேள்வி
இயம்பிய ஆகிர்மவுலி
வாருடன் இதகளெல்லாம்
வகைவகை வுலகோரறிய
ஏகவன் இமாம் கசாலி
இயம்பிய கடல்பெரும்பெர்ருளே 488

கடபுகள் காரண கவிதை .
கத்தவன் மஹாஷர் பவனி
அடங்கலு முலகமு முடிவும்
அனந்தமு மாய்ந்துசொன்னேன்
இடங்களும் வருத்தமும் நலவும்
இருப்பது மனைவரு மறிய
திடம்பெரு முலகத்தினர்க்குந்
திசைகம்பம் திருநெறி நீதத்தை நாட்டே 490

நாட்டமாம் நபிகள் தீனில்
நானூற்றிருபத்தாறு
பாட்டினில் முத்துமூ வாயிரத்தறுநூறு
பகுந்திடும் படலம் நாலாந்
திட்டமாந் திருநெறி நீதம்
தீனவர் தீன்வகையறிய
பாட்டுமாய் தீனோர்க்காக 491
படித்தாங்கேற்றினேனே

படிப்பது வுலகோர் முன்னே
பணந்திரள் பவுசுக்கல்ல
எடுப்பவர் படிப்போ
ரெவர்களு மாலிமாக
அடுப்பவர் நபிசரகை
அனைவருந் தீனிலாக
படித்திடும் காவியம் திருநெறிநீதம்
பீர்முஹம்மத ருரைத்தார் முத்தே 492

பீருமுகம்மதென்
றுரைத்தேமுத்து
முத்து மூவாயிரத்தறுநூறு முடித்துள்ள
கவியனைத்திலும்
கத்தவ னருள்பெருகும்பொருளினில்கடுகினிலணுக்கணுவு
எத்திசையறியச்சொன்னேன்
இன்னமும் விரித்துச்சொல்ல
இறையவன்கசனுயனுமுடியாதிறைகதிதே

எற்றியே திருநெறி நீதம்
முஹம்மத ருரைத்திடும் விஷளம்
மறத்தொரு விதமே சொன்னால்
மகுசரில் பாவியாவான்
நேர்த்தியாய் திருநெறிநீதம்
உரைத்ததை யறிந்திடுங்குலங்கள்
ஆத்துமம் ஆழியாதிர்
ஆதாபில்லா தூளி வாழ்வீர் 494

இருந்தவர் கேட்பவர் வாழி
எடுத்தவர் படிப்பவர்வாழி
அறிந்தவரை அறிந்தோர் தம்மை
ஆதரித் தவரும்வாழி
தெரிந்திட வுரைத்தேன் வாவாஞ்சிபோன்
சிறுமலுக்க ரீன்ற பாலன்
பீருமுஹம்மது குலம் தீன்நிலைநிற்க நபிகதிதை
சிறந்திருபதியும் வாழ இறையருள் பெருக
ஆமீன் ஆமீன் 495

1, 2, 3 படலங்களுஞ்சேர்ந்து ஏ, நம்பருடன் பாடற்றொகை1193
4-வது படலம் முதல் பாகம் பாடற்றொகை 541.
,, இரண்டாம்பாகம் ,, 495.
ஆக மொத்தம் பாடற்றொகை 2229.

திருநெறி நீதம்.
முற்றிற்று.

786

# விளம்பரம்.

இதனால் சகல முஸ்லீம் சகோதரர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், சுமார் முன்னூறுவருடங்களுக்குமுன் மலையாள மண்டலத்தைச்சார்ந்த தற்கலையில் வாழ்ந்திருந்து அனேக அற்புதங்களைக்காட்டிய மெஞ்ஞான சொரூபராகிய ஹாமிலொலி ஹலரத் பீர்முஹம்மது சாய்பு ஒலியுல்லா அவர்கள் திருவாய்மலர்ந்தருளிச்செய்த மெய்ஞ்ஞானத்திருப்பாடல்களில் கவி பதினெண்ணாயிரத்தில் சில பாகங்கள் எம்முன்னோர்களாலும், ஏனையோர்களாலும் அச்சிட்டு வெளியாகி யிருக்கிறது. இதுவரை ஏட்டுப்பிரதியாய் வெளிவராதிருந்த திருநெறிநீதம் படலம் நான்கும் அனேக பிரபுக்கள் கேட்டுக்கொண்டபடி அனேக ஆலிம் உலமாக்களிடம் பரிசோதித்து கையொப்பமிட்டு, தெளிவான ஞானஆராய்ச்சியில் தேர்ந்த வித்வான்களைக்கொண்டு எழுதி வெளியாக்கப்பட்டிருக்கின்றது. இந்த அருமையான ச்ரிஹத்து தெளிவான ஞானக்கடல்போன்ற மேலாம்பரமான இந்நூலில் விஷயம் ஒருமுறை வாங்கி உற்றுணர்ந்து பார்க்கும் நண்பர்களுக்கே இதன்மகிமை விளங்கும். முஸ்லீம் சகோதரர்களே இந்நூல் முன்னூற்றி சில்வானம் வருடம் ஏட்டுப்பிரதியாகவே எம்முன்னோர்கள் அமைத்து வைத்திருந்தனர். சிறியேன் இஸ்மாயில் அரபி ஒருங்கு சேர்த்து ஒன்றும் பேதகஞ்செய்யாமல், தளையேனும், அடியேனு முற்றுமற்றவிடத்து வரிசைப்புள்ளி யிட்டு முற்றுவித்து முன்னிருந்தவாறே யச்சிடுவித்தாம் ஆனால் இவற்றுள் வேறு விருத்தம் முதலிய செய்யுட்கள் தளை பிறழ்ந்தும் சிலவிடத்து ஒருமை பன்மை கலந்தும் சிலவரிகள் கூடியும் குறைந்தும் சில பொருட்ராது மங்கியும் பலவாறு பேதமுற்றிருப்பினும் அவை எம்மால் வந்தனவல்லவென்றும் மன்னிக்க. பிழை திருத்தி வாசிக்க விரும்புகின்றேன் இன்னும் மறுபதிப்பில் மூலமும் உரையும் நன்று கூடியசீக்கிரம் வெளிப்படும் அத்துடன் அரபித்தமிழிலும் வெளியாக்க ஆரம்பித்து இருக்கின்றன.

மேல்படி தற்கலை மெஞ்ஞான பிரபுவாகிய குதுபுஸ்ஸமான் ஹலரத்து பீர்முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்கள் அருளிச் செய்த மெஞ்ஞான அமுர்தகலை மிகுருசுவழும் மத்தஹா மவுலூத்து அடங்கிய காரணம் சரித்திரம்யாவும் ஏட்டுப்பிரிதியின்படியும் அரப்பித்தமிளின்படியும் தெளிவாய் செந்தமிழிலெழுதி ஒன்றும் பேதகஞ்செய்யாமல் அச்சிலிட்டு தயாராய் இருக்கின்றன தேவையான கனவான்கள் கால தாமதம் செய்யாமல் உடனே ஆர்டர் எழுதவேண்டியது கொஞ்ச காப்பியே அச்சிட்டிருப்பதால்

இதன்விலை அணா 8

இன்னும் வெளிவராத மோசுமீசாக்குமாலை எம்பாலிருக்கின்றன கவியாகப்பாட்டு 1500, கூடிய சீக்கிரம் வெளிவரும்.

ஆமீன், ஆமீன்.

7B
6-84